ஸ்ரீ

எட்டுத்தொகையுள் இரண்டாவதாகிய

# குறுந்தொகைமூலமும்,

திருக்கண்ணபுரத்தலத்தான்

**திருமாளிகைச்சௌரிப்பெருமாளரங்கன்**

இயற்றிய

## புத்துரையும்.

இவை

உரையாசிரியரால்,

சோழவந்தான் கிண்ணிமடம்

**ஸ்ரீ-ல-ஸ்ரீ சிவப்பிரகாசஸ்வாமிகள்**

ஆதரித்து அருந்தமிழை அறிவுறுத்திய ஆருதவிக்காக

அவ்வடிகளுக்த அகங்கனிந்து உரிமையாக

வேலூர்:

**வித்யாரத்னாகர அச்சுக்கூடத்திற்**

பதிப்பித்து வெளியிடப்பட்டன.

---

(க-முதல் கஅ-பாரங்கள் வேலூர் வி.என்.ப்ரஸ்ஸில் அச்சிடப்பட்டன.)

விலை ரூபா *2—0—0*

*All Rights Reserved.*

## குறிப்பு.

மாணவர்கள் தம்மாசிரியரிடத்திலிருந்து தகவுரையோடு கையெழுத்துவாங்கி எமக்கனுப்புவார்களாயின் அவர்கட்கு இரண்டுரூபாவிலையுள்ள குறுந்தொகைமூலமும் உரையும் ஒன்றரை (1—8—0) ரூபாவிற்கு அனுப்பப்படும். ஒரு மாணவர் ஒருபுத்தகத்திற்குத்தான் எழுதிப்பெற்றுக்கொள்ளலாம். (தபாற்கூலிவேறு.)

தி. சௌ. அ.

# இந்நூலுள் அடங்கியன.


க. உரிமையுரை.

௨. சிறப்புப்பாயிரம். i

௩. முகவுரை. i

௪. உதவியுரைத்தல். 1.

௫. குறுந்தொகைக் குறுந்துணையாக அருந்தொகையுதவிய பெருந்தகைச்செல்வர்கள் பெயரும் உதவிய தொகையும். 17.

௬. மேற்கோளாட்சிவிளக்கம். 19.

௭. அருங்குறிப்புக்களும் பிறவும். 24.

௮. எஞ்சியவைகளும் பிறவும். 32.

௯. பாடினோர்பெயரும் பிறவும். 35.

க0. குறுந்தொகைமூலமும் உரையும். க.

கக. அரும்பதஅகராதி. ௩0௮.

க௨. செய்யுண்முதற்குறிப்பகராதி. ௩க0.

க௩. பிழையுந் திருத்தமும்.

க௪. விளம்பரம்.

ஸ்ரீ

சோழவந்தான் கின்னிமடம்

# ஸ்ரீ-ல-ஸ்ரீ, சிவப்பிரகாச ஸ்வாமிகள்.



## உரிமையுரை.

அன்னையினும் அன்புமிக்கு என்னை ஆதரித்து அருந்தமிழ் அறிவுறச்செய்த ஆருதவியை உன்னியுன்னி உள்ளம் நெக்குருகி இந்நூல் உரை முதலியவற்றை ஸ்ரீ-ல-ஸ்ரீ, சிவப்பிரகாசஸ்வாமிகளுக்கு உரிமை செய்கின்றேன்.

இங்ஙனம்,

திருக்கண்ணபுரத்தலத்தான்

திருமாளிகைச் சௌரிப்பெருமாளரங்கன்.

ஸ்ரீ

வேலூர் ஊர்ஹீஸ்காலெஜ் தலைமைத்தமிழ்ப்பண்டிதராகிய

## ஸ்ரீமான் பு. க. ஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்வாமி

## திருவாய்மலர்ந்தருளிய

# சிறப்புப்பாயிரம்.

நேரிசையாசிரியப்பா.

திருவார் கடவுள் சிறந்தபே ரருளால்
தருமா மொழிகளிற் றமிழெனு மமிழ்தின்
சுவைகூர் மொழியிற் றுரிசறு நூலின்
குவையா ராய்ந்தவர் குற்ற மொரீஇய
தெய்வப் புலமை சேர்ந்த சான்றோர்
பொய்வருங் கற்பனை புகன்றிடாக் கவிஞர்
மக்க ளீட்ட மாசறு காமப்
பக்கஞ் சார்ந்து பன்னு மின்பத்தைப்
போற்றி யுய்யுமா புரிந்துளத் தருளைச்
சாற்றிய தீஞ்சுவை சார்ந்த பாக்கள்
எண்ணிலா தனவுள விவற்றிற் செஞ்சடைக்
கண்ணிலா விரிக்குங் காமரு மதியத்
துண்டஞ் சூடிய தூயர்தீ ரிறையனார்
அண்டர்நா யகரவ ரருள்சேர் கபிலர்
அருந்தமிழ்ப் பாண ரௌவை பாரதப்
பெருந்தே வனார்முதற் பேசரும் புலமை
வாய்ந்த வான்றோர் மனமகிழ்ந் தேத்த
வாய்ந்தருள் பாக்க ளமைந்த குறுந்தொகை
யென்ப ததுதா னெட்டுத் தொகையில்
இன்பந் தருதலி னியம்பினர் 'நல்ல'வென்
றடைமொழி சேர்த்தே யப்பெரும் பொருட்சீர்
உடைய நூலை யொருவரு மச்சிற்
பதியா நூலைப் பலரும் பொருளை
மதியாற் றேரினு மயங்கி யையுற்றே
யறியாப் பனுவலை யச்சிடி னம்ம
தறியாத் தன்மை யவிர்ந்திடுங் கொல்லென்
றச்சுற் றனேக ரடங்கிய வதனால்
அச்சுற் றெழாத வாழுமார் நூலை
ஆற்றோட் டத்தை யடைதற் கோவழல்

மேற்றான் சேரவோ சிதைந்து மிச்சமா
யிருந்த வதனை யேதமி லறிவால்
வருந்திச் சொரூப மதித்துணர்ந் தமைந்த
சொற்பொரு ணயங்க டெரிசற வறிந்து
விற்பனர் மெச்ச விழுமிய பொழிப்புரை

தீட்டித் திணைதுறை தீஞ்சுவை நயங்கள்
காட்டி யிலக்கணங் கரிசிலா விறைச்சி
விளக்கித் தொனிப்பொருள் குறித்தே மற்றும்
துளக்கற வாய்ந்து பல்பொருள் விரித்துத்
தமிழ்வா யின்பந் தவழப் பேசும்

கமழ்சீர் நல்லுல கத்தவர் மெச்ச
அச்சிற் பதித்தன னழகிய வயலிலும்
மச்சுமா ளிகையிலு மலிசீ ரன்னம்
ஓங்கிய சோணாட் டுயர்திருக் கணபுரம்
பாங்கிற் செய்த பன்னிய தவத்தின்

பயனென வந்தோன் பலவாஞ் சங்கத்
தியனெறி நூல்களை யினிதாய் மதுரை
நான்காஞ் சங்க நடைபெறு வதனில்
வான்பொற் பதக்கம் வரிசையிற் பெற்றோன்
திண்ணிய மனத்தாற் செய்யும் யோகம்

நண்ணியோன் பாச்செய் நாவல் லோனே
தோமினல் வினையாற் சௌரிப் பெருமாள்
தாமுறு நற்குணந் தழைந்த புதல்வன்
பாடிய வுதாரன் பன்னிய வாணியம்
பாடியிற் கல்விப் பயனார் சாலையிற்

றண்டமிழ்ப் புலமை தாங்கி நடாத்தல்
கொண்டவ னூல்களைக் கோதற வாய்தல்
செய்யு மறிஞன் செந்நட் பினுக்குச்
செய்ய வணிகலஞ் சீரா ரரங்க
சாமியை யங்கார் தயங்கு
நேமியங் கடவுளை நினைக்கும் புனிதனே.

ஸ்ரீ

மதுரைத் தமிழ்ச்சங்கத்து
அங்கத்தினர்களில் ஒருவராகிய
மணக்கால் அய்யம்பேட்டை.
(செந்தமிழ்விலாஸம்)
ஸ்ரீமான்:-S. முத்துரத்நமுதலியார் அவர்கள் எழுதிய
முகவுரை.

"தன்றோ ணன்கி ஞன்றுகைம் மிகூஉங்
களிறுவளர் பெருங்கா டாயினு
மொளிபெரித சிறந்தன் றளியவென் னெஞ்சே."

குறுந்தொகை என்பது, அமிழ்தினுமினிய நந்தமிழ் மொழி மாட்டுச் சங்கமருவிய எட்டுத்தொகை நூல்களுள் ஒன்பான் சுவையும் ஒருங்கே ஒழுகப் பத்தழகும் பரந்துநிற்கக் கழி பெருஞ்சிறப்புடைத்தாயதோர் நூலாம்.

எட்டுத் தொகையாவன:—* நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்பன. இவற்றை அடியில் வரும் வெண்பா உணர்த்துவதாகும்.

"நற்றிணை நல்ல குறுந்தொகை யைங்குறுநூ
றொத்த பதிற்றுப்பத் தோங்கு பரிபாடல்
கற்றறிந்தார் சொல்லுங் கலியோ டகம்புறமென்
றித்திறத்த வெட்டுத் தொகை."

இக்கூறிய வெண்பாவில் 'நல்ல' என்ற அடைமொழி யால், குறுந்தொகையைக் கூறிப்போதலானே இந்நூலின் பெருமை நன்குவிளங்கும்.

இந்நூல், கடவுள்வாழ்த்துமுதல் சOஉ அகவற்பாக்களை யுடையது. கடவுள் வாழ்த்து பாரதம்பாடிய பெருந்தேவனாராலும் பிற சOக பாக்கள் திப்புத்தோளார் முதல் அம்மூவனார் வரையும் நல்லிசைப்புலவர் பல்லோராலும் சொல்லப் பெற்றனவாம். இத் தொகை நூல் தொகுத்துமுடித்தான் பூரிக்கோ என்பான்.

இந்நூற்கு அருமந்த உரை ஆசிரியர் பேராசிரியர் எழுதினா ரென்றும், அவர் பொருளெழுதாது விடுத்த இருபது பாக் கட்கு ஆசிரியர் நச்சினார்க்கினியர் உரைவரைந்தாரென்றும் கீழ் வரும் பாக்களால் உணரப்படும்.

---

* எட்டுத்தொகையின் வரலாற்றை ப்ரும்மஸ்ரீ- மகாமகோபாத்யாய உ- வே- சாமிநாதையரவர்கள் வெளியிட்ட ஐங்குறுநூறு, பதிற்றுப் பத்து, புறநானூறு இவற்றின் முகவுரையுட் காண்க.

"பாரத்தொல் காப்பியமும் பத்துபாட் டுங்கலியு
மாரக் குறுந்தொகையு ளைஞ்ஞான்குஞ்—சாரத்
திருத்தகு மாமுனிசெய் சிந்தா மணியும்
விருத்திநச்சி னார்க்கினிய மே."
"நல்லறி வுடைய தொல்பே ராசான்
கல்வியுங் காட்சியுங் காசினி யறியப்
பொருடெரி குறுந்தொகை யிருபது பாட்டிற்
கிதுபொரு ளென்றவ னெழுதா தொழிய
விதுபொரு ளென்றதற் கேற்ப வுரைத்துந்
தண்டமிழ் தெரித்த வண்புகழ் மறையோன்
வண்டியிர் சோலை மதுரா புரிதனி
லெண்டிசை விளங்க வந்த வாசான்" என்பன ஆசிரியர் நச்சினார்க்கினியர் உரைச்சிறப்புப்பாயிரம்.

இனி, பொன் ஓராயிரம் பொதிந்து தூக்கிய பொற்கிழி யொன்று * தருமி என்னும் பனவன் பெறுமாறு, அவன் அன்புடைமைக்கிரங்கிக் கோலமாமிடற்று ஆலவாயவிர்சடை அண்ணல் வாய்மலர்ந்தருளிய "கொங்குதேர் வாழ்க்கை" என்னுந் தெய்வப்பாசுரம் இந்நூலின் செய்யுட்களில் ஒன்றாய்த் தொகுக்கப்பட்டு விளங்குத லொன்றானே இதன்பெருமை நன்கு விளங்காநிற்கும்.

"தாமரைபுரையும்.........................உலகே" எனத் தமிழ்த் தெய்வமாகிய சேவற் கொடியுயர்த்த குமாரக்கடவுளையே காப்புடைச்செய்யுளாகக் கொண்ட இந்நூலிடைத் தமிழ் மொழியின் நயங்கள் ஆங்காங்குத் தேனூறலாக அமைந்து கிடக்கின்றன. அகத்தின் பகுதியையே எடுத்துரைக்கும் இந்நூலின்கண் அமைந்த உள்ளுறை, இறைச்சி முதலிய பகுதிகள் மிக்க அழகாகக் காணப்படுகின்றன. சொன்னயம் பொருணயங்களிலும் அத்தன்மைத்தே.

---

* "பொதியப் பொருப்பன் மதியக் கருத்திலைக், கொங்குதேர் வாழ்க்கைச் செந்தமிழ் கூறிப், பொற்குவை தருமிக் கற்புட னுதவி யென்னுளங் குடிகொண் டிரும்பய னளிக்குங், கள்ளவிழ் குழல்சேர் கருணையெம் பெருமான்" எனக் கல்லாடத்து இச்சரிதநிகழ்ச்சி மிக வியந்து கூறப்பட்டிருத்தல்காண்க.

ஒவ்வோர்செய்யுளும் கற்பனைக்களஞ்சியமாகவேவிளங்குகின்றது. இதற்கு எடுத்துக்காட்டாக,

“முளிதயிர் பிசைந்த காந்தண் மெல்விரல்
கழுவுறு கலிங்கங் கழாஅ துடீஇக்
குவளை யுண்கண் குய்ப்புகை கமழத்
தான்றுழந் தட்ட தீம்புளிப் பாக
ரினிதெனக் கணவ னுண்டலி
னுண்ணிதின் மகிழ்ந்தன் றொண்ணுதன் முகனே”

என்ற செய்யுளைக்கூறலாம். இச்செய்யுளிற் காணப்படும் சொற்களெல்லாம் வாளா கூறப்படாமல் முழுப்பதங்களாய்ப் பொருட்செறிவுடன் விளங்குகின்றன. இதனிடை அமைந்த பொருள் இல்லதைக் கூறாது, உள்ளதை இனிதெடுத்துக் கூறுதலறிக. இந் நயம் மிகவும்வியக்கற்பாலது. இச்செய்யுள், இந்நூலினிடை ஓர்மாணிக்கம்போல் விளக்குகின்றது. மற்றும்:— ௨௦, ௨௭, ௪௦, ௪௭, ௫௪, ௯௫, ௯௭, ௧௨௦, ௧௨௭, ௧௩௭, ௧௫௨, ௧௬௮, ௨௬௭, ௨௭௦, ௨௭௭, ௨௯௨, ௩௧௫, ௩௭௦, ௩௯௯ இக்காட்டிய எண்ணுள்ள செய்யுட்களெல்லாம் சுவைகனிந்த பாடல்கள் பலவற்றுட் சார்ந்தனவாம்.

இந் நூலில், சிலசரித்திரக்குறிப்புக்களும், தமிழ்நாட்டுப் பழைய வழக்க ஒழுக்கங்களும், அரும்பதங்களும், பழந்தமிழ்நூற்பிரயோகங்களும் மலிந்து காணக் கிடக்கின்றன.

பிறதொகைநூல்களினும் இந்நூலின்கண் பெண்பாலார் அருளிச்செயலாகிய பாடல்கள் மிக்குக் காணப்படுகின்றன. அவற்றால், இந்நூல் இக்காலத்துப் பெண்கல்வி இன்றியமையாததாமெனக் கருதும் நவீனர்கட்குப் பண்டைத்தண்டமிழ் நாகரிகம் இனைத்தெனக் காட்டாநிற்கும்.

தொடக்கத்தில் குமாரக்கடவுள் வணக்கமும், அடுத்து இறைவன் அருளிய “கொங்குதேர் வாழ்க்கை” என்னும் திருமுகப் பாசுரமும் அமைந்திருத்தலால் சைவர்களாலும், திருவாய்மொழி, திருவிருத்தம் முதலியவைகளின் வ்யாக்யாநங்களிலே “ஊருண்கேணி” இன்னோரன்ன சில பல செய்யுட்கள் எடுத்தாளப்படுதலால் வைணவர்களாலும் இந்நூல் பெரிதும் பாராட்டப் பெறுவதாகும்.

## முகவுரை

இவ்வரிய நூலுக்கு ஆசிரியர் பேராசிரியருரையேனும், ஆசிரியர் நச்சினார்க்கினியருரையேனும் பெரிதும் முயன்றும் கிடைக்கவில்லை. ஆகவே, இத் தொகைநூல்மூலப்பகுதியையேனும் நந்தமிழர்களில் எவரும் இதுகாறும் வெளிப்படுத்தாதிருந்தது, அவர்கட்கு ஓர்குறையென்றே எண்ணலாம். அங்ஙனமாக, இந்நூல் உரையுடன் வெளிவருமாயின் அதனாலுளதாகும் மகிழ்ச்சி கூறுந்தரத்ததோ?

இதனைப் பலகால்முயன்று தமது கூரிய சீரிய நுட்பமதியுடன் எனது ஆருயிர் அன்பர்களாகிய ஸ்ரீமத் பண்டிதர் C. S. அரங்கஸாமிஐயங்கார் அவர்கள் தாமியற்றிய திணை, உள்ளுறை, இறைச்சி, மேற்கோள், இலக்கணக்குறிப்புமுதலியவற்றைக் காட்டிச் சுருங்கச்சொல்லி விளங்கவைத்தலாகிய புத்துரையுடன் ஆராய்ச்சித்திறங்கொண்ட அரும்பெருங்குறிப்புக்கள் பலவற்றையுஞ்சேர்த்து, அழகிய புத்தகமாகப்பதிப்பித்து அருந்தமிழ்கற்பித்து ஆருதவிபுரிந்த சோழவந்தான் கிண்ணிமடம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சிவப்பிரகாசஸ்வாமிகளுக்கு உரிமையாக்கி வெளியிட்டிருக்கின்றார்கள்.

அவர்கள் இவ்வருமந்த நூல் வெளியிடுவதன்பொருட்டு எடுத்துக்கொண்ட முயற்சிக்கும் காலத்திற்கும் அளவில்லை. மிகுந்த பொருட்செலவினால் இத்தொகைநூல் வெளிவந்திருக்கின்றது. இந் நன்முயற்சியில் ஸ்ரீ:—ஐயங்கார் அவர்கட்குற்ற பொருட்கவற்சியை நீக்கி இன்னோரன்ன நன்னோக்கத்தில் அன்னார் தலையிட்டுழைக்குமாறு நீடிய ஆயுளையும், பிறநலன்களையும் எல்லாம் வல்ல இறைவன் அவர்க்கு இனிது அளித்தருள்வானாக. சுபம்.

மணக்கால் அய்யம்பேட்டை
25—8—1915.

இங்ஙனம்,
S. முத்துரத்நம்.

ஸ்ரீ

## உதவியுரைத்தல்

தாமரை மேலுறை மாமகள் சேர்தரு
மார்புடை மாலவ னேர்பெறு திருவடி
யடியனே னகத்திடைப் படியுமா கொண்டரு
முத்தமி ழறிந்திடு நத்தகை
நாவலர் முன்னுரை மேவவைத் தனனே.

அமிழ்தினுமினிய தமிழ்மொழியை யான் கற்க அவாவின வகையும், அக்காலைக் கற்றலிற் றடை எற்குறுவாறு தாங்கிய தக்கார்தமையும், பின்னர்ப் பணியில் அமர்வான்புக்க விதமும்,அக்காலத்துத் தளராது வைத்திட்ட தக்காரிதமும், இந்நூற்குரையை இயற்றுவான்கொண்ட எண்ணமும், அஃதினிது முற்றுமாறு உயர்ந்தார் உதவிய வண்ணமுமென இவற்றையே, நல்லார் நல்லனகொண்டு அல்லனகளைவரென நம்பி ஈண்டுத் தொகுத்தெடுத்து ஓதலுற்றேன்.

ஐந்தாமாண்டில் அன்னையையும்,பதினைந்தாமாண்டில் தந்தையையும், இருபதாமாண்டில் முதன்மனைவியையும் இழந்த யான், அன்னையற்றமையை ஒருசிறிதும் கருதாவாறு என்னைக் காப்பாற்றிய தந்தையார் பழக்கிவைத்திருந்த பழக்கத்தால் படிப்பிடை ஆவல்கொண்டு செந்தமிழ்கற்பான் மதுரையை அடைந்தேன். அங்குக் கருதிச்சென்றவாறு தமிழ்ச்சங்கத்து இடப்பெற்றிடாமையின், கருதியதைக் கைவிட்டு மீளுதலிற் கருத்தின்றிக் கலங்கவிழ்ந்த நாய்கனே போலக் களைதுணைபெற்றிடாது கவற்சிமிக்கிருந்தேன்.

---

N. B. இன்னும் அச்சிற்றோற்றாத அகநானூறு, பரிபாடல் இரண்டும் வெளிவருமாயின், சொட்டுஞ் சுவையுடைய எட்டுத்தொகை நிறைவு பெற்று விளங்காநிற்கும். இக்கூறிய இரண்டனுள் பரிபாடலை யான் வெளியிடும் நோக்கத்துடன் ஆராய்ந்துகொண்டிருக்கின்றேன்.

அக்காலைச் சோழவந்தானையடுத்த கருப்பட்டிக்கிராமத்தார் ஒருவர், சோழவந்தான் ஸ்ரீ-ல-ஸ்ரீ-கின்னிமடம் ஸ்வாமிகளிடத்தில் செந்தமிழ்த்தேர்ச்சி பெறலாமென்றும், ஸ்ரீ. ஸ்வாமிகள் தட்டின்றிக் கற்பிக்குமென்றும், சோழவந்தான் மதுரையினும் உறைவதற்கு இனியதாகுமென்றும், உங்கட்கு வேண்டியவைமுற்றும் யான் உதவுவேனென்றும், மதுரையிற் சில நாள்வரைத் தமக்குத் தங்கவேண்டிய பலவேலைகளிருப்பதால், இப்பொழுதே சோழவந்தானில் ஸ்ரீ-ஸ்வாமிகளிடம் அழைத்துக்கொண்டுபோய் வேண்டியனசெய்ய இயலாததாகின்றதென்றும், தாமேநேரிற்சென்று காணலாமென்றும், ஆனால், தாம் கூறியவைஎவற்றையும் ஸ்ரீ-ஸ்வாமிகளிடம் தெரிவிக்க வேண்டாமென்றும் கூறி அச்செல்வர் செல்வாராயினர். 'உற்றார்முற் றேன்று வுரைமுதல்' என்பது பொருளுரையாதலின், அவர்கள் சொல்லை முற்றும் நம்பி அன்றே சோழவந்தானுக்குச் சென்று கின்னிமடத்தில் விசாரித்தேன். அங்குள்ளார்களால், அடிகள் அடுத்த கருப்பட்டிக்கிராமத்திற்குச் சென்றிருப்பதை அறிந்து ஆங்குச் சென்று கண்டு கொண்டு என்குறைகளைக் கூறிக்கொண்டேன்.

அக்காலத்து ஸ்ரீ-மஹாஸந்நிதாநம் என்னிடம் காட்டிய வியத்தகுசெய்கைகள் என்னைப் பிணித்திட்டன. அவ்அடிகள் பாடஞ்சொல்லிக் கொடுத்தலில் தடையில்லையென்றும், மடத்திலுள்ள புத்தகங்களில் வேண்டியவைகளையும் எடுத்துக் கொள்ளலாமென்றும், உணவுமுதலியவற்றிற்கு வேண்டியன செய்துகொள்ளுதல் வேண்டுமென்றும், திருவாய்மலர்ந்தருளியது. கருப்பட்டிபோன்ற சொல்லாராய அக்கருப்பட்டியார் உரைத்தவற்றைத் தெரிவித்து உணவுமுதலியவற்றைப் பற்றிய கவற்சி பற்றேதென்றேன். அடிகள் இளமுறுவல் அரும்பிப் பின்னர், ஒருவாரத்தின்மேல் சோழவந்தானுக்குச் செல்வதாகவும், நன்னூல்மூலம் முழுவதையும் பாடஞ்செய்கவெனவும் கட்டளையிட்டு நன்னூற்காண்டிகையொன்றையுங் கையிற் கொடுத்திட்டது. அக்கிராமத்திலுள்ள ஸ்ரீ-கோவிந்தராஜப்பெருமாள் கோவிலில் உண்டு வையையாற்றுமரத்தடி

யிற் றங்கி நன்னூல்மூலத்தை வரப்படுத்தி ஒருவாரத்துள் ஸ்ரீ-ஸந்நிதாநத்தினிடத்தில் ஒப்பித்தேன். அன்றே சோழவந்தான்மடத்திற்கு என்னை அழைத்துக்கொண்டு சென்று கற்பிக்கத் தொடங்கியது.

அப்புத்தகப்புதிய சோழவந்தானூரில், முதன்முதலில் யான் பட்ட பொருண்முட்டுப்பாடும் கவற்சியும் மிகப்பல. இங்ஙனம் இரண்டுதிங்கள் சென்றவாக, அப்பொழுது படித்து வந்த இடையியலைப் படித்தற்கு வழக்கம்போல் காலை எட்டு மணியளவிற்குச் சென்ற யான், கவலைநிறைந்த கருத்தினனாய்ச் சிறிதும் பாடத்தை அறியமாட்டாது தடுமாறுவதைக் கண்டு, அடிகள் புத்தகத்தைக் கீழ்வைக்கவென்றும், பிற்பகலில் பாடங்கேட்டுக்கொள்ளலாமென்றும் கூறிவிட்டு, இனிய பலவுரைத்துவந்து என் தவிப்பை என்வாய்கொண்டே மெல்ல உணர்ந்துகொண்டு 'அஞ்சற்க எம்பெருமான் கைவிடான்' என்று திருவாய் மலர்ந்து அக்காலத்து எனக்குண்டாயிருந்த கடன்றொகைமுழுவதையும் * அடுத்துநின்றுரைக் கொடுத்திடுக எனக் கட்டளையிட்டு என்னைப்பார்த்துக் கடனைத் தீர்த்துவிட்டுக் கவலையின்றிவருக எனக்கட்டளையிட்டருளியது. அங்ஙனமே செய்து பிற்பகலிற் பாடங்கேட்டற்குச் சென்ற யான், உண்ணுமிடத்துக் குறித்தகேடுவில். தொகைகொடுக்காது பேரிடர்ப்படுவதினும் தளிகைசெய்து உட்கொள்ளுதல் தக்கதென்றும், வருவாயின்றேல் பிறருணராவாறு பட்டினி கிடத்தலும் வருத்துவதன்றென்றுங் கருதி, தளிகைசெய்வாதாயின் பாடங்கூறமாட்டேனென்ற அடிகளையும் இணங்குமாறுசெய்து அச்சோழவந்தான் பேட்டைமடத்தில் தளிகை செய்துண்டு படிக்கத் தொடங்கினேன். அடிகள் அரிசியும் மேன்செலவிற்குப் பொருளும் உதவியதோடு வேண்டியவற்றைத் தட்டின்றிக் கேட்கலாமென்றும், எம்பெருமான் கைவிடானென்றுங் கூறியருளியது.

* அடிகள் தங்கையாற் பணத்தைப் பெறுதலையும் கொடுத்தலையும் வழக்கமாகக் கொண்டிலது. ரூபாவைத் தொட யானிருந்த காலமுற்றுங் கண்டிலேன். பிறரே எடுத்துவைத்திருத்தலும் வழங்கலும் வழக்கமாக இருந்தது.

அங்ஙனம் சின்னாட்கள்செல்ல, கிண்ணிமடத்திற்கு ஸ்ரீ-மஹாஸந்நிதாநத்தைக் கண்டுகொள்ள வந்த கருப்பட்டி ஸ்ரீமான்:—R. சுந்தரராமாநுஜநாயுடுகாரு அவர்கள், என்னை முன்னர் அறியாதிருந்தும், ஸ்ரீ-ஸ்வாமிகள் என்னைக்குறித்து ஒன்றும் உணர்த்தாதிருந்தும், அங்கு யான் படித்துக்கொண்டிருப்பதைப் பார்த்து, யான் பேட்டைமடத்தில் இருப்பதைத் தாமாகவே கேட்டறிந்துகொண்டு அங்குவந்து என்னுடன் அளவளாவி, 'தேவரீர் அடியேனைப் பொருட்படுத்தி இச்சோழவந்தானில் எழுந்தருளியிருக்கும் வரையிலும் அடியேன் தரும் அரிசியை உணவின்பொருட்டுப் பெற்றுக்கொண்டு உதவியருளல்வேண்டும்' எனக் குறையுறுவார்போலத் தாழ்ந்து வேண்டிக்கொண்டு, மறுநாளே சிலதிங்கள் காறும் வருமாறு அரிசியையும் அனுப்பிவைத்தார்கள். யான் சென்று கேட்கும் வேலைகூட மிகுதியும் நேராவாறு, அவர்களாகவே அவ்வூரில் யான் தங்கியிருந்த நாளெல்லாம் தாமாக ஏற்றுக்கொண்டவாறே கொடுத்துவந்தார்கள். காலத்திற் செய்த இவர்கள்தம் கைம்மாறுகருதாத பேருதவியை எழுமையும் மறவாமல், அவர்கள் எண்ணியஎண்ணிய எய்தி இனிதுவாழுமாறு எம்பெருமானை என்றும் இறைஞ்சுவதன்றி என்னாற் செய்யலாவதென்?

அச்சோழவந்தானிலுள்ள பேட்டைமடத்தில் உறைபவரும், ஸ்ரீ-மஹாஸந்நிதாநத்தினிடத்தில் பெருந்தொண்டுபூண்டு ஒழுகுபவரும், அறிவொழுக்கங்களிற்சிறந்தவருமாகிய ஸ்ரீமான்:—சுப்பையாஉபாத்யாயரவர்கள் என்பால் இவ்விப் பொருள்கள் தட்டுப்பட்டிருக்கலாமெனத் தாமாகவே குறித்துணர்ந்து, அவற்றைக் கொணர்ந்துவைத்து* எடுத்துக்கொண்டருளுகவென இரப்பாரேபோல வேண்டிக் கொடுத்து, அரிசியினும் வேறான பொருள்களைக்குறித்தும் யான் கவலைகொள்ளாதிருக்குமாறு வலிந்துதவி வந்தார்கள். அவர்

* அந்தணர்கை கீழ்ப்படத் தங்கள்கை மேல்வரல் தகாததாமென்னும் கருத்தாற் கையிற் கொடுக்கும் வழக்கத்தைக் கைக்கொண்டிலர் ஐய! தருகவெனக் கைந்நீட்டின் தமது அகங்கையில் வைத்துக்கொண்டு எடுத்துக்கொண்டு அருளுங்களென்பார்.

களின் இன்சொற்கூறல், இயன்றுங்குதவல், நன்னெறிநிற்றல் முதலாய நற்குணங்களை நெடுநாள் உடனுறைந்து நேரில் அறிந்தேனாதலின், அவர்கள் வியத்தகுகுணங்கள் என்னெஞ்சினின்றும் என்றும் விலகாதனவாகும்.

ஸ்ரீ மஹாஸந்நிதானத்தின் வயோதிகதசையைக் கருதி அவ்வடிகளை நெருக்கிப் பாடங்கேட்டலைவிட்டு, யானாகவே கற்றுஎன்னறிவிற்கு எட்டாதவற்றை அகத்தில் அமைத்துக் கொண்டு அவ்வடிகளின் அரும்பெறன்மாணாக்கரும், செருக்கென்பது எட்டுணையுஞ் சேரப்பெறுதாரும் இல்லையென்னும் இரப்புச்சொல்லைக் கேளாது தாமாகவே குறிப்பறிந்து உள்ளது மறுதுதவும் வள்ளலாவாரும், அரிதின் உணர்ந்த நூற்பொருள்களையெல்லாம் எளிதில் எவரும் உணர எடுத்துரைக்கும் சொல்வன்மைமிக்காரும், அல்லனபுரிவார்க்கும் நல்லனவே புரியும் நல்லியல்பினரும், வளர்பிறைபோல வழிவழிப்பெருகும் வாய்ப்புடை நட்பாட்சியினரும், செய்யுளியற்றல், உரையியற்றல் முதலியவற்றிற் சிறந்தாருமாகிய அச்சோழவந்தான் ஸ்ரீமான்:—மஹாவித்வான் அ. சண்முகம்பிள்ளை அவர்கள்பாற் சென்று கேட்டுத் தெளிந்துகொள்ளுதலை மேற்கொண்டேன். ஸ்ரீ-பிள்ளையவர்கள் நெருக்கமான வேலைகளையும் புறங்காணவல்ல வேலைகளிடைப்பட்டிருந்தும் யான் ஐயமுற்ற இடங்களையெல்லாம் என்மனங்கொள்ள விரைவில் விளங்கவைத்தும், தம்புத்தகசாலையிலிருந்து விரும்பும் புத்தமுதன்ன புத்தகங்களையெல்லாந் தந்தும் உதவிபுரிந்தமையோடமையாது, உற்றுழியெல்லாங் கற்றற்கும் பொருள் தந்து காப்பாற்றுவாராயினார்கள். ஆசிரியர் அவ் அரசன் சண்முகனாரின் அருந்தமிழ்த்தேர்ச்சியும் திருந்திய மாட்சியும் பன்னாளும் உடனிருந்து பழகிய என்னைத் தனக்குரிமை கொண்டன. அறியாமை நீங்க அவர்கள் அளித்த நூற்பொருட்கொடைக்கும் ஆரிடர் நீங்க அளித்த அரும்பொருட்கொடைக்கும் என்றும் கடமை பூண்டவனாவேன்.

யான் மதுரைக்குச் சென்றதுமுதல் என்னிலைமையை அறிவித்துக்கொள்ளாத பிழையையுடையேனாகவும், அதனைப் பொருள் செய்யாது தம்பேரருளுடைமை தோன்றத் தாமாகவே அறிந்துகொண்டு சோழவந்தானிற்கு நேராக எழுந்தருளி உவப்பத்தலைக்கூடி உள்ளப்பிரிந்த உயர்ந்தாரும், எம்மவருள் கற்பாரைக் கல்வியில் ஊக்குங் கருத்துமிக்காரும், என்தந்தையாருக்குப் பெரிதும் வேண்டியாருமாகிய கம்மங்குடி ஸ்ரீ- உ- வே- மாமாத்தாத்தா, கு. திருவேங்கடத்தய்யங்கார் ஸ்வாமி, யான் அக்காலத்துத் தமிழ்ச்சங்கத்துப் பண்டிதர்வகுப்புப் பாடப்புத்தகங்களை வாங்கிப்படிக்க ஆவல்மிக்கிருப்பதைக் குறித்துணர்ந்துகொண்டு, ஊருக்கு எழுந்தருளியதும் தக்கபொருளைத் தாமாக அனுப்பிவைத்தருளினார். மற்றும் யான் விலாவலியால் பெரிதும் இடருற்றிருந்த காலத்துத் தமது திருமாளிகையில் என்னை அழைத்து வைத்துக் கொண்டு, தமக்குள்ள மருத்துவ நூற்பயிற்சியால் தக்க மருந்தைத் தந்து, அடிக்கடி வந்து வருத்திய அவ்வலியின் வலியற்று ஒருவாறு தணியுமாறுசெய்து, என்னைச் சோழவந்தான் செல்லுமாறு ஏவியருளினார். அந்தஸ்வாமி பின்னும் உற்றுழியெல்லாம் உதவிவரும் பெற்றி பெரிதும் அடியேன் பாராட்டற்பாலவேயாம். சோழவந்தானுக்கு எழுந்தருளிய என்னிளையமாமனார் சூரானூர் ஸ்ரீ-உ-வே. வெங்கட்டராம ஐயங்கார் ஸ்வாமியும், ஸ்ரீ-ஸந்நிதாநத்தின் கட்டளைப்படி அரும்பொருளுதவிப் பெரும்பயன்கொள்ளச் செய்தருளினார். இக்காலத்து இவ்விருஸ்வாமிகளின் உதவியை எக்காலத்தும் மறவேன்.

யான் மதுரைத்தமிழ்ச்சங்கத்துப். பண்டிதர்வகுப்பில் தேறிச் சிலதிங்கள் சென்றனவாக, வாளா இருப்பதை உணர்ந்து என்னுடன் வடமொழிபயின்ற அன்பர் திருக்கண்ணபுரம் ஸ்ரீமான்:—நாலுகவி, திருவேங்கடாசாரியார் ஸ்வாமி, சென்னைக் கிறிஸ்துவ கலாசாலைத் தலைமைத்தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீ. உ-வே-கா-ஸ்ரீ- கோபாலாசாரியார் ஸ்வாமி ஸந்நிதியில் நேரிலுணர்த்தியும் ஸ்ரீமுகம்விடுத்து நினைப்புண்டு பண்ணியும்

வேலூர் ஸ்ரீ-மஹந்து தேவஸ்தாநம் ஹிந்து ஹைஸ்கூலில் ஆக்டிங் தமிழ்ப்பண்டிதர் வேலையை யான் பெறுமாறு செய்தருளினர். அவ்வேலையைப் பெறுவதற்கு அம்மஹந்து ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீ-உ-வே- N-ஸ்ரீநிவாஸவாதாசாரியார் ஸ்வாமியும் வேண்டிய விழைந்து செய்தருளினர். அடியேனுக்கென முயல முன்வந்த முற்கண்ட மூன்று ஸ்வாமிகள் திறத்தும் நன்றியுள்ளவனுவேன். அப்புதிய வேலூரில், நெடுநாட் பழகிய ஊரிற்போல இடம்பொருண்முதலிய எவற்றுனுங் குறைவுண்டாகாவாறு வேண்டிய வேண்டிய ஈண்டுமாறு செய்தவர்களானஸ்ரீமான்:—V. முத்துஸ்ாமி ஐயரவர்கள் M.A, L.T, (அப்பொழுது வேலூநகர்க்காலேஜில் உதவிஆசிரியர் வேலையிலமர்ந்திருந்தார்கள். இவர்கள்,இப்பொழுது அறுப்புக்கோட்டையில் ஸ்கூல்ஸப்அஸிஸ்டெண்டு இன்ஸ்பெக்டர் வேலையில் அமர்ந்துள்ளார்கள்.) இவ்வுயர்ந்தார் பல்லாற்றுனும் பரிந்தியற்றிய உதவிகள் மிகப்பலவாம். அத்தகையாளரின் நுனியிற் கரும்புதின்றன்ன நட்பின் மாட்சியும் நேர்மையும் உள்ளத்தைக் கொள்ளைகொண்ட உயர்வுடையனவாம்.

பின்னர், இவ்வாணியம்பாடி மஹம்மதியர்கல்லூரியில் தமிழ்ப்பண்டிதர் வேலையிலமர்ந்தேன். இவ்வேலையை யான் முயலாமற் பெறுமாறு முயன்றவர்கள் என்னிடம் தமிழ் பயின்ற மாணவர்கள் சிலரும் வாணியம்பாடி மதரஸே இஸ்லாமியா உதவிஆசிரியரான ஸ்ரீமான்:—R. செங்கல்ராய அய்யர் அவர்களுமாவார்கள். ஸ்ரீ-ஐயாவர்கள் இவ்வூருக்கு வந்த புதியேனுக்கு வேண்டிய எவற்றையும் உடல்பொருள் கொண்டு உதவித்தளராது தங்கச்செய்தார்கள். இவர்கள் கால உதவிகள் சால உயர்ந்தனவே.

யான் பணியில் அமர்ந்துள்ள கல்லூரியின் பிரின்ஸிபாலும், தம்பால் எவர்வரினும் இனியவே கூறுமியல்பினரும், புன்முறுவல் பொதிந்த முகத்தோடு அடுத்தார்துயரைக் கெடுத்தாளும் ஆற்றலினரும், என்றும் எவர்க்கும் இடையூறியற்றலை ஏற்றுக்கொள்ளா ஏற்றத்தினருமாகிய ஸ்ரீமான்:—

மஹம்மத் இப்ராஹீம் துரைஷிஸாஹேப் B. A., L. T., அவர்கள் இவ்வூரில் யான் தளர்ந்தழியெல்லாந் தாங்கிப் பேருதவிபுரியும் பெருந்தகைமை பெரிதும் பாராட்டற்பாலதேயாகும். அத்தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர் இந்நூற் பதிப்பிற்கென்று நன்கொடை உதவியதோடு, பலபிரதிகளைத் தாம் விலைகொடுத்துப் பெற்றுக்கொள்வதாகவும் ஊக்கம் மிகுமாறு உரைத்திட்டார்கள். இவர்களின் நற்குண நற்செய்கைகள் எவராலுங் கொண்டாடக் கூடியனவேயாம். அக் கண்ணியர் எண்ணியமுற்றி இனிதுவாழுமாறு எல்லாம் வல்லானை இறைஞ்சுவல். மற்றும் என்குறைகளைக் குறைத்து இவ்வூர் வாழ்க்கையில் இனிமையுண்டாகுமாறு செய்துவருவார்களும் உதவி ஆசிரியர்களாக உடனிருப்பவர்களுமான ஸ்ரீமான்:— T. K. வேங்கட்டாமணராவ் அவர்கள் B. A, L. T, முதலியவர்களின் அன்புடைமையையும் பொன்போற் கருதி என்றும் போற்றுவேன்.

யான் தொல்காப்பியப் பொருளதிகாரத்தை மீண்டும் சிலமுறைபடிக்கக் கருதி, அங்ஙனமே படித்துவந்த காலத்தில், அதனகத்து வந்துள்ள தொகைநூற் செய்யுட்களைக் கண்டு அவற்றின் சுவையிடத்து ஈடுபட்டு உள்ளத்தைப் பறிகொடுத்திட்டேன். அவற்றுள் வெளிவாராத நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு முதலியவற்றுள், இது குறுந்தொகையெனக் குறிக்கப்பட்ட சிலசெய்யுட்கள் பெயருக்கேற்பச் சிறியவாய்க் காணப்பட்டமையாலும், பிறநூல்களிற் கண்டதிலிருந்து அந்நூல் முழுவதுங் கிடைக்கலாமென்ற துணிவுண்டானமையாலும், அதனைத் தேடி என்சிற்றறிவிற்கு எட்டியவரையில் உரைசெய்து வெளிப்படுத்தின், குற்றங்களைந்து கொள்வார் குணமுடையாரென்று கருதி அந்நூலைத் தேடும் அவாமிக்கவனானேன்.

அக்காலை, முதன் முதலில் மதுரையிற் சென்று செந்தமிழ்கற்கவென் ஏவினரும், கற்குங் காலத்தும் பின்னும் அடிக்கடி யான் கடிதவாயிலாய்க் கூறிக்கொள்ளுங் குறைகளைக் கேட்டு ஒழித்துவருவாரும், செந்தமிழ்நூலாராய்ச்

சியே பொழுதுபோக்காகக் கொண்டு அரிய பெரிய தமிழ் நூல்களைப் பெற்றுத் தங்கையாலேயே பிரதிசெய்துகொண்டு உடையாரிடம் கொடுக்கும் உயர்ந்தாரும், என்னுருயிரன்பினருமான மணக்கால்அய்யம்பேட்டை(செந்தமிழ்விலாஸம்) ஸ்ரீமான்:—S-முத்துரத்நமுதலியார்அவர்கள், குறுந்தொகையைப் பிரதிசெய்து தருகவெனவும், அந்நூல்சென்னை அரசாங்கத்துப் புத்தகசாலையில் உள்ளதாகுமெனவும் திருமுகம் ஒன்றிற் பொறித்து விடுத்தார்கள். அம்முகங் கிடைத்த காலமும் கிறிஸ்டிமஸ்விடுமுறைக் காலத்தை ஒட்டியிருந்தமையின், பிரதிசெய்வான் விரும்பிச் சென்னைக்குச்சென்றிட்டேன். ஆங்கும் அன்பின்வலிய நண்பினராய ஸ்ரீமான்:— V. முத்துஸாமி ஐயரவர்கள் M, A., L, T, தம்மாமனூர்மாளிகையில் இடந்தந்து மெல்லிய இனிய மேவருதகுநவான அளவளாவலோடு உடனுமுறைந்து பெருமகிழ்வளித்தார்கள். ஸ்ரீ-ஐயரவர்கள் குறுந்தொகையைப் பிரதிசெய்வதிலும் ஒப்புப்பார்த்துக்கொள்வதிலும் இயன்றஉதவியையும்விழைந்து செய்துவந்தார்கள்.

மீண்டும் வாணியம்பாடியை அடைந்ததும், அந்நூலைச் சிலமுறை ஆராய்ந்ததில் அப்பிரதியிற் பிழைகள்பல பொதிந்திருப்பனவாக நன்குபுலப்பட்டதோடு, ஒருசெய்யுள் முற்றும் விடுபட்டிருப்பதாகவும் உணரக்கூடியதாயிற்று. உடனே, அந்நூலை உரையெழுதி வெளிப்படுத்தலில் அவா மிகவும் உடையேன்; ஆதலின், தாம் விரும்பியாங்குப் பிரதியைப் பிரதிசெய்து அனுப்புகின்றேனென்றும் பிரதியின் நிலைமை இத்தகையதென்றுஞ் சுட்டி அவ்வுண்மையை அவர்களும் உணர்ந்துகொள்ளுமாறு முதல்நூறுபாட்டையும் வரைந்து ஸ்ரீ:— முதலியாரவர்களுக்கு விடுத்தேன். என்கருத்தையுணர்ந்து அரிதின்முயன்று பிரதிசெய்ய இயலாதவனுகுமாறு சீரியதோர்குறுந்தொகைப்பிரதியைத் தேடிக்கொடுத்துக் கருத்தின்படி விரைந்து செய்திடுகவெனக் கட்டளையிட்டுதவினார்கள். அவர்கள் தந்துதவிய பிரதியின்றேல், இந்நூலுக்கு உரையெழுதத் துணிந்த கருத்து முற்றுப்பெறுதல் அரியதாகும். அவர்கள், மற்றும் அகநானூறு, நற்றிணை, பரிபாடல்

முதலிய அரிய தொகைநூல்களையும்பிறநூல்களையும்உரைவரைதற்கு உதவியாகுமாறு அரிதிற்பெற்று எளிதிற் பெறுமாறு தந்தார்கள். இங்ஙனம் பலபட உதவிய அந்நண்பர்தம் உதவிகளிலவேல், இந்நூலை உரையுடன் பதிப்பித்தலில் இன்னும் பேரிடர்ப்பட்டிருப்பேன்.

அகப்படாத ஒருபாட்டையும் கண்டுபிடித்தலிற் கருத்தூன்றி அங்ஙனம் அகப்படாதது ௩௦௦வது செய்யுளின் மேலிருப்பதாக உணர்ந்துகொண்டு மதுரைத் தமிழ்ச்சங்கத்தைச் சார்ந்து சங்கத்தலைவராணைபெற்றுச் சங்கத்து ஏட்டுப்பிரதியோடு என்பிரதியை யான் ஒருவனாகவே ஒப்புநோக்கிக் காணப்பட்ட பாடபேதங்களையும் குறித்துக்கொண்டுவருங் காலை, ௩௧௬வது செய்யுளாக "ஆய்வளை ஞெகிழவும்" என்னும் செய்யுள் அகப்பட்டது. அதனால், கருந்தனம்பெற்றார் போல மகிழ்ச்சிமிக்கவனானேன். ஆகவே, கடவுள்வாழ்த்துடன் ௪௦௨செய்யுட்கள்என்று கருதியகணக்கு நேராயிற்று. மீண்டும், கோடைவிடுமுறையில் மீதமாக நாட்களிருந்தமையின், பழந்தமிழ்ப்புலவர்கள்வீட்டில் சீரிய பிரதி இருக்குமெனக் கருதி மிதிலைப்பட்டி செவ்வூர்முதலிய இடங்களுக்குச் சென்று தேடினேன். தங்கள்பால் பிரதிகளைநாடி வருவார்திறத்துத் தாம் வழக்கமாகச் செய்வதேபோல, என்னை மறைத்திடக்கூடிய அத்துணை ஏடுகளை எடுத்து என்முன்னர்ப் போகட்டுவிட்டுத் தாங்கள் விரும்பும் ஏடுகள் கிடைப்பின் எடுத்துக்கொள்கவென்று தந்தொழின்மேற் செல்வாராயினர். அவற்றுள் பெரும்பாலன அச்சிடப்பட்டனவே. சங்கத்து நூல்களாக அச்சேறாநூல்கள் எவையும் அகப்பட்டில. அப்பீடுடையார்மரபிற் றோன்றிய ஏடுடையார் கூறியவற்றைக் கொண்டே, மற்றும் பழந்தமிழ்ப்புலவர்கள்வீட்டிலுந் தேடுதலில் அவாவற்று மீண்டேன்.

பழந்தமிழ்ச் சங்கமேறிய பிரதிகளுள், ஒருபிரதியிற் குறைவான எவைகளும் பிறபிரதிகளிலுங் குறைவாகவே காணப்படுவதனும் அவற்றால், ஒருநூலை எத்துணைப்பிரதிகளைத்

தேடிப் பதிப்பிப்பாரும் குறைவின்றிப் பதிப்பிக்கக் கூடாது போதலுங் கண்கூடாக, ஒருபாட்டு எனக்குப் புதிதாக அகப்பட்ட அத்துணைக்கே பெரிதும் மகிழ்சிறந்து உள்ளவற்றைக் கொண்டே உரையை எழுதலானேன். என்றாலும், பிரதிகளைத் தொகுத்து வைத்துள்ளாரென்று துணிவுகொள்ளக்கூடிய தக்கார், வாரங்கொண்டுசிலவாரம்வைத்திருந்து பார்த்துக்கொள்ளுமாறு உதவுவாரென நம்பி வேண்டுகோள்விடுத்து அவர்களை வேண்டியும் பயன் கிடைத்திலது.

பேரறிவும் பேராற்றலுமுடைய தக்க தமிழறிஞர்பலர் ஒன்றுகூடிப் பலபிரதிகளை வைத்துக்கொண்டு பன்னெடு நாளும் ஆராய்ந்து பதிப்பிப்பதாயினும் மூலமளவிலும் முற்றுந் திருத்தமாகப் பதிப்பித்தல் முடியாததாகுமென்பது, சங்கத்துத் தொகைநூல்களைப் பொறுத்தவரையிலும் எட்டுணையும் மறுக்கமுடியாத ஒருண்மையாகும். இத்தகைய அருமைவாய்ந்த ஒருவகைத்தொகைநூலுள் ஒன்றைச் சிற்றறிவும் வலிக்குறைவுமுடைய யான், 'அசலுக்குச் சரியான நகல்' என்பதாக வெளிப்படுத்தத் துணியினும் அஃதெனக்கேநகை விளைவித்திடும் செய்கையாகவும், அவாவெள்ளத்தில் அச்சிற்றறிவும் வலிக்குறைவுமாழ்ந்திடவே, பேராசிரிந்த ஓராசிரியரான பேராசிரியர்க்கே இருபதுபாட்டிற் பொருள் புலப்பட்டிலதென ஒராசை உலகினிறுவி உயரிய இக்குறுந்தொகைநூற்குப்பொருள்காணத் துணிந்தேன். 'மூலமளவிற் பதிப்பித்தல் சிறிதும் பயன்தராததாகும்'; 'பொருளெழுதியே பதிப்பித்திடுக;' 'முயன்றால் முடியாததென்?' என்றின்னோரன்ன அன்பர்களின் வற்புறுத்துக்களும் என்னை வலியுள்ளேனாக மயங்கச்செய்து ஊக்கங்கொள்ளச் செய்திட்டன. ஆதலின், அவாவின் பெருக்கிலாழ்ந்து அதனிடைப்பட்டு முற்றும் உரையெழுதி இற்றைக்கு மூவாண்டின்முன்னர் முடித்தேன்

தொல்காப்பியப்பொருளதிகாரத்து இத்தொகைநூற் செய்யுட்களில் முழுச்செய்யுட்களாக பலசெய்யுட்கள் மேற்கோளாக எடுத்தாளப்பட்டிருந்தன. இறையனார்அகப்பொரு

ளிடத்தும் அங்ஙனமே ஆளப்பட்டிருந்தன. தொல்காப்பியப் பொருளதிகாரத்திற் சிலவற்றிற்கு உரையும் வரையப்பட்டிருந்தன. மற்றும், தொல்காப்பியம்-நச்-எழுத்து, சொல், பொருள்; இளம்- எழுத்து, சொல்; சேனா-சொல்இவற்றினும், பத்துப் பாட்டு, புறநானூறு, திருக்குறள், சிந்தாமணி, சிலப்பதிகாரம், திருக்கோவையார், யாப்பருங்கலவிருத்தி, யாப்பருங்கலக் காரிகை, இலக்கணவிளக்கம், நன்னூல், சின்னூல்முதலிய பன்னூல்களினும் மேற்கோளாக இந்நூல் எடுத்தாளப்பட்டிருந்தமையால் அவையெல்லாம் இவ்வுரைவரைதற்கு உற்ற துணையாக உதவுவனவாயின. அவையெல்லாவற்றையும் உணரலாம்படி வரைந்து வைத்திருந்த மேற்கோளாட்சி விளக்கம் மிக்க விரிவினதாகிவிட்டமையின், பதிப்பிக்க இயலாது போயிற்று; என்றாலும், பெரும்பயன்படுவனவும், ஆராய்ச்சிக்கு இன்றியமையாதனவாய் இருந்தனவுமான தொல்-பொருள்; இறை—அகம் இவைமுழுவதும், கலித்தொகை, புறநானூறு, திருக்குறள் என்றிவற்றுள், ஒருசாரனவுமே பதிப்பிக்கலாயின.

ஆங்கிலங்கற்றுப் பட்டம்பெற்றுக் கற்பிக்க வருவாரினும் மிகுதியாகக் கற்பித்தல்வேலையைப் பலவகுப்புக்களுக்கும் பொறுமையோடு செய்பவராகிய தமிழ்ப்பண்டிதர்களுக்குக் கல்லூரிகளிற் கொடுக்கப்படும் ஊதியம் அவர்கட்களிக்கும் ஊதியத்திற் செம்பாதியளவுமாகாமல் மிகவும் குறைவுடையதாக இருப்பதால், எத்துணைச்சிக்கனங்கைவந்தார்க்கும் அவ்வருவாய் ஒன்றைக்கொண்டே வாழ்க்கையைநடத்தல் இக்காலத்தில் மிகவும் அரியதாகுமென்பது உலகறிந்ததொன்றே. அந்நிலையில் நிற்பாருள் யானும் ஒருவனாதலின், இந்நூலை என்னுரைமுதலியவற்றுடன் பதிப்பித்தலில் நேரும் பெரிய செலவினைப் பெரிதும் தளராவாறு தமிழ்நிலச்செல்வர்கள் தாங்குவார்களெனத் துணிந்து தக்கார்பலர்க்கும் வேண்டுகோள் ஒன்றினை அச்சிட்டு அனுப்பிவைத்தேன். அருளும் பொருளுமுடையார் தங்கள்தங்கள் தகுதிக்கியன்றாங்கு என்னை நன்குமதித்து, நன்கொடைகொடுத்து உதவிசெய்தார்கள். உதவியவர்களாகிய உயர்ந்தார்கள்பெயரை அவர்கள்

பெயர் பொறித்தற்காம் பேராண்மையுடையதாதல் தோன்ற, அவர்கள் உதவிய தொகையுடன், வேண்டுகோளில் முன்னரே வெளிப்படுத்தியாங்கு, "துறுந்தோகைக் துறுந்துணையாக அருந்தோகையுதவிய பெருந்தகைச்செல்வர்கள்" என்ற தலைப்பின்கீழ்ப் பதிப்பித்திருக்கின்றேன். இங்ஙனம், அவர்கள்பெயரை உலகறிய வெளிப்படுத்தி ஒராற்றான் எனது நன்றியறிவைப் புலப்படுத்தலன்றி என்செய்வேன்? அவர்களெல்லாரும் பெருவாழ்வைப் பெற்று இனிதுவாழுமாறு என்றும் எல்லாம் வல்ல எம்பெருமானை மனமொழிமெய்களிற்சிந்தித்து வந்திப்பல்.

இந்நூலுள் யான் செய்துள்ள மாறுபாடுகளும் சிலவுள. அவற்றையெல்லாம் கூறவேண்டிய கடமையையுடையேனாதலின், 'எஞ்சியவைகளும் பிறவும்' என்னுந்தலைப்பின் கீழ்த் தெரிவித்திருக்கின்றேன். அவற்றுள், இடக்கர்ச்சொல்லாகிய குஃறொடரன்மொழி இந்நூலகத்து, ஒன்பதிடத்து வந்திருந்தமையின், அவற்றை அறவொழித்துச் செய்யுளிற் குறைவுதோன்றாவாறு ஏற்றவற்றை என்சிற்றறிவிற்கு எட்டியவாறு சேர்த்து அதற்கேற்ப உரையெழுதியிருப்பதும் ஒன்று. இங்ஙனஞ் செய்தமைக்குக் காரணம் பழந்தமிழ்நூல்கள் பலவற்றைத் தமிழுலகிற்குத் தந்த தக்காராகிய ஸ்ரீமான் :— சீ-வை. தாமோதரம்பிள்ளையவர்கள் கலித்தொகையகத்து மாற்றி வைத்துக் காட்டிப்போந்த காரணமேயாகும். தமிழபிமானிகளான எவரே, உயர்தரப்பரீக்ஷைகட்கும் தமிழ் கட்டாயப் பாடமாதலை விரும்புவாராகார்? அவற்றிற்கு அட்டவணையொன்றமைத்து ஆண்டுக் காட்டியுமிருக்கின்றேன். முல்லையென்பதன் இடைக்குறையான சொல்லையும் இல்லையெனச் செய்தல் என்கருத்தெனினும், அங்ஙனம் செய்வதாயின், அடிகளைமுற்றும் மாற்றவேண்டியதாய் நேர்ந்திடுவதை நோக்கி அக்கருத்தை அறவொழித்திட்டேன். அன்றியும், செய்யுள், கருத்துரை, பாடினோர்பெயர்' என்றிருந்த முறைவைப்புள், பின்னிரண்டையும் முன்னதன்மேல் வைத்துக் கொண்டிருக்கின்றேன். முற்றும் உரைகாணமுடியாதனவான கூசச, கூசசச, கூசஎ, கூஎஉ, கூஎசு எண்களுள்ள ஐந்து

செய்யுட்களையும் பிரதிகளிலுள்ளவாற்றை உணரற்காமாறு மாற்றமற் பதிப்பித்திருக்கின்றேன். கருத்துரையின் முன்னிருந்த 'என்பது' என்பதன் அறிகுறியான 'எ-து' என்பதை 'இது' என மாற்றியிருக்கின்றேன். யான் கருத்துரையில் மாறுபாடுசெய்த உச இடங்களையும் ஆண்டு உணரலாம்படி குறித்திருக்கின்றேன். இம்மிகுதிகளையெல்லாந் தகுதிகளையுடைய தக்காரைப் பொறுத்துக்கொண்டருளுமாறு பன்முறையும் பணிவுடன் வேண்டிக்கொள்கின்றேன்.

இத்தொகைபாடிய கவிகள் * இருநூற்றைவர்எனப் பாடினோர்களின் தொகைவரையறை காணப்படுகின்றது. சென்னை அரசாங்கத்துப்புத்தகசாலையில் புத்தகங்களின் வரலாறுகளைக் குறிக்கும் அச்சுப்புத்தகத்தில், இருநூற்றைந்துபெயர்களை அகராதிவரிசைப்படுத்திப் பதிப்பிக்கப்பட்டிருக்கின்றது. அதனைத் துணையாகக் கொண்டு, மீண்டும் நூலிலிருந்து எடுத்தெழுதி வரிசைப்படுத்திப்பார்த்ததில் சிலமாறுதல்கள் தோன்றின. கடவுள்வாழ்த்துப்பாடிய பாரதம்பாடியபெருந்தேவனார் தொகைபாடிய கவிகளுள் ஒருவராகக் கருதக்கூடியவராகாமையின், அவருள்பட இருநூற்றறுவராகும்படி ஒருவாறு ஒழுங்குபடுத்திப் 'பாடினோர்பெயரும் பிறவும்' என்னுந் தலைப்பின்கீழ்க் குறித்திருக்கின்றேன். என்றாலும், நூலுள் பத்துப் பாடல்களில் பாடினோர்பெயர்காணப்படாமையாலும், மற்றுஞ் சிலஐயங்கள் நிகழ்வதாலும் அப்பகுதியை இதுபொழுது ஒழுங்காக முடித்திட்டதாய்க் கூறமுடியவில்லை. இம்மிகுதியையும் பொறுக்க வேண்டுவல்.

இந்நூலின் பெருமையையும் எனது அறிவின் சிறுமையையுங் கருதின், பலப்பலவிடங்களிலும் மிகப்பலவழுக்கள் செறிந்திருத்தல் இன்றி அமையாதனவாமாதலின், நல்லியல்புள்ளார்களாகிய நற்றமிழறிஞர்கள், இந்நூல், உரைமுதலியவற்றிற் காணப்படும் தவறுகளையும், விளங்காதனவாகக்

---

* புறநானூற்று அச்சுப்புத்தகமுகவுரையில், இருநூற்றுநால்வர் எனக் குறிப்பிக்கப்பட்டிருக்கிறது.

குறித்துள்ளவைகளையும், மற்றும் உயரியவாய்க் காணப்படும் கருத்துக்களையும் அடியேனைப் பொருட்படுத்தி எடுத்துரைத்து உதவுமாறு அவர்களைப் பன்முறையும் பணிவுடன் வேண்டிக்கொள்கின்றேன். அங்ஙனம் தெரிவிக்கப்படும் அறிஞர்களின் திருத்தங்களை வந்தனத்தோடு ஏற்றுக்கொண்டு, மறுபதிப்பில் அவற்றைத் தழுவி இன்னஇன்ன திருத்தங்கள் இவ்விவ் அறிஞர்களால் அறிவிக்கப்பட்டனவென்றும் மகிழ்ந்துசுட்டி அவர்கள் செய்தருளிய பேருதவியைப் பலர்க்கும் பயன்படச்செய்து எனது நன்றியறிவையும் மறவாமற் கூறுவேன். அன்றியும், இந்நூற்றொகைப்பழம்பிரதியுடையார் தம்பிரதியைச் சிலவாரம் யான் வைத்துக்கொள்ளுமாறு உதவினும் அன்றித் தங்கள்பால் வந்து பார்த்துக்கொள்கவெனக் கட்டளையிடினும் அவர்கள்கருத்தின்படி பார்த்துக்கொண்டு கிடைக்கும் அரியவற்றைச் சேர்த்து மறுபதிப்பிற் பதிப்பிக்குங் கருத்துடையேனாதலின், அங்ஙனம் உதவ முன்வரும் தமிழபிமானம் மிகுந்த தக்கார்களுக்கு இப்பதிப்புப் பிரதியிலொன்றைத் தருவதோடு, மறுபதிப்பிலும் அவர்கள் பிரதிகொடுத்து உதவியமையைப் பாராட்ட எட்டுணையும் மறவேனாவேன்.

இந்நூல்முழுவதற்கும விரிவாக எழுதிவைத்திருந்த என்னுரை முதலியவற்றை முதல்பதினெட்டுபாரம் அச்சாதற்குப் பதினெட்டுமாதங்களின் மேலாகியதனாலும், அங்ஙனம் காலம் நீட்டித்தும் அச்சிடைச் சிலஒழுங்குக்குறைவுகள் ஏற்பட்டுவிட்டதாலும், மேலும் உளதாகும் காலவளவு எத்துணையாகுமோ? என்ற கவற்சியால், விரைவில் வெளிப்படுத்தலை விழைந்து கரு0-வது செய்யுளிலிருந்து சுருக்கிப் பதிப்பிக்கும்படி நேர்ந்திட்டது. கக-வது பாரத்திலிருந்து ௩௯-வது பாரம்வரை இருபத்திரண்டுநாட்களுள்பதிப்பித்துக்கொடுத்த வேலூர் வித்யாரத்நாகரம் அச்சுக்கூடத் தலைவர் ம-ா-ா-ஸ்ரீ A. D. இராஜகோபால்பிள்ளை அவர்களின் விடாமுயற்சி அச்சுக்கூடத்தாரிடத்துப் பெரிதும் அஞ்சிநின்ற எனது அச்சத்தை அறவே ஒழித்துவிட்டது.

எனக்கு அருந்தமிழ் அறிவுறுத்திய பெருந்தகையாளர்களான சோழவந்தான் கிண்ணிமடம்ஸ்வாமிகள் ஸ்ரீ-ல-ஸ்ரீ - சிவப்பிரகாசஅடிகளும், அவ்வடிகளின் மருமக்கராகிய அச் சோழவந்தான் ஸ்ரீ:—ஆசிரியர் அரசஞ்சண்முகனார் அவர்களும் இந்நூல் உரைமுதலியவற்றை முடித்து யான் காட்டுவதற்குள் காலமாய்விட்டார்கள் அறியாத எனது ஐயங்களையெல்லாம் இனி யாரே அறஒழித்திடுவார்? அவர்கள்மரணத்தைக் கேட்டதனாலான துயரம், தாய், தந்தை, மனைவிமுதலியவர்களையும், மற்றொழிந்த பொருள்களையும் இளமையிலேயே இழந்துங் கலங்காது, கற்றலிற் சென்ற எனது கடுநெஞ்சையும் கலக்கியது. ஸ்ரீ:—ஸந்நிதாநம் அன்னையினும் ஆதரவுடன் பன்னெடுநாளும் என்னை வைத்துக்கொண்டு ஆதரித்து அருந்தமிழை அறிவுறுத்திய அதனானன்றோ இந்நூற்குஉரைஎழுதி வெளியிடலாமென்ற எண்ணம்உண்டாகவழியுண்டாயிற்று? அவ்வடிகள் அறிவுறுத்திய அருந்தமிழின் அறிவன்றோ அமிழ்தினுமினிய தமிழறிவுறுத்தி ஊதியம்பெற்று உண்டு உடுத்து உதவ உதவியாயிற்று? அவ்வடிகள் பயிற்றிய பழக்கத்தாலன்றோ நல்லார்பலரின் இணக்கம் இயைவதாயிற்று? இத்தகைப்பேருதவிகள் பலவற்றைப் புரிந்து புரிந்த அப்பெரியாரின் அருங்குணங்களுக்கு அடிமையாகி உளங்கனிந்து அவ்வடிகள் திருவுருவப்படத்துடன் இவ்வரிய நூலையும் எளிய எனது உரைமுதலியவற்றையும் உரிமையாக்கிப் பதிப்பித்து ஒருவாறு மகிழ்வேனாயினேன்.

இங்ஙனமே யான் கருதிய ஒவ்வொன்றும் இனிதுநிறைவேறி முற்றுப்பெறுமாறும், உதவிய உயர்ந்தார்களெல்லாரும் பெருவாழ்வடையுமாறும் எல்லாம்வல்ல எம்பெருமானின் இணையடித்தாமரைகளை என்றும் மனமொழிமெய்களில் மகிழ்வோடு இறைஞ்சி நிற்பேன்.

இங்ஙனம்,
திருக்கண்ணபுரத்தலத்தான்
**திருமாளிகைச்சௌரிப்பெருமாளரங்கன்,**
தமிழ்ப்பண்டிதன், மதரஸேஇஸ்லாமியா,
வாணியம்பாடி,
**5-10-1915.**

## குறுந்தொகைக் குறுந்துணையாக அருந்தொகையுதவிய பெருந்தனச்செல்வர்கள்பெயரும், உதவிய தொகையும்.

| பெயர். | ரூபா. |
|---|---|
| ஸ்ரீமான்:-ஸ்ரீமுகுந்த மாதவ முனிபாபு ரெட்டிகாரு அவர்கள் (எலகிரிஜமீன்தார், பொன்னேரி.) | 50 |
| ,, மஹமத்இப்ராஹீம்குரைஷிஸாஹேப் அவர்கள் B. A., L. T., (ப்ரின்ஸ்பால், மதரஸே இஸ்லாமியா, வாணியம்பாடி.) | 25 |
| ,, வ.ப.ழ.ச. அண்ணாமலைச்செட்டியார் அவர்கள் (சன்மார்க்கசபைத்தலைவர், மேலைச்சிவப்பட்டி) | 15 |
| ,, S.K. ஸ்ரீநிவாஸாசாரியர்ஸ்வாமி B. A., L.T., (தலைமைஆசிரியர், நாடார்ஹைஸ்கூல், பொறையாறு) | 15 |
| ,, G. V. சிதம்பரமுதலியார்அவர்கள் (மிராசுதார், கங்கவல்லி.) | 15 |
| ,, S. ஸ்ரீநிவாஸஐயங்கார்ஸ்வாமி (ஸ்கூல்மாஸ்டர், அம்பலூர்.) | 15 |
| ,, T.K. வேங்கடரமணராவ் அவர்கள் B.A., L.T., (உதவிஉபாத்யாயர், மதரஸே இஸ்லாமியா, வாணியம்பாடி.) | 10 |
| ,, E.T. இராமசந்தர் (உதவிஉபாத்யாயர், மதரஸே இஸ்லாமியா, வாணியம்பாடி.) | 10 |
| ,, Pandit M. கதிரேசச்செட்டியாரவர்கள் (மகிபாலன்பட்டி.) | 10 |
| ,, K. ரகுநாதசக்ரவர்த்திஸ்வாமி (மிராசுதார், கேதாண்டபட்டி.) | 10 |
| ,, K. ராஜகோபாலசக்ரவர்த்தி (மிராசுதார், கேதாண்டபட்டி.) | 10 |
| " R. சுந்தரராமாநுஜநாயுடுகாரு அவர்கள் (மிராசுதார், கருப்பட்டி.) | 10 |

| பெயர். | ரூபா. |
|---|---|
| ஸ்ரீமான்:-பூ. பெரியமுனிசாமிகவுண்டர் அவர்கள் (மிட்டாஜமீன்தார், தம்பேரி.) | 10 |
| ,, V.J. இராதாகிருஷ்ணலாலா அவர்கள் (ஜாகீர்தார், வளையாம்பட்டு.) | 10 |
| ,, D.A. கந்தஸாமிசெட்டியார் அவர்கள் (ஜாகீர்தார், தர்மபுரி.) | 10 |
| ,, முத்துரங்கன்செட்டியார் அவர்கள் (மிட்டாஜமீன்தார், கல்லாவி.) | 10 |
| ,, S.N. நாலுகவி திருவேங்கடாசாரியர் ஸ்வாமி (மிராசுதார், திருக்கண்ணபுரம்.) | 10 |
| ,, S. ராமசாமிஐயங்கார்ஸ்வாமி (ஸங்கீதவித்வான், கம்மங்குடி.) | 10 |
| ,, R. பெரியதாயப்பக்கவுண்டரவர்கள் (மிட்டாதார், நாட்டறம்பள்ளி.) | 5 |
| ,, சின்னமுனிசாமிகவுண்டரவர்கள் (மிட்டாதார், அலசந்தாபுரம்.) | 5 |
| ,, வ.ள.மூ. ரங்கநாதஞ்செட்டியாரவர்கள் (இராங்கியம்.) | 5 |
| ,, மங்கரசம்பிள்ளை அவர்கள் அவர்கள் (மிட்டாதார், திரியாலம்.) | 5 |
| ,, V. வரதராஜமுதலியார் (கண்ட்ராக்டர், ஜோலார்ப்பேட்டை.) | 5 |
| ,, S. லக்ஷ்மீநரஸிம்மசக்ரவர்த்திஸ்வாமி (மிராசுதார், கூதாண்டகுப்பம்.) | 5 |
| ,, P.M. வேணுகோபால நாயுடுகாரவர்கள் (ஸால்ட் ஸப்-இன்ஸ்பெக்டர், கொண்டாபுரம்.) | 5 |

| குறுந்தொ- எண். | பகுதி | தொல்-பொருள். பக்கம். | வரி. |
|---|---|---|---|
| கடவுள்- | ௧ | ௫௨௩ | ௩௫ |
| ,, | ,, | ௭௩௨ | ௮ |
| ,, | ,, | ௭௬௨ | ௨௭ |
| ௧ | மு | ௩0௫ | ௩௪ |
| ,, | மு | ௭௬0 | ௪ |
| ௨ | ௧ | ௩௬ | ௨0 |
| ,, | ௨ | ௨௨௭ | ௮ |
| ,, | மு | ௨௩௫ | ௨௩ |
| ,, | ௧ | ௪௩௬ | ௧௭ |
| ,, | ௧ | ௭௪௯ | ௧௨ |
| ௩ | மு | ௩௬௯ | ௪ |
| ,, | மு | ௪௮௨ | ௪ |
| ௫ | ௧ | ௨௮௯ | ௧௬ |
| ௬ | மு | ௨௭௫ | ௩௧ |
| ௭ | மு | ௬௯ | ௩ |
| ,, | ௧, ௨ | ௭௫௩ | ௨௬ |
| ,, | ௧ | ௭௫௮ | ௨௪ |
| ,, | ௬ | ,, | ௨௬ |
| ௮ | மு | ௧௭ | ௨௩ |
| ,, | மு | ௩௯௮ | ௩௩ |
| ,, | ௧, ௨ | ௫௪௨ | ௩௪ |
| ௯ | மு | ௩௯௧ | ௨௯ |
| ,, | ௬ | ௫௨௮ | ௨௪ |
| ,, | ௬ | ௫௨௯ | ௬ |
| ,, | ௪, ௬ | ௫௩௭ | ௧௩ |
| ,, | ௭, ௮ | ௭௫௭ | ௨௫ |
| ௧௧ | மு | ௨௯௨ | ௩௨ |
| ௧௨ | மு-இ | ௩௮௧ | ௧௪ |
| ,, | ௧ | ௬௨௫ | ௨௫ |
| ,, | ௧, ௨ | ௭௩௮ | ௧௮ |
| ௧௩ | மு | ௩௧0 | ௧௧ |
| ௧௫ | மு | ௩௨௯ | ௧௯ |
| ,, | ,, | ௩௪௬ | ௧௬ |
| ௧௭ | மு | ௨௫௨ | ௧௭ |
| ,, | ,, | ௫0௬ | ௨௪ |
| ,, | ௧ | ௮0௧ | ௩௪ |

| குறுந்தொ- எண். | பகுதி. | தொல்-பொருள். பக்கம், | வரி. |
|---|---|---|---|
| ௧௮ | மு | ௩௧௪ | ௩0 |
| ௧௮ | ௧ | ௭௩௨ | ௮ |
| ௧௯ | மு | ௩௫௮ | ௨௮ |
| ,, | ௧ | ௪0௭ | ௩௪ |
| ,, | மு | ௫0௯ | ௨௯ |
| ௨0 | மு | ௩௮௧ | ௯ |
| ௨௧ | மு | ௩௨ | ௨௭ |
| ,, | மு | ௩௭௯ | ௩௪ |
| ௨௩ | ௧ | ௪௪௧ | ௧௬ |
| ௨௫ | மு | ௨௮௮ | ௨௯ |
| ௨௬ | மு | ௨௮௮ | ௨௪ |
| ,, | ௭ | ௭௭௯ | ௩௩ |
| ,, | ௮ | ௭௯௪ | ௮ |
| ௨௭ | ௧,௨-இ | ௯௯ | ௮ |
| ,, | ௩ | ௪௭0 | ௧௧ |
| ,, | மு | ௫0௪ | ௫ |
| ௨௯ | மு | ௨௫௧ | ௨௯ |
| ௩0 | மு | ௨௯0 | ௬ |
| ௩௧ | ௧-இ | ௯௯ | ௯ |
| ,, | ௧ | ௨௬௫ | ௧௫ |
| ,, | மு | ௨௯௨ | ௨௧ |
| ,, | ௧ | ௪௫0 | ௧௩ |
| ௩௩ | மு | ௩௮௩ | ௨௨ |
| ,, | ௧ | ௪௭0 | ௩ |
| ௩௪ | மு | ௨௬௪ | ௨௧ |
| ௩௫ | ௧ | ௪௩௯ | ௪ |
| ௩௬ | மு | ௨௯௩ | ௨௮ |
| ௩௮ | ௨, ௩ | ௭௭௮ | ௧௪ |
| ,, | ௨ | ௭௮0 | ௩ |
| ௩௯ | மு | ௩௮௧ | ௧௨ |
| ௪0 | மு | ௨௩௬ | ௧௧ |
| ,, | மு | ௩௫௪ | ௧௬ |
| ௪௧ | மு | ௩௮௨ | ௨௪ |
| ௪௫ | ௧ | ௧௬ | ௨௯ |
| ,, | மு | ௩௯௩ | ௯ |
| ,, | ௧ | ௪௬௬ | ௬ |

| குறுந்தொ- | | தொல்-பொருள். | | குறுந்தொ- | | தொல்-பொருள் | |
|---|---|---|---|---|---|---|---|
| எண். | பகுதி | பக்கம். | வரி. | எண் | பகுதி | பக்கம், | வரி. |
| ௪௬ | மு | ௩௮௧ | ௩௩ | ௯௦ | மு-இ | ௪௩௯ | ௨௩ |
| ,, | ௫ | ௭௭௬ | ௨௨ | ௯௨ | மு | ௩௩ | ௨௦ |
| ௪௭ | மு | ௨௬ | ௨௪ | ,, | மு | ௨௮௫ | ௧௬ |
| ,, | மு | ௨௬௦ | ௩௧ | ௯௩ | மு | ௩௮௦ | ௧௩ |
| ,, | ௧, ௨ | ௫௩௮ | ௧௪ | ,, | மு | ௪௧௦ | ௮ |
| ,, | ௨ | ௭௭௮ | ௫ | ௯௬ | மு | ௨௬௪ | ௧௩ |
| ௪௯ | மு | ௨௩௩ | ௨௭ | ௯௭ | மு | ௨௭௧ | ௩௫ |
| ௫௧ | மு | ௩௨௧ | ௩௫ | ,, | ௨ | ௫௮௨ | ௧௮ |
| ௫௩ | ௭ | ௧௧ | ௬ | ,, | ௧ | ௭௬௨ | ௩௦ |
| ,, | மு | ௨௪௦ | ௨௨ | ,, | மு | ௭௬௭ | ௪ |
| ௫௪ | மு | ௮௯ | ௧௩ | ௯௮ | மு | ௨௬௯ | ௨௦ |
| ௫௬ | மு | ௩௫௯ | ௩௩ | ,, | ௫ | ௫௧௯ | ௨௨ |
| ௫௭ | மு | ௨௩௫ | ௩௧ | ௯௯ | மு | ௩௬௪ | ௪ |
| ௫௮ | மு | ௨௪௩ | ௧௩ | ௧௦௧ | மு | ௩௫௦ | ௨௮ |
| ௬௨ | மு | ௩௧ | ௨௫ | ௧௦௨ | மு | ௨௭௦ | ௧௧ |
| ,, | மு | ௨௩௦ | ௩௩ | ,, | மு | ௫௦௮ | ௩௨ |
| ௬௩ | மு | ௭௨ | ௧௯ | ௧௦௪ | மு | ௨௧ | ௩ |
| ,, | மு | ௩௬௧ | ௨ | ௧௦௬ | மு | ௩௮௧ | ௨௯ |
| ,, | மு-இ | ௪௩௫ | ௩௨ | ,, | மு | ௫௦௮ | ௧௩ |
| ௬௬ | மு | ௩௩ | ௨ | ௧௧௦ | மு | ௩௮௨ | ௨ |
| ,, | மு | ௩௯௬ | ௭ | ,, | ௧, ௨ | ௭௬௨ | ௨௫ |
| ௭௦ | மு | ௨௪௧ | ௩௧ | ,, | ௧, ௨ | ௭௬௭ | ௧௯ |
| ௭௧ | ௧ | ௫௪௩ | ௭ | ௧௧௨ | மு | ௨௭௦ | ௨௦ |
| ,, | ௧ | ௭௫௮ | ௨௮ | ௧௧௩ | மு | ௩௦௫ | ௩௦ |
| ,, | ௧ | ௭௬௨ | ௨௮ | ௧௧௪ | மு | ௩௦௧ | ௩ |
| ௭௨ | மு | ௩௬ | ௧௩ | ௧௧௫ | மு | ௩௦௯ | ௨௦ |
| ௭௩ | மு | ௩௧௦ | ௧௭ | ௧௧௯ | ௧ | ௭௭௮ | ௭ |
| ௭௫ | மு | ௩௮௨ | ௨௮ | ௧௨௦ | மு | ௨௪௨ | ௬ |
| ௭௯ | மு | ௩௮௫ | ௧௮ | ௧௨௧ | மு | ௨௮௧ | ௨௩ |
| ௮௦ | மு | ௪௦௨ | ௨௦ | ,, | ௫, ௬ | ௩௩௯ | ௨௦ |
| ௮௧ | மு | ௩௦௧ | ௩௭ | ,, | ௨ | ௭௮௯ | ௧௬ |
| ,, | ௧ | ௩௩௧ | ௮ | ௧௨௮ | மு | ௨௪௨ | ௩ |
| ௮௪ | மு | ௩௨௮ | ௩௪ | ,, | ௧ | ௪௦௮ | ௬ |
| ,, | ௧ | ௭௫௧ | ௨௨ | ,, | மு-இ | ௪௮௦ | ௩௩ |
| ௮௭ | மு | ௨௭௩ | ௨௯ | ௧௨௯ | மு | ௨௪௨ | ௨௧ |
| ௮௯ | மு | ௩௨௪ | ௧௪ | ,, | ௧ | ௪௫௨ | ௩ |

| குறுந்தொ- எண். | பகுதி | தொல்-பொருள். பக்கம். | வரி. | குறுந்தொ- எண். | பகுதி | தொல்-பொருள். பக்கம், | வரி. |
|---|---|---|---|---|---|---|---|
| ௧௨௯ | ௩, ௫ | ௫௨௬ | ௯ | ௧௭௬ | மு | ௩0௩. | ௪ |
| ,, | ௧ | ௭௫௫ | ௨௪ | ௧௭௮ | மு | ௩௮௭ | ௨௩ |
| ,, | ௧ | ௭௫௬ | ௩௧ | ,, | மு | ௫௧௧ | ௬ |
| ௧௩0 | மு | ௬௨ | ௨௨ | ௧௮௧ | மு | ௩௭௯ | ௨௨ |
| ௧௩௨ | ௨ | ௨0௧ | ௪ | ௧௮௨ | மு | ௨௫௨ | ௮ |
| ,, | ௧ | ௩௫௩ | ௩௪ | ௧௮௪ | மு | ௪௨ | ௩௩ |
| ௧௩௭ | மு | ௨௩௬ | ௧௫ | ௧௮௯ | ௧, ௨ | ௭௨ | ௨௩ |
| ௧௩௮ | மு | ௨௫௯ | ௨௬ | ,, | ௧, ௨ | ௪௨௭ | ௩௫ |
| ௧௩௯ | மு | ௩௯௪ | ௨௬ | ௧௯௧ | மு | ௩௮௨ | ௭ |
| ௧௪0 | மு | ௪௧௨ | ௩ | ௧௯௬ | ௧, ௨ | ௩௫௩ | ௧௫ |
| ௧௪௧ | ௧ | ௨௮௫ | ௬ | ,, | மு | ௩௯௩ | ௩௬ |
| ௧௪௩ | ௧ | ௩௧௧ | ௨0 | ௧௯௮ | மு | ௩00 | ௨௫ |
| ௧௪௫ | மு | ௨௭௭ | ௨௨ | ,, | ௧ | ௮0௧ | ௨௧ |
| ௧௪௬ | மு | ௩௧௯ | ௨௧ | ௧௯௯ | மு | ௨௫௪ | ௨ |
| ௧௪௯ | மு | ௮0 | ௫ | ௨0௪ | மு | ௭௫௧ | ௧௮ |
| ,, | மு | ௨௬௩ | ௩0 | ௨0௫ | மு | ௨௭௪ | ௧௮ |
| ,, | ௬ | ௨௬௭ | ௧௧ | ௨0௮ | மு | ௯0 | ௨ |
| ௧௫0 | மு | ௨௮௬ | ௮ | ,, | மு | ௫௪0 | ௨௨ |
| ,, | ௧ | ௩௩௧ | ௬ | ,, | ௧ | ௫௪௨ | ௮ |
| ௧௫௪ | மு | ௩௮0 | ௪ | ௨௨௧ | மு | ௩௨ | ௩௧ |
| ௧௫௫ | மு | ௩௮௨ | ௧௧ | ௨௨௨ | மு | ௨௪௫ | ௩௩ |
| ௧௫௬ | ௩, ௪ | ௭௯௫ | ௧௮ | ,, | ௧ | ௭௪௯ | ௧௬ |
| ௧௫௭ | மு | ௩௩௩ | ௫ | ௨௨௫ | மு | ௪௫௭ | ௩0 |
| ௧௫௯ | மு | ௨௭௭ | ௨௫ | ௨௨௯ | மு | ௨௨௭ | ௩ |
| ௧௬௧ | மு | ௨௭௬ | ௩௧ | ௨௩௩ | மு | ௨௫௫ | ௩௫ |
| ,, | ௧ | ௩௨௭ | ௯ | ௨௩௫ | மு | ௨௫௫ | ௩௨ |
| ,, | ௫-௭ | ௫0௮ | ௨௩ | ௨௩௯ | ௧ | ௫0௨ | ௫ |
| ,, | ௭ | ௫௨௪ | ௧௩ | ௨௪0 | மு | ௨௮௯ | ௨௧ |
| ௧௬௪ | ௧ | ௭௮௩ | ௯ | ௨௪௧ | மு | ௨௮0 | ௨௨ |
| ௧௬௭ | மு | ௪௫ | ௨0 | ௨௪௨ | மு | ௪0௫ | ௩௬ |
| ,, | மு | ௯௭ | ௧௫ | ௨௪௩ | மு | ௨௭௨ | ௨௯ |
| ,, | ௧ | ௪0௫ | ௧௨ | ௨௪௪ | மு | ௩௧௩ | ௨௧ |
| ,, | ௫, ௬ | ௫0௧ | ௭ | ௨௬௨ | மு | ௬௬ | ௧௬ |
| ௧௬௯ | மு | ௩0௯ | ௫ | ,, | ௨, ௩ | ௪௫௫ | ௮ |
| ,, | ௩ | ௪௭௮ | ௧௩ | ,, | ௧ | ௭௬௨ | ௨௬ |
| ,, | ௧ | ௪௯௧ | ௧௩ | ௨௭0 | மு | ௩௬௬ | ௨0 |

## ௨ தொல்-பொருள்-மேற்கோளாட்சிவிளக்கம்.

| குறுந்தொ- எண். | பகுதி | தொல்-பொருள். பக்கம். | வரி. | குறுந்தொ- எண். | பகுதி | தொல்-பொருள். பக்கம். | வரி. |
|---|---|---|---|---|---|---|---|
| ௨௭௨ | மு | ௨௩௯ | ௨௬ | ௩௩௭ | க | ௩௧ | ௩௬ |
| ௨௭௬ | மு | ௨௫௧ | ௩௩ | ,, | உ | ௫௨௩ | ௧௮ |
| ௨௮௦ | மு | ௨௪௩ | ௩௩ | ௩௪௬ | மு | ௩௦௬ | ௧௨ |
| ,, | க | ௭௫௧ | ௨௨ | ௩௫௩ | மு | ௩௦௫ | ௩௭ |
| ,, | மு | ௭௫௬ | ௩௨ | ௩௫௪ | மு | ௪௫௫ | ௨௨ |
| ௨௯௦ | மு | ௩௬௯ | ௧௧ | ௩௫௫ | மு | ௨௮௭ | ௧௭ |
| ௨௯௨ | மு | ௨௬௨ | ௧௩ | ௩௬௧ | மு | ௨௭௫ | ௨௨ |
| ௨௯௪ | மு | ௩௧௩ | ௪ | ,, | ௩, ௬ | ௫௦௫ | ௧௬ |
| ௨௯௫ | மு | ௪௦௭ | ௧௫ | ௩௬௫ | மு | ௩௧௪ | ௩௪ |
| ௩௦௦ | மு | ௨௩௬ | ௫ | ௩௭௪ | மு | ௩௨௦ | ௩௩ |
| ௩௦௧ | மு | ௨௫௯ | ௨௬ | ௩௭௯ | க | ௪௪௧ | ௧௩ |
| ௩௦௨ | மு | ௨௮௯ | ௧௧ | ௩௮௩ | மு | ௨௭௦ | ௧௩ |
| ௩௧௨ | மு | ௨௫௧ | ௩ | ௩௮௫ | மு | ௨௭௮ | ௯ |
| ,, | மு | ௫௧௬ | ௨௪ | ௩௮௯ | மு | ௩௨௧ | ௩௧ |
| ௩௧௩ | மு | ௩௮௨ | ௩௫ | ௩௯௦ | க | ௬௭ | ௨௧ |
| ௩௩௪ | மு | ௨௭௨ | ௪ | ௩௯௭ | மு | ௩௦௯ | ௧௫ |
| ௩௩௬ | மு | ௩௦௬ | ௮ | ௪௦௧ | மு | ௨௮௨ | ௩௩ |

## இறையனாரகப். மேற்கோளாட்சி விளக்கம்.

| குறுந்தொ- எண் | இறை-அகப்- பக்கம். | வரி. | குறுந்தொ- எண். | இறை-அகப்- பக்கம். | வரி. |
|---|---|---|---|---|---|
| ௧ | ௯௪ | ௬ | ௧௨௮ | ௯௨ | ௨௨ |
| ௨ | ௩௬ | ௧௩ | ௧௨௯ | ௪௩ | ௧௦ |
| ௭ | ௧௧௨ | ௧௫ | ௧௪௯ | ௧௦௭ | ௬ |
| ௧௭ | ௬௭ | ௨ | ௧௭௬ | ௭௨ | ௮ |
| ௪௩ | ௧௬௭ | ௧௭ | ௨௨௨ | ௬௮ | ௧௮ |
| ௭௧ | ௧௬௫ | ௧௧ | ௨௪௨ | ௧௭௦ | ௭ |
| ௮௪ | ௧௧௧ | ௬ | ௩௬௨ | ௮௮ | ௯ |
| ௧௧௫ | ௧௦௯ | ௬ | ௩௯௭ | ௧௦௯ | ௧௦ |
| ௧௧௯ | ௪௩ | ௮ | | | |

கலி, குறள், புறம் இவற்றிடை வந்துள்ள ஆராய்ச்சிக்குரிய மேற்கோளாட்சிக் குறிப்புகள்:—

## கலித்தொகை.

கலித்தொகையகத்து வந்துள்ள ஆராய்ச்சிக்குரிய ஒரு மேற்கோள்குறிப்பு வருமாறு:—

கற்றறிந்தார் சொல்லும் கலித்தொகையில் குறிஞ்சிக் கலி ௨-வது பாட்டின் உரையில், (அச்சுப்புத்தகம் பக்கம் ௧௧௧-வரி ௨௬-ல்) 'நன்றே' என்னுங் குறுந்தொகையுமது என்று ஆசிரியர் உச்சிமேற்புலவர்கொள் நச்சினார்க்கினியர் சுட்டியுள்ளார். அங்ஙனம் தொடங்கும் செய்யுள் இந்நூலகத்து யாண்டும் புலப்பட்டிலது.

---

## * திருக்குறள்.

வள்ளுவர்நூற்கு வாய்ப்புடையுரைவரைந்த ஆசிரியர் பரிமேலழகர் தமது உரையகத்து உயரிய தமிழ்நூல்களை உரைநடையிற்கொண்டு வரைந்துள்ளவைகளில், குறுந்தொகை நூலிலிருந்து அங்ஙனம் கொள்ளப்பட்டவை வருமாறு:—

௧௨௩-ம் அதிகாரம் பொழுதுகண்டிரங்கல் ௫-வது செய்யுளின் உரையில், 'கங்குல்வெள்ளத்திற்கு' என்றாண்டிருக்கின்றனர். 'கங்குல் வெள்ளங் கடலினும் பெரிதே' (குறுந்தொகை ௩௮௭) என்ற அடியிலிருந்து எடுத்து உரைநடையிடைமடுத்திருத்தல் உணரத்தக்கதாகும்.

௧௨௬-ம் அதிகாரம் நிறையழிதல் ௫-வது செய்யுளின் உரையில், 'நன்றென வுணரார் மாட்டுஞ் சென்றே நிற்கும்' என்று உரைநடையில் ஆளப்பட்டிருப்பதும், 'காமம்....... யாவதும், நன்றென வுணரார் மாட்டுஞ், சென்றே நிற்கும் பெரும்பேதைத்தே' (குறுந்தொகை-௭௮) என்ற அடியையே உரைநடையிடைமடுத்திருப்பதாக உணரக்கூடியதாகும்.

---

* பதிப்பாசிரியர்களால் விளக்கப்பட்டவைகள் ஈண்டுக்குறிக்கப் பட்டில.

## * புறநானூறு.

"பண்டும்பண்டும் ......... வரைந்தன ரெமரே" என்ற கருக-வது செய்யுளுரையகத்து வந்துள்ளனவான "பெண் கொலை புரிந்த நன்னன்போல, வரையா நிரயத்துச் செலீயரோ வென்னை" என்ற மேற்கோளடிகளும்,

'மண்ணிய சென்ற வொண்ணுத லரிவை
புனறரு பசுங்காய் தின்றதன் றப்பற்
கொன்பதிற் றென்பது களிற்றொ டவணிறை
பொன்செய் பாவை கொடுப்பவுங் கொள்ளான்
பெண்கொலை புரிந்த நன்னன் போல
வரையா நிரயத்துச் செலீயரோ வன்னை
யொருநாள், நகைமுக விருந்தினன் வந்தெனப்
பகைமுக வூரிற் றுஞ்சலோ விலளே'

என்ற குறுந்தொகை உஉஉ-வது செய்யுளின் ரு, அடிகளாகக் கருதக்கூடியவாகும்.

குறிப்பு:—மேற்கோளாட்சிவிளக்கத்தில், 'மு' என்பது முழுவதும் என்பதையும், 'மு-இ' என்பது, முதலும் இறுதியும் என்பதையும் குறிப்பிக்கும்.

---

* பதிப்பாசிரியரால் விளக்கப்பட்டவை ஈண்டுக் குறிக்கப் பட்டில.

| | |
|---|---|
| அகுதை ஆடுமகளிர்க்குப் பிடிப்பரிசில் ஈவானாதல். | ௨௯௮ |
| அஞ்சியின் பகைவரூர் துயிலாததாவது. | ௯௧ |
| அடம்பின் இலை மானடிபோன்றதாவது. | ௨௪௩ |
| அணில் மக்களில்லாவிடத்து ஆடுவதெனல். | ௪௧ |
| அரசர்கணக்கை ஆராய்வார் வருந்துவாரென்பது | ௨௬௧ |
| அருவி இழிதல் பாம்பிழிதலை நேர்வதாதல். | ௧௩௪ |
| அருவி பாம்பின் சட்டையை நேர்வதாவது. | ௨௩௫ |
| அருவி முரசுபோல ஒலிப்பதாதல். | ௩௬௫ |
| அலவன் பெடையை நீராட்டுவதாவது | ௩௦௩ |
| அழிசிக்கு ஆர்க்காடு உரியதென்பது. | ௨௫௮ |
| அறிவுடையார் புகழ நாணிப் பழியாராதல். | ௨௫௨ |
| அறுகு நீலமணியொழுக்கை நேர்வதென்பது. | ௨௫௬ |
| அன்பில்லார் அருளில்லாரென்பது. | ௩௯௫ |
| அன்றில் கதறல் தனித்தாரை வருத்துவதாவது. | ௧௬௦ |
| அன்றில் பனைமடலிற் கூடுகட்டிக்கோடல். | ௧௭௭ |
| ஆடுமகளிர் வெண்பூணிட்ட கோல்கொள்வாரெனல். | ௨௯௮ |
| ஆண்மான் கவைத்த கோட்டினதாதல். | ௧௮௩, ௨௧௩ |
| ஆதியருமன்மூதூர் பரத்தையர்க்கு உவமையாதல். | ௨௯௩ |
| ஆம்பன்மலர்த்தாள் உட்டுளையதென்பது. | ௧௭௮ |
| ஆய்க்குப் பொதியில் உரியதென்பது. | ௮௪ |
| ஆயரும் அவர்சிறாரும் செய்யும் செய்கைகள். | ௨௨௧ |
| ஆன்கன்று தாயைக் காணும் விழைவினதாவது. | ௧௩௨ |
| ஆன்கள் மேய்ப்பாரைத் தப்பிக் கன்றுகளிடம் வரல். | ௩௪௪ |
| ஆனின் கழுத்தில் மணியை அணிதல். | ௨௭௫ |
| இடி பாம்பின் தலையைத் துணிப்பதாவது. | ௧௯௦, ௨௬௮ |
| இரப்பவர்க்கீந்து மீளப்பெறுதல் இன்னாதெனல். | ௩௪௯ |
| இரவின் இடையாமம் 'நள்'என் ஒலியதாதல். | ௬, ௧௬௩ |
| இல்லறத்தார் விருந்தினரைப் போற்றுவாராதல். | ௩௩ |
| இற்றிவேர் அருவிபோலத் தோற்றுமெனல். | ௧௦௬ |
| இறமீன் வளைந்த புறத்தினதாவது. | ௧௦௯ |
| ஈயாதார்க்கு நல்லுலகில் இடமில்லையாதல். | ௧௩௭ |
| ஈவோர்க்கு இரப்பவர் வாராவைகல் இன்னலிழைத்தல் | ,, |
| உகாப்பழம் நீர்நசையை நீக்குமென்பது | ௨௭௪ |
| உண்டார்வாயில் தேனும் புளிக்குமெனல். | ௩௫௪ |
| உயர்ந்தோர்க்கு நீரோடு உணவளிப்பாராதல். | ௨௩௩ |
| உலக்கைப்பாட்டில் பிறரைப் பழிப்பாராதல். | ௮௯ |

உழவர் களை களைவாரென்பது. ௩0௧
உழுந்தின் காய் குறும்பூழின் செங்கால்போறல் ௬அ
உள்ளதை அழிப்போர் உள்ளவராகாமை உ௮௩
உறையூர் காவிரியை அடுத்ததாவது. ௧௧௬
உறையூர் சோழவரசருக்கு உரியதென்பது. ,,
ஊகம் கரிய விரலினதாவது. ௩௭௩
ஊகம் வலிய பல்லினதென்பது. ,,
ஊன்றியூன்றி நோக்கின் கண்ணொளி மங்குதல். ௪௪
எயிற்றாற்றைக் காலநிகடிகைநீர்க்கசிவு நேர்தல். உ௬௭
எருமை உழவன் கட்டிய கன்றருகு நிற்றல். ௧அ௧
எருமை மாரிநாளில் கோட்டுமண்கொள்ளல். உ௬௧
எவ்வி பாணர்க்குப் பொற்பூப்பசிலளிப்போனவது. ௧௯
எழினி இனிய செய்கையன் என்பது. உ௪௭
எழினிமள்ளர் மாற்றார்முன்னணியைக்கெடுப்பது. அ0
ஏதிலாளர்சுடலையைக் காணுதுவிடுவது. உ௩௧
ஏற்றுக்கோட்டில் மாலையை அணிவது. ௩௬௩
ஓசியன்மரம் நாருடையதாவது. ௧௧உ
ஓந்தி மரப்பொந்தில் உறைவதாதல். ௧௪0
ஓந்தியின் புறம் வெப்பமுடையதென்பது. ,,
ஓரிகானத்துக் காற்றுக் கமழ்வதாவது. ௧௯௯
ஓரி கொல்லிமலையை உரிமையாக வுடைமை. ௧00
கடல் முரசைப்போல முழங்குவதெனல். ௩உஅ
கடலும் கானலும் நிலவும் இருளும்போலுதல். அ௧
கடற்கெல்லைகாணல் அரியதென்பது. ௩௭௩
கண்ணுடி அடுத்தார் செயலினதாதல். அ
கரியில் சான்றோர் பொய்யாராவது. ௧அ௪
கரும்பின் கூம்பு சூற்பசும்பாம்பை நேர்தல். ௩௫
கரும்பின் பாத்தி வெள்ளத்தாற் கெடுமென்பது. ௧௪௯
கரும்பினிடைக்கண் இனியதாகுமெனல். ௧அ0
கல்லில் மோதுஞ் சிறுநுரை அழிவதாதல், உ௯0
கழி இழுமெனும் ஒலியினதென்பது. ௩௪௫
கள்ளி கவைத்த முள்ளினதென்பது. ௧௭௪
கள்ளி பொரிந்த காலையுடையதாவது. ௧௫௪
களிறு நீண்ட துதிக்கையினதாதல். ௧௪௧
கற்குழியில் கொன்றைமலர் வீழ்ந்திருத்தல் பொற்பெட்டி வாயைத் திறந்துவைத்தாற்போலுதல். உ௩௩

கறவை கன்றிடத்துச் செல்லுவதாதல். ௧௦௮

காக்கை விருந்துவரக் கரைவதாதல். ௨௧௦

காஞ்சி பயறுபோன்ற இணரினதென்பது. ௧௦

காந்தள் மலர்ந்த துறுகல் பொருத யானைமுகம்போறல். ௨௮௪

காந்தளில் ஊதும்வண்டு பாம்புமிழ்மணிபோறல். ௨௩௯

கார்காலத்துக் கொன்றை மலர்வதாவது. ௨௧, ௬௯, ௧௪௮

காற்றாற்சிதறிய மலர் நூலற்ற முத்துப்போற்*செல்லல். ௫௧

கிளி வளைந்த வாயினையுடையதாவது. ௧௪௧

கிழவர், தலைநடுக்கம், நரை, கோல் இவற்றை உடைமை. ௧௪௯

குயில் மாம்பழத்தை உண்பதென்பது. ௨௦௧

குயில் மூங்கிலிடத்துத் தங்குவதெனல். ,,

குயில் நெல்லிக்கனியை உண்பதாதல். ,,

குரங்கு மாம்பழத்தை உண்ணுமென்பது. ௨௯

குரங்கு மிளகுமுறியை உண்பதென்பது. ௨௮௮

குரா பாவையைப்போலப் பூப்பதாவது. ௪௮

குவளைமலரான் மாலையைக் கட்டுதல். ௩௪௬

குழவி அலைப்பினும் அன்னையென்பதாவது. ௩௯௭

குறக்குடிச்சிறார் குறிகூறுவாரென்பது. ௩௯௪

குறக்குடிச்சிறார் யானைக்கன்றோடு விளையாடல். ,,

குறமகளிர் பாறையில் தினையை உலர்த்தல். ௩௩௫

குறவன் குன்றில் கிழங்ககழ்வானென்பது. ௩௭௯

குறவன்கொள்ளிகள் வான்மீனை நிகர்த்தல். ௧௫௦

கூகை மலையிடத்துக் குழறுவதென்பது. ௧௫௩

கூந்தலுக்குக் கருமணலொழுக்கு உவமையாமென்பது. ௧௧௬

கூந்தலையொட்டிய நுதல் கடலிற்றோன்றும்
எண்ணாட்டிங்களை நேர்வதாம் என்பது. ௧௨௯

கூம்பிய ஆம்பல் கொக்கின்புறத்தை நேர்வதாதல். ௧௨௨

கெண்டைமீன் தாமரைமுகையைக் குருகென்றஞ்சுதல். ௧௨௭

கொடிச்சி தினையில் கவணால் கிளிவெருட்டல் ௩௬௦

கொல்லிமலையார் யானைக்கோட்டை விற்றுண்ணல். ௧௦௦

கொல்லியில் தெய்வம் பாவையை எழுதியது. ௮௯, ௧௦௦

கொன்றைக்காய் மகளிர்கூந்தலை நேருமென்பது. ௨௧

கொன்றைமலர் மகளிர்பசலையை நேர்வதாதல். ௧௮௩

கோசர் பொதியிலிடத்துத் தோன்றியமை. ௧௫

கோசர் மொழியிற் றிறம்பாராவது. ,,

கோசர் நன்னன்மாவைக் கொன்று செலுத்தியது. ௭௩

கோடிட்டு நாட்கணக்கை அறிந்திடுவது. ௩௫௮
கோழி குப்பையை விழைவதெனல். ௩௦௫
கோழிச்சேவல் செஞ்சூட்டினதாவது. ௧௦௭, ௨௩௪
கோழிப்பெடை குஞ்சுகளுடன் பூனையையஞ்சுவது. ௪௩௯
கோழி வைகறையில் கூவுவதாதல். ௧௫௭, ௨௩௪, ௩௦௫
கோவலர் முல்லைமாலையைச் சூடுவாராதல். ௩௫௮
சங்குமணிக்கோப்பு நரைமயிர்க்கு உவமையாமெனல். ௨௩
சிறார் சிறுதேருருட்டி விளையாடுவாராதல் ௯௧
சிறுவெண்காக்கை கழியில் இரைதேடல். ௩௧௩
சிறுவெண்காக்கை செவ்வாயினதென்பது. ௩௩௪
சூருப்பாயப் புண்ணுண்டாகுமென்பது. ௬௯௨
சூலன்றில் துணையை நள்ளிரவில் அழைத்தல். ௩௦௧
சூன்மகளிர் புளிப்பை விழைவாராவது. ௨௮௭
சூன்மகளிர் நீருண்டமுகிலுக்கு உவமையாவாராதல். ,,
செந்நாய் ஊனை விரும்புமெனல். ௧௪௧
செல்வச்சிறார் காலில் சிறுசதங்கை விளங்குதல். ௧௪௮
சேந்தனுக்கு உறையூர் உரியதாவது. ௨௫௮
சேம்பினிலை யானைக்காதை நேருமெனல். ௭௬
சேவல் சூற்பெடைக்கு ஈனில்இழைத்தல். ௮௫
சேரன்குட்டுவன் கடல்பிறக்கோட்டியது. ௩௪
சேரனுக்குக் கொல்லிமலை உரியதென்பது. ௮௯
ஞாழன்மலர் வெண்சிறுகடுகை நேர்வதாதல். ௫௦
தவளைவாய் சிறுசதங்கைவாய்க்கு உவமையாதல். ௧௪௮
தனித்தாரை எல்லாப்பொழுதுகளும் வருத்துமெனல். ௩௨
தாமரையிலை களிற்றுக்காதை நேர்வதாமெனல். ௨௪௬
தாமரை வெயிலால் விளக்கம் மிகுவதாதல். ௩௭௬
தாயற்ற முட்டை அழிவதாவது. ௧௫௨
தாழை தாழ்ந்த விழுதுகளை உடையதாவது. ௨௨௮
தாழைமடல் வாள்வாய்போன்ற வாயினதாதல். ௨௪௫
தாழைமுள் அணிற்பல்லை நேர்வதாமெனல். ௪௯
தாளிக்கொடியை ஆன் மேய்வதாவது. ௧௦௪
தினைமறுகாலில் அவரை பூத்திடுதல். ௮௨
தினையரிவார் தொண்டகச் சிறுபறை கொட்டல். ௩௭௫
தினையை மயிலுண்ணுதல். ௧௦௫
துயர்மிக்கார் கூந்தலைக் கோதிக்கொள்வாராதல். ௧௯௨
துயரால் வருங் கண்ணீர் வெப்பமுடையதாதல். ௪

தெய்வங்களாற் பேயோட்டுவார் செய்வன. ௬௩௨
தேமலுக்குத் தாமரைத்தாது உவமையாமெனல். ௩00
தேர்மணி விளரிப்பண்போல ஒலித்திடல். ௩௩௬
தேரின் செலவைக் குன்றிழியருவி நேருமெனல். ௧௮௯
தேரின்செலவை விசும்பாடன்னம் நேருமெனல். ௨0௫
தேவருணவு அமிழ்தம் என்பது. ௮௩
தேனிறால் தேர்போலத் தொங்குவதாமெனல். ௩௯௨
தைத்திங்களில் நீர் தண்ணியதாமெனல். ௧௯௬
தொண்டி நெல்விளைவு மிகுந்ததென்பது. ௨௧0
தொண்டி மகளிர்க்கு உவமையாமெனல். ௨௩௮
தொண்டியில் மகளிர் வண்டலாட்டயர்தல். ,,
தொண்டையர்மலை செல்லற்கரியதாமென்பது. ௨௬0
நண்டு சென்ற வழியை அலை அழித்திடுதல். ௩௫௧
நண்டு மகளிரை அஞ்சிக் கடலிற் செல்லுதல். ௪0௧
நண்டு நெருங்கிய கால்களை யுடையதாதல். ௩௫௧
நல்ல சொற்சொல்ல அஞ்சவேண்டாமெனல். ௩௯௨
நல்லார் உறையும் நாட்டில் மழைமிகுமென்பது. ௧௭௬
நாரை ஆரலை உண்ணுவதாதல். ௧௧௪
நாரை சேற்றில் இரையை ஆராய்வதாவது. ௧0௩
நீலம் புடைபெயர்தல் அரியதாமெனல் ௩௭௩
நீர்த்துறைப்பாசி தொடின் நீங்குவதாதல். ௩௯௯
நீர் தன்மைமாறுபடல் அரியதென்பது. ௩௭௩
நீர்நாய் வாளைமீனை உண்ணுவதாவது. ௩௬௪
நீர் பரந்தொழுக நிலங் காணப்படாமை. ௩௫௫
நீரில் நீண்டாடிற் கண் சிவந்திடுமெனல். ௩௫௪
நுளைச்சியர் உப்பைமாறி நெல்லைத் தருதல். ௨௬௯
நெருஞ்சிமலர் ஞாயிற்றை நோக்குவதென்பது. ௩௧௫
நெல்லிக்கனியைத் தின்று நீரைப் பருகல். ௨௬௨
நேமிப்புள் உச்சிக்கொண்டையினதாதல். ௨௨௭
நொச்சிமலர் நீலமணியை நிகர்க்குமெனல். ௧௩௮
நொச்சியிலை மயிலடியை நிகர்க்குமெனல். ,,
நோயெல்லாம் நோய்செய்தார்க்கே வருமெனல். ௧௨௮
பகன்றைமலர் கள்ளைப்போல நாறுமெனல். ௩௩0
பசுமட்கலம் நீரேற்பின் அழிவதாதல். ௨௯
படுமலைப்பண் மழையை மிகுவிக்குமென்பது. ௩௨௩
பயனின்றிக் கழிதற்குப் பால் வீணே சிந்திப்போதல் உவமையாமெனல். ௨௭

பரத்தையர் மேனியினுக்குத்தலை உடையவரெனல். ௪௫
பரதவர் கட்டுமரத்திலிருந்து மீன்பிடிப்பாராதல். ௩௦௪
பல்லி செங்காலினதென்பது. ௧௬
பல்லி துணையை அழைத்திடுவதாதல். ”
பருந்து ஊனை விழைந்திடுவதென்பது. ௨௮௫
பற்றுள்ளத்தார் கொடியராவரென்பது. ௩௯௫
பறவைகள் ஆள்வருகையில் ஒலிப்பதாவது. ௩௫௦
பறவைகள் மாலையில் குஞ்சுகளுக்கு இரையோடு செல்லல். ௯௨
பறை கயிற்றிடத்து ஆடுவதென்பது. ௭
பனம்பாளை, கள், நுங்கு இவற்றைத் தருமெனல். ௨௯௩
பனிக்காலத்து நீர்ப்பூக்கள் செவ்வி கெடுமெனல். ௧௪௦
பனை முழவைப்போன்ற முதலினதென்பது. ௩௦௧
பாதிரிமலர் மகளிர்மாமைக்கு உவமையாமெனல். ௧௪௭
பாதிரி வேனிற்காலத்து மலர்வதென்பது. ”
பாம்பின் குட்டி காட்டியானையை வருத்துவதெனல். ௧௧௯
பார்ப்பனமகன், முருக்கங்கோல், [பலாசதண்டம்,]
கமண்டலம், நோன்புணவு இவற்றையுடையானென்பது. ௧௫௬
பிடியின் கை கூழையாகுமென்பது. ௧௧௧
பிணைமானின் தலை சிறியதாகுமென்பது. ௧௮௩
பிறை உடைத்த வளையை நேர்வதாமெனல். ௩௦௭
பிறையைப் பலரும் தொழுவாரென்பது. ”
பிறை வெண்முகிலுக்கு உவமையாமெனல். ௨௮௭
பீர்க்கின் மலர் மகளிர்பசப்பிற்கு உவமையாமெனல். ௯௮
புகழை விரும்பினான்பொருள் நிலையாததாவது. ௧௪௩
புதுநீர்பாய்ச்சப் பழநீரை வடியவிடுதல். ௨௫௧
புலிப்பற்றாலியைச் சிறார்க்கணிவாராதல். ௧௬௧
புன்கு பொரியைப்போலப் பூக்குமென்பது. ௫௩
பூத்த காயாக்கிளை மயிற்கழுத்தை நேர்வதாதல். ௧௮௩
பெண்கள் துணங்கைக்கூத்தை ஆடுதல். ௩௧
பெரியோர் கருதியன பிழைபடாவாதல். ௩௪௧
பெரும்பழந்தாங்கிச் சிறுகிளை தளர்தல். ௧௮
பேய்க்கோட் பட்டார்க்குச் செய்யப்படுவன. ௨௬௩
பொருங்கயல் மகளிர்கண்ணுக்கு உவமையாமெனல். ௨௫௦
பொருளில்லானுக்குப் போகம் இல்லையாமெனல். ௧௨௦
மக்கள் மிக்க ஊர்க்குளக்கரைமரம் தீங்குறுதாவது. ௩௬௮
மகளிர் அடம்பின் மலரைக் கொய்தல். ௨௪௩
மகளிர் கூந்தலில் ஆம்பன்முகையைச் செருகல். ௮௦
மகளிர்கூந்தலில் இயற்கைமணம் உண்டென்பது. ௨
மகளிர் தழையை உடையாகக்கோடல். ௧௨௫
மகளிர்மயிர்முடிக்கு மயிற்கண் உவமையாமெனல். ௧௮௪
மகளிர்மெய் அவர்க்குரியதன்றென்பது. ௬௯
மகளிர்மேனிக்குப் பொன் உவமையாகுமெனல். ௩௧௧
மகளிர்மேனிக்கு மாந்தளிர் உவமையாமென்பது. ௩௩௧
மகன்றிற்பறவை பிரிவைப் பொருத இயல்பினதாதல். ௫௭

மடலேறுவார் ஆவிரைமலரைப் பலநூல்களாற் றொடுத்
தணிதல். ௧௭௩
மடலேறுவார் எருக்கமலர்மாலையைச் சூடுவாராதல். ௧௭
மடலேறுவார் என்பின்மாலையை அணிவாரெனல். ௧௮௨
மடலேறுவார் பனைமடன்மாமேல் தெருவிற் செல்வாராதல் ,,
மடலேறுவார் மணிமாலையை மார்பிலணிவாராவது. ௧௭௩, ௧௮௨
மடலேறுவார் மருவியமகளின் வடிவெழுதிக் கோடல். ௨௮௬
மந்தி மகவை நன்கு தழுவிக்கொள்ளுவதாவது. ௨௯
மலையனது முள்ளூர்க்கானம் மணம் மிக்கதென்பது. ௧௮௯
மலையில் விழும் அருவி கடலில் திங்கள் தோன்றல்போறல். ௩௧௫
மழைக்கால் மறைக்க விசும்பிடம் காணப்படாமை. ௩௫௫
மழைத்துளிக்கு முத்து உவமையாமென்பது. ௧௦௪
மழையால் மறைந்த குன்று புழுதி படிந்த யானைபோறல். ௨௭௯
மழையிற் குரங்கு குட்டிகளோடு நடுங்குதல். ௬௪௯
மாக்கள் என்பது இழித்தற்கண் வருவதெனல். ௬
மாரிக்காலத்துப் பிச்சியரும்பு மிகவும் சிவத்தல். ௯௪
மாரிக்காலத்துப் பீர்க்கு மலருமென்பது. ௯௮
மாரியாம்பல் கொக்கிற்கு உவமையாமெனல். ௧௧௭
மாரியில் குவிந்த காந்தள் பையொடுங்கிய பாம்புபோறல். ௧௮௫
மாலையில் மகளிர் அணிகலன்களை அணிவாரெனல். ௩௯௮
மாலையில் மகளிர் விளக்கேற்றித் தூண்டுவாரெனல். ,,
மாலையில் மறையுங்குன்று கடலாழ்கலம்போலுதல். ௨௪௦
மாலையில் முல்லை மலர்வதாவது. ௧௦௮, ௧௬௨, ௩௮௭
மாலையில் வானம் சிவப்படைவதாதல். ௨௩௪
மாவில் தாதுகோதுங் குயில் பொன்னுரைகற்போறல். ௧௯௨
மான் தழையை விரும்பும் இயல்பினதாதல். ௨௯௪
மின்னலைக் காணத் தாழை பூப்பதாவது. ௧௯௪
மின்னலைக் காண மயில் மகிழ்வதாதல். ,,
முசுக்கலை பலாப்பழத்தை உருட்டுதல். ௯௦
முசுக்கலைமுகம் கரியதாகுமென்பது. ௧௨௧
முசுக்குருளை மயின்முட்டையை உருட்டுதல். ௩௮
முடவன் கொம்புத்தேனை விழைதல். ௬௦
முடுக்கிவிட்ட குதிரை வியக்கச்செல்லுமெனல். ௭௪
முதலையேறு வளைந்த காலினதென்பது. ௩௨௪
முருகன் அவுணரை அழித்தான் என்பது. ௧
முருகன், கிரௌஞ்சத்தைப் பிளந்தமை, கோழிக்கொடி
யுடைமை, செம்மேனியுடைமை, செவ்வாடையுடைமை,
நாளும் உலகைக் காத்தல். கடவுள்வாழ்த்து.
முல்லை பல்லை நிகர்க்குமெனல். ௧௨௬, ௧௬௨, ௧௮௬
முல்லைமலர் பூனைப்பல்லை நேருமெனல். ௨௨௦, ௨௪௦
மெலியாரை வலியார் வருத்தல் தகாதெனல். ௩௮௧
யாமைப்பார்ப்பு காமத்திற்கு உவமையாமெனல். ௧௫௨
யானை ஊன்றின்னும் இயல்பினதன்றென்பது. ௧௪௧
யானை ஓமைத்தோலை விழைந்து உண்ணுமெனல். ௭௧

யானைக்காலுகிர் பேய்ப்பல்லை நிகர்க்குமெனல். ௧௮௰
யானைக்கால் உரலை நிகர்க்குமென்பது ௨௩௨
யானை குருக்கத்தியை உண்ணுமென்பது. ௩௪
யானை குறவர்கொள்ளிகளை அஞ்சுமெனல். ௩௫௭
யானை கைவிட்ட மூங்கில் தூண்டில்போல நிமிர்வதாதல். ௫௪
யானை தழையைத் தின்று மதத்தை ஆள்வதெனல். ௧௩௬
யானை தினையை மேயுமென்பது. ௩௯௪
யானை தீங்கிழைப்பின் மறவாததாமெனல். ௮௮
யானை பள்ளியிடத்து மிக்குயிர்க்குமெனல். ௧௯௨, ௩௫௯
யானை பிளிறுதல் இடியை நேர்வதாமென்பது. ௩௯௬
யானை மூங்கிலை உண்ணுவதென்பது. ௧௭௯
யானை வாழையால் மதமழிவதாதல். ௩௰௮
யானை வேங்கைமலர் மேலுதிரவும் துயிலல். ௨௪௭
வடுகர் கஞ்சங்குல்லைக்கண்ணியைச் சூடுவாரெனல். ௧௧
வண்டு தேனை நாடிச் செல்லுமெனல். ௧௭௫, ௧௭௬
வண்டு வீழ்ந்த மலர் செவ்வி கெடுமெனல். ௩௰
வண்ணாத்தி ஆடையைக் கஞ்சிப்பசையிற் றோய்த்தல். ௩௩௰
வள்ளிக்கூத்தை இழிந்தவர் காண்பாரெனல். ௨௧௬
வறியார் வாழ்தல் இளிவாமென்பது. ௨௮௩
வாகைநெற்றுக் காற்றால் ஒலிக்குமெனல். ௭, ௩௯
வாகைமலர்க்கொத்து மயிற்சூட்டை நேருமெனல். ௩௪௭
வாளைமீன் கோட்டையுடையதென்பது. ௧௬௪
வாவலிறகு ஆம்பலிலைப்புறம்போன்றதாமெனல். ௩௫௨
விச்சியர்கோன் வேந்தரோடு பொருதமை. ௩௨௮
விசும்பில் வீசுங் கொள்ளியைப் பிரித்துணரலாகாமை. ௧௮௯
விரிச்சிநிற்றல். [முதுபெண்டிர்சொல்லைக் கேட்டு நிற்றல்] ௨௧௮
விரும்பியார்துயர்தீர்த்தல் பயன்படுசெயலாதல். ௩௪௨
விளக்கிற்குப் பஞ்சியால் திரிபோடுதல். ௩௫௩
விளையாட்டுமகளிர் மணல்வீடுகட்டுவாராவது. ௩௨௬
வெட்சிமரம் செவ்வரையினதாவது. ௧௮௭
வெண்கடம்பு வலமாகச்சுழித்த மலரினதெனல். ௨௨
வெண்கடம்பு வேனிலில் மலர்வதாவது. ,,
வெய்யில் பாம்பின் சட்டையை நேர்வதாமெனல். ௧௫௪
வெய்யிலால் வருந்தினோர் 'தவ்' என்பாராதல். ௩௫௬
வெருகு வீட்டெலியை இரவில் ஆராய்வதாவது. ௧௰௭
வேங்கைமலர் உதிர்ந்த துறுகல் புலிக்குருளைபோறல். ௪௭
வேப்பம்பழத்தைக் கிளி கௌவுதல். ௬௭
வேலன் பலிகொடுக்குமிடத்துச் செய்வது. ௩௬௨
வேளிர்குன்றூர்க்கிழக்குக் கடலர்மெனல். ௧௬௪
வேனிலில் இலுப்பை பூப்பதாமென்பது. ௩௨௯
வையையில் மருதப்பெருந்துறை உளதெனல். ௨௫௮
வௌவால் மாலையில் பழுத்த மரத்திற்குச் செல்வதாதல். ௧௭௨

கஉ-வது பாட்டின் உரைமேற்கோள்:— "குறும்பல வெறும்பி கொண்டனைச் செலீஇ" (அகம்+௩௭௫) (இம்மேற்கோள் பின்னர் அகப்பட்டது. ('எறும்பி - எறும்பினுக்கோர் பெயர்; 'எறும்பி னளையிற் குறும்பல் சுனை' என்பது பாடமாக இருக்கலாம்' என்பதன்மேற் கொள்க.)

கஅ-வது பாட்டின் கீழ்க்குறிப்பு:— "சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கிவ,ளுயிர்தவச் சிறிது காமமோ பெரிதே" எனப் பிரதிகளில் எருத்தடி நாற்சீராகக் காணப்ப

சிலசெய்யுட்களில் கருத்துரை ஒன்றன்மேற்பட்டனவாய்க் காணப்பட்டன, அங்ஙனம் உள்ளவற்றை முற்றும் செய்யுண்மேல் வரைந்து ஒன்றற்கேற்பப் பொருள்வரைந்து விடுதல் அழகாகப்படாமையானும், ஒவ்வொன்றற்கும் தகவுரைவதாயின் விரிவாவதானும் அவை உரையிறுதியில், இனி, இச்செய்யுள் என்றுதொடங்கி எழுதிவரப்பட்டன. அவற்றுள் விடுபட்டவை வருமாறு:—

கூக—ல், பரத்தையிற் பிரிந்துவந்தவழி வேறுபட்ட கிழத்தியைத் தோழி கூறியது.

கஉஅ—ல், உணர்ப்புவயின்வாராவூடற்கண் தலைமகன் கூறியது.

கசஉ—ல், தோழிக்குத் தலைமகன் தன்குறைகூறியது.
உ௫அ—ல், வாயினேர்ந்தது.

உரையில்விடுபட்டன வருமாறு: —

உ0க—ல், 'மயிலிய லாட்டி' எனவும் பாடம்; 'அயிலிய லாட்டி' எனலுமாம்.

உகூ௩—ல், கள்ளில் - கள்ளிற்கு இல்லாகிய (பானை)என்றுரைத்துப் பானையை 'கள்ளில்' என்ற சிறப்பாற்போலும் இதனாசிரியர் 'கள்ளிலாத்திரையன்' எனப் பெயர்பெறுவாராயினர் எனலுமாம்.

மாறுபாடுசெய்துள்ள கருத்துரைகள் பிரதியில் இருந்தமை புலப்படுமாறு கீழ்க்குறிக்கப்படுகின்றன:—

[*இவ்வடையாளத்துடன் இடப்பட்ட புள்ளிகள் கருத்துரைவிளக்கத்தையும், || இவ்வடையாளத்துடன் இடப்பட்ட புள்ளிகள் கருத்துரையையுங் குறிப்பனவாம்.]

எகூ—ல், பொருள்வயிற் *.........தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

அகூ—ல், தலைமகன் ||...சொல்லுவாளாய்ச் சொல்லியது.

கூ0—ல், வரைவு *......தலைமகன் || .......சொல்லியது,

கூக—ல், பரத்தையர்மாட்டுப் * ......தலைமகள் || ...... சொல்லியது.

கூரு—ல், தலைமகனை *... தோழிக்குத் ||...மொழிந்தது.

கூகூ—ல், பொருண் * .... தலைமகன் || ... சொல்லியது.

க0உ—ல், ஆற்றுளெனக் *...கிழத்தி || ... என்கின்றது.

க0ச—ல், பிரிவின்கண் ஆற்றுளாகிய || .... சொல்லியது.

க0எ—ல், பொருண் *... கிழத்தி ||... கூறியது.

கரகூ—ல், சிறைப்புறம்தம்வேறுபாடு *... தோழி தலைமகட்குக் *...கூறியது.

ககக—ல், வரைவு *....தலைமகன் || ... கூறியது.

ககரு—ல், பகற்குறி *...குறிப்பினாற் || ... கூறியது.

ககஅ—ல், வரைவு *....தலைமகள் || ... சொல்லியது.

ககூ—ல், இயற்கைப் * ... தலைமகன் || உரைத்தது.

கஉக—ல், இரவுக் *... வரவுணர்த்திய || ... கூறியது.

கஉரு—ல், பகற் *... தலைமகட்குச் சொல்லியது.

கஉகூ—ல், வரைவு *... தலைமகள் ||... சொல்லியது.

கருச—ல், வரைவிடை *... தலைமகள் ||... சொல்லியது.

கருஎ—ல், இயற்கைப் *... தலைமகன் ||... உரைத்தது.

கருஅ—ல்,குறிபிழைத்த *... சிறைப்புறமாகக் கூறியது.

கருகூ—ல், வாயில் *....தலைமகற்குத் ||...மறுத்தது.

கசக—ல், இற்செறிக்கப் * .... மறுத்துச் சிறைப் || ... சொல்லியது.

கசரு—ல்,வரைவிடை *.. பிரிந்தவிடத்துத் ||....கூறியது

கசகூ—ல், தலைமகன் *... வரைவு ||.. சொல்லியது.

ருகரு "பெருங்கடற் றிரையது .....சேக்கும்" இம் மூன்றடிகள் இங்ஙனமே ஐங்குறுநூற்றிலும் வந்திருக்கின்றன. (ஐங்குறுநூறு — நெய்தல் — சிறுவெண்காக்கை—உ) உ0ச-வது பக்கத்தில் விடுபட்ட கீழ்க்குறிப்பு.

இந்நூலகத்து மாற்றப்பட்ட இடக்கர்ச்சொல்லாகிய குஃறொடரன்மொழி வந்துள்ள இடங்களைக் குறிக்கும் அட்

[புள்ளிகள்குஃறொடரன்மொ  -த்தைக்குறிப்பன.]

| பழைய பாடம். | மாற்றிக்கொண்ட பாடம். | பாட்டெண். | வரி. |
|---|---|---|---|
| திதலை... | திதலையாகத்தென் | உஎ | ரு. |
| மாண்வரி... | மாண்வரியாகக் | க0க | ரு. |
| தழையணி... | தழையணிமருங்குன் | கஉரு | ங. |
| ,, ,, | ,, ,, | கருகூ | க. |
| ...அவ்வரி | பெருந்தோளவ்வரி | கஅ0 | ரு, சு |
| திருந்திழை... | திருந்திழையுடை | உகசு | ச. |
| மணிமிடை... | மணிமிடைமருங்குன் | உஎச | எ. |
| *பைத்தகல்... | பணையெழின்மென்றோள் | உகூச | ரு. |
| தழைதாழ்... | தழைதாழ்மருங்குல் | ஙசச | ச. |

'துத்திப் பாந்தட் பைத்தகல்......' என்ற பாடம் விலக்கப்பட்டது.

## உரையில் மேற்கோள்கொண்ட நூல்கள்.—

அகநானூறு.
உ. இறை—அகம்.
ங. உவமானசங்கிரகம்.
ஐங்குறுநூறு
கலித்தொகை.
சு. குறிஞ்சிப்பாட்டு.
எ.
அ. சிந்தாமணி.
கூ. பபதிகாரம.
க0. பாணாற்றுப்படை.
கக. திணைமாலைநூற்றைம்பது.
கஉ.
கங. திருக்கோவையார்
கச. திருமுருகாற்றுப்படை.
கரு. திருவள்ளுவமாலை.
கசு. தொல்—எழுத்ததிகாரம்.
கஎ. ,, சொல்லதிகாரம்,
கஅ. தொல்—பொருளதிகாரம்.

உ0. நாலடியார்.
உக.
உஉ. நெடுநல்வாடை.
உங. பட்டினப்பாலை.
உச. பதிற்றுப்பத்து.
பரிபாடல்.
உசு. பழமொழி.
உஎ.
உஅ. புறநானூறு.
உகூ. பெரும்பாணாற்றுப்படை.
ங0. பெருமாள்திருமொழி.
உக- மலைபடுகடாம்.
ஙஉ. மதுரைக்காஞ்சி.
ஙங. முதுமொழிக்காஞ்சி.
ஙச. முல்லைப்பாட்டு.

அஞ்சியாந்தையார் ௨௯௪ (ஆதன்+தந்தை—ஆந்தை.) ௧
அண்டர்மகன்குறுவழுதி ௩௪௫ (பாண்டியமன்னர்.) ௧
அணிலாடுமுன்றிலார் 0 ௪௧. (பெண்பாலர்போலும்.) ௧
அம்மூவனார் ௪௯, ௧௨௫, ௧௬௩, ௩0௩, ௩0௬, ௩௮௧, ௩௨௭, ௩௪0, ௩௫௧, ௩௯௭, ௪0௧. ௧௧
அரிசில்கிழார் ௧௯௩. (வேளாளர்போலும்.) ௧
அழிசிநச்சாத்தனார் ௨௭௧. (ந—உயர்வைக்குறிப்பது.) ௧
அள்ளூர் நன்முல்லையார் * ௩௨, ௬௭, ௬௮, ௯௩, ௯௬, ௧௪0, ௨0௨, ௨௩௭. (பெண்பாலர்.) ௮
அள்ளூர் நன்மூலன் ௧௫௭ ௧
அறிவுடைநம்பி ௨௩0 (பாண்டியமன்னர்.) ௧
ஆசிரியன் பெருங்கண்ணன் ௨௩௯ ௧
ஆதிமந்தியார் ௩௧ (ஆட்டனத்திமனைவியார்.) ௧
ஆரியவரசன் யாழ்ப்பிரமதத்தன் ௧௮௪ 'மத்தன்' பேதம். (அந்தணர்போலும்.) ௧
ஆலங்குடி வங்கனார் * ௮, ௪௫ ௨
ஆலத்தூர்கிழார் * ௧௧௨, ௩௫0 (வேளாளர்போலும்.) ௨
இடைக்காடர் * ௨௫௧(வள்ளுவர்தோழர் போலும்.) ௧
இருந்தையூர்க் கொற்றன்புலவன் * ௩௩௫ ௧
இளங்கீரந்தையார் ௧௪௮ (கீரன்+தந்தை—கீரந்தை.) ௧
இளங்கீரன் ௧௧௬ ௧
இளம்பூதனார் ௩௩௪ ௧
இறையனார் ௨ (கூடன்மேவிய ஆடன்மேவினார்.) ௧
ஈழத்துப் பூதன்றேவன் * ௩௪௩ ௧
உகாய்க்குடிகிழார் * ௬௩ 'உகா'-பேதம்(வேளாளர்போலும்) ௧
உருத்திரன் ௨௭௪ ௧
உரையன் ௨0௭ 'உறையன்'—பேதம். ௧
உலோச்சனார் ௧௭௫, ௧௭௭, ௨0௫, ௨௪௮ ௪
உழுந்தினைம்புலவன் ௩௩௩ 'புலவன்'—பேதம். ௧

---

0 இக்குறியிடப்பட்டார் தொடராட்சியானிடப்பட்ட பெயரினராகத் தோன்றுபவராவார்.

* இக்குறியிடப்பட்டார் ஊரையடுத்த பெயரினராக உணரத்தக்கவராவார்.

உறையூர்ச் சல்லியன்குமாரன் * ௩௦௯
,, ச் சிறுகந்தன் * ௨௫௭ ௧
,, ப் பலாகாயனார் * ௩௭௪ ௧
,, முதுகண்ணன்சாத்தன் * ௧௩௩ ௧
,, முதுகூத்தன் * ௩௫௩, ௩௭௧ 'கூற்ற'-பேதம். ௨
,, முதுகொற்றன் * ௨௨௧, ௩௯௦ ௨
ஊண்பித்தை ௨௩௨ 'ஊன்'-பேதம். (மகளிர்போலும்.) ௧
எயிற்றியனார் ௨௮௬ ௧
ஐயூர் முடவனார் * ௧௨௩, ௨௦௬, ௩௨௨ ௩
ஒக்கூர் மாசாத்தியார் * ௧௨௬, ௧௩௯, ௧௮௬, ௨௨௦,
௨௭௫ (இவர்பெண்பாலர்போலும்.) ௫
ஒருசிறைப்பெரியன் ௨௭௨ 'பெயரியன்'—பேதம். ௧
ஒரோடகத்துக் கந்தரத்தனார் * ௧௫௫ 'உரோ'—பேதம். ௧
ஓதலாந்தையார் ௧௨, ௨௧, ௩௨௯ (பாலைபாடல்வல்லார்.) ௩
ஓரம்போகியார் ௧௦, ௭௦, ௧௨௨, ௧௨௭ 'பொதி'-பேதம்.
(மருதம்பாடவல்லார்.) ௪
ஓரிற்பிச்சையார் 0 ௨௭௭ (மகளிர்போலும்.) ௧
ஔவையார் ௧௫, ௨௩, ௨௮, ௨௯, ௩௯, ௪௩, ௮௦, ௯௧,
௯௯, ௧௦௨, ௧௫௮, ௧௮௩, ௨௦௦, ௩௬௪, ௩௮௮
(பெண்பாலர்.) ௧௫
கங்குல்வெள்ளத்தார் 0 ௩௮௭ (பெண்பாலர்போலும்.) ௧
கச்சிப்பேட்டுக் காஞ்சிக்கொற்றன் * ௨௧௩, ௨௧௬
'பெட்'-பேதம். ௨
,, நன்னாகையார் * ௩௦, ௧௭௨, ௧௮௦,
௧௯௨, ௧௯௭, ௨௮௭ (பெண்பாலர்போலும்.) ௬
கடம்பனூர்ச் சாண்டிலியன் * ௩௦௭ (அந்தணர்போலும்.) ௧
கடியலூர் உருத்திரன் கண்ணன் * ௩௫௨ ௧
கடுகுபெருந்தேவன் ௨௫௫ ௧
கடுந்தோட்கரவீரன் ௬௯ 'தாவீ'-பேதம். ௧
கடுவன்மள்ளன் ௮௨ ௧
கணக்காயன்றத்தன் ௩௦௪ ௧

கண்ணன் ௨௪௪ ௧

கந்தக்கண்ணன் ௯௪ 'கதக்கண்'-பேதம். ௧

கபிலர் ௧௩, ௧௮, ௨௫, ௩௮, ௪௨, ௮௭, ௯௫, ௧௦௦, ௧௦௬, ௧௧௫, ௧௨௧, ௧௪௨, ௧௫௩, ௧௮௭, ௧௯௮, ௨௦௮, ௨௨௫, ௨௪௧, ௨௪௬, ௨௪௯, ௨௫௯, ௨௬௪, ௨௮௮, ௨௯௧, ௩௧௨, ௩௫௫, ௩௫௭, ௩௬௧, ௩௮௫, (அந்தணர். குறிஞ்சிபாடவல்லாராய இவர் பாடியவை பெரும்பான்மைய குறிஞ்சித்திணைய.) ௨௯

கயத்தூர் கிழான் * ௩௫௪ (வேளாளர்போலும்.) ௧

கயமனார் ௯, ௩௫௬, ௩௭௮, ௩௯௬ ௪

கருவூர்க் கதப்பிள்ளை * ௨௬௫, ௩௮௦ ௨

,, கந்தப்பிள்ளைச்சாத்தனார் * ௬௪ ௧

,, கிழார் * ௧௭௦ (இவர் வேளாளர்போலும்.) ௧

,, ச் சேரமான்சாத்தன் * ௨௬௮ (சேரன்புலவர் போலும்.) ௧

,, ப் பவுத்திரன் * ௧௬௨ ௧

,, ஓதஞானி * ௭௧, 'ஓதஞானி' என்பாரும் இவரேபோலும். ௨௨௭ (இவர் பெண்பாலராகக் கருதக்கூடியவர்.) ௨

கல்பொருசிறுநுரையார் 0 ௨௯௦ (மகளிர்போலும்.) ௧

கல்லாடனார் ௨௬௦, ௨௬௯ ௨

கவைமகன் 0 ௩௨௪ ௧

கழார்க் கீரனெயிற்றியன் * ௩௩௦ (கழார்—சோழரது.) ௧

,, கீரனெயிற்றியார் * ௩௫, ௨௬௧ (மகளிர்போலும்.) ௨

கள்ளிலாத்திரையன் 0 ௨௯௩ ௧

காக்கைப்பாடினியார் நச்செள்ளையார் * ௨௧௦ (மகளிர்.) ௧

காம்போதியார் ௩௮௪ 'காமம்பொ', 'காமப்பொதி'—பேதங்கள். ௧

காமஞ்சேர்குளத்தார் ௪ ௧

காலறிகடிகையார் 0 ௨௬௭ (பெண்பாலர்போலும்.) ௧

காவன்முல்லைப்பூதனார் ௧௦௪, ௨௧௧ ௨

காவிரிப்பூம்பட்டினத்துக் கந்தரத்தனார் * ௩௪௨ க
,, காரிக்கண்ணன் * ௨௬௭ (வணிகர்.) க
,, ச்சேந்தன்கண்ணன் * ௩௪௭ க
கிடங்கிற்குலபதிநக்கண்ணன் ௨௫௨ க
கிள்ளிமங்கலங்கிழார் * ௭௬, ௧௧௦, ௧௫௨, ௧௮௧ ('கிளிமங்'—பேதம். வேளாளர்போலும்.) ௪
குட்டுவன்கண்ணன் ௧௭௯ (சேரமன்னர்போலும்.) க
குடவாயிற் கீரத்தன் * ௭௯, ௨௮௧, ௩௬௯ ௩
குப்பைக்கோழியார் 0 ௩௦௫ (பெண்பாலர்போலும்.) க
குழற்றத்தன் ௨௪௨ க
குறியிறையார் 0 ௩௯௪ (பெண்பாலர்போலும்.) க
குறுங்கீரன் ௩௮௨ க
குறுங்குடிமருதன் * ௩௪௪ (குறுங்குடி-திருமால்திருப்பதி.) க
குன்றியன் ௫௦, ௫௧, ௧௧௭, ௨௩௮, ௩௦௧, ௩௩௬ ௬
கூடலூர்கிழார் * ௧௬௬, ௧௬௭, ௨௧௪ (வேளாளர் போலும்.) ௩
கூவன்மைந்தன் ௨௨௪ க
கூழிக்கொற்றன் ௨௭௬ க
கொல்லனழிசி ௨௭, ௧௩௮, ௧௪௫, ௨௪௦ (கம்மியர் போலும்.) ௪
கொல்லிக்கண்ணன் ௩௪ க
கொற்றன் ௨௧௫, ௨௧௮, ௩௫௮ ௩
கோக்குளமுற்றன் ௯௮ (மன்னர்போலும்.) க
கோப்பெருஞ்சோழன் ௨௦, ௫௩, ௧௨௯, ௧௪௭ (சோழ மன்னர்.) ௪
கோவத்தன் ௬௬, ௧௯௪, 'கோவதத்தன்'—பேதம். ௨
கோவூர்கிழார் * ௬௫ (வேளாளர்போலும்.) க
கோவேங்கைப் பெருங்கதவன் ௧௩௪ (மன்னர்போலும்.) க
சத்திநாதனார் ௧௧௯ க
சாத்தன் ௩௪௯ க
சிறைக்குடி யாந்தையார் ௫௬, ௫௭, ௬௨, ௧௩௨, ௧௬௮, ௨௨௨, ௨௭௩, ௩௦௦ ௮

செம்புலப் பெய்நீரார் 0 ௪௦ 'பெயனீ'—பேதம். ௧
செய்திவள்ளுவன் பெருஞ்சாத்தன் ௨௨௮ (வள்ளுவர்
குடியினர்.) ௧
சேந்தன்கீரன் ௩௧௧ ௧
சேந்தன் பூதனார் ௨௪௭ 'சேந்தம்'—பேதம். ௧
சேரமானெந்தை ௨௨ (இவர்சேரமன்னர்போலும்.) ௧
சொல்லூர்க் கொற்றன். *௩௬௩ 'செல்லூர்'—பேதம். ௧
தங்கான்முடக்கோவலனார் ௨௧௭ 'தாங்கல்', 'கோலவ',
'கொல்லன்'—பேதங்கள். ௧
தாமோதரன் ௯௨ (அந்தணர்போலும்.) ௧
தாயங்கண்ணன் ௩௧௯ ௧
திப்புத்தோளார் ௧ ௧
தீன்மதிநாகன் ௧௧௧ 'தீனமிதி'—பேதம். ௧
தும்பிசேர்கீரனார் 0 ௬௧, ௩௧௫, ௩௧௬, ௩௯௨, ௪
தும்பிமோசிகீரன் ௩௨௦ ௧
தூங்கலோரி ௧௫௧, ௨௯௫ ௨
தேவகுலத்தார் ௩ (அந்தணர்போலும்.) ௧
தொல்கபிலர் ௧௪ ௧
தோதான் ௧௯ ௧
நக்கீரனார் ௭௮, ௧௦௫, ௧௩௧, ௧௬௧, ௨௬௬, ௨௮௦, ௩௬௮ ௭
நம்பிகுட்டுவன் ௧௦௯, ௨௪௩ (சேரமன்னர்போலும்.) ௨
நரிவெரூஉத்தலையார் ௫, ௨௩௬ ௨
நன்னாகையார் ௧௧௮, ௩௨௫ (மகளிர்போலும்.) ௨
நாகம்போத்தன் ௨௮௨ ௧
நாமலார்மகன் இளங்கண்ணன் ௨௫௦ ௧
நெடும்பல்லியத்தை ௧௭௮, ௨௦௩ (பெண்பாலர்போலும்.) ௨
நெடுவெண்ணிலவினார் 0 ௪௭ (பெண்பாலர்போலும்.) ௧
நெய்தற்கார்க்கியனார் ௫௫, ௨௧௨ (அந்தணர்போலும்.
இவர்பாடியவை நெய்தற்றிணையினவே.) ௨
படுமரத்து மோசிகீரனார் * ௩௩, ௭௫, ௩௮௩ 'மரத்'—
பேதம். ௩

படுமாத்துமோசிகீரன் கொற்றன் * ௩௭௬ ௧
பதடிவைகலார் 0 ௩௨௩ ௧
பதுமனார் ௬ ௧
பரணர் ௧௯, ௨௪, ௩௬, ௬௦, ௭௩, ௮௯, ௧௨௦, ௧௨௮, ௧௬௫, ௧௯௯, ௨௫௮, ௨௯௨, ௨௯௮, ௩௨௮, ௩௯௩, ௩௯௯ ௧௬
பரூஉமோவாய்ப்பதுமன் ௧௦௧ 'பருவமோ'—பேதம். ௧
பனம்பாரனார் ௫௨ ௧
பாண்டியனேனாதி நெடுங்கண்ணன் ௧௫௬ (பாண்டியனிடத்தில், ஏனாதிப்பட்டம் பெற்றவன்போலும்.) ௧
பாண்டியன் பன்னாடுதந்தான் ௨௭௦ (பாண்டியமன்னர்.) ௧
பாரகாபான் ௨௫௪ 'பரா', 'பரகா', 'பரன்'—பேதங்கள். ௧
பாரதம்பாடிய பெருந்தேவனார்(காரணப்பெயரினராவார்.) கடவுள்வாழ்த்து. ௧
பாலைபாடிய பெருங்கடுங்கோ ௧௬, ௩௭, ௧௨௪, ௧௩௫, ௧௩௭, ௨௦௯, ௨௩௧ ௨௬௨, ௨௮௩, ௩௯௮, (சேரமன்னர். இவர்பாடியவற்றுள் பெரும்பான்மைய பாலைத்திணையனவே.) ௧௦
பூங்கண்ணன் ௨௫௩ ௧
பூங்கண்ணுத்திரையார் ௪௮, ௧௭௧ 'கணு'—பேதம் (மகளிர்போலும்.) ௨
பூதத்தேவன் ௨௮௫ ௧
பூதம்புல்லன் ௧௯௦ ௧
பெருங்கண்ணன் ௨௮௯, ௩௧௦ ௨
பெருங்குன்றூர்கிழார் * ௩௩௮ (வேளாளர்போலும் ) ௧
பெருஞ்சாத்தன் ௨௬௩, ௩௧௪ ௨
பெருந்தோட் குறுஞ்சாத்தன் ௩௦௮ ௧
பெரும்பதுமனார் ௭ ௧
பெரும்பாக்கன் ௨௯௬ ௧
பேயனார் ௨௩௩, ௩௩௯, ௩௫௯, ௪௦௦ 'பேயன்', 'பேயார்' எனவும் அழைப்ப. ௪
பேரிசாத்தன் ௩௬௬ ௧

பேரெயின்முறுவலார் ௧௭ ௧
போதுக்கயத்துக் கீரந்தை ௩௩௭ ௧
பொன்மணியார் ௩௯௧ (பெண்பாலர்போலும்.) ௧
பொன்னாகன் ௧௧௪ ௧
மடல்பாடிய மாதங்கீரன் ௧௮௨ (காரணப்பெயரினர் போலும்.) ௧
மதுரை அளக்கர்ஞாழார்மகனார் மள்ளனார் * ௧௮௮,௨௧௫ ௨
,, அறுவைவாணிகன் இளவேட்டன் * ௧௮௫ ௧
,, ஆசிரியன் கோடங்கொற்றன் * ௧௪௪ ௧
,, ஈழத்துப் பூதன்தேவன் * ௧௮௯, ௩௬௦ ௨
,, எழுத்தாளன் சேந்தன்பூதன் * ௯௦, ௨௨௬ ௨
,, க் கடையத்தார்மகன் வெண்ணாகன் * ௨௨௩ ௧
,, க் கணக்காயனார்மகனார் நக்கீரனார் * ௧௪௩ ௧
,, க் கண்டாகத்தன் * ௩௧௭ ௧
,, க் கண்ணனார் * ௧௦௭ ௧
,, க் கதக்கண்ணன் * ௮௮ ௧
,, க் காஞ்சிப்புலவன் ௧௭௩, 'மாங்குடிமருதன்' ௧௬௪; 'மாங்குடிகிழார்' ௩௦௨; (இம்மூவரும் ஒருவராகலாம்.) ௩
,, க் கோலம்புல்லன் * ௩௭௩ ௧
,, ச் சித்தலைச்சாத்தன் * ௧௫௪(காரணப்பெயரினர்.) ௧
,, நல்வெள்ளி * ௩௬௫ 'நல'—பேதம் (மகளிர் போலும்.) ௧
,, ப் பெருங்கொல்லனார் * ௧௪௧ (கம்மியர்.) ௧
,, மருதங்கிழார் மகனிளம்போத்தன் * ௩௩௨ ௧
,, மருதனிளநாகனார் * ௭௭, ௧௬௦, ௨௭௯, ௩௬௭ ௪
மள்ளனார் ௭௨ ௧
மாடலூர்கிழார் * ௧௫௦ 'மாடனூர்'—பேதம் (வேளாளர் போலும்.) ௧
மாதீரத்தன் ௧௧௩ ௧
மாமிலாடன் ௪௬ 'மிலாடான்'—பேதம். ௧

மாமூலனார் கக க
மாயேண்டன் உஙரு 'மாயெண்டன்—பேதம். க
மாலைமாறன் உசரு (பாண்டியமன்னனாகலாம்.) க
மாவளத்தன் ஙசஅ க
மிளைக்கந்தன் ககூசா க
மிளைகிழானல்வேட்டன் ஙசக க
மிளைப்பெருங்கந்தன் கஙசா, உ0ச, உஙச ங
மிளைவேடித்தன் உஅச க
மீனெறிதூண்டிலார் 0 ருச (பெண்பாலர்போலும்.) க
மோதாசனார் உஉகூ க
மோசிகீரன் ருகூ, அச உ
மோசிகொற்றன் ஙஎஎ க
வடமவண்ணக்கர் அக க
வடமவண்ணக்கன் தாமோதரன் அரு க
வடமவண்ணக்கன் பேரிசாத்தன் கருகூ 'பெரிய'-பேதம். க
வருமுலையாரித்தி கஎசா (பெண்பாலர்போலும்.) க
வாடாப்பிரமந்தன் ஙஙக 'மந்தன்'—பேதம். க
வாயிலான்றேவன் க0ங, க0அ உ
வாயிலிளங்கண்ணன் ஙசசா க
விட்டகுதிரையார் 0 எச (பெண்பாலர்போலும்.) க
வில்லகவிரலினார் 0 ஙஎ0 (பெண்பாலர்போலும்.) க
விற்றூற்றுமூதெயினன் ஙஎஉ (எயின்குடியினராகலாம்.) க
வெண்கொற்றன் அசா க
வெண்பூகன் அங க
வெண்பூதி கூஎ, கஎச (பெண்பாலர்போலும்.) உ
வெண்மணிப்பூதியார் உகூகூ (பெண்பாலர்போலும்.) க
வெள்ளிவீதியார் உசா, சச, ருஅ, கங0, கசசா, கசகூ, கசாகூ, ஙஅசா (இவர்பெண்பாலர்.) அ
வெள்ளூர்கிழார்மகனார் வெண்பூதியார் உககூ (பெண்பாலர்போலும்.) க
வேட்டக்கண்ணன் ஙஅகூ க

வேப்பற்றூர்க் கண்ணன்கூத்தன் * ருசஉ 'வேம்பற்'—பேதம். க

வேரிசாத்தன் உஎஅ க

ஆசிரியர்பெயர்காணப்படாத பாடல்கள்:—ககூக, உ0க, உருசு, ருகரு, ருஉக, ருஉசு, ருஎரு, ருஎகூ, ருஅக, ருகூரு க0.

ஸ்ரீ

எட்டுத்தொகையுள்

இரண்டாவதாகிய

# குறுந்தொகை

## மூலமும் உரையும்.

---

### பாடாண்.

[கடவுள்வாழ்த்து.]

என்பது, கடவுளை வாழ்த்தும் வாழ்த்து என்றவாறு.

[பாரதம்பாடிய பெருந்தேவனார் பாடியது.]

தாமரை புரையுங் காமர் சேவடிப்
பவளத் தன்ன மேனித் திகழொளிக்
குன்றி யேய்க்கு முடுக்கைக் குன்றி
னெஞ்சுபக வெறிந்த வஞ்சுடர் நெடுவேற்
சேவலங் கொடியோன் காப்ப
வேமம் வைக லெய்தின் றாலுலகே.

(இதன்பொருள்) :—தாமரைப்பூவை நிகர்க்கும் அழகிய செய்ய அடிகளையும், பவளத்தைப்போன்ற மேனியினது விளங்குஞ் (செய்ய) ஒளியினையும், குன்றியினையொத்த (செய்ய) ஆடையினையும், (கிரௌஞ்சம் என்னும்) குன்றினது நெஞ்சம் பிளவுபடச்செலுத்திய அழகிய ஒளியுள்ள நெடிய வேலையுமுடைய கோழிச்சேவலாகிய அழகிய கொடியினையுடையான் [முருகன்] காத்தலால், பாதுகாப்பை நாளும் எய்தியது உலகம்.—(என்றவாறு.)

* "வாழ்த்தியல் வகையே நாற்பாற்கு முரித்தே" என்றதன்கண், 'வகை' என்றதனாற்கொண்ட அறுமுறைவாழ்த்தன்றி, தனக்கும் பிறர்க்கும் பயன்படும்படி படர்க்கையிடமாகக் கடவுளைவாழ்த்தியது, இக்கடவுள் வாழ்த்து.

தாமரை—ஆகுபெயர்; அதன்மலரைக் குறித்தலின். மங்கல மொழியாதலின், அது முதற்கண் வைக்கப்பட்டது.

---

* தொல்-பொருள்-செய்யுள்—கOக.

திருவடியை முதற்கட் கூறியது, அடைந்தார் அவாவும் அறமுதனுன் மையும் அளித்தற்சிறப்பால்.

'தாமரை......சேவடி,' 'பவளத்......திகழொளி,' 'குன்றி......... முடிக்கை' இம்மூன்றும்—பண்புவமம்; முதலது சினையொடு சினையும், மற்றைய முறையே முதலொடு முதலும் சினையொடு முதலுமாய் வந்தன.

முருகன் செம்மேனியினையும், செவ்வாடையினையு முடையானென் பதை, *"செய்யன் சிவந்த வாடையன்" என்றதனுலும், 'குன்றி னெஞ்சுபக வெறிந்த' மையை, **"குன்றங் கொன்ற குன்றுக் கொற் றத்து, விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ" என்றதனுனு முணர்க. குன்றின் நெஞ்சம்—மலையின் நடுவிடம்.

நெடு வேல்— நெடிய வேல்; வேலிற்கு நெடுமை—என்றுநிலைத்தல். வேல்—வெல்வது என்னுங் காரணம் பற்றியது.

எத்தகைய பகையையும் எளிதில் அழிப்பான் என்பதையும், பகை வர்க்கும் அருளும் பான்மையன் என்பதையும் உட்கொண்டு, 'குன்றி னெஞ்சு......கொடியோன்' என்றது. 'பவளத்......முடிக்கை' என்றது, உள்ளுவார் உள்ளுதற்கு.

சேவல்—கோழிச்சேவல்; அது முருகன் கொடியின்கண்ணதாதலே, ‡ "கோழி யோங்கிய வென்றடு விறற்கொடி" என்றதனுனோர்க. இனி, சேவல்—ஆண்மயிலுமாம். என்னே? § "பல்பொறி மஞ்ஞை வெல் கொடி யகவ" எனவும், ¶ "மணிமயி லுயரிய மாறு வென்றிப், பிணிமுக வூர்தி யொண்செய் யோனும்" எனவும் ஆசிரியர் நக்கீரர் கூறுதலான். †† "சேவற் பெயர்க்கொடை சிறகொடு சிவணு, மாயிருந் தூவி மயில லங் கடையே" என்றதனுல், தோகையோடுகூடி மென்மைத்தன்மை மேவிப் பெண்டன்மைகொண்ட மயிலிடத்துச் 'சேவற்பெயர்க்கொடை' சோராதேனும், வேலன்கொடியில் வீறுபெற்றுப் போர்முகத்து நின்று ஆண்டன்மை மிக்க மயிலிடஞ் சேறற்கு இழுக்கின்றென்க. இதனை, அச் சூத்திரத்து உரையிறுதியில், 'செவ்வேளூர்ந்த மயிற்காயி னதுவும் நேரவும் படும்' என்று, ஆசிரியர் உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர் வரைந் தமையும் வலியுறுத்தும்; அன்றியும், இங்குத் தேவிற்சிறந்த திருமாலுஞ் சிவபிரானும் ஊர்தியையுங் கொடியையும் ஒன்றாகக்கொண்டிருத்தலுங் கருதத்தக்கது.

---

* திருமுருகாற்றுப்படை—உ0சு. ** திருமுருகாற்றுப்படை—உசுசு,உசுஎ.
‡ திருமுருகாற்றுப்படை—௩அ. § திருமுருகாற்றுப்படை—கஉஉ.
¶ புறநானூறு—௫௬-எ-அ. †† தொல்.பொருள்-மரபி—௪அ.

'காப்ப' என்னுஞ் செயவெனெச்சங் காரணப்பொருளது.

'ஏம வைகல்' என்றும் பாடம்; 'பாதுகாப்புட் டங்குதலை' என்க.

வைகல் என்பதன் ஈற்றில் தொறுப்பொருளதாகிய உம்மை தொக்கது.

எய்தின்று—எய்தியது; 'எய்தின்று' என்பதன் 'இன்' இடைநிலை, * "கண்ணின் பசப்போ பருவா லெய்தின்றே", ** "இருபாற் பட்ட வொருசிறப் பின்று" என்றவிடங்களிற் போல, இன்னோசைதந்து நின்றது.

'உலகு' என்றது, அதன்கண் வாழும் உயிர்ப்பன்மையை.

உலகம் பாதுகாப்பை நாளும் முருகனால் விரைவில் எய்தலின், 'எய் தின்று' என இறந்தகாலத்தாற்கூறினர்; என்னை? ‡ "வாராக் காலத்து நிகழுங் காலத்து, மோராங்கு வரூஉம் வினைச்சொற் கிளவி, யிறந்த காலத் துக் குறிப்பொடு கிளத்தல், விரைந்த பொருள வென்மனார் புலவர்" என்பது விதியாகலான்.

'குன்றின்', 'எய்தின்றால்' இவற்றிலுள்ள 'இன்,' 'ஆல்'—சாரியைகள். 'உலகே' என்றதில் 'ஏ'—ஈற்றசை.

உலகு சேவலங் கொடியோன் காப்ப ஏமம் வைகல் எய்தின்று என முடிவு காண்க.

அகத்திணையொழுக்கத்துச்சிறந்த கூடலும் கூடனிமித்தமும் நிக ழுமிடமான குறிஞ்சிக்குத் தேவாகிய முருகற்பரவிய இக்கடவுள்வாழ்த்து, அகப்பொருளுக்கு இலக்கியமாகிய இந்நூலுக்கு ஏற்புடைத்தாதலோர்க.

§ "ஈற்றய லடியே யாசிரிய மருங்கிற், றோற்ற முச்சீர்த் தாகு மென்ப" என்றதனான், இக்கடவுள்வாழ்த்தும், மேல் இத்தொகை நூல கத்துப் பெரும்பான்மையனவும்—ஈற்றயலடி முச்சீர்த்தாய நேரிசையா சிரியப்பாக்களென்க.

**மெய்ப்பாடு**—பிறபொருளின்கட்டோன்றிய ஆக்கம்பற்றிய வியப்பு. என்னை? ¶ "புதுமை பெருமை சிறுமை யாக்கமொடு, மதிமைசாலா மருட்கை நான்கே" என்றாகலின்.

கடவுள்வாழ்த்து முற்றும்.

---

* திருக்குறள்—உறுப்புநலனழிதல்—௧௦.

** தொல்-பொருள்-புறத்திணை—௧௬.

‡ தொல்-சொல்-வினை—௪௪.

§ தொல்-பொருள்-செய்யுள்—௬௮.

¶ தொல்-பொருள்-மெய்ப்பாட்டியல்—௭.

ஸ்ரீ

எட்டுத்தொகையுள்

ய

# குறுந்தொகை

## மூலமும் உரையும்.

### குறிஞ்சி.

[இது, தோழி கையுறை மறுத்தது.]

என்பது, தோழியிற் கூட்டம்வேண்டித் தலைமகன், செங்காந்தண்மலரைக் கையுறையாகக் கொண்டுவந்தானாக, தோழி, 'சேயன்னாய்! எங்கள் குன்றம் செங்காந்தளையுடையது' என்று, எளிய இதனை ஏலேமென்பது பயப்ப மறுத்துரையாநிற்றல்.

[திப்புத்தோளார் பாடியது.]

க. செங்களம் படக்கொன் றவுணர்த் தேய்த்த
செங்கோ லம்பின் செங்கோட் டியானைக்
கழறொடிச் சேஎய் குன்றங்
குருதிப் பூவின் குலைக்காந் தட்டே.

(இ-ள்) :—செழிய போர்க்களத்திலே அழியும்படி கொன்று அவுணராயினாரையொழித்த செங்கோலைப்போன்ற அம்பினையும், (பகைவரைக் குத்தியதாற் குருதிபட்டுச்) சிவந்த கோட்டினையுடைய (பிணிமுகம் என்னும்) யானையினையும், கழலவிடப்பட்ட வீரவளையையுமுடைய முருகனை நிகர்த்தாய்! (இவ்வெங்கள்) குன்றம், குருதியைப்போன்று பூக்கும் பூவின்குலைகளைக் கொண்ட (செங்) காந்தளையுடையது; (ஆதலின், எங்கட்கெளிய இதனை ஏலேம்),—(எ-று.)

களத்திற்குச் செம்மை—அதனிடத்துள்ளார் வீராதல்; செம்மை, செழிப்பென்னும்பொருள்தராலை, 'இப்பயிர் செம்மையாயிருக்கின்றது' என்ற வழக்கிடத்துங் காண்க.

அவுணர்—தேவர்களோடு மாறுகொண்டு அவர்க்கு ஊறுசெய்யும் ஒரு மரபினர். 'தேய்த்த' என்பது-அம்பிற்கேயன்றி, உவமையாகவந்த முருகற்கும் அடையாம். முருகன் தேவர்படைத்தலைவனாய்நின்று அவுணரை யழித்தமை வெள்ளிடைவிலங்கல்.

'செங்கோல்' அம்பிற்கு உவமையானது, அஞ்சிப் புறங்கொடுத்தார் அடைக்கலமென்றார் முதலியவர்பாற் செல்லாமைச்சிறப்பால்.

'செங்கோடு' என்பதிற்செம்மைக்கு, 'பகைவரைக் குத்தியதாற் குருதி பட்டு' எனக் காரணம் வருவித்துரைக்கப்பட்டது; இனி, செங்கோடு—வளவியகோடுமாம்; பகைவரைத் தப்பாது குத்துவதானும், அவர்செய்யு மூற்றை ஏற்றுக்கொள்ளாமையானும் இப்பொருளும் ஏற்குமென்க.

முருகன்யானை பிணிமுகம் என்பதை, * "ஓடாப் பூட்கைப் பிணி முகம் வாழ்த்தி," ** "சேயுயர் பிணிமுக மூர்ந்தம ருழக்கி," ‡ "பிணிமுக வூர்தி யொண்செய் யோனும்" என்பவற்றானு முணர்க.

கழல் தொடி—வீரர்கையில் கழலும்படி இடப்பட்ட வளை; இதனை, § "களம்படக் கடந்த கழறொடித் தடக்கை," ¶ "கழறொடி யாஅய் மழைதவழ் பொதியில்" என்பவற்றா னோர்க.

'சேயன்னாய்!' என்றது, 'சேஎய்!' என விளித்தாள், வள்ளியைக் கள்ளத்திற் கலக்க உள்ளங்கொண்ட முருகனது முயற்சிபோன்றதே நினது இம்முயற்சியுமென உய்த்துணருமாறு ஓர்பொருளையுந் தந்துநிற்ற லுணர்த்திய. அளபெடை விளியின்கண் வந்தது.

குருதிப்பூ—குருதியைப்போன்று பூக்கும் பூ; காந்தட்டு—குறிப்பு வினைமுற்று. காந்தள்—குறிஞ்சிக்கருப்பொருளுள் ஒன்று.

'அம்பின்,' 'பூவின்' என்பவற்றிலுள்ள 'இன்'—சாரியைகள்.

'குருதிப் பூவின் குலைக்காந் தட்டே' என்றதனால், தலைமகன் செங் காந்தண்மலரைக் கையுறையாகக் கொண்டுவந்தனனாக, தோழி, 'இஃதெங் கள்குன்றகத்து அருமையுடையதன்று; ஆதலின், இதனை ஏலேம்' என்று மறுத்தனள் என்பது, உணரத்தக்கது. 'எளிய இதனை ஏலேம்' என்றது, †† "சொல்லொடுங் குறிப்பொடு முடிவுகொ ளியற்கை, புல்லிய கிளவி யெச்ச மாகும்" என்றதனால், கூற்றெச்சம். என்னை? கூறினும் இழுக் கின்மையின்.

---

* திருமுருகாற்றுப்படை—உசஎ. ** பரிபாடல்—ரு.
‡ புறநானூறு—ருசு, அ. § புறநானூறு—கக, உ.
¶ புறநானூறு—கஉஅ, ரு. குறுந்தொகை—அச, ங.
†† தொல்-பொருள்-செய்யுள்—உ0எ.

திணை—குறிஞ்சி; கைகோள்—களவு; கூற்று—தோழிகூற்று; கேட்போன்—தலைமகன்; இடம்—முன்னிலை; காலம்—நிகழ்காலம்; எச்சம்—'இ' என்னுஞ் சுட்டு, குன்றத்தின் முன்னிற்கவேண்டியது; மெய்ப்பாடு—தோழிக்குச் சூழ்ச்சி பிறந்தது; தலைவற்கு அசைவு பிறந்தது; பயன்—கையுறை மறுத்தல்; பொருள்கோள்—விதலையாப்பு; என்னை? இவைபத்துங் கூறுமாறெனின், * "திணையே கைகோள் கூற்றே கேட்போ, ரிடனே கால மெச்ச மெய்ப்பாடு, பயனே கோளென் றாங்கப் பத்தே, யகனைந் திணையு முரைத்தலாறே" என்பது, இலக்கணமாதலின்.

இறையனார் பொருளுரையில் ஆசிரியர் நக்கீரரும், தொல்காப்பியப் பொருளதிகார வுரையில் ஆசிரியர் உச்சிமேற்புலவர்கொள் நச்சினார்க்கினியரும் இதனை, "தோழி தலைவியை இடத்துய்த்து நீங்கியது" என்பதற்கு உதாரணங்காட்டினராலெனின், ஆங்கு இச்செய்யுளின் மூன்றாவது அடி ** "கழறொடிச் சேய குன்றம்" என்றிருத்தலால், அங்ஙனங்கொண்டு, 'கழல விடப்பட்ட தொடியினையுடைய முருகனையன்னனது குன்றம்' என்று உரைகூறிக்கொண்டு, தோழி தலைமகளுக்குச் செங்காந்தள் நிறைந்ததோரிடத்தைச் சுட்டிக்காட்டி 'ஆங்குச்செல்க' என்பது பயப்பக் கூறினளென்றுங் கொள்ளக்கிடத்தலான், அத்துறைக்கும் அமைவுடைத்தாதல் காண்க. 'சேய குன்றம்' என்பதில், 'அ'—சாரியை. 'ஆங்குச் செல்க' என்பது, குறிப்பெச்சம்; கூறற்காகாமையின். ஆசிரியர் பேராசிரியர்க்கும் இச்செய்யுள் இருதுறைக்கும்பொருந்தும் என்றகருத்தாதலை, ‡ "சொல்லொடுங்......யெச்சமாகும்" என்ற செய்யுளியற்சூத்திரத்திற்கு அவருரைத்த உரையானுணர்க.

இனி, நல்லுணர்வுடையார், தொல்லுரையாசிரியர்கள் மேற்கோளாக எடுத்தாண்டவிடத்து இத்தொகைநூற்செய்யுட்களின்கீழ் எழுதப்பட்டிருக்கும் மிகப்பழைமையையுடைய துறைகளினும் வேறுதுறைகட்கு உதாரணங்காட்டிய சிலவிடங்களினும் பொருந்துமாற்றை உணர்ந்து கொள்வாராக.

கடவுள்வாழ்த்திற்கும் இம்முதற்செய்யுட்குங் கூடியவரை சுருக்கியே உரையுரைக்கப்பட்டது; நல்லிசைப்புலவர்கள்செய்யுளுரை எல்லையற்று விரியுமென்று கருதி.

இனியுங் கற்பார்க்கு உய்த்துணர்வுண்டாகற்பொருட்டுக் கூடியவரை சுருக்கியே யுரையுரைக்கப்படும்.

திணையும், மெய்ப்பாடும், பயனுமொழிந்தன ஓர்ந்துணருமாறு இனிக் குறியாதுவிடப்படும்

---

* இறையனாரகப்பொருள்—௫௬.

** ,, ,, பக்கம்—௬௪, வரி—எ.

தொல்—பொருள்—பக்கம்—௩௦௫. வரி—௩௬.

‡ தொல்—பொருள்—செய்யுள்—௨௫௭.

## குறிஞ்சி.

[இது, இயற்கைப்புணர்ச்சிபுணர்ந்தவழித் தலைமகளை இயற்கைப் புணர்ச்சிக்கண் இடையீடுபட்டுநின்ற தலைமகன், நாணினீக்குதற்பொருட்டு மெய்தொட்டுப்பயிறல் முதலாயின அவண்மாட்டு நிகழ்த்திப் பாடுமாற்றூற் கூடிய தனது அன்புதோற்ற நலம்பாராட்டியது.]

எ-து, இயற்கைப்புணர்ச்சிபுணர்ந்த தலைமகன், 'தும்பி! இவ்வரிவை கூந்தலினும் மணமுடைய பூக்களும் உள்ளனகொல், நீயறியும் பூக்களுள்? உண்மையைச் சொல்' எனத் தலைவியை நாணினீக்குதற்பொருட்டு அன்பு புலப்பட நலம்பாராட்டாநிற்றல்.

[இறையனார் பாடியது.]

உ. கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலி
னறியவு முளவோ நீயறியும் பூவே.

(இ-ள்):—பூந்தாதை ஆராயும் வாழ்க்கையினையும், அழகியசிறையினையுமுடைய தும்பி! (என்னிடங்கொண்ட) விருப்பத்தாற் கூறாது, (உண்மையாய்க்) கண்டதையே சொல்; நெருங்குதல்பொருந்திய நட்பினையும், மயிலினது சாயலினையும், நெருங்கிய பல்லினையுமுடைய (இவ்) வரிவை கூந்தலினும் மணமுடையனவும் உள்ளனகொல், நீ அறியும் பூக்களுள்?.—(எ-று.)

தும்பி! நீ அறியும் பூக்களுள் அரிவைகூந்தலின் நறியவும் உளவோ? கண்டது மொழி என்று முடிவுகொள்க.

கொங்கு—தேனுமாம். தும்பி—ஒருவகை வண்டு.

'கொங்குதேர்......தும்பி' என விளித்தான், 'நறியவும் உளவோ' என வினவுதற்குத் தகுதியுடைமைதோன்ற.

மோ—முன்னிலையிடத்தசை. பயிலியது—தொழிற்பெயர். கெழீஇய—மிக்கவென்றுமாம். நட்பின்—இன்—சாரியை.

'கூந்தலின்' என்றதன் ஐந்தனுருபு, எல்லைப்பொருளேயன்றி உவமைப்பொருளுமாம்.

'நீ அறியும் பூ' என்பதில் எழனுருபு, இறுதிக்கட் டொக்கது; * "ஐயுங் கண்ணு மல்லாப் பொருள்வயின், மெய்யுருபு தொகாஅ விறுதியான" என்ற விதியான்.

‡‡ இப்பாட்டு, இறையனூர் தருமிக்கு இயற்றித் தந்தது; இறையனூர்—ஆலவாயடிகள்.

மெய்ப்பாடு—புணர்ச்சிபற்றிய உவகை; என்னை? § "செல்வம் புலனே புணர்வு விளையாட்டென், றல்லனீத்த வுவகை நான்கே" என்றலின். பயன்—நயப்பறிவித்தல்

---

* தொல்-சொல்-வேற்றுமைமயங்கியல்—உ௨.

‡‡ மதுரையம்பதியில் கோயிற்கொண்டருளிய அங்கயற்கண்ணி பங்கனை ஆராதிக்கும் ஆதிசைவர்மரபிலுதித்த தருமி, இல்லறம்புகுதற்கேற்ற இருநிதி இல்லாமையால் வருந்தி, "தந்தை தாயிலேன் தமிய ளுகிய, மைந்த னேன்புது வதுவை வேட்கையேன், சிந்தை நோய்செயுஞ் செல்ல றீர்ப்பதற், கெந்தையேயிதுபதம்" என்றேத்த, "கொங்குதேர் வாழ்க்கை" என்னுந் திருப்பாசுரத்தைத் திருவாய்மலர்ந்தருளினன், அடியவர்க்கெளிய வனுன ஆலவாயடிகள்.

தருமி பரிவுடன் திருப்பாசுரத்தைக் கொண்டுபோய்ச் சங்கப்புலவர்களுக்குக் காட்ட, அவர்களுஞ் சொற்பொருணலங்களைக் கண்டு வியந்து, வங்கியசூடாமணி யென்னும் பாண்டியனிடத்துப் பொருளை விளக்கிப் பாசுரத்தையுங் கூறினர். கூறவே 'மகளிர்கூந்தலி லியற்கைமணமுண்டு' எனத் தன துஐயுறுகருத்து அதனிடத்துவிளக்கப்பட்டிருந்தமையின், அதற்கெனத் தூக்கியிருந்த ஆயிரம்பொன்பொதிந்த கிழியைத் தருமி பெறுமாறு ஆணை தந்தனன். ஆணையின்படி தருமி கிழியறுப்புழி, நக்கீரன் இக்கவி குற்றமுடையதென்று தகைய, இறையனூர் ஓர்புலவனுய்வந்து, செருக்குமிக்க நக்கீரனை நெற்றிக்கண்ணு னேக்க, வெப்பமாற்றுது அவனும் பொற்றாமரைத்திருக்குளத்து வீழ்ந்தனன்.

கபிலர் பாணர் முதலிய கடைச்சங்கப்புலவர்கள் கவல்வதற்கிரங்கி நக்கீரனையருட்கண்ணு னேக்கி உய்யச்செய்தனர், இறையனூர். பாண்டியன் வங்கியசூடாமணியும் தருமிக்குக் கிழியுடன் மற்றும் பலவரிசைகளைத் தந்து விடுத்தனன். இவ்வரலாறு திருவிளையாடற்புராணம், தருமிக்குப் பொற்கிழியளித்தபடலம், கீரனைக்கரையேற்றியபடலம் இவற்றில் விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது.

வங்கியசூடாமணி நந்தவனப்பணியை விரும்பிச் செய்தமையான், 'சண்பக மாறன்' என்னும் பெயரும் பெற்றவன். வங்கியசூடாமணி, குலசேகரன் என்னும் இரண்டும் ஒருபொருளுடையன. வங்கியம்—வம்சம் என்ற வடமொழியின் திரிபு.

§ தொல்-பொருள்-மெய்ப்பாட்டியல்—கக.

## குறிஞ்சி.

[இது, தலைமகன் சிறைப்புறமாக அவன் வரைந்துகொள்வதுவேண்டித் தோழி இயற்பழித்தவழித் தலைமகள் இயற்பட மொழிந்தது.]

எ-து,—தலைமகன் சிறைப்புறத்தானாதலறிந்த தோழி, அவன்வரைந்து கொள்வதைவிரும்பி இயற்பழித்தவழி, தலைமகள், 'நாடன் நட்பு, நிலத்தினும் பெரிது;வானினு முயர்ந்தது; கடலினும் ஆரளவினது' என இயற்பட மொழியாநிற்றல்.

[தேவகுலத்தார் பாடியது.]

௩. நிலத்தினும் பெரிதே வானினு முயர்ந்தன்று
நீரினு மாரள வின்றே சாரற்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தே னிழைக்கு நாடனொடு நட்பே.

(இ-ள்):—நிலத்தினும் பெரியது; வானத்தினும் உயர்ந்தது; கடலினும் அரிய அளவினையுடையது; சாரலிடத்து வலிய கிளைகளையுடைய குறிஞ்சியினது மலர்களைக்கொண்டு பெரியதேனைச்செய்யும் (மலை) நாட்டையுடையவனான தலைவனோடு (தோழி! எனக்குண்டான) நட்பு. (எ-று.)

(தோழி!) நாடனொடு நட்பு, பெரிது; உயர்ந்தன்று; ஆரளவின்று என்று முடிவுகொள்க.

தோழி, தலைவன்நட்பு, சிறியது, தாழ்ந்தது, எளியஅளவினது என்று இயற்பழித்தவழி, தலைமகள், 'நிலத்தினும்......ஆரளவின்று' என்று இயற்பட மொழிந்தாள்.

நிலத்தினும், வானினும், நீரினும் இவற்றும்மைகள்—உயர்வு சிறப்புப் பொருளன. நீர்—கடலைக்குறித்தது; நிலம் வான் என முன் வந்தமையின். கருமை-வலிமை; இது, இப்பொருள்தாலை, * "கருங்கைக் கொல்லன்" என்புழியுங் காண்க.

'நாடு தேன் இழைக்கும்' என இடத்துநிகழ் பொருளின் தொழில் இடத்தின்மேலேறி நின்றது.

'நாடனொடு நட்பு' என்பதற்கு—'நாடன்நட்பு' என்றுரைகூறி, 'ஒடு'—இசைநிறையெனலுமாம்.

---

*புறநானூறு— ௨௧, எ.

இறைச்சி :—'கருங்கோற்குறிஞ்சிப்பூக்கொண்டு பெருந்தேனிழைக்கும் நாடன்' என்றதனானே, 'வழிவழிப் பெருகற்பாலதாய அவன்நட்பு, அவனைக் கண்டஞான்றே நிலத்தினும் பெரியதாய், வானத்தினும் உயர்ந்ததாய், கடலினும் ஆரளவினதாய் வளர்ந்திட்டது; இஃதென்னவியப்போ!' எனப் பொருளின்புறத்தே இறைச்சி பிறந்தது; என்னை? * "இறைச்சி தானே பொருட்புறத் ததுவே," * "இறைச்சியிற் பிறக்கும் பொருளுமா ருளவே, திறத்தியன் மருங்கிற் றெரியு மோர்க்கே" என்பவாகலின்; மேலும் இவைகொள்க.

மெய்ப்பாடு—பெருமைபற்றிய வியப்பு; என்னை? ‡ "புதுமை பெருமை சிறுமை யாக்கமொடு, மதிமை சாலா மருட்கை நான்கே" என்றலின். பயன்—இயற்படமொழிதல்.

## நெய்தல்.

[இது, பிரிவிடை ஆற்றாளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்திஉரைத்தது.]

எ—து,—தலைமகன் பிரிந்தவிடத்துத் தலைமகளாற்றாள் என்று வருந்திய தோழிக்கு, தலைமகள், 'வருந்தும் எனது நெஞ்சம்; வருந்தும் எனது நெஞ்சம்; தம் பிரிவால் கண்ணீரோடுகூடி இங்குத் தங்கும்படிவைத்த நம் காதலர் விருப்பிலராதலைக் குறித்து வருந்தும் எனது நெஞ்சம்' எனத் தனது ஆற்றாமை தோற்றக் கூறுநிற்றல்.

[காமஞ்சேர் குளத்தார் பாடியது.]

நோமென் னெஞ்சே நோமென் னெஞ்சே
யிமைதீய்ப் பன்ன கண்ணீர் தாங்கி
யமைதற் கமைந்தநங் காதல
ரமைவில ராகுத னோமென் னெஞ்சே.

(இ—ள்):—வருந்தும் எனது நெஞ்சம்; வருந்தும் எனது நெஞ்சம்; இமையைத் தீய்ப்பதையொத்த (துயர்காரணமாய் வருதலின் வெப்பமுள்ளதான) கண்ணீரைத் தாங்கி, (நாம் இங்குத் தனித்துத்) தங்குதற்கு (மனம்) பொருந்திய நம்காதலர் (மனம்) பொருந்தாராதலைக் குறித்து வருந்தும் எனது நெஞ்சம்.—(எ—று.)

'நோம் என் நெஞ்சு' என்பதை மூன்றுமுறை கூறினாள்; ஆற்றாமை மிகுதி தோன்ற.

---

* தொல்—பொருள்—பொருளியல்—சுடு, சுசு.
‡ தொல்—பொருள்—மெய்ப்பாட்டியல்—எ.

'தாங்கி' என்பது, கண்ணீரின் மிகுதியைக் காட்டிற்று.

காதலர்—குறிப்புமொழி; காதலிலார் என்று பொருள்தாலின்.

மெய்ப்பாடு—தன்கண்தோன்றிய அசைவுபற்றிய அழுகை; என்னை? *"இளிவே யிழவே யசைவே வறுமையென, விளிவில் கொள்கை யழுகை நான்கே" என்றாராகலின். பயன்—ஆற்றாமையறிவித்தல்; ஆற்றாமை யறிவித்தலும் ஆற்றுதலைப்பயக்கும்; என்னை? உள்ளவருத்தம் உரைக்கக் குறையுமாதலால்.

## நெய்தல்.

[இதுவுமது.]

எ-து,—பிரிவிடை ஆற்றாளென்று கவன்ற தோழிக்கு, கிழத்தி, 'அதுவோ, தோழி! காமநோய்? துறைவன் பிரிந்தானாகத் துயிலலைக் கூடா வாயின கண்கள்' எனத் தனதாற்றாமை யறியக் கூறாநிற்றல்.

[நரிவெரூஉத்தலையார் பாடியது.]

ரு. அதுகொ றோழி காம நோயே
வதிகுரு குறங்கு மின்னிலைப் புன்னை
யுடைதிரைத் திவலை யரும்புந் தீநீர்
மெல்லம் புலம்பன் பிரிந்தெனப்
பல்லித ழுண்கண் பாடொல் லாவே.

(இ-ள்):—அதுவோ தோழி! காமநோய்? (தன்னிடம்) தங்கிய நாரை கள் உறங்கும் இல்லாக நிலைத்த புன்னையிடத்து (எதிர்ப்பட்டதை மோதி) உடைக்கும் அலைகளின் துளிகள் தெறித்துத் தோன்றும் தீய நீரையுடைய மெல்லிய கடற்றுறைவன் பிரிந்தான் என்று, பலமலர்களையும் நிகர்க்கும் (எனது) மையுண்ட கண்கள் துயிலுதலைக் கூடாவாயின.-(எ-று.)

'அது' என்றது, உறக்கமற்றதை. 'அதுகொறோழி காமநோயே' என்றது, இதுவரை உணராதிருந்ததை உணர்த்திற்று.

'இன்னிலை' என்பதை, 'இல் நிலை' என்று பிரித்து-இல்லிடத்து நிலைபெற்ற என்றும், 'இன் நிலை' என்று பிரித்து-இனிய இருப்பை யுடைய என்றும், 'இன் இலை' என்று பிரித்து-இனிய இலைகளையுடைய என்றும் உரைக்கலாம்.

'தீ நீர்' என்றது, குருகு உறங்கலாகாதபடி சென்று தெறித்தலான்; பருகுதற் காகாமையானுமாம்.

'மெல்லம்புலம்பன்'—நெய்தனிலத்துத் தலைமகன்.

---

* தொல்-பொருள்-மெய்ப்பாட்டியல்—ரு.

'பிரிந்தென'—பிரிந்தானென்று எனப் பொருள்பட்டது; * "தண் கடற் சேர்ப்பன் பிரிந்தெனப் பண்டையிற், கடும்பகல் வருதி கையறு மாலை" என்றவிடத்துப்போல.

'பல்லித ழுண்கண்'—பலமலர்கள்போலும் மையுண்ட கண்கள்; இது இப்பொருள் தாலை, ‡ "பல்லித ழுண்கண்ணுந் தோளும் புகழ்பாட" என்றதனானும், அதனுரையானும் அறிக. பலமலர்கள்போலும் கண் என்றது, (கண்ணிற்கு உவமைசொல்லப்படும்) பலமலர்களையும் நிகர்க்கும் என்றவாறு. தலைவி தன்கண்களை உயர்த்திக்கூறியது, செவ்வியழிந்த நிலைமையில் ஆதலால், தற்புகழ்ச்சிக்குற்றம் தங்காது.

இறைச்சி:—குருகு உறங்கும் இல்லாகிய புன்னையில் (அது உறங்கலாகாதபடி) தெறித்துத்தோன்றும் அலைத்துளிகளையுடைய நீர்மையுடைய கடற்றுறைவன் என்றதனானே, யான் உறங்கும் மனையில் (உறங்கலாகாதபடி) பிரிவால் வருத்தும் இயல்பினன் என்பதாம்.

மெய்ப்பாடும் பயனும் முன்னையவே.

## நெய்தல்.

[இது, வரைவிடைவைத்துப் பிரிந்தவழி ஆற்றாளாகிய தலைமகள், தோழியை நெருங்கிச் சொல்லியது.]

எ-து,—தலைமகன் வரைவிடைவைத்துப் பிரிந்தவழித் தலைமகள், 'நள்ளென்றது இரவும்; மாக்களும் உரையாடலின்றி உறங்கினர்; ஒழிந்தனவும் துயில்வனவாயின; ஓஒ! யான்மட்டும் துயின்றிலேன்' எனத் தோழியை வேறுபடுத்திச் செற்றம் புலப்படக் கூறுநிற்றல்.

[பதுமனார் பாடியது.]

சு. நள்ளென் றன்றே யாமஞ் சொல்லவிந்
தினிதடங் கினரே மாக்கண் முனிவின்று
நனந்தலை யுலகமுந் துஞ்சு
மோரோயான் மன்ற துஞ்சா தேனே.

(இ-ள்):—(தோழி!) 'நள்' என்னும் ஓசையை யுடையதாய் இருந்தது (இரவின் இடை) யாமம்; உரையாடல் அற்று மகிழ்வுடன் (துயின்று) அடங்கினர், மாக்கள்; வெறுப்பின்றிப் பரந்த இடத்தையுடைய உலகமுந் துயில்வதாயிற்று; ஓஒ! (தமியேனாகிய) யான்மட்டும் உண்மையாகத் துயிலப் பெற்றிலேன்.—(எ-று.)

---

* ஐங்குறுநூறு-நெய்தல்-நெய்தற்பத்து.—ந.

‡ கலித்தொகை-முல்லை—கஉ.

'நள்ளென்றன்று யாமம்' என்றது, நள்ளென்னும் ஒலியையுடைய தான இரவின் நடுயாமத்தை; * "நள்ளென் யாமத்துப் பள்ளி கொள்ளான்" என்றதனானும், அதனுரையானும் இது இப்பொருளதாதல் அறிக.

'மாக்கள்' என்று, இழிவுதோன்றக் கூறினாள், உடனுறையுந் தனது துயரை அவர் சிறிதும் பொருட்படுத்தாது, மக்கட்டன்மையின் நீங்கி இனிதடங்கினமையின்; 'மாக்கள்' என்பது, இழித்தற்கண் வருதலை, **"கையறியா மாக்கள்", ‡"கொலைவினைய ராகிய மாக்கள்" என்றவிடங்களிலுங் காண்க; § "மாவு மாக்களு மையறி வினவே" என்றார் தொல்காப்பியனாரும்.

'உலகம் துஞ்சும்' என இடத்துநிகழ்பொருளின்தொழில் இடத்தின் மேலேறிநின்றது.

'ஓஒ'-இரக்கப்பொருட்கண்வந்தது. 'ஓர் யான்' என்ற பாடத்திற்கு- 'ஆராய் யான்,' 'ஒரு யான்' என்பன பொருள்களாம்.

'மன்ற'—தெளிவுப்பொருள்தரும் இடைச்சொல்; ¶"மன்றவென் கிளவி தேற்றஞ் செய்யும்" என்பது இடையியல்.

'யான் மன்ற துஞ்சாதேன்' என்றும், 'இனிதடங்கினரே............ துஞ்சும்' என்றும் தோழியை வேறுபடுத்திக் கூறினாள்; உடன்கொண்டு செல்லவேனும், பிரியாதிருக்கவேனும், வரைந்துகொள்ளவேனுஞ் செய்யாமைபற்றிய செற்றத்தால்.

மெய்ப்பாடும் பயனும் முன்னையவே.

## பாலை.

[இது, செலவின்கண் இடைச்சுரத்துக் கண்டார் கூறியது.]

எ—து:—தலைமகன் தலைமகளை உடன்கொண்டு செல்லுமிடத்து இடைச்சுரத்து இருவரையுங் கண்டார், 'இவன் கால்களிடத்தன கழல்கள்; இவள் மெல்லிய அடிகளின் மேலிடத்தன சிலம்புகள்; இவர்கள்தாம் யார்கொல்? இம்மூங்கின்மிக்க காட்டின் பரப்பைச் செல்லும்வழியாகக் கருதினோர்கள்இவர்கள்; இவர்கள்பிரிவாற்பெரிதுங்கவலும் இவர்தம் இருமுதுகுரவர் இரங்கத்தக்காரே!' எனத் தமதிரக்கமுடைமை தோன்றக் கூறுநிற்றல்.

---

*நெடுநல்வாடை—கஅசு. **நாலடியார்-பெரியாரைப்பிழையாமை—ந.
‡ திருக்குறள்-கொல்லாமை—சு. § தொல்-பொருள்-மரபியல்—ருஉ.
¶ தொல்-சொல்-இடையியல்—கஎ.

[பெரும்பதுமனார் பாடியது.]

எ. வில்லோன் காலன கழலே தொடியோள்
மெல்லடி மேலவுஞ் சிலம்பே நல்லோர்
யார்கொ லளியர் தாமே யாரியர்
கயிறாடு பறையிற் கால்பொரக் கலங்கி
வாகை வெண்ணெற் றொலிக்கும்
வேய்பயி லழுவ முன்னி யோரே.

(இ-ள்):—வில்லினனான இவன் காலிடத்தன கழல்கள்; வளையினளான இவள் மெல்லிய அடிகளின் மேலிடத்தனவுஞ் சிலம்புகள்; நல்லோராகிய (இவர்கள்) எவர்கொல்? கயிற்றின்கண்ணே பொருந்தி அசைகின்ற பறையின் (ஒலியேபோன்று) காற்றுப்பொருதலாற் கலக்கமடைந்து வாகையினது வெள்ளியநெற்று ஒலித்தலைச்செய்யும் மூங்கில்கள் மிக்க காட்டுநிலப்பரப்பைச் (செல்லும்வழியாகக்) கருதினார்கள். இரங்கத்தக்காரே (இவ்விருவர்களின்) இருமுதுகுரவர்.—(எ-று.)

'வில்லோன்......சிலம்பே, நல்லோர் அழுவம் முன்னியோர் யார் கொல்? அளியர்தாம் ஆரியர்' என்று முடிவுகொள்க.

'வில்லோன்............சிலம்பே'—இருவரும் பெருஞ்செல்வத்தினர் என்பதை யுணர்த்திற்று; 'வில்லோன்காலன கழலே' என்றது, தலைவன் வல்லமையையும் உணர்த்திநின்றது.

'நல்லோர்' என்றது, தலைவனையும் தலைவியையும்.

இவர்கள்பிரிவாற் பெரிதும் கவலும் இருமுதுகுரவர்களை, 'அளியர் தாம் ஆரியர்' என்றார்; ஆரியர்—இருமுதுகுரவர்.

அழுவம்—பரப்பு; ஈண்டு, காட்டு நிலத்தின் பரப்பை உணர்த்திற்று; * "மாதவத்தாட்டியும் மயங்கத ரழுவத்து" என்புழியும், இது, பரப்புப் பொருள்தருதலைக் காண்க. 'பழுவம்' என்ற பாடத்திற்கு—நடுக்கந்தரும் வழி யென்க.

கண்ட தங்கட்கும் வருத்தமிகுதியுண்டானமை தோன்ற, அவர்கள் செல்லும் வழியைச் சுட்டி, 'கயிறாடு......அழுவம்' என்றார்.

மெய்ப்பாடு—பிறன்கண்தோன்றிய வருத்தம்பற்றிய இளிவரல்; என்னை? § "மூப்பே பிணியே வருத்த மென்மையோ, டியாப்புற வந்த விளிவர னான்கே" என்றலின்.

பயன்—செலவுவிலக்குதல்.

---

* சிலப்பதிகாரம்-காடுகாண்காதை—உ0சு.

§ தொல்-பொருள்-மெய்ப்பாட்டியல்—சு.

## மருதம்.

[இது, 'கிழத்தி தன்னைப் புறனுரைத்தாள்' எனக்கேட்ட காதற்பரத்தை, அவட்குப் பாங்காயினார் கேட்பச் சொல்லியது.]

எ-து,—கிழத்தி தன்னைப்பழித்துப் புறனுரைத்தாளாகக் கேட்ட காதற்பரத்தை, 'ஊரன் எம்மிடத்திற்பெருமொழிகளைக் கூறித் தன்மகன் தாயிடத்தில் பாவையேபோல மேவன செய்வான்' என்றுரைத்து, ஆதலானன்றே அவள் என்னை இழித்துரைக்கலாயிற்று?' என்பது பயப்பக் கூறுநிற்றல்.

[ஆலங்குடிவங்கனார் பாடியது.]

அ. கழனி மாத்து விளைந்துகு தீம்பழம்
பழன வாளை கதூஉ மூரன்
எம்மிற் பெருமொழி கூறித் தம்மிற்
கையுங் காலுந் தூக்கத் தூக்கு
மாடிப் பாவை போல
மேவன செய்யுந்தன் புதல்வன் றாய்க்கே.

(இ-ள்):—வயலை அடுத்துள்ள மரத்தில் முதிர்ந்து உதிரும் இனிய பழத்தை வயலிடத்துள்ள வாளைகள் கௌவிக்கொள்ளும் ஊரன், எம்மிடத்தில் வஞ்சினத்தைக் கூறி, இல்லத்திடத்து, கையையும் காலையும் (கூத்தன்) தூக்குதலால் (தானும்) தூக்கும் கண்ணாடிக்கெதிரிலுள்ள பாவையே போல, விரும்பியவற்றைச் செய்வான் தனதுமகன்தாய்க்கு.—(எ-று.)

ஊரன், கூறி, புதல்வன்றாய்க்கு, பாவைபோல, மேவனசெய்யும் என்று முடிவுகொள்க.

பழனம்—வயல். ஊரன்—மருதநிலத்துத் தலைமகன். 'தம்மில்' என்பதில், தம்—சாரியை. 'தூங்கும்' என்ற பாடத்திற்கு-தொங்கிக்கொண்டிருக்கும் என்க.

அவள்குறிப்பின்வழியெல்லாம் ஒழுகுவான் என்பாள், 'கையும் … செய்யும்' என்றாள். ஆடி-கண்ணாடி; அது தன்னையடுத்தார்செயற்படியே இருக்குமாறுபோல, சேர்ந்த மகளிரின் செயலினாய் ஒழுகுகின்றான் தலைவனும் என்பாள், 'ஆடிப்பாவை போல' என்றாள்; ஆடிப்பாவை—கண்ணாடிக்கெதிரில் வைத்தாட்டும்பாவை; ஆடிகள் பதித்த பாவை என்றுமாம்.

உள்ளுறை:—கழனிக்கரையிலுள்ள மரத்திலிருந்து முதிர்ந்து தானே யுதிர்ந்த பழத்தை வயலிடத்து வாளை கௌவினாற்போல, இவ்வூரிடத்

துள்ள எல்லா இன்பங்களையும் ஊரன் தாமே கிடைப்ப முயற்சியின்றி எய்துகின்றான் என்று உள்ளத்தான் உவமங்கொள்ளவைத்தவாறுகாண்க; என்னை? *"உள்ளுறை யுவம மேனை யுவமமெனத், தள்ளா தாகுந் திணையுணர் வகையே," †"உள்ளுறுத் திதனோ டொத்துப்பொருண் முடிகென, உள்ளுறுத் திறுவதை யுள்ளுறை யுவமம்" என்றற்றொடக்கத்தன விதிகளாகலான்; மேலுமிவைகொள்க.

மெய்ப்பாடு—மடம்பற்றிய நகை; என்னை? ‡"எள்ள லிளமை பேதைமை மடனென், றுள்ளப் பட்ட நகைநான் கென்ப" என்றலின். பயன்—தலைவனைப் பழித்தல்.

## நெய்தல்.

[இது, தலைமகற்குத் தோழி வாயில் நேர்ந்தது.]

எ-து:—பரத்தைமாட்டுப் பிரிந்து வந்த தலைமகன் தோழியை வாயில் வேண்ட, தோழி 'யாய்தான் தனித்துறைய நேரின் வேயாத வீயேபோல மெய்யழகு கெடுவாளாயினாள்; ஆதலின், அவள் ஆற்றாமை கருதித் துறைவன்கொடுமையை நாமும் நம்முள்ளே மறைத்தல்வேண்டும்' என வாயில்நேர்ந்த குறிப்புத்தோன்றக் கூறுநிற்றல்.

[கயமனார் பாடியது.]

௯. யாயா கியளே மாஅ யோளே
மடைமாண் செப்பிற் றமியள் வைகிய
பெய்யாப் பூவின் மெய்சா யினளே
பாசடை நிவந்த கணைக்கா னெய்த
லினமீ னிருங்கழி யோத மல்குதொறுங்
கயமூழ்கு மகளிர் கண்ணின் மானுந்
தண்ணந் துறைவன் கொடுமை
நம்மு ணாணிக் காப்பா டும்மே.

(இ-ள்):—(கற்பினால் எவர்க்குந்) தாயெனத்தக்காள் ஆயினாள், அழகிய நிறத்தினையுடைய தோழி; தமியளாய்த்தங்க (நேரின்,) சமைத்தற்றொழிற்குச் சிறந்ததான செப்பினிடத்து (அடைத்துவைத்த) சூடாத பூவினைப்போல மெய்யிடத்து அழகுகெடுவாளாயினாள்; (ஆதலின்,) பசிய

‡ தொல்-பொருள்-மெய்ப்பாட்டியல்—௪.
* ,, ,, அகத்திணை—௪௬.
† ,, ,, ,, ௪௭.

இலைகள் மேலோங்கிய திரண்ட தாளையுடைய நெய்தல்மலர்களும், கூட்டமான மீன்களும் கரிய (கடற்) கழியிடத்து வெள்ளம் நிறையுந்தோறும் (நீர்க்குள் மறைந்து) குளத்திடத்து முழுகும் மகளிரது கண்களை நிகர்க்கும் குளிர்ந்த அழகிய துறைவனது கொடுமையைப் (பிறர் அறியலாகாத படி) நம்முள்ளே நாணி மறைத்தலைச் செய்வோம்; (வேறுசெய்ய இயலாமையின்.)—(எ-று.)

மாயோள், தமியள்வைகிய மடைமாண் செப்பில் பெய்யாப்பூவின் மெய்சாயினள்; (ஆதலின்), துறைவன்கொடுமைநாணிக் காப்பாடும் என்று முடிவுகொள்க.

செப்பில் அடைத்துவைத்துச் சூடாதுவிட்ட பூப்போலென்றுஉரைத்தது.— *"வேயாது செப்பி னடைத்துத் தமிவைகும் வீயினன்ன, தீயாடி சிற்றம் பலமனை யாடில்லை யூரனுக்கின், றேயாப் பழியென நாணியென் கண்ணிங்கு னேமறைத்தாள், யாயா மியல்பிவள் கற்புநற் பால வியல்புகளே" என்ற திருக்கோவையாரின் கருத்தைத் தழுவி.

'பெய்யாப்பூவின்'—பெய்யாத என்ற பெயரெச்சத்தின் இறுதி கெட்டது. பெய்யாமை—சூடாமைஎன்றுபொருள்படலை, § "பெய்யாத வைகிய கோதைபோல, மெய்சா யினையவர் செய்குறி பிழைப்ப" என்றதனுனும் அறிக.

மெய்—மெய்யிடத்து அழகு. நிவந்த—மேலோங்கிய. கணைக்கால்—திரண்ட தாள்.

நெய்தலும் மீன்களும் மகளிர்கண்களுக்கு உவமைகூறப்படுவன, 'பாசடை......கண்ணின் மானும்' என்று எனையுவமம் உண்மையின், உள்ளுறையுவமம் இன்று.

மெய்ப்பாடு— வருத்தம்பற்றிய இளிவரல். பயன்—வாயில்நேர்தல்.

## மருதம்.

[இதுவுமது.]

எ-து,—பரத்தையிற் பிரிந்து வந்த தலைமகனை தோழி நோக்கி, 'யாய் தான் மணவாட்டியாயினள்; மேலும் ஊரன் கொடுமையை எவரும் உணராலாகாதபடி மறைத்தனள்; ஆதலின், யான் மறுத்தற்கியலாமையின் வெட்குமாறு வருவான் தலைவன்' என வாயினேர்ந்தமையுணரக் கூறுநிற்றல்.

---

* திருக்கோவையார்—௩எ௪. § நற்றிணை—கக.

[ஓரம்போகியார் பாடியது.]

க0. யாயா கியளே விழவுமுத லாட்டி
பயறுபோ லிணர பைந்தாது படீஇய
ருழவர் வாங்கிய கமழ்பூ மென்சினைக்
காஞ்சி யூரன் கொடுமை
கரந்தன ளாகலி னாணிய வருமே.

(இ-ள்):—தோழிதான், மணவிழவினாலே முதன்மையை யாளுபவ ளாவாள்; பயற்றினையொத்து (அரும்பிய) பூங்கொத்துக்களிடத்துப் பசிய பூந்தாது உண்டாகியதனால், உழவர் வளைத்த மணக்கும் மலர்நிறைந்த மெல்லிய கிளைகளையுடைய காஞ்சிமரத்தையுடைய ஊரன்கொடுமையைத் (தன்னுள்) மறைத்தனள்; ஆதலின், நான் (இதுபொழுது) நாணுமாறு வருவான் தலைமகன்; (வரின், வாயினேர்தலின்றி வேறுசெய்தல் இலேன்.)—(எ-று.)

ஊடற்குற்ற காரணங்கள் மிகவிருந்தும் ஊடாமையின், 'யாயா...... முதலாட்டி' என்றாள்.

வாங்கிய—வளைத்த என்று பொருள்பட்டது; * "இமையவில் வாங்கிய வீர்ஞ்சடை யந்தணன்" என்புழிப்போல.

இறைச்சி:—பூங்கொத்து உண்டானதனாலே உழவர் வளைத்த காஞ்சிமரத்தையுடைய ஊரன் என்றதனானே, தம்மிடத்து வேட்கைகொண்டமையுணர்ந்ததனானே பரத்தையரால் வளைக்கப்படும் இயல்பினன் என்பதாம்.

மெய்ப்பாடும் பயனும் முன்னையவே.

## பாலை.

[இது, தலைமகள் தன்னெஞ்சிற்குச் சொல்லுவாளாய்த் தோழிகேட்பச் சொல்லியது]

எ-து,—உடன்போக்கு நயந்த தலைமகள், தன்னெஞ்சினை நோக்கிக் கூறுவாள்போன்று, 'நெஞ்சே! இங்குப் பிரிவாலுளதாகும் வாட்டத்தோடு வருந்தியுறைதலும் அரியது; அங்கு முயங்குவோம்; ஆதலால், உடன்போதற்கு வழிவிட எழுவாயாக இப்பொழுது; எதிரில் வடுகர் முனையினையுடையதாயும், வலிய வேலங்காட்டினையுடைய நாட்டின் மேலிடத்ததாயும்

* கலித்தொகை—குறிஞ்சி—உ.

வழங்கும் மொழியும் வேறானதாயும் தலைவர்தேய மிருப்பினும் அவர்நாட்டைக்குறித்து அவருடன் நான் செல்ல வழி விடலைச் சூழ்' என, தோழி கேட்டு உடன்போக்கு ஒருப்படுத்துமாறு கூறுநிற்றல்.

[மாமூலனார் பாடியது.]

கக. கோடீ ரிலங்கு வளைநெகிழ நாடொறும்
பாடில கலுழுங் கண்ணொடு புலம்பி
யீங்கிவ ணுறைதலு முயங்குவ மாங்கே
யெழுவினி வாழியென் னெஞ்சே முனாஅது
குல்லைக் கண்ணி வடுகர் முனையது
வல்வேற் காட்டி னன்னாட் டும்பர்
மொழிபெயர் தேத்தா ராயினும்
வழிவிடல் சூழ்ந்திசி னவருடை நாட்டே.

(இ-ள்):—சங்கினை அறுத்துச்செய்த விளங்கும் வளையல்கள் நழுவும்படி, நாள்தோறும் பெருமையில்லனவாய் வருந்துங் கண்களோடு புலம்பி இவ்வகை இவ்விடத்துத் தனித்துறைதலும் (அரியது;) முயங்குவோம் அவ்விடத்து; (ஆதலின்,) எழுவாயாக இப்பொழுது; வாழ்வாயாக; எனது நெஞ்சே! எதிரில், கஞ்சங்குல்லைமலரினாலாகிய மாலையை யணிந்த வடுகர் போரிடத்தை யுடையதும், வலிய வேலங்காட்டினையுடைய நல்ல நாட்டின் மேலிடத்ததுமான (வழங்கும்) மொழியும் வேறான தேயத்தினை உடையாராலும், (அவரோடு யானும் உடன்போதற்கு) வழிவிடுதலைச் சூழ்வாயாக, அவருடைய நாட்டைக் குறித்து.—(எ-று.)

கோடு—சங்கு. 'ஈர் இலங்கு வளை'—ஈர்வளை, இலங்குவளை எனத் தனித்தனி இயையும் 'நெகிழநாளும்' பாடம்; பொருளொன்றே. உறைதலும் என்பதற்கு—'அரியது' என்னும் குறிப்புவினை வருவித்துரைக்கப்பட்டது.

'முயங்குவம்' என்றது, நெஞ்சையும் உளப்படுத்தி. ஆங்கு—தலைவனது இல்லத்திடத்து.

இனி—இப்பொழுது என்று பொருள்தாலை, * "பண்டறியேன் கூற்றென் பதனை யினியறிந்தேன்" எனபுழியுங் காண்க.

'வாழி' என்றும், 'என்' என்றுங் கூறினள், வழிவிடல் சூழ்தற்கு.

குல்லை—கஞ்சங்குல்லை. கண்ணி—தலையிடத்துப் போரிற்சூடும் பூ. வடுகர்—ஒருமரபினர்.

* திருக்குறள்—தகையணங்குறுத்தல்—கூ.

நன்றாடு—பிறகுறிப்பு; வல்வேற்காட்டின் என்றதனான்.

'மொழிபெயர் தேம்'—வழங்கும்மொழியும் வேறான தேயம் என்ற பொருள்தருதலை, *"தமிழ்கெழு மூவர் காக்கு, மொழிபெயர் தேஎத்த பன்மலை யிறந்தே" என்றவிடத்துங் காண்க.

மெய்ப்பாடு—அணங்கு பற்றிய அச்சம்; என்னை? § "அணங்கே விலங்கே கள்வர்த மிறையெனப், பிணங்கல் சாலா வச்ச நான்கே" என்றலின். பயன்—உடன்போக்கு நயந்தமை தோழிக்கு அறிவித்தல்.

## பாலை.

[இது, ஆற்றாளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.]

எ-து,—தலைமகன் பிரிந்தவிடத்துத் தலைமகள் ஆற்றாளென்று வருந்திய தோழிக்குத் தலைமகள், 'எயினர் பாறையிலேறி வழிச்செல்வாரைக் கொல்லும் கவர்த்த நெறிகளையுடையது, அவர் தேர் சென்ற நெறி; அதனைக்குறித்துக் கவலாது ஆற்றியிருக்கும் என்னைக்குறித்து வருந்தும் இவ் வூர்' எனத் தானாற்றுமாறு கூறுநிற்றல்.

[ஓதலாந்தையார் பாடியது.]

௧௨ எறும்பி யளையிற் குறும்பல் சுனைய
வுலைக்கல் லன்ன பாறை யேறிக்
கொடுவி லெயினர் பகழி மாய்க்குங்
கவலைத் தென்பவவர் தேர்சென்ற வாறே
யதுமற் றவலங் கொள்ளாது
நொதுமற் கலுழுமிவ் வழுங்க லூரே.

(இ-ள்)—எறும்பினது புற்றைப்போன்று குறுகிய பலவாகிய சுனைகளையுடைய (கொல்லனது) உலைக்களத்திலுள்ள அடைகல்லையொத்த கற்பாறையிலேறிக் கொடியவில்லையுடைய வேடர் பகழியைக் கொண்டு (வழிச்செல்வாரை) அழிக்கும் கவர்த்த நெறிகளையுடையது, அவர்தேர் சென்ற வழி; அதனைக்குறித்து வருத்தங்கொள்ளாது, அயலதைக்குறித்து வருந்தும் இவ்விரக்கத்தையுடைய ஊர்.—(எ-று.)

எறும்பி—எறும்பினுக்கு ஓர்பெயர்; 'எறும்பி னளையிற் குறும்பல் சுனை' என்பது பாடமாக இருக்கலாம்.

சூட்டாலும் வலியாலும் உலைக்கல் பாறைக்கு உவமையாகும்.

* அகநானூறு-களிற்றியானை நிரை—௩௧; ௧௪, ௧௫.
§ தொல்-பொருள்-மெய்ப்பாட்டியல்—௮.

கொடுவில்--வளைந்த வில்லுமாம்; கொலையைக்கருதி நாணேற்றப் பட்டேயிருத்தலின்.

கவலைத்து—கவர்த்தநெறிகளையுடையது; குறிப்புவினைமுற்று; *"கவலை யருஞ்சுரம் போயினர்" என்றார் ஐங்குறுநூற்றினும்.

என்ப, மற்று—அசைநிலைகள். என்ப—என்பர் எனலுமாம்.

அது—கொடியவழியிற் சென்ற தலைவர்தேர்ச்செலவு.

நொதுமல்—தலைவி ஆற்றுவளோ ஆற்றாளோ என்று தோழி கவலுங் கவற்சி.

பிரிவைப் பொறுப்பேன்; அவர் சென்றவழியின் கொடுமையை நினைந்தே ஆற்றேனாகின்றேன் என்றனள் தலைமகள்.

மெய்ப்பாடு—அணங்குபற்றிய அச்சம். பயன்—ஆற்றுமாறறிவித்தல்.

## குறிஞ்சி.

[இது, தோழியிற் கூட்டங் கூட்டி ஆற்றும்வகையான் ஆற்றுவித்தும், பிரிய வேறுபட்ட கிழத்தி தோழிக்கு உரைத்தது.]

எ-து,—ஆற்றுவித்தல் எண்ணித் தோழியாலுங் கூட்டங் கூடுவித்துப் பிரிந்த தலைமகனை நினைந்து வருந்தி, வேறுபாடடைந்த தலைமகள், 'தோழி! நாடன் பிரிந்து நோய்தந்தனன்; ஆதலின், என் கண்களிடத்துப் பசலை பரந்தன' என, தனது ஆற்றாமை தோற்ற உரையாநிற்றல்.

[கபிலர் பாடியது.]

கங. மாசறக் கழீஇய யானை போலப்
பெரும்பெய லுழந்த விரும்பிணர்த் துறுகல்
பைத லொருதலை சேக்கு நாட
னோய்தந் தனனே தோழி
பசலை யார்ந்தன குவளையங் கண்ணே.

(இ-ள்)—அழுக்கில்லாமற் கழுவிய யானையைப்போன்று, பெரிய மழையினாலே வருந்திய கோங்கின்பக்கத்துள்ள நெருங்கின மலை (காண்பார்க்குத்) துன்பமுண்டாகும்படி ஒரிடத்துத் தங்கும் நாடன், (பிரிந்து) நோயைத் தந்தான்; ஆதலின், தோழி! பசலை நிறைந்தன, குவளையைப் போன்ற அழகிய கண்களிடத்து—(எ-று.)

* ஐங்குறுநூறு—பாலை—செலவுப்பத்து—சo.

பிணர்—கோங்கு; இதனை, * "கன்னி காரந் தரு மோறற் பலமே. குயாகூன் பிணரே கோங்கா கும்மே" என்றதனுன் அறிக.

யானை மரத்தடியில் நிற்றல் இயல்பாதலின், பிணரையடுத்த துறுகல் யானையென்ற மயக்கத்தைத் தருவதாயிற்று.

துறுகல்—நெருங்கின மலை; இது, இப்பொருளதாதலை, † "துறுகல் சுற்றிய சோலை வாழை" ‡ "தூறிவர் துறுகற்போல" என்றவிடங்களிலுங் காண்க; சிறுமலையும், பொற்றைக்கல்லுமென்பாரும் உளர்.

பசலை-காதலரைப்பிரிந்த மகளிரது மெய்யிடத்து உளதாகும் நிறவேறுபாடு; அது கண்ணிடத்தும் பரத்தலை, § "முயக்கிடைத் தண்வளி போழப் பசப்புற்ற, பேதை பெருமழைக் கண்" என்றவிடத்துங் காண்க.

'குவளையங்கண்' என்பதில், ஏழாவது இறுதியில்தொக்கது; 'பல்லிதழுண்கண்' என்றவிடத்து உரைத்ததை ஈண்டுங்கூறிக்கொள்க. குவளையங் கண் பசலையார்ந்தன என மாற்றியுரைத்தலுமாம். 'ஆன்றனவும்' பாடம்; பொருள் இதுவே.

இறைச்சி:—ஏதந்தராத துறுகல் ஏதந்தரும் யானையெனக் காண்பார் வருந்தத் தங்கும் நாடன் என்றதனுனே, இனிமைதருங் கூட்டமும் பிரிந்திடுவானோவென்ற கவற்சியால் இனிமை பயவாதிருக்கும்படி ஒழுகினுன் என்பதாம்.

மெய்ப்பாடு—அசைவுபற்றிய அழுகை. பயன்—ஆற்ருமையறிவித்தல்.

## குறிஞ்சி.

[இது, ** "மடன்மா கூறு மிடனுமா ருண்டே" என்பதனுன், தோழி குறைமறுத்துழி, தலைமகன், மடலேறுவலென்பதுபடச் சொல்லியது.]

எ-து,—தோழியாற் குறைமறுக்கப்பட்ட தலைமகன், கூட்டம் வேண்டி மறுக்கலாகாதவாறு, 'வஞ்சி! நான்விரும்பிவந்தஅரிவையைப் பெறக்கடவேனுவேன்; முன்பெற்றபடியை இவ்வூர் முழுவதும் அறிவதாக; நாணம் சிறிதுடையோம்' என, மடலேறுவே னென்பதைக் குறிப்பானுணரக் கூறு நிற்றல்.

---

* பிங்கலந்தை-மரப்பெயர் வகை—௩௪. † மலைபடுகடாம்—௧௩௧. § திருக்குறள்-உறுப்புநலனழிதல்—௯. ‡ பட்டினப்பாலை—௨௩௪. ** தொல்-பொருள்-களவியல்—௧௧-ஈற்றடி.

[தொல்கபிலர் பாடியது.]

கச. அமிழ்துபொதி செந்நா வஞ்சி வந்த
வார்ந்திலங்குவையெயிற்றுச்சின்மொழியரிவையைப்
பெறுகதில் லம்ம யானே பெற்றாங்
கறிகதில் லம்மவிவ் வூரே மறுகி
னல்லோள் கணவ னிவனெனப்
பல்லோர் கூறயா அ நாணுகஞ் சிறிதே.

(இ-ள்):—அமிழ்தத்தின் இனிமைத்தன்மை பொதிந்த செவ்விய நாவினையுடைய வஞ்சியே! (யான் விழைந்து) வந்த நேரியதாய் விளங்குங் கூரியபல்லினையும் சிலவாய சொல்லினையுமுடைய அரிவையைப் பெறக் கடவேனாவேன் யான்தான்; (முன்) பெற்றபடியை அறியக்கடவதாக, இவ்வூர்; வருந்தி, நல்லவளான (அவள்) கணவன் இவன் என்று (என்னைப் பலரும் கூறுவாராக; யாம் வெட்கமடைவோம் சிறிது; (இனி அச் சிறு நாணையும் நீக்கி மடலேறுவல் யான்).—(எ-று.)

அமிழ்து—அமிழ்தத்தின் இனிமைத்தன்மை. வஞ்சி—மங்கை; அண்மைவிளியாதலின் இயல்பாயிற்று.

சிலவானசொற்கள் அழகுதருவதாதலை, *"பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற, சிலசொல்ல றேற்றா தவர்" என்றதனானும் உணர்க.

'தில்' இரண்டில், முதலது—விழைவு, இரண்டாவது—காலம்.

'அம்ம' இரண்டும்—அசைநிலை. ஒன்றை, †"அம்ம கேட்பிக்கும்" என்றதனான், கேட்பாயாக என்றுரைத்து, ஒன்றை அசைநிலையெனினும் அமையும்.

கூற—வியங்கோள்.

தோழி குறைநேரவேண்டித் தாழ்ந்து 'யான்' என்றும், மறுப்பின் யானே பெறுமாறறிவேன் என்ற பெருமிதத்தால், 'யாம்' என்றுங் கூறினான்.

'மறுகி .....கூற' என்றது, மடலேறுவல் என்னுங் குறிப்பு.

'நாணுகம் சிறிதே' என்றான், குறைமறுமைப்பொருட்டு.

மெய்ப்பாடு—வருத்தம்பற்றிய இளிவரல். பயன்—ஆற்றாமையறிவித்தல்.

---

*திருக்குறள்-சொல்வன்மை—௯.
†தொல்-சொல்-இடை—உ௮.

## பாலை.

[இது, உடன்போயின பின்றைத் தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றாள்; நிற்ப, செவிலித்தாய் நற்றாய்க்கு அறத்தொடு நின்றது.]

எ-து,—தலைமகன் தலைமகளை உடன்கொண்டு சென்றவிடத்துத் தோழி செவிலிக்கு அறத்தொடுநிலையால் உடன்போக்குணர்த்த, செவிலி, 'தோழி! மடந்தைக்கு விடலையோடு உளதாய நட்பு, பறைபடப் பணிலமார்ப கோசர்மொழிபோல வாயாகின்றது' என, இடைச்சுரத்துத் தலைமகன் வரைந்துகொண்டான் என்பது பயப்பக் கூறி நற்றாய்க்கு அறத்தொடு நிற்றல்.

ஔவையார்

[~~பாலைபாடிய பெருங்கடுங்கோ பாடியது~~]

௧௫. பறைபடப் பணில மார்ப்ப விறைகொள்பு
தொன்மூ தாலத்துப் பொதியிற் றோன்றிய
நல்லூர்க் கோசர் நன்மொழி போல
வாயா கின்றே தோழி யாய்கழற்
செயலை வெள்வேல் விடலையொடு
தொகுவளை முன்கை மடந்தை நட்பே.

(இ-ள்)—பறைகள் ஒலிக்கவும் சங்குகள் முழங்கவும், கடவுட்டன்மையைக்கொண்டு பழைய முதிர்ந்த ஆலினையுடைய பொதியின்மலைக் கண்ணே, விளக்கமுற்றுள்ள நல்லூரை இடமாகக்கொண்ட கோசரது சிறந்தமொழிபோல உண்மையாகின்றது; தோழீ! சிறந்தகழலையணிந்த செயலைத்தளிர்போலும் வெள்ளிய வேலையுடைய விடலையோடு, கூட்டமான வளையல்களையணிந்த முன்கையினையுடைய மடந்தைக்கு (உண்டான) நட்பு.—(எ-று.)

தோழி! விடலையொடு மடந்தை நட்பு, கோசர்மொழிபோல, பறைபடப் பணிலமார்ப்ப வாயாகின்று என்று முடிவுகொள்க.

'பறைபடப் பணிலம் ஆர்ப்ப வாயாகின்று' என்றது, இடைச்சுரத்து வரைந்துகொண்டான் என்பதுபட நின்றது.

'பொதியில்' என்றது, வேண்டுவார் வேண்டுவன எய்தலாம்படி எல்லாம்பொதிந்த இல்போன்றது என்றவாறு; பிறவுங் கூறுப.

'நாலூர்' என்பதூஉம் பாடம்; அதுவும் ஊரின்பெயர்போலும்.

கோசர் மொழிதிறம்பாராதலை, * "ஒன்றுமொழிக் கோசர்போல" என்றவிடத்துங் காண்க.

* குறுந்தொகை—எ௩.

'தோழி' என்றது நற்றாயை; அவள் செவிலிக்குத் தோழியாவாள்.

செயலை—அசோகு. விடலை—பாலைநிலத்துத்தலைமகன்.

மெய்ப்பாடு—உவகையைச் சார்ந்த அழுகை. பயன்—உடன்போக்குணர்த்துதல்.

## பாலை.

[இது, பொருள்வயிற் பிரிந்தவிடத்துத் தலைமகளாற்றாமைகண்டு தோழி கூறியது.]

எ-து,—தலைமகன் பொருள்கருதிப் பிரிந்தவிடத்துத் தலைமகளது ஆற்றாமைகண்டு அவளாற்றுமாறு, 'தோழி! அவர்சென்ற காட்டிடத்துக் கள்ளியின் காலிடத்திருந்து பல்லியும் துணையைப் பயிரும் உள்ளாரோ' எனக் கூறி, போன்புடையார் அதனைக்கேட்டு நம்மை நினைத்து விரைவில் மீள்வர் என்பது தோன்றக் கூறுநிற்றல்.

[பாலைபாடிய பெருங்கடுங்கோ பாடியது.]

கரு. உள்ளார் கொல்லோ தோழி கணவர்தம்
பொன்புனை பகழி செப்பங் கொண்மா
ருகிர்நுதி புரட்டு மோசை போலச்
செங்காற் பல்லி தன்றுணை பயிரு
மங்காற் கள்ளியங் காடிறந் தோரே.

(இ-ள்):—(நம்மை) நினையார்கொல், தோழி! பொன்னால்அழகுபெறச்செய்த பகழியைச் செப்பஞ்செய்தலைக்கொண்ட கருமாரது விரலாற் (பகழியைப்) புரட்டுமிடத்து உண்டாகும் ஓசைபோலச் சிவந்தகாலையுடைய பல்லி தனது துணையை அழைக்கும் அழகிய தாளையுடைய கள்ளி நிறைந்த காட்டின் வழியிற் சென்றோராகிய கணவர்.—(எ-று.) ௪

தோழி! காடிறந்தோர் கணவர் உள்ளார்கொல்? என்று முடிவு கொள்க.

'கொல்லோ' கொல்—வினா; ஓ—அசை. தம்—சாரியை.

உகிர்நுதி—விரல்; உகிரை நுதியிலேயுடையது என்னுங் காரணம் பற்றியது; ஈண்டு, பகழிபுரட்டு மென்றதனாற் கைவிரலைக் குறித்தது.

'அங்கால்' என்றது, தலைவன் தலைவியை நினைந்து மீளுமாறு பல்லி தங்கிப் பயிருமிடமாயிருப்பதனால். 'அங்காடு' என்பதில், அம்—சாரியை.

இறைச்சி:—பல்லி தன்துணையை யழைக்கும் காடு என்றதனானே, இயற்கையிலேயே நந்திறத்துப் போன்புடையார், பல்லி துணையைப் பயி

மலையுங் கேட்பாராதலின், கடிதின் மீள்வர் என, தலைவி வருத்தந்தணித்தற்கு அன்புறுதகுந இறைச்சியுட் சுட்டினள்; என்னை? *"அன்புறுதகுந விறைச்சியுட் சுட்டலும், வன்புறை யாகும் வருந்திய பொழுதே" என்பது இலக்கணமாதலின்.

மெய்ப்பாடு—இளிவரலைச் சார்ந்த பெருமிதம். பயன்—தலைமகளை ஆற்றுவித்தல்.

## குறிஞ்சி.

[இது, தோழியிற் கூட்டம்வேண்டிப் பின்னின்ற தலைமகன், தோழி குறைமறுமற் கூறியது ]

எ-து,—தோழியாற்கூடும் கூட்டத்தை விரும்பிய தலைமகன் இரந்து பின்னின்றானாய், அவள் தன்குறையை மறுக்காதவாறு, உலகியன்மேல்வைத்து, "காமம் முதிர்ச்சிகொண்டவிடத்திற், பனைமடலையும், 'மா' வென ஊர்வர்; எருக்கங்கண்ணியையுஞ்சூடுவர்; தெருவிடத்துந் தங்குறையை எல்லாரும் அறிய வெளியிடுவர்; பிறிதும்ஆவர்" எனக் கூறாநிற்றல்.

[பேரெயின்முறுவலார் பாடியது.]

கஎ. மாவென மடலு மூர்ப பூவெனக்
குவிமுகி ழெருக்கங் கண்ணியுஞ் சூடுப
மறுகி னார்க்கவும் படுப
பிறிது மாகுப காமங் காழ்க்கொளினே:

(இ-ள்):—'பாய்மா' என்று பனைமடலையும் ஊர்வார்; 'பூ'என்று குவிந்த மொட்டையுடைய எருக்கினாலாகிய கண்ணியையுஞ் சூடுவர்; (பல்லார் கூடும்) தெருவின்கண்ணே (தமது குறைகளைப் பலரும்அறிய) முழக்கவும் முழக்குவர்; பிறிதும்ஆவார், வேட்கைநோய்முதிர்ச்சிகொண்டால்.-(எ-று.)

இங்ஙனம் உலகியன்மேல் வைத்துக் கூறினான், குறைநேர்தற்கு.

மடலேறுவார், எருக்கங்கண்ணியைச் சூடுவாராதலை, §"ஈசன சாந்து மெருக்கு மணிந்தோர் கிழிபிடித்துப், பாய்சின மாவென வேறுவர் சீறூர்ப் பனைமடலே" என்றதனானும் அறிக.

சாக்காடுபயப்பதாய வரைபாய்தலை, அதன் கொடுமைநோக்கி, "பிறிதும்" என்று சுட்டினன்.

மெய்ப்பாடு—வருத்தம்பற்றிய இளிவரல். பயன்—ஆற்றாமையறிவித்தல்.

---

*தொல்-பொருள்-பொருள்—கஎ. § திருக்கோவையார்—எச.

## குறிஞ்சி

[இது, இரவுக்குறிவந்து நீங்குந் தலைமகனைத் தோழி எதிர்ப்பட்டு வரைவு கடாயது.]

எ-து,—இரவுக்குறியிடத்துவந்து கூடி நீங்குந் தலைமகனைத் தோழி எதிர்ப்பட்டு, 'நாட! செவ்வியையாதலை மேற்கொள்; சிறியகோட்டிடத்துப் பெரியபழம்தொங்கினாற்போலத் தலைவியின் சிறியஉயிர் பெரியகாமத்தைத் தாங்கலாற்றாது; யார் அறிந்தார் அவள்துயர்மிகுதியாலாம் கேட்டை?' என இரவுவருதலை விலக்கி வரைவு கடாவாநிற்றல்.

[கபிலர் பாடியது.]

கஅ. வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சார னாட செவ்வியை யாகுமதி
யாரஃ தறிந்திசி னோரே சாரற்
சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கியாங்
கிவளுயிர் தவச்சிறிது காமமோ பெரிதே.

(இ-ள்):—மூங்கிலாகிய வேலியினையும் வேரின்கண்ணே (பழம் பழுத்தலைக்) கொள்ளும் பலாமரத்தினையுமுடைய (மலைச்) சாரலையுடைய நாட! செம்மையையுடையவனாதலைக் கைக்கொள்; எவர்அதனைஅறிந்தார்? சாரற்கண்ணே சிறிய கோட்டிடத்துப் பெரியபழந் தொங்குவதேபோன்று, இவளுயிர் மிகச்சிறியதாயிருக்கின்றது; (இவளுற்ற) காமமோ பெரியதாயிருக்கின்றது; (ஆதலின், நூற்றுக்கணக்கான ஊற்றினைக்கொண்ட ஆற்றிடத்து இரவுவருதலை இனி விட்டு வரைந்துகொள்.)—(எ-று.)

மதி—முன்னிலையிடத்து அசைநிலை; மதிப்பாய் என்றும் உரைக்கலாம்.

'அஃது' என்றது, துயர்தாங்காது தலைவி இறந்துவிடுவாளாதலை; கூறற்குங் கூடாக் கொடுமையுடைமையின், 'அஃது' என்று சுட்டினாள்.

'நீ உணர்ந்திலை' என்பாள், 'யாரஃதறிந்திசினோர்' என்றாள். ஈற்றிரண்டடிகளில் முரண்நயங் காண்க.

இறைச்சி:—'அணுகுதற்காகாத மூங்கில்வேலி சூழ்ந்த சாரலிடத்து எளிதிற் கொள்ளவியலாத வேரிற்பழுக்கும் இனிய பழத்தையுடைய பலா நிறைந்த நாடன்' என்றதனானே, ஏதம்பலவுந்தரும் ஆற்றிடத்து ஊறுகளை அஞ்சானாய் அரியகாவலையுடையதனால் எளிதிற்கிடைத்தற்கு அரியளான தலைவியின் இனியஇன்பத்தைக் களவிற்பெற விரும்புகின்றான் என்பதாம்.

மெய்ப்பாடு—அணங்குபற்றிய அச்சம். பயன்—வரைவுகடாதல்.

## மருதம்.

[இது, உணர்ப்புவயின்வாரா ஊடற்கண் தலைமகன் சொல்லியது.]

எ-து,—தலைமகன், தலைமகள் தெளிவிக்கும் அளவின்கண் இல்லாத பிணக்குக்கொண்டவிடத்து, 'நெஞ்சே! வறுமையரான பாணரது பொற்றாமரைப்பூவில்லாத தலைபோல அழகுகெட்டனையாய் வருந்தினை; வாழ்க; நந்திறத்து இரங்கும் மகளிர் எவர்!' எனத் தனது ஆற்றாமைதோற்றக் கூறா நிற்றல்.

[பரணர் பாடியது.]

கக. எவ்வி யிழந்த வறுமையர் பாணர்
பூவில் வறுந்தலை போலப் புல்லென்
றினைமதி வாழிய நெஞ்சே மனைமரத்
தெல்லுறு மௌவ னாறும்
பல்லிருங் கூந்தல் யாருளர் நமக்கே.

(இ-ள்):—'எவ்வி' என்னும் வேளை இழந்ததனால் வறுமையையுடையவரான பாணரது (பொற்றாமரைப்) பூவில்லாத வறிய தலையே போன்று விளக்கமற்று வருந்தினை; நெஞ்சே! வாழ்வாயாக; மனையை யடுத்துள்ள மரத்திற் (படர்ந்த) விளக்கமுறும் முல்லையைப்போன்று தோன்றும் பல்லினையும், கரியகூந்தலையுமுடையார் எவர் உளர் (நந்திறத்து இரங்குவார்?) —(எ-று.)

'எவ்வி' என்பான், ஒரு வேள் என்பதையும், பெருங்கொடையினன் என்பதையும், * "ஓம்பாவீகை மாவே ளெவ்வி" என்றதனான் அறிக. 'யாழ்ப்பாணர்' என்ற பாடத்திற்கு 'யாழையுடைய பாணர்' என்க.

பூ—பொற்றாமரைப்பூ; பாணர் பொற்றாமரைப் பரிசில் பெறுதலை, § "பைம்பொற் றாமரை பாணர்ச் சூட்டி", † "பாணர் தாமரை மலையவும்" என்பவற்றான் உணர்க; பாணர்—பாண்மரபினர்; பாண்—பண் அடியாகப் பிறந்த பெயர்; இசைபாடுமவர்.

'இனை'-இன்னை என்பதன் இடைக்குறை; வருந்தினை என்பது பொருள். மதி—முன்னிலையிடத்து அசை.

'வாழிய' என்றான், மடமையான் வாழாதென்று கருதி.

---

* புறநானூறு—உச, கஅ.
§ பதிற்றுப்பத்து-ஐந்தாம்பத்து—அ, க.
† " " —கஉ, க.

எல்—உரிச்சொற்றன்மையையுடைய இடைச்சொல்; * "எல்லே இலக்கம்" என்பது இடையியல்.

'மௌவல் நாறும் பல் இருங் கூந்தல்' என்பதற்கு—முல்லை மணக்கும் பலவாகிய கரிய கூந்தல் என்றும் உரைக்கலாம்.

இரங்காமையின், 'பல்லிருங் .....நமக்கே' என்றான், தலைவி எதிரில் நிற்பவும்.

'இனை' என நெஞ்சினைப் பிரித்துக்கூறி, 'நமக்கு' எனப் பின் உளப்படுத்திக் கூறினான்.

மெய்ப்பாடு—வறுமைபற்றிய அழுகை. பயன்—ஊடலொழித்தல்.

## பாலை.

[இது, செலவுணர்த்திய தோழிக்குக் கிழத்தி உரைத்தது.]

எ-து,—பொருள்கருதித் தலைவர் செல்வரென்று தெரிவித்த தோழியை நோக்கித் தலைமகள், 'மடந்தையே! அருளையும் அன்பையுங் கைவிட்டுத் துணையாயினாரைப் பிரிந்து, பொருள்விழைந்து செல்வார் அறிவுடையாராயின் அறிவுடையாராக; பிரிவைப்பொறாத நாம்அறிவிலோமாக எனத் தனதாற்றாமை தோற்றக் கூறாநிற்றல்.

[கோப்பெருஞ்சோழன் பாடியது.]

உ0. அருளு மன்பு நீக்கித் துணைதுறந்து
பொருள்வயிற் பிரிவோ ருரவோ ராயி
னுரவோ ருரவோ ராக
மடவ மாக மடந்தை நாமே.

(இ-ள்:)—அருளையும் அன்பையுங் கைவிட்டுத் துணையாயினாரைத் துறந்து, பொருளிடத்து (வேட்கையிருந்து) பிரிவார் அறிவுடையோராயின், (அப்பிரியும், வல்லமையையுடையோர் அறிவுடையோராகுக; அறிவிலோம்ஆகுக; மடந்தையே! (பிரிந்திருக்கும் வல்லமையில்லாத)' நாம்.—(எ-று.)

அருள்—எவர்கண்ணும் உளதாகும் இரக்கம். அன்பு-தொடர்புடையாரிடத்து உளதாகும் விருப்பு.

உரன்—திண்மை; அவையிரண்டுள் ஒன்று அறிவுடைமைமேலும், ஒன்று வலியுடைமைமேலும் நின்றது. இது இவ்விருபொருளையுந்தரலை §"உரனென்னுந் தோட்டியான்", † "உரவில் வலியா யொருநீ" என்ற இவற்றான் அறிக.

---

* தொல்-சொல்-இடை—உக. § திருக்குறள்-நீத்தார்பெருமை—சு.
† திணைமாலை நூற்றைம்பது-குறிஞ்சி—கக.

'மடந்தை' என்றது தோழியை; இது அண்மை விளியாதலின் இயல்பாய் நின்றது.

'அவர் உரனுடைமை மடமை' என்றும், 'நம்மடமை உரனுடைமை' என்றும் குறிப்பாற் பெறப்படுமாறு கூறினாள்

மெய்ப்பாடு—அசைவுபற்றிய அழுகை. பயன்—செலவழுங்குவித்தல்.

முல்லை

[இது, பருவம்வருந்துணையும் ஆற்றுவித்த தோழி, அவர் வரக்குறித்த பருவவரவின்கண் இனி ஆற்றுவிக்குமாறு எவ்வாறென்று தன்னுள்ளே கவன்றாட்கு, அவளது குறிப்பறிந்த தலைமகள், 'கானம் அவர்வருங் கார் காலத்தைக் காட்டிற்றாயினும், யான் இது கார்காலம் என்று தேறேன் என்றறிக; அவர் பொய்கூறாராகலின்' எனத் தான் ஆற்றுவலென்பது படச் சொல்லியது.]

எ-து,—கார்காலத்துமீள்வதாகக் கட்டுரைத்துப் பிரிந்ததலைமகன் அக் காலம் வந்தும் வந்திலனாக, இனித் தலைமகளை யாங்ஙனம் ஆற்றுவிப்ப தென்று கவன்றதோழிக்கு, தலைமகள் 'வண்டுகள்மொய்க்கும்படி செறிந்த மலர்களையுடைய கானம் கார்காலமிஃதென உணர்த்துவதாயினும், அவர் உண்மையிற்றிறம்பாராதலையுணர்ந்த யான் கார்காலமென்று தெளியேன்' எனத் தானாற்றுமாறறியக் கூறாநிற்றல்.

[ஓதலாந்தையார் பாடியது.]

௨௧. வண்டுபடத் ததைந்த கொடியிண ரிடையிடுபு
பொன்செய் புனையிழை கட்டிய மகளிர்
கதுப்பிற் றோன்றும் புதுப்பூங் கொன்றைக்
கானங் காரெனக் கூறினும்
யானோ தேறேனவர் பொய்வழங் கலரே.

(இ-ள்:)—வண்டுமொய்க்கும்படி நெருங்கிய நேரிதான பூங்கொத்தை இடையிடையே உடையதாய், பொன்னைக்கொண்டு செய்த அழகிய அணிகளையணிந்த மகளிரது கூந்தலைப்போன்று தோன்றும் புதிய பூவினை யுடைய கொன்றைகள் நிறைந்த கானம், (காண்பார்க்கு இது) கார்காலம் என்று கூறினும், யானோ தேறேன்; 'அவர் பொய்வழங்கார்' என்ற தேற்றத்தால்.—(எ-று.)

வண்டுபடத் ததைந்த-வண்டுவிழுதலாற் சிதறின வென்றுமாம்; இது ப்பொருளுந் தாலே, *"வண்டுபடத் ததைந்த கண்ணி" என்றவிடத்துக் காண்க. கொடி—நேர்மை. கட்டிய—அணிந்த. §மகளிர்கூந்தற்குக் கொன் றைக்காயும் உவமை கூறப்படும்.

கார்காலத்துக் கொன்றை மலர்தல் இயல்பு; ஆதலின், 'பூங்கொன் றைக்கானங் காரெனக் கூறினும்' எனப்பட்டது; 'கானங் காரெனக் கூறினும்' என்பது, † "என்னுமரபின வெனக்கூறுதல்" என்னுங் குறிப் புரை.

'யானோ' என்பதன் 'ஓ' பிரிநிலை; தேறும் பிறரினின்று பிரிந்து நின்.

மெய்ப்பாடு—பிறன்கண்தோன்றிய வருத்தம்பற்றிய இளிவரல். பயன்—ஆற்றுமாறு அறிவித்தல்.

## பாலை.

[இது, செலவுக்குறிப்பறிந்து ஆற்ருளாகிய கிழத்தியைத் தோழி வற்புறுத்தியது.]

எ—து,—தலைவன் பிரிந்து செல்லுங் குறிப்புடையான் என்பதை யுணர்ந்து பொறுத்தலாற்ருத கிழத்தியை 'தோழீ! கண்ணீரையுடையை யாய் நீ இங்குத்தங்கும்படி விட்டுப்பிரிவார் எவர்? இவ்வூர் எண்ணுவது தான், தலைவனோடு நீ உடன் போயினபின் நின்னெடுஞ்சென்ற தலை மகன்செலவை' என, உடன்கொண்டன்றி விட்டுச்செல்லாரென்று தோழி வற்புறுத்திக் கூருநிற்பது.

[சேரமானேந்தை பாடியது.]

உஉ. நீர்வார் கண்ணை நீயிவ ணொழிய
யாரோ பிரிகிற் பவரே சாரற்
சிலம்பணி கொண்ட வலஞ்சுரி மராஅத்து
வேனி லஞ்சினை கமழுந்
தேமூ ரொண்ணுத னின்னொடுஞ் செலவே.

---

* அகநானூறு—களிற்றியானைநிரை—க, க.

§ "கொண்டலுங்கூந் தற்பனையுங் கொன்றைக்கா யும்மிருளுந், தண் டலையுங் கார்மணலுஞ் சைவலமும்—வண்டினமுந், தண்குழலை யொப்பாம்"—உவமானசங்கிரகம்—க.

† தொல்-சொல்-எச்சவியல்—உக.

(இ-ள்):—நீர்வடியுங் கண்ணையுடையையாய் நீ இங்குத் தங்கும்படி விட்டு எவர் பிரியுமவர்? சாரலிடத்து மலையை அழகு செய்தலைக்கொண்ட வலமான சுழிகளோடுகூடிய மலர்களையுடைய வெண்கடம்பினது அழகிய கிளைகள் வேனிற்காலத்துக் கமழ்தலைச்செய்யும் இனியவூர் எண்ணுவது, (நீ உடன்சென்றபின்பு) நின்னொடுஞ் (சென்ற தலைவன் செலவை)—எ-று.

எனவே, உடன்கொண்டுசெல்வதன்றி விட்டுப்பிரியான் தலைவன் என்றாளாம்.

கண்ணை—குறிப்புமுற்றெச்சம்.

மராஅம்—வெண்கடம்பு; அதன்மலர் வலமானசுழிகளை உடையதாதலை, *“நெடுங்கான் மராஅத்துக் குறுஞ்சினை பற்றி, வலஞ்சுரி வாலிணர் கொய்தற்கு” என்புழியுங் காண்க. ‘வலஞ்சுழி மராஅத்து’ என்றும் பாடம்.

“தேமூர்’ என்றாள், தனித்திருந்து நீ வருந்தச் செய்யாததும், உடன் போனபின்றை நின்செலவை எண்ணுவதுமாயிருக்குமென்று.

‘ஊர் எண்ணுதல்’ என இடத்துநிகழ்பொருளின் தொழில் இடத்தின்மேல் ஏறிநின்றது.

மெய்ப்பாடு—பிறன்கண் தோன்றிய இழவுபற்றிய அழுகை. பயன்—ஆற்றுவித்தல்.

[இது, கட்டுக்காணிய நின்றவிடத்துத் தோழி அறத்தொடுநின்றது.]

எ-து, தலைமகள் வாட்டங்கண்ட தாயர், கட்டுவிச்சியை யழைத்துக் கட்டுக்காணுநிற்குமிடத்து, தோழி, கட்டுவிச்சியை நோக்கி, ‘நரைத்த கூந்தலையுடைய அகவன்மகளே! நீ பாடிய அவர்குன்றத்தைக்குறித்த பாட்டைப் பாடுக பாடுக’ என்று குறிப்பினாற் குறித்துணருமாறு அறத்தொடு நிற்றல்.

[ஔவையார் பாடியது.]

௨௩. அகவன் மகளே யகவன் மகளே
மனவுக் கோப்பன்ன நன்னெடுங் கூந்த
லகவன் மகளே பாடுக பாட்டே
யின்னும் பாடுக பாட்டே
யவர்நன் னெடுங்குன்றம் பாடிய பாட்டே.

---

*ஐங்குறுநூறு-பாலை-இடைச்சுரத்துரைத்தபத்து—௩.

(இ-ள்):—பாடும் மகளே! பாடும்மகளே! சங்குமணிக்கோப்பைப் போல (நரைத்ததனால் வெளுத்த) நல்ல நீண்ட கூந்தலையுடைய பாடும் மகளே! பாடுவாயாக பாட்டை; மீண்டும் பாடுவாயாக (அப்) பாட்டை; (யான் பாடவேண்டும் பாட்டுத்தான் எதுவெனில்);—அவர்தம் நல்ல நெடிய குன்றத்தைக்குறித்து (நீ) பாடிய பாட்டு —(எ-று).

அகவல்—பாடுதல்; ஈண்டு, கட்டுவிச்சி கேட்பார்க்கு விடையாகச் கூறும் பாட்டைக் குறித்தது. 'அகவன் மகளே' என்பதற்கு—(வெறி கொண்டு) ஆடும் மகளே என்றும்,(வேலனை) அழைக்கும் மகளே என்றும் உரைக்கலாம்.

'அறிவின்றி ஆண்டால் முதிர்ந்தாள்' என்பது பயப்ப, "மனவு..... மகளே" என்றாள். அறிவின்மை தலைவிதுயரைப் போக்க வழியல்லா வழியைக் கைக்கொண்டதனானும், ஆண்டின் முதிர்ச்சி, 'மனவுக்கோப் பன்ன நன்னெடுங் கூந்தல்' என்ற அடையானும் பெறப்படலறிக. 'அகவன் மகளே' என மும்முறைவிளித்தது, இகழ்ச்சிக்குறிப்பு.

நோய்க்குக்காரணமாயினார்குன்றத்தைக் குறித்த பாட்டாதல் குறிப் பினுணர, 'அவர்நன்னெடுங்குன்றம்பாடிய பாட்டுப் பாடுக பாடுக' என்றாள். 'பாடுக பாடுக' என்ற அடுக்கு—வேட்கைக் குறிப்பு. அப்பாட்டு வெறி யாடலைப்போன்று வீணாகாது தலைவிநோயைத் தணிக்கும் என்பதும் உணர்த்தினாளாம்.

மெய்ப்பாடு—பிறர்கண்தோன்றிய மூப்புப்பற்றிய இளிவரல். பயன்—அறத்தொடு நிற்றல்.

## பாலை.

[இது, பருவங்கண்டு ஆற்றாளாகிய கிழத்தி உரைத்தது]

எ-து,—தலைமகன்குறித்த பருவம் வரக்கண்டும் அவன் வாராமையால் ஆற்றாளாகிய தலைமகள், 'வேம்பின்மலராகிய புதுவருவாயுள்ள இக்காலந் தான் தலைவனையில்லாமற் கழிந்திடுமோ? யானைமிதித்த அதவத்தின் பழம் போலக் குழையும்படி நம்மைத் துறந்து வினைத்துக்கொண்ட நாம்விரும் பிய காதலர்க்கு இல்லனவாகும் எனக்கு உளவான துயர்கள்' என்று ஆற்றாது கூறுநிற்றல்.

[பாணர் பாடியது.]

உச. கருங்கால் வேம்பி னொண்பூ யாணர்
என்னை யின்றியுங் கழிவது கொல்லோ
வாற்றய லெழுந்த வெண்கோட் டதவத்
தெழுகளிறு மிதித்த வொருபழம் போலக்
குழையக் கோட்டியோர்
நாம்வெங் காதலர்க் கலவென் றவ்வே.

(இ-ள்):—பெரியதாளையுடைய வேம்பினது விளங்கும்மலரின் புது வருவாயையுடைய (இப்பின்பனிக்காலந்தான்), எனதுதலைவன் இல்லாமலுங் கழிந்திடுமோ? ஆற்றின் அயலிடத்து எழுந்த வெள்ளிய கோட்டினையுடைய அதவத்தினது, எழுகின்றகளிறு மிதித்திட்ட ஒருபழத்தைப் போலக் குழையும்படி (நம்மைத் தந்திறத்து வளைத்துக்கொண்டோராகிய) நாம்விழைந்த காதலர்க்கு உண்டாயினவல்ல, எனது (துயர்போன்ற) துயர்கள் (ஆதலின்).—(எ-று.)

யாணர்—புதுவருவாய்; இது, ஈண்டுக் காலத்தின்மேல் நின்றது.

என்னை—என் தலைவன்; †"அன்னை யென்னை யென்றலு முளவே" என்றதனான், தலைவி தலைவனை 'என்னை' என்றாள்.

இயற்கையிலேயே மெல்லியலாகிய என்னைப் பிரிவால் வருத்துகின்றார் என்பது பயப்ப, 'ஆற்றயல்......கோட்டியோர்' என்றாள்.

பருவம்வந்தும் வந்திலர் அன்பின்மையின் என்பது புலப்பட, 'நாம் வெங் காதலர்' என்றாள்.

தவ்—குறிப்புமொழி; இது ஈண்டுத் துயரத்தின்மேல் நின்றது. 'தவ்' என்பது குறிப்புமொழியாதலை, §"கவ்வையாற் கவ்விது காம மதுவின்றேற், றவ்வென்னுந் தன்மை யிழந்து" என்றவிடத்துங் காண்க.

மெய்ப்பாடு—இழவுபற்றிய அழுகை. பயன்—அயர்வுயிர்த்தல்.

## குறிஞ்சி.

[இது, வரைவு நீட்டித்தவிடத்துத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.]

எ-து,—தலைமகன் வரைந்துகொள்ளாது களவினை நீட்டித்தவிடத்து ஆற்றாத தலைமகள், 'தோழி! உணர்வார் எவருமிலர் அவன் கூறிய சூளு

---

* இவ்வடியில் ஒருசீர் விடுபட்டதுபோலும்; இவ்வடியும் ஈற்றடியும் பிரதிகள்தோறும் சிதைந்து காணப்பட்டன; ஆதலின், ஒருவாறு அநுமானித்துக் குறிக்கப்பட்டன.

† தொல்-பொருள்-பொருளியல்—ருஉ.

§ திருக்குறள்-அலரறிவுறுத்தல்—ச.

றவை; அவன் பொய்ப்பின் யான் என்செய்வேன்? அவன் மணந்தவன்று, ஆரலைப் பார்க்குங் குருகும் இருந்தது' எனக் கூறுநிற்றல்.

[கபிலர் பாடியது.]

௨௫. யாரு மில்லைத் தானே கள்வன்
றானவன் பொய்ப்பின் யானெவன் செய்கோ
தினைத்தா ளன்ன சிறுபசுங் காஅல
வொழுகுநீ ராரல் பார்க்குங்
குருகு முண்டுதா மணந்த ஞான்றே.

(இ-ள்):—எவருமிலர் (அவன் கூறிய சூளுறவை உணருமவர்); அவன் தான் கள்வனாயினன்; அவன், ('விரைவில் வரைவேன்' என்ற அச்சூளுறவைப்) பொய்த்தானாயின், யான் என்செய்வேன்? தினையினது தாளை யொத்த சிறிய பசிய கால்களையுடைய, (இடையறாது) ஒழுகும் நீரின்கண் ஆரன்மீனை (உணவிற்காகப்) பார்க்கும் குருகும் உண்டு, (அவன்) மணந்த அன்று.—(எ-று.)

யாரும்—உம்மை-முற்றுப்பொருள். இல்லை-பொதுவினை. தானே—ஏ-பிரிநிலை. 'கள்வன்' என்றது, தான் அறியலாகாதபடி தனதுள்ளத்தைக் கவர்ந்தமையின்; மனத்ததொன்றாக வாயதொன்றாக மொழிந்தமையானு மாம்.

'அது பொய்ப்பின்' என்ற பாடத்திற்கு-'விரைவில் வரைவேன்' என்ற அச்சூளுறவைப் பொய்ப்பின் என்க.

'யாரும் இல்லை' என்றாள், பின்னர், 'குருகும் உண்டு' என்றது-அது ஆரலையே பார்த்து இதனை அறியாதிருக்கும்; ஒருகால் அறிந்திருப்பினும், பிறவுயிர்க்கு ஏதஞ்செய்தலையே மேற்கொண்ட அது இருந்தும் இல்லாதது போலும் என்பதுகருதி.

குருகு—நாரை. தாம்—சாரியை.

மெய்ப்பாடு—அச்சத்தைச் சார்ந்த அழுகை. பயன்—ஆற்றாமைகூறல்,

## குறிஞ்சி.

[இது, நற்றாயுஞ் செவிலித்தாயுந் தலைமகளது வேறுபாடு கண்டு, 'இஃது எற்றினான் ஆயிற்று?' என்று கட்டுவிச்சியை வினவிக் கட்டுக் காண்கின்ற காலத்து, 'தலைமகளது வேறுபாட்டிற்குக் காரணம் பிறிதோர் தெய்வம்' என்று கூறக்கேட்டு, தோழி அறத்தொடு நின்றது.]

எ-து,—தலைமகளது வாட்டங்கண்ட தாயர், கட்டுவிச்சியையழைத்துக் கட்டுக்காணுமிடத்து, தெய்வத்தான் விளைந்ததெனக் கட்டுவிச்சி கூறக் கேட்ட தோழி, 'தலைமகன் பொய்கூறினும் அவனொழுக்கம் பொய்யாகாது; கடுவனும் அவனைக் கண்டது' என, தலைவியினது வாட்டம் கூட்டத்தான் நிகழ்ந்தது என்பதைக் குறிப்பினுணரக் கூறி, அறத்தொடு நிற்றல்.

[வெள்ளிவீதியார் பாடியது.]

உ௬. அரும்பற மலர்ந்த கருங்கால் வேங்கை
மேக்கெழு பெருஞ்சினை யிருந்த தோகை
பூக்கொய் மகளிரிற் றோன்று நாடன்
றகாஅன் போலத் தான்றீது மொழியினுந்
தன்கண் கண்டது பொய்க்குவ தன்றே
தேக்கொக் கருந்து முள்ளெயிற்றுத் துவர்வாய்
வரையாடு வன்பறழ்த் தந்தைக்
கடுவனு மறியுமக் கொடியோ னையே.

(இ-ள்):—முகைபில்லாதபடி முழுவதும் மலர்ந்த கரிய காலையுடைய வேங்கைமரத்தினது மேனோக்கியெழும் பெரிய கிளையிடத்திருந்த மயில், (அம்மரத்தின்மேலேறி) மலரைக் கொய்யும் மகளிரைப்போலத் தோன்றும் நாடன், தகுதியில்லாதவன்போலத் தான் தீங்கு தருவதைக் கூறினும், அவனிடத்து உண்டான ஒழுக்கம் பொய்யாவதன்று; இனியமாம்பழத்தை யுண்ணும் முள்ளினையொத்த கூரிய பல்லினையும், சிவந்த வாயினையுமுடைய வரையினிடத்து விளையாடும் வலிய குட்டிக்குத் தந்தையான ஆண்குரங்கும் அறியும் அக்கொடியவனை.—(எ-று.)

'அரும்பற.........நாடன்' என்ற கருத்தை, *"விரிந்த வேங்கைப் பெருஞ்சினைத் தோகை, பூக்கொய் மகளிரிற் றோன்று நாடன்" என்றவிடத்துங் காண்க.

'கருங்கால் வேங்கை', தேக்கொக்கு' இவை அடைமொழிகளால் வேங்கைமரத்தையும், மாமரத்தையும் குறிப்பின் உணர்த்தும்.

'மொழியினும்' என்றது, மொழிதலின் அருமைதோன்ற நின்றது.

கொக்கு—மாமரம்; ஈண்டு அதன் பழத்தை யுணர்த்திற்று.

'முத்துநிரை யொத்த முள்ளெயிற்றுத் துவர்வாய்' என்றும் பாடம்; 'முத்தின் வரிசையைப்போன்ற முள்ளெயிற்றினையும், சிவந்த வாயையும்' என்க.

---

* ஐங்குறுநூறு—குறிஞ்சி—மஞ்ஞைப்பத்து—எ.

"மகவும் பிள்ளையும் பறழும் பார்ப்பு, மவையு மன்ன வப்பா லான" என ஆசிரியர் விதந்தோதினமையின் 'பறழ்' குரங்குக்குட்டிக்கண் வருதற்கு ஏற்புடைமையறிக.

கடுவன்—ஆண்குரங்கு; †"குரங்கி னேற்றினைக் கடுவ னென்ற லும்" என விதந்தோதினார் ஆசிரியர் தொல்காப்பியனாரும்.

உள்ளுறை:—மலர்ந்த வேங்கையின் மேலோங்கிய சினையிடத்திருந்த தோகை, பூக்கொய் மகளிரைப்போன்று தோன்றினாற்போல, தலைவன் தனது நெஞ்சத்திடத்துப் பிறிது நினைத்திருந்தும் வெளித்தோற்றத்து வேண்டியனசெய்வான்போற் காணப்பட்டான் என்பதாம்.

மெய்ப்பாடு—எள்ளல்பற்றிய நகை; என்னை? §"எள்ள லிளமை பேதைமை மடனென், றுள்ளப் பட்ட நகைநான் கென்ப" என்றாராகலின். பயன்—அறத்தொடுநிற்றல்.

## பாலை.

[இது, பிரிவிடை ஆற்றாளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.]

எ-து,—தலைவன் வரைவிடைவைத்துப் பிரிந்தவிடத்துத் தலைமக ளாற்றாள் எனத் தோழி வருந்தியதறிந்த தலைமகள், 'தோழீ! நல்ல ஆவின் பால் அதன்கன்றுமுண்ணாமல் கலத்திடத்தும் தங்காமல் நிலத்து உக்காற் போல, எனது செவ்வி எனக்குமின்றி, எனது தலைவனுக்குமின்றிப் பசலை பாய்ந்திடல் வேண்டும் (போலும்)' என, தனது ஆற்றாமைதோன்றக் கூறா நிற்றல்.

‡[கொல்லனழிசி பாடியது.]

௨௭. கன்று முண்ணாது கலத்தினும் படாது
நல்லான் றீம்பா னிலத்துக் காஅங்
கெனக்கு மாகா தென்னைக்கு முதவாது
பசலை யுணீஇய வேண்டுந்
திதலை யாகத்தென் மாமைக் கவினே.

(இ-ள்.):—கன்றும் உண்ணாமல் கலத்திலும் தங்காமல் நல்ல ஆவின் பால் நிலத்திற் சிந்தினாற்போல, எனக்கும் பயன்படலின்றி, எனது தலைவனுக்கும் உதவுதலின்றிப் பசலையுண்ணுதல் வேண்டும் போலும், சுணங்கு நிறைந்த மார்பிடத்தையுடைய எனது நிறமுள்ள செவ்வி.—(எ-று.)

---

* தொல்-பொருள்-மரபியல்—௩௪.
† ,, ,, ,, ௩௮.
§ தொல்-பொருள்-மெய்ப்பாட்டியல்—௪.
‡ 'வெள்ளிவீதியார் பாடியது' என்றார் ஆசிரியர் நச்சினார்க்கினியர். தொல்-பொருள்—பக்கம்-௧௧. வரி-௧.

'கன்றும்........உக்காஅங்கு' என்பது, பயனின்றிக் கழிதற்கு உவமையாய் வந்தது; * "அங்கணத்து ளுக்க வமிழ்தற்றால்" என்றார் ஆசிரியர் திருவள்ளுவனாரும்.

'நிலம்' எனப் பொதுமையிற் கூறப்பட்டிருந்தாலும், சிந்திற்சிறிதும் பயன்படச்செய்யாத தூய்மையற்ற நிலத்தையே கொள்க.

ஓரிடத்தே முற்றுங் கொட்டின் சிறிதேனும் ஒருகாற் பயன்படக் கூடுமாதலால், 'உக்காஅங்கு'எனச் சிந்துதற்பொருள்படக் கூறப்பட்டது; 'உகுதல்'கொட்டுதலாகாமையை, 'கண்ணீருகுத்தான்' என்ற வழக்கிடத் துங்காண்க.

செவ்வி தனக்காதல்-கவலையின்றிச் செயற்கையாலும் புனைந்து ஆடியிடத்து நோக்கி அகமகிழுமாறிருத்தல்; அது தலைவற்கு உதவல்—ஐம்புலனும் தலைவன் நுகருமாறு உதவுதல்; †"கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனு, மொண்டொடி கண்ணே யுள" என்றதனால், ஐம்புலனுந் துய்த்தற்காதல் அறிக.

'பசலை யுணீஇய வேண்டும்' என்றது, § "உண்டற் குரிய வல்லாப் பொருளை, யுண்டன போலக் கூறலு மரபே" என்பதனாற் கூறிய மரபு. உண்ணுதல்—முழுதும் மூடிக்கொள்ளல். 'போலும்'என்ற ஒப்பிலொப்புத் தகுதியான் வருவித்து உரைக்கப்பட்டது. உணீஇயவேண்டும்—ஒருவகை வியங்கோள்; இருசொல் ஒருசொன்னீர்மைப்பட்டன.

மெய்ப்பாடு—அசைவுபற்றிய அழுகை பயன்—செலவழுங்குவித்தல்.

## பாலை.

[இது, வரைவிடை ஆற்றாளாய்க் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.]

எ—து,—தலைமகன் வரைவிடைவைத்துப் பிரிய, தலைமகள் ஆற்றாளென்று வருந்திய தோழிக்கு, தலைமகள், 'யான் ஆற்றுமாறு யாங்ஙனம்? ஆற்றல்வேண்டுமென்று கருதும் இவ்வூராரோடு மோதி எதிர்ப்பேனோ? அன்றி, யாதும் மற்றொன்றின்மேல்வைத்துக் கூவுவேனோ? உணர்ந்திலேன், வருத்தும் எனது நோயை அறியாது துயிலும் இவ்வூரார்க்குச் செய்யும் மாற்றை' என, தனது ஆற்றாமை தோன்றக் கூறாநிற்றல்.

* திருக்குறள்—அவையறிதல்—௧0.
† திருக்குறள்—புணர்ச்சிமகிழ்தல்—௧.
§ தொல்—பொருள்—பொருளியல்—௧௧.

*[ஔவையார் பாடியது.]

உஅ. முட்டு வேன்கொ றாக்கு வேன்கொ
லோரேன் யானுமோர் பெற்றி மேலிட்
டாஅ வொல்லெனக் கூவு வேன்கொ
லலமர லசைவளி யலைப்பவென்
னுயவுநோ யறியாது துஞ்சு மூர்க்கே.

(இ-ள்):—மோதுவேனோ? எதிர்ப்பேனோ? யானும் மற்றோர்பெற்றி மேல் வைத்து, 'ஆஅ!' (என) விரைவாகக் கூவுவேனோ? (யாதுசெய்வதென) உணர்ந்திலேன்; சுழற்சியையுடைய அசையும் காற்று அலைத்தலால் உண்டான எனது வருத்தும் பிணியை ஆராயாமல் துயிலும் இவ்வூர்க்கு (மாறாக யான் செய்வதை)—(எ-று.)

'முட்டுவேன்' என்பது—முற்றெச்சம். 'கொல்' இரண்டில், முன்னையது—அசைநிலை; பின்னையது—வினா.

'ஓர்பெற்றிமேல் இட்டு'—இயைபில்லாத வேறொன்றன்மேல்வைத்து. 'ஆஅ'—இரக்கத்தின்கண் வந்தது.

அலமரல்— சுழலுதல்; § "அலமர றெருமர லாயிரண்டுஞ் சுழற்சி" என்றார் ஆசிரியர் தொல்காப்பியனார்.

'துஞ்சும் ஊர்க்கு' என்பதற்கு-'அழியும் இவ்வூர்க்கு' என்று உரையுரைத்து, பிறர்துயிலைப் பொருட்படுத்தாத இவ்வூர் அழிதல் ஒருதலை என்ற கருத்தாற் கூறினாளெனலும் ஆம்.

மெய்ப்பாடு—பிணிபற்றிய இளிவரல். பயன்—ஆற்றாமையறிவித்தல்.

## குறிஞ்சி.

[இது, இரவுக்குறி மறுக்கப்பட்ட தலைமகன், இவர் எம்மை மறுத்தாரென்று வரைந்துகொள்ள நினையாது, பின்னுங் கூடுதற்கு அவாவுற்ற நெஞ்சினை நோக்கிக் கூறியது.]

எ-து,—இரவிற்குறியிடத்து வருதலால் உண்டாகும் ஏதங்கருதியும், வரைதல் கருதியும் தோழி இரவுக்குறி மறித்தழி, தலைமகன், 'கூடுதலை விழைந்த நெஞ்சே! மழையிடைப்பட்ட பசிய மட்கலத்தைப்போலத்

* இப்பாட்டுப் பிரதிகளிற் சிதைந்து காணப்பட்டது; ஆதலின், ஒருவாறு வரையப்பட்டது.

§ தொல்-சொல்-உரி—௧௩.

துயர் தாங்காது மிக வருந்தினை; மகவைத் தழுவும் மந்தியைப்போல மனம் பொருந்தி நின் துயரைக் கேட்பாரைப் பெற்றிலை' என, 'யாங்ஙனம் உய்வையோ?' என்பது பயப்ப நெஞ்சினை வேறுநிறுத்திக் கூறுநிற்றல்.

[ஔவையார் பாடியது.]

உ௬. நல்லுரை யிகந்து புல்லுரைத் தாஅய்
பெயனீர்க் கேற்ற பசுங்கலம் போல
வுள்ளந் தாங்கா வெள்ள நீந்தி
யரிதவா வுற்றனை நெஞ்சே நன்றும்
பெரிதா லம்மநின் பூச லுயர்கோட்டு
மகவுடை மந்தி போல
வகனுறத் தழீஇக் கேட்குநர்ப் பெறினே.

(இ-ள்):—நல்ல சொற்களைக் கைவிட்டுப் புல்லிய சொற்களிடத்துப் படர்ந்து, பொழியும் நீரை ஏற்றுக்கொண்ட பசிய (மட்) கலத்தைப்போல, உள்ளந்தாங்கல்கூடாத துயரமாகிய கடலை நீந்தியும், அரியதான அவாவை யடைந்தாய்; நெஞ்சே! மிகவும் பெரிதாயிருந்தது நினது பூசல்; கேட்பாயாக; உயர்ந்த மரக்கோட்டிடத்தில் மகவினைக்கொண்ட பெண்குரங்கைப்போல, அகம்பொருந்தத் தழுவிக்கொண்டு கேட்பாரைப் பெற்றால், (உனது துயர் சிறிது குறையும்; அதனையும் பெற்றிலை நீ.)—(எ-று.)

பிறர்குறைகூறக்கேட்டுத் தீர்த்தலின்றி, பிறரிடங் குறையைக் கூறிக்கொள்ளுதல் ஆண்மையன்மையின், 'நல்லுரை யிகந்து புல்லுரைத் தாஅய்' என்றான்

'நீர்க்கு' என்ற நான்காவது, 'நீரை' என இரண்டாவதன் பொருட்கண் வந்தது; வேற்றுமை மயக்கம்; என்னை? * "யாத னுருபிற் கூறிற் றாயினும், பொருள்சென் மருங்கின் வேற்றுமை சாரும்'' என்றாராகலின்.

பசுங்கலம்—பசிய மட்கலம்; இதனுள் நீர் நிறையின் கெடும்; §"பசுமட், கலத்துணீர் பெய்திரீஇ யற்று'' என்றார் வள்ளுவனாரும்.

பூசல்—ஆரவாரம்; ஈண்டு, தன்னோடு இணங்காது மாறுபடுகின்ற மனம் அவளிடத்துக் குறைகூறிக்கொள்ள எவுதலைக் குறித்தது.

உயர்ந்த மரக்கோட்டிடத்து மந்தி மகவிற்கு ஊறு நேராதபடி நன்கு தழுவிக்கொள்ளுதல் இயல்பு.

---

* தொல்-சொல்-வேற்றுமைமயங்கியல்—உ௩.

§ திருக்குறள்-வினைத்தூய்மை—௪0.

கேட்பாரைப் பெற்றுக் கூறின் துயரம் ஒருவழிக் குறையுமாதலால், 'கேட்குநர்ப் பெறின்' என்றான்; தீர்ப்பாரைப் பெறுதலினும் கேட்பாரைப்பெறுதல் எளிதன்றே? அதனையும் நீ பெற்றிலே யெனக் கூறினுமாம். 'பெறின்,' என்றது, பெறுதலின் அருமை குறித்து நின்றது.

'அரிதயர்வுற்றனே,' 'என்றும்' என்பனவும் பாடம்; 'மிக வருத்தங் கொண்டனே,' 'எக்காலத்தும்' என்க.

மெய்ப்பாடு—இளிவுபற்றிய அழுகை. பயன்—ஆற்றாமையறிவித்தல்.

## பாலை.

[இது, 'அவர் நின்னை வரைந்துகோடல் காரணத்தாற் பிரியவும், நீ ஆற்றுயாகின்றதென்?' என வினய தோழிக்கு, தலைமகள், 'யான் ஆற்றியுள்ளேனாகவும் கனவு வந்து என்னை இங்ஙன் நலிந்தது' எனக் கூறியது.]

எ-து,—'வரைவினைக் கருதிப் பிரியவும் வருந்துகின்றதென்னை?' என்ற தோழிக்கு, தலைமகள், 'தோழி! தலைவன் மெய்யிற்பொருந்தத் தழுவினனாக ஒருசிறுகனவு கண்டேன்; விழித்துப் பின் அமளியைத் தடவினேனாய் ஒன்றுங் கண்டிலேன்; ஆற்றியிருந்தும் கனவு என்னை இங்ஙன் ஆற்றாமையை அடையச்செய்தது' எனக் கூறுநிற்றல்.

[கச்சிப்பேட்டுநன்னாகையார் பாடியது.]

௩௦. கேட்டிசின் வாழி தோழி யல்கற்
பொய்வ லாளன் மெய்யுற மரீஇ
வாய்த்தகைப் பொய்க்கனா மருட்ட வேற்றெழுந்
தமளி தைவந் தனனே குவளை
வண்டுபடு மலரிற் சாஅய்த்
தமியேன் மன்ற வளியேன் யானே.

(இ-ள்):—கேட்பாயாக; தோழீ! இரவின்கண், பொய்யினை வன்மையாக ஆள்பவன் [தலைவன்], மெய்யிடத்து மிகத் தழுவி (அதனால்) சிறந்ததான சிறிய பொய்க்கனவு (ஒன்று என்னை) மருட்ட, அதனை ஏற்றுக் கொண்டு எழுந்து படுக்கையைத் தடவினேன்; (தலைவனைக் காணாமையால்), குவளையைப்போன்ற என்கண்கள் வண்டு வீழ்ந்த மலரைப்போல அழகு கெட்டுத் தனித்தேனாயினேன்; ஆதலால், உண்மையாக அளிக்கத் தக்கவளே யான்.—(எ-று.)

'கேட்டிசின்' என்றதன் 'இசின்'-முன்னிலைக்கண் வந்தது. வாழி—அசைநிலை.

அல்கல்—இரவு; இது இப்பொருட்டாதலை, * "பெருநகை யல்கணிகழ்ந்ததொரு நிலையே" என்புழியுங் காண்க.

'பொய்வல் ஆளன்' என்றாள், தலைவனை; அவன் களவிற் கலந்த காலத்து, 'நின்னிற் பிரியேன்; பிரியின் தரியேன்' எனக் கட்டுரைத்துப் பிறகு பிரிந்து பொய்த்தமை கருதி.

மெய்யுற—உண்மைபொருந்த என்று உரைகூறி, கனவோ என்று யான் அயிர்க்கலாகாதபடி என்று கருத்துக்கொள்ளலுமாம்.

கனவினைத் தந்ததால் 'வாய்த்த' என்றும், விரைவில் ஒழிந்ததனால் 'கை' என்றும் கனவிற்கு அடைகொடுத்துக் கூறினாள். 'கை'—சிறுமையென்னும் பொருள்படலை, 'கைவாள்' என்னும் வழக்கிடத்துங் காண்க.

'தைவந்தனன்' என்பதில், 'அன்' தன்மைக்கண் வந்தது; §"இலனென்று தீயவை செய்யற்க" என்புழிப்போல; இஃது அக்காலத்து அருகிய வழக்கு.

குவளை—குவளைமலரைப்போன்ற கண்ணைக் குறித்தது.

'அளியேன் யானே' என்றதில் ஈற்றேகாரத்தை 'அளியேனே யான்' எனப் பிரித்து முன்னே கூட்டி உரை உரைக்கப்பட்டது; ஏ—தேற்றம். மெய்ப்பாடு—அசைவுபற்றிய அழுகை. பயன்—ஆற்றாமையறிவித்தல்.

## மருதம்.

[இது, கொதுமலர் வரைவுழித் தோழிக்குத் தலைமகள் அறத்தொடுகின்றது.]

எ-து,—தமர் கொதுமலர்க்கு வரைவுடன்பட்டமையறிந்த தலைமகள், தோழி அறத்தொடுநிற்றல்கருதி, 'தோழீ! வீரர்விழாவிடங்களினும், மகளிர் துணங்கையாடும் இடங்களினும், ஒழிந்தவிடங்களினுந் தேடியுந் தலைவனைக்கண்டிலேன், அவனைத் தேடிப் பலவிடத்துஞ் சேர்தலால், யானும் ஒரு ஆடுகளத்து மகளே; என்னை மெலிவித்த தலைவனும் ஒரு ஆடுகளத்து மகனே' எனத் தோழிக்கு அறத்தொடு நிற்றல்.

---

* கலித்தொகை-குறிஞ்சி—உக.
§ திருக்குறள்-தீவினையச்சம்—ரு.

[ஆதிமந்தியார் பாடியது]

௩௧. மள்ளர் குழீஇய விழவி னானு
மகளிர் தழீஇய துணங்கை யானும்
யாண்டுங் காணேன் மாண்டக் கோனை
யானுமோ ராடுகள மகளே யென்கைக்
கோடீ ரிலங்கு வளைநெகிழ்த்த
பீடுகெழு குரிசிலுமோ ராடுகள மகனே.

(இ-ள்):—வீரர்கள் கூடிய (வில் முதலிய படைக்கல) விழாவிடங்களிலும், மகளிர் சேர்ந்த துணங்கையாடிடங்களிலும் (ஒழிந்த) எல்லா விடங்களிலும் (தேடியும்) கண்டிலேன், பெருமைதக்க தலைவனை; (அவன் இருத்தற்கு ஏற்ற இடங்களிலெல்லாம் அவனைக் கண்டு கொணர்தலைக் காமுற்றுப் பல்காலுஞ்சுற்றித்திரிதலான்) யானும் ஒரு ஆடுங்களத்துமகளே (போல்வேன்); சங்கை அறுத்துச் செய்த விளங்கும் வளையை நெகிழ்த்த பெருமைமிக்க குரிசிலும் ஒரு ஆடுங்களத்து மகனே (ஆவான்.) (எ-று.)

மள்ளர் குழீஇய விழவாவது—வில் முதலிய படைக்கலப்பயிற்சி மிக்க வீரர் தம்வல்லமையைப் பலரும் மகிழ்ந்துபார்க்கக் காட்டும் விழவு; விழவு—ஆகுபெயர்; விழாவிடங்களைக் குறித்தலின்; துணங்கைக்கும் இஃது ஒக்கும்.

மகளிர் தழீஇய துணங்கையாவது:—மகளிர்பலர் ஒன்றுகூடி இருகைகளையும் மடக்கி விலாவிடத்து அடித்துக்கொண்டு ஆடுவது; இதனை, *"பழுப்புடை யிருகை முடக்கி யடிக்கத், துடக்கிய நடையது துணங்கை யாகும்" என்பதனுன் உணர்க.

வன்மையானும் மென்மையானும் மள்ளர்க்கும் மகளிர்க்கும் ஒப்ப உவப்பைத் தருபவன் என்பதையும், பிறதுறைகளினுங் கடைபோனவன் என்பதையுங் கருதி, 'மள்ளர்.........காணேன்' என்றாள்.

'நொதுமலர் வரையாதவாறு அவனைக் கொணர்தற்கு யாண்டும் தேடினேன் காணேன்' என்றதனால், 'தோழியை அறத்தொடுநிற்க' என்றாள் தலைமகள்.

ஆடுகளம்—கூத்தர் ஆடுங் களம். கூத்தர்—காணவிரும்புவாருள்ள இடங்கட்கெல்லாஞ் சென்று ஆடும் ஒரு மரபினர்.

---

* திருமுருகாற்றுப்படை—நச்சினார்க்கினியர் உரைமேற்கோள்—பத்துப்பாட்டு—பக்கம்—௩௰, வரி—௨௩.

'மகளே,' 'மகனே' இவ்விரண்டும்-முறைமைசுட்டாதன; இவற்றின் பின், 'போல்வேன்' 'ஆவான்,' என்பன தகுதியான் வருவித்து உரைக்கப் பட்டன; தலைவி பலவிடத்துந் தான் சென்றதாகக் கூறுவதானும், அவன் ஆடுதற்றொழிலில் வல்லவனாதலை அவள் உணர்ந்துகூறுகின்றமையானும்.

'நாடுகெழு குரிசிலும்' எனவும் பாடம்; 'நாடுமிக்க குரிசில்' என்க.

தலைமகள் தன்தலைமைக்குத் தகாதவாறு தான் தேடிச்சென்றதாகக் கூறியது உலகவழக்கன்றேனும், பொருட்பயம்பட வருதலின், வழக்கா றென்றே கொள்க; என்னை? *"அறக்கழி வுடையன பொருட்பயம் பட வரின், வழக்கென வழங்கலும் பழித்தன் றென்ப" என்றாராகலின்.

வீரர்விழவினும், மகளிர்விழவினும் பலருங் கூடுவர் என்பதை, §"வில்லார் விழவினும்வேலாழிசூழுலகி, னல்லார்விழவகத்து நாங்காணே-கல்லா, யுவர்க்கத் தொரோவுதவிச் சேர்ப்பனைப் பாரைச், சுவர்க்கத் துளராயிற் சூழ்" என்றதனானும் அறிக.

மெய்ப்பாடு—இறைபற்றிய அச்சம். பயன்—அறத்தொடுநிற்கத் தோழிக்கு உணர்த்தல்.

## குறிஞ்சி.

[இது, பின்னின்றான் கூறுகின்றது.]

எ-து,—தோழியிற் கூட்டம்வேண்டி இரந்து பின்னின்ற தலைமகன், 'காலை முதலிய எல்லாச் சிறுபொழுதுகளும் வருத்துவதாயின; 'காமம்' என்பதும் பொய்யே? மறுத்து மடலேறச்செய்தலும் உமக்குப் பழியே; பிரிவு தலைவந்தவிடத்து உயிர்வாழ்தலும் எனக்குப் பழியே' என, குறைமறுதவாற்றாற் கூறுநிற்றல்.

[அள்ளூர் நன்முல்லையார் பாடியது.]

௩௨. காலையும் பகலுங் கையறு மாலையு
மூர்துஞ் சியாமமும் விடியலு மென்றிப்
பொழுதிடை தெரியிற் பொய்யே காம
மாவென மடலொடு மறுகிற் றோன்றித்
தோற்றெனத் தூற்றலும் பழியே
வாழ்தலும் பழியே பிரிவுதலை வரினே.

* தொல்-பொருள்-பொருளியல்—உ௪.
§ திணைமாலை நூற்றைம்பது-பாலை—௧௬.

(இ-ள்.):—காலையும் நடுப்பகலும், செயலறும் மாலைக்காலமும், ஊரார் துயிலும் நடுஇரவும், விடியற்காலமும் என்ற (இச்சிறு) பொழுதுகள் (எல்லாம் வேட்கைநோய்கொண்டாரை வேறுபாடின்றி) வருத்துதலை அறிந்தால், பொய்யாகுமா காமம்? 'பாய்மா' என்று (கொண்ட) பனை மடலோடு தெருவின்கண்ணே வெளிப்பட்டுத் தோற்று' என்பதாகத் தூற்றுதலும் உங்கட்குப் பழிதருவதே; உயிர்வாழ்தலும் (எனக்குப்) பழிதருவதே; (எல்லாப்பொழுதும்துயர்தரும்), பிரிவு தலைவந்தால்.(எ-று.)

காலை, பகல், மாலை, இரவு, விடியல் என்னும் ஐந்து சிறுபொழுதுகள் கூறப்பட்டனவேனும், ஒழிந்த வைகறையையும் உடன் கூட்டிக் கொள்க.

எல்லாப்பொழுதும் பிரிவுதலைவந்தாரை வருத்தும் என்பான், பிரிந்தார்க்குத் தாங்கற்கரிய வருத்தத்தைத் தருவதில் தலைசிறந்தனவான மாலையையும் இரவையும், 'கையறு' என்னும் அடை தழுவுமாறு, 'கையறு மாலையும் ஊர்துஞ்சி யாமமும்' எனக்கூறினன்; அவற்றின் கொடுமை தோன்ற.

இடை—முதனிலைத்தொழிற் பெயர். 'தெரியின்' என்பது, தெரிதலின் அருமையை உணர்த்திற்று; (பிரிவின் கொடுமையையுணராத தோழி) உணர்ந்திலள் என்ற கருத்தினனாகலின். பொய்யே—ஏகாரம்—வினா.

'மாவென மடலொடு மறுகிற் றோன்றித், தோற்று' என்றது, நீ மறுப்பின் அங்ஙனங் கூறுவதேபோலும் என்பதாம். 'வாழ்தலும் பழியே' என்றதனான், 'வரையும் பாய்வேன்' எனக் குறிப்பின் உணர்த்தினானும்.

மெய்ப்பாடு—வருத்தம்பற்றிய இளிவரல். பயன்—ஆற்றாமையறிவித்தல்.

## மருதம்.

[இது, வாயிலாகப் புக்க பாணன் கேட்பத் தோழியை நோக்கித் தலைமகள் கூறியது.]

எ-து,—புறத்தொழுக்கம் தலைவற்கு உண்டாகப் புலந்த தலைமகளின் ஊடலொழிக்குமாறு தலைமகன் அனுப்பிய பாணன், தன் சொல்வன்மையால் ஊடலொழித்தவழி, தலைமகள், 'தோழி! இவன், ஊரன்குறிப்பின் வழி ஒழுகும் ஒரு மாணவன்; மன்றத்திடத்து மனையினைக்கொண்ட பரத்தைமகளிர் பலரிடத்தும் இரந்தும் ஊண்விரும்பாது என்னிடமும் விருந்தாக விழைந்துவந்த பெருமையினன்' என்றுகூறி, 'இல்லகத்திருக்கும் யான் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டுமென்றோ?' என, வாயில்நேர்ந்தமை புலப்படக் கூறியது.

[படுமாத்து மோசிகீரனுர் பாடியது.]

கூக. அன்னு யிவனே ரிளமா ணுக்கன்
றன்னூர் மன்றத் தென்ன கொல்லோ
விரந்தூ ணிரம்பா மேனியொடு
விருந்தி னூரும் பெருஞ்செம் மலனே.

(இ-ள்.):—தோழி! இவன் ஒரு இளைய மாணவனு யிருக்கின்றான்; தான் உள்ள ஊரின் மன்றத்து, எதனுலோ உணவை இரந்தும் நிரம்பப் பெருத மேனியோடுகூடி, விருந்தின்கண்ணுஞ் செல்லும் மிக்கபெருமை யை யுடையவனுயிருக்கின்றான். (எ-று)

'அன்னய்' என்றது, தோழியை. 'இன்மாணுக்கன்' என்ற பாடத் திற்கு—இனிய மாணுக்கன் என்க.

'இவனோர் இளமாணுக்கன்' என்றதில், 'ஒருமை'—சிறப்புப்பொருள் தந்தது; 'மாணுக்கன்' என்றதுபாணனை; அவன் தலைமகன்குறிப்பின்வழி யெல்லாம் பரத்தையர்பலரிடத்தும் பலகாலும் வாயிலாய்ச் சென்றுவருகின் ருன் என்ற குறிப்பால்.

மன்றத்திடத்து மனையினைக்கொண்ட பரத்தையர்பாலெல்லாம் தலை மகன்குறைகூறி முற்றுப்பெருமல், என்னிடமும் குறைகூறிக்கொள்ள வந்தனன் என்பது குறிப்பாற் புலப்பட, 'தன்னூர்......ஊரும்' என்ருள்.

'பெருஞ்செம்மலன்' என்றது, 'மிகஅழகு' என்னும் வழக்குப்போலப் பிறிதுபொருள் பயந்தது.

இல்லுறைவார் விருந்தினரை மருராதலின், 'யானும் நேர்வேன்' என்றனள் தலைவி: வாயில்நேர்ந்தமை குறிப்பு.

மெய்ப்பாடு—எள்ளல்பற்றிய நகை. பயன்—வாயில்நேர்தல்.

## மருதம்.

[இது, வரைவு மலிந்தமை ஊர்மேல்வைத்துத் தோழிக்குக் கிழத்தி உரைத்தது.]

எ-து,—தலைமகனுக்குத் தமர் வரைவுநேர்ந்தமையறிந்து, 'தோழி! இனி, தனித்தார் உறங்காமையான் எழுந்த அலரைக் கேளாது, இவ்வூ ரார் இனிய கணவன்மணத்தைக் கேட்டு இன்புறுவாராக; கிழவனும் கள விற் கலந்த அவனே' என, தலைமகள் ஊரின்மேல்வைத்து வரைவுமலிந் தமை உரையாநிற்றல்.

[கொல்லிக்கண்ணன் பாடியது.]

௯௪. ஒறுப்ப வோவலர் மறுப்பத் தேறலர்
தமிய ருறங்குங் கௌவை யின்று
யினியது கேட்டின் புறுகவிவ் வூரே
முனாஅ தியானையுண் குருகின் கானலம்
பெருந்தோட்ட மள்ள ரார்ப்பிசை வெரூஉங்
குட்டுவன் மாந்தை யன்னவெங்
குழைவிளங் காய்நுதற் கிழவனு மவனே.

(இ-ள்.):—(தமர்) ஒறுப்பவும் வருந்தல் ஒழியாராய் ஆற்றுவிக்குஞ் சொற்களான் வருந்தல் கூடாதென மறுப்பவும் தெளியாராய்த் தனித்தாரது உறக்கங் காரணமாக எழுந்த அலரைக் கேட்டலிலதாய் வரைவாகிய இனியதைக் கேட்டு, இன்புறுவதாக இவ்வூர்தான்; எதிரிடத்து யானையுண்ணுங் குருக்கத்திச்சோலையையுடைய கடலும், அழகிய பெரிய தொகுதியை யுடைய வீரர்கள் ஆரவாரிக்கும் ஆரவாரத்தைக் கேட்டு அஞ்சும்படி செய் யும் (கடல்பிறக்கோட்டிய) குட்டுவன் என்னுஞ் சேரனது, மாந்தையென் னும் நகரத்தைப்போன்ற எமது குழை விளங்குஞ் சிறந்த நுதலையுடைய கிழவனும் (களவிற் கலந்த) அவனேயாமன்.—(எ-று.)

உறங்குங் கௌவை—உறக்கங்காரணமாக எழுந்த அலர்; என்றது, தலைவி இரவினுந் துயின்றிலள் என அவ்வூரகத்து எழுந்த அலர்.

இனியது—(தலைமகனுக்குத் தமர் வரைவு நேர்ந்த) இனிமையைத் தருவது; 'இனி, அது' என்று பிரித்து, 'இனி (தலைமகனுக்குத் தமர் வரைவு நேர்ந்த) அதனை' என்றும் உரையுரைக்கலாம்.

'யானை உண்குருகு' என்றது, குருக்கத்திக்கு வெளிப்படை; குருகு—குருக்கத்தி; இஃது இப்பொருட்டாதலை, *"பாசிலைக் குருகின் புன்புற வரிப்பூ" என்றதனானும் அறிக.

கானல்—கடற்கரைச்சோலை; ஈண்டு ஆகுபெயராய்க் கடலையுணர்த் திற்று; 'கானலும்' என்னும் உயர்வுசிறப்பும்மை விகாரத்தால் தொக்கது.

குட்டுவன்—கடல்பிறக்கோட்டிய குட்டுவன்சேரன்; இவன் கடலை வென்றமையை, §"கோடுநரல் பௌவங் கலங்க வேலிட், டுடைதிரைப் பரப்பிற் படுகடலோட்டிய, வெல்புகழ்க் குட்டுவன்" என்றதனான் அறிக.

---

* பெரும்பாணாற்றுப்படை—௩எசு.

§ பதிற்றுப்பத்து-ஐந்தாம்பத்து—சு, ௧௧—௧௩.

தோட்ட—தொகுதியையுடைய; இதனை, *"கடிதோட்ட களவகத்தே" என்றதன் விசேடவுரையான் அறிக.

மாந்தை—சேரநாட்டின்கண்உள்ளதோர் நகர்; இதனை, §"இலங்குநீர்ப் பரப்பின் மாந்தையோர் பொருந" என்றதனான் அறிக.

'குழை விளங்கு நுதல்'—குழையும நுதலால் விளங்கும் என்றவாறு; குழையால் விளங்கும் நுதல் எனினும் அமையும்.

கிழவன்—தமர் வரைவுநேர்ந்தமையால் உரிமையையுடையவன்.

மெய்ப்பாடு—புலன்பற்றிய உவகை. பயன்—வரைவுமலிவு தோழிக்கு உரைத்தல்.

## மருதம்.

[இது, பிரிவிடை மெலிந்த கிழத்தி தோழிக்குச் சொல்லியது.]

எ—து.—தலைவனது பிரிவைப் பொறாது இளைத்த தலைவி, 'தோழி! எமது கண்கள் வெட்கமடைந்தில; மழை சொரிந்ததனாற் குளிர்ச்சிவருதலையுடைய வாடையும் நம்மைப் பிரிந்தார்க்கு அழல்வதாயிற்று?' என, அவனது அன்பின்மை தோன்றக் கூறுநிற்றல்.

௲ [கிழார்க்கீரனெயிற்றியார் பாடியது.]

௩௫. நாணில மன்றவெங் கண்ணே நாணேர்பு
சினைப்பசும் பாம்பின் சூன்முதிர்ப் பன்ன
கனைத்த கரும்பின் கூம்புபொதி யவிழ
நுண்ணுறை யழிதுளி தலைஇய
தண்வரல் வாடையுநம் பிரிந் திசினோர்க் கழலே.

(இ-ள்.):—வெட்கமடைந்தில, உண்மையாக எமது கண்கள்; (தோழி! முதிரும்) நாளை நேர்ந்து (அதனால்,) சினையிடத்து உறையும் பசிய பாம்பினது சூன்முதிர்ப்பைப்போலத் திரண்ட கரும்பினது (தலைக்) குவிவு கூட்டமாக விரியும்படி, (வானம்) நுண்ணிய நீரின் (உலகின் வறுமையை) அழிக்கும் (இயல்புள்ள) துளிகளைச் சொரிந்ததனால், குளிர்ச்சிவருதலையுடைய முன்பனிக்காலத்து வாடையும் (நமக்கேபோல) நம்மைப் பிரிந்தார்க்கு அழலைப்போன்றதாயிற்று? (இன்று.) (எ—று.)

அன்பில்லாத பிரிந்தார்தம் வருகையை நோக்கலின், 'நாணில...... கண்ணே' என்றாள்; 'கண் நாணில' என, உறுப்பினை உணர்ந்தனபோலக் கூறினள்; என்னை? ‡"உணர்ந்தபோல வுறுப்பினைக் கிழவி, புணர்ந்த வகையாற் புணர்க்கவும் பெறுமே" என்றாராகலின்.

*திருக்கோவையார்.—அ. ‡தொல்-பொருள்-பொருளியல்.—அ.
§பதிற்றுப்பத்து-ஒன்பதாம்பத்து—௧0, ௨அ.

சினைப் பசும் பாம்பு—சினையிடத்து உறையும் இயல்பினதாய பச்சைப்பாம்பு; அதன் சூன்முதிர்ப்பு, ஈண்டு கரும்பின் திரண்ட தலைக்குவிவிற்கு உவமை; *"சொல்லருஞ் சூற்பசும் பாம்பின் றோற்றம்போல்" எனச் சிந்தாமணியில் நெற்பயிரின் சூன்முதிர்ப்பிற்கு இப்பசும்பாம்பு உவமை கூறப்பட்டிருக்கின்றது. தலைஇய—சொரிந்த; ஈண்டு எதுப்பொருட்டாய்ச் சொரிந்ததால் என்று பொருள்பயந்தது; இஃது இப்பொருட்டாதலை, †"தலைப்பெய றலைஇய தண்ணறுங் கானத்து" என்பழிப்புக்காண்க. வாடை—வடகாற்று; அதன் உம்மை-சிறப்பு; அது ஈண்டு ஆகுபெயராய், அக்காற்று வீசும் (முன்பனிக்) காலத்தைக் குறித்தது; வாடைக்காற்று முன்பனிப்பருவத்து வீசுவதாதலை ‡"காதலர்ப் பிரிந்தோர் கையற நலியுந் தண்பனி வடந்தை யச்சிரம்" என்றதனான் அறிக.

மெய்ப்பாடு வருத்தம்பற்றிய இளிவரல். பயன்—ஆற்றாமையுணர்த்தல்

## குறிஞ்சி.

[இது, வரைவிடைவைத்துப் பிரிய, ஆற்றாளெனக் கவன்று வேறுபட்ட தோழியைத் தலைமகள் ஆற்றுவித்தது.]

எ-து,—வரைவை இடையே வைத்துப் பொருள்வயின் தலைவன் பிரிந்தவிடத்துப் பிரிவைப் பொறாளென்று வருந்தி வேறுபாடடைந்த தோழியை நோக்கித் தலைமகள், 'நாடன், 'நீ என்னெஞ்சு களனாக உறைதலின் நான் நின்னினும் வேறானவனல்லேன்' என்று மணந்தவன்று கூறிய வஞ்சினம், நின்னிடத்து நோய்தருவதோ? என, தலைமகன் தவாறனென்பது பயப்பக்கூறித் தோழியை ஆற்றுவியாநிற்றல்.

[பாணர் பாடியது.]

௩௬. துறுக லயலது மாணை மாக்கொடி
துஞ்சுகளி றிவருங் குன்ற நாட
னெஞ்சுகள னாக நீயலேன் யானென
நற்றோண் மணந்த ஞான்றை மற்றவன்
றவா வஞ்சின முரைத்தது
நோயோ தோழி நின்வயி னானே.

* சிந்தாமணி—நாமகள்—௨௪.

† திருமுருகாற்றுப்படை—௧.

‡ ஐங்குறுநூறு-குறிஞ்சி-அம்மவாழிப்பத்து—௨.

(இ-ள்):—நெருங்கிய மலையின் பக்கத்துப் (படர்ந்ததான) மாணைக் கொடி, தங்கிய யானையிடத்துப் படர்வதைப்போலும் குன்றத்தையுடைய நாடன், 'எனது நெஞ்சம் இடமாக நீ (தங்குதலின்) 'நின்னினும் வேறான வன்) அல்லேன் யான்' என்பதாக எனது நல்ல தோளை மணந்தவன்று கெடாத சூளை உரைத்தது, நோய்தருவதாகுமோ தோழி! நின்றிறத்து?— (எ—று.)

மாணை—ஓர்வகைக் கொடி. துஞ்சுதல்—தங்குதல். இவரும்—படரும்; ஈண்டு, படர்வதைப்போலும் என்று பொருள் பயந்தது; இவை, இப்பொருளனவாதலை, * "வலிதுஞ்சு தடக்கை யவனுடை நாடே" § "பீரை நாறிய சுரையிவர்மருங்கின்" என்ற இவற்றான் உணர்க. துஞ்சு களிறு—உறங்குங் களிறுமாம். 'நினையலன்' என்ற பாடத்திற்கு, 'நின்னையன்றி வேறொன்றையும் நினையேன்' என்க. 'தாவா வஞ்சினம்' எனவும் பாடம்; பொருளொன்றே. 'நற்றோள்' என்றாள், அவன் மணக்கும் பெரும்பேற்றைப் பெற்றமையின். மற்று—அசை. தாவா—விகாரம். நோயோ—நோய்தருவதோ; ஓ—வினா.

இறைச்சி:—மலையின்பக்கத்துப் படர்ந்த மாணைக்கொடி; தங்கிய யானையினிடத்துப் படர்வதுபோலுங் குன்றஞ்சூழ்ந்த நாடன் என்றதனானே, வரைதற்கு வேண்டிய பொருள் கொணர்ந்து வரைந்து கொண்டு சேர்ந்திருக்கப் பிரிந்த பிரிவும் மறந்து கைவிட்டுப் பிரிந்தாற்போன்று நினக்குத் துயர்தந்தது; உண்மையை அறியமுடியாமையால் என்பதாம்.

மெய்ப்பாடு—முன்னையதே. பயன்—தோழியை ஆற்றுவித்தல்.

## பாலை.

[இது, தோழி 'கடிதுவருவர்' என்று ஆற்றுவித்தது.]

எ—து,—தலைமகன் பிரிந்தவிடத்துத் தலைமகள் ஆற்றாளாக, தோழி, 'காதலர் விருப்பம் மிகுதியாக உடையவர்; ஆதலின்; அருளவும் அருளுவர்; மேலும், அவர் சென்ற வழியிடத்து, பிடியின் பசியைப் போக்கக் களிறு யாமரத்தையும் பிளக்கும்' என்று, 'அதனையும் காண்பர்; ஆதலின் விரைவில் மீள்வர்' என்பது பயப்பக் கூறி ஆற்றுவியாநிற்றல்.

[பாலைபாடிய பெருங்கடுங்கோ பாடியது.]

௩௭. நசைபெரி துடையர் நல்கலு நல்குவர்
பிடிபசி களைஇய பெருங்கை வேழம்
மென்சினை யாஅம் பிளக்கும்
அன்பின் றோழியவர் சென்ற வாறே.

* புறநானூறு-௩௪—௧௪. § ஷை—௧௧௬—௬.

(இ-ள்):—(தலைவர் நந்திறத்து) முன்பே அன்பு மிகுதியாக உடையார்; ஆதலின், (நந்திறத்து) அருளவும் அருளுவர்; (மேலும்,) பெண்யானையின் பசியை நீக்குதற்பொருட்டுப் பெரிய கையையுடைய ஆண்யானை மெல்லிய கிளைகளையுடைய யாமரத்தையும் பிளக்கும், (அதனிடத்து வைத்த) அன்பினால், தோழி! அவர் சென்ற வழியிடத்து; (அதனையுங் காண்பார் நீட்டியார், மீள்வர்.) (எ-று.)

நல்கல்—கொடுத்தல்; அது காரணமாகிய அருளின்மேல் நின்றது. கைவேழம்—யானைக்கு வெளிப்படை. 'யா' ஒரு மரமென்பதையும், அது வேற்றுமைக்கண் வலியொடு புணரும்பொழுது மெல்லெழுத்து மிகும் இயல்பினது என்பதையும், * "யாமரக் கிளவியும் பிடாவுந் தளாவும், மாமுப் பெயரு மெல்லெழுத்து மிகுமே" என்றதனான் அறிக. 'சினை யாரும் பிளக்கும்' என்ற பாடத்திற்கு—கிளைகளையுடைய ஆத்தியையும் பிளக்கும் என்க. 'சென்றவாறே'—என்பதில் ஏழாவது இறுதியில் தொக்கது.

இறைச்சி:—பிடியின் பசியை ஒழித்தற்குக் களிறு யாமரத்தைப் பிளக்கும் அவர் சென்ற ஆற்றிடத்தில் என்றதனானே, அன்புடைய அவர் அதனையுங் காண்பார், நீட்டியார் மீள்வர் என்பதாம். அன்புறுதகுந சுட்டினாள், வருந்திய தலைவியை ஆற்றுவித்தற்கு. (11)

மெய்ப்பாடு—அச்சத்தைச்சார்ந்த பெருமிதம். பயன். ஆற்றுவித்தல்.

## குறிஞ்சி.

[இது, வரைவுநீட்டித்தவழி, தலைமகள் தனது ஆற்றாமை தோன்றத் தோழிக்குக் கூறியது.]

எ-து,—தலைமகன் விரைவில் வரைதலைக் கைக்கொள்ளாது நீட்டித்தவிடத்து, தலைமகள், "தோழி! நாடன்கேண்மை என்றும் நல்லதாயிருந்தது; அது கழிந்தது; கண்ணின் நீரோடு இங்குத் தனித்துத் தங்கும்படி நம்மையாக் கருதாது செல்லுதல் வல்லார்க்கு' என்று, அவர்பால் வரையுமாறு எவர் சென்று கூறுவார் என்பதுபயப்ப, தனது ஆற்றாமையை அறிந்து கொள்ளுமாறு கூறுகிற்றல்.

* தொல்-எழுத்து-உயிர்மயங்கியல்—௨௭.

[கபிலர் பாடியது.]

௩௮. கான மஞ்ஞை யறையீன் முட்டை
வெயிலாடு முசுவின் குருளை யுருட்டுங்
குன்ற நாடன் கேண்மை யென்று
நன்றுமன் வாழி தோழி யுண்கண்
ணீரொ டொராங்குத் தணப்ப
வுள்ளா தகறல் வல்லு வோர்க்கே.

(இ-ள்):—கானத்தின்கண்ணுள்ள மயிலினது, அறையினிடத்தில் இல்லாத முட்டையை வெய்யிலில் (நிற்கமுடியாது) ஓடும் குரங்கின்குட்டி உருட்டும் குன்ற நாடன் நட்பு என்றும் பெரியதாயிருந்தது; அது கழிந்தது; தோழி! மையுண்ட கண்ணிடத்து நீரோடு கூடி, ஓரிடத்து நாம் பிரிந்திருப்ப (நந்துயரத்தை) நினையாது, அகன்றிருத்தலை வல்லார்க்கு (எவர் சென்று நம் துயர்கூறி வரையுமாறு செய்வர்?) (எ-று.)

மயில் கூடு இழைத்துக் கொள்ளாது, நெருக்கமான புதர்களிலும் வேலிக்கால்களிலும் முட்டையிடுதலும், கூடில்லாமையின் மரக்கோட்டில் இரவில் உறங்குதலும் இயல்பு; ஆதலின், 'அறை இல் முட்டை' எனப்பட்டது. இனி, 'அறை இல் முட்டை,' 'அறையில் முட்டை' எனப் பிரித்து, பாறையை இல்லாகவுடைய முட்டை எனவும், பாறையிடத்துள்ள முட்டை எனவும் உரை உரைத்தலுமாம்; அறை—பாறை. வெயில்—'வெய்யில்' என்பதன் விகாரம். 'வெயிலோடும்' என்ற பாடத்திற்கு வெய்யிலில் நிற்க முடியாது ஓடும் என்க. முசு—குரங்கினுள் ஒருவகை. குருளை—குட்டி; ஈண்டு, * "நாயே பன்றி புலிமுய னான்கு, மாயுங்காலைக் குருளை யென்ப" என்ற சூத்திரத்து 'ஆயுங்காலை' என்றதனால் முசுக்குட்டியிடத்து வந்தது. நன்று—பெரியது; இதனை, † "நன்று பெரிதாகும்" என்றதனான் அறிக. மன்—கழிவின்கண் வந்தது. வாழி—அசைநிலை. 'வல்லுவோர்க்கே' என்பதில், உகரம்-சாரியை; ஈற்றுமிசை ஆ ஓவாயிற்று. 'கான மஞ்ஞை ..........குன்ற நாடன்' என்ற கருத்து, ‡ "வந்தாய் பவரையில் லாமயின் முட்டை யிளையமந்தி, பந்தா டிரும்பொழிற் பல்வரை நாடன்" என்றவிடத்தும் ஒருவாறு அமைந்திருத்தல் காண்க.

உள்ளுறை—மனையகத்து வைக்கப்படாமையின் மறைவிடத்திராத மயிலின் முட்டையை ஈனும் பொழுது உளதாம் துயரத்தை அறியாத

* தொல்-பொருள்-மரபு—௮.
† தொல்-சொல்-உரி—௪௫. ‡ திருக்கோவையார்—௨௭௩.

மூசுக்குருளை ஈன்ற மயிலின் வருத்தத்தையும் எடுத்த முட்டையின் மென், மையையும் எண்ணாது உருட்டுகின்றாற்போல, காதலர் கருத்தில் வைக்கப் படாத எனது காமத்தை நீ இங்ஙனம் உற்றுணராமையான், என் வருத்தத் தையும் காமத்தின் மென்மையையும் கருதாது இவ்வாறு உரைக்கின்றனை என்பதாம்; இனி, வந்தாய்பவர் தோழியாகவும், மூசுக்குருளை தலைவனா கவும், உருட்டுதல் தலைமகளது வருத்தம்பாராது தான் வேண்டியவா றொழுகும் அவனது ஒழுக்கமாகவும் உரைப்பினும் அமையும்.

மெய்ப்பாடு—அசைவுபற்றிய அழுகை. பயன்—ஆற்றாமையுணர்த்தல்

## பாலை.

[இது, பிரிவிடை ஆற்றல்வேண்டுமென்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.]

எ-து,—தலைவன் பிரிந்தவிடத்துத் தலைமகள், 'முலையிடைத் துயின் முனைந்து போயினோர் சென்றவழி, காற்றுத்தாக்க உழிஞ்சில்வற்றலார்க்கும் மலைகளையுடைய அரிய சுரம் என்பர்' என்றுகூறி, 'யான் எங்ஙனம் ஆற்றியுளனாவேன்? யான் ஆற்றுகின்றிலேன்' என்று, 'நீ ஆற்றாயாகின்ற தென் ?' என்று தோழிக்குக் கூறுநிற்றல்.

[ஒளவையார் பாடியது.]

௩௯. வெந்திறற் கடுவளி பொங்கர்ப் போந்தென
நெற்றுவிளை யுழிஞ்சில் வற்ற லார்க்கு
மலையுடை யருஞ்சுர மென்பநம்
முலையிடை முனிநர் சென்ற வாறே.

(இ-ள்):—மிக்க வலியுள்ள கடுங்காற்று மரக்கோட்டிடத்துச் சென்று அடித்ததனால், முதிர்ந்து விளைந்த வாகையினது நீர்வற்றிய நெற்றுக்கள் ஒலித்தலைச்செய்யும் மலைகளையுடைய அரியசுரம் என்பர்; நம் முலையிடத்து விருப்பமில்லாதார் சென்ற வழியை (எ-று.)

'வெந்தெறல்' என்ற பாடத்திற்கு-கொடிய அழிக்கும் இயல்புள்ள என்க. பொங்கர்—மரக்கோடு; உழிஞ்சில்—வாகை; இவை, இப்பொரு ளனவாதலை, * "உயர்ந்த பொங்க ருயர்மர மேறி," § "பொரியரை யுழிஞ் சிலும் புன்முளி மூங்கிலும்" என்பவற்றால் உணர்க. முனிநர்—வெறுப் புடையார்; எனவே, விருப்பமிலார் என்பதாம்; 'வெருள்பவர்' என்றுமாம். ஆறு—என்பதில் இரண்டாவது இறுதியில் தொக்கது.

மெய்ப்பாடு—அணங்குப்பற்றிய அச்சம். பயன்—ஆற்றாமை நீங்கல்.

* கலித்தொகை-மருதம்—௨௦. § சிலப்பதிகாரம்-காடுகாண்காதை—௭௯

## குறிஞ்சி.

[இது, இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த பின்னர்ப் பிரிவரெனக் கருதி அஞ்சிய தலைமகளது குறிப்புவேறுபாடுகண்டு தலைமகன் கூறுகின்றது.]

எ-து,—இயற்கைப்புணர்ச்சி புணர்ந்தபிறகு, தலைமகன், 'எம்யாயும் நும்யாயும் எத்தொடர்பினர்? எந்தையும் நுந்தையும் எம்முறைச் சுற்றத்தினர்? யானும் நீயும் எவ்விடத்து ஒருவரை ஒருவர் அறிவோம்? அன்புடைய நம் நெஞ்சம் தம்மில் தாம் கலந்திட்டன' என்று, 'ஏதுவின்றிப் பான்மை கூட்ட எய்திய கூட்டம் என்றும் பிரிவுடையதாகாது' என்பது பயப்ப, தலைமகளச்சம் நீங்குமாறு கூறுநிற்றல்.

[செம்புலப்பெய்நீரார் பாடியது.]

௪0.| யாயும் ஞாயும் யாரா கியரோ
எந்தையு நுந்தையு மெம்முறைக் கேளிர்
யானு நீயு மெவ்வழி யறிதுஞ்
செம்புலப் பெய்நீர் போல
அன்புடை நெஞ்சந் தாங்கலந் தனவே.

(இ-ள்):—(என்) யாயும் (நின்) யாயும் எவ்விதத்தொடர்புடையார்? என் தந்தையும் நின் தந்தையும் எம்முறையினையுடைய சுற்றத்தார்? யானும் நீயும் (முன்னர்) எவ்விடத்து (ஒருவரையொருவர்) அறிவோம்? செய்ய புலத்திற் பெய்த நீர்போல, அன்புடைய (நம்) நெஞ்சம் (எவருதவியும் இன்றித்) தாமாகவே கலந்திட்டன. (எ-று.)

எனவே, பான்மை கூட்ட ஏதுவின்றி இயற்கையின் இங்ஙன் நிகழ்ந்த கூட்டம் என்றும் பிரிவினை யுடையதாகாது; ஆகலின், பிரிவேன் என்று கவலற்க என்றானாம். நீர், பெய்த நிலத்தின் தன்மையைத் தான் எய்தும் என்பதை, * "நிலத்தி யல்பா னீர்திரிந் தற்றாகும்" என்றதனானும் அறிக 'செம்புலப் பெய்நீர்போல' என்று எடுத்தாண்ட உவமைநயம்பற்றி இதன் ஆசிரியர், 'செம்புலப்பெய்நீரார்' எனப் பாராட்டப் பெற்றார்போலும்: 'செம்புலப் பெயனீர்போல' என்றும், அதற்கேற்ப ஆசிரியர்பெயர், 'செம்புலப்பெயனீரார்' என்றும் பாடபேதம் உண்டு; பொருள்வேறுபாடின்று.

மெய்ப்பாடு—உவகை. பயன்—அச்சமகற்றல்.

---

* திருக்குறள்-சிற்றினஞ்சேராமை—௨.

## பாலை.

[இது, பிரிவிடை வேறுபாடுகண்டு கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.]

எ-து,—தலைமகன் வரைவிடைவைத்துப் பிரிந்தவிடத்துத் தலைமகளது நிலைமை கெட்டமையைக் கண்டு வருந்திய தோழிக்குக் கிழத்தி 'காதலர் பக்கத்தாராகப் பெரிதும் மகிழ்ந்து மணவிழவினைக் கொள்ளும் இவ்வூரில் விரும்பித் தங்குவேன்; என்றாலும், அருஞ்சுரத்துப் பொருந்திய முன்றிலிடத்து அவர் அகன்றஞான்று அலப்பேன' என, தானாற்றுமாறு புலப்படக் கூறுநிற்றல்.

[அணிலாடு முன்றிலார் பாடியது.]

௪௧. காதல ருழைய ராகப் பெரிதுவந்து
சாறுகொ ளூரிற் புகல்வேன் மன்ற
வத்த நண்ணிய வங்குடிச் சீறூர்
மக்கள் போகிய வணிலாடு முன்றிற்
புலம்பில் போலப் புல்லென்
றலப்பேன் றோழியவ ரகன்ற ஞான்றே.

(இ-ள்:—காதலர் பக்கத்தாராகப் பெரிதும் மகிழ்ந்து மணவிழவினைக் கொள்ளும் (இவ்) ஊரிடத்து, (அவர் வரும்வரையும் தங்கியிருக்க) விருப்பங்கொள்வேன், உண்மையாக; அரிய சுரத்திடத்துப் பொருந்திய அழகிய குடியினையுடைய சிறிய ஊரிடத்துள்ள மக்கள் போய்விட்டதனால் அணில்கள் ஆடுதலைச்செய்யும் முன்றிலிடத்து, அவர் அகன்றவன்று. தோழி! புலம்புதலையுடைய இல்லைப்போல அழகுகெட்டு வருந்துவேன் (எ-று.)

முன்றிலிடத்து அவர் அகன்றஞான்று அலப்பேன் என்று கூட்டுக. சாறு—விழா; ஈண்டு மணவிழவினைக் குறித்தது. அத்தம்—அரிய சுரம் புல்லெனல்—அழகுகெடல்; இவை இப்பொருளனவாதலை, *"சாறு தலைக் கொண்டென", †"அத்த நண்ணிய வங்குடிச் சீறூர்", §"புனிற்றுநாய் குரைக்கும் புல்லென வட்டில்" என்றவிடங்களினுங் காண்க; அருஞ்சுரம்—மிகவும் செல்லுதற்கரிய நெறி. போகிய—போய்விட்டதால் எனக் காரணப்பொருள்பட்டது அணில்—மக்களில்லாதவிடத்து ஆடும்

புறநானூறு-௮௨,—௧.
அகநானூறு-களிற்றியானைநிரை—௧-௧௦.
சிறுபாணாற்றுப்படை-௧௩௨.

இயல்பினது. 'அணிலாடு முன்றில்' என்ற நயத்தொடரை எடுத்தாண்டமைபற்றிப்போலும், இதனாசிரியர், அணிலாடுமுன்றிலார் எனப் பெயர்பெறுவாராயினர்.

மெய்ப்பாடு—அச்சத்தைச் சார்ந்த பெருமிதம். பயன்—ஆற்றுமாறறிவித்தல்.

## குறிஞ்சி.

[இது, இரவுக்குறிவேண்டிய கிழவற்குத் தோழி நேர்ந்த வாய்பாட்டான் மறுத்தது.]

எ—து —தோழியிற் கூட்டங் கூடியபின் வரைந்துகொள்ள முயலாது களவின் நுகர்தலையே விழைந்து இரவுக்குறிக்காம் இடத்தைத் தெரிவிக்குமாறு வேண்டிய தலைமகனுக்குத் தோழி, 'நாட! வழியல்லா வழியாற் கிடைக்குங் காமம் எங்களுக்கு விடத்தக்கதாயினும், நின்னிடத் துண்டான தொடர்புங் குறைவதாகுமோ?' என, உடன்பட்ட வாய்பாடுகளான் மறுத்து, வரைவுகடாவுங் கருத்தினளாய்க் கூறுகிற்றல்.

[கபிலர் பாடியது.]

சஉ. காமமொழிவ தாயினும் யாமத்துக்
கருவி மாமழை வீழ்ந்தென வருவி
விடரகத் தியம்பு நாடவெந்
தொடர்புந் தேயுமோ நின்வயி னானே.

(இ—ள்):—(அறத்தின்வழித்தன்றி நிகழும்) வேட்கை விடத்தகுந்ததாயிருந்தாலும், இரவில் உலகம் விளைதற்குக் கருவியாகிய பெரிய மழை பொழிந்ததனால் (உண்டான) அருவி (மலை) முழையிடத்துப் பாய்ந்து ஒலிக்கும் நாட! எமது தொடர்ச்சியுங் குறையுமோ நின்னிடத்து? (எ—று.)

ஒழிவது—ஒழிக்கத்தகுந்தது. வீழ்ந்தென—காரணப்பொருளது; அது, மழையின் மிகுதியைக்காட்டியது. 'எம் தொடர்பும்' என்றது, தோழியையுங் கூட்டி; உம்மை—சிறப்பு. தேயுமோ—ஓ-எதிர்மறை. யாம் அலரை அஞ்சுவோம் என்பாள், 'காமமொழிவது' என்றும், நீ அலரை அஞ்சாய் என்பாள், 'அருவி விடரகத்தியம்பு நாட' என்றுங்கூறினாள்; இரவின் வரும் ஏதமெண்ணாது வருவாய் என்பாள், 'அருவி விடரகத்தியம்பு நாட' என்றாளுமாம்.

மெய்ப்பாடு—அச்சம். பயன்—வரைவுகடாதல்

## பாலை.

[இது, பிரிவிடைமெலிந்த கிழத்தி சொல்லியது.]

எ-து,—தலைமகன் பிரிந்தவிடத்து மெலிவடைந்த கிழத்தி, 'செல்வாரல்லர் என்று யான் இகழ்ந்தனன்; தெரியின், விடுவாளல்லள் என்று அவர் இகழ்ந்தனர்; அவ்விடத்து இரண்டு பெரிய இகழ்ச்சியாகிய ஆண்மையும் செய்த பூசல், இவ்வூர் நல்லாரைப்பற்றி அக்காலத்தே நல்ல எனது நெஞ்சையும் வருந்தச்செய்யும்' என்று ஆற்றாமை புலப்படக் கூறுகிற்றல்.

[ஔவையார் பாடியது.]

சரு. செல்வா ரல்லரென் றியானிகழ்ந் தனனே
விடுவா ளல்லளென் றவரிகழ்ந் தனரே
யாயிடை யிருபே ராண்மை செய்த
பூச னல்லார்க் கதுவியாங்கெ
னல்ல னெஞ்ச மலமலக் குறுமே.

(இ-ள்):—'தலைவர் செல்வாரல்லர்' என்பதாக யான் இகழ்ந்தனன்; '(பிரிவது தெரியின், நம்மை) விடுபவளல்லள்' என்பதாக அவர் இகழ்ந்தனர்; அங்ஙனம் இருவரும் ஒருவரையொருவர் இகழ்ந்திருந்தவிடத்து, அவ்விரண்டு பெரிய (இகழ்வாகிய) வன்மையும் செய்த (பிரிவிடத்து உளதாகிய) பூசல், இவ்வூர் நல்லாரைப்பற்றி, அக்காலத்தே எனது நன்பத்தையுடைய நெஞ்சத்தையும் வருந்தச்செய்யும்—(எ-று.)

'வீவாளல்லள்' என்ற பாடத்திற்கு 'உயிர்வாழ்வாள்' என்க. 'ஆண்மையும்' என்றதன் உம்மை விகாரத்தால் தொக்கது. பூசல்—ஆரவாரம்; ஈண்டு, பிரிவிடத்தெழுந்த அலரைக் குறித்தது. 'பூசலுண்டாவதற்கான இகழ்ச்சியை இருவரும் கொண்டோம்' என நயம்படக்கூறினள். வல்லியல்புள்ள அவர் மெல்லியல்புள்ள என்னிடத்து இகழ்ச்சி கொண்டமை யான், யானே வருந்துகின்றேன் என்றாளாம். நல்லார்—மகளிர்; துயர் கூருந் தனக்கு மேலுந் துயர்கூரும்படி அலர்கூறுகின்ற அவ்வூராரைப் பிறகுறிப்பாய்க் கூறியது உமாம். 'நல்லார்க்கதுவி' என்றது, பிரிந்த அப்பொழுதே அவர் அலர்கூற உணர்ந்துகொண்டமையைக் கருதி. கதுவி—பற்றி. ஆங்கு—அக்காலத்தே. 'நல்லென்னெஞ்சம்' என்ற பாடத்திற்கு, (அன்பிலானமையை அறிந்து வைத்தும் அவர்தொடர்பை அகற்ற மாட்டாத) நல்ல எனது நெஞ்சம் என்க 'நெஞ்சம்' என்றதில் இரண்டனுருபும் இறந்ததுதழீஇய எச்சவும்மையும் விகாரத்தால் தொக்கன.

மெய்ப்பாடு—இளிவரல். பயன்—ஆற்றாமையறிவித்தல்.

## பாலை

[இது, இடைச்சுரத்துச் செவிலித்தாய் கையற்றுச் சொல்லியது.]

எ-து,—தலைமகன் தன்மகளை உடன்கொண்டு சென்றமையறிந்த செவிலி தேடிச்சென்று, சுரத்திடையில், 'கால்கள்தாம் பரிந்து செல்லுதலில் தவறின; கண்கள்தாம் நோக்கி நோக்கி ஒளியிழந்திட்டன; என்னைப் போல வருந்தாதார் உலகத்துப் பலர்' எனச் செயலற்றுக் கூறுநிற்றல்.

[வெள்ளிவீதியார் பாடியது.]

சச. காலே பரிதப் பினவென் கண்ணே
நோக்கி நோக்கி வாளிழந் தனவே
யகலிரு விசும்பின் மீனினும்
பலரே மன்றவிவ் வுலகத்துப் பிறரே.

(இ-ள்)—கால்கள்தாம், பரிந்து செல்லுதலைத் தப்பின; கண்கள்தாம் நோக்கி நோக்கி ஒளியினை இழந்தன; அகன்ற கரிய விசும்பிடத்து மீன்களினும் பலராயிருந்தார், இவ்வுலகத்துக் (காதன்மகளை எதின்மகன் கண்விட்டுக் கலற்சியெய்தாத) பிறர்.—(எ-று): எனவே, இனி என்செய்வேன் என்றாளாம்.

வழியின்கொடுமையாற் சென்று தேடிப்பிடித்திடாமையின், 'காலே பரிதப்பின' என்றும், சேணுற்றிடத்து ஊன்றியூன்றிப் பார்த்து ஒளிமழுங்கினமையின், 'கண்ணே நோக்கி நோக்கி வாளிழந்தனவே' என்றுங் கூறினாள். பரி—முதனிலைத்தொழிற்பெயர். நோக்குதல்—ஊன்றிப்பார்த்தல். விசும்பின்மீன்—மிகுதியையுணர்த்தக் கூறப்பட்டது; மீன்—மின்னுவது என்னுங் காரணம்பற்றியது. வருத்தம் அடைந்தார், 'எவர் எம்போன்று வருந்தினார்' என்பர்; அங்ஙனமே, செவிலியும், 'அகலிரு……பிறரே' என்றாள்.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—ஆற்றாமைநீங்குதல்.

## மருதம்.

[இது, தலைமகற்குப் பாங்காயினார் வாயில்வேண்டியவழித் தோழி வாயில்நேர்ந்தது.]

எ-து,—பரத்தையர் மாட்டுப் புதுப்புனலாடப் பிரிந்த தலைமகன், பாங்காயினரால் வாயில்வேண்டியவிடத்துத் தோழி, 'காலையிலெழுந்து தேரிற் பரத்தையரை யேற்றிக் கழுவுதற்குச் சென்ற ஊரன், 'பெரிதும்

விளக்கமுடையவன் மிகவும்' என்று வருந்தும், சிறுர்களையுடைய தாயே! இந்நற்குடிப்பிறப்பு வெகுளத்தக்கதாகும்' என்று தலைமகளைநோக்கி அவன் உடன்படுமொழு கூறி வாயில்நேர்கிற்றல்.

[ஆலங்குடிவங்கனூர் பாடியது]

௪௫. காலை யெழுந்து கடுந்தேர் பண்ணி
வாலிழை மகளிர்க் கழீஇய சென்ற
மல்ல லூர னெல்லினன் பெரிதென
மறுவருஞ் சிறுவர் தாயே
தெறுவ தம்மவித் திணைப்பிறத் தல்லே.

(இ-ள்):—காலைக்காலத்தே எழுந்து விசையுள்ள தேரை ஏற்ப அமைத்துச் சிறந்த இழைகளை அணிந்த (பரத்தையராகிய) மகளிரைப் (புதுப்புனலிடத்துக்) கழுவுதற்குச் சென்ற வளப்பமுள்ள ஊரினையுடையான், 'விளக்கமுடையவன் பெரிதும்' என்று வருந்தும் சிறுர்கள்தாயே வெகுளத்தக்கதாகும், இந்நற்குடியிற் பிறத்தல்—(எ-று.)

பண்ணுதல்—ஏற்பவமைத்தல்; இஃதிப்பொருட்டாதலை, * "புலவர், பூநுதல் யானையொடு புனைதேர் பண்ணவும்" என்புழியுங்காண்க 'வாளிழை மகளிர்' எனவும், 'தழீஇய சென்ற', 'தரீஇய சென்ற' எனவும் பாட பேதங்கள்; முறையே, சிறந்த, இழைகளையுடைய 'மகளிர்,' தழுவுதற்குச் சென்ற,' கொணர்தற்குச் சென்ற' என்பன பொருள்களாம், 'மல்லல் ஊரன் எல்லினன் பெரிது' என்றது, பிறகுறிப்பு. மேனி மினுக்குதலை கொண்டார் பரத்தையர் என்பாள், 'வாலிழை மகளிர்' என்றும், புலத்தற் குரியையல்லை என்பாள், 'சிறுவர்........பிறத்தல்லே' என்றுங் கூறினாள்.

மெய்ப்பாடு—இளிவரலைச்சார்ந்த பெருமிதம். பயன்—வாயினேர்தல்.

## மருதம்.

[இது, பிரிவிடை ஆற்றாளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி ஆற்றுவலென்பதுபடச் சொல்லியது.]

எ-து,—தலைமகன் பிரிந்தவிடத்துத் தலைமகள் ஆற்றாளாவள் என்று வருந்திய தோழிக்குக் கிழத்தி, 'தோழி! மனையுறை குருவிகள், இல்லின் இறப்பிலுள்ள தமது பள்ளியில் பிள்ளையொடு வதியும் மாலையும், புலம்பும் அவர்சென்ற நாட்டில் இன்று கொல்?' என்று கூறி, 'அவர் சென்ற நாட்டிலும் இவை உளவாகலின் கண்டு மீள்வர்' என, ஆற்றுவேன் என்பது புலப்படக் கூறுகிற்றல்.

---

*புறநானூறு-கஉ—க, உ.

[மாமிலாடன் பாடியது]

சசு. ஆம்பற் பூவின் சாம்ப லன்ன
கூம்பிய சிறகர் மனையுறை குரீஇ
முன்றி லுணங்கன் மாந்தி மன்றத்
தெருவி னுண்டாது குடைவன வாடி
யில்லிறைப் பள்ளித்தம் பிள்ளையொடு வதியும்
புன்கண் மாலையும் புலம்பு
மின்றுகொ றோழியவர் சென்ற நாட்டே.

(இ-ள்):—ஆம்பற்பூவினது வாடலை (பழம்பூவை) யொத்த குவிந்த சிறகினையுடையதாய் மனையின்கண் ணுறையுங்குருவிகள், முன்றிலிடத்து உலர்த்திய நென் முதலியவற்றை உண்டு மன்றத்தெருவிடத்து நுண்ணிய பூந்தாதைக்குடைந்து திளைத்து, இல்லின் இறப்பிடத்துள்ள தமது சேர்க்கையிடத்துத் தமது பிள்ளையோடு தங்கும் துயர்தருமமாலையும் (அக்காலத்துத்தனித்தார்க்குளதாகும்) துயரமும் இன்றோ? தோழி! அவர் சென்ற நாட்டில்.—(எ-று)

சாம்பல்—பழம்பூ; இதனை *"அடலை யொடுங்கல் பழம் பூவினை சாம்பல்" என்றதனானறிக: ஈண்டு பூவின்சாம்பல்—பூவினதுவாடல் என்றது, பழம்பூ வாடியிருக்கும் இயல்பினதாதல்கருதி. உணங்கல்—ஆகுபெயர்; உலர்த்தப்பட்டவைகளுக்காயினமையின். இறை—(இல்லின்) இறப்பு, இதனை §"குறியிறைக்குரம்பை" என்றதனானுமுணர்க. மாலைக்காலத்துக்குருவிகள் தங்குஞ்சுகளோடு தம்சேக்கையிடத்துத் தங்குதல் இயல்பு. 'பிள்ளை'—பறவையின் குஞ்சுகளிடத்து வருதலை †"பார்ப்பும் பிள்ளையும் பறப்பவற்றிளமை" என்றதனானறிக. 'மாலையும்,' 'புலம்பும்' தனித்தனி 'இன்றுகொல்' என்பதனோடியையும்.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—ஆற்றுமாறறிவித்தல்.

## குறிஞ்சி.

[இது, இரவுக்குறி..., முன்னிலைப்புறமொழியாக நிலாவிற்குரைப்பாளாகத் தோழியுரைத்தது.]

எ-து,—தலைமகன் இரவுக்குறிக்கண் வந்து ஒழுகுங்காலத்து, அவன் எதிரில், 'காட்டிடத்துக் களவினை விரும்பி இரவில் வருவார்; நிலவே!

* பிங்கலந்தை-ஒருசொற்பல் பொருள்வகை—சகூஅ.
§ புறநானூறு-கஉக—க. † தொல்-பொருள்-மரபு—ச.

அவர் வருகைக்கு இடையூறாக எறித்தலின், நீ நல்லை அல்லை' என நிலாவிற்குரைப்பாளாய் இரவுக்குறி மறுத்து வரைவுகடாதல் புலப்படத் தோழி கூறிற்று.

[நெடுவெண்ணிலவினார் பாடியது.]

சஎ. கருங்கால் வேங்கை வீயுகு துறுகல்
இரும்புலிக் குருளையிற் றோன்றுங் காட்டிடை
யெல்லி வருநர் களவிற்கு
நல்லை யல்லை நெடுவெண் ணிலவே.

(இ-ள்):—கரிய காலையுடைய வேங்கைமரத்தினது மலர்கள் உதிரப் பெற்ற நெருங்கிய கற்கள், பெரிய புலியினது குட்டியைப்போன்று தோன்றுங் காட்டிடத்து இரவில் வருவார் களவிற்குக் (காதலர்); நெடிய வெள்ளிய நிலவே! (நீ அதற்கு இடையூறாக எறித்தலின்,) நல்லை ஆக மாட்டாய்.—(எ-று.)

'கருங்கால்............தோன்றும்' என்றகருத்தை, * "கருங்கா லினவேங்கை கான்றபூக் கன்மேல், இருங்கால் வயவேங்கை யேய்க்கும்," § "நறமனை வேங்கையின் பூப்பயில் பாறையை நாக நண்ணி, மறமனை வேங்கை யெனநனி யஞ்சும்", † "குறவ ரூன்றிய குரம்பை புதைய, வேங்கை தாய தேம்பாய் தோற்றம், புலிசெத்து" என்றவிடங்களிலுங் காண்க. புலிக்குருளை—புலிக்குட்டி. களவு—அவ்வொழுக்கத்தைக்குறித்தது. இரவில் களவிற்கு வருவார்; நிலாவே! எறியாதி என்பது, ஓர் நயம்பட நின்றது; நெடுவெண்ணிலவை வெறுத்தமைபோன்று தலைவனை வெறுத்தமை புலப்படுத்தி தனித்தார்க்கு இரவு நீண்டு தோன்றுமாதலின், 'நெடுவெண்ணிலவே' என்றாள். 'நெடுவெண்ணிலவே' என்ற இனியதொடரையாண்டமைபற்றி, இதனாசிரியர் 'நெடுவெண்ணிலவினார்' என்று பாராட்டிப் பெயரிடப் பெற்றார்போலும்.

இறைச்சி:—வேங்கைமலர் வீழ்ந்த கற்கள் புலியின்குருளைகளைப் போல அச்சந்தரும் என்றதனானே, வரைவுடன் படுவோராகிய எமதுதமர் வரைவுடன் படார்போல உனக்கச்சஞ்செய்கின்றனர் என்பதாம்; எனவே வேண்டின் வரைவுடன்படுவோர் என்றாளாம்.

மெய்ப்பாடு—அச்சம். பயன்—வரைவுகடாதல்.

* திணைமாலை நூற்றைம்பது. குறிஞ்சி—உசு.

§ திருக்கோவையார்—கக.

† அகநானூறு—களிற்றி—கஉ, க, கக.

## பாலை.

[இது, பகற்குறிக்கண், காணும்பொழுதினும் காணாப்பொழுது பெரிதாகலின், வேறுபட்டகிழத்தியது வேறுபாடுகண்டு, தோழி சொல்லியது.]

எ-து,—பகற்குறியிடத்துத் தலைமகனைக்காணும்பொழுதினும் காணாப்பொழுது பெரிதாகலின், வேறுபட்டகிழத்தியின் வேறுபாட்டைக்கண்ட தோழி, 'குராப்பாவைதான், தலைமகளை ஓரையாயம் 'காலைவருந்துங் கையாறோம்பு' என்று கூறக்கேட்டிருந்தும் 'வரைந்துகொள்' என்னும் ஒருசொல்லைச் சொல்லாதோ காதலர்க்கு?' என்று தலைமகளது ஆற்றாமை தோற்றக்கூறுநிற்றல்.

### [பூங்கணுத்திரையார் பாடியது.]

௪௮. தாதிற் செய்த தண்பனிப் பாவை
காலை வருந்துங் கையா றோம்பென
வோரை யாயங் கூறக் கேட்டு
மின்ன பண்பி னினைபெரி துழக்கு
நன்னுதற் பசலை நீங்க வன்ன
நசையாகு பண்பி னொருசொ
லிசையாது கொல்லோ காதலர் தமக்கே.

(இ-ள்):—தாதைக்கொண்டு செய்த மிகக்குளிர்ந்த (குராப்) பாவையானது, 'காலைக்காலத்து வருந்தும் செயலறுதலை (நெருங்காமற்) பாதுகாத்தலைச்செய்' என்று, விளையாட்டு மகளிர்கூட்டம் (நின்னைக்குறித்துக்) கூறக்கேட்டிருந்தும், (பகற்குறியிடத்துக் காணும் பொழுதினும் காணாப் பொழுது பெரிதென்று கருதி) இத்தகைய பண்பினால் வருந்துதலைப் பெரிதுங்கொண்டு வருந்தும் (நினது) நல்ல நுதலிடத்துப் பசலை நீங்கும்படி அத்தகைய விருப்பந்தருவதாகும் பண்பினால், (நீவரையாது இங்ஙன் ஒழுகின், இவள் ஆற்றாளாகலின், 'வரைந்துகொள்' என்னும்) ஒரு சொல்லைச்சொல்லாதுகொல் காதலர்க்கு?—(எ-று.)

பாவை—குராப்பாவை என்றது, 'தாதிற்செய்ததண்பனி' என்னும் முன்னுள்ள தொடரைக்கொண்டு; குரா, பாவைபோலப்பூத்தலின், அதன் மலரைப்பாவை என்றல் மரபு. 'காலைவருந்தும் கையாறோம்பு' என்று 'ஓரைமகளிர்' கூறியதென்றது, தலைமகள் காலைக்காலத்து ஓரைமகளிர் உடனிருத்தலின் ஒருகால் பகற்குறிக்கண் சிறிதுபொழுது தலைமகனைத்

தலைப்பெய்தலும் தப்பிவிடுமோ என்று கவன்று செயலற்றமையைக்கண்ட (அதன்) உண்மையை அறியாத ஓரைமகளிர் தலைமகளைக் கையாறோம்பு' என்று கூறியது. 'இன்னபண்பு' என்றது, தலைமகன் பகற்குறியிடத்து வந்து கூடவும் பிரிந்தானேபோலக்கருதி நுதலிடத்துப்பசலைபாய்ந்திடும் படி பெரிதும்வருந்தும்பண்பு. இனை—முதனிலைத்தொழிற்பெயர். அன்ன நகையாகுபண்பு—விளையாட்டுமகளிர் தலைவியின் கையாற்றைப் பாது காத்தலைச்செய் என்று கூறுவதேபோல கண்டுங்கேட்டும் நினது துயரத்தை அறிந்த குராப்பாவையும் அதனை நீக்க விரும்பி முயலும்பண்பு. 'ஒருசொல்' என்றது, தலைமகளின் துயரைநீக்குதற்குத் தக்க 'வரைந்து கொள்' என்று தலைமகனுக்குச் சொல்லும் ஒருசொல் என்றவாறு. கொல்-வினா. ஓ—அசைநிலை. தம்—சாரியை.

மெய்ப்பாடு இளிவரல். பயன்—ஆற்றுவித்தல்.

## நெய்தல்.

[இது, தலைமகன் பரத்தை மாட்டுப் பிரிந்தவழி ஆற்றாளாகிய தலைமகள், அவனைக்கண்டவழி, அவ்வாற்றாமை நீங்குமன்றோ? நீங்கியவழி, அப்பள்ளியிடத்தாளாய தலைமகற்குச் சொல்லியது]

எ—து,—தலைமகன் பரத்தையிற்பிரிய ஆற்றாது, அவன் பள்ளியிடத்தாளாக ஆற்றாமைநீங்கி, 'சேர்ப்ப! இப்பிறப்புமாறி மறுபிறப்பிலேனும் நீ ஆகுக எமது கணவன்; யான் ஆகுக நினது நெஞ்சிடத்து நேருமவள்' எனத்தலைமகள் தனது ஊடல்தோற்ற உரையாநிற்றல்.

[அம்மூவனார் பாடியது]

௪௯. அணிற்பல் லன்ன கொங்குமுதிர் முண்டகத்து
மணிக்கே ழன்ன மாநீர்ச் சேர்ப்ப
இம்மை மாறி மறுமை யாயினு
நீயா கியரெங் கணவனை
யானா கியர்நின் னெஞ்சுநேர் பவளே.

(இ-ள்):—அணிற்பல்லைப்போன்ற (முனைகூரியமுட்கள் நிறைந்த) மணம் முதிர்ந்த (மலர்களையுடைய) தாழையினையும், நீலமணியின் ஒளியைப்போலும் கரிய நீரையுமுடைய சேர்ப்ப! (நீசெய்யுங்கொடுமையால்) இப்பிறப்பொழிந்து (யானடையும்) மறுபிறப்பிலாயினும் நீ ஆகுக எமது கணவன்; யான் ஆகுக நின்னெஞ்சிடத்து நேருமவள்—(எ-று.)

கொங்கு—மணம்; பூந்தாதுமாம். முண்டகம்—தாழை; கழிமுள்ளியுமாம். கேழ்—ஒளி. மா—கருமை; இஃதிப்பொருட்டாதலை *"மாயிடற்றம் பலவன்" என்புழியுங்காண்க. மாநீர்—மிக்கநீருமாம். சேர்ப்ப—கடற்றுறைவனே நீ பரத்தையர் மாட்டுப்பிரிந்து வருத்துவதால், இறந்துபடுவேன்' என்றும், 'நீ அன்பிலையாயினும் யான் நின்பால் வைத்த அன்பு என்றும் ஒழியேன்' என்றுங்கூறுவாள், 'இம்மை.........நேர்பவளே' என்றாள். கணவனை—ஐசாரியை. 'நெஞ்சினேர்பவனே' என்றும்பாடம் பொருளிஃதே. அகப்பட்டாரை வருத்துவதும், அழிப்பதுமான இயல்புடைய முட்களையுடைய முண்டகத்தையும், நீரையுமுடைய துறைவன் என்றதனனே, நின்னையடைந்த மெல்லியலாரை நீ வருத்தியும் அழித்தும் விடும் இயல்பினை என்பது குறிப்பிற்புலப்படக்கூறினாளாம்.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—ஊடனீங்குதல்.

## மருதம்.

[இது, கிழவற்குப் பாங்காயின வாயில்கட்குக் கிழத்தி சொல்லியது.]

எ—து—பரத்தை மாட்டுப்பிரிந்த கிழவற்காக வாயில்வேண்டியவாயில்கட்குக் கிழத்தி, 'ஞாழன்மலர், மருதின்பழம் பூவோடுபரந்து நீர்த்துறையை அழகுசெய்தது அவரதூரிடத்து; வளை நெகிழும்படி அழகுகெட்டுப் புலம்புதலைத்தாங்கியது, அவர்மணந்த எனதுதோள்' எனத்தனது மெலிவுகூறி வாயினேர்ந்தமையுணருமாறு உரையாநிற்றல்.

[குன்றியனார் பாடியது.]

௫௦. ஐயவி யன்ன சிறுவீ ஞாழல்
செவ்வி மருதின் செம்மலொடு தாஅய்த்
துறையணிந் தன்றவ ரூரே யிறையிறந்
திலங்குவளை நெகிழச் சாஅய்ப்
புலம்பணிந் தன்றவர் மணந்த தோளே.

(இ-ள்):—வெண்சிறுகடுகைப்போன்ற சிறியமலரையுடையஞாழல், அழகிய மருதின் பழம்பூவோடு பரந்து (நீர்த்) துறையை அழகுசெய்தது அவரதூரிடத்து; முன்கையிடத்தினின்றும் நீங்கிவிளங்கும் வளைநெகிழும்படி மெலிந்து, வருந்தலைத்தாங்கியது அவர் மணந்த எனதுதோள்—(எ—று).

* திருச்சிற்றம்பலக்கோவையார்—கஙஉ.

ஞாழல்—புலிநகக்கொன்றை; அதன்மலரை ஈண்டு ஆகுபெயராய்க் குறித்தது. 'செவ்வீ' என்ற பாடத்திற்கு, 'செழியமலரையுடைய' என்க. செம்மல்—பழம்பூ; இறை—முன்கை; இவை இப்பொருளனவாதலை, * "பெருவழிக், காயாஞ் செம்ம றூஅய்" § "வணங்கிறை வாலெயிற் றந் நல்லாய்" என்றவற்றான் உணர்க. துறை—ஊருண்ணீர்த்துறை. ஊரே—ஏ—அசைநிலை.

இறைச்சி:—அவர் ஊரிடத்துத் துறையை ஞாழல் மருதின்பூவொடு தாஅய் அழகுசெய்தது; அவர் மணந்த தோள் மெலிந்து துயரைத் தாங்கியது; 'இஃதொருவியப்பிருந்தவாறென்னே! என்பதாம்.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—வாயினேர்தல்.

## நெய்தல்.

[இது, வரைவு நீட்டித்தவிடத்து ஆற்றாளாகிய தலைமகட்குத் தோழி, வரைவுமலிவு கூறியது.]

எ—து,—தலைமகன் களவின்நுகர்தலை விழைந்து வரைவினை நீட்டித்தவிடத்து, தலைமகள் ஆற்றாளாதலை உணர்ந்த தோழி, அவளை ஆற்றுவித்தல்கருதி, 'சேர்ப்பனை யானும் விரும்பிலேன்; யாயும் மிகக்கொடியவள்; எந்தையும் கொடியரே; அம்பலை ஊரும் அவன்திறத்துக் கூறும்' என்று, 'தலைமகன் விரைய வரைய முயல்வான்' என்பது புலப்படக் கூறுநிற்றல்.

[குன்றியனார் பாடியது.]

௫௧. கூன்முண் முண்டகக் கூர்ம்பனி மாமலர்
நூலறு முத்திற் காலொடு பாறித்
துறைதொறும் பரக்குந் தூமணற் சேர்ப்பனை
யானுங் காதலென் யாயு நனிவெய்ய
ளெந்தையுங் கொடீஇயர் வேண்டு
மம்ப லூரு மவனொடு மொழிமே.

(இ-ள்):—வளைவான முள்ளையுடைய தாழையினது மிகக்குளிர்ந்த பெரிய மலர், நூலற்ற முத்தினைப் போலக் காற்றாற் சிதறித்துறைகள்தோறும் செல்லும் வெள்ளிய மணலையுடைய கடற்கரையை யுடையானை [தலைமகனை] யானும் விரும்பிலேன்; யாயும் மிகக் கொடியவள்; தந்தையும் கொடியவனாதல்வேண்டும்; அம்பலை ஊரும் அவன்திறத்துக்கூறும்-(எ-று.)

* அகநானூறு-களிற்றியானைநிரை—௧௪, ௧-௨.
§ கலித்தொகை-குறிஞ்சி—௨௦.

'கூர்முள்,' 'கூனிமாமலர்,' 'பரக்கும்' என்பனவும் பாடம்; 'கூரிய முள்' அல்லது, 'மிக்கமுள்,' 'வளைந்த பெரிய மலர்,' 'விரியும்' என்பன பொருள்களாம். காலொடு—காற்றால்; 'ஒடு' 'ஆல்' உருபின்பொருளில் வந்தது; * "பாலி வானிற் காலொடு பாறி" என்புழிப் போல பரித்தல்—செல்லுதல்; † "செஞ்ஞாயிற்றுச் செலவு மஞ் ஞாயிற்றுப் பரிப்பும்" என்புழிப் போல. 'வரைவுகடாவுதலன்றி இருவகைக்குறியிடத்திலுங் கூட்டங்கூட இனி உடன்படேன்' என்பாள், 'யானுங் காதலென்' என்றும், 'தாயும் குறியிடைக் கூடலாகாதபடி இற்செறித்திடுவன்' என்பாள், 'யாயு நனி வெய்யள்' என்றும், 'பிழைகாணின், ஒறுக்கும் இயல்பினர் எந்தையர்' என்பாள், 'எந்தையுங் கொடீஇயர் வேண்டும்' என்றும், 'ஊரும் அவன் வருகையை ஆராய்வதாகும்' என்பாள், 'அம்ப லூருமவனொடு மொழிமே' என்றுங் கூறினாள்; எனவே, 'தலைமகன் விரைய வரைய முயல்வான்' என்பது புலப்படக் கூறினாளாம். அம்பல்—சில ரறிந்து பழிகூறல்; இவ் வம்பல் மிகின், 'அலர்' என்ப; இதனை, §"அலராய் விளைகின்ற தம்பல் கைம் மிக்கைய நின்னருளே" என்றதனான் உணர்க. 'எந்தை' என்றது, தலைவிக்குந் தனக்கு முள்ள ஒற்றுமையால். 'மொழியும்' என்னும் முற்றின் ஈற்றுமிசை உகரம்மெய்யொடுங் கெட்டது, 'ஊர் மொழியும்' என. இடத்து நிகழ்பொருளின் தொழில் இடத்தின்மேல் ஏறி நின்றது. யானும், யாயும், எந்தையும், ஊரும்—உம்மைகள் எச்சப்பொருளன.

இறைச்சி:—முள்மிக்க தாழையின் குளிர்ந்த மலர், காற்றாற்சிதறுண்டு துறைதோறும் பரிக்கும் கடற்கரையினன் என்றதனானே, இடையூற்றை மிகுதியாக வுடைய களவகத்தின்பழும் ஊராரால் தூற்றப்பட்டு மன்றத் திடத்துப் பரவுமாறு செய்திட்டான் என்பதாம்.

மெய்ப்பாடு—இளிவரலைச் சார்ந்த பெருமிதம். பயன்—தலைமகளை ஆற்றுவித்தல்.

## குறிஞ்சி.

[இது, வரைவுமலிவுகேட்ட தலைமகற்குத் தோழி, முன்னுளிற்றான் அறத்தொடு நின்றமை காரணத்தான் இது விளைந்தது என்பதுபடக் கூறியது.]

எ—து,—தலைமகள் தமர்வரைவுமலிந்தமையைத் தன்னிடம் கேட்ட தலைமகற்குத் தோழி, 'நீ கலங்கினை; யாயும் நடுங்கினள்; யான் இருவர் நடுக்கத்தையுங் கண்டு, தமர் வரைவைக் குறித்து உரையாடும் ஒவ்வொரு

---

* அகநானூறு—களிற்றியானைநிரை—௬, ௭.
† புறநானூறு—௩௦, ௧. § திருக்கோவையார்—௧௮௦.

கணத்தும் பல்லாற்றானும் அறத்தொடு நின்றேன் அல்லேனோ?' எனத், தான் அறத்தொடு நின்றமை காரணத்தான் இவ்வரைவுமலிவு உளதாயிற்று என்பது தோன்றக் கூறுநிற்றல்.

[பனம்பாரனார் பாடியது.]

கூஉ. ஆர்கலி மிதித்த நீர்திகழ் சிலம்பிற்
கூரைசந் தனையயாய் நடுங்கல் கண்டே
நரந்த நாறுங் குவையிருங் கூந்தல்
விரிந்திலங்கு வெண்பன் மடந்தை
பரந்தெனை னல்லனோ விறையிறை யானே.

(இ-ள்):—கடல் அடிப்படுத்தியதனால் நீருள் விளங்கும் மலைபோல, மிகக்கலங்கிய அத்தகையை (நீ;) நரந்தமலர் நாறும் கூட்டமான கரிய கூந்தலையும் விட்டுவிளங்கும் வெள்ளிய பல்லையு முடைய மடந்தையான தோழியும் நடுங்குதலைக் கண்டு, வரைவு (பிறர்க்கு ஆகாதவாறு) பலவழியாலும் பரந்தேன் அல்லேனோ யான் ஒவ்வொரு கணத்திலும்?—(எ-று.)

சிலம்பின் கூரைசந்தனையை (நீ;) நரந்தம்.........மடந்தையாய் (உம்) நடுங்கல்கண்டு யான் இறைஇறை பரந்தேன் அல்லேனோ? எனக்கூட்டி முடிவுகொள்க. 'தமர் வரைவுடம்படாரோ' என்ற கவற்சியால் 'எதற்குங் கலங்காத நீயும் கலங்கினை' என்பாள், 'ஆர்கலி............அனையை' என்றும், 'அறத்தொடு நின்று வரைவினை முடித்து வைப்பல்' என்று கருதாது அறியாமையால் நடுங்கினள் தலைமகள் என்பாள், 'நரந்தம்.........மடந்தை' என்றும் கூறினாள். 'அசைந்த அனையை' அசைந்தனையை என விகாரமாயிற்று. 'யாயும்' என்ற எச்சவும்மையும், 'இறை இறையும்' என்ற முற்றும்மையும் விகாரத்தால் தொக்கன. வரைவுமலிவு—வரைவால் உளதாகும் மகிழ்ச்சி; மலிவு—'மகிழ்ச்சி' என்ற பொருள்தாலே, *"அவட் பெற்று மலியினும்" என்றவிடத்துங் காண்க.

மெய்ப்பாடு—உவகையைச் சார்ந்த பெருமிதம். பயன்—அறத்தொடு நின்றமை அறிவித்தல்.

## மருதம்.

[இது, வரைவு நீட்டித்தவழித் தோழி தலைமகற்கு உரைத்தது.]

எ-து,—களவின் நுகர்தலைக் காமுற்று விரைய வரைய முயலாத தலைமகனை நோக்கித் தோழி, 'மகிழ்ந! துறையிடத்துத் தோழியின் முன் கையைப் பற்றி அரமகளிரொடு உற்ற சூளுறவுகள் எம்மை வருத்தின' என, வரைவுகடாதல் புலப்படக் கூறுநிற்றல்.

* தொல்-பொருள்-களவியல்—கஉ.

[கோப்பெருஞ்சோழன் பாடியது.]

௫௩. எம்மணங் கினவே மகிழ்ந முன்றி
னனைமுதிர் புன்கின் பூத்தாழ் வெண்மணல்
வேலன் புனைந்த வெறியயர் களந்தொறுஞ்
செந்நெல் வான்பொரி சிதறி யன்ன
வெக்கர் நண்ணிய வெம்மூர் வியன்றுறை
நேரிறை முன்கை பற்றிச்
சூரர மகளிரோ டுற்ற சூளே.

(இ-ள்):—எம்மை வருத்தின; மகிழ்ந! வேலன் அழகுபெறச்செய்த வெறியாடுங் களத்திடந்தோறும் செந்நெல்லினது சிறந்த பொரியைச் சிதறினாற்போல, முன்றிலிடத்து முகை முதிர்ந்த புன்கமரத்தினது மலர்கள் தங்கும் வெள்ளிய மணலையுடைய மேடுகள் பொருந்திய எமது ஊரிடத்துப் பெரிய துறையில், அழகு தங்கிய (தோழியின்) முன்கையைப் பற்றி அச்சஞ்செய்யும் இயல்புள்ள அரமகளிரொடு செய்து கொடுத்த சூளுறவுகள்—(எ-று.)

வியன்றுறை முன்கைபற்றிச் சூரரமகளிரொடுற்ற சூள் எம்மணங்கின எனக்கூட்டுக. வேலன்.........சிதறியன்னமுன்றில்.........மணல் வெக்கர் .........வியன்றுறை என மாற்றிக்கூட்டப்பட்டது. தாழ்தல்—தங்குதல் என்ற பொருள்தாலே, *"மகரப் பகுவாய் தாழ மண்ணுறுத்து" என்புழியுங் காண்க.

இறைச்சி—புன்கின் பூ செந்நெற்பொரியைச் சிதறினாற்போலத் தோன்றும் என்றதனனே, நீ உற்ற பொய்ச்சூளுறவுகளும் மெய்ச்சூளுறவுகளேபோல எம்மை மயங்கச்செய்தன என்பதாம.

மெய்ப்பாடு—அச்சம். பயன்—வரைவுகடாதல்.

## குறிஞ்சி.

[இது, வரைவு நீட்டித்தவழி ஆற்றாளாகிய தலைமகள் தோழிக்குச் சொல்லியது.]

எ-து,—தலைமகன் விரைய வரைய முயலாது நீட்டித்த விடத்து அதனைப் பொறாத தலைமகள், தோழியை நோக்கி, 'யான் இவ்விடத்தேன்; எனது நலன் நாடனொடு அங்கு ஒழிந்தது' எனத் தனது ஆற்றாமை தோற்றக் கூறுநிற்றல்.

---

*திருமுருகாற்றுப்படை—௨௫.

[மீனெறிதூண்டிலார் பாடியது]

ருச யானே யீண்டை யேனே யென்னல
னேனல் காவலர் கவணொலி வெரீஇக்
கான யானை கைவிடு பசுங்கழை
மீனெறி தூண்டிலி னிவக்கும்
கானக நாடனொ டாண்டொழிந் தன்றே.

(இ-ள்):—யான்தான் இவ்விடத்தினளா யிருக்கின்றேன்; எனது நலன், தினையைக் காவல்செய்வார் (விடும்) கவணின் ஒலியை வெருவிக் காட்டிடத்து யானை கைவிட்டுவிடும் பசிய மூங்கில், (மீன்பிடிப்பார் மீன் சிக்குண்டதனை உணர்ந்து கரையிடத்து விழும்படி) மீனை எறியும் தூண்டிலைப் போல, மேலோங்கும் கானகநாடனொடு (கூட்டம் நிகழ்ந்த) அவ்விடத்தே ஒழிந்தது—(எ-று.)

'உடன்கொண்டும் சென்றிலன், வரைந்துகொண்டு மனைக்கண்ணும் வைத்திலன் தலைமகன்' என்பாள், 'யானே யீண்டையேனே' என்றாள். தூண்டிலின்—இன் உவமப்பொருட்கண் வந்தது. நிவக்கும்—மேலோங்கும். 'கான யானை.........நிவக்கும்' என்ற கருத்து, *"சிலம்பின் வெதிரத்துக் கண்விடு கழைக்கோல் குரங்கின் வன்பறழ் பாய்ந்தென விலஞ்சி, மீனெறி தூண்டிலி னிவக்கும்" என்ற ஐங்குறுநூற்றிலும் ஒருவாறு அமைந்திருத்தல்காண்க. 'மீனெறி தூண்டில்' என எடுத்தாண்ட உவமை நயம்பற்றி, இதனாசிரியர் 'மீனெறிதூண்டிலார்' எனப் பெயர்பெற்றனர் போலும்.

உள்ளுறை:—எனலைக் காப்பவரது கவணின்ஒலியை அஞ்சி யானை நுகர்தற்கு வளைத்த கழையைக் கைவிட்டுச்செல்லுமாறுபோல, ஊரார் தூற்றும் அலரை அஞ்சித் தன் எண்ணத்தின்படி தாழ்த்தி நுகர்ந்த என்னைக் கைவிட்டுச் சென்றான் என்பதாம்; 'மீனெறி தூண்டிலின்' என்ற எனையுவமம் உள்ளுறை யுவமத்திற்குச் சிறப்புக்கொடுத்து நின்றது.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—அயர்வுயிர்த்தல்.

## நெய்தல்.

[இது,—'வரைவொடு புகுதாயேல் இவள் இறந்துபடும்' எனத்தோழி தலைமகன் சிறைப்புறத்தானாகச் சொல்லியது.]

எ-து,—தலைமகன் சிறைப்புறத்தானாதல்உணர்ந்த தோழி, 'வரைவொடு வாராதவழி தலைமகள் இறந்து படுவாள்' என்பதை உணருமாறு, தைத்திங்களில் வரும் வாடைக்காற்றோடு சின்னாட்களை உறையுமிடமாக உடையது இவ்வூர்' எனக்கூறாநிற்றல்.

* ஐங்குறுநூறு-குறிஞ்சி—அ

[நெய்தற்கார்க்கியனார் பாடியது.]

௫௫. மாக்கழி மணிப்பூக் கூம்பத் தூத்திரைப்
பொங்குபிதிர்த் திவலையொடு மங்கு றைஇக்
கையற வந்த தைவர லூதையொ
டின்னா வுறையுட் டாகுஞ்
சின்னாட் டம்மவிச் சிறுநல் லூரே.

(இ-ள்):—கரிய கழியிடத்து நீலமணியைப்போலப் பூக்கும் கழிமுள்ளிமலர் வாட்டமடைய, தூய அலைகளிடத்துப் பொங்கும் பிதிராகிய திவலையோடு கூடிய மேகங்கள், தடவுதல் பொருந்திய ஊதைக்காற்றோடு தங்கி, யாம் செயலறுமாறு வந்தன; (ஆதலால்), துயர்தரும் உறையுளை உடையதாகும் இச் சிறிய நல்ல ஊர், (இனி, உயிருடன் வாழுமாறு சில நாட்களை உடையது—(எ-று.)

பூக்கூம்ப, திவலையொடு (கூடிய) மங்குல், தைவரல் ஊதையொடு தைஇக்கையற வந்த; ஆதலால் இன்னா உறையுட்டாகும் இச்சிறுநல்லூர், சின்னாட்டு என்று கூட்டி முடிவு கொள்க. மாக்கழி—பெரிய கழியுமாம். மணிப்பூ நீலமணிபோலப் பூக்கும் கழிமுள்ளிப்பூ; *"மணிப்பூ முண்டகத்து மணன்மலி கானல்" என்றதனானும் கழிமுள்ளிமலர் நீலம்போற் பூக்கும் இயல்பினதாதலை உணர்க. பிதிர்த்திவலை—இருபெயரொட்டு. அம்ம—அசைநிலை. 'உன் கொடுமையால் தோழியும், அவள் அழிவால் யானும், ஊரிலுள்ளாரும் விரைவிற் கெடுதல் திண்ணம் என்பது புலப்பட, 'இன்னா .........ஊரே' என்றாள்.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—வரைவுகடாதல்.

## பாலை.

[இது, தலைமகன் கொண்டுதலைப்பிரிதலை மறுத்துத் தானே போகின்றவழி, இடைச்சுரத்தின் பொல்லாங்குகண்டு கூறியது.]

எ-து,—'தலைமகளை உடன் கொண்டு செல்க' என்ற தோழியின் கூற்றை மறுத்துத் தலைமகன் தனித்துச் செல்லும்பொழுது நெஞ்சினை நோக்கி, 'செந்நாய் தின்ற மிச்சிலையும் அழுகற் சின்னீரையும் உண்ணும் உணவாகக் கொள்ள, நெஞ்சே! நீ விரும்பியவள் வரக்கடவள்; அவள் இரங்கத்தக்காள்' என, இடைச்சுரத்தின் கொடுமையைக் கண்டு கூறாநிற்றல்.

*மதுரைக்காஞ்சி—௧௧.

[சிறைக்குடியாந்தை பாடியது]

ருஃ. வேட்டச் செந்நாய் கிளைத்தூண் மிச்சில்
குளவி மொய்த்த வழுகற் சின்னீர்
வளையுடைக் கைய ளெம்மொ டுணீஇய
வருகதில் லம்ம தானே
யளியளோ வளியளென் னெஞ்சமர்ந் தோளே.

(இ-ள்):—வேட்டத்திடத்துச் செந்நாய் கிளறி யுண்டதன் மிச்சிலையும், காட்டு மல்லிகை நெருங்கியதனால் அழுகல் நாற்றத்தையுடைய குறைந்த நீரையும் வளையினையுடைய கையாள், எம்மோடு உண்ணுதற்கு வருவாளாக; அவள் தான் இரங்கத்தக்காளோ? இரங்கத்தக்காள்; என் நெஞ்சே! நீ விரும்பியவள்—(எ-று.)

நெஞ்சே! அமர்ந்தோள், மிச்சில் சின்னீர் உணீஇய வருக; (அவள்) தான் அளியளோ அளியள் என்று கூட்டுக. உண்ணுதல் பொதுவினை ஆகலின், மிச்சில், நீர் இரண்டற்கும் வந்தது. மிச்சில், நீர்—இவற்றின் இரண்டாம் வேற்றுமையுருபும், எண்ணும்மையும் விகாரத்தாற் றொக்கன. மிச்சிலை 'எச்சில்' என வழங்குப. வேறு உணவு கிட்டுதல் இல்லாமையான் செந்நாய் கிளைத்த மிச்சில் உணவிற்கு உரியதாயிற்று; இக்கருத்தை * "நோய்பசிச் செந்நா யுயங்குமரை தொலைச்சி, யார்ந்தன வொழிந்த மிச்சில், சேய்நாட் டருஞ்சுரஞ் செல்வோர்க்கு, வல்சி யாகும்" என்புழியுங் காண்க. குளவி—மலைமல்லிகையுமாம். தில், அம்ம—அசைநிலைகள். அளியளோ, அளியள்—வினாவும் விடையும். நெஞ்சு—அண்மைவிளி. நெஞ்சு அமர்ந்தோள்—நெஞ்சிற் பொருந்தியவள் என்றுமாம்.

மெய்ப்பாடு—இளிவரல். பயன்—அயர்வுயிர்த்தல்.

## நெய்தல்.

[இது, காப்பு மிகுதிக்கண் ஆற்றாளாகிய தலைமகள் தோழிக்குச் சொல்லியது.]

எ-து,—தமரா லுண்டாகிய காவல் மிகுதியாகியவிடத்துப் பொறாளாகிய தலைமகள், தோழியை நோக்கி, 'தண்டாக்காமமோடு எம் உயிர் போவதாக; இருவேமாய்க் கூடி ஒழுகிய உலகத்துத் தனித்தோமாவது உய்வதற்காகவோ? என, ஆற்றாமை தோற்றக் கூறுநிற்றல்.

* நற்றிணை—௪௩.

[சிறைக்குடியாந்தையார் பாடியது]

௫எ. பூவிடைப் படினும் யாண்டுகழிந் தன்ன
நீருறை மகன்றிற் புணர்ச்சி போலப்
பிரிவரி தாகிய தண்டாக் காமமொ
டுடனுயிர் போருக தில்ல கடனறிந்
திருவே மாகிய வுலகத்
தொருவே மாகிய புன்மைநா முயற்கே.

(இ-ள்):—பூப்பு இடையே உண்டாயினும் யாண்டளவு தலைவன் கூட்டம் கழிந்தாற்போன்ற, நீரிடத்து உறையும் மகன்றிலினது சேர்க்கை போலப் பிரிதல் அருமையாகிய, துய்த்து விருப்பம் நீங்குத லில்லாத காமத்தோடு ஒருங்கே (எம் இருவர்) உயிரும்போவதாக; கடமையை அறிந்து இருவேமாய்க் கூடி ஒழுகிவந்த உலகத்து, தனித்தோமாக நேர்ந்த புன்மை, நாம் பிழைத்திருத்தற்காகவோ நேர்ந்தது? (இன்று.) (எ-று.)

பூ—முந்நாளைப்பூப்பு. மகன்றில்—நீர்வாழ்பறவைகளில் ஒன்று; அது பிரிவைப் பொறாத இயல்பினது; இதனை * 'சோர்துகி றிருத்த றேற்று ணைபிரி மகன்றி லொத்தாள்'' என்றதனானும் அறிக. கழிந்தன்ன காமம் என இயையும். தண்டா—விகாரம்; அது, நீங்காமைப்பொருள் தாலே "ஓங்கல் வேண்டுவோ னுயர்மொழி தண்டான்'' என்றற் றொடக் கத்த முதுமொழிக்காஞ்சித் தண்டாப்பத்து முழுவதும் காண்க. தில்ல—அசைநிலை. பிறப்புக்கடோறும் பிரியாது தலைவனுடன் தங்கியிருந்தமை புலப்பட 'இருவே மாகிய வுலகத்து' என்றாள். புன்மை—புல்லிய பிரிவு. உயற்கே—எ வினை.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—அயர்வுயிர்த்தல்.

## குறிஞ்சி.

[இது, கழற்றெதிர்மறை.]

எ-து,—பாங்கனைக் குறையுற்று நின்ற தலைமகன், 'இந்நோயை உமது குறையாகத் தாங்கினேம்; நீர் மறுத்தமையான் இந்நோய் பரவிவிட்டது' என்று, 'இடித்து உரைக்கும் உரை இந் நோவை ஒழிக்காது' என்பது புலப்படக் கூறிநிற்றல்.

* சிந்தாமணி-நாமகள்—உஎ௩.

[வெள்ளிவீதியார் பாடியது.]

டுஅ. இடிக்குங் கேளிர் நுங்குறை யாக
நிறுக்க லாற்றினோ நன்றுமற் றில்ல
ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கிற்
கையி லூமன் கண்ணிற் காக்கும்
வெண்ணெ யுணங்கல் போலப்
பரந்தன் றிந்நோய் நோன்று கொளற் கரிதே.

(இ-ள்):—நெருக்கிக் கழறும் அன்பீர்! (எமக்கு உற்ற குறையை) உமக்கு உற்ற குறையாகக் கருதித் (தீர்த்து விடுவீர் என்று) தாங்கலைச் செய்தோம்; (அச் செய்கை) மிகவும் நல்லதாயிற்று; ஞாயிறு எறிக்கும் வெய்ய கற்பாறையிடத்தில், கைவழங்க லில்லாத ஊமன், கண்ணே கருவியாகக் காக்கும் வெண்ணெயினது விழுதே போலப் பரந்தது இந் நோய்; (இனிப்) பொறுத்துக் கொள்ளுதற்கு அரியதே.—(எ-று.)

இடித்தல்—(பிழைகண்டவழி) நெருக்கிக் கூறல்; இஃதிப்பொருள் தரலை, * "மிகுதிக்கண் மேற்சென் றிடித்தல்," † "இடிக்குந் துணையார்" என்ற விடங்களிலுங் காண்க 'கேளிர்' 'நுங்குறை' என்பன இகழ்ச்சி தோன்ற நின்றன. அவன் தீர்ப்பான் என்று துணிந்திருந்தமையின், தன்குறையை 'நுங்குறை' என்றான். 'ஆற்றினோம்' என்ற தனித்தன்மைப்பன்மை 'இனிக் குறையுற்று நில்லேன்' என்ற உயர்வைப் புலப்படுத்திற்று. 'நன்று மன்' என்றது, பிறகுறிப்பு 'நன்றுமற் றில்லை' என்ற பாடத்திற்கு, (நீர் தீர்க்கத் தகுந்த) சிறந்த வேறு (குறை) இல்லை என்க. ஈங்கு, 'இது தகாதது; ஒழிக, வேறு குறை யிருப்பின் மொழிக; தீர்ப்பல்' எனப் பாங்கன் பகர்ந்தமை கருதத் தக்கது. தானும் நீக்கிக்கொள்ள மாட்டாமல், தன்தோழனும் போக்கிக்கொள்ளமாட்டாமல் அந் நோய் பரவுவது புலப்பட, தானாகவும் காப்பாற்றமாட்டாமல், காப்பாற்றுவாரையும் அழைக்க வியலாமல் வெவ்வறையிற் கையிலூமன் கண்ணிற் காக்கும் வெண்ணெயுணங்கல் பரவலை உவமை கூறினான். 'வெயில் பயில்' என்ற பாடத்திற்கு, 'வெயில் பழகும்' என்க. நோன்றல்—பொறுத்தல்; ‡ "தமர்தற் றப்பி னதுநோன் றல்லும்" என்புழிப் போல. 'மொண்டு' 'ஞொண்டு' என்பனவும் பாடம்; 'முகந்து கொள்ளுதற்கு' என்க.

மெய்ப்பாடு—இளிவரல். பயன்—பாங்கனை யொருப்படுத்தல்.

* திருக்குறள்—நட்பு—ஃ. † திருக்குறள்—பெரியாரைத் துணைக்கோடல்—எ.
‡ புறநானூறு—கஙஎ—க.

## பாலை.

[இது, பிரிவிடை அழிந்த கிழத்தியைத் தோழி வற்புறுத்தியது.]

எ-து,—பொருள்வயிற் பிரிந்த கிழவனை நினைந்து வருந்திய கிழத்தியை நோக்கித் தோழி, 'அவர் செல்லும் வழியிற் சுனையிடத்து காட்டு மல்லிகைமலர், நிறைந்த குவளைமலரோடு கூடி பிரிவால் வேறுபட்ட நின்னுதல்போலத் தோன்றும்; அதனைக் கண்டும் மறப்பரோ? மேல் முயலவும் என்ன வாகும்? வழியிற் சுரங்கள் பல; அரும்பொருள் நிரம்பா; ஆகலின், நீடல் இல்லை' என வற்புறுத்தி ஆற்றுவியாநிற்றல்.

[மோசிகீரன் பாடியது.]

௫௯. பதலைப் பாணிப் பரிசிலர் கோமான்
நலைக்குன்றத் தகல்வாய்க் குண்டுசுனைக் குவளையொடு
பொதிந்த குளவி நாறுநின் னறுநுத
லுமெவன மறப்பரோ மற்றெனு முயலவுஞ்
சுரம்பல விலங்கிய வரும்பொரு
ணிரம்பா வாகலி னீடலோ வின்றே.

(இ-ள்):—'பதலை' என்னும் இயத்தினையும் பாட்டுக்களையும் வல்ல பரிசில் பெறுவார்தம் தலைவனது தலைக்குன்றத்திடத்துள்ள அகன்ற வாயையும் ஆழத்தையு முடைய சுனையிடத்துக் குவளைமலரோடு நிறைந்த காட்டுமல்லிகைமலர் (பிரிவால் வெளுத்த) நினது நறிய நுதல்போலத் தோன்றும்; (அதனைக் கண்டும் மீளாது, தன்பிரிவு) வருத்துவது என்று (கண்டுவைத்தும்) மறப்பரோ? என்ன ஆகும் மேல் முயலுதற்கும்?; சுரங்கள்பல (வழியிற்) றடுத்தன; ஆக்கத் தக்க அரிய பொருள், (விரைவில்) நிறையாது; ஆதலின், நீளுதல் இல்லை (அவர்பிரிவு).-(எ-று.)

'பேரணி,' 'பரதவர்,' 'பரிணதர்,' 'அதலைக் குன்றம்' என்பன பாடபேதங்கள்; முறையே, 'சிறந்த அணியை அணிந்த,' கடற்கறையில் வாழும் ஒரு மரபினர், 'கற்றவர்' 'அதலைஎன்னும் குன்றம்' என்பன பொருள்களாம் விலங்குதல்—தடுத்தல்; குறுக்கிடுதலுமாம், விலங்கிய சுரம் பல—தடுப்பனவான சுரங்கள் பல என மாற்றியுரைத்தலுமாம்.

மெய்ப்பாடு—இளிவரலைச் சார்ந்த பெருமிதம். பயன்—தலைமகளை வற்புறுத்தி ஆற்றுவித்தல்.

## குறிஞ்சி.

[இது, பிரிவிடை ஆற்றாமையால், தலைமகள் தோழிக்கு உரைத்தது.]

எ-து,—தலைமகன் பிரிந்தவிடத்து அதனைத் தாங்கலாற்றாமையால், தலைமகள் தோழியை நோக்கி, 'காதலர் இரங்காராயும் விரும்பாராயும் இருப்பினும், பலமுறை காண்டலும் உள்ளத்துக்கு இனியதாய் இருந்தது' என, 'காணவும் பெறாவிடின் என்செய்வல்?' என்பது புலப்படக் கூறுகிற்றல்.

[பரணர் பாடியது.]

௬௦. குறுந்தாட் கூதளி ஆடிய நெடுவரைப்
பெருந்தேன் கண்ட இருக்கை முடவ
னுட்கைச் சிறுகுடை கோலிக் கீழிருந்
தூட்டுபு நக்கி யாங்குக் காதலர்
நல்கார் நயவா ராயினும்
பல்காற் காண்டலு முள்ளத்துக் கினிதே.

(இ-ள்):—குறுகிய தாளையுடைய கூதளிர் ஆடிய நெடிய வரையிடத்துப் பெரிய தேன் இறாலைக் கண்ட இருக்கையும் உதவாத முடவன், உள்ளங்கையில் அடங்கும் சிறிய உடையை வளைத்துக் கீழிடத்திருந்து (அதிற் காணப்படும் தேன் இறாலின் நிழலைக்) கவ்வியும் நக்கியும் (மகிழ்ந்தாற்) போல, காதலர் அளித்தலும் செய்யார்; விருப்பமுங் கொள்ளார்; ஆனாலும், பலமுறை காணுதலும் உள்ளத்துக்கு இனியதாகும்.—(எ-று.)

கூதளிர்—ஒருவகைச்செடிபோலும். தேன்—ஆகுபெயர். 'இருக்கை முடிவன்' என்ற பாடத்திற்கு, 'இருக்கையை முடிவாக உடையவன் [மடியவன்]' என்க. 'பெருந்தேன்கண்ட இருக்கைமுடவன்' என்பது, 'முடவன் கொம்புத்தேனை அவாவினாற்போல' என்னும் பழமொழியைப் புலப்படுத்தல் உணர்க. 'எனினும்' என்ற பாடத்திற்கு, என்றாலும் என்க. 'பிரிடாமைக் கேதுவாகிய நம் துயரத்தைப் பொருட்படுத்தலும் செய்யார், விருப்பமும் உடையார் அல்லர்' என்பது புலப்பட, 'நல்கார் நயவார்' என்றாள்.

மெய்ப்பாடு—இளிவரல். பயன்—அயர்வுயிர்த்தல்.

## மருதம்.

[இது, தோழி தலைமகன்வாயில்கட்கு உரைத்தது.]

எ-து,—பரத்தையிற் பிரிந்தமையுணர்ந்து ஊடிய தலைமகளின் ஊடலொழிக்குமாறு தலைமகன் அனுப்பிய வாயில்களை நோக்கித் தோழி

'நற்றேர்ப்பொய்கையூரன் கேண்மைபெற்றேம்; ஆதலான், வளையல்கள் நிறைந்தன' எனத் தலைமகன்கொடுமை புலப்படக் கூறுநிற்றல்.

[தும்பிசேர்கீரன் பாடியது.]

௬௧. தச்சன் செய்த சிறுமா வைய
மூர்ந்தின் புறாஅ ராயினுங் கையி
னீர்த்தின் புறூஉ மிளையோர் போல
வுற்றின் புறேஎ மாயினு நற்றேர்ப்
பொய்கை யூரன் கேண்மை
செய்தின் புற்றனெஞ் செறிந்தன வளையே.

(இ-ள்):—தச்சன் செய்த சிறிய குதிரைபூட்டிய தேரை ஊர்ந்து இன்பம் அடையாராலும், கையினால் இழுத்து இன்பம் அடையும் சிறுரைப் போல, மெய்பொருந்தி இன்பந்துய்த்திலேம் ஆனாலும், (நாங்கள் நல்ல தேரையும் பொய்கையையு முடைய ஊரனிடத்து நட்புச்செய்து இன்பமடைந்தோம்; (ஆதலால், நாடோறும் வாட்டத்தை நோக்கிச் சிறி யன தேடி வாங்கப்படுதலால்); (இல்லிடம் எங்கும்) வளையல்கள் நிறைந் தன.—(எ-று.)

வையம்—தேர்; வண்டியுமாம்; 'கொல்லாப்பண்டி' எனவுங் கூறுவர், 'இல்லறத்துத் தலைவனுடன் இன்பந்துய்த்துப் பிரிவின்றி இனிது தங்காது பலநாட்களுக்கு ஒருமுறை பார்த்திருப்போம்' என்பாள், 'தச்சன்......... இன்புற்றனம்' என்றாள். 'பரத்தையர்பாற் செல்லுதற்கும் அவரை யேற் றிக் கொணர்தற்கும் தேரையும், அவரொடுபுனலாடுதற்குப் பொய்கையை யும் உடையான்' என்பாள், 'நற்றேர்ப்பொய்கையூரன்' என்றாள். நற் றேர்—பிறகுறிப்பு; இழிந்தாரை ஏற்ற உதவுவதால். 'இன்புற்றனெம்'என் றது 'இன்புற்றிலம்' என்று பொருள்பயந்ததும் பிறகுறிப்பே.

மெய்ப்பாடு—இளிவரலைச் சார்ந்த நகை. பயன்—வாயின் மறுத்தல்.

## குறிஞ்சி.

[இது, தலைமகன் இடந்தலைப்பாட்டின்கண் கூடலுறும் நெஞ்சிற் குச் சொல்லியது.]

எ-து,—பான்மை கூட்ட ஏதுவின்றி இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த தலைமகன் மீண்டும் அவ்விடத்துக் கூடலாமென்று கருதி வந்து அந்தத் தலைமகளை எதிர்ப்பட்ட விடத்துக் கூடுதலை விழையும் நெஞ்சை நோக்கி. 'நெஞ்சே! மாலைபோல நறுமணமுள்ள நல்லாளது மேனி, தளிரினுஞ் சிறந்தது; (ஆதலின்,) முயங்குதற்கும் இனியதே' என நலம்பாராட்டிக் கூறுநிற்றல்.

[சிறைக்குடியாந்தையார் பாடியது.]

௬௨. கோட லெதிர்முகைப் பசுவீ முல்லை
நாறிதழ்க் குவளையோ டிடைபட விரைஇ
யைதுதொடை மாண்ட கோதை போல
நறிய நல்லோண் மேனி
முறியினும் வாயது முயங்கற்கு மினிதே.

(இ-ள்):—காந்தளினது ஒளியுள்ள அரும்பையும், பசியமுல்லையின் மலரையும், கமழும் இதழ்களையுடைய குவளைமலரோடு இடையிடைப் படக்கலந்து, அழகியதாய்த் தொடுத்தல் மாட்சிமைப்பட்ட மாலைபோல நறுமணமுடையளாகிய நல்லாளது மேனியானது, (காண்டற்கு இன்பஞ் செய்தலே யன்றி, ஊற்றானும்) தளிரைக் காட்டிலும் வாய்ப்புடையது; (ஆதலால்,) முயங்குதற்கும் இனியதே.-(எ-று.)

எதிர்—ஒளி; இஃதிப்பொருள்தாலே * "எதிர்மலர் மற்றவன் கண் ணொக்கும்" என்புழியுங் காண்க. 'பசுமுல்லைவீ' என மாற்றி உரையுரைக் கப்பட்டது. 'முல்லைநாறிணர்' 'முயங்குக வின்னே' என்பனவும் பாடம்; 'முல்லையின் மணக்கும் பூங்கொத்து,' 'இப்பொழுதே முயங்குக' என்பன பொருள்களாம். முயங்கற்கும்—உம்மை-எச்சவும்மை; காண்டற்கே யன்றி என்பதுபட நிற்றலின். 'நறிய நல்லோள்' என்ற பாடத்திற்கு, 'நறுமணமுடைய நங்கையளது' என்க; சிறந்த மங்கையரதுஉயிர்ப்பு, கூந்தல் ல் ல முதலியவற்றில் இயற்கை மணமுடைமை கருதத்தக்கது.

மெய்ப்பாடு—உவகை. பயன்—நயப்புரைத்தல்.

## பாலை.

[இது, பொருள் கடைக்கூட்டிய நெஞ்சிற்குச் சொல்லியது]

எ-து,—கருதிய பொருளைக் கடைக்கூட்டிய தலைமகன், மீண்டும் பொருள்வயிற் செலுத்தும் நெஞ்சை நோக்கி, 'நெஞ்சே! வழங்கலுந் துய்த்தலும் வறியோர்க் கில்லை' என மேலும் மேலும் பொருள்ஈட்டக் கருதுகின்றனை; அரிவையும் வருவளோ? எம்மைமட்டிலும் செலுத்துகின்றாயோ? உரை' எனச் செலவழுங்குமாறு கூறுநிற்றல்.

[உகாய்க்குடிகிழார் பாடியது.]

௬௩. ஈதலுந் துய்த்தலு மில்லோர்க் கில்லெனச்
செய்வினை கைம்மிக வெண்ணுதி யவ்வினைக்
கம்மா வரிவையும் வருமோ
வெம்மை யுய்த்தியோ வுரைத்திசி னெஞ்சே.

---

* நான்மணிக்கடிகை-காப்பு—௧.

(இ-ள்):—'(பிறருக்குக்) கொடுத்தலும் (தாம்) துய்த்தலும் பொருள் இல்லாதவருக்கு இல' என்பதாக, (மேலும் மேலும் பொருளீட்டுதற்குப் பொருந்தியனவாய்ச்) செய்யும் தொழில்களை எல்லையின்றி மிகுமாறு எண்ணுகின்றாய்; கேட்பாயாக; அத்தொழில்களுக்கு அரிவையும் உடன் வருவாளோ? எம்மைமட்டிலுந் தனித்துச் செலுத்துகின்றாயோ? உரையாய்; நெஞ்சே!.—(எ-று.)

துய்த்தலினும் ஈதல் சிறந்தமையான், 'ஈதலுந் துய்த்தலும்' எனப் பட்டது; *"ஈத லிசைபட வாழ்த லதுவல்ல, தூதிய மில்லை யுயிர்க்கு" என்ற திருக்குறளையும் †"வழங்கலுந் துய்த்தலுந் தேற்றாதான் பெற்ற, முழங்கு முரசுடைச் செல்வம்...........நாய்பெற்ற தெங்கம் பழம்" என்ற பழமொழிப்பாட்டையுங் காண்க. கைம்மிகல்—எல்லையின்றி மிகுதல். § "காமங் கைம்மிகிற் றாங்குத லெளிதோ" என்புழிப்போல. 'வெம்மை' என்று கொண்டு, 'கொடுமைக்கண்' என்றுங் கூறலாம். உரைத்திசின்—'இசின்'-முன்னிலைக்கண் வந்தது.

மெய்ப்பாடு—இளிவரல். பயன்—செலவழுங்குவித்தல்.

## முல்லை.

[இது, பிரிவிடை ஆற்றாமைகண்டு 'வருவர்' எனச்சொல்லிய தோழிக்குக் கிழத்தி உரைத்தது.]

எ-து,—கிழவன் பிரிந்தவிடத்துக் கிழத்தியது ஆற்றாமையைக் கண்டு அவளை ஆற்றுவித்தல் கருதிய தோழி, 'வருவர்' என்றாளாக, கிழத்தி, 'தோழி! நோயினையுடையோமாதலை அறிந்தும் சேய்மைக்கண்ணுள்ள காட்டிடத்துப் பிரிந்து சென்றார்;(ஆதலின்) நீ கூறுமாறு செப்பமுடையவரல்லர்' என, கிழவன் செப்பமின்மை புலப்படக் கூறுகிற்றல்.

[கருவூர்க்கந்தப்பிள்ளைச்சாத்தனார் பாடியது]

கூச. பல்லா நெடுநெறிக் கன்று வருந்தெனப்
புன்றலை மன்ற நோக்கி மாலை
மடக்கட் குழவி யவண்வந் தன்ன
நோயே மாகுத லறிந்துஞ்
சேயர் தோழி சேய்நாட் டோரே.

*திருக்குறள்-புகழ்—க. †பழமொழி. §நற்றிணை—௩௯.

(இ-ள்):—பலபசுக்களும் நெடிய நெறியிடத்து உள்ள கன்றுகள் வருந்திய என்று, புல்லிய இடத்தையுடைய மன்றத்தை நோக்கி மாலைக் காலத்தில் அறியாமையைப் புலனுக்கும் கண்ணை உடைய கன்றுகள் உள்ள அம்மன்றத்திடத்து வந்தாற்போல, (அவர்வந்தாலன்றி நீக்க இயலாத)நோயினையுடையோ மாதலை அறிந்தும் செப்பமுடையாராயினர்,தோழி! சேய்மைக்கண் உள்ள நாட்டிடத்துச் சேர்ந்தார்.-(எ-று.)

கிழவன் வந்து தலையளிசெய்தலையே எதிர்பார்த்து இருத்தலின், 'பல்லா............நோயேம்' என்றாள். மடக்கண்—அறியாமையைப் புலனுக்கும் கண்; என்றது, மருண்டு மருண்டு நாற்றிசையும் நோக்கும் ஆவினது கன்றின் இயல்புநோக்கி. சேயர்—பிறகுறிப்பு.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—அயர்வுயிர்த்தல்.

## முல்லை.

[ இது, பருவங்கண்டு ஒழிந்த தலைமகள் தோழிக்கு உரைத்தது. ]

எ-து,—தலைமகன் வருவதாய்க் குறித்த கார்காலத்தைக் கண்டு அவன் வாராமையால் அவன்சொல்லில் நம்பிக்கை யற்ற தலைமகள், 'ஆண்மான் துணையோடு வருந்தித் தாவக் கார்காலம், 'பிரிந்தார் வரலை விரும்பி இருந்தீரோ?' என்று வந்தது' என்று தோழியை நோக்கி, 'குறித்தகாலம் வந்தும் வந்திலர்' என்பது புலப்படக் கூறுநிற்றல்.

[ கோவூர்கிழார் பாடியது. ]

கூ௫. வன்பாற் றெள்ளறல் பருகிய விரலைதன்
னின்புறு துணையொடு மறுவந் துகளத்
தான்வந் தன்றே தளிதரு தண்கார்
வாரா துறையுநர் வரனசைஇ
வருந்திநொந் துறைய விருந்திரோ வெனவே.

(இ-ள்.) :—வலிய நிலத்தில் தெள்ளிய நீரைப் பருகிய ஆண்மான், தனது இன்புறுதற்கு ஏற்ற துணையோடு வருந்தித் தாவ வந்தது, குளிர்ச்சியைத் தருங் கார்காலம்; 'வாராமல் (பிரிந்து) உறைவார்வருகையை விரும்பி வருந்தித் துயருடன் தங்குமாறு (தனித்து) இருந்தீரோ?' என்பதாக.-(எ-று.)

தளிதருதண்கார், வாரா.........என, வன்பால்.........உகள, வந்தன்று என்று கூட்டி முடிவுகொள்க. இரலை—ஆண்மான்; * "ஏறு

* தொல்-பொருள்-மரபு—உ.

மேற்றையும்'' என்ற ஆண்பாற்பெயர்ச்சூத்திரத்து, 'இரலை' உளதா தலையும், * ''இரலையுங் கலையும் புல்வாய்க் குரிய'' என விதந் தோதப்பட் டிருப்பதையும் ஓர்க. 'துளிதரு', 'களிதரு' என்பனவும் பாடம்; '(நீர்த்) துளியைத் தரும்,' 'கூடினவர்க்குக் களிப்பைத் தரும்' என்பன பொருள்களாம்.

இறைச்சி:—ஆண்மான் தெள்ளிய நீரைப் பருகித் துணையோடு கூடி இருந்தும் வருந்தித் தாவச் செய்யுங் கார்காலம் என்றதனானே, பிரிவால் உணவை உட்கொள்ளுத லின்றித் தனித்து உறைவாரை என்ன இன்னல் தான் எய்தச் செய்யாதோ? என்பதாம்.

மெய்ப்பாடும் பயனும் முன்னையவே.

## முல்லை.

[இது, பருவங்கண்டு அழிந்த தலைமகளைத் தோழி, 'பருவம் அன்று' என்று வற்புறீஇயது.]

எ—து,—தலைமகன் வரக்குறித்த கார்ப்பருவம் வந்ததை யுணர்ந்து வருந்திய தலைமகளை ஆற்றுவித்தல் கருதிய தோழி, 'கொன்றைகள் வம்ப மாரியைக் காரென்று கருதி இணரூழ்த்த; ஆதலின், உண்மையாய் அறி யாமையை உடையன' என, 'பருவம் அன்று; பட்டது வம்பு' என்று

ர்க் கூ . .

[கோவத்தன் பாடியது.]

௬௬. மடவ மன்ற தடவுநிலைக் கொன்றை
கல்பிறங் கத்தஞ் சென்றோர் கூறிய
பருவம் வாரா வளவை நெரிதரக்
கொம்புசேர் கொடியிண ரூழ்த்த
வம்ப மாரியைக் காரென மதித்தே.

(இ-ள்):—அறியாமையை உடையன உண்மையாக, பெரிய நிலை யினையுடைய கொன்றைகள்; மலைகள் விளங்கும் சுரத்திடத்துச் சென்றோர் வருவதாகக் கூறிய பருவம் வாராத பொழுது, மிகுதியாகக் கிளைகளிற் சேர்ந்த நேரிய பூங்கொத்துக்களை அலரவிட்டன; நிலையற்ற மழையைக் (கண்டு) கார்காலம் என்று மதித்து; (ஆதலால்.)-(எ-று.)

கொன்றை, சென்றோர் கூறிய பருவம் வாரா அளவை வம்பமாரி யைக் காரென மதித்து, இணர் ஊழ்த்த; (ஆதலின்,) மன்ற மடவ என்று கூட்டி முடிவுகொள்க. தடவு நிலை—வளைந்த நிலையுமாம். கல் பிறங்கு

* தொல்-பொருள்-மரபு—சச.

—(பாற்) கற்கள் விளங்கும் என்றுமாம். கொடி—ஒழுங்கு. வம்பு—நிலையின்மை; *"வம்பு நிலையின்மை" என்பது உரியியல்; இது, †"வம்பப் பரத்தை" என்புழிப்போல, அகரச்சாரியை பெற்று, மாரியை அடுத்து நின்று, பருவமல்லாதபருவத்து மழையை உணர்த்திற்று. 'வம்பு மாரியை' என்றும் பாடம்.

மெய்ப்பாடு—இளிவரலைச் சார்ந்த பெருமிதம். பயன்—தலைமகளை ஆற்றுவித்தல்.

## பாலை.

[இது, பிரிவிடை ஆற்றாது தலைமகள் தோழிக்கு உரைத்தது.]

எ—து,—தலைமகன் பிரிந்தவிடத்துத் துயரைப் பொறாது தலைமகள், 'தோழி! காடிறந்தோர் நம்துயரைக் கருதார்கொல்?' எனத் தலைமகன் கொடுமை புலப்படக் கூறுநிற்றல்.

[அள்ளூர் நன்முல்லை பாடியது.]

எசு. உள்ளார் கொல்லோ தோழி கிள்ளை
வளைவாய்க் கொண்ட வேப்ப வொண்பழம்
புதுநா ணுழைப்பா னுதிமாண் வள்ளுகிர்ப்
பொலங்கல வொருகா சேய்க்கு
நிலங்கரி கள்ளியங் காடிறந் தோரே.

(இ—ள்):—(வாராராயினும் பிரிவினால் நாம் படுந்துயரை நெஞ்சாலும்) கருதார்கொல்; தோழி! கிளிகள் முனை மாட்சிமைப்பட்ட கூரிய உகிராற் பற்றி வளைந்த வாயிடத்துக் கொண்ட வேம்பின்ஒள்ளிய பழம், புதிய நாணின் நுழைப்போடு கூடிய பொன்னணியின்ஒருகாசுபோலத் தோன்றும், நிலமும் கரியும் கள்ளிகள்நிறைந்த காட்டிடத்துச் சென்றோர். (எ—று)

கிள்ளை நுதிமாண் வள்ளுகிர் வளைவாய்க் கொண்ட வேப்பவொண் பழம் புதுநாணுழைப்பான் பொலங்கலஒருகாசு ஏய்க்கும் என்று கூட்டியுரைக்கப்பட்டது. நுழைப்பான்—ஆன்உருபு ஒடுஉருபின் பொருளில் வந்தது. காடிறந்தோர் உள்ளார்கொல்? என்க. நிலமும் என்னும் சிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது.

இறைச்சி:—கிள்ளை உணவின்பொருட்டு வாயிற் கொண்ட வேப்பம் பழம் பொலங்கலக்காசுபோலத் தோன்றும்காடு என்றதனானே, ஈட்டலைக் குறித்துக் கைக்கொண்ட இன்னாத பிரிவும் அவர்க்கு இனிமைதருவதாயிற்று; அன்பின்மையின் என்பதாம்.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—அயர்வுயிர்த்தல்.

---

* தொல்—சொல்—உரி—உக. † சிலப்பதி—நாடுகாண்—உகக.

## குறிஞ்சி.

[இது, பிரிவிடைக் கிழத்தி மெலிந்து கூறியது.]

எ—து,—கிழவன் பிரிந்தவிடத்துக் கிழத்தி மெலிவை அடைந்து, 'முன்பனிக்காலத்து உளதாகும் துன்பத்தை ஒழிக்கும் மருந்து, அவர்தம் மணந்த மார்பே; பிறிது இல்லை' எனக் கூறுநிற்றல்.

[அள்ளூர் நன்முல்லை பாடியது.]

கூஅ. பூழ்க்கா லன்ன செங்கா லுழுந்தி
னூழ்ப்படு முதுகா யுழையினங் கவரு
மரும்பனி யச்சிரந் தீர்க்கு
மருந்துபிறி தில்லையவர் மணந்த மார்பே.

(இ—ள்):—குறும்பூழ்ப் பறவையினது காலைப் போன்ற செய்ய தாளையுடைய உழுந்தினது உதிர்தல்பொருந்திய முதிர்ந்த காயை மானினம் (உணவாகக்) கொள்ளும் (தனித்தார் தாங்குதற்கு) அரிய குளிரினையுடைய முன்பனிக்காலத்துக்கொடுமையைத் தீர்க்கும் மருந்து, அவரது கூடிய மார்பே; வேறு இல்லை.—(எ—று.)

பூழ்—'குறும்பூழ்' என்பதன்குறை; காடை; கானங்கோழியுமாம். மார்பே—ஏ தேற்றம்; பிரிநிலையுமாம். மார்பே அச்சிரம் தீர்க்கும் மருந்து, பிறிது இல்லை என மாற்றியுரைக்கப்பட்டது. அச்சிரம்—ஆகுபெயர். 'உழுந்து' 'உளுந்து' என்று வழங்கப்படுகின்றது.

இறைச்சி.—மானினம் உழுந்தின் காயைக் கவரும் அச்சிரம் என்றதனானே, விலங்கும் தனக்கு வேண்டிய நுகர்ச்சியை இனத்தோடு பெற்று மகிழாநிற்கும் இக்காலத்து, யானே தனித்து எவ்வகைநுகர்ச்சியும் இன்றித் துன்பமுறலானேன்; என்செய்வேன்! என்பதாம்.

மெய்ப்பாடும் பயனும் முன்னையவே.

## குறிஞ்சி.

[இது, தோழி இரவுக்குறிமறுத்தது.]

எ—து,—தலைமகன் இரவுக்குறியிடத்துக் கூடி ஒழுகுகின்றுழி, தோழி, 'நாட! நெடுமொன் வாரல்; வருந்துவோம் யாம்' என்று, இரவுக்குறி மறுத்து வரைவுகடாதல் புலப்படக் கூறுநிற்றல்.

[கடுந்தோட்கரவீரன் பாடியது.]

௬௯. கருங்கட் டாக்கலை பெரும்பிறி துற்றெனக்
கைம்மை யுய்யாக் காமர் மந்தி
கல்லா வன்பறழ் கிளைமுதற் சேர்த்தி
யோங்குவரை யடுக்கத்துப் பாய்ந்துயிர் செகுக்குஞ்
சார னாட நடுநாள்
வாரல் வாழியோ வருந்துதும் யாமே.

(இ-ள்):—பெரிய கண்ணையும் வலியையு முடைய ஆண்குரங்கு, 'இறந்துபாட்டை எய்தியது' என்று கைம்மையோ டிருந்து பிழைத்தலை விரும்பாத அழகிய பெண்குரங்கு, பாய்தலைக் கல்லாத வலிய குட்டியைக் கிளையின் அடியிற் சேரவைத்து, உயர்ந்த மூங்கில்களையுடைய மலையி லிருந்து கீழேபாய்ந்து, உயிரை ஒழித்துக்கொள்ளும் சாரலையுடைய நாட! நடுஇரவில் வாராதி; வருந்துவோம் யாம்.—(எ-று.)

தா—வலி. கலை—ஆண்டு ஆண்குரங்கு. பெரும்பிறிது—இறந்துபாடு; * "பேழ்வா யுழுவையைப் பெரும்பிறி துறீஇ" என்புழிப்போல. கைம்மை—கணவனை இழந்தார் கைக்கொள்ளும் நோன்பு. 'காமர் மந்தி' என்றது, பாய்தல்கல்லாத குட்டியைப் பாதுகாத்தலையும் விட்டுஅதனைக் கீழிடத்து விடற்காம் பொழுதையும் பொறாது கிளையடியிற் சேர்த்தி கணவற்கு உரிய தான உடலை உடனே ஒழிக்கக்கருதிய உயர்வுநோக்கி. "உற்றார்க் குரியர் பொற்றொடி மகளிர்" என்பதனானும், 'அங்கனை' என்ற வடமொழிப் பெயரானும் மகளிர்மெய் அவர்க்கு உரிமையாகாமை உணர்க. 'அடுக்கத் துப் பாய்ந்து'—அடுக்கத்து இருந்து கீழேபாய்ந்து; 'வரைபாய்தல்' என் புழிப் போல. வாழி, ஓ—அசைநிலைகள். இரவில் வருவதால் ஆற்றின்கண் வரும் ஊறுகளைக் கருதி, 'வருந்துதும் யாம்' என்றாள். நடுநாள்—நடு இரவு; நாள் இரவையும் குறித்தலை, † "அல்க நிவாப்பக லாணியங் திவசு மேல்லையெல் வைக றினமிவை நாளே" என்றதனன் அறிக.

இறைச்சி:—பெண்குரங்கு கைம்மையைக் கைக்கொள்ளாது அடுக் கத்துப் பாயும் சாரனுடன் என்றதனானே, நின்மலையகத்து அஃறிணையா கிய விலங்கும் பேரறிவுடையதாய் ஒழுக, நீமட்டிலும் களவைக் காதலித்து நல்லறமாகிய இல்லறத்தைக் கைக்கொண்டிலை; ஆதலின், நின்தகுதிக்கு இது தகாது என்பதாம்.

மெய்ப்பாடு—இளிவரலைச் சார்ந்த அச்சம். பயன்—இரவுக்குறி மறுத்து வரைவுகடாதல்.

---

* பிங்கலந்தை—வானவர்வகை—௧௧௬. † புறநானூறு க்ஙெ௨—௨.

## குறிஞ்சி

[இது, புணர்ந்து நீங்குந் தலைமகன் தன்னெஞ்சிற்குச் சொல்லியது.]

எ-து,—தலைமகளைக் கூடிப் பிரியுந் தலைமகன், தன்னெஞ்சை நோக்கி, 'குறுமகள்தான், நறுந்தண்ணீரள்; ஆரணங்கன்னாள்; அவளைப் புனையும் அளவை அறியேன்; அவள்கிளவிகள் சிலவாய் மெல்லியவாய் இருந்தன; கூடுங்கால் அணைதற்கும் மெல்லியலே' எனத் தனது அன்புமிகுதியாற் பாராட்டிக் கூறுகின்றல்.

[ஓரம்போகியார் பாடியது.]

எ0. ஒடுங்கீ ரோதி யொண்ணுதற் குறுமக
ணறுந்த ணீர ளாரணங் கினளே
யினைய ளென்றவட் புனையள வறியேன்
சிலமெல் லியவே கிளவி
யணைமெல் லியல்யான் முயங்குங் காலே.

(இ-ள்): —தாழ்ந்த நெய்த்த கூந்தலையும், ஒள்ளிய நெற்றியினையுமுடைய சிறிய மகள், நறிய குளிர்ந்த சீர்மையினை யுடையளாய் அரிய அணங்கினை யன்னு ளாயினள்; (ஆதலின்,) 'இத்தகையள்' என்று, அவளைப் புனைந்து உரைத்தற்கு ஏற்ற அளவை அறியேன்; சிலவாயும் மெல்லியவாயும் இருந்தன அவள்கிளவிகள்; அணைதற்கு மெல்லியலாயினுள் யான் முயங்கும் பொழுது.—(எ-று)

ஒடுங்குதல்—தாழ்தல். நறும் தண் நீரள்—நறுவிய குளிர்ந்த நீரை யன்னளுமாம். 'புனையளவு அறியேன்' என்றது, எல்லையின்றிப் புகழ வேண்டும் என்பதாம். புனை, அணை—முதனிலைத்தொழிற்பெயர்கள். மொழி சிலவாயிருத்தல் அழகுடையது என்பதை, *"பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற, சிலசொல்ல றேற்றா தவர்" என்பதனுன் அறிக. 'யாமுயங்கும்' என்ற பாடத்திற்கு, நெஞ்சையும் உளப்படுத்திக் கூறினுன் என்க.

மெய்ப்பாடு—உவகை. பயன்—நயப்புரைத்தல்.

## பாலை.

[இது, பொருள் கடைக்கூட்டிய நெஞ்சிற்குத் தலைமகன் சொல்லிச் செலவழுங்கியது.]

---

*திருக்குறள்—சொல்வன்மை—கூ.

எ-து,—வரைவிடைவைத்துப் பொருள்வயிற் பிரிந்த தலைமகன், வரைவிற்கு வேண்டிய பொருளை முடித்தும் மீண்டும் பொருளீட்டலை விழைந்த நெஞ்சினை நோக்கி, 'நெஞ்சே! கானவர் மகளை நல்குவர்; அவள்தான்' மருந்தே, வைப்பே' என மீளுதற்கு ஒருப்படுமாறு கூறுநிற்றல்.

[கருவூரோதஞானி பாடியது.]

எக. மருந்தெனின் மருந்தே வைப்பெனின் வைப்பே
யரும்பிய சுணங்கி னம்பகட் டிளமுலைப்
பெருந்தோ ணுணுகிய நுசுப்பிற்
கல்கெழு கானவர் நல்குவர் மகளே.

(இ-ள்):—(நெஞ்சே! இனிமைதரும் இயல்பினால்) 'அமிழ்தம்' எனின், அமிழ்தமே ஆவாள்; (எல்லாப்பொறிகளும் நுகர்ச்சியை எய்தச் செய்தலின்,) 'வைப்பு' எனின், வைப்பே ஆவாள்; தோன்றிய தேமலை யுடைய அழகிய பெரிய இளையவான முலையினையும், பெரிய தோளினையும், சிறிய இடையினையு முடைய மகளை, (அவள்தமராகிய) மலை மிக்க கானத்தை யுடையார் நல்குவர்; (அவட்காம்பொருளைக் கடைக்கூட்டி னமையின்.)—(எ-று.)

மருந்து—அமிழ்தம் வைப்பு—(எய்ப்பினி லுதவ ஈட்டி) வைப்பது பொருள்;* "அஃதன்றே, எய்ப்பினில் வைப்பென்பது" என்பது காண்க. மருந்தே, வைப்பே-இவற்றில் ஏகாரங்கள்—தேற்றப்பொருளன. பகட்டு—பெருமை, † "அம்பகட் டெழில்ய செம்பொறி யாகத்து, மென்மையின் மகளிர்க்கு" என்புழிப்போல; வலிமையு மாம். 'பெருந்தோ ணுணுகிய நுசுப்பின்' என்றதிற் பொருண்முரண் காண்க. 'நல்குறுமகளே' என்ற பாடத்திற்கு—'பெற்றமகள்' என்க. மகள், மருந்தே, வைப்பே என்க.

மெய்ப்பாடு—இளிவரல். பயன்—செலவழுங்குவித்தல்.

## குறிஞ்சி.

[இது, தலைமகன், தன் வேறுபாடுகண்டு வினவிய பாங்கற்கு உரைத்தது.]

எ-து,—'இவ்வேறுபாடு எற்றினான் ஆயது?' என்றுவினாவிய பாங்கற்குத் தலைமகன், 'தினையிடத்துக் கிளிகடிவாள்கண் எல்லாரும் உணருமாறு நோய்செய்தது' எனத் தனக்கு அவள் இன்றியமையாமை புலப்படக் கூறுநிற்றல்.

---

*பழமொழி. † புறநானூறு—கஅ-ஙு.

[மள்ளனார் பாடியது.]

௭௨. பூவொத் தலமருந் தகைய வேவொத்
தெல்லாரு மறிய நோய்செய் தனவே
தேமொழித் திரண்ட மென்றோண் மாமலைப்
பரீஇ வித்திய வேனற்
குரீஇ யோப்புவாள் பெருமழைக் கண்ணே.

(இ-ள்):—தாமரைப் பூவினைப்போலச்சுழலுந் தகையனவாய்(மகிழ்ந்து) அம்பினை நிகர்த்து எல்லாரும் உணரும்படி (பின்னர்)நோவினைச் செய்தன; தேன்போன்ற மொழியினையும், திரண்ட மெல்லிய தோளையு முடையளாய், பெரிய மலையிடத்து விரும்பி விதைத்த தினையிடத்துக் குருவிகளை ஓட்டுவாளது பெரிய குளிர்ந்த கண்கள்.—(எ—று).

பூ—தாமரை என்றது, * "பூவிற்குத் தாமரையே" என்ற சிறப்பால். அலமரல்—சுழலுதல்; § "அலமர றெருமர லாயிரண்டுஞ் சுழற்சி" என்பது உரியியல். தேமொழி........கண், பூவொத்து........நோய்செய்தன எனக் கூட்டி முடிவுகொள்க.

மெய்ப்பாடு—இளிவரல். பயன்—பாங்கற்கு அறிவித்தல்.

## குறிஞ்சி.

[இது, பகற்குறிமறுத்து, இரவுக்குறிநேர்ந்து, அதனையும் மறுத்தமைபடத் தலைமகட்குத் தோழி சொல்லியது.]

எ—து,—வரைவினை விழையாது களவின்றுகர்தலையே காமுற்ற 'தலைமகன் தலைமகளின் அருமையை உணர்ந்து, இவ்வொழுகலாறே இனித்தகாது' என்று வரைந்து கொள்வதைக்கருதி பகற்குறிக்கண் வரும் ஏதங்கூறி மறுத்து, இரவுக்குறிஉடன்பட்டு அதனையும் அங்ஙனமே மறுத்த தோழி, தலைமகளை ஆற்றுவித்தல்கருதி, 'தோழி! நீ தலைவன் மார்பை விழைந்தனை; எனினும், (அதனை இடையறாது எய்தற்கு ஏற்ற சூழ்ச்சியும் சிறிது வேண்டும்' என வரைவு கடாவினமை புலப்படக் கூறுகிற்றல்.

[பரணர் பாடியது.]

௭௩. மகிழ்நன் மார்பே வெய்யை யானீ
யழியல் வாழி தோழி நன்ன
னறுமா கொன்று நாட்டிற் போக்கிய
வொன்றுமொழிக் கோசர் போல
வன்கட் சூழ்ச்சியும் வேண்டுமாற் சிறிதே.

* திருவள்ளுவமாலை—நடசு. § தொல்—சொல்—உரி—௧௩.

(இ-ள்):—மகிழ்நனது மார்பையே விரும்பினாய்; ஆதலால், நீ வருந்தாதி; தோழி! 'நன்னன்' என்பானது சிறந்த (பட்டத்து) யானையைக் கொன்று (அவனது) நாட்டிற் போகவிட்ட (வாய்மை) பொருந்திய சொல்லினையுடைய 'கோசர்' (என்பார்தம் சூழ்ச்சி) போல, இரக்க மற்ற சூழ்ச்சியும் சிறிது வேண்டும். -(எ-று.)

மார்பே—ஏ-பிரிநிலை. வெய்யை—'வெம்மை'என்னும் பண்படியாகப் பிறந்த குறிப்புமுற்று; * "வெம்மை வேண்டல்" என்றார் உரியியலில். ஆல்—ஆதலால். நன்னன்—கொடியனாகிய ஒரு சிற்றரசன், † "பெண் கொலை புரிந்த நன்னன் போல, வரையா நிரயத்துச் செலீஇயர்" என்றதுங் காண்க. ஒன்று மொழி—மனத்தொடு பொருந்திய மாறுபாடாத சொல்; § "நல்லூர்க் கோசர் நன்மொழி போல, வாயாகின்று" என்றதுங் காண்க. கோசர்—படைப்பயிற்சியிற் சிறந்தவராகிய ஒரு மரபினர்; இதனை, ‡ "இளம்பல் கோசர் விளங்குபடை கன்மா, றிகலின ரெறிந்த வகலிலை முருக்கின், பெருமரக் கம்பம் போலப், பொருநர்க் குலையா நின்வலன்" என்ற புறப்பாட்டான் ஓர்க. வன்கட்சூழ்ச்சி—இரக்க மின்றி இருபொழுதும் மறுத்து விரைய வரையச் சூழும் சூழ்ச்சி.'ஞாட்பிற் போக்கிய' என்ற பாடத்திற்கு-'போரிற் செல்ல விட்ட' என்பது பொருள்.

மெய்ப்பாடு—இளிவரலைச் சார்ந்த பெருமிதம். பயன்—தலைமகளை ஆற்றுவித்தல்.

## குறிஞ்சி.

[இது, தோழி தலைமகன் குறைமறாத வாற்றாற் கூறியது.]

எ-து,—தலைமகன் குறையுற்று நின்றவிடத்து, தோழி, தலைமகளிடத்தில், 'நாடன் தன்னைக்கருதி நாம் இருந்தமையை அறியான்; 'நம் நலத்தை நயந்து வருந்தினன்' என்று தான் பலபடமறுத்தமை புலப்படக் குறைமறாதவாறு கூறுநிற்றல்.

[விட்டகுதிரையார் பாடியது.]

௭௪. விட்ட குதிரை விசைப்பி னன்ன
விசும்புதோய் பசுங்கழைக் குன்ற நாடன்
யாந்தற் படர்ந்தமை யறியான் றானும்
வேனிலா னேறு போலச்
சாயின னென்பநம் மாணல நயந்தே.

---

* தொல்-சொல்-உரி—௩௬. † குறுந்தொகை. ௨௯௨—௫,௬.
§ குறுந்தொகை—௧௫. ௩,௪. ‡ புறநானூறு—௧௬௯—௧,௪௦, ௧௧.

(இ-ள்):—(கட்டை அறுத்துத் தட்டின்றிச் செல்லும்படி) விட்ட குதிரையினது வியப்பைத் தரும் செலவினைப் போல, விசும்பிற் சென்று தோய்ந்த பசிய மூங்கில்கள் பொருந்திய குன்றத்தை யுடைய நாடன், யாம் அவனை நினைத்திருந்தமையை அறியான்; அவன்றானும் வேனிற் காலத்து (நீரும் நிழலுங் கிட்டாது வருந்தும்) ஆனின் ஏற்றைப் போல வருந்தினன், நமது சிறந்த நலத்தை விரும்பி; (ஆதலின், அவனை ஏற்றுக் கொள்ளுதலன்றித் தள்ளுதல் தகாது.-(எ-று.)

நாடன் படர்ந்தமை அறியான், நலம்நயந்து, ஏறுபோலச் சாயினன் என்று முடிவுகொள்க. படர்தல்—நினைத்தல்; *"படரே யுள்ளல் செலவு மாகும்" என்றார் உரியியலில். தானும்—உம்மை—எச்சப்பொருளது; நாமும் வருந்திய தன்றி என்று பொருள்பயத்தலான். என்ப—அசைநிலை. 'விட்ட குதிரை' என்று எடுத்தாண்ட தொடர்ச்சிறப்பை நோக்கி இதன் ஆசிரியர் 'விட்டகுதிரையார்' என்று பாராட்டப் பெற்றார் போலும்.

மெய்ப்பாடு—இளிவரல். பயன்—குறைநயப்பித்தல்.

## மருதம்.

[இது, தலைமகன்வரவுணர்த்திய பாணற்குத் தலைமகள் கூறியது.]

எ-து,—பரத்தையிற் பிரிந்தமை உணர்ந்து ஊடிய தலைமகளின் ஊடல் ஒழிப்பான் கருதித் தலைமகன் வரவிட்ட பாணன் வந்து, தலைமகன் வரவைத் தெரிவித்தவழி, தலைமகள் 'நீ (அவன் வருகையைக்) கண்டனையோ? கண்டாரைக் கேட்டனையோ? உண்மையைச் சொல்; பொன்னை மிகுதியாகப் பெறுதற்குக் காதலர்வரவைக் கூறவேண்டுதலை யார்வாய்க் கேட்டறிந்தனை?' என அவன் பொய்யுரைக்கின்றமை புலப்படக் கூறுநிற்றல்.

[படுமரத்துமோசிகீரனார் பாடியது.]

எரு. நீகண் டனையோ கண்டார்க் கேட்டனையோ
ஒன்று தெளிய நசையின மொழிமோ
வெண்கோட் டியானை சூஞ்சுனை படியும்
பொன்மலி பாடலி பெறீஇயர்
யார்வாய்க் கேட்டனை காதலர் வரவே.

(இ-ள்):—நீ (தலைமகன்வருகையைக்) கண்டனையோ? (அன்றிக்) கண்டவர்களைக் கேட்டனையோ? (இவ்விரண்டினுள்) ஒன்றைத் தெரிந்து கொள்ள விருப்புடையோம்; சொல்; வெள்ளிய கோட்டை யுடைய

*தொல்-சொல்-உரி—சஉ.

யானை அழகிய சுனையிடத்துப் படியும்; (ஆதலின், பரத்தையர் தனித்தாராய்ச் சென்றுடைவிடாது தானும் அவ்விடத்து உறைவன் தலைமகன்;) பொன்னின் மிகுதியைப் பெருமை இல்லாதோய்! பெறுதற்பொருட்டு எவர்வாயிற் கேட்டனை? காதலர் வருகையை (உரைத்தற்கு.)—(எ-று.)

'பாடிலி' என்றது பாணனை; அவன் பரத்தையர் பலரிடத்தும் தலைவற்காகப் பொய்கூறுதலானும், தன்னிடமும் பொய்கூற வந்தமையானும், 'முன் பலர் தலைவன்வருகையைக் கூறி என்னிடம் பொன்னைக் கொண்டே பெற்றுச் சென்றார்கள்; அவருள், எவரிடம் இங்ஙனங் கூறக் கற்றனை?' என்பாள், 'பொன்மலி.........வரவே' என்றாள்; காதலன் வருகையில் அவளுக்கு உள்ளதாம் மகிழ்ச்சியும் புலப்படல் காண்க 'கண்டனையோ? கேட்டனையோ? மொழி' என்று, பின்னர் 'யார்வாய்க் கேட்டனை' என்றாள், பொய்கூறுகின்றான் என்ற துணிவினால்.

மெய்ப்பாடு—இளிவரலைச் சார்ந்த நகை. பயன்—ஊடலொழிதல்.

## குறிஞ்சி.

[இது, பிரிவுணர்த்தச் சென்ற தோழிக்கு, அவர் பிரியுமுன்னர் உணர்ந்த தலைமகள் சொல்லியது.]

எ-து,—தலைமகன் பிரிவைத் தலைமகளுக்கு உணர்த்தச் சென்ற தோழிக்கு, அவர் பிரிவதன்முன்னரே அறிந்துள்ள தலைமகள், 'வரைமார்பன், வாடை வீசும் பனிக்காலத்து வருந்தச்செய்தலென்?' என, அவர் பிரிவைத் தான் முன்னரே யுணர்ந்தமை புலப்படக் கூறுகிற்றல்.

[கிள்ளிமங்கலங்கிழார் பாடியது.]

எசு. காந்தள் வேலி யோங்குமலை நன்னாட்டுச்
செல்வ னென்ப வோங்கல் வரைமார்பன்
சிலம்பிற் சேம்பி னலங்கல் வள்ளிலை
பெருங்களிற்றுச் செவியின் மானத் தைஇத்
தண்வரல் வாடை தூங்குங்
கடும்பனி யச்சிர நடுங்களு றுறவே.

(இ-ள்):—காந்தளா லாகிய வேலியினைக் கொண்ட உயர்ந்த மலைகளையுடைய நல்ல நாட்டில் (வரும்) செல்வத்தினை யுடையானும், உயர்ந்த மலையைப்போன்ற மார்பினை யுடையானு மாகிய தலைமகன், மலையிடத்துச் சேம்பினது அசையும் வளவிய இலை, பெரிய களிற்றினது செவியை நிகர்க்

கும்படி தைத்திங்களிற் குளிர்ச்சி வருதலை யுடைய வாடை அசைந் தலா வும் கடிய பனியையுடைய முன்பனிக்காலத்து, நடுங்குந் துயரை (நாம்) உழமாறு (பிரிதல் எதற்கு?).—(எ—று).

'பொருண்முட்டுப்பாடும் பகையும் இலன்' என்பது தோன்ற 'காந்தள் ............மார்பன்' என்றாள். என்ப—அசைநிலை. தைஇ—தைத்திங்கள்; அது, முன்பனியின் பின்திங்கள். வாடை—வடகாற்று.

இறைச்சி:—அசைகின்ற சேம்பின் இலை, களிற்றுச்செவியை மான வாடை வீசும் பனியையுடைய அச்சிரம் என்றதனானே, இனியதான அவன் கூட்டம், பிரிந்திடுவான் என்ற எண்ணத்தை விளைவிக்க, அதனால் அச்சந் தருவதாயிற்று என்பதாம்.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—அயர்வுயிர்த்தல்.

## பாலை.

[இது, பிரிவின்கண் ஆற்றாளாகிய தலைமகள் தோழிக்குச் சொல்லியது.]

எ—து,—தலைமகன் பிரிவிடத்து அதனைப் பொறாளாகிய தலைமகள், தோழியை நோக்கி, 'தோழி! தவறுகள் எவையும் இல; கானஞ்சென் றோர்க்கு எனது மெல்லிய தோள் எளியவாயிருந்தன' என்று, 'அதனா னன்றோ அருந்துயர் பொருந்த வருந்த லாயிற்று' என்பது புலப்படக் கூறுகிற்றல்.

[மதுரைமருதனிளநாகனார் பாடியது.]

எஎ. அம்ம வாழி தோழி யாவதுந்
தவறெனிற் றவறோ விலவே வெஞ்சுரத்
துலந்த வம்பல ருவலிடு பதுக்கை
நெடுநல் யானைக் கிடுநீ ழாகு
மரிய கானஞ் சென்றோர்க்
கெளிய வாகிய தடமென் றோளே.

(இ—ள்):—கேட்பாயாக, தோழி! வாழ்வாயாக; தவறு உண்டோ எனின், தவறுகளோ சிறிதும் இல்லன வாகும்; கொடிய சுரத்தில், ஈரமற்ற புதுமையினையுடையார் மேலே இட்டுவைத்த இலைக்குவியலை நெடிய நல்ல யானைக் கென்று படுகுழியின்மேல் பரப்பி வைக்கும் இயல்பினையுடைய தாகிய அரிய கானத்திடத்துச் சென்றார்க்கு எய்தற்கு எளியவாய் இருந் தன, (எனது) பெரிய மெல்லிய தோள்கள்.—(எ—று).

தோழியின் புறக்கணிப்புத் தோன்ற, 'அம்ம, வாழி' என்றாள். யாவதும்—சிறிதும்; * "யாவதுஞ், சினையலர் வேம்பன் றேராளுகி' என்புழிப் போல. 'பிரிவொடு, சென்ற ஆற்றின்கொடுமையும் வருத்தந்தரும்' என்பாள், 'வெஞ்சுரத்து ..........கானம்' என்றும், 'தவறுகள் சிறிதும் இல; எனது தோள் அவர்க்கு எளிய ஆயின; அஃதே ஒரு தவறுபோலும்; அரியவா யிருந்திருப்பின், இத்துயர் அணுகா தன்றே?' என்பாள், 'தவறெனின் ........இல; சென்றோர்க்கு ......தோள்' என்றுங் கூறினாள். ஈற்றிரண்டடிகளில் எதுகைமுரண் காண்க.

மெய்ப்பாடும் பயனும் முன்னையவே.

## குறிஞ்சி.

[இது, பாங்கன் தலைமகற்குச் சொல்லியது.]

எ-து,—பாங்கற்கூட்டத்தை விழைந்து வந்த தலைமகற்குப் பாங்கன் 'வெற்ப! காமம் பெரும்பேதைத்து; ஆதலின், நோவத்தக்கது' எனக் கழறிக் கூறாநிற்றல்.

[நக்கீரனார் பாடியது.]

எஅ. பெருவரை மிசையது நெடுவெள் ளருவி
முதுவாய்க் கோடியர் முழவிற் றதும்பிச்
சிலம்பி னிழிதரு மிலங்குமலை வெற்ப
நோதக் கன்றே காமம் யாவது
நன்றெனை வுணரார் மாட்டுஞ்
சென்றே நிற்கும் பெரும்பே தைத்தே.

(இ-ள்):—பெரிய மலையின் மேலிடத்ததான நெடிய வெள்ளிய அருவி, முதிர்ந்த வாய்மையையுடைய கூத்தரது முழவினைப் போல (ஒலியுடன்) வழிந்து மலையினின்று இழியும் விளங்குகின்ற அஞ்சத்தக்க வெற்பனே! வருந்தத்தக்கதாகும் அன்றே காமம்! (அதுதான்), சிறிதும் நன்மைதருவது என்று உணராதாரிடத்துச் சென்று நிலைக்கும் பெரும் பேதைமையை யுடையதே; (ஆதலால்.).—(எ-று.)

'பழிச்சொல்லைப் பாராய்' என்பதுபற்றிப்போலும், 'பெருவரை...... வெற்ப' என விளித்தது. 'நோவத்தக்கது அன்றே' என்றிருத்தற்பாலது, 'நோதக்கன்றே' என்று விகாரப்பட்டது. § "சினனே காமம்......அறந் தெரி திகிரிக்கு வழியடை யாகும்" என்பவாகலான், சென்றாங்கே சென்

* சிலப்பதிகாரம்-பதிகம்—உஎ, உஅ.
,, கொலைக்களக்காதை—கசஅ, கசக.
§ பதிற்றுப்பத்து-ஐ-ம்பத்து.—க-ச.

ளுழுகும் இயல்பினதாய சாமம், பகுத்துணர்வில்லாரைப் பற்றி நிற்கு மாறுதோன்ற, 'யாவதும்......நிற்கும்' எனப்பட்டது. மாட்டும்—உம்மை இசைநிறை.

மெய்ப்பாடு—இளிவரல். பயன்—தலைவனைக் கழறல்.

## பாலை.

[இது, பிரிவிடத்துத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.]

எ-து,—பொருள்வயிற் பிரிந்த தலைமகனை நினைந்த தலைமகள், 'சொல்லாது பிரிதல்வல்லார், அத்தம் நண்ணிய சிறூர்ச்சேர்ந்தனர்கொல்?' என, தலைமகன் பொருள்கடைக்கூட்டாது மீண்டிடுவானோ' என்ற கவற்சி புலப்படத் தோழிக்குச் சொல்லாநிற்றல்.

[கூடவாயிற்கீரத்தனார் பாடியது.]

எகூ. கான யானை தோனயந் துண்ட
பொரிதா ளோமை வளிபொரு நெடுஞ்சினை
யலங்க லுலவை யேறி யொய்யெனப்
புலம்புதரு குரல புறவுப்பெடை பயிரு
மத்த நண்ணிய வங்குடிச் சீறூர்ச்
சேர்ந்தனர் கொல்லோ தாமே யாந்தமக்
கொல்லே மென்ற தப்பற்
சொல்லா தேகல் வல்லு வோரே.

(இ-ள்):—காட்டு யானைகள் தோலை விரும்பியுண்ட பொரிந்த தாளோடு கூடிய ஓமையினது காற்றுத்தாக்கும் நெடிய கிளைகளுள் அசையும் உலர்ந்த கிளையின்மேல் ஏறி விரைவாக வருத்தத்தைப் புலப்படுத்துங் குரலையுடையவாய்ப் புறாக்களின்பெடைகள் (தம்துணையை) அழைக்கும் சுரத்திற் பொருந்திய அழகிய குடிகளையுடைய சிறிய ஊரைச் சேர்ந்தார் கொல்? யாம் அவர்தமக்குப் (பிரிவால் உளதாகும் துயரைப்) 'பொறேம்' என்ற தவறுகருதிச் சொல்லாது செல்லுதலில் வல்லுநரான கணவர்.— (எ-று).

கொல், ஓ—வினாவும், அசையும். 'பொறிதாள்' 'ஒல்லோம்' 'சொல் லாதகறல்' என்பன பாடபேதங்கள்.

இறைச்சி:—புலம்புதருகுரலவாய்ப் புறவுப்பெடை பயிரும் அத்தம் என்றதனானே, 'இயற்கையில் நந்திறத்துப் பேரன்புடையார், அதனைக் கேட்டுப் பொருள்கடைக்கூட்டாது மீண்டிடுவரோ?' என்பதாம்.

மெய்ப்பாடு—இளிவரல். பயன்—ஆற்றுமாறறிவித்தல்.

## மருதம்,

[இது, தலைமகட்குப் பாங்காயினர் கேட்பப் பரத்தை சொல்லியது.]

எ-து,—தலைமகள் தன்னைப் புறங்கூறினாளாகக்கேட்ட பரத்தை, அவட்குப் பாங்காயினர் கேட்ப, 'யாம் புனலிடத்து விளையாடுவோம்; அஞ்சுவாளாயின், கொழுநன்மார்பைக் காக்க' என நகையாடிக்கூறுநிற்றல்.

[ஔவையார் பாடியது.]

அ0. கூந்த லாம்பன் முழுநெறி யடைச்சிப்
பெரும்புனல் வந்த விருந்துறை விரும்பி
யாமஃ தயர்கஞ் சேறுந் தானஃ
தஞ்சுவ துடைய ளாயின் வெம்போர்
நுகம்படக் கடக்கும் பல்வே லெழினி
முனையான் பெருநிரை போலக்
கிளையொடு காக்கதன் கொழுநன் மார்பே.

(இ-ள்):—கூந்தலிடத்து ஆம்பலின் முழுநெறிப்புள்ள முகையைச் செருகி மிகுந்த நீர்வந்த பெரிய (நீர்த்) துறையை விரும்பி யாம் அப்புனல் விளையாட்டைச் செய்வோமாய்ச் செல்வோம்; அவள்தான், அவ்விளையாட்டை அஞ்சுதலைக் கொண்டாளாயின், வெய்ய போரிடத்துத் தூசிப்படை அழியும்படி மேலேறிச்செல்லும் பலவேல்களையுடைய 'எழினி' என்பானது முனையிடத்துப் பெரிய மள்ளர்திரளைப் போல, சுற்றத்தாரோடும்கூடிக் காப்பாளாக; தனது கொழுநன்மார்பை (நாம் பெறுதபடி).—(எ-று).

முழுநெறி—முழுநெறிப்புள்ள முகை. 'விருந்திறை' என்ற பாடத்திற்கு விருந்தோடுதங்குதலை என்க. அயர்கம்—முற்றெச்சம். எழினி—கடையெழுவள்ளல்களில் ஒருவன். முனையான்—உருபுமயக்கம். நிரை—ஈண்டு, மள்ளர்திரள். கிளை—ஈண்டு, மகளிர்திரள்.

மெய்ப்பாடு—நகை. பயன்—தலைவியைப் பழித்தல்.

## நெய்தல்.

[இது, தோழியிற் கூட்டங்கூடிப் பிரியுந் தலைமகற்குத் தோழி சொல்லியது.]

எ-து,—தோழியாற் கூடுங் கூட்டம்பெற்று மீளும் தலைமகற்குத் தோழி, 'இவள் புதுநலனிழந்த புலம்பினள்; உள்ளல்வேண்டும்' எனத் தோழியின் ஆற்றுமை புலப்படக் கூறுநிற்றல்.

(இ—ள்):—அருமையாகப் பெறுதலையுடைய அமிழ்தம் உண்ணும் உணவாகப் பெரிய சிறப்பையுடைய (தேவர்) உலகைப் பெறுவாளாக அன்னை; தம்மைத் தாமே விழுங்கினாற்போல (ஒன்றை ஒன்று மறைக்கும்) கிளைகடோறும் இனிய பழங்கள் தொங்கும் பலாமரங்களையுடைய உயர்ந்த மலைகள்சூழ்ந்த நாட்டிற்குத் தலைவனை (மணந்துகொள்ள) வருவான் என்றாள்; (ஆதலின்.)—(எ—று).

ஆர்பதம்—பண்புத்தொகையுமாம். தம்மிற்றமதுண்டன்ன தீம்பழம் என்றும் இயைக்கலாம்.

இறைச்சி:—உள்ளே இனிய சுளைகளைக் கொண்டிருந்தும் வெளித்தோற்றத்தில் இன்னாதமுட்களை யுடையனவாய்க் காணப்படும் பழங்கள் நிறைந்த பலாமரங்களையுடைய மலை என்றதனான், உட்கருத்து, வரைந்துகொண்டு இல்லறத்தொழுகி இனிமைசெய்வதாயிருந்தும், வெளித்தோற்றத்தில் இனிமைதராத களவு நுகர்ச்சியிலேயே கருத்துடையான்போற் காணப்பட்டான் என்பதாம்.

மெய்ப்பாடு—உவகை. பயன்—செவிலியை வாழ்த்தல்.

## பாலை.

[இது, மகட்போக்கிய செவிலித்தாய் சொல்லியது.]

எ—து,—தலைமகன் தன்மகளை உடன்கொண்டு சென்றவழி, செவிலித்தாய், 'தண்ணியள் மீண்டும் முயங்க வியர்த்தேன் என்றாள்; இப்பொழுது அறிந்தேன் அது துயர்தருவதாதலை' எனத் தனது ஆற்றாமை தோற்றக் கூறுநிற்றல்.

[மோசிகீரன் பாடியது.]

அசு. பெயர்த்தனென் முயங்கயான்
வியர்த்தனெ னென்றனள் மன்னே யினியே
கழறொடி யாஅய் மழைதவழ் பொதியில்
வேங்கையுங் காந்தளு நாறி
யாம்பன் மலரினுந் தான்றண் ணியளே.

(இ—ள்):—மீண்டும் யான் ஒருமுறை முயங்க 'வியர்த்தேன்' என்றனள்; இப்பொழுது அறிந்தேன் அங்ஙன் அவள் கூறியது துயர்தருவதாதலை; கழல இடப்பட்ட (வீர) வளையினையுடைய 'ஆய்' என்பானது மேகந் தவழும் பொதியிலிடத்து வேங்கைமலரும் காந்தண்மலரும் (அவள் மெய்யிடத்து) மணக்கப்பெற்று ஆம்பன்மலரைக்காட்டிலும் தண்ணியளாயினள்—(எ—று).

கழறெரடி...... தண்ணியள், யான் பெயர்த்தனென் முயங்க, 'வியர்த்தனென்' என்றனள்; அது துனியாகுதல் இனி அறிந்தேன் என்று முடிவுகாண்க. 'இனி அறிந்தேன்' என்றது, என்னிடம் கழிபெருங்காதல் கொண்ட இவள் காதலன்பின் யான் செல்லின் யாங்ஙனம் ஆற்றுவள்? என்ற மகளின் உட்கோளை. ஆய்—கடையெழுவள்ளல்களில் ஒருவன். காதலன் என்று அவள் கருதிய ஏதிலான் சூட்டிய போதினாலாய மணம் போலும் மகள்மெய்யிடத்து மணந்தது என்ற கருத்தால் 'பொதியில்...... நாறி' என்றாள். மகள் முதலிய வாய்பாட்டைவிட்டு 'ஆம்பன்......... தண்ணியள்' என்றாள், ஊற்றின்பம் உள்ளத்துநிற்பதாலும் ஆற்றில் நடக்க ஆற்றாளே என்ற கவற்சியாலும். மகட்போக்கிய செவிலி—தான் காவலிற்றளர்ந்தமையின் மகளைச் செல்லவிட்ட செவிலி. (௩௰)

மெய்ப்பாடு—அழுகை. பயன்—அயர்வுயிர்த்தல்.

## மருதம்.

[இது, வாயிலாய்வந்த பாணற்குத் தோழி, வாயின் மறுத்தது.]

எ—து,—வாயில்வேண்டச்சென்ற பாணற்குத் தோழி,'ஊரன் போனபின் பாணன்வாயே (உள்ளன)' எனச்சொல்லி வாயின் மறுத்தல் புலப்படக் கூறுநிற்றல்.

[வடமவண்ணக்கன்தாமோதரன் பாடியது.]

அ௫. யாரினு மினியன் போன பின்னே
யுள்ளூர்க் குரீஇத் துள்ளுநடைச் சேவல்
சூன்முதிர் பேடைக் கீனி லிழைஇயர்
தேம்பொதிக் கொண்ட தீங்கழைக் கரும்பி
ணாறு வெண்பூக் கொழுதும்
யாண ரூரன் பாணன் வாயே.

(இ—ள்):—எல்லாரினும் இனியனாயிருந்தான் (ஊரன் அவன், நம்மை விட்டுப்) போனபின்பு, உள்ளூரிடத்துக் குருவிகளின் துள்ளிய நடையை உடைய சூன்முதிர்ந்த பேடைக்குச் சேவல், ஈனும் இல்லை இழைத்தற் பொருட்டு மணம் மிகுதியாகக்கொண்ட இனிய கழைக்கரும்பின் மணமற்ற வெள்ளிய பூவைக் கோதும் புதுவருவாயினைக்கொண்ட (அவ்) ஊரனுடைய பாணன்வாய்ச்சொற்களே (நமக்குள்ளன ஆயின.)—(எ—று).

யாரினும்—பலபரத்தையரிடத்தும் என்றுமாம். உள்ளூர்—முன் பின்னாகத்தொக்க ஆறன்றொகை. துள்ளுநடை, 'சூன்முதிர்' என்பது

ஞேடெழுவும்; *"சூன்முதிர் துன்ளு நடைப்பெடைக் கிற்றுணைச் சேவல் செய்வான், தேன்முதிர் வேழத்தின் மென்பூக் குதர்செம்ம லூரன்" என்ற இக்கருத்தமைந்த திருக்கோவையாரையும், 'சூன்முதிர்தலாற் குறுக அடியிடுதலின், 'துன்ளுநடை' என்றார்' என்ற அதன் உரையையுங் காண்க.

உள்ளுறை:—சூன்முதிர்ந்த பேடைக்குச் சேவல், ஈனும் இல்லை இழைக்குமாறுபோல, தலைமகள் வயாவிடத்து ஊரனும் வேண்டியன செய்து காத்து ஒழுகுவான் என்பதாம்; இங்ஙனங் கூறியது, பாணன் கூறியதை அங்ஙனமே எடுத்து மொழிந்தது.

மெய்ப்பாடு—நகை. பயன்—வாயின்மறுத்தல்.

## குறிஞ்சி.

[இது, 'ஆற்றாள்' எனக்கவன்ற தோழிக்குக் கிழத்தி சொல்லியது.]

எ-து,—இரவுக்குறியிடைத் தலைமகன் வந்து ஒழுகுகின்றுழி, 'கிழத்தி ஆற்றாளாவள்' என்றுவருந்திய தோழிக்குக் கிழத்தி, 'கூதிர்யாமத்து உளம் வருந்துந்தோறும் உண்டாகும் தேர்மணிக்குரலைப் பிறரும் கேட்குநர் உளர்கொல்?' எனத் தலைமகன்வரவு வெளிப்பட்டிடுமோ என்றஞ்சுகின்றேன் என்பது புலப்படக் கூறுநிற்றல்.

[வெண்கொற்றன் பாடியது.]

அகூ. சிறைபனி யுடைந்த சேயரி மழைக்கட்
பொறையரு நோயொடு புலம்பலைக் கலங்கிப்
பிறருங் கேட்குந ருளர்கொல் லுறைசிறந்
தூதை தூற்றுங் கூதிர் யாமத்
தானுளம் புலம்புதொ றுளம்பு
நாநவில் கொடுமணி நல்கூர் குரலே.

(இ-ள்):—அரணைக் கடந்து நீர் உடைந்தாற்போல, செய்ய அரி படர்ந்த குளிர்ந்த (நீர்ஒழுகுதலையுடைய) கண்ணிடத்துப் பொறுத்தற்கு அரிய துயரத்தோடு (யான்) புலம்புதலைக் குறித்துக் கலங்கி, துளிமிகுந்து ஊதைவீசும் கூதிர்க்காலத்து இரவின் இடையாமத்து (என்) உள்ளம் வருந்துந்தோறும் (உண்டாகும் தலைவன்தேரினது) அசையும் நாவினால் ஒலிக்கும் வளைந்த மணியின்வறுமையுள்ள குரலைப் பிறரும் கேட்குநராய் உள்ளார்கொல்?—(எ-று).

* திருக்கோவையார்—நகக.

பனி—ஆகுபெயர். 'உடைந்தன்ன' என்றிருத்தற்பாலது, 'உடைந்த' என நின்றது. கொடுமணி— கொடிய மணியுமாம்; அவன்வருகையைப் பிறருங்கேட்குமாறு செய்வதாகலின். ஆற்றியுள்ளேனேனும் அவன் வரவு வெளிப்பாட்டை அஞ்சுகின்றேன் என்பது உணர்த்தி, வரைவுகடாவுக என்றாளாம்.

மெய்ப்பாடு— அழுகை. பயன் —தோழியை 'வரைவுகடாவுக' என்றல்.

## குறிஞ்சி.

[இது, தலைமகள் தெய்வத்திற்குப் பராஅயது.]

எ-து,—தலைமகன் சூளுறவு பொய்பட்டவிடத்துத் தலைமகள், 'கடவுள் கொடியோர்த் தெறூஉம் என்ப; நாடர் கொடியரல்லர்' எனத் தெய்வம் தெறுமைப்பொருட்டுப் பராவிக்கூறுநிற்றல்.

[கபிலர் பாடியது.]

அஎ. மன்ற மராஅத்த பேஎமுதிர் கடவுள்
கொடியோர்த் தெறூஉ மென்ப யாவதுங்
கொடிய ரல்லரெங் குன்றுகெழு நாடர்
பசைஇப் பசந்தன்று நுதலே
ஞெகிழ ஞெகிழ்ந்தன்று தடமென் றோளே.

(இ-ள்): —'உண்மையாக, மராமரத்திடத்துறையும் அச்சம் மிகுதற்குக் காரணமாகிய தெய்வம், கொடியோரை வருத்தும்' என்பர்; சிறிதும் கொடுமையையுடையவரல்லர், எமது மலை நெருங்கின நாட்டினையுடையார்; (அவர் நல்லராயிருப்பவும், உற்ற சூளுறவு பொய்ப்பட்டதாகலின், தெய்வம் தெறுமோ என்ற அச்சத்தால்,) பச்சென்று பசந்தது (எனது) நெற்றி; மேலும், நெகிழலாம்படி நெகிழ்ந்தது, பெரிய மெல்லிய தோள் — (எ-று).

'நின்னிற் பிரியேன்' என்று கடவுளொடு சார்த்திச் சூளுறவுசெய்து தந்தான், பின்னாள் வரவொழிந்தானாக, தக்க காரணமின்றித் தாழான் என்ற துணிவால், தெய்வந் தெறுமைப்பொருட்டு, 'யாவதும்............நாடர்' என்றாள்.

மெய்ப்பாடு—அச்சம். பயன்—தெய்வத்தைப் பரவல்.

## குறிஞ்சி

[இது, இரவுக்குறி நேர்ந்த வாய்பாட்டால் தோழி தலைமகட்குச் சொல்லியது].

எ-து,—தலைமகற்குத் தான் இரவுக்குறி நேர்ந்தமை புலப்படுமாறு, தோழி, 'நாடன் நடுநாள் வரும்; நாம் வடு நாணலமோ?' என மறுதவாறு கூறுநிற்றல்.

[மதுரைக்கதக்கண்ணனர் பாடியது.]

அஅ. ஒலிவெள் ளருவி யோங்குமலை நாடன்
சிறுகட் பெருங்களிறு வயப்புலி தாக்கித்
தொன்முரண் சொல்லுந் துன்னருஞ் சோலை
நடுநாள் வருதலும் வரூஉம்
வடுநா ணலமோ தோழி நாமே.

(இ-ள்):—ஒலிக்கும் வெள்ளிய அருவியையுடைய உயர்ந்த மலைநாடன் சிறிய கண்ணையுடைய பெரியகளிறு வல்லமையுள்ள புலியைத் தாக்கி, (தனது) பழைய மாறுபாட்டைக் கொண்டு கொல்லும் கிட்டுதற்கரிய சோலையிடத்து, நள்ளிரவில் வரவும்வருவான்; ('வாராதி' என்று நாம் தடுப்பதால், அவனுக்குளதாகும்) குற்றத்தைக்குறித்து நாண்கொண்டிலமோ தோழி! நாம்?—(எ-று.)

எனவே, இரவுக்குறி நேர்தல்வேண்டும் என்றுளாம். சிறுகட் பெருங்களிறு—தொடைமுரண். முன்னொருகால் தன்னை வென்ற புலியை வதஞ்செய்தாரை என்றும் மறவாத யானை, எதிர்த்துக்கொல்லும் என்பது புலப்பட, 'வயப்புலி,' 'தொன்முரண்' எனப்பட்டன; *"யானை, யறிந் தறிந்தும் பாகனையே கொல்லும்" என்றதனுனும், யானை அவ்வியல்பினதாதல் அறிக.

மெய்ப்பாடு—இளிவரலைச் சார்ந்த பெருமிதம். பயன்—இரவுக்குறி யேற்பித்தல்.

## மருதம்.

[இது, சிறைப்புறம்.]

எ-து,—தலைமகன் சிறைப்புறத்தானாக, தோழி, தன்னுள்ளே சொல்லுவாளாய், 'குறமகள் பாடி நன்குறின், ஊர்க்கு அழிவது எவன்?' என்று, ஊரார் அலர்கூறுகின்றமை தோன்ற உரையாநிற்றல்.

---

* நாலடியார்-நட்பாராய்தல்—ா.

[பரணர் பாடியது.]

அசுஉ. பாவடி யுரல பகுவாய் வள்ளை
யேதின் மாக்க ணுவறலு நுவல்ப
வழிவ தெவன்கொலிப் பேதை யூர்க்கே
பெரும்பூட் பொறையன் பேஎமுதிர் கொல்லிக்
கருங்கட் டெய்வங் குடவரை யெழுதிய
நல்லியற் பாவை யன்னவிம்
மெல்லியற் குறுமகள் பாடிநன் குறினே.

(இ-ள்):—பரந்த அடியினையுடைய உரலின் விரிந்த வாயினிடத்து (தலைமகன்கொடுமையைப் புலப்படுத்தும்) உலக்கைப்பாட்டை அயன்மாக்கள் கூறவுங்கூறுவர்; அழிவதுஎன்னையோ இவ்வறிவில்லாத ஊருக்கு? பெரிய பூண்களையுடைய சேரனது அச்சம்முதிர்ந்த 'கொல்லி' என்னும் மலையில் உறையும் பெரிய கண்ணையுடைய தெய்வம் (அக்கொல்லியின்) மேற்புறத்துள்ள மலையில் எழுதிய நல்ல இயலினையுடைய பாவையைப் போன்ற இம்மெல்லிய இயல்பினையுடைய சிறிய மகள் (தலைமகன் நன்மையை எடுத்துப்) பாடி நன்மையையடையின்.—(எ-று.)

உரல—அ-சாரியை. 'மாக்கள்' என்றது, பிறர்பழிதூற்றும் அவர் தகுதியின்மை புலப்பட. 'கொல்லித்தெய்வம், அக்கொல்லிக்குடவையின் ஓர் பாவையை எழுதிவைத்திட்டது' என்பதை, *"இரவலர் மெலியர் தேறும் பொறைய, னுயர்சா லுயர்வரைக்கொல்லிக் குடவயின்,.......... நெடுவரைத் தெய்வ மெழுதிய, வினைமாண் பாவை" என்புழியுங்காண்க. இனி, இச்செய்யுள், தலைமகற்குப் பாங்காயினோர் கேட்பச் சொல்லி வாயின் மறுத்தற்கும் ஏற்குமாறு உய்த்துணர்க.

மெய்ப்பாடு—இளிவரலைச்சார்ந்த அச்சம். பயன்—வரைவுகடாவுதல்.

## குறிஞ்சி.

[இது, தலைமகன் சிறைப்புறமாகத் தோழி கூறியது.]

எ-து,—வரைவு நீட்டித்தவழி ஆற்றாளாகிய தலைமகட்கு, தலைமகன் சிறைப்புறமாகத் தோழி, 'நாடன்கேண்மை, தோள்சாய்த்தும் சால்பின் றன்றே?' என்று, வாட்டமுணர்த்தி வரைவுகடாதல் புலப்படக்கூறுகிற்றல்.

---

* நற்றிணை—௧அ௫.

[மதுரையெழுத்தாளன் சேந்தன்பூதன் பாடியது.]

௯௦. எற்றோ வாழி தோழி முற்றுபு
கறிவள ரடுக்கத் திரவின் முழங்கிய
மங்குல் மாமழை வீழ்ந்தெனப் பொங்குமயிர்க்
கலைதொட, விழுக்கிய பூநாறு பலவுக் கனியினை
வரையிழி யருவி யுண்டுறை தரூஉங்
குன்ற நாடன் கேண்மை
மென்றோள் சாய்த்துஞ் சால்பின் றன்றே.

(இ-ள்):—எத்தகையதோ? தோழி! முதிர்ந்து மிளகுகொடி வளரும் மலையிடத்து இரவில் (இடித்து) முழங்கிய முகிலிடத்தினின்றும் பெரிய மழை வீழ்ந்ததென்று மிக்க மயிரினையுடைய முசுக்கலை தொடுதலால் விழுந்த மலர்போல மணக்கும் பலாப்பழத்தை மலையினின்று இழியும் அருவி (ஊரார்) உண்ணும் நீர்த்துறையிடத்துக் கொணர்ந்து கொடுக்கும் குன்றத்தையுடைய நாடன்கேண்மை, நினது மெல்லியதோளை வருத்தியும் பெருமையையுடையதாயிற்றன்றே! — எ-று.)

தோழி! நாடன்கேண்மை எற்றோ?; அது, தோள்சாய்த்தும் சால்பின்றன்றே! என்றுமுடிவுகொள்க. 'பூநாறம்' என்றது மிகைபோலும்; 'கலைதொட' என்பதனைக் கூறுக்க நிற்றலின்.

உள்ளுறை:—பெரிய மழைபொழிதலை அஞ்சிய கலை தொடக் கிளையினீங்கிய பலவின்பழத்தை அருவி கொண்டுசென்று ஊருண்துறையில் பயன்படத் தந்தாற்போல, அலரை அஞ்சிய யான் கொண்டுதொடக் கிளையினீங்கிய உன்னைத் தான் உடன்கொண்டுசென்று தன் மனையிடத்து வைத்து இல்லறப்பயனுறச்செய்வான் என்பதாம்.

மெய்ப்பாடு—அழுகையைச் சார்ந்த பெருமிதம். பயன்—ஆற்றுவித்தல்.

## மருதம்.

[இது, நெஞ்சுநெகிழ்ந்துழி, தலைமகள் அதனை நெருங்கிச் சொல்லியது.]

எ-து,—பரத்தையர்மாட்டுப் பிரிந்த தலைமகன், வாயில்வேண்டிப் புக்கவழி, தன்வரைத்தன்றி அவன்உரைத்தாகித் தன்நெஞ்சு நெகிழ்ந்துழி, தலைமகள், 'ஊரன் பெண்டினையாயின், நெஞ்சிற் படர் பலவாகுக; நீ துஞ்சும் நாள் சிலவாகுக' என, அந்நெஞ்சினை நெருங்கிக் கூறுநிற்றல்.

[ஔவையார் பாடியது.]

கூக. அரிப்பவர் பாம்பின் வரிப்புற விளைகனி
குண்டுநீ ரில்லஞ்சிக் கெண்டை கதூஉந்
தண்டுறை யூரன் பெண்டினை யாயிற்
பலவா குகநின் னெஞ்சிற் படரே
யோவா தீயு மாரி வண்கைக்
கடும்பகட் டியானை நெடுந்தே ரஞ்சிக்
கொன்முனை யிரவூர் போலச்
சிலவா குகநீ துஞ்சு நாளே.

(இ-ள்):—கீற்றுக்களையுடைய கொடியிடத்து, பாம்பின் வரிகளையுடைய முதுகைப்போல விளையுங் கனியை, ஆழமான நீரையுடைய மடுவிடத்துக் கெண்டைமீன் கௌவும் குளிர்ந்த துறையையுடைய ஊரனுக்குப் பெண்டாவையானால், பல ஆவனவாக, நின்நெஞ்சிடத்து எண்ணங்கள்; ஒழியாமற் கொடுக்கும் மாரியைப்போன்ற வளவிய கையையும், கடிய பெரிய யானையினையும், நெடிய தேரினையுமுடைய 'அஞ்சி' என்பானது அச்சமுடையபோரை (ஏற்றுக்கொண்ட பகைவரது) இரவுக்காலத்து ஊரேபோலச் சிலவாய்விடுக, நீ உறங்கும் நாட்கள்,—(எ-று.)

'பெண்டினையாயின்' என்றது, நெஞ்சை வேறுபடுத்துக் கூறியது. 'ஓவாதீயு மாரி வண்கை' என்றது, முன் பெற்றானென்றும் செல்வஞ் சுருங்குமென்றுங் கருதாததோடு, கைம்மாறுவேண்டாக் கடப்பாடுடைமையும் புலப்பட. அஞ்சி—கடையெழுவள்ளல்களில் ஒருவனான அதிகமானெடுமானஞ்சி.

உள்ளுறை:—இழிந்த கெண்டை பாம்பின்புறம்பொன்ற கொடியிடத்துக் கனியை மடுவிற் கௌவி வருத்தினாற்போல, இழிந்த பிறப்பையுடைய பரத்தையர், அஞ்சத்தக்க இல்லகத்து உறையுங் குலமகளிரை இவ்வூரிற் பகைத்து வருத்துகின்றார் என்பதாம்.

மெய்ப்பாடு—இளிவரலைச்சார்ந்த வெகுளி. பயன்—ஊடலொழிதல்.

## நெய்தல்.

[இது, காமமிக்க கழிபடர்கிளவியாற் பொழுதுகண்டு சொல்லியது.]

எ-து,—தலைமகன் பிரிவிடத்துப் பொறாத தலைமகள், 'மாலைக் காலத்துப் பறவை, இரைகொண்டமையின் செலவில் விரையும்; அளியதாம்' என, காமமிக்க கழிபடர்கிளவியால் இரங்கிக் கூறாநிற்றல்,

[தாமோதரன் பாடியது.]

கூஉ. ஞாயிறு பட்ட வகல்வாய் வானத்
தளிய தாமே கொடுஞ்சிறைப் பறவை
யிறையுற வோங்கிய நெறியயன் மராஅத்த
பிள்ளை யுள்வாய்ச் செரீஇய
விரைகொண் டமையின் விரையுமாற் செலவே.

(இ-ள்):—ஞாயிறு மறைந்த அகன்ற இடத்தையுடைய வானத்திடத்து, அளிக்கத்தக்கனவே, வளைந்த சிறைகளையுடைய பறவைகள்; தங்கும்படி உயர்ந்த வழியின் அயலிடத்துள்ள மராமரத்திடத்தவான பிள்ளையின் வாயுள் செருகுதற்கு இரையினைக்கொண்டமையின் விரையும் செலவிடத்து; (ஆதலால்).—(எ-று).

அறிவில்லாத பறவைகளும் மயங்கிருட்கொண்ட மாலைக்காலத்துப் பிள்ளைக்கு (உருக்கத்தோடு) இரையுடன் கூட்டினைநோக்கி விரையும் என்றது, அறிவுடைய தலைவன், இன்னுதை இம்மாலைக்காலத்து மகவினை விரும்பி வேண்டியவற்றோடு மனையை அடைந்திலன் எவ்வாறு உய்குவேன் என்பதைக் குறிப்பாலுணர்த்த. வானத்து விரையும் எனக் கூட்டிக்கொள்க.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—அயர்வுயிர்த்தல்.

## மருதம்.

[இது, வாயிலாகப் புக்க தோழிக்கு வாயின்மறுத்தது.]

எ-து,—பரத்தையிற்பிரிந்த தலைமகன் வாயிலாகப் புக்க தோழிக்கு, தலைமகள், 'உயிர்கழியினும் உரையல்; அவர் அன்னையும் அத்தனும் அல்லரோ?; அன்பிலங்கடை புலவி எவன்?, என்று வாயின்மறுத்துக் கூறு நிற்றல்.

[அள்ளூர்நன்முல்லை பாடியது.]

கூகூ. நன்னலந் தொலைய நலமிகச் சாஅ
யின்னுயிர் கழியினு முரைய லவர்நமக்
கன்னையு மத்தனு மல்லரோ
புலவிய தெவனோ வன்பிலங் கடையே.

(இ-ள்.):—சிறந்த நன்மையாயின கெட, அழகு மிகவுங்கெட்டு இனியஉயிர் போவதானாலும், (அவரோடு கூடுமாறு) கூறாதி; அவர் நமக்குத் தாயும் தந்தையும் (போல இன்றிமையாதவர்) அல்லரோ? (ஆயினும்)புலவி தான் என்னபயனை விளைவிக்கும்? அன்பில்லாதவிடத்து.—(எ-று.)

அவர்கூட்டம் இன்றேல் நன்மையாயினவின்றி அழகுங் கெட்டுக் கேடுண்டாம் என்ற தோழிக்கு, 'நன்னலம் ..........உரையல்' என்றாள். 'இன்றியமையா விருமுதுமக்களும்' என்ற சிறப்பால், 'அன்னையு மத்தனு மல்லரோ' என்றாள். "ஊடுதல் காமத்திற் கின்பம்" என்று ஊடுகின்றாய் என்ற தோழிக்கு, 'கூடி முயங்கப்பெறும்' அன்பில்லாதவர் என்பது உணர்வேன்' என்பாள், 'புலவியதெவனோவன்பிலங்கடையே' என்றாள். 'புல்லியது' என்ற பாடத்திற்கு—பொருந்தியது என்க.

மெய்ப்பாடு—வெகுளி. பயன்—வாயின் மறுத்தல்.

## முல்லை.

[இது, தோழிக்கு 'ஆற்றுவல்' என்பதுபடத் தலைமகள் சொல்லியது.]

எ—து,—பருவங்கண்டு ஆற்றாளெனக் கவன்ற தோழிக்கு, 'பித்திகத் தரும்பு மிகச்சிவந்தன; பானாள்; மேலும், தமியர்பிரிந்திசினோர்; பெயர்த்தும் மழைக்குரலைக் கேட்பின் என்னாவர்?' என்று, அவர் ஆற்றாரென்றே கவல்கின்றேன், யான் ஆற்றுவல் என்பதுபடத் தலைமகள் சொல்லாநிற்றல்.

[கந்தக்கண்ணன் பாடியது.]

கூச. பெருந்தண் மாரிப் பேதைப் பித்திகத்
தரும்பே முன்னு மிகச்சிவந் தனவே
யானே மருள்வென் றோழி பானா
ளின்னுந் தமியர் கேட்பிற் பெயர்த்து
மென்னா குவர்கொல் பிரிந்திசி னோரே
யருவி மாமலைத் தத்த
கருவி மாமழைச் சிலைதருங் குரலே.

(இ-ள்):—தோழி! பெரிய குளிர்ந்த மாரிக்காலத்துப் பேதையான பிச்சியின் அரும்புகள், முன்னிலும் மிகச்சிவந்திட்டன; பானாளாய் இருந்தது; மேலும் தனித்தவராயினார்; அருவியையுடைய பெரிய மலையிடத்துச் சிறந்த விளைதற்குக்கருவியாகிய கரிய வானத்தின் ஒலிக்குங் குரலை (யும்) கேட்பாராயின், பின்னும் என்னாவர் பிரிந்தார்?; யானே மயங்குவேன்?.—(எ-று.)

தோழி! அரும்பு சிவந்தன; பானாள்; இன்னுந் தமியர்; பெயர்த்தும் குரல்கேட்பின் என்னாவர் பிரிந்திசினோர்? யானே மருள்வேன் என்று கூட்டி முடிவுகொள்க. பானாள்—பாதியிரவு. கொல்—அசைநிலை.

மெய்ப்பாடு—இளிவரலைச்சார்ந்த பெருமிதம். பயன்—ஆற்றுமாறறிவித்தல்.

## குறிஞ்சி.

[இது, தலைமகன் பாங்கற்கு உரைத்தது.]

எ-து,—இயற்கைப்புணர்ச்சிபுணர்ந்த தலைமகன், பாங்கற்கூட்டத்தை விழைந்து, 'குறுமகள்சாயல், என் உரனவித்தன்று' என்று வலியழிவு தோன்ற உரையாநிற்றல்.

[கபிலர் பாடியது.]

௯௫. மால்வரை யிழிதருந் தூவெள் ளருவி
கன்முகை ததும்பும் பன்மலர்ச் சாரற்
சிறுகுடிக் குறவன் பெருந்தோட் குறுமக
ணீரோ ரன்ன சாய
றீயோ ரன்னவென் னுரனவித் தன்றே.

(இ-ள்):—பெரிய மலையினின்று இழியும் தூய வெள்ளிய அருவியையும்,பாறையிடத்து அரும்புகளையும், நிறைந்த பலமலர்களையுமுடைய சாரலிடத்துச் சிறிய குடியிருப்பையுடைய குறவனது பெரிய தோளையுடைய சிறியமகளின் நீரைப்போன்ற சாயல், தீயைப்போன்ற எனது மனவலியைக் கெடுத்திட்டது.—(எ-று).

ஈற்றடி எருத்தடிகளில் பொருளொடு பொருள் முரணிநின்றது. 'தீ' என்றதற்கேற்ப, 'அவித்தன்று' என்ற வினை கொடுக்கப்பட்டது. 'மால்வரை.........சாரல்' என்றது, உன்னாலும் தோழியாலும் கூட்டம் பெறவும் பின் இருவகைக்குறியிடைக் கூடவும் ஏற்றது என்பதாம்.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—பாங்களை யொருப்படுத்தல்.

## குறிஞ்சி.

[இது, தோழிக்குத் தலைமகள் இயற்பட மொழிந்தது.]

எ-து,—தலைமகனை இயற்பழித்துத் தெருட்டுந் தோழிக்குத் தலைமகள்,'நாடற்கு எவன்செய்கோ? என்றி; யான் அது நகையென உணரேனாயின் என்னாகுவை நீ?' என இயற்பட மொழியாநிற்றல்.

[அள்ளூர்நன்முல்லை பாடியது.]

௯௬. அருவி வேங்கைப் பெருமலை நாடற்
கியானெவன் செய்கோ வென்றி யானது
நகையென வுணரே னாயி
னென்னா குவைகொ லன்னுத னீயே.

(இ-ள்.):—அருவியையும் வேங்கையையுமுடைய பெரிய மலைநாடனுக்கு யான் என்னசெய்வேன்? என்கின்றாய்; (நீ அங்ஙனம் கூறும்) அதனை நகைப்பொருட்டு என்று உணரேனாயின், என்னபயனுடைய வளாவை? நல்ல நுதலினையுடையாய்! நீதான்.—(எ-று.)

'அருவி.........நாடன்' என்றது, பரத்தையரோடு ஆட அருவியையும் அவர்க்குச் சூட்டுமலர்க்கு வேங்கையையும் உடையான் என்பதை உள்ளுறுத்தித் தோழி கூறியதைக் கொண்டுமொழிந்தது. ஊடும்படிகற்பிக்கும் நீ, கூட்டத்தைவிழையும் எனக்கும் உன்னைக்கொண்டு என்னைக்கூடவிரும்புந் தலைவனுக்கும் பயன்படாய் என்பாள், 'என்னாகுவை?' என்றாள்.

மெய்ப்பாடு–பெருமிதம். பயன்–இயற்பட மொழிதல்.

## நெய்தல்.

[இது, வரைவு நீட்டித்தவழித் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.]

எ-து,—தலைமகன்வரைவுநீட்டித்தவிடத்து அதனைப் பொறாத தலைமகள், 'யான் ஈண்டையேன்; நலன் கானலஃதே; துறைவன் ஊரான்; மறை மன்றத்தது' என்று தோழிக்குக் கூறாநிற்றல்.

[வெண்பூதி பாடியது.]

கூ௭. யானே யீண்டை யேனே யென்னலனே
யானு நோயொடு கான லஃதே
துறைவன் றம்மூ ரானே
மறையல ராகி மன்றத் தஃதே.

(இ-ள்):—யான்தான் இவ்விடத்தினளாயிருந்தேன்; என்விருப்பந்தான் தாங்குதலமையாத துன்பத்தோடு கானலிடத்ததாயிற்று; துறைவன் ஊரிடத்தானாயினான்; மறைந்த எங்கள் ஒழுக்கம் அலராகி மன்றத்திடத்ததாயிற்று.—(எ-று.)

உடனும் சென்றிலேன், அவன்மனைக்கண்ணும் தங்கிலேன் என்பாள், 'யானே யீண்டை யேனே' என்றும், மீண்டும் ஆண்டுப் பெறலாம் என்ற விருப்பால் ஆண்டே சென்றது விருப்பம் என்பாள், 'நலன்.........கானலஃதே' என்றும், எவ்வகைப்பிரிவுமின்றி ஊரிடத்தே தங்கினான் என்பாள், 'துறைவன் றம்மூ ரானே' என்றும், விரைவில் வரைவை முடித்தல் வேண்டும் என்பாள், 'மறையல ராகி மன்றத் தஃதே' என்றுங் கூறினாள். தம்—சாரியை.

மெய்ப்பாடு – அழுகை, பயன் — ஆற்றாமையறிவித்தல்.

## முல்லை.

[இது, பருவங்கண்டு அழிந்த தலைமகள் தோழிக்கு உரைத்தது.]

எ-து,—தலைமகன் வரக்குறித்த கார்ப்பருவத்தைக் கண்டு கவன்ற தலைமகள், 'பீரத்தலர் சிலகொண்டு அவர்த்துன்னச்சென்று 'நன்னுதல் இன்னளாயினள்' என்று செப்புநர்ப்பெறின் நன்று; பெற்றிலேன்' என்று தோழிக்குத் துயர் தோன்ற உரையாநிற்றல்.

[கோக்குளமுற்றன் பாடியது.]

௯௮. இன்ன ளாயின ணன்னுத லென்றவர்த்
துன்னச் சென்று செப்புநர்ப் பெறினே
நன்றுமன் வாழி தோழிநம் படப்பை
நீர்வார் பைம்புதற் கலித்த
மாரிப் பீரத் தலர்சில கொண்டே.

(இ-ள்):—தோழி! நமது மனைப்பக்கத்து நீர்மிக்க பசிய புதர்களிடத்துத் தழைத்துள்ள மாரிக்காலத்து (அலரும்) பீர்க்கின் அலர்களுள் சிலவற்றைக் கைக்கொண்டு (காட்டிப் பசப்பினால்) இத்தன்மையளாயினாள் சிறந்த நெற்றியினையுடையாள் என்று, அவரைக் கிட்டிப்போய்ச் சொல்லுவாரைப்பெறின் நல்லதாகும்; பெற்றிலேன்.—(எ-று.)

பருவம் வந்ததையும் தான் பசப்படைந்ததையும் ஒருங்கே உணருமாறு, 'பீரத்தலர் சிலகொண்டு நன்னுதல் இன்னளாயினள் என்று செப்புநர்ப்பெறின்' என்றாள். பீர்க்கு மாரிககாலத்து அலர்தலையும், மகளிர் பசப்பிற்கு உவமையாதலையும், "மாரிப் பீரத் தலர்வண்ண மடவாள் கொள்ள" * என்பழியுங் காண்க. வாழி—அசை நிலை. மன்—கழிவு.

மெய்ப்பாடும், பயனும்—முன்னையவே.

## முல்லை.

[இது, தலைமகன் 'எம்மை நினைத்துமறியீரோ?' என்ற தோழிக்குச் சொல்லியது.]

எ-து,—பொருண்முற்றிப் புகுந்த தலைமகன், 'எம்மை நினைத்துமறியீரோ?' என்ற தோழிக்கு, 'உள்ளினேன் அல்லனோ? உலகத்துப்பண்பை நினைத்து மருண்டனென் அல்லனோ? காமம் ஈண்டு கடைக்கொளவே?' என்று, மறவாதிருந்தமை புலப்படக் கூறுநிற்றல.

* சிலப்பதிகாரம்-கானல்வரி—௩௮.

[ஔவையார் பாடியது.]

கூகூ. உள்ளினென் அல்லெனோ யானே பள்ளி
நினைத்தனென் அல்லெனோ பெரிதே நினைத்து
மருண்டனென் அல்லெனோ உலகத்துப் பண்பே
நீடிய மரத்த கோடுதோய் மலிர்சிறை
யிறைத்துணை சென்றற் றாஅங்
கனைப்பெருங் காமம் மீண்டு கடைக்கொளவே.

(இ-ள்):—நினைத்தேன் அல்லேனோ யான்தான்? பள்ளியிடத்தும் (துயில்கொள்ளாது) பெரிதும் நினைத்தேன் அல்லேனோ? உலகத்துப்பண்பை நினைத்து மருண்டேன் அல்லேனோ? நீண்ட மாவின் கோட்டினது நீரிற்றோய்ந்த குளிர்ந்தவிடத்துத் தங்கும் துணையாகிய பறவை சென்றாற் போல, அத்தகைய பெரிய காமம் நிறைந்து (பொருண்முற்றி) முடிவைக் கொளச் செய்திட்டது.—(எ-று.)

பள்ளி—ஈதில் ஏழனுருபும் உம்மையுந் தொக்கன. உலகத்துப் பண்பு—மனைவியோடுகூடி இல்லறத்துறையும் உலகத்துப்பண்பு. சென்ற பறவை, துயர்மிகும் மாலைக்காலத்துள் தன்பெருமுயற்சிமுற்றி மீளுமாறுபோல, காமம், குறித்த காலத்துள் குறித்தபொருளை முடித்து மீளச்செய்திட்டது என்பதாம்.

மெய்ப்பாடு—உவகையைச் சார்ந்த பெருமிதம். பயன்—வேட்கை மிகுதி புலப்படுத்தல்.

## குறிஞ்சி.

[இது, பாங்கற்கு உரைத்தது.]

எ-து,—இயற்கைப்புணர்ச்சிபுணர்ந்த தலைமகன், பாங்கற்கூட்டத்தை விழைந்து, '(அவள்தான்) கொல்லிப்பாவையின் மடவந்தனள்; (அவள்) தோள் மணத்தற்கரிய' என, தனக்கு அவள் இன்றியமையாதவள் என்பது புலப்படப் பாங்கற்கு உரையாநிற்றல்.

[கபிலர் பாடியது.]

க00. அருவிப் பரப்பி னைவனம் வித்திப்
பருவிலைக் குவியொடு பசுமரல் கடிக்குங்
காந்தள் வேலிச் சிறுகுடி பசிப்பிற்
கடுங்கண் வேழத்துக் கோடு நொடுத்துண்ணும்
வல்வி லோரிக் கொல்லிக் குடவரைப்
பாவையின் மடவந் தனளே
மணத்தற் கரிய பணைப்பெருந் தோளே.

(இ-ள்):—அருவியின் மிகுதியினால் மலைநெல்லை விளைத்து(விளைந்த மிக்க விலையுள்ள (பயிரினை) திரளோடு பசிய மரல் ஒப்பாயிருக்கும், காந்தளாகிய வேலியையுடைய சிறிய குடியிருப்பு, பசித்தால், கடிய கண்ணையுடைய யானையின் கோட்டை விற்று (அதனால்) உண்ணும் வலிய வில்லையுடைய 'ஓரி' என்பானது 'கொல்லி' என்னும் மலையின் மேலைப் புறத்து மலையிடத்துப் பாவையைப்போல மடப்பம்வருதலை உடையவளாவாள், (அவள்தான்;) மணத்தற்கு அரியள; (அவளது) மூங்கிலைப்போன்ற பெரிய தோள்கள்.—(எ-று.)

நொடை—விலை; 'கொடை' என்பதனடியாக 'கொடுத்து' என வருதல்போல, 'நொடை' என்பதனடியாக 'நொடுத்து' என வந்தது. ஓரி—கடையெழுவள்ளல்களில் ஒருவன். இனி, இச்செய்யுள், அல்லகுறிப்பட்டு மீள்கின்றான் தன் நெஞ்சிற்குச் சொல்லியதற்கும் ஏற்குமாறு உய்த்துணர்க.

மெய்ப்பாடு—இளிவரல். பயன்—பாங்கனையொருப்படுத்தல்.

## குறிஞ்சி.

[இது, தலைமகனுக்குப் பாங்காயினார் கேட்பச் சொல்லியது.]

எ-து,—இயற்கைப்புணர்ச்சி புணர்ந்த தலைமகன், வாட்டம்வினைய பாங்கற்கு, 'கடல்வளைஇய உலகமும் புத்தேள்நாடும் இரண்டும், குறுமகள் தோள் மாறுபடூஉம் வைகலொடு தூக்கின், எமக்குச் சீர்சாலா'என, கூட்டத்துயர்வு தோன்றக் கூறுநிற்றல்.

[பருஉமோவாய்ப்பதுமன் பாடியது.]

க0க. விரிதிரைப் பெருங்கடல் வளைஇய வுலகமு
மரிதுபெறு சிறப்பிற் புத்தே ளாடு
மிரண்டுந் தூக்கிற் சீர்சா லாவே
பூப்போ லுண்கண் பொன்போன் மேனி
மாண்வரி யாகக் குறுமக
டோண்மாறு படூஉம் வைகலொ டெமக்கே.

(இ-ள்):—மிகுந்த அலைகளையுடைய கடல்சூழ்ந்த மண்ணுலகமும், அரிதாகப்பெறுஞ் சிறப்பினையுடைய தேவர்களின் பொன்னுலகமும் (ஆகிய இவ்) இரண்டையும் (சேர்த்துத்) தூக்கின், அவை பெருமைநிறையாதனவாம்; தாமரையை நிகர்த்த மையுண்ட கண்ணையும் பொன்னைப் போன்ற மேனியினையும் சிறந்த தேமலையுடைய மார்பிடத்தையுமுடைய சிறிய மகளின் தோள்கள் மாறுகப்பொருந்தும் நாளோடு எமக்கு.—(எ-று.)

எனவே, நிலவுலகும் புத்தேளுலகும் அவள்கூட்டத்தினும் உயர்ந்தன வல்ல என்றாளும். பூ—தாமரை என்றது, *"பூவிற்குத் தாமரையே" என்ற சிறப்பால். தோள் மாறுபடுதல்—தன் வலத்தோளோடு அவளிடத்தோளும் தன் இடத்தோளோடு அவள்வலத்தோளும் மாறுபடப்பொருந்தல்; எனவே, கூட்டம்பெறுதல் என்றவாறு. இனி, இச்செய்யுள், வலித்த நெஞ்சிற்குச் சொல்லிச் செலவழுங்கியதற்கும் ஏற்குமாறு உய்த்துணர்க.

மெய்ப்பாடு—உவகையைச்சார்ந்த அழுகை. பயன்—பாங்கனை யொருப்படுத்தல்.

## நெய்தல்.

[இது, கிழத்தி, 'யான் யாங்ஙனம் ஆற்றுவேன்?' என்கின்றது.]

எ-து,—ஆற்றுளெனக்கவன்ற தோழிக்குக் கிழத்தி,'உள்ளின் உள்ளம் வேம்; உள்ளாதிருப்பின் அளவைத்தன்று; காமம் வான்றோய்வற்று. மரீஇயோர் சான்றோரல்லர்' என்று,'யான் யாங்ஙனம்ஆற்றுவல்?' என்பது புலப்படக் கூறுநிற்றல்.

[ஔவையார் பாடியது.]

க0உ. உள்ளி னுள்ளம் வேமே யுள்ளா
திருப்பினெம் மளவைத் தன்றே வருத்தி
வான்றோய் வற்றே காமஞ்
சான்றோ ரல்லர்யா மரீஇ யோரே.

(இ-ள்):—(தோழி!) நினைப்பின், நெஞ்சம் வெந்திடும்; நினையாதிருப்பின் அவ்வுள்ளம் எம்மளவில் நில்லாது; வருத்தி வானைத்தோய்ந்த அத்தகையதே காமம்; உயர்ந்தோராகார் நாம் கூடிய தலைவர்.—(எ-று.)

இருப்பின்—இருத்தலினருமை குறித்தது. 'யாம் மரீஇயோர்' என்றாள், அவர் அன்பு கொண்டிலர் என்பது தோன்ற.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—அயர்வுயிர்த்தல்.

## நெய்தல்.

[இது, பருவங்கண்டு அழிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.]

எ-து,—தலைமகன்குறித்த பருவத்தைக்கண்டு வருந்திய தலைமகள், 'தோழி! வாடையும் காதலர் வாரார்போல்வர்; யான் வாழேன்போல்வல்' என்று, கையாறு புலப்படத் தோழிக்குக் கூறுநிற்றல்.

* திருவள்ளுவமாலை—நக.

[வாயிலான்றேவன் பாடியது.]

க0ஙு. கடும்புன றொடுத்த நடுங்கஞ ரள்ளற்
கவிரித ழன்ன தூவிச் செவ்வா
யிரைதேர் நாரைக் கெவ்வமாகத்
தூஉந் திவலைத் துயர்கூர் வாடையும்
வாரார் போல்வர்நங் காதலர்
வாழேன் போல்வல் தோழி யானே.

(இ-ள்):—விரைந்துசெல்லும் புனல்கூடிய நடுங்கும்படி வருத்துங் கருஞ்சேற்றில், முருக்கின் பூவிதழைப்போன்ற (செம்மறுக்களையுடைய) இறகினையும் செய்ய வாயினையுமுடைய இரையை ஆராயும் நாரைக்குத் துயரந்தருவதாகத் தூவுகின்ற திவலையையுடைய துயர்மிக்க வாடைக் காலத்தும் வாரார்போல்வர், நம்காதலர்; வாழேன்போல்வல் தோழி! யான் தான்.—(எ-று.)

செம்மறுக்களையுடைய எனவருவித்தது, நாரையின் இறகு வெண்மையதாதலை நோக்கி; செம்மறு உடைமையை, "நாரை, பதைப்ப வொழிந்த செம்மறுத் தூவி"* என்புழியுங் காண்க; அன்ன செவ்வாய் என்று இயைத்தலுமாம். 'போல்வர்' 'போல்வல்' என்பன—ஒப்பில்போலிகள்.

இறைச்சி:— சிறகாகிய போர்வையையுடைய நாரைக்கு ஏதந்தரும் வாடை என்றதனானே, அணைக்குந் துணையாயினரைப் பெறாத மகளிர்க்கு அது என்ன இன்னல்தான் செய்யாதோ? என்பதாம்.

மெய்ப்பாடும், பயனும்—முன்னையவே.

## பாலை.

[இது, ஆற்றாளாகிய தலைமகள் தோழிக்குச் சொல்லியது.]

எ-து,—பிரிவின்கண் ஆற்றாளாகிய தலைமகள், 'தோழீ! காதலர், பனிபடுநாளே பிரிந்தனர்; பிரியும் நாளும் பலவாகுக' என்று, தோழிக்கு ஆற்றாமை தோற்றக் கூறிநிற்றல்.

[காவன்முல்லைப்பூதனார் பாடியது.]

க0ச. அம்ம வாழி தோழி காதலர்
நூலறு முத்திற் றண்சித றுறைப்பத்
தாளித் தண்பவர் நாளா மேயும்
பனிபடு நாளே பிரிந்தனர்
பிரியு நாளும் பலவா குகவே.

* ஐங்குறுநூறு—நெய்தல்-வெள்ளாங்குருகுப்பத்து—அ.

(இ-ள்): —கேட்பாயாக, தோழி! காதலர், (கோத்த) நூலற்ற முத்தினைப்போல, குளிர்ந்த திவலைகள் உறைத்தலால் (தளிர்த்த) தாளியின் குளிர்ந்த கொடியை இளமையையுடைய ஆ மேயும் பின்பனிக்காலத்துப் பிரிந்தனர், பிரியும் நாட்களும் பலவாயிருக்கும்படி.—(எ-று.)

பனிபடுநாள்—பனி மிக்க பின்பனிப்பருவம்; பனி நாடோறும் குறைந்து அப் பருவத்தோடு முற்றுமழிதல்கருதி, பனி அழியும் நாள் எனலுமாம். 'ஆகுக'—கு-சாரியை.

இறைச்சி:—தாளியின் கொடியை ஆ மேயும் பனிக்காலம் என்றதனானே, விலங்கும் வேண்டும் நுகர்ச்சியை எளிதிற்பெற, யான்மட்டும் வேண்டும் நுகர்ச்சியைப் பெற்றிலேன் என்பதாம்.

மெய்ப்பாடும், பயனும்-முன்னையவே.

## குறிஞ்சி.

[இது, வரைவு நீட்டித்தவிடத்துத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

எ-து,—தலைமகன் வரைவினை நீட்டித்தவிடத்து ஆற்றாத தலைமகள், 'தோழி! நாடன்கேண்மை நீர்மலி கண்ணொடு நினைப்பாகும்' என்று வரைவு கடாவுவாளாகக் கருதிக் கூறுநிற்றல்.

[நக்கீரர் பாடியது.]

௧௦௫. புனவன் றுடவைப் பொன்போற் சிறுதினைக்
கடியுண் கடவுட் கிட்ட சில்குர
லறியா துண்ட மஞ்ஞை யாடுமகள்
வெறியுறு வனப்பின் வெய்துற்று நடுங்குஞ்
சூர்மலை நாடன் கேண்மை
நீர்மலி கண்ணொடு நினைப்பா கும்மே.

(இ-ள்):—புனத்தினையுடையானது தோட்டத்துப் பொன்னைப் போன்ற சிறிய தினைகளுள் காவலைக்கொண்ட கடவுட்கென்று (ஒதுக்கி) வைத்திட்ட சிலவாய தாள்களை உணர்வின்றி உண்ட மயில், வெறியாடும் மகள் வெறியுற்ற காலத்து வனப்பைப்போன்ற வனப்பினதாய் அஞ்சி நடுங்கும் அச்சந்தரும் தெய்வத்தினையுடைய மலைநாடன்நட்பு, நீர்நிறையுங் கண்ணோடு நினைவிற்கு வருவதாகும்.—(எ-று.)

அறியாது—புனவன் அறியாமல் என்றுமாம் 'சூர்மலி' என்ற பாடத்திற்கு—அச்சந்தரும் தெய்வம் மிகுந்த என்க.

உள்ளுறை:--புனவன் சிறுதினைக்குரலை அறியாது உண்ட மஞ்ஞை வெய்துற்று நடுங்கினாற்போல, தமர்காவலில் உள்ள என்னை அவர் அறியாதவாறு தகாத களவினால் நினைத்த தலைமகன் தம்மை வரையக்கேட்டிலனாய் அஞ்சி நடுங்குகின்றான் என்பதாம்; தெய்வத்தையொழித்து உள்ளுறைகொள்க; என்னை? *"உள்ளுறை தெய்வமொழிந்ததை நிலனெனக், கொள்ளு மென்ப குறியறிந் தோரே" என்றாராகலின்.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—தோழியை வரைவுகடாவுக என்றல்.

## குறிஞ்சி.

[இது, தலைமகன் தூது கண்டு கிழத்தி தோழிக்குக் கூறியது.]

எ—து,—தலைமகன் விடுத்த தூதைக்கண்டு கிழத்தி, 'தோழி! நாடன் தீதில் நெஞ்சத்துக்கிளவி நம்வயின் வந்தன்று; நாமும் தீயின் எதிர் கொண்டு அளந்தனையம்' எனத் தூது விடுகம் என்று தோழியை நோக்கி வெகுளி புலப்படக் கூறுநிற்றல்.

[கபிலர் பாடியது]

க0சு. புல்வீ ழிற்றிக் கல்லிவர் வெள்வேர்
வரையிழி யருவியிற் றோன்று நாடன்
தீதி னெஞ்சத்துக் கிளவி நம்வயின்
வந்தன்று வாழி தோழி நாமு
நெய்பெய் தீயி னெதிர்கொண்டு
தாமளந் தனையமென விடுகந் தூதே.

(இ-ள்):--புல்லிய வீழ்தினையுடைய இற்றிமரத்தின், கல்லிடத்துப் பரவிய வெள்ளிய வேர், மலையினின்று இழியும் அருவியைப்போலத் தோன்றும் (மலை) நாடன் குற்றமற்ற மனத்தோடு விடுத்த (தூதுவாயிலான) கிளவி நம்மிடத்து வந்தது; தோழி! நாமும் நெய்பெய்த தீயைப்போல எதிர்தலைக்கொண்டு (அன்பின் நிலைமையை) அளந்த அத்தகையம் என விடுவோம் தூதினை.—(எ-று.)

தீதில் நெஞ்சம்—குறிப்புமொழி. அளந்தனையம்—விகாரம்.

இறைச்சி:—பயன்படாத இற்றிவேர், பயன்படும் அருவிபோலத் தோன்றும் நாடன் என்றதனானே, நம்மை ஆற்றுவித்தற் பயன்படாத் தூதும் அவற்குப் பயன்படுவதாகத் தோன்றிற்று என்பதாம்.

மெய்ப்பாடு—நகை. பயன்—ஆற்றாமையறிவித்தல்.

---

* தொல்-பொருள்-அகத்திணையியல்—சஎ.

## மருதம்.

[இது, கிழத்தி, காமமிக்க கழிபடர்கிளவியாற் கூறியது.]

எ-து—பொருண்முற்றிவந்த தலைமகனையுடைய கிழத்தி, 'சேவல்! வெருகிற்கு இரையாகிப் படீஇயர்; நீயே, ஊரனொடு வதிந்த இன்துயில் எடுப்பியோய் (ஆதலால்)' என்று, கேளாத வதனைக் கேட்பதாக விளித்துக் காமம்மிக்க கழிபடர் கிளவியாற் கூறுநிற்றல்.

[மதுரைக்கண்ணனார் பாடியது.]

கOஎ. குவியிணர்த் தோன்றி யொண்பூ வன்ன
தொகுசெந் நெற்றிக் கணங்கொள் சேவ
னள்ளிருள் யாமத் தில்லெலி பார்க்கும்
பிள்ளை வெருகிற் கல்கிரை யாகிக்
கடுநவைப் படீஇயரோ நீயே நெடுநீர்
யாண ரூரன் றன்னொடு
வதிந்தவெம் மின்றுயி லெடுப்பி யோயே.

(இ-ள்):—குவிந்த பூங்கொத்தையுடைய செங்காந்தளின் ஒள்ளிய பூவைப்போலக் கூட்டமான செய்ய உச்சிக்கொண்டையின் திரளைக் கொண்ட (கோழிச்) சேவலே! செறிந்த இருளுள்ள இரவில் இல்லகத்து எலியை (இரைக்காகப்) பார்க்கும் இளமையையுடைய கடுவன் பூனைக்குப் பொருந்தும் உணவாகிக் கடிய குற்றத்தாற் படுவாயாக; நீதான், நிலைத்த நீர்வளத்தால் (நாடோறும்) புதுவருவாயினையுடைய ஊரனோடு தங்கிய எமது இனிய துயிலைக் கெடுத்திட்டாய்; (ஆதலால்).—(எ-று.)

நெற்றி—ஆகுபெயர். பிள்ளைவெருகு—சிறுவராவினது. கடுநவை—(இணைவிழைச்சைக் கலைத்ததனால் வந்த) கடுங் குற்றம். படீஇயர்—வியங்கோள்.

மெய்ப்பாடு—வெகுளியைச் சார்ந்த அழுகை. பயன்—வேட்கை மிகுதியுணர்த்தல்.

## முல்லை.

[இது, பருவங்கண்டு அழிந்த தலைமகள் தோழிக்குக் கூறியது.]

எ-து,—தலைமகன் வரக்குறித்த கார்ப்பருவத்தைக் கண்டு வருந்திய தலைமகள், 'புறவில், முல்லைவான்பூ செவ்வான் செவ்விகொண்டன்று; தோழி! யான் உய்யேன்போல்வல்' என்று, ஆற்றாமை மிகுதிதோற்றக் கூறுநிற்றல்.

[வாயிலான்றேவன் பாடியது.]

க0அ. மழைவிளை யாடுங் குன்றுசேர் சிறுகுடிக்
கறவை கன்று வயிற்படர் புறவிற்
பாசிலை முல்லை யாசில் வான்பூச்
செவ்வான் செவ்வி கொண்டன்
றுய்யேன் போல்வ றோழி யானே.

(இ—ள்):—மேகங்கள் தவழ்ந்துவிளையாடும் குன்றுகள்பொருந்திய சிறுகுடியிருப்பை நோக்கிக் கறவைகள் கன்றுகளிடத்துச் செல்லும் புறவில், பசிய இலையையுடைய முல்லையின் குற்றமற்ற சிறந்த மலர், செய்ய வானையுடைய மாலைக்காலத்து அழகைக் கொண்டது; பிழையேன்போல் வேன், தோழி! யான்தான்.—(எ—று.)

புறவு—முல்லைநிலம். செவ்வான்—ஆகுபெயர்.

இறைச்சிகள் :—கன்றை மறவாது மாலைக்காலத்துக் கறவை அக் கன்றிடத்துப் படரும் புறவு என்றதனானே, நம்மை மறவாது குறித்த காலத்து நம்மிடம் வரவேண்டியவர் வந்திலர்; அவர் அன்பிருந்தவாறு என்னை! என்பதாம். மலருங் காலத்தைப் பெற்று முல்லை செவ்வி கொண்டது என்றதனானே, அழகு மிகுதற்கேற்ற குறித்தகாலத்தில்செவ்வி யழிவோமாயினேம்; எவ்வாறுய்குவோம்! என்பதாம்.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—ஆற்றாமையறிவித்தல்.

## நெய்தல்.

[இது, சிறைப்புறம்.]

எ—து,—தலைமகன் சிறைப்புறத்தானாதல் உணர்ந்து தம்வேறுபாடு கண்ட புறத்தார் அலர்கூறுகின்றமை தோன்றத் தோழி, 'துறைவன் புணரிய விருந்தனான்றும், நன்னுதற்கவின் இன்னது' என்று தலைமகட்கு உரைப்பாளாய்க் கூறுநிற்றல்.

[நம்பிதட்டுவன் பாடியது.]

க0கூ. முட்கா லிறவின் முடங்குபுறப் பெருங்கிளை
புணரி யிகுதிரை தரூஉந் துறைவன்
புணரிய விருந்த ஞான்று
மின்னது மன்னோ நன்னுதற் கவினே.

(இ-ள்):—முன்னே வெளியேகாட்டும் இறாமீனின் விளைந்த புறத்தை யுடைய பெரிய சுற்றத்தைக் கடலின் மோதிவீழ்த்தும் அலைகள் (கரைக் கண் கொணர்ந்து) தருகின்ற துறைவன், கூடுதற்கு (ஒருப்பட்டு) இருந்தவன்றும், இத்தகையதாயிற்று, (நினது) சிறந்த நெற்றியிடத்துச் செவ்வி.—(எ-று.)

முட்கால் புறம் என இயையும். இன்னது—புறத்தார்கூறும் அலரைப்பொருது வேறுபட்ட இத்தகையது. 'இந்த ஞான்றும்' என்றும் பாடம்; இந்நாளும் என்க. 'நன்னுதல் கவின்' என்றும்பாடம்; நல்ல நுதலிணாய்! (நினது) கவின் என்க.

இறைச்சி:—தன்னையடைந்த இறாமீனின் கிளையைக் கடல் கொடிய அலைகளால் கரைக்கண் யாரும் அறியத் தந்தாற்போல, அவனைப் பற்றுக்கோடாகக்கொண்ட நம்மையும் நமது கிளையோடு கூட்டித் தனது கொடிய களவொழுக்கத்தால் எல்லாரும் அறிந்து தூற்றுமாறு அவன் வைத்திட்டான் என்பதாம்.

மெய்ப்பாடு—அழுகையைச் சார்ந்த பெருமிதம். பயன்—வரைவு கடாதல்.

## முல்லை.

[இது, பருவங்கண்டுஅழிந்த தலைமகள், தோழிக்கு உரைத்தது.]

எ-து,—வரக்குறித்த பருவம் வந்ததைக்கண்டு வருந்திய தலைமகள், 'வாடையொடு என்னாயினள் என்னோதோர், வாராராயினும் வரினும் நமக்கு யாராகியர்?' என்று, தலைமகன்கொடுமை புலப்படத் தோழிக்குக் கூறு நிற்றல்.

[கிளிமங்கலங்கிழார் பாடியது.]

கக0. வாரா ராயினும் வரினு மவர்நமக்
கியாரா கியரோ தோழிநீர் நிலைப்பைம்
போதுளரிப் புதல்பிளி பொண்பொறிக் கருவிளை
நுண்மு ளீங்கைச் செவ்வரும் பூழ்த்த
வண்ணத் துய்ம்மல ருதிரத் தண்ணென்
றின்னு தெறிவரும் வாடையொ
டென்னு யினள்கொ லென்னு தோரே.

(இ-ள்):—வாராராலும் (அன்றி) வரினும் அவர் நமக்கு எத்தகைய ராவர்? தோழி! நீர்நிலைகளிடத்துப் பசிய போதுகளை அசைத்து, புதலிடத்து நிறைந்த ஒள்ளிய பொறிகளையுடைய கருவிளைமலர்களும், நுண்

ணிய முள்ளையுடைய ஈங்கையின் செய்ய அரும்பு மலரவிட்ட அழகிய (இதழ்கள்) நெருங்கிய மலர்களும் உதிரக் குளிர்ந்து துயர்தருவதாய் வீசும் வாடைக்காற்ருேடு, எத்தகையளாயினள்! என்று கருதாதார்.—(எ-று.)

பிரிந்து பருவத்தும் வாராமையின், அன்பும் அருளும் இலர்என்பாள் 'வாரா ராயினும்... ....யாராகியர்' என்ருள். ஈங்கை— ஒருவகைப் புதல்; இண்டையுமாம். 'பொதுளீரிப்புதல் மலி' என்ற பாடத்திற்கு-நிறைந்த குளிர்ந்த புதலிடத்து நிறைந்த என்க. கருவிளையும் துய்ம் மலரும் - இவற்றும்மைகள் தொக்கன. நீர்நிலைப் பைம்போதுளரி—பனிக்காலத்துத் தாமரை முதலிய நீர்ப்பூக்கள் செவ்வியழியும் இயல்பு நோக்கி. இனி, இச்செய்யுள், தலைமகனைக் கொடுமைகூறித் தலைமகளைத் தோழி வற்புறுத்தியதற்கும் ஏற்குமாறு உய்த்துணர்க.

இறைச்சி:—நீர்நிலத்து மலர்களை அலைத்துப் புதலிடத்துக் கருவிளையும் ஈங்கைத்துய்ம்மலரும் உதிரும்படி வீசும் வாடை என்றதனுனே, அஃது தக்க நிலையிலில்லாத தனித்த மகளிரைத் துயருறுத்தல் கூறவேண்டுமோ! என்பதாம்.

மெய்ப்பாடு—எள்ளல்பற்றிய நகை. பயன்—ஆற்ருமையறிவித்தல்,

## குறிஞ்சி.

[இது தலைமகன் சிறைப்புறமாகத் தோழி கூறியது.]

எ-து,—வரைவு நீட்டித்தவழித் தலைமகள்வேறுபாடுகண்டு வெறியெடுப்பக்கருதிய தாயது நிலைமை தலைமகட்குச் சொல்லுவாளாய், தலைமகன் சிறைப்புறத்தானுதலை உணர்ந்த தோழி, 'தோள்நெகிழ்த்த செல்லல் வேள் என்னும் அன்னையும் அதுவென உணருமாயின், ஆயிடை நாடன் இல்லோர்நகைகாணிய வல்லே வருக' என்று, வரைவுகடாதல்புலப்படக் கூருநிற்றல்.

[தீன்மதிநாகன் பாடியது.]

கககக. மென்ருே ணெகிழ்த்த செல்லல் வேலன்
வென்றி நெடுவே ளென்னு மன்னையு
மதுவென வுணரு மாயி னாயிடைக்
கூழை யிரும்பிடிக் கைகரந் தன்ன
கேழிருந் துறுகற் கெழுமலை நாடன்
வல்லே வருக தோழிநம்
மில்லோர் பெருநகை காணிய சிறிதே.

(இ-ள்):—மெல்லிய தோளை நெகிழச்செய்த துயரத்தை, வேலினனை வெற்றியைக் கொண்ட முருகன் தந்தது என்றுகருதும் அன்னையும் அதனையே உண்மையென உணர்வாளாயின், அவ் வெறியாடுமிடத்து, குறுகிய பெரிய பிடியின் கை மறைந்தாற்போன்ற விளக்கமுள்ள பெரிய நெருங்கிய கற்களையுடைய செழிய மலைநாடன், விரைவாக வருவானாகி; தோழி! நம் இல்லத்தாரது பெரிய நகைத்தற்குரிய செய்கையைச் சிறிது காணுமாறு.—(எ-று.)

அதுவென—விகாரம். 'சிறுமலை' எனவும் பாடம். வெறியெடுத்து இற்பழி யெய்துங்கொல்? எனக் கவன்று தோழிக்குக் கூறினாள்போல வரைவுகடாவினாளாம்.

இறைச்சி:—பிடியின் கை மறைந்தாற்போலச் செழுமலை காணப்படும் நாடன் என்றதனானே, வரைவு நீடவந்த நமது வாட்டத்தை இல்லோர் மற்றொன்றானது என்று மாறுபடக் கருதுமாறு செய்திட்டான் என்பதாம்.

மெய்ப்பாடு—நகையைச்சார்ந்த பெருமிதம். பயன்—வரைவுகடாதல்.

## குறிஞ்சி.

[இது, வரைவு நீட்டித்தவழித் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.]

எ-து,—தலைமகன் களவினைக் காதலித்து வரைவினை நீட்டித்தவிடத்துப் பொறாத தலைமகள், 'தோழி! கௌவையஞ்சின் காமம் எய்க்கும்; எள்ளறவிடின் உள்ளது நாணே; என்நலன் களிறு வாங்க முறிந்தும் படாஅ ஒசியலற்று' என்று, களவுடன்படாமை தோன்றத் தோழிக்குக் கூறுவிற்றல்.

[ஆலத்தூர் கிழார் பாடியது.]

கக௨. கௌவை யஞ்சிற் காம மெய்க்கு
மெள்ளற விடினே யுள்ளது நாணே
பெருங்களிறு வாங்க முறிந்து நிலம்படாஅ
நாருடை யொசிய லற்றே
கண்டிசிற் றோழியவ ருண்டவென் னலனே.

(இ-ள்):—அலரை அஞ்சினால் காமம் குறைந்திடும்;(அக்காமத்தைச்) சிறிதும்இல்லாமல் விட்டுவிடின் உள்ளது நாணேயாகும்; பெரிய களிறு வளைக்க முறிந்தும் நிலத்துப் பொருந்தாத நாரையுடைய ஒசியன்மரத்தைப் போன்றதே; காண்பாய், தோழி! அவர் திளைத்த எனது நலன்.—(எ-று.)

எனவே, 'உயிரினுஞ் சிறந்தன்று நாண் என்பதுணர்ந்தேன், களவிற் கலத்தற்கு இனி இடந்தருவேனல்லேன்' என்றாளாம். வல்லமையுள்ள அவனால் வருந்தியது என் நலன் என்பாள், 'பெருங்களிறு.........நலன்' என்றாள்.

மெய்ப்பாடு—அழுகையைச் சார்ந்த பெருமிதம். பயன்—ஆற்றாமை யுணர்த்தல்.

## மருதம்.

[இ—ள, குறிப்பினாற் குறியிடம் பெயர்த்துக் கூறியது.]

எ—து,—பகற்குறிநேர்ந்த தலைமகற்குக்குறிப்பால் உணருமாறு, 'ஊர்க்கும் அணித்து பொய்கை; பொய்கைக்குச் சேய்த்துமன்று கான்யாறு; யாவதும் துன்னல்போகின்று பொழில்; யாமும் கூழைக்கு மணங்கொணர்கம் சேறும்; பேதை ஆண்டும் வருகுவள்' என்று, தோழி குறியிடம் பெயர்த்துக் கூறாநிற்றல்.

[மாதீரத்தன் பாடியது.]

கககூ. ஊர்க்கு மணித்தே பொய்கை பொய்கைக்குச்
சேய்த்து மன்றே சிறுகான் யாறே
யிரைதேர் வெண்குருகு கல்ல தியாவதுந்
துன்னல் போகின்றாற் பொழிலே யாமெங்
கூழைக் கேர்மணங் கொணர்கஞ் சேறு
மாண்டும் வருகுவள் பெரும்பே தையே.

(இ—ள்):—ஊர்க்கும் அணிமையது பொய்கை; அப்பொய்கைக்குச் சேய்மையதுமன்று சிறிய கான்யாறு; இரையை ஆராயும் வெள்ளிய குருகையல்லது எதுவும் சேர்தலில்லாதது (அதன் கரையிடத்துச்) சோலை; யாம் எமது கூந்தலுக்கு அழகிய மணமுள்ள மலரைக் கொள்ள (அச் சோலையிடத்துச்) செல்வோம்; அங்கும் வருகுவள், பெரிய பேதையான தோழி.—(எ—று.)

'ஊர்க்கும்..........பொழில்' என்றதனான், பொய்கையிடத்தை ஒழித்துப் பொழிலிடத்தைக் குறியிடமாகக் கொள்க எனக் குறிப்பின் உணர்த்தினாளாம். பெரும்பேதை—(வரைவுகூடாதற்கருத்தின்றிக் குறியிடைக்கூட ஒருப்படுதலின்) பெரும்பேதையான தோழி. 'யாவரும்' என்றும் பாடம்.

மெய்ப்பாடு—இளிவரலைச் சார்ந்த பெருமிதம். பயன்—குறியிடங் கூறல்.

## நெய்தல்.

[இது, இடத்துய்த்து நீங்குந் தோழி தலைமகற்குக் கூறியது.]

எ—து,—தலைமகளைக் குறியிடத்துச் செலுத்தி நீங்கும் தோழி, அதனைத் தலைமகன் உணருமாறு, 'கொண்க! நெய்தற்பரப்பில் பாவைகிடப்பினென், நின்குறிவந்தனென்; செல்கம் செல வியங்கொள்; மகள் நுதல் நாரை மதிக்கும்' என்று கூறுநிற்றல்.

[பொன்னாகன் பாடியது.]

கருச. நெய்தற் பரப்பிற் பாவை கிடப்பினெ
னின்குறி வந்தனெ னியறேர்க் கொண்க
செல்கஞ் செலவியங் கொண்மோ வல்கலு
மார லருந்தும் வயிற்ற
நாரை மதிக்கு மென்மக ணுதலே.

(இ—ள்):—நெய்தலின் பரந்தவிடத்துப் பாவையன்னாளைத் தங்கவைத்தேனாய் நின்குறியிடை வந்தேன்; அழகிய தேரையுடைய கொண்க! (நாங்கள் மீண்டு) செல்வோமாக, (தலைமகளை விரைவிற்) செல்ல ஏவுதலைக் கொள்; நாள்தோறும் ஆரன்மீனை அருந்தும் வயிற்றினையுடைய நாரை (யும்) மதிக்கும், எனது மகளது (வருத்தத்தால் வெளிறிய) நுதலை. (எ—று.)

நெய்தற்பரப்பு—கானற்பரப்பு. 'கிடப்பி', 'மிதிக்கும்' என்பன—பாடபேதங்கள்; தங்கவைத்து, (மலர் என்றுகருதி) மிதிக்கும் என்க. மகள்—முறைமை சுட்டா மகள்.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—இடத்துய்த்தமையுணர்த்தல்.

## குறிஞ்சி.

[இது, உடன்போக்குஒருப்படுத்து மீளுந் தோழி தலைமகற்குக் கூறியது.]

எ—து,—தலைமகளை உடன்கொண்டு தலைமகன் செல்லுதலை நேர்வித்து மீளுந் தோழி, 'நாட! ஒருநன்று உடையளாயினும் புலவிதீர்வழி மதி; நின்னலது இலள்' என்று, பாதுகாத்திடுமாறு தலைமகற்குக் கூறுநிற்றல்.

[கபிலர் பாடியது.]

கக௫. பெருநன் றாற்றிற் பேணாரு முளரே
யொருநன் றுடைய ளாயினும் புரிமாண்டு
புலவி தீர்வழி மதியிலை கவரப்
பாடமை யொழுகிய தண்ணறுஞ் சாரன்
மென்னடை மரையா துஞ்சு
நன்மலை நாட நின்னல திலளே.

(இ-ள்):—பெரிய நன்மையைச் செய்யின் பேணாதவரும் உள்ளார் கொல்? ஒரு [சிறு] நன்மையைத் (தோழி) உடையளாயினும் விருப்பம் சிறந்து, (அவள்) புலவியைத் தீர்க்கும்வழியை மதியாய்; (உணவிற்கு) இலையைக்கவர ஓசையினிமை பொருந்திய குளிர்ந்த நறுவிய சாரலிடத்து மெல்லிய நடையையுடைய மரையா துயிலும் சிறந்த மலைநாட! (தோழி தான்) நின்னையன்றி (எவரையும் காப்பவராகப்) பெற்றிலள்.—(எ-று.)

இடையீடின்றிக் கூடும்படிசெய்த உதவியை மறவாது என்சொற் கொண்டு தோழியைக் காக்க என்பாள், 'பெருநன்று............உளரே' என்றாள். புரி—முதனிலைத் தொழிற்பெயர். 'நின்னல திலளே' என்ற பாடத்திற்கு, தோழியைக் காக்க என்று கூறற்கு நின்னாலகத்துப் பிறரை உடையேனல்லேன் என்க.

உள்ளுறை:—இனிய ஓசையையுடைய மலைச்சாரலில் உணவைக் கொள்ள விரையாது அச்சமற்றுத் துயிலும் மரையாவைப்போல, உங்களன்பை உயர்த்திக்கூறும் இல்லிடத்து, எண்ணியவற்றை எளிதிற்பெற்று அச்சமின்றித் தங்கும்படி தோழியை வைத்திடுவை என்பதாம்.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—ஓம்படையுரைத்தல்.

## குறிஞ்சி.

[இது, இயற்கைப்புணர்ச்சிபுணர்ந்து நீங்குந் தலைமகன், தன் நெஞ்சிற்குச் சொல்லியது.]

எ-து,—பொழிலிடத்து எதிர்ப்பட்டுப் பான்மை கூட்ட இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து நீங்குந் தலைமகன், 'யான் நயந்துறைவோள் கூந்தல், நெறிய; தண்ணிய' என்று, அன்பு தோற்ற நலம்பாராட்டி. நெஞ்சிற்குக் கூறுநிற்றல்.

[இளங்கீரன் பாடியது.]

கககசு. யானயந் துறைவோ டேம்பாய் கூந்தல்
வளங்கெழு சோழ ருறந்தைப் பெருந்துறை
நுண்மண லறல்வார்ந் தன்ன
நன்னெறி யவ்வே நறுந்தண் ணியவே.

(இ-ள்):—(நெஞ்சே! யான் விரும்ப அதனால் உன்னிடம்) உறையு மவளது மணம்பரவிய கூந்தல், வளப்பம் மிக்க சோழரது உறையூரிடத்துக் (காவிரிப்) பெருந்துறையில், நுண்ணிய மணல்களினிடைச் கருமணல் ஒழுகினாற்போல, நல்ல நெறியின; நறுவிய குளர்ச்சியின.—(எ-று.)

நயந்து—நயக்க என்று திரிக்க. தேம்பாய்—தேன் பாவிய என்று மாம். நெறி—மயிரிடத்து வளைவு.

மெய்ப்பாடு—உவகை. பயன்—நயப்புரைத்தல்.

## நெய்தல்.

[இது, வரைவு நீட்டித்தவிடத்துத் தலைமகட்குத்தோழிசொல்லியது.]

எ-து,—தலைமகன் வரைவுநீட்டித்தவழி ஆற்றுவித்தல்கருதித் தலைமகட்குத் தோழி, 'துறைவன் வாராது அமையினும்அமைக; ஈண்டு விலைஞர்கைவளை சிறியவுமுள' என்று, வாட்டம் பிறர்க்குப் புலனாகாதவாறு ஆற்றுதல்வேண்டும் என்பது புலப்படக் கூறுநிற்றல்.

[குன்றியன் பாடியது.]

ககஎ. மாரி யாம்ப லன்ன கொக்கின்
பார்வ லஞ்சிய பருவா லீர்ஞெண்டு
கண்டல் வேரளைச் செலீய ரண்டர்
கயிறரி பெருந்திறத் தழுந்துந் துறைவன்
வாரா தமையினு மமைக
சிறியவு முளவீண்டு விலைஞர்கை வளையே.

(இ-ள்):—மாரிக்காலத்து ஆம்பலைப்போன்ற கொக்கின் பார்வையை வெருவியதாலான துன்பம் ஈர்தலையுடைய நண்டு, கண்டல்மரத்தின் வேரிடத்துள்ள வளையிடத்துச் செல்ல அண்டாது (வலைக்) கயிற்றை அரிந்து பெரிய வல்லமையோடு (வளையில்) அழுந்தும் துறையினையுடையான், வாராமல் அமைவானாயினும் அமைந்திடுக; சிறியனவும் உள்ளன; இங்கு வளையல்விற்பார்கையிடத்து வளைகள்.—(எ-று.)

பருவரலீர்ஞெண்டு—துன்பத்தையுடைய ஈரிய ஞெண்டாம். கண்டல்—தாழையுமாம். அண்டர்—பகைவர்; ஈண்டுப் பரதவரை யுணர்த்திற்று. 'வரிப்புனை பந்து' என்புழிப்போல, அரிந்து பெரியதிறத்தால் என்பது "அரிபெருந்திறத்து" என வந்தது. வாட்டத்தால் வளைகள் கழலுந்தோறும் சிறியன வாங்கியிட்டு மறைத்தல்வேண்டும் என்பாள், 'சிறியவும் ..........வளை' என்றாள். 'உம்மைச் சிறியவும்' என்ற பாடத்திற்கு-முன்னையிற் சிறியனவும் என்க.

இறைச்சி:—கொக்கின்பார்வையை அஞ்சிய நண்டு வளையிடத்துச் செல்ல அங்கும் கயிற்றை அரிந்து அழுந்தி உறையும் துறைவன் என்றதனனே, ஊரார் தூற்றும் அலரை அஞ்சி வெளிப்பட்டிடாத உன்னை மனையுள்ளும் தமரை அஞ்சி உறையும்படி வைத்திட்டான் என்பதாம்.

மெய்ப்பாடு—இளிவரலைச்சார்ந்த பெருமிதம். பயன்—ஆற்றுவித்தல்.

## நெய்தல்.

[இது, தலைமகள் பொழுதுகண்டு தோழிக்குச் சொல்லியது.]

எ-து,—வரைவுநீட்டித்தவழித் தலைமகள்,மாலைப்பொழுதைக் கண்டு, 'தோழி! புள்ளும் மாவும் புலம்பொடு வதிய வந்தது மாலை; 'வாயில் அடையக் கடவுநர்; வருவீர்! உளீரோ?' எனவும் காதலர் வாரார்' என்று, தனது ஆற்றாமை மிகுதி புலப்படக் கூறுநிற்றல்.

[நன்னாகையார் பாடியது.]

கககஅ. புள்ளு மாவும் புலம்பொடு வதிய
நள்ளென வந்த நாரின் மாலை
பலர்புகு வாயி லடையக் கடவுநர்
வருவீ ருளீரோ வெனவும்
வாரார் தோழிநங் காத லோரே.

(இ-ள்):—பறவைகளும் விலங்குகளும் துயரத்தோடு தங்கும்படி விரைவாக வந்தது, இரக்கமற்ற மாலை; பலரும்புகும் (மதிலின்) வாயிலை முற்றும் (காவலர்) அடைப்பர்; (இரவுக்குறியிடை) வருவீர்! (இதனை) நினையீரோ? எனவும் வாராராயினர், தோழி! நம் காதலர்.—(எ-று.)

எனவே, காவலர் கடுமையுணர்த்த அதனால் வந்திலர் காதலர்; இனி, என்செய்வேன்? என்றாளாம்.

இறைச்சி:—துணைகளையுடைய அஃறிணையாகிய பறவைகளும் விலங்குகளும் வருந்த வந்தது மாலை என்றதனனே, துணையற்ற உயர்ந்த மகளிர் ஆடவர் இவர்களைத் துயருறுத்தல் கூறவேண்டுமோ! என்பதாம்.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—ஆற்றாமையறிவித்தல்.

## குறிஞ்சி.

[இது, தலைமகன் பாங்கற்கு உரைத்தது.]

எ—து,—இயற்கைப்புணர்ச்சிபுணர்ந்து நீங்குந் தலைமகன், பாங்கற்கு, 'அரிக்குருளை யானையணங்கியாங்கு, வளையுடைக்கையள் எம்மணங்கியோள்' என்று, வலியழிவு புலப்படக் கூறுநிற்றல்.

[சத்திநாதனார் பாடியது.]

கககூ. சிறுவெள் ளரவி னவ்வரிக் குருளை
கான யானை யணங்கி யாஅங்
கிளையள் முளைவா ளெயிற்றள்
வளையுடைக் கையளெம் மணங்கி யோளே.

(இ—ள்):—சிறிய வெள்ளிய அரவினது அழகிய கீற்றுக்களையுடைய குட்டி, காட்டிடத்து யானையை வருத்தினாற்போல, சிறியளும் முளைத்த ஒளியுள்ள பற்களையுடையவளும் வளையினையுடைய கையினளுமாவாள் [ஓர் சிறுமகள்] எம்மை வருத்தியவள்.—(எ—று.)

அரவுக்குருளை—அருகிய வரவினது. கான யானை—(கட்டின்றி வேண்டியன துய்த்து வலிபெற்ற) காட்டியானை.

மெய்ப்பாடு - இளிவரல். பயன்—பாங்கற்கு உணர்த்தல்.

## குறிஞ்சி.

[இது, அல்லகுறிப்பட்டு மீளுந்தலைமகன், தன்னெஞ்சிற்குச் சொல்லியது.]

எ—து,—குறிபிழைத்துக் கூட்டம்பெறாது மீளுந்தலைமகன் 'நெஞ்சே! அரிதுவேட்டனை; (ஆதலின்), காதலி, நல்லளாகுதல்அறிந்தாங்கு அரியளாகுதல் அறியாதோய்'என்று, தன்னெஞ்சினை நோக்கி ஆற்றாமை மிகுதியாற் கூறுநிற்றல்.

[பரணர் பாடியது.]

கஉ0, இல்லோ னின்பங் காமுற் றாஅங்
கரிதுவேட் டனையா னெஞ்சே காதலி
நல்ல ளாகுத லறிந்தாங்
கரிய ளாகுத லறியா தோயே.

(இ—ள்):—பொருளில்லாதவன் இன்பந்துய்த்தலை விழைந்தாற்போல, அரியதொன்றை [தலைவியின் கூட்டத்தை] விழைந்தனை; ஆதலால், நெஞ்சே! காதலி நல்லவளாதலை அறிந்தாற்போல், அரியவளாதலை (நீ) அறிந்திலை.—(எ—று.)

* "உற்றார்முற் றேன்று வுறுமுதல்" என்பவாகலின், 'வேட்டனை …………அறியாதோய்' என்றான். 'இல்லோளின்பம்' என்றும் பாடம்; (எளிதிற் கிடைத்தல்) இல்லாதவளின்பம் என்க. இனி, இச்செய்யுள், இயற்கைப்புணர்ச்சி புணர்ந்த தலைமகன் பிரிந்தவழிக் கலங்கியதற்கும் ஏற்குமாறு உய்த்துணர்க.

மெய்ப்பாடு—இளிவரல். பயன்—அயர்வுயிர்த்தல்.

## குறிஞ்சி.

[இது, வரவுணர்த்திய தோழிக்குத் தலைமகள் கூறியது.]

எ-து,—இரவுக்குறிவருந் தலைமகன் செய்யுங்குறி பிறிதொன்றனான் நிகழ்ந்து மற்றவன்குறியையொத்தவழி அவ்வொப்புமையை மெய்ப்பொருளாக உணர்ந்து சென்றாள் ஆண்டு அவனைக் காணாது தலைமகள் மயங்கியவழிப் பின்னர் அவன் வரவுணர்த்திய தோழிக்குத் தலைமகள், 'மெய்யோ, (அவன்வருகை?) நாடன் குறிவாயாத் தப்பற்கு என்தோள் பசந்தன' என்று, முன் குறிமயங்கியமை புலப்படக் கூறாநிற்றல்.

[கபிலர் பாடியது.]

கஉக. மெய்யோ வாழி தோழி சாரன்
மைப்பட் டன்ன மாமுக முசுக்கலை
யாற்றப் பாயாத் தப்ப லேற்ற
கோட்டொடு போகி யாங்கு நாடன்
றான்குறி வாயாத் தப்பற்குத்
தாம்பசந் தனவென் றடமென் றோளே.

(இ-ள்):—உண்மையோ, தோழி! (நாடன் வருகை?) சாரலிடத்துக் கண்ணில் மை பட்டாற்போலக் கரிய முகத்தையுடைய முசுவின் ஆண், (மரக்கோடு) தாங்கப்பாயாத தவறு (பாய்தலை) ஏற்ற (அக்) கோட்டோடு போனாற்போல, நாடன் குறிபிழைத்த பிழைக்குப் பசந்திட்டன; எனது பெரிய மெல்லிய தோள்கள்.—(எ-று.)

முசு—குரங்கினுள் ஒருவகை. பொழுதுணர்ந்து வாராது புள்வெறிக் குந்துணையும் நீட்டித்துப் பின்னர் வந்தானென்று, குறிவாயாத்தப்பை அவன்மேலேற்றிக் கூறினாள். 'வாராத் தப்பற்கு' என்றும் பாடம்; வாராத பிழைக்கு என்க.

மெய்ப்பாடு—அழுகையைச் சார்ந்த பெருமிதம். பயன்—குறிமயங்கியமை உணர்த்தல்.

* நான்மணிக்கடிகை—௪௦.

## நெய்தல்.

[இது, தலைமகள் பொழுதுகண்டு அழிந்தது.]

எ-து,—தலைமகள் மாலைப்பொழுதைக் கண்டு, 'ஆம்பலும் கூம்பின; வந்தன்று மாலை; கங்குலும் உடைத்தே' என்று அழியாநிற்றல்.

[ஓரம்போகியார் பாடியது.]

கஉஉ. பைங்காற் கொக்கின் புன்புறத் தன்ன
குண்டுநீ ராம்பலுங் கூம்பின வினியே
வந்தன்று வாழியோ மாலை
யொருதா னன்றே கங்குலு முடைத்தே.

(இ-ள்):—பசிய காலையுடைய கொக்கின் புல்லிய புறத்தைப் போன்ற ஆழமான நீர்நிலையிலுள்ள ஆம்பலும் குவிந்தன; இப்பொழுது வந்தது மாலை; வாழ்வதாக; (அம்மாலை), வருத்துதற்கு அது ஒன்றன்று; (மேலும், தன் பின்) இரவினையும் உடையதே.—(எ-று.)

எனவே, இம் மாலையிலும் வரும் இரவிலும் எவ்வாறு உய்குவேன்? என்றாளாம்.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—அயர்வுயிர்த்தல்.

## நெய்தல்.

[இது, சிறைப்புறம்.]

எ-து,—பகற்குறியிடத்து வந்த தலைமகனைக் காணாத தோழி, அவன் சிறைப்புறத்தானாதலறிந்து, தலைமகட்கு, 'புன்னைப்பூம்பொழில் புலம்ப இன்னும் வாரார்; வரூஉம் என்னையர் திமில்' என்று, பொழுதுகடந்தமை புலப்படுமாறு கூறாநிற்றல்.

[ஐயூர்முடவன் பாடியது.]

கஉங. இருடிணிந் தன்ன வீர்ந்தண் கொழுநிழ
னிலவுக் குவித்தன்ன வெண்மண லொருசிறைக்
கருங்கோட்டுப் புன்னைப் பூம்பொழில் புலம்ப
வின்னும் வாரார் வரூஉம்
பன்மீன் வேட்டத் தென்னையர் திமிலே.

(இ-ள்):—இருள் செறிந்தாற்போன்ற கரிய குளிர்ந்த வளவிய நிழலையும், நிலவைக் குவித்தாற்போன்ற வெள்ளிய மணல் பரவிய ஓரிடத்தையுமுடைய வலிய கிளைகளையுடைய புன்னைகள் நிறைந்த அழகிய சோலை புலம்ப இன்னும் வாராராயினர், (காதலர்;) வந்திடும்; பல மீன்களையும் வேட்டமாடுதற்குச் சென்ற என்னையரது கட்டுமரம்.—(எ-று.)

பொழுது கடந்தமையையும் எதிர்ப்படுதற்குற்ற இடையூற்றையும் தெரிவிப்பாள், 'இன்னும்.........திமில்' என்றாள்.

மெய்ப்பாடு—அழுகையைச் சார்ந்த பெருமிதம். பயன்—இடையூறுணர்த்தல்.

## பாலை.

[இது, புணர்ந்து உடன்போக்கினைத் தலைமகளொழியப் போகலுற்ற தலைமகற்குத் தோழி சொல்லியது.]

எ-து,—தலைமகளுடன்கூடிப் பின்னர்த் தனித்துச்செல்லக் கருதிய தலைமகற்குத் தோழி, 'பெரும! பெருங்காடு இன்னா என்றிராயின், இனியவோ தமியோர்க்கு மனை?' என்று, செலவழுங்குமாறு கூறுநிற்றல்.

[பாலைபாடிய பெருங்கடுங்கோ பாடியது.]

கஉச. உமணர் சேர்ந்து கழிந்த மருங்கி னகன்றலை
யூர்பாழ்த் தன்ன வோமையம் பெருங்கா
டின்னா வென்றி ராயி
னினியவோ பெரும தமியோர்க்கு மனையே.

(இ-ள்):—'உப்புவிற்பார் கூடி அகன்ற இடத்தினையுடைய பெரிய ஊர் பாழ்த்தாற்போன்ற வாகைகள் நிறைந்த பெரிய காடு, (உடன் கொண்டு செல்லின்,) துயர்தருவதாகும்' என்று கூறுவீராயின், இனியனவோ? பெரும! தனித்தார்க்கு மனை.—(எ-று.)

பாழ்த்தன்ன—விகாரம். தம்முடன் வருவதால் காடுதருவன இனியன; தமித்துறைதலால் மனை தருவன இன்னாதன என்பது குறிப்பு.

மெய்ப்பாடு—அச்சத்தைச் சார்ந்த பெருமிதம். பயன்—உடன்போக்கு வலியுறுத்தல்.

## நெய்தல்.

[இது, தலைமகள் தோழிக்குச் சிறைப்புறமாகச் சொல்லியது.]

எ-து,—வரைவு நீட்டித்தவிடத்துத் தலைமகள், தோழிக்குத் தலைமகன் சிறைப்புறத்தானாதலை உணர்ந்து, 'தோழி! யான் உளன்; நலன் துறைவனொடு கண்மாறின்று' என்று, ஆற்றுமை தோற்றக் கூறுநிற்றல்.

[அம்மூவனார் பாடியது.]

௧௨௫. இலங்குவளை நெகிழச் சாஅய் யானே
யுளனே வாழி தோழி சாரற்
றழையணி மருங்குன் மகளி ருள்ளும்
விழவுமேம் பட்டவென் னலனே பழவிற்
பறைவலந் தப்பிய பைதன் குருகு
திரைதோய் வாங்குசினை யிருக்குந்
தண்ணந் துறைவனொடு கண்மா றின்றே.

(இ-ள்):—விளங்கும் வளை நெகிழும்படி மெலிந்து யான்தான் உள்ளேனாயினேன்; தோழி! சாரலிடத்துத் தழையையணிந்த இடையினையுடைய மகளிர்எல்லாருள்ளும் விழவிடத்து உயர்ந்ததான எனது நலன்றான், பழையமனையிற் பறத்தல்வல்லமை கெட்ட துயரத்தையுடைய நாரை அலையிடத்துத் தோயும் வளைந்த கிளையிடத்துத் தங்கும் குளிர்ந்த அழகிய துறைவனோடு பெருமை கெட்டது.—(எ-று.)

நலன் உயர்வுடைமையாலன்றே தலைவனாற் காதலிக்கப்பட்டது என்று கருதிப்போலும், 'தழையணி.........நலன்' என்றாள்.

உள்ளுறை:—பழமனையிற் பறத்தல் வல்லமைகெட்ட துயரையுடைய நாரை திரைதோய் சினையிடத்துத் தங்கினாற்போல, என்மனையிடத்துச் செறிப்பினால் கூட்டம்பெறாத வருத்தத்தையுடைய யான் ஊரார் தூற்றும் அலரும் வந்து வருத்தத் தங்குமாறு வைத்திட்டான் என்பதாம்.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—வரைவுகடாதல்.

## முல்லை.

[இது, பருவங்கண்டு அழிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.]

எ-று,—தலைமகன் வருவதாகக்குறித்த பருவத்தைக் கண்டு வருந்திய தலைமகள், 'தோழி! இளமைபாரார் வளர்நசைஇச் சென்றோர், இவணும் வாரார்; எவணரோ? கார், முல்லைமுகை எயிறாக நகும்' என்று, தலைமகன் கொடுமை புலப்படக் கூறுநிற்றல்.

[ஒக்கூர் மாசாத்தி பாடியது.]

௧௨௬. இளமை பாரார் வளநசைஇச் சென்றோ
ரிவணும் வாரா ரெவணரோ வென்ப
பெயல்புறந் தந்த பூங்கொடி முல்லைத்
தொகுமுகை யிலங்கெயி றாக
நகுமே தோழி நறுந்தண் காரே.

(இ-ள்):—இளமையைக் கருதாராய்ச் செல்வத்தை விரும்பிச் சென்றோர், இவ்விடத்தும் வந்திலர்; எவ்விடத்தினரோ? (அதனையும் உணரச் செய்திலர்;) மழை பாதுகாத்த அழகிய கொடியையுடைய முல்லையின் கூட்டமான முகைகள் விளங்கும் பற்களாக,(அவர் சொல்லை மெய்யெனக் கொண்ட நம்மைப் பார்த்து) நகும், தோழி! நறுவிய குளிர்ந்த கார் காலம்.—(எ-று.)

இளமை— இளமையதருமை. 'நசைச்சென்றோர்' என்ற பாடத்திற்கு —விருப்பத்தாற் சென்றோர் என்க. என்ப—அசைநிலை.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—ஆற்றாமையறிவித்தல்.

## மருதம்.

[இது, பாணன் வாயிலாகப் புக்கவழித் தலைமகற்குத் தோழி சொல்லியது.]

எ-து,—பரத்தையிற்பிரிந்து பாணனை வாயிலாகக் கொண்டு புக்க தலைமகற்குத் தோழி, 'ஊர! நின்பாணன் பொய்யனாக, நின்னகன்றிசினோர்க்குப் பாணரெல்லாங் கள்வர்போல்வர்' என்று, வாயினேர்ந்தமை புலப்படக் கூறுநிற்றல்.

[ஓரம்போகியார் பாடியது.]

௧௨௭. குருகுகொளக் குளித்த கெண்டை யயல
துருகெழு தாமரை வான்முகை வெரூஉங்
கழனியம் படப்பைக் காஞ்சி யூர
வொருநின் பாணன் பொய்ய னாக
வுள்ள பாண ரெல்லாங்
கள்வர் போல்வர்நின் னகன்றிசி னோர்க்கே.

(இ-ள்):—நாரை (இரையைக்) கொள்ள (அதனை அஞ்சி நீர்க்குள்) முழுகிய கெண்டை மீன், அயலிடத்ததான ஒளிபொருந்திய தாமரையின் சிறந்த முகையையும் அஞ்சும் கழனியையும், மனைப்பக்கத்துக் காஞ்சிமரத்தினையுமுடைய ஊர! ஒருநின்பாணன் பொய்சொல்பவனாக, (இவ்வூரில்) உள்ள பாணரெல்லாம் கள்வர்போல்வர் நின்னைப் பிரிந்தார்க்கு.—(எ-று).

பாணரெல்லாம்—இழித்தற்கண் திணை மயங்கியது. பாணர்பலரையும் பரத்தையர்பலரையும் உடையை என்பாள், 'பாணர்......நின்னகன்றிசினோர்க்கு' என்றாள். குருகை அஞ்சிய கெண்டை தாமரைமுகையையும் அஞ்சும் என்றது, பரத்தையிற்பிரிந்து வருத்தும் நின்னை அஞ்சிய யாம்

பாணனையும் அஞ்சுகின்றோம் என்பதைக் குறிப்பால் உணர்த்தியது. கழனியையும் காஞ்சியையும் உடையாய் என்றது, மிகப் பயன்படும் மனைவியோடு பயன்படாப் பரத்தையையும் உடையாய் என்பதாம்.

மெய்ப்பாடு—நகையைச் சார்ந்த பெருமிதம். பயன்—வாயினேர்தல்; வாயின் மறுத்தலுமாம்.

## குறிஞ்சி.

[இஃது, அல்லகுறிப்பட்டு மீளுந் தலைமகன், தன் நெஞ்சினை நெருங்கிச் சொல்லியது.]

எ—து,—வேற்றுக்குறியிடைப்பட்டுக் கூட்டம்பெறாது மீளும் தலைமகன், 'நெஞ்சே! சேயள் அரியோட்படர்தி; நோயை; (ஆதலால்), நோய்ப் பாலோய்' என்று, தனது நெஞ்சினை நெருங்கிக் கூறுகிற்றல்.

[பரணர் பாடியது.]

கஉஅ. குணகடற் றிரையது பறைதபு நாரை
திண்டேர்ப் பொறையன் றொண்டி முன்றுறை
யயிரை யாரிரைக் கணவந் தாஅங்குச்
சேய ளரியோட் படர்தி
நோயை நெஞ்சே நோய்ப்பா லோயே.

(இ—ள்):—கிழக்குக்கடலின் அலையிடத்ததான பறத்தல்வலி கெட்ட நாரை, வலிய தேரையுடைய சேரனது 'தொண்டி' என்னும் ஊரின் முன்துறையிடத்துள்ள அயிரையாகிய அரிய இரைக்கு மனம்பொருந்தினாற்போல, சேய்மையளும் அரியளுமாயினாளை உள்ளினை; (கிட்டாமையின்) நோயினையுடையையானாய்; (ஆதலின்,) நெஞ்சே! நோயைத்தரும் ஊழினையுடையாய்.—(எ—று.)

'தோட்பொறையன்' என்றும் பாடம். * "நோயெல்லா நோய்செய்தார் மேலவாம்" ஆதலின், 'நோயை ........பாலோயே' என்றாள்.

மெய்ப்பாடு—இளிவரல். பயன்—அயர்வுயிர்த்தல்.

## குறிஞ்சி.

[இது, தலைமகன் பாங்கற்கு உரைத்தது.]

எ—து,—இயற்கைப்புணர்ச்சி புணர்ந்த தலைமகன் பாங்கற்கூட்டத்தை விழைந்து, 'தோழ! கேளாய்: சிறுநுதல் எம்மைப் பிணித்தற்று' என்று, பாங்கற்கு வலியழிவுணருமாறு கூறுகிற்றல்.

---

* திருக்குறள்—இன்னாசெய்யாமை—௪0.

[கோப்பெருஞ்சோழன் பாடியது.]

கஉகூ. எலுவ சிறாஅ ரேமமுறு நண்ப
புலவர் தோழ கேளா யத்தை
மாக்கட னடுவ ணெண்ணாட் பக்கத்துப்
பசுவெண் டிங்க டோன்றி யாங்குக்
கதுப்பயல் விளங்குஞ் சிறுநுதல்
புதுக்கோள் யானையிற் பிணித்தற்றா லெம்மே.

(இ-ள்):—பாங்க! சிறுவர்களின் பாதுகாவல்பொருந்திய நண்ப! அறிவுடையார்தம் தோழ! கேட்பாய்: கரிய கடலின் நடுவிடத்து எட்டாகிய வளர்பிறைப்பக்கத்து நாளில், பசிய வெள்ளிய திங்கள் தோன்றினாற் போல, (அவ்வரிவையின்) கூந்தலின் அயலிடத்து விளங்குஞ் சிறுநுதல் புதிதாகக்கொண்ட யானையினைப் (பிணிப்பார் பிணித்தாற்போற்) பிணித்திட்டது எம்மை.—(எ-று.)

நட்பிற்சிறந்தானும் நல்வழிப்படுத்துமவனும் அறிவுடையவனுமாதல் புலப்பட, 'எலுவ.........தோழ' என்றான். பலபட விளித்தது, குறை மறாமைப் பொருட்டு. அத்தை—முன்னிலையிடத்தசை. 'புலவ தோழ,' 'பகுவெண் டிங்கள்' என்பனவும் பாடம்; அறிவுடைய தோழ, பாதியாகிய வெண்டிங்கள் என்க. பெருந்தோண் முதலியன மாறுபடின், கெட்டிருப்பேன் என்பான், 'சிறுநுதல்......பிணித்தற்று' என்றான்.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—பாங்கற்குணர்த்தல்.

## பாலை.

[இது, பிரிவிடை அழிந்த தலைமகளைத் தோழி வற்புறுத்தியது.]

எ-து,—தலைமகனது பிரிவிடத்து வருந்திய தலைமகளைத் தோழி, 'நம்காதலர் நிலந்தொட்டுப் புகார்; வானம் ஏறார்; முந்நீர் காலிற் செல்லார் தேரின், கெடுநரும் உளரோ?' என்று, வருந்தல் பயனற்றது என்பது புலப்பட வற்புறுத்திக் கூறாநிற்றல்.

[வெள்ளிவீதியார் பாடியது.]

கஙO. நிலந்தொட்டுப் புகாஅர் வான மேறார்
விலங்கிரு முந்நீர் காலிற் செல்லார்
நாட்டி னாட்டி னூரி னூரிற்
குடிமுறை குடிமுறை தேரிற்
கெடுநரு முளரோநங் காத லோரே.

(இ-ள்):—நம்காதலர், நிலத்தைத் தோண்டிப் புகுந்திடார்; வானத்திடத்து ஏறிடார்; விலங்கிய பெரிய கடலிடத்துக் காலாற் சென்றிடார்; நாடுநாடாகவும் ஊரூராகவும் குடிமுறை குடிமுறையாகவும் ஆராயின் கெடுவாரும் உளரோ?—(எ-று.)

'முந்நீர்' என்றும் பாடம். குடிமுறை குடிமுறை—நாடும் ஊரும் அல்லாவிடங்களில் உள்ள குடியிருப்புக்கள். தாமாகவே மீண்டு வந்திடுவர் என்பாள், 'நங்காதலோர்' என்றாள். இனி, இச்செய்யுள், நீ அவர் பிரிந்தாரென்று ஆற்றாயாகின்றதென்னை? யான் அவருள்வழியறிந்து தூதுவிட்டுக் கொணர்வேன் நின் ஆற்றாமை நீங்குக எனத் தோழி தலைமகளை ஆற்றுவித்ததற்கும், தோழி தூதுவிடுவோளாகத் தலைமகள், தனது ஆற்றாமையாற் கூறியதற்கும் பொருந்துமாற்றை உய்த்துணர்க.

மெய்ப்பாடு—அழுகையைச்சார்ந்த பெருமிதம். பயன்—ஆற்றுவித்தல்.

## பாலை.

[இது, வினைமுற்றிய தலைமகன் பருவவரவின்கண் சொல்லியது.]

எ-து,—கருதியவினைமுடித்த தலைமகன் குறித்த பருவவரவிடத்து 'பேரமைக்கண்ணி இருந்த ஊர்சேணுறிடையது; நெஞ்சு பெருவிதுப்புற்றன்று; யான் நோகோ?' என ஆற்றாமைமிகுதியாற் கூறுநிற்றல்.

[நக்கீரர் பாடியது.]

கரு௧. ஆடமை புரையும் வனப்பிற் பணைத்தோட்
பேரமை கண்ணி யிருந்த வூரே
நெடுஞ்சே ணாரிடை யதுவே நெஞ்சே
யீரம் பட்ட செவ்விப் பைம்புனத்
தோரே ருழவன் போலப்
பெருவிதுப் புற்றன்று நோகோ யானே.

(இ-ள்):—அசையும் மூங்கிலைப்போன்ற அழகினையுடைய பெரிய தோளையும், பெருமையமைந்த கண்ணினையுமுடையாள் இருந்த ஊர்தான், மிகவும் சேய்மையதான வழியினை இடையிலுடையது; நெஞ்சுதான், ஈரம் பட்டதுறச் செவ்வியையுடைய பசிய புனத்திடத்து ஓர்எருதையுடைய உழவனைப்போல, பெருநடுக்கம்அடைந்தது; ஆதலால், வருந்துவேனோ யான்தான்?—(எ-று.)

'அமைக்கண்ணி' என்ற பாடத்திற்கு, பொருந்துதலையுடைய கண்ணியினள் என்க. நெடுஞ்சேண்—மீமிசைச்சொல். இடையதுவே—விகாரம். ஆல்—ஆதலால்.

மெய்ப்பாடு—அச்சத்தைச் சார்ந்த அழுகை. பயன்—அயர்வுயிர்த்தல் பாங்கன் கேட்டு விரைந்து தேர்பண்ணுவானாதலுமாம்.

## குறிஞ்சி.

[இது, கழற்றெதிர்மறை.]

எ-து,—'ஆமம் கடியத்தக்கது' என்று கழறிக்கூறிய பாங்கற்குத் தலைமகன், 'மாயோள், கவவுக்கடுங்குரையள், காமர்வனப்பினள், குவவுமென் முலையள், கொடிக்கூந்தலள், ஞாங்கர் சாஅய்நோக்கினள்; மறந்து அமைகோ?' என்று, தனக்கு அவள் இன்றியமையாமை புலப்படக் கூறாநிற்றல்.

[சிறைக்குடியாந்தையார் பாடியது.]

௧௩௨. கவவுக் கடுங்குரையள் காமர் வனப்பினள்
குவவுமென் முலையள் கொடிக்கூந் தலளே
யாங்குமறந் தமைகோ யானே ஞாங்கர்க்
கடுஞ்சுரை நல்லா னடுங்குதலைக் குழவி
தாய்காண் விருப்பி னன்ன
சாஅய்நோக் கினளே மாஅ யோளே.

(இ—ள்):—மாமைநிறத்தினையுடையாள்தான். இறுகமுயங்குமவளும், சிறந்த வனப்பினளும், குவிந்த மெல்லிய முலையினளும், நீண்ட கூந்தலினளுமாவாள்; மேலும், கடுகிய சுரப்பையுடைய நல்ல ஆனின் நடுங்குந் தலையையுடைய கன்று, தாயைக் காணுதற்கு விரும்பும் விருப்பத்தினைப் போன்ற விருப்பத்தினளாய், (என்னை) வருத்தத்துடன் நோக்கினள்; (அத்தகையாளை) மறந்து அமைவேனோ யான்தான்?—(எ-று.)

உயிர்வாழ்தற்கும் உள்ளுதல் இன்றியமையாமை புலப்பட, 'மறந்தமைகோ யானே' என்றான். ஆங்கு—அசைநிலை.

மெய்ப்பாடு—இளிவரல். பயன்—பாங்கனை ஒருப்படுத்தல்.

## குறிஞ்சி.

[இது, வரைவு நீட்டித்தவிடத்துத் தலைமகள் சொல்லியது.]

எ-து,—தலைமகன் வரைவு நீட்டித்தவிடத்துத் தலைமகள், 'தோழி! என் ஊர்ஞ்செத்தும் நலம் புத்துண்டபுலம்பினேனே உள்ளேன்' என்று, தன் ஆற்றாமைமிகுதி புலப்படக் கூறாநிற்றல்.

[உறையூர் முதுகண்ணன்சாத்தன் பாடியது.]

கஅ௩. புனவன் றுடவைப் பொன்போற் சிறுதினைக்
கிளிகுறைத் துண்ட கூழை யிருவி
பெரும்பெய லுண்மையி னிலையொலித் தாங்கென்
னுரஞ்செத்து முள்ளேன் றோழியென்
னலம்புத் துண்ட புலம்பினானே.

(இ-ள்):—புனவன்தோட்டத்துப் பொன்னைப்போன்ற சிறுதினையின், கிளிகள் குறைத்து உண்ட கூழையான தட்டைகள், பெரிய மழைபொழிந்தமையின் நிலைத்துத் தழைத்தாற்போல, என்வலி அழிந்தும் உள்ளேன்; தோழி! எனது நலத்தைப் புதிதாக (அவன்) நினைத்ததனாலான துயரத்தோடு.—(எ-று.)

புலம்பினான்—ஆனுருபு, ஒடுஉருபின்பொருளில் வந்தது. தலைமகன் வரையாமையான் வலியற்ற நான் நீ கூறும் ஆறுதல்களால் ஆற்றியுள்ளேன் என்பாள், 'கிளி......................உள்ளேன்' என்றாள்.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—ஆற்றாமையறிவித்தல்.

## குறிஞ்சி.

[இது, தலைமகள் ஆற்றுவிக்குந் தோழிக்குச் சொல்லியது.]

எ-து,—வரைவிடை ஆற்றாளாகிய தலைமகள், ஆற்றுவிக்குந் தோழிக்கு, 'தோழி! நாடனொடு கலந்த நட்பு, பிரிவின்றாயின் நன்று; அது பெற்றிலேன்' என்று, ஆற்றாமை தோற்றக் கூறுநிற்றல்.

[கோவேங்கைப்பெருங்கதவன் பாடியது.]

கஅ௪. அம்ம வாழி தோழி நம்மொடு
பிரிவின் றாயி னன்றுமற் றில்ல
குறும்பொறைத் தடைஇய நெடுந்தாள் வேங்கைப்
பூவுடை யலங்குசினை புலம்பத் தாக்கிக்
கல்பொரு திரங்குங் கதம்வீ ழருவி
நிலங்கொள் பாம்பி னிழிதரும்
விலங்குமலை நாடனொடு கலந்த நட்பே.

(இ-ள்):—குறிஞ்சிநிலத்துத் தங்கிய நெடியதாளையுடைய வேங்கைமரத்தின் பூக்களையுடைய அசையும் கிளை வருந்தத் தாக்கி கல்லில் மோதி ஒலிக்கும் சீற்றத்துடன் விழும் அருவி, நிலத்து (இறங்குதலைக்) கொள்

ளும் பாம்பினைப்போல இழியும் விலங்குகள் நிறைந்த மலைநாடனோடு கலந்ததனாலான நட்புத்தான், கேட்பாயாக: தோழி! நம்மொடு பிரிதல் இல்லையாயின் நன்று; அது கழிந்தது.—(எ-று.)

வாழி, தில்ல—அசைநிலைகள். மன்—கழிவு. இரங்கும் அருவி என இயையும். 'தூக்கி' என்றும் பாடம்.

உள்ளுறை:—அருவி குறிஞ்சிநிலத்துள்ள வேங்கையின் மலருள்ள சினை வருந்தத் தாக்கிக் கல்லோடு மோதிக் கீழிறங்குமாறுபோல, மலைநாடன், என்மனையிடத்திருந்த எனது சிறந்த நலத்தை வருந்தத் தினைத்து, வலிதாகக் கூறிய நின்னோடும் மாறுபட்டு, மனஞ்சென்றாங்கே பிரிந்து சென்றிட்டான் என்பதாம்; 'நிலங்கொள் பாம்பின்' என்ற வினையுவமம் உள்ளுறையுவமத்திற்குச் சிறப்புக்கொடுத்து நின்றது.

மெய்ப்பாடும் பயனும்—முன்னையவே.

## பாலை.

[இது, தலைமகன் பிரியுமெனை வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது.]

எ-து,—தலைமகன் பிரிந்திடுவான் என்று கருதி வேறுபாடடைந்த தலைமகளுக்குத் தோழி, 'தோழி! ஆடவர்க்கு உயிரே வாணுதல்; மகளிர்க்கு ஆடவர் உயிர்' என நமக்கு உரைத்தோரும் (அவர்) தாம்; செலவழுங்குவர் அழால்' என்று, ஆற்றுவித்தல்கருதிக் கூறாநிற்றல்.

[பாலைபாடிய பெருங்கடுங்கோ பாடியது.]

கநடு. வினையே யாடவர்க்குயிரே வாணுதன்
மனையுறை மகளிர்க் காடவ ருயிரென
நமக்குரைத் தோருந் தாமே
யழாஅ றோழி யழுங்குவர் செலவே.

(இ-ள்):—'தொழிலிற் பொருந்திய ஆடவர்க்கு உயிராவார், ஒளியுள்ள நுதலையுடைய மகளிர்; மனைக்கண் உறையும் மகளிர்க்கு ஆடவர் உயிராவார்' என்று நமக்குக் கூறினோரும் அவர்தாம்; அழாதி, தோழி! வருந்துவர் செலவில்.—(எ-று.)

நாம் செலவழுங்குவித்தல் வேண்டா; அவரே துணியார் என்பாள், 'அழுங்குவர் செலவே' என்றாள்.

மெய்ப்பாடு—அழுகையைச்சார்ந்த பெருமிதம். பயன்—ஆற்றுவித்தல்.

## குறிஞ்சி

[இது, தலைமகன் பாங்கற்கு உரைத்தது.]

எ-து,—தலைமகன் பாங்கற்கூட்டத்தை விழைந்து, 'காமம் பிணியும் அன்றே? (எனினும்), கடுத்தலும் தணித்தலும் இன்றே; காணுநர்ப்பெறின் அது பாணியும் உடைத்து' என்று, குறை மறுதவாறு கூறுநிற்றல்.

[மிளைப்பெருங்கந்தன் பாடியது.]

கஅசு. காமங் காம மென்ப காம
மணங்கும் பிணியு மன்றே நுணங்கிக்
கடுத்தலுந் தணித்தலு மின்றே யானை
குளகுமென் றாண்மதம் போலப்
பாணியு முடைத்தது காணுநர்ப் பெறினே.

(இ-ள்):—(உலகினர்) 'காமம் காமம்' என்று உயர்த்திக்கூறுவர்; காமம் வருத்தும் நோயுமன்றே? (எனினும்), நுண்ணிதாய் மிகாதலும் தணித்தலும் இல்லாததே; யானை, தழைகளை உணவாக மென்றும் ஆளும் மதத்தைப்போல, அழகும் உடையது, அதன்தன்மைகாண்பாரைப் பெறின்.—(எ-று.)

'காமம்...........அன்றே' என்றவரை, பாங்கன் கூறியதை மறுத்தற்கு எடுத்து மொழிந்தது. இன்று—கடுத்தலும், தணித்தலும் என்பவற்றோடு தனித்தனி இயையும்.

மெய்ப்பாடு—இளிவரல். பயன்—பாங்கனை ஒருப்படுத்தல்.

## பாலை.

[இது, தலைமகன் பிரிவச்சம் உரைத்தது.]

எ-து,—இயற்கைப்புணர்ச்சிபுணர்ந்த தலைமகன், 'அரிவை! புலம்பல்; துறந்து அமைகுவேனாயின், எற்றுறந்து இரவலர் வாரா வைகல் பல வாருக; யான் செலவுறுதகவு (இலதாக)' என்று, பிரிவென்பதும் ஒன்றுண்டு என்பது புலப்படக் கூறுநிற்றல்.

[பாலைபாடிய பெருங்கடுங்கோ பாடியது.]

கஅஎ. மெல்லிய லரிவைநின் னல்லகம் புலம்ப
நிற்றுறந் தமைகுவெ னாயி னெற்றுறந்
திரவலர் வாரா வைகல்
பலவா குகயான் செலவுறு தகவே.

(இ-ள்):—மெல்லிய இயல்புள்ள அரிவையே! நினது நல்ல நெஞ்சம் வருந்தாதி; நின்னைத் துறந்து மனம்பொருந்தி இருப்பேனாயின், என்னைக்

(தொடாதவன் என்று) கைவிட்டு இரவலர் (என்பால்) வாராத நாட்கள் பலவாய்விடுக; யான் (மறுமையிற் செல்லுதற்குரிய) நல்லுலகும் (இல்லாத தாகுக.)—(எ—று.)

ஈத்துவக்கும்இன்பமுணர்ந்து உயிர்க்கு ஊதியமாகிய ஈதலை என்றும் விழைந்தோனுதலின், சூளுறவிலும், 'எற்றுறந்து........பலவாகுக' என்றான். ஈயாதார்க்கு நல்லுலகத்து இடமில்லையாதல் துணிபாதலால், 'இல்லாததாக' என வருவித்து உரைக்கப்பட்டது. 'புலம்பநின்' என்றும் பாடம்; வருந்த நின்னை என்க.

மெய்ப்பாடு—அச்சத்தைச் சார்ந்த பெருமிதம். பயன்—பிரிவச்ச முரைத்தல்.

## குறிஞ்சி.

[இது சிறைப்புறம்.]

எ—து;—குறிபிழைத்த தலைமகன் பிற்றைஞான்று இரவுக்குறிவந் துழி, தோழி, சிறைப்புறமாக, 'நொச்சிப்பூவின் பாடு கேட்டு ஊர்துஞ்சி னும் யாம் துஞ்சலம்' என, முன்னையிரவு குறி தவறியமை புலப்படக் கூறுநிற்றல்.

[கொல்லனழிசி பாடியது.]

கரு அ. கொன்னூர் துஞ்சினு மியாந்துஞ் சலமே
யெம்மி லயல தேழி லும்பர்
மயிலடி யிலைய மாக்குர னொச்சி
யணிமிகு மென்கொம் பூழ்த்த
மணிமருள் பூவின் பாடுநனி கேட்டே.

(இ-ள்):—பெருமையையுடைய ஊர் துயிலுவதாயும் யாம் (நெருந லிரவு) துயின்றிலோம்; எமது மனையை அடுத்ததான, உயர்ந்த மேலிடத்து மயிலின் அடியைப்போன்ற இலையினையும், கரிய தாளையுமுடைய நொச்சி யின் அழகுமிக்க மெல்லிய கோடு உதிர்த்த நீலமணிபோன்ற பூவின் விழுகையை மிகவும் கேட்டு.—(எ—று.)

இரவுக்குறி இல்லையொட்டியதாதல்வேண்டும்; என்னை? * "இரவுக் குறியே யில்வரை யிகவாது" என்றாராகலின். ஏழில்—எழிலென்றதன் நீட்டல். மருள்—உவமவுருபு. இனி, இச்செய்யுள், இரவுக்குறிநேர்ந்ததற் கும் ஏற்குமாறு உய்த்துணர்க.

மெய்ப்பாடு—அழுகையைச்சார்ந்த பெருமிதம். பயன்—குறிபிழைத் தமை அறிவித்தல்.

* இறையனாரகப்பொருள்—கக.

## மருதம்.

[இது, தலைமகற்குத் தோழி வாயின்மறுத்தது.]

எ-து,—வாயில்வேண்டிப் புக்க தலைமகற்குத் தோழி, 'ஐய! அம்பலொடு எம்தெரு வாரல்' என்று, வாயின்மறுத்தல் புலப்படக் கூறுகிற்றல்.

[ஒக்கூர் மாசாத்தியார் பாடியது.]

கஙகூ. மனையுறை கோழிக் குறுங்காற் பேடை
வேலி வெருகின் மாலை யுற்றெனப்
புகுமிட னறியாது தொகுபுடன் குழீஇப்
பைதற் பிள்ளைக் கிளைபயிர்ந் தாஅங்
கின்னா திசைக்கு மம்பலொடு
வாரல் வாழிய ரையவெந் தெருவே.

(இ-ள்):—மனையிடத்து உறையும் கோழியின் குறுகிய காலையுடைய பேடை, வேலியிடத்து ஆண்பூனையால் மயக்கம்அடைந்ததனால், தப்பிப் புகுமிடத்தை அறியாது கூட்டத்துடன் சேர்ந்து, துயர்தரும் சிறிய சுற்றத்தை [குஞ்சுகளை] அழைக்கும் அழைப்புப்போல, இன்னாதாய்க்கூறும் அம்பலொடு வாராதி; வாழ்வாயாக, ஐய! எமது தெருவிடத்து.—(எ-று.)

ஐ—தலைமை; அதனையுடையவன், ஐயன்; அதன் அண்மைவிளி 'ஐய' என்பது. செற்றத்தால் 'வாழியர்' என்றாள்.

மெய்ப்பாடு—வெகுளி. பயன்—வாயின்மறுத்தல்.

## பாலை.

[இது, பொருள்வயிற் பிரிந்தவிடத்து 'நீ ஆற்றுகின்றிலை' என்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது.]

எ-து,—தலைமகன் பொருளீட்டலைக் கருதிப் பிரிந்தவழி, ஆற்றுவித்தல் கருதி, 'நீ ஆற்றுகின்றிலை' என்ற தோழிக்குத் தலைமகள், 'காதலர் சுரன் சென்றனர்; ஈங்கு, யான் தாங்கிய எவ்வம் ஊர் யாங்கறிந்தன்று?' என்று, அவர் சென்ற ஆற்றின்கொடுமை கருதி ஆற்றுகின்றிலேன் என்பது புலப்படத் தோழியை வேறுபடுத்திக் கூறுகிற்றல்.

[அள்ளூர்நன்முல்லை பாடிய[illegible]]

கசO. வேதின வெரிநி[illegible]
தாறுசெ[illegible] முதுபோஒத்
[illegible] மாக்கள் புட்கொளப் பொருந்துஞ்
சுரனே சென்றனர் காதல ருரனழிந்
தீங்கியான் றாங்கிய வெவ்வம்
யாங்கறிந் தன்றிவ் வழுங்க லூரே.

(இ-ள்):—வெப்பமுள்ள முதுகினையுடைய ஓந்தி, முதிய (மரப்) பொந்திடத்து வழிச்செல்லும்மாக்கள் புள்ளைக் கொள்ளப் பொருந்துவதாகும் சுரத்திடத்துச் சென்றார் காதலர்; வலியழிந்து இவ்விடத்து யான் தாங்கிய துயரத்தை எவ்விதம் அறிந்தது இவ்விரக்கத்தையுடைய ஊர்?—(எ-று.)

ஓதி, போத்து—விகாரங்கள்; இனி, ஓதி—ஓந்திக்கு ஓர் பெயருமாம்; * "ஓமா னோதி யோந்தியோந் திப்பெயர்" என்பதனால். போத்து—பொந்து; † "போத்தறார் புல்லறிவினார்" என்புழிப்போல.

மெய்ப்பாடு—அழுகையைச்சார்ந்த பெருமிதம். பயன்—ஆற்றுமாறறிவித்தல்.

## குறிஞ்சி.

[இது, சிறைப்புறமாகத் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.]

எ-து,—இற்செறிக்கப்பட்டுழி இரவுக்குறிவந்தொழுகுந் தலைமகற்கு வரும் ஏதம்அஞ்சிப் பகற்குறிநேர்ந்த வாய்பாட்டால், அதுவும் மறுத்து, 'தோழி! நீ,' சாரல்நாட! ஆரிருள் நடுநாள் வாரல்; 'அன்னை கிளிதினைகடியச் செல்க' என்றாள் 'எனச் சொல்லின் எவன்?' என்று, வரைவுகடாவுக என்பதுபுலப்படத் தலைமகன் சிறைப்புறத்தானாகத் தலை உணர்ந்து தோழிக்குத் தலைமகள் கூறாநிற்றல்.

[மதுரைப்பெருங்கொல்லன் பாடியது.]

கசக. வளைவாய்ச் சிறுகிளி விளைதினை கடியச்
செல்கென் றோளே யன்னை யெனநீ
சொல்லி னெவனோ தோழி கொல்லை
நெடுங்கை வன்மான் கடும்பகை யுழந்த
குறுங்கை யிரும்புலிக் கோள்வ லேற்றைப்
பைங்கட் செந்நாய் படுபதம் பார்க்கு
மாரிரு ணடுநாள் வருதி
நீ வாரலோ வெனவே.

சாரனுட

க்து நெடிய கையையுடைய வலிய

(இ-ள்):—தோழி! கொல்லையுட ... டைய கையையுடைய பெரிய யானையின் கொடிய பகையினால் வருந்திய குறு... கண்ணையுடைய புலியின் (பிறவுயிரைக்) கொள்ளுதல்வல்ல ஆணை, பசிய செந்நாய் இறக்கும் செவ்வியைப் பார்த்திருக்கும், அரிய இருளையுடைய

* பிங்கலந்தை-மரப்பெயர்வகை—உகஅ.
† நாலடியார்—கயமை—க.

நடுஇரவில் வருகின்றாய்; சாரலையுடைய நாட! நீ வாராதி; 'வளைந்த வாயை யுடைய சிறிய கிளியை விளைந்த தினையினின்று விலக்கச் செல்க என்றாள் அன்னை' என்று நீ சொன்னால் என்னை?—(எ-று.)

'கடியா,' 'கொல்வல்' என்பனவும் பாடம்; காவலாக, கொல்லுதல் வல்ல என்க. செந்நாய், புலியைக் கொல்லும் வலிபெருமையும், யானை ஊன் தின்னுமியல்பின தன்மையுங் கருதத்தக்கன. எண, ஏ—அசைநிலைகள்.

மெய்ப்பாடு—அச்சத்தைச் சார்ந்த பெருமிதம். பயன்—ஆற்றாமை யறிவித்தல்.

## குறிஞ்சி.

[இஃது, இயற்கைப்புணர்ச்சி புணர்ந்து நீங்குந் தலைமகன் சொல்லியது.]

எ-து,—பொழிலிடத்து எதிர்ப்பட்டுப் புணர்ந்து நீங்குந் தலைமகன், 'பேதைதான், அறிந்தனளோ? இலளோ? யான் உயிர்த்தனென்; உள்ளம் பின்னும் தன்னுழையது' என்று வேட்கைமிகுதியாற் கூறுநிற்றல்.

[கபிலர் பாடியது.]

கசஉ. சுனைப்பூக் குற்றுத் தொடலை தைஇப்
புனக்கிளி கடியும் பூங்கட் பேதை
தானறிந் தனளோ விலளோ பானாட்
பள்ளி யானையி னுயிர்த்தென
னுள்ளம் பின்னுந் தன்னுழை யதுவே.

(இ-ள்):—சுனையிடத்துப் பூவைக்கொய்து மாலையைத் தொடுத்துப் புனத்திடத்துக் கிளியைக் கடியும் அழகிய கண்ணையுடைய பேதைதான் அறிந்தனளோ? இலளோ? பாதியிரவில் துயிலும் யானையினைப்போல (வெய்ய) பெருமூச்செறிந்தேன்; உள்ளம் மீண்டும் (உணர்ந்துகொள்ளாமலே) அவளிடத்ததாயிற்று.—(எ-று.)

பள்ளியிடத்து யானை வெய்ய உயிர்ப்பினதாதலை, * "பள்ளி யானையின் வெய்ய வுயிரினை" என்புழியுங் காண்க. 'உயிர்த்தவென்' என்ற பாடத்திற்கு—பெருமூச்செறிந்த எனது என்க.

மெய்ப்பாடு—உவகையைச்சார்ந்த இளிவரல். பயன்—நயப்புரைத்தல்.

## குறிஞ்சி.

[இது, பிரிந்தவிடத்துத் தலைமகட்குத் தோழி கூறியது.]

எ-து,—வரைவிடைவைத்துத் தலைமகன் பிரிந்தவிடத்துத் தலைமகட்குத் தோழி, 'அழியல்; ஆயிழை! இழிபு பெரிதுடையன், பழியும் அஞ்சும்,

பயமலை நாடன்; (ஆதலால்,) நில்லாமையே நிலையிற்று; மேனிப்பாய பசப்பு, தாங்குதற்கு உரியதன்று' என்று, ஆற்றுவித்தல்கருதிக்கூறுநிற்றல்.

[மதுரைக்கணக்காயனார்மகனார் நக்கீரனார் பாடியது.]

கசங. அழிய லாயிழை யொழிப்புப் பெரி துடையன்
பழியு மஞ்சும் பயமலை நாட
னில்லா மையே நிலையிற் றாகலி
னல்லிசை வேட்ட நயனுடை நெஞ்சிற்
கடப்பாட் டாள னுடைப்பொருள் போலத்
தங்குதற் குரிய தன்றுநின்
னங்கலுழ் மேனிப் பாஅய பசப்பே.

(இ-ள்):—வருந்தாதி; சிறந்த இழைகளையணிந்தாய்! காதலை மிகுதியும் உடையான், பழியையும் அஞ்சுவான், பயன்தரும் மலைநாடன்; (அவன் பிரிந்து நீண்டு) நின்றுவிடாமைதான் நிலையானது; ஆதலின், நல்ல புகழை விரும்பிய நயனுள்ள நெஞ்சினையுடைய கடமையை ஆள்பவன் பெற்ற பொருள்போல, தங்குதற்கு உரியதாகாது, நின்து அழகு ததும்பும் மேனியிடத்துப் பரந்த பசப்பு.—(எ-று.)

ஈதற்புகழ் இருமையுந் தருதல்கருதி, 'நல்லிசை' எனப்பட்டது. 'பழமலை,' 'தங்குதற் குரிய தன்று' என்பனவும் பாடம்.

மெய்ப்பாடு—அழுகையைச்சார்ந்த பெருமிதம். பயன்—ஆற்றுவித்தல்.

## பாலை.

[இது, மகட்போக்கிய செவிலித்தாய் சொல்லியது.]

எ-து,—மகள் தலைமகனுடன்போயவழி, மகட்போக்கிய செவிலித்தாய், 'ஆயம் உரியதொன்று அயர, இவ்வழிப்படுதலும் ஒல்லாள்; அவ்வழிச் சென்றனள்' என்று, ஆற்றாமை மிக்குக் கூறுநிற்றல்.

[மதுரையாசிரியன் கோடங்கொற்றன் பாடியது.]

கசச. கழிய காவி குற்றுங் கடல
வெண்டலைப் புணரி யாடியு நன்றே
பிரிவி லாய முரியதொன் றயர
விவ்வழிப் படுதலு மொல்லா ளவ்வழி
பரல்பாழ் படுப்பச் சென்றனண் மாதோ
சேண்மழை தவழுஞ் சென்னி
விண்ணுயர் பிறங்கல் விலங்குமலை நாடே.

(இ-ள்):—கழியிடத்தனவான கருங்குவளையைப் பறித்தும் கடலிடத்தனவான வெள்ளிய தலையையுடைய அலையிடத்து விளையாடியும் பெரிதும் பிரிதல் இல்லாத மகளிர்திரள், உரியதொன்றை [மகளைக் காத்தலை] மறக்க, இவ்வழியில் [களவிற் காதலனுடன் கூடலில்] தங்கு தலையும் ஒருப்பட்டிலள்; அவ்வழியில், பால்கள் (அழுகை) அழித்திடச் சென்றனள், என்றன் மகள், மேலிடத்து மழைகள் தவழும் தலை விண்வரை உயர்ந்த விளங்கும் விலங்குகளையுடைய மலைநாட்டைக் குறித்து.—(எ-று.)

'கழியில்,' 'கழியா' என்பனவும் பாடம்; கழியிடத்து, (மணம்) நீங்கா என்க. 'அவ்வழி' என்று சுட்டியது, கூறுதற்கும் ஒண்ணுக் கொடுமைகருதி.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—ஆற்றுமை நீங்குதல்.

## நெய்தல்.

[இது, வரைவிடை ஆற்றுது தோழிக்குத் தலைமகள் சொல்லியது.]

எ-து,—தலைமகன் வரைவிடைப் பிரிவைப் பொறுது தோழிக்குத் தலைமகள், 'சேர்ப்பன்கொடுமையை ஏற்றிப் பாணும் துஞ்சாதுறைநரோடு, உசாவா மாக்களோடு, நெட்டிராவையும் குடியிடை உடையேன்' என்று, செற்றத்தால் தோழியை வேறுபடுத்திக் கூறுநிற்றல்.

[கொல்லனழிசி பாடியது.]

கசரு. உறைபதி யன்றித் துறைகெழு சிறுகுடிக்
கானலஞ் சேர்ப்பன் கொடுமை யேற்றி
யானுத் துயரமொடு வருந்திப் பாணுட்
டுஞ்சா துறைநரொ டுசாவாத்
துயிற்கண் மாக்கமொடு நெட்டிரா வுடைத்தே.

(இ-ள்):—உறையும் பெரிய பதியன்றித் துறையிடத்துப் பொருந்திய சிறிய குடியில், கானலையுடைய அழகிய சேர்ப்பன் கொடுமையை உயர்த்தி ஆற்றலமையாத துயரத்தோடு வருந்திப் பாதியிரவிலும் துயிலாது உறைவாரோடு (பரிந்து) வினவுதலில்லாத துயில்பொருந்திய கண்ணையுடைய மாக்களோடு நீண்ட இரவையும் உடையேன்; (எவ்வாறாற்றுவேன்?)—(எ-று.)

* "வருத்தம், உசாத்தன் கேளிரைக் காணக் கெடும்" ஆதலின், வினவுவாரையும் பெருமைதோன்ற, 'உசாவா.........மாக்கள்' என்றாள்; செற்றத்தால்தோழியைவேறுபடுத்தி பிரிந்தார்க்கு இரவு நீண்டதாய்த் தோன்றுமாதலால், 'நெட்டிரா' என்றாள்; அதில் உருபும் உம்மையும் தொக்கன. உடைத்து—தன்மையொருமை.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—ஆற்றுமையுணர்த்தல்.

## குறிஞ்சி.

[இது, 'வரைவு மறுப்பரோ' எனக் கவன்ற தலைமகட்குத் தோழி சொல்லியது.]

எ—து,—தலைமகன் தமர் வரைவொடுவந்து சொல்லாடாநிற்புழி,'தமர், வரைவுமறுத்திடுவரோ' என்று வருந்திய தலைமகட்குத் தோழி, 'நம்மூர்ப் பிரிந்தோர்ப்புணர்ப்போர் இருந்தனர்கொல்? 'நன்று நன்று' என்னும் மாக்களொடு இன்று பெரிது என்னும் அவை' என்று, தமர்வரைவு நேர்ந்தமை புலப்படக் கூறுநிற்றல்.

[வெள்ளிவீதியார் பாடியது.]

கசசு. அம்ம வாழி தோழி நம்மூர்ப்
பிரிந்தோர்ப் புணர்ப்போ ரிருந்தனர் கொல்லோ
தண்டுடைக் கையர் வெண்டலைச் சிதவலர்
நன்றுநன் றென்னு மாக்களோ
டின்றுபெரி தென்னு மாங்கண தவையே.

(இ—ள்):—கேட்பாயாக: தோழி! நம்மூரிடத்து, கோலையுடைய கையினரும்,(நரையால்) வெள்ளியதான தலைநடுக்கத்தினருமாகிய பிரிந்தோரைச் சேர்க்கும் பெரியார் இருந்தனர்கொல்? 'நல்லது நல்லது' என்னும் மாக்களோடு 'இன்று பெரியதோர்விழா' என்னும் அவ்விடத்து அவை.—(எ—று.)

'நன்று நன்று' என்றது, வரைவுடன்பட்ட குறிப்பு. பெரிது—ஆகுபெயர். அவை பெரிது என்னும் என, இடத்துநிகழ்பொருளின் தொழில் இடத்தின்மேல் ஏற்றப்பட்டது.

மெய்ப்பாடு—உவகையைச் சார்ந்த பெருமிதம். பயன்—வரைவுமலிவுணர்த்தல்.

## பாலை.

[இது, தலைமகன், பிரிந்தவிடத்துக் கனாக்கண்டு சொல்லியது.]

எ—து,—தலைமகன், தலைமகளைப் பிரிந்தவிடத்துக் கனாக்கண்டு, 'கனவே! மடந்தையைத் தந்தோய்போல, துயிலெடுப்புதி, துணைப்பிரிந்தாரே என்னார்?' என்று, கனவிற்கு உரையாநிற்றல்.

[கோப்பெருஞ்சோழன் பாடியது.]

கசஎ. வேனிற் பாதிரிக் கூன்மல ரன்ன
மயிரோ வொழுகிய வங்கலுழ் மாமை
நுண்பூண் மடந்தையைத் தந்தோய் போல
வின்றுயி லெடுப்புதி கனவே
யெள்ளா ரம்ம துணைப்பிரிந் தோரே.

(இ-ள்):—வேனிற்காலத்து (மலரும்) பாதிரியின் வளைந்த மலரைப்போல மயிர்க்கால்கடோறும் வழிந்த அழகு ததும்பும் மாமை நிறத்தையுடைய நுண்ணிய வேலைப்பாடமைந்த பூணையணிந்த மடந்தையைத் தந்தாய்போல, இனிய துயிலை யுணர்த்துகின்றாய்; கனவே! (உன்னை) இகழாரோ துணையினைப் பிரிந்தார்?.—(எ-று.)

மயிர்—ஆகுபெயர். மடந்தையைக் காணலானமையின், 'இன்றுயில்' என்றான்.

மெய்ப்பாடு—எள்ளல்பற்றிய நகை. பயன்—ஆற்றாமை நீங்கல்.

## முல்லை.

[இது, பருவங்கண்டழிந்த தலைமகளைத் தோழி பருவமன்று என்று வற்புறுத்தத் தலைமகள் சொல்லியது.]

எ—து,—தலைமகன் வருவதாய்க்குறித்த பருவத்தைக் கண்டு வருந்திய தலைமகளை ஆற்றுவிக்கக் கருதித் தோழி பருவமன்று என்று வற்புறுத்தியவழித் தலைமகள், 'கொன்றை குருந்தோடு அலமரும் காலையும் காரெனத் தேறாயாயின், இது கனவோ? யான் வினவுவல்' என்று காலமேகாண் எனக் கவன்று கூறாநிற்றல்.

[இளங்கீரந்தையார் பாடியது.]

௧௪௮. செல்வச் சிறாஅர் சீறடிப் பொலிந்த
தவளை வாஅய பொலன்செய் கிண்கிணிக்
காசி னன்ன போதீன் கொன்றை
குருந்தோ டலமரும் பெருந்தண் காலையுங்
காரெனத் தேறா யாயின்
கனவோ மற்றிது வினவுவல் யானே.

(இ-ள்)—செல்வத்தையுடைய சிறுவர்களது சிறிய அடியிடத்து விளங்கிய தவளையின் வாயைப்போல அங்காந்த வாயையுடைய பொன்னாலாகிய சிறுசதங்கையின் காசைப்போல அரும்பும் கொன்றைகள், குருந்தத்தோடு சுழலும் பெரிய குளிர்ந்த காலத்தையும் கார்காலம் என்று தேறாயாயின், கனவோ (காணப்படும்) இந்நிகழ்ச்சி?; வினவுவேன் யான்.—(எ-று.)

மெய்ப்பாடு—அழுகை. பயன்—ஆற்றாமை நீங்கல்.

## பாலை.

[இது, உடன்போக்குணர்த்திய தோழிக்குத் தலைமகள் சொல்லியது.]

எ-து,—தலைமகன் உடன்கொண்டுபோக ஒருப்பட்டமையை உணர்த்திய தோழிக்குத் தலைமகள், 'நாண் அளிதோதான்; காமம் நெரிதர நில்லாததாயிற்று' என்று உடன்போக ஒருப்பட்டமையுணர உரையாநிற்றல்.

[வெள்ளிவீதியார் பாடியது.]

௧௪௯. அளிதோ தானே நாணே நம்மொடு
நனிநீ டுழந்தன் று மன்னே யினியே
வான்பூங் கரும்பி னோங்குமணற் சிறுசிறைத்
தீம்புன னெரிதர வீந்துக் கா அங்குத்
தாங்கு மளவைத் தாங்கிக்
காம நெரிதரக் கைநில் லாதே.

(இ—ள்):—அளிக்கத்தக்கதோதான் நாணம்; (அது) நம்மோடு நீண்டகாலம் மிகவருந்தியது; அது கழிந்தது இப்பொழுது; சிறந்த அழகிய கரும்பின் உயர்ந்த மணலாலாகிய சிறுபாத்தியிடத்து இனிய நீர்மிக்குவருதலால் (அப்பாத்தி) அழிந்து விழுவதுபோலப், பொறுக்கும்வரையிற் பொறுத்துக் காமம் மிகுந்திடுதலால் (அந்நாணம்) நில்லாததாயிற்று.—(எ-று.)

எனவே, † "உயிரினுஞ் சிறந்தன்று நாணே நாணினும், செயிர்தீர் காட்சிக் கற்புச்சிறந் தன்றெனத், தொல்லோர் கிளவி புல்லிய" நெஞ்சினளாய், நாண்விடத் துணிந்தமைகூறி உடன்போக்குநேர்ந்தமையை உணர்த்தினாளாம்.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—உடன்போக்குவலித்தல்.

---

† தொல்-பொருள்-களவியல்—௨௨.

## குறிஞ்சி.

[இது, இரவுக்குறிநேர்ந்த தோழிக்குத் தலைமகள் கூறியது.]

[மாடலூர்கிழார் பாடியது.]

ருப. * சேணோன் மாட்டிய நறும்புகை ஞெகிழி
வாஅன் மீனின் வயின்வயி னிமைக்கு
மோங்குமலை நாடன் சாந்துபுல ரகல
முள்ளி னுண்ணோய் பல்கும்
புல்லின் மாய்வ தெவன்கொ லன்னாய்.

(இ-ள்):—கொள்ளிகள், வான்மீனைப்போல இடந்தொறும் ஒளி விடும் மலைநாடனது மார்பைக் கருதின், உள்ளத்து நோய் மிகுவதாகும்; (ஆதலின், நினைவை நிலைக்கச்செய்யும்) கூட்டத்தால் கெடுவது என்னை? தோழி! —(எ-று.)

எனவே, இரவுக்குறிமறுத்து வரைவுகடாவுக என்றாளாம். சேணோன் — குறவன்; இழிகுலத்தோனுமாம்.

இனி, இச்செய்யுண்முதல் நூன்முடிவுவரை, விரிவினை அஞ்சிக் கருத்துறைவிளக்கத்தை அறவொழித்தும், பொழிப்பைச் சுருக்கியும், இன்றியமையாதவற்றை விளக்கியும் உரைநடைபெறுவதாகும்.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—இரவுக்குறிமறுத்தல்.

## பாலை.

[இது, பொருள்வலிக்கப்பட்ட நெஞ்சிற்குத் தலைமகன் சொல்லியது.]

[தூங்கலோரி பாடியது.]

கருக. வங்கா கடந்த செங்காற் பேடை
யெழாலுற வீழ்ந்தெனக் கணவற் காணாது
குழலிசைக் குரல குறும்பல வகவுங்
குன்றுறு சிறுநெறி யரிய வென்னாது
மறப்பருங் காதலி யொழிய
விறப்ப லென்பதீண் டின்மைக்கு முடிவே.

---

* சேணோன்—'இராக்காலத்து மரத்துச்சியிலிருப்பவன்' என ஒருபிரதியில் உரையுளது.

(இ-ள்):—பேடை கணவனைக் [ஆண்பறவையைக்] காணாமல் அழைத்தலைச்செய்யும் வழி அரியஎன்று கருதாது, (நெஞ்சே! நீ) மறத்தற்கரிய காதலியையின்றிக் கடப்பேனென்று கருதல், இப்பொழுது கெடுதற்குக் கொண்ட முடிவினதாகும்.—(எ-று.)

வங்கர் கடந்த-வேடரினின்று தப்பிய. பேடை—புறப்பேடை போலும். எழால்—புல்லூறென்னும் பறவை. மறப்பு அரு காதலி—(நம்மை) மறத்தல் அரிய காதலி என்றுமாம்.

மெய்ப்பாடு—இளிவரல். பயன்—செலவழுங்குவித்தல்.

## குறிஞ்சி.

[இது, வரைவு நீட்டித்தவழி ஆற்றாளாகிய தலைமகள் ஆற்றுகின்றிலையென்று நெருங்கிய தோழிக்குச் சொல்லியது.]

[கிளிமங்கலங்கிழார் பாடியது.]

கருஉ. யாவது மறிகிலர் கழறு வோரே
தாயின் முட்டை போலவுட் கிடந்து
சாயி னல்லது பிறிதெவ னுடைத்தோ
யாமைப் பார்ப்பி னன்ன
காமங் காதலர் கையற விடினே.

(இ-ள்):—சிறிதும் உணர்ந்திலர் இடித்துக் கூறுமவர்; தாயற்ற முட்டையைப்போல உள்ளே கிடந்து இளைத்தலன்றி வேறெதனையுடையது; யாமைப்பார்ப்பினைப்போன்ற காமம், காதலர் முறைமை கெடக் கைவிட்டுவிடின்.—(எ-று.)

காமம்...விடின், தாயில்...எவனுடைத்து; யாவதும்...கழறுவோர் அறிகிலர்என்று முடிவுகொள்க. கண்ணாற் கண்டு வளர்தலொப்புமையால் யாமைப்பார்ப்பு காமத்திற்கு உவமை; அஃதத்தகையதாதலை, * "தீம்பெரும் பொய்கை யாமையிளம் பார்ப்புத், தாய்முக நோக்கி வளர்ந்திசி னாஅங்கு" என்புழியுங் காண்க.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—ஆற்றாமை நீங்கல்.

## குறிஞ்சி.

[இது, வரையாது நெடுங்காலம்வந்து ஒழுகுகின்றுழி நாம் அவரை வேறுபடுத்தற்குக் காரணம் என்னை? என்றதோழிக்கு, அவர் வரவு நமக்கு ஆற்றாமைக்குக் காரணமாமெனத் தலைமகள் கூறியது.]

---

* ஐங்குறுநூறு—மருதம்—புலவிப்பத்து-ச.

[கபிலர் பாடியது.]

க௫௩. குன்றக் கூகை குழறினு முன்றிற்
பலவி னிருஞ்சினைக் கலைபாய்ந் துகளினு
மஞ்சும னழித்தெ னெஞ்ச மினியே
யாரிருட் கங்கு லவர்வயிற்
சார னீளிடைச் செலவா னாதே.

(இ-ள்):—கூகை குழறினும் சினையிடத்து முசுக்கலை பாய்ந்து குதிப்பினும் அஞ்சுவதாகும், மிகவும் (அறிவைக்) கெடுத்து என்னெஞ்சம்; (ஆதலின்,) இனி, இரவில் அவரிடத்துண்டாகும் நீண்ட வழிச் செலவு (விருப்பம்) அமையாததாகும்.—(எ-று.)

கூகை—'கோட்டான்' என்னும் பறவை. 'அவர்வரின்' என்றும் பாடம்.

மெய்ப்பாடு—அச்சத்தைச் சார்ந்த பெருமிதம். பயன்—இரவுக் குறிமறுத்தல்.

பாலை.

[இது, பொருள்வயிற் பிரிந்த தலைமகனை நினைந்து தலைமகள் தோழிக்கு உரைத்தது.]

[மதுரைச்சீத்தலைச்சாத்தன் பாடியது.]

க௫௪. யாங்கறிந் தனர்கொ றோழி பாம்பி
னுரிநிமிர்ந் தன்ன வுருப்பவி ரமையத்
திரைவேட் டெழுந்த சேவ லுள்ளிப்
பொறிமயி ரெருத்திற் குறுநடைப் பேடை
பொரிகாற் கள்ளி விரிகாய்ங் கவட்டுத்
தயங்க விருந்து புலம்பக் கூஉ
மருஞ்சுர வைப்பிற் கானம்
பிரிந்துசே ணுறைதல் வல்லு வோரே.

(இ-ள்):—பாம்பின் சட்டை நிமிர்ந்தாற்போன்ற வெப்பம் விளங்கும் காலத்தில், சேவலைக் கருதிப் பேடை, கள்ளியின் கவட்டிடத்துத் தங்கி, (கேட்டார்) வருந்தக் கூவும் கானத்திடத்துப் பிரிந்து சேய்மைக்கண் தங்குதல்வல்லார், [தலைவர்] (நம்துயரை) எங்ஙனம் அறிந்தார்?—(எ-று.)

'பொருளைக் கருதிப் பிரிந்த தன்னை நினைத்துக் கவல்வேன்' என்பதை உணர்ந்திலர் என்பது புலப்பட, 'அமையத்து......வல்லுவோர்' என்றாள். 'காயங்கவட்டு,' 'சேவலுள்ளி' என்பன பாடபேதங்கள். பேடை-கானங்கோழிப்பேடைபோலும்.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—ஆற்றாமை நீங்கல்.

## முல்லை.

[இது, தலைமகள் பருவங்கண்டு அழிந்து சொல்லியது.]

[ஒரோடகத்துக் கந்தரத்தனார் பாடியது.]

கருரு. முதைப்புனங் கொன்ற வார்கலி யுழவர்
விதைக்குறு வட்டி போதொடு பொதுளப்
பொழுதோ தான்வந் தன்றே மெழுகான்
றாதுலைப் பெய்த பகுவாய்த் தெண்மணி
மரம்பயி லிறும்பி னார்ப்பச் சுரனிழிபு
மாலை நனிவிருந் தயர்மார்
தேர்வரு மென்னுமுன் னுரைவா ராதே.

(இ-ள்):—உழவர்களின் கடகப்பெட்டி பேரரும்போது நிறைய (அவர் வருவதாய்க் குறித்த) பொழுதோ வந்திட்டது; மெழுகிற் பொருந்திக் கருமானது ஊதும் உலையிடையிட்டுச் செய்த மணியொலி, குறுங்காட்டிடத்து ஒலிக்கச் சுரத்தைக் கடந்து மாலைக்காலத்தில் விருந்தைத் துய்த்தற்குத் 'தேர் வந்திடும்' என்னும் முன்னுரையாக வாராததாயிற்று.—(எ-று.)

முதைப்புனம்—பழங்கொல்லை. வட்டி—கடகப்பெட்டி.

மெய்ப்பாடும், பயனும்—முன்னையவே.

## குறிஞ்சி.

[இது, கழறிய பாங்கற்குக் கிழவன் அழிந்து கூறியது.]

[பாண்டியன் ஏனாதிநெடுங்கண்ணன் பாடியது.]

கருசு. பார்ப்பன மகனே பார்ப்பன மகனே
செம்பூ முருக்கி னன்னார் களைந்து
தண்டொடு பிடித்த தாழ்கமண் டலத்துப்

படிவ வுண்டிப் பார்ப்பன மகனே
யெழுதாக் கற்பி னின்செய லுள்ளும்
பிரிந்தோர்ப் புணர்க்கும் பண்பின்
மருந்து முண்டோ மயலோ விதுவே.

(இ-ள்):—பார்ப்பனச் சிறுவனே! பார்ப்பனச்சிறுவனே! முருக்கின் தண்டத்தோடு பிடித்த கமண்டலத்தையும், நோன்போடு கூடிய உணவையுமுடைய பார்ப்பனச்சிறுவனே! கற்பினையுடையாளின் இனிய செயலைக் கருதும் பிரிந்தாரைச் சேர்க்கும் தகுதியையுடைய மருந்தும் (நின்பால்) உளதோ? (கூடலாம் என்று நின்னைக் குறையுற்ற) இச் செய்கை பேதைமையோ?.—(எ-று.)

எழுதாக்கற்பு—மகளிர்கற்பிற்கு வெளிப்படை.

மெய்ப்பாடு—இளிவரல். பயன்—ஆற்றாமையறிவித்தல்.

## மருதம்.

[இது, பூப்பெய்திய தலைமகள் உரைத்தது.]

[அள்ளூர்நன்முலலன் பாடியது.]

கரு௭. குக்கூ வென்றது கோழி யதனெதிர்
துட்கென் றற்றென் றூஉ நெஞ்சந்
தோடோய் காதலர்ப் பிரிக்கும்
வாள்போல் வைகறை வந்தன்றா லெனவே.

(இ-ள்):—'குக்கூ' என்று கூவியது கோழி; அதனெதிரே நடுக்கங்கொண்டது எனது தூய நெஞ்சம்; தோளைப்பொருந்தும் காதலரைப் பிரிக்கும் வாளைப்போன்ற வைகறை வந்திட்டது என்று.—(எ-று.)

'தூய நெஞ்சம்' என்றும் பாடம். முந்நாளைப்பிரிவாகிய பூப்பு, வைகறைக் காலத்து வந்தமை தோன்ற, 'தோடோய்......வைகறை' என்றாள்.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—ஆற்றாமை நீங்கல்.

## குறிஞ்சி.

[இது, தலைமகன் இரவுக்குறிவந்தழி அவன் கேட்பத் தோழிக்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது.]

[ஔவையார் பாடியது]

கருஅ. நெடுவரை மருங்கிற் பாம்புபட விடிக்குங்
கடுவிசை யுருமின் கழறுகுர லளைஇக்
காலொடு வந்த கமஞ்சூன் மாமழை
யாரளி யிலையோ நீயே பேரிசை
யிமையமுந் துளக்கும் பண்பினை
துணையில ரளியர் பெண்டிரிஃ தெவனே.

(இ-ள்):—இடியின் ஒலிக்கும் ஒலியோடு கலந்து காற்றோடு வந்த நிறைந்த சூலையுடைய கரிய மழையே! அரிய இரக்கம் அற்றனையோ? நீதான், இமையத்தையும் அசைத்திடும் இயல்பினையுடையாய்; துணை யற்ற மகளிர், இரங்கத்தக்கவராவர்; (அவர்கள் இறந்து மாறுகொள் ளும்) இச் செய்கை என்னபயன்றரும் (உனக்கு)?—(எ-று.)

'துணையிலர் பெண்டிர் அளியர்' என மாற்றியுரைக்கப்பட்டது.

மெய்ப்பாடு—இளிவரல். பயன்—ஆற்றாமையறிவித்தல்.

## குறிஞ்சி.

[இது, தலைமகன் சிறைப்புறமாகத் தோழி செறிப்பறிவுறுத் தது.]

[வடமவண்ணக்கன் பேரிசாத்தன் பாடியது.]

கருகூ. தழையணி யாடை தாங்கல் செல்லா
நுழைசிறு நுசுப்பிற் கெவ்வ மாக
வம்மெல் லாக நிறைய வீங்கிக்
கொம்மை வரிமுலை செப்புட னெதிரின
யாங்கா குவள்கொல் பூங்குழை யென்னு
மவல நெஞ்சமொடு செய்வாக்
கவலை மாக் கட்டிப் பேதை யூரே.

(இ-ள்):—ஆடையையும் தாங்கலாகாத இடையினுக்குத் துயர மாகும்படி மார்பிடம் நிறையப் பருத்துத் திரண்ட முலை செப்புக்க ளோடு மாறுபட்டன; (இனி,) எவ்விடத்தினளாவளோ அழகிய குழையையுடையாள்? என்று கருதும் வருத்தத்தைக் கொண்ட மனத்தோடு வினவிக்கொள்ளும் கவலையுள்ள மாக்களையுடையது; இப் பேதைமைபொருந்திய ஊர்தான்.—(எ-று.)

நுழை சிறு-ஒருபொருட்பன்மொழி. 'கொம்மை வருமுலை' என்றும் பாடம். களவிடைக் கலந்தாற்கு உரியவளாதலை உணராமையின், 'அவல......ஊரே' என்றாள். இனி, இச்செய்யுள் 'உயிர்செல வேற்று வரைவு வரினும் அதுமாற்றுதற்கு நிகழ்ந்ததூஉமாம்' என்பதற்கும் ஏற்குமாற்றை உய்த்துணர்க.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—செறிப்பறிவுறுத்தல்.

## குறிஞ்சி.

[இது, வரைவுநீட்டிப்ப ஆற்றாளாகிய தலைமகளை நோக்கித் தோழி வரைவரென ஆற்றுவிப்புழித் தலைமகள் கூறியது.]

[மதுரைமருதனிளநாகன் பாடியது.]

கசுo. நெருப்பி னன்ன செந்தலை யன்றி
இறவி னன்ன கொடுவாய்ப் பெடையொடு
தடவி னோங்குசினைக் கட்சியிற் பிரிந்தோர்
கையற நரலு நள்ளென் யாமத்துப்
பெருந்தண் வாடையும் வாரா
ரிஃதோ தோழிநங் காதலர் வரவே.

(இ-ள்.):—அன்றில் பேடையோடு கூட்டிலிருந்து பிரிந்தார் செயலறும்படி ஒலிக்கும் வாடை வீசும் இரவினிடையாமத்திலும் வாராராயினர் ; இஃதோ, தோழி ! நமது காதலர்வருகை?.—(எ-று.)

தலை - உச்சிக்கொண்டை. கொடு-வளைந்த. தடவின் - வழியில். வாடையாமத்தும் - உம்மை பிரித்துக் கூட்டப்பட்டது. 'அன்றில்... நரலும்' என்றது, துணைவர்ப்பிரிந்தார் துயருறல் கூறலாவதோ என்பதாம்.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—ஆற்றாமை நீங்கல்.

## குறிஞ்சி.

[இது, இரவுக்குறிக்கண் வந்த தலைமகனைக் காப்புமிகுதியான் எதிர்ப்படப்பெறாத தலைமகள், பிற்றைஞான்று தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழிக்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது.]

[நக்கீரர் பாடியது.]

௧௬௧. பொழுது மெல்லின்று பெயலு மோவாது
கழுதுகண் பனிப்ப வீசு மதன்றலைப்
புலிப்பற் றாலிப் புதல்வர்ப் புல்லி
யன்னா வென்னு மன்னையு மன்னோ
வென்மலைந் தனன்கொ றானே தன்மலை
யார நாறு மார்பினன்
மாரி யானையின் வந்துநின் றனனே.

(இ-ள்.):—பொழுதும் விளக்கம் அற்றது; மழையும் ஒழியாமல், பேயும் கண்சுளிக்கும்படி வீசும்; அதன்மேலும், புதல்வர்களைப் புல்லிக்கொண்டு (என்னை நோக்கி) ‘அன்னாய்!’ என்றழைப்பள் அன்னையும்; அந்தோ! என்ன மலைவடைந்தானோ? மாரியில் யானைபோல வந்துநின்ற தலைமகன்.—(எ-று.)

கழுதும்-உயர்வுசிறப்பும்மை தொக்கது. தான் உறங்காமையைத் தாய் உணர்ந்தமை தோன்ற, ‘அன்னா வென்னு மன்னையும்’ என்றாள்.

மெய்ப்பாடு—அச்சத்தைச் சார்ந்த பெருமிதம். பயன்—இடையூறுணர்த்தல்.

## முல்லை.

[இது, வினைமுற்றி மீளுந் தலைமகன் முல்லைக்குரைப்பானாய் உரைத்தது.]

[கருவூர்ப்பவுத்திரன் பாடியது.]

௧௬௨. கார்புறந் தந்த நீருடை வியன்புலத்துப்
பலர்புகு தரூஉம் புல்லென் மாலை
முல்லை வாழியோ முல்லை நீநின்
சிறுவெண் முகையின் முறுவல் கொண்டனை
நகுவை போலக் காட்ட
றகுமோ மற்றிது தமியோர் மாட்டே.

(இ-ள்.):—புலத்திடத்து, பலரும் (தொழின்முடித்து மனையிற்) புகும் புற்கென்ற மாலையில் முல்லையே! வாழ்வாயாக; முல்லையே! நீ உன் அரும்புகளாகிற பற்களைக்கொண்டு நகுகின்றாய்போற் காட்டுதல் தக்கதோ? (அங்ஙனம் நகுகின்றாய்போற் காட்டும்) இச்செய்கை

யும் தனித்தார்திறத்து உளதாயிற்று; (ஆதலின், தக்கதன்று.)—(எ-று.)

புலத்து முல்லை என இயையும். முல்லையிரண்டும்—அண்மைவிளி.

மெய்ப்பாடு—இளிவரல். பயன்—ஆற்றாமை நீங்கல்; பாகன் கேட்டு விரைந்து தேர்விடுவானாதலுமாம்.

## நெய்தல்.

[இது, தன்னுட் கையாறெய்திடு கிளவி.]

[அம்மூவனார் பாடியது.]

க௬௩. யாரணங் குற்றனை கடலே பூழி
சிறுதலை வெள்ளைத் தோடு பரந்தன்ன
மீனார் குருகின் கானலம் பெருந்துறை
வெள்வீத் தாழைத் திரையலை
நள்ளென் கங்குலுங் கேட்குநின் குரலே.

(இ-ள்.):—எவர்தம் அணங்கன்னாளைப் பொருந்தினை கடலே!, (நீயும்) முறையாகச் சிறிய தலையையுடைய வெண்மைத்தொகுதி பரந்தாற்போன்ற மீனை உண்ணும் குருகுகளையுடைய கானல் பொருந்திய துறையிடத்து வெள்ளிய மலரையுடைய தாழையிடத்துச் சுருள்வாய்; (மேலும்) இரவிலும் கேட்டிடும் நின்குரல்தான்.—(எ-று.)

அணங்கன்னாளைக் கூடி அவளைப் பெறச் சென்றுசென்று மீண்டு நள்ளிரவிலும் துயிலாது கதறும் தன்னுட்கையாற்றைத் தலைமகன் கடலொடு சார்த்திக் கூறினான். 'கேட்டும்' என்றும் பாடம்.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—ஆற்றாமை நீங்கல்.

## மருதம்.

[இது, காதற்பரத்தை தலைமகட்குப் பாங்காயினார் கேட்ப உரைத்தது.]

[மாங்குடிமருதன் பாடியது.]

க௬௪. கணைக்கோட்டு வாளைக் கமஞ்சூன் மடநாகு
துணர்த்தேன் கொக்கின் தீம்பழங் கதூஉந்
தொன்றுமுதிர் வேளிர் குன்றூர்க் குறைது
தண்பெரும் பௌவ மணங்குக தோழி
மனையோண் மடமையிற் புலக்கு
மனையே மகிழ்நற்கியா மாயின மெனினே.

(இ-ள்.):—வாளையின் சூலையுடையஇளம்பெண், (நீராருகுதாழ்ந்த) மாமரத்தின் பழக்குலையிடத்துத் தேன்போன்ற இனிய பழத்தைக் கௌவும் பழமைமுதிர்ந்த வேளிர்களின் குன்றூரின் கிழக்கிலுள்ள கடல் வருத்துவதாக; தோழி! மனையவள் அறியாமையால் மகிழ்நனோடு ஊடுவாள்; அத்தகையேமாய் [ஊடுவேமாய்] மகிழ்நற்கு யாமும் ஆயினமாயின்.—(எ-று.)

கொக்கின் துணர் தேன் தீம்பழம்என்று மாற்றி உரைக்கப்பட்டது. மடமையின்—தான் மகிழ்நனை வளைத்துக்கொள்ள அறியாமையால்; அன்றி, தன்பால் அன்புளனாய் வரவும் அன்பிலானென்னும் அறியாமையால். 'வாளை..........குன்றூர்' என்றது எளிதில் இனியவை நுகரப்படும்என அதன்தகுதிகூறியவாறும்.

மெய்ப்பாடு—மடம்பற்றிய நகை. பயன்—தலைவியைப் பழித்தல்

## குறிஞ்சி.

[இது, பின்னின்ற தலைமகன் மறுக்கப்பட்டுப் பெயர்ந்ததூஉங் கூடலுறும் நெஞ்சிற்குச் சொல்லியது.]

[பரணர் பாடியது.]

௧௬௫. மகிழ்ந்ததன் றலையு நறவுண் டாங்கு
விழைந்ததன் றலையு நீவெய் துற்றனை
யருங்கரை நின்ற வுப்போய் சகடம்
பெரும்பெயற் றலையவீந் தாஅங்கிவ
ளிரும்பல் கூந்த லியலணி கண்டே.

(இ-ள்.):—(நெஞ்சே! நறவை உண்டு) உணர்வழிந்ததன்மேலும் நறவை உண்டாற்போல, விழைவுகொண்டதன்மேலும் (பலபடியாலும் பெற) நீ விருப்புற்றனை; (ஏறுதற்கு) அரிய கரையிடத்து நின்ற உப்புப்பொதியால் ஓய்ந்த சகடம், பெரிய மழையிடைப்பட்டு அழிந்தாற்போல இவளது கரிய பலவாய கூந்தலின் சிறந்த அழகைக் கண்டு.—(எ-று.)

மகிழ்தல்—உணர்வழிந்த மயக்கம்; *"காண மகிழ்தலும்" என்புழிப்போல.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—அயர்வுயிர்த்தல்.

---

* திருக்குறள்—புணர்ச்சிவிதும்பல்—க.

## நெய்தல்.

[இது, காப்புமிகுதிக்கண் தோழி தலைமகட்கு உரைத்தது.]

[கூடலூர்கிழார் பாடியது.]

௧௬௬. தண்கடற் படுதிரை பெயர்த்தலின் வெண்பறை
நாரை நிரைபெயர்ந் தயிரை யாரு
மூரோ நன்றுமன் மாநகை
யொருதனி வைகிற் புலம்பா கின்றே.

(இ-ள்.):—குளிர்ந்த கடலில் உண்டாகும் அலைகள் தவறச்செய்தலின், வெள்ளிய பறவைகளாகிற நாரைத்திரள், மீண்டுங் குத்தி அயிரைமீனை அருந்தும் ஊர்தான், நல்லதாயிருந்தது; அது கழிந்தது; சிறந்த நகையினையுடையாய்! தன்னந்தனியாய்த் தங்கின் துயர் தருவதாகின்றது.—(எ-று.)

பெயர்ந்தும்—என்பதன் உம்மை தொக்கது 'தண்கடல்........ ஊர்' என்றது, நாமும் குறியிழைப்பின் மீண்டும் ஆங்குத் தலைப்பெய்து முன்னெல்லாம் கூடினேம்; காப்புமிகுதி இப்பொழுது கூடலைக் கூடாவாறு செய்திட்டது என்றவாறும்.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—ஆற்றாமையறிவித்தல்.

## முல்லை.

[இது, கடிநகர்ச்சென்ற செவிலித்தாய் நற்றாய்க்கு உரைத்தது.]

[கூடலூர்கிழார் பாடியது.]

௧௬௭. முளிதயிர் பிசைந்த காந்தண் மெல்விரல்
கழுவுறு கலிங்கங் கழாஅ துடீஇக்
குவளை யுண்கண் குய்ப்புகை கமழத்
தான்றுழந் தட்ட தீம்புளிப் பாக
ரினிதெனக் கணவ னுண்டலி
னுண்ணிதின் மகிழ்ந்தன் றொண்ணுதன் முகனே.

(இ-ள்.):—கட்டித்தயிரைப் பிசைந்த விரலைக் கழுவாது தோய்த்த ஆடையை உடுத்துக் கண்ணில் தாளிப்புப்புகை மணக்கத் துழாவிக் காய்ச்சிய புளிக்குழம்பை இன்சுவைத்து என்று கணவன் உண்ணுத

லான், நுட்பமாய் மகிழ்ந்தது ஒள்ளிய நுதலினையுடைய மகளின் முகம்.—(எ-று.)

விரல்கழாது கலிங்கம்உடீஇ என்று மாறுக. விரல்கழுவுங் கால அளவுள் பாகின் பதந் தவறுமாதல்கருதி விரல்கழுவாளாயினள். நுண்ணிதின்—குறித்துணர்வாரே உணரலாம்படி நுட்பமாய்.

மெய்ப்பாடு—உவகை. பயன்—மகிழ்வித்தல்.

## பாலை.

[இது, பொருள்வலிக்கு நெஞ்சிற்குக் கிழவன் உரைத்தது.]

[சிறைக்குடியாந்தையார் பாடியது.]

கசஅ. மாரிப் பித்திகத்து நீர்வார் கொழுமுகை
யிரும்பனம் பசுங்குடைப் பலவுடன் பொதிந்து
பெரும்பெயல் விடியல் விரித்துவிட் டன்ன
நறுந்தண் ணியளே நன்மா மேனி
புனற்புணை யன்ன சாயிறைப் பணைத்தோண்
மணத்தொறுந் தணத்தலு மிலமே
பிரியின் வாழ்த லதனினு மிலமே.

(இ-ள்.):—பிச்சியின் முகைகளைப் பனங்குடை பலவற்றுட் பொதிந்து பெரும்பெயலையுடைய விடியற்காலத்து விரித்துவிட்டாற் போன்ற நறிய குளிர்ந்த ஊற்றின்பத்தினளும், நல்ல சிறந்த மேனியளுமான கிழத்தியின், புனலிடத்துப் புணைபோல (உதவும்) தோள்களை மணக்குந்தோறும் பிரிதலுமில்லேம்; பிரிந்தால் உயிர்வாழ்தல் அப் பிரிவைக்காட்டிலும் இல்லேம்.—(எ-று.)

குடை—குடைபோலக் குவிவாகச் செய்யப்பட்டது.
மெய்ப்பாடு—இளிவரல். பயன்—செலவழுங்குவித்தல்.

## மருதம்.

[இது, கற்புக்காலத்துத் தெளிவிடை விலங்கியது.]

[வெள்ளிவீதியார் பாடியது.]

கசகூ. சுரஞ்செல் யானைக் கல்லுறு கோட்டிற்
றெற்றென விறீஇயரோ வைய மற்றியா

நும்மொடு நக்க வால்வெள் ளெயிறே
பாணர் பசுமீன் சொரிந்த மண்டைபோ
லெமக்கும் பெரும்புல வாகி
நும்மும் பெறேஎ மிறீஇய ரெம் முயிரே.

(இ-ள்.):—சுரத்துச் செல்லும் யானையின் கல்லிற்றாக்கிய கோட்டைப்போல, தெளிவாக இறுவனவாக; ஐய! யாம் உம்மோடு சிரித்த எயிறுகள்; பாணரது பசிய மீனைக் கொட்டிய இரக்குங் கலத்தைப்போல, எமக்கும் பெரிய புலத்தல் உண்டாக (வறியேமாய்) நும்மையும் பெறேமாயினேம்; (ஆதலால்,) அழிவதாக எமது உயிர்.—(எ-று.)

'பாணர், பசுமீன்......போல, வெமக்கும்' என்றும் பாடம். ஆகி-ஆகவெனத் திரிக்க. எமக்கும்—உம்மை - இசைநிறை. இனி, இச்செய்யுள், வரைவுநீட்டித்துழி வரைவுகடாயதற்கும் ஏற்குமாற்றை உய்த்துணர்க.

மெய்ப்பாடு—வெகுளி. பயன்—ஊடலொழிதல்.

## குறிஞ்சி.

[இது, வரைவிடை ஆற்றாளெனக் கவன்ற தோழிக்குத் தலைமகள் கூறியது.]

[கருவூர்கிழார் பாடியது.]

௧௭௦. பலருங் கூறுகவஃ தறியா தோரே
யருவி தந்த நாட்குர லெருவை
கயனா டியானை கவள மாந்து
மலைகெழு நாடன் கேண்மை
தலைபோ காமைநன் கறிந்தனன் யானே.

(இ-ள்.):—அறியாதார்பலரும் (தோன்றியவாறு) கூறுவாராக; அருவி தழைக்கும்படி தந்த இளந்தாளையுடைய பஞ்சாய்க்கோரையைக்குளத்தை நாடிய யானை கவளமாக உண்ணும் மலைமிக்க நாடனது நட்பு, (ஒருபடியே) முடிவுபோகாமையை நன்றாக அறிந்தேன் யான்தான்.—(எ-று.)

தோழியைச் செற்றத்தால், 'பலரும்......அறியாதோர்' என வேறுபடுத்திக் கூறினாள். 'நற்கறிந்தனன்' என்றும்பாடம்; வலித்தல் விகாரம்.

உள்ளுறை:—'அருவி.........மாந்து' மாறுபோல, பிறிதொன்றைக் கருதிச் செல்லுவான் நீ கொண்டுபோய்க் கொடுத்த என்நலத்தைத் திளைத்திட்டான் என்பதாம்.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—ஆற்றாமை நீங்கல்.

## மருதம்.

[இதுவுமது.]

[பூங்கண்ணுத் திரையார் பாடியது.]

கஎக. காணினி வாழி தோழி யாணர்க்
கடும்புன லடைகரை நெடுங்கயத் திட்ட
மீன்வலை மாப்பட் டாஅங்
கிதுமற் றெவனோ நொதுமலர் தலையே.

(இ-ள்.):—காண்பாயாக, இப்பொழுது; தோழி! குளத்திடத்துப் போகட்ட மீன்வலையிடத்து மா அகப்பட்டாற்போல, அயலார் திறத்து (உளதாகும்) இவ்வாரவாரம் என்னபயன்றருவதாகும்?—(எ-று.)

மா—நீருள் முழுகியிருந்த விலங்கு; அன்றி, நீர்வாழ்விலங்குகளில் ஒன்று மாகலாம். மீன்வலையில் மாப்பட்டவழி, அப் புதுமையைப் பலருங் காணவந்து ஆர்த்தல்போல, யான் வரைவிடைப்பட்ட வழி, பலரும் என்னைப் பார்த்துத் தூற்றுதல் என்னை? என்பதாம்.

## நெய்தல்.

[இதுவுமது.]

[கச்சிப்பேட்டுநன்னாகையார் பாடியது.]

கஎஉ. தாஅ வஞ்சிறை நொப்பறை வாவல்
பழுமரம் படரும் பையுண் மாலை
யெமிய மாக வீங்குத் துறந்தோர்
தமிய மாக வினியர் கொல்லோ
*வேளூர்ப் பொதுவினைக் கோரூர் யாத்த
வுலைவாங்கு மிதிதோல் போலத்
தலைவரம் பறியாது வருந்துமென் னெஞ்சே.

* 'வேளூர்.........அறியாது' இத்தொடர்ப்பொருள் விளங்கவில்லை.

(இ-ள்.):—வாவல் பழுத்தமரத்திடம் செல்லும் துயர்தரும் மாலையில், தமியேயமாகும்படி இவ்விடத்து விட்டுத் துறந்தார்; (அங்ஙனம் யாம்) தமித்தேமாக (த்தாம்) இனிமையையுடையாரோ? வருந்தும் என் நெஞ்சம்.—(எ-று.)

நொப்பறை—நோதலைக்கொண்ட பறவையாகிய. வாவல்—வௌவால்.

இவையிரண்டிற்கும் மெய்ப்பாடும்,பயனும் முன்னையவே.

## குறிஞ்சி.

[இது, குறைமறுக்கப்பட்ட தலைமகன் தோழிக்கு உரைத்தது.]

[மதுரைக்காஞ்சிப்புலவன் பாடியது.]

கஎரு. பொன்னே ராவிரைப் புதுமலர் மிடைந்த
பன்னூன் மாலைப் பனைபடு கலிமாப்
பூண்மணி கறங்க வேறி நாணட்டப்
பழிபட ருண்ணோய் வழிவழி சிறப்ப
வின்னாள் செய்த திதுவென முன்னின்
றவள்பழி நுவலு மிவ்வூ
ராங்குணர்ந் தமையினீ ரேகுமா றுளனே.

(இ-ள்):—ஆவிரையின் புதுமலர் நெருங்கிய பலநூல்களால் தொடுத்த மாலையையுடைய பனையினின்றும் உண்டாகிய கலிமா மேல், [மடன்மாமேல்,] மணிஒலிப்ப ஏறி நாணம் வருத்தவும் மனத்து நோய் முறைமுறையே மிகவும் இனியதொருநாள் செய்தது (இவன் மடலேறும்) இதனை என்று எதிரே நின்று அவள்பழியைக் கூறுவதாகும் இவ்வூர்; அவ்வகையை உணர்ந்தமையால், 'நீர் ஏகும்' (என்று நீ கூறவும்) உள்ளவனுகின்றேன்.—(எ-று.)

மடலேறுவார் வாய்வாளாமைகொள்ளவேண்டுதலின், பலரும் அறிய மணிகளைப் பூண்பர். இன் நாள்—தலைவியொடு கூடிய இனிய நாள். எனவும் என்பது எஞ்சியது.

மெய்ப்பாடு—இளிவரல். பயன்—ஆற்றுமையறிவித்தல்.

## பாலை.

[இது, பிரிவுணர்த்திய தோழிக்குத் தலைமகள் சொல்லியது.]

[வெண்பூதி பாடியது.]

௧௭௪. பெயன்மழை துறந்த புலம்பறு கடத்துக்
கவைமுட் கள்ளிக் காய்விடு கடுநொடி
துதைமென் றூவித் துணைப்புற விரிக்கு
மத்த மரிய வென்னார் நத்துறந்து
பொருள்வயிற் பிரிவா ராயினிவ் வுலகத்துப்
பொருளே மன்ற பொருளே
யருளே மன்ற யாருமில் லதுவே.

(இ-ள்.):—பெய்யும் மழையை இழந்தமையால், (செல்வாரது) ஒலியற்ற காட்டில், கள்ளியின் காய் வெடித்து எழுப்பும் ஓசை துணைப் புறவை ஓட்டும் அருஞ்சுரத்தை அரிய என்று கருதாராய் நம்மைத் துறந்து பொருளிடத்துப் பிரிந்து போவாராயின், இந்த வுலகத்துப் பொருள்தான் துணிவாக நன்குமதிக்கப்படும் பொருளாகும்; அருள் தான் துணிவாக (நன்குமதிப்பார்) எவரும் இல்லாததாகும்.—(எ-று.)

நத்துறந்து—விகாரம். பொருள்—நன்குமதிக்கப்படுவது என்னும் பொருள்தருதலை, *"பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்" என்புழியுங் காண்க.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—ஆற்றாமையறிவித்தல்.

## நெய்தல்.

[இது, பிரிவிடைக் கடுஞ்சொற்சொல்லி வற்புறுத்துவாட்குக் கிழத்தி உரைத்தது.]

[உலோச்சன் பாடியது.]

௧௭௫. பருவத் தேனசைஇப் பல்பறைத் தொழுதி
யுரவுத் திரைபொருத திணிமண லடைகரை
நனைந்த புன்னை மாச்சினை தொகூஉம்
மலர்ந்த பூவின் மாநீர்ச் சேர்ப்பற்
கிரங்கேன் றோழி யீங்கென லேன்று
பிறர்பிற ரறியக் கூற
லமைத்தாங் கமைக வம்பலஃ தெவனே.

* திருக்குறள்—பொருள்செயல்வகை-௧.

(இ-ள்.) தேனை விரும்பிப் பறவைத்திரள், கரையிடத்துப் புன்னையின் கிளையிடத்துக் கூடும் பூவினையும் நீரினையுமுடைய கடற்றுறைவன்றிறத்து, தோழி! இங்கு இரங்கிலேன் என்றாதி; (தாமாகவே) ஏற்றுக்கொண்டு பிறரெல்லாம் அறியும்படி கூறுதலை உண்டாக்கியவாறு அமைவதாக; சிலர் பழித்துக் கூறும் அஃது என்னை?—(எ-று.)

சேர்ப்பற்கு—உருபுமயக்கம். நம்பெருமான் இனிது மீளுலையே விழைவல் என்பாள், 'இரங்கேன்எனல்' என்றாள். 'பிறர்பிறர்' என்றது, தோழியை வேறுபடுத்தி. 'தேனசைஇ......சேர்ப்பன்' என்றதனானே இடத்தருமைகருதாது சென்று எண்ணம் முற்றியதும் மீள்வான் என்பதை உணர்ந்து ஆற்றுவேன் என்றாளாம்.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—ஆற்றாமை நீங்கல்.

## குறிஞ்சி.

[இது, தோழி கிழத்தியைக் குறைநயப்பக் கூறியது.]

[வருமுலையாரித்தி பாடியது.]

கஎ௬. ஒருநாள் வாரல னிருநாள் வாரலன்
பன்னாள் வந்து பணிமொழி பயிற்றியென்
னன்னர் நெஞ்ச நெகிழ்ந்த பின்றை
வரைமுதிர் தேனிற் போகி யோனே
யாசா கெந்தை யாண்டுளன் கொல்லோ
வேறுபுல னன்னாட்டுப் பெய்த
வேறுடை மழையிற் கலுழுமென் னெஞ்சே.

(இ-ள்.):—ஒருநாள் வந்திலன்; இருநாள் வந்திலன்; பலநாளும் வந்து (தலைமைக்கேலாத) பணிந்த மொழிகளைச் சொல்லி என்னெஞ்சம் நன்கு நெகிழ்ந்தபிறகு தேனீயைப்போலச் சென்றவனான எந்தை எவ்விடத்துள்ளானோ? விளைவேறும் புலத்திலையுடைய (தக்கார் உறையும்) நாட்டிற் பெய்த மழையைப்போல (மிகுந்து) வருந்தும் என்னெஞ்சம்.—(எ-று.)

யான் பலபட மறுத்தலின், அரியதொன்றைக் கொணர்வதற்குச் சென்றான் என்பது புலப்பட, 'ஒருநாள்......போகியோன்' என்றாள். கிழவன் குறையுற்று நிற்பவும் மறாமைப்பொருட்டு, 'ஆசா கெந்தை

யாண்டுளன் கொல்' என்று படைத்துக் கூறினாள். ஆசு - பற்றுக் கோடு.

மெய்ப்பாடு—இளிவரலைச் சார்ந்த பெருமிதம். பயன்—குறை நயப்பித்தல்.

## நெய்தல்.

[இது, கிழவன்வரவுணர்ந்து தோழி கிழத்திக்கு உரைத்தது.]

[உலோச்சனார் பாடியது]

கஎஎ. கடல்பா டவிந்து கானன் மயங்கித்
துறைநீ ரிருங்கழி புல்லென் றன்றே
மன்றலம் பெண்ணை மடல்சேர் வாழ்க்கை
யன்றிலும் பையென நரலு மின்றவர்
வருவர்கொல் வாழி தோழி நாங்கப்
புலப்பினும் பிரிவாங் கஞ்சித்
தணப்பருங் காமந் தண்டி யோரே.

(இ-ள்.):—கடல் பெருமைகெட்டுக், கானல் மயக்கமடைந்து, கழியும் அழகுகெட்டது ; பனைமடலில் வாழ்க்கையைக் கொண்ட அன்றிலும் மெல்லென ஒலித்திடும் ; (ஆதலின்,) நாம் நகும்படி (ஆற்றிடையூற்றினை அஞ்சி) வருந்தினும் பிரிதலை அஞ்சிப் பிரிதற்கரிய காமத்தைப் பொருந்தியவராகிய அவர் வருவர்கொல் ?—(எ-று.)

கடல் பாடு அவிந்து—கடல் உறங்கலின்றி என்றுமாம். 'அன்றிலும்......நரலும்' என்றது, குறியிடை வந்தார் என்னுங் குறிப்பு. வாழி, ஆங்கு - அசைநிலைகள்.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—வரவறிவித்தல்.

## மருதம்.

[இது, கடிநகர்ப்புக்க தோழி, தலைமகன் புணர்ச்சிவிதும்பல்கண்டு, முன்னர்க் *களவுக்காலத்து ஒழுகலாற்றை நினைந்து அழிந்து கூறியது.]

---

* 'களவுகாற்றொழுகலாற்றுமை';- 'முன்னர்க்க......காற்றொழுகல்' 'களவுகந்தொவுகன்றே' எனப் பலபடப் பிரதிகளிற் காணப்பட்டமையின், ஒருவாறு அநுமானித்துக் குறிக்கப்பட்டது.

[நெடும்பல்லியத்தை பாடியது.]

கஎஅ. ஆயிரை பரந்த வந்தண் பழனத்
தேங்கெழின் மலர தூம்புடைத் திரள்கா
லாம்பல் குற்றுநர் நீர்வேட் டாங்கிவ
ளிடைமுலைக் கிடந்து நடுங்க லானீர்
தொழுதுகாண் பிறையிற் றோன்றி யாநுமக்
கரியே மாகிய காலைப்
பெரிய நோன்றனிர் நோகோ யானே.

(இ-ள்.):—வயலில், ஆம்பன்மலரைப் பறிப்பார் நீரை விழைந்தாற்போல, இவள்முலையிடையே கிடந்தும் நடுக்கமடையலானீர்; (மணம்பெறாத மகளிர்) தொழுது காணும் பிறையினைப்போலத் தோன்றி யாம் உமக்கு அரியோமாக விருந்த காலத்து, [களவுக் காலத்து] மிகுந்த நோன்புடையீரானீர்; (அங்ஙனம் இவளை அரியளாக்கிய) யான் வருந்துவேனோ?—(எ-று.)
தூம்பு - உட்டுளை. பிறை - கார்த்திகைப் பிறையுமாம்.

மெய்ப்பாடு—வியப்பைச் சார்ந்த உவகை. பயன்—மகிழ்தல்.

## குறிஞ்சி.

[இது, பகல்வருவானை இரவுக்குறிநேர்ந்தாள்போன்று வரைவுகடாயது.]

[துட்டுவன்கண்ணன் பாடியது.]

கஎகூ. கல்லென் கானத்துக் கடமா வாட்டி
யெல்லு மெல்லின்று ஞமலியு மிளைத்தன
செல்ல லைஇய வுதுவெம் மூரே
யோங்குவரை யடுக்கத்துத் தீங்தேன் கிழித்த
குவையுடைப் பசுங்கழை தின்ற கயவாய்ப்
பேதை யானை சுவைத்த
கூழை மூங்கிற் குவட்டிடை யதுவே.

(இ-ள்.):—காட்டில் யானையை வருத்தி ஞாயிறும் விளக்கமற்றது; (அலைந்தும் குரைத்தும்) நாய்களும் இளைத்திட்டன; ஆதலால், செல்லாதி, ஐய! பக்கமலையிடத்துத் தேனிறாலைக் கிழித்த மூங்கில்களைத் தின்ற யானை சுவைத்திட்டதனால் கூழையான (அம்)

மூங்கில்களையுடைய சிறுமலையின் இடையதான உதுக்காண் எமது ஊர்.—(எ-று.)

'செல்லல்......குவட்டிடையது' என்று, விருந்ினனுகத் தங்குதி என்பது புலப்படக் கூறி, தலைமகள் பிரிவைப் பொருள் என்பதை யும், தமர் வரைவுடன்படுவாரென்பதையும், இரவுக்குறி ஏதமுடை யது என்பதையும் குறித்துணரக் கூறினாளாம். 'ஊரே......குவட் டிடையது' என்றது, வரையும் அறிவில்லா நீ திளைத்ததனால் வாட்ட மடைந்தாள் தலைமகள் ; ஆதலின், வரைந்துகொண்டு ஆற்றுவி என்ற வாறும்.

மெய்ப்பாடு—அச்சத்தைச் சார்ந்த பெருமிதம். பயன்—வரைவு கடாதல்.

## பாலை.

[இது, பிரிவிடை வேறுபட்டாளைத் தோழி வற்புறுத்தியது.]

[கச்சிப்பேட்டுநன்னாகையார் பாடியது.]

கஅ0. பழூஉப்பல் லன்ன பருவுகிர்ப் பாவடி
யிருங்களிற் றினநிரை யேந்தல் வரின்மாய்ந்
தலைமறபடி கரும்பின் கண்ணிடை யன்ன
வைக லொருகழை நீடிய சுரனிறந்
தெய்தினர் கொல்லோ பொருளே பெருந்தோ
ளவ்வரி வாடத் துறந்தோர்
வன்ப ராகத்தாஞ் சென்ற நாட்டே.

(இ-ள்.):—பேயின் பல்லைப்போன்ற பரிய உகிரினையுடைய பரந்த அடிகளைக்கொண்ட கரிய ஆண்யானைகளின் கூட்டத்துத் தலை வன் வர, அழிந்து பாறையிடத்து மடியும் கரும்பின் இடைக்கண் ணைப்போன்ற பொருளை, சுரத்தைக் கடந்து, தோளின் அழகிய தேமல் வாடத் துறந்தோர், அன்பில்லாராகத் தாம் சென்ற நாட்டில் அடைந்தார்கொல் ?—(எ-று.)

துறந்தோர் சுரனிறந்து நாட்டில் பொருள் எய்தினர்கொல் என்று முடிவுகொள்க. கண்ணிடை - முன்பின்னுகத் தொக்கது ; இடைக்கண் இனியதாகுமென்பதை, *"இடைக்கண் ணனையார்க் குரை" என்புழியுங்காண்க. மடிகரும்பின் கண்ணிடையன்ன பொருள்

* நாலடியார் - கற்புடைமகளிர்-க0.

என்றது, பொருளின் நிலையாமையை நோக்கி. வன்பு - அன்பின் மறுதலை.

மெய்ப்பாடு—அழுகையைச் சார்ந்த பெருமிதம். பயன்—ஆற்றுவித்தல்.

## மருதம்.

[இது, தலைமகன் பரத்தையிற் பிரிந்தவழிஆற்றாளாகிய தலைமகள் ஆற்றல்வேண்டித் தோழி இயற்பழித்தவழித் தலைமகள் இயற்படமொழிந்தது.]

[கிள்ளிமங்கலங்கிழார் பாடியது.]

௧௮௧. இதுமற் றெவனோ தோழி துனியிடை
யின்ன ரென்னு மின்னாக் கிளவி
யிருமருப் பெருமை யீன்றணிக் காரா
னுழவன் யாத்த குழவியி னகலாது
பாற்பெய் பைம்பயி ராரு மூரன்
றிருமனைப் பல்கடம் பூண்ட
பெருமுது பெண்டி ராகிய நமக்கே.

(இ-ள்.):—ஈன்றணிமையுடைய பெண்ணெருமை, உழவன் கட்டிய குழவியைவிட்டு நீங்காது பக்கத்தே போகட்ட பயிரை உண்ணும் ஊரன்றன் மனைக்கடம்பூண்ட நமக்கு, வெறுப்புண்டாகிய காலத்து இத்தகையர் என்று கருதும் (அதனால் உளதாம்) இன்னாத கிளவிகளைக் (கூறும்) இச்செய்கை என்னை?—(எ-று.)

ஆன் - னகரமெய் சாரியை; ஆ எருமையிடத்தும் வருதலை, *“பெற்றமு மெருமையு மரையு மாவே” என்றதனான் அறிக. ‘பாஅற் பைம்பயிர்’ என்றும் பாடம்.

உள்ளுறை:—‘காரான்......ஆரு’மாறுபோல, அணிமையில் மகப் பெற்ற நாமும், அம்மகவு தங்கிய மனையைவிட்டு அகலாது அவன் தந்தவற்றை விரும்பி நுகர்ந்து தங்கல்வேண்டுமென உள்ளுறைமுகத் தான் இயற்பட மொழிந்தாளாம்.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—இயற்படமொழிதல்.

## குறிஞ்சி.

[இது, தோழியாற் குறைமறுக்கப்பட்ட தலைமகன் தன்னெஞ்சிற்கு உரைத்தது.]

---

* தொல் - பொருள் - மரபு—௬0.

[மடல்பாடிய மாதங்கீரன் பாடியது.]

கஅ௨. விழுத்தலைப் பெண்ணை விளையன் மாமடன்
மணியணி பெருந்தார் மார்பிற் பூட்டி
வெள்ளென் பணிந்துபிற ரெள்ளத் தோன்றி
யொருநாண் மருங்கிற் பெருநாணீக்கித்
தெருவி னியலவுந் தருவது கொல்லோ
கலிங்கவி ரசைநடைப் பேதை
மெலிந்தில ளாம்விடற் கமைந்த தூதே.

(இ-ள்.):—(நெஞ்சே !) பனையின் மடலின்மேல், மணியாலாகிய மாலையை மார்பிற் கட்டி, என்னை அணிந்து, பிறர் இகழத் தோன்றி, ஒருநாளில் பெருநாணை விலக்கித் தெருவிடத்தில் நடக்கவும் தருவது கொல்? அசைந்த நடையையுடைய பேதை [தோழி], இரங்கிலள் நாம் விடற்குப் பொருந்திய தூதில்? (ஆதலால்)—(எ-று.)

'காம முழந்து கலங்கி வருந்தினோர்க் கேமம் மடல்' ஆதலின், 'மாமடல்' என்றான். கலிங்கவிர் - விகாரம். மடல்மாஎன மாற்றி யுரைத்தலுமாம். மடலைப் புனைந்து பாடியமைபற்றி இதனாசிரியர் "மடல்பாடிய மாதங்கீரன்" எனப் பாராட்டப்பெற்றார்போலும்.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—அயர்வுயிர்த்தல்.

## முல்லை.

[இது, பருவவரவின்கண் ஆற்றாளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.]

[ஔவையார் பாடியது.]

கஅ௩. சென்றநாட்ட கொன்றையம் பசுவீ
நம்போற் பசக்குங் காலைத் தம்போற்
சிறுதலைப் பிணையிற் றீர்ந்த நெறிகோட்
டிரலை மானையுங் காண்பர்கொ னமரே
புல்லென் காயாப் பூக்கெழு பெருஞ்சினை
மென்மயி லெருத்திற் றோன்றுங்
கான வைப்பிற் புன்புலத் தானே.

(இ-ள்.):—கொன்றையின் மலர் நம்மைப்போல் பசந்திடும் காலத்தில் [கார்காலத்தில்] காயாவின் பூக்கள் மிகுந்த பெரிய இளை மயிற் கழுத்தைப்போற் றோன்றும் கானத்துப் புலத்தில் தம்மைப்போல, பெண்மானைவிட்ட ஆண்மானையும் நமர் காண்பார்கொல் ?—(எ-று.)

குறித்த பருவம் வந்ததையும், வேறுபடுவோம் என்பதையும், பருவத்தியல்பு வேட்கையை மிகுவிப்பதாகும் என்பதையும் வன்பால் உணர்ந்திலர் என்பாள், 'சென்ற......நமரே' என்றாள்.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—ஆற்றாமையுணர்த்தல்.

## நெய்தல்.

[இது, கழறிய பாங்கற்குக் கிழவன் உரைத்தது.]

[ஆரியவரசன் யாழ்ப்பிரமதத்தன் பாடியது.]

கஅச. அறிகரி பொய்த்த லான்றோர்க் கில்லை
குறுக லோம்புமின் சிறுகுடிச் செலவே
யிதற்கிது மாண்ட தென்னா ததர்ப்பட்
டாண்டொழிந் தன்றே நாண்டகை நெஞ்ச
மயிற்க ணன்ன மாமுடிப் பாவை
நுண்வலைப் பரதவர் மடமகள்
கண்வலைப் படூஉங் கான லானே.

(இ-ள்.):—தெரிந்துகொள்: கரியிடத்துப் பொய்த்தல் ஆன்றோரிடத்து உண்டாவதில்லை ; (ஆதலின், அறிவுடையீர் !) பரதவர்தம் இளமகளின் கண்ணாகிய வலையில் சிக்கச்செய்யும் கானலிடத்துள்ள சிறுகுடியிடைச் செலவைப் பாதுகாமின் ; இதற்கு இது மாண்புடையதுஎன்று கருதாது, அவ்வழியிற்பட்டு அங்கு ஒழிந்தது நாணாற் சிறந்தஎனது நெஞ்சம் ; (ஆதலின்.)—(எ-று.)

பலநிறமலர்கள் சூடப்படுதலான், மயிற்கண் தலைமுடிப்பிற்குவமை. 'நாண்டகைநெஞ்சம்' எனக் கழிவிரக்கத்தாற் கூறுதலின், தற்புகழ் குற்றமாகாமை யறிக ; முன்னாகப் பின்னாக வேண்டுமிடங்களிலெல்லாம் இவ்வமைதிகொள்க.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—ஆற்றாமையறிவித்தல்.

## குறிஞ்சி.

[இது, தலைமகன் இராவந்தொழுகாநின்ற காலத்து வேறுபட்ட தலைமகளை வேறுபட்டாயால் என்றாட்குக் கிழத்தி உரைத்தது.]

[மதுரை அறுவைவாணிகன் இளவேட்டன் பாடியது.]

கஅ௫. நுதல்பசப் பிவர்ந்து திதலை வாடி
நெடுமென் பணைத்தோள் சாஅய்த் தொடி
நின்ன ளாகுத லும்மிற் றாகுமெனச் [நெகிழ்ந்
சொல்லி னெவனாந் தோழி பல்வரிப்
பாம்புபை யவிந்தது போலக் கூம்பிக்
கொண்டலிற் றொலைந்த வொண்செங் காந்தள்
கன்மிசை கவியு நாடற்
கென்னமர் மேனி யழிபடர் நிலையே.

(இ-ள்.):—தோழி! மாரியால் அழிந்த செங்காந்தள் மலைமிசைக் கவியும் நாடனுக்கு, நுதலிற் பசலை பரந்து, தேமல் வாட்டமடைந்து, தோள் மெலிந்து, வளையல்கள் நெகிழ்ந்து (இவற்றால்) எனது (அவர்) விரும்பும் மேனியிடத்து அழகை அழிக்கும் துயரின் நிலைமையை உம்மாலானதாகும் என்று சொன்னால் என்னை?—(எ-று.)

உள்ளுறை:—மாரியால் விளக்கமற்ற காந்தள் மலையிற் கவிந்து தங்கினாற்போல, நாடன்களவிடைக்கூட்டத்தால் வாட்டமடைந்த யான் நின்னைப் பற்றுக்கோடாக் கொண்டு உயிர்வாழ்கின்றேன் என்பதாம்.

## முல்லை.

[இது; பருவவரவின்கண் ஆற்றாளெனக் கவன்ற தோழிக்குங் கிழத்தி உரைத்தது.]

ஒக்கூர்மாசாத்தியார் பாடியது.]

கஅ௬. ஆர்கலி யேற்றொடு கார்தலை மணந்த
கொல்லைப் புனத்த முல்லை மென்கொடி
யெயிறென முகைக்கு நாடற்குத்
துயிலுறந் தனவாற் றோழியெங் கண்ணே.

(இ-ள்.):—இடியோடு வந்த கார்ப்பருவத்தைக் கூடியதனால், புனத்திடத்தவான முல்லைக்கொடிகள், பல்லென்னும்படி அரும்பி னும்; (இக்கார்ப்பருவத்தில்) தோழி! (கூறியவாறு வராத) நாடனைக்குறித்து எம்கண்கள் துயிலொழிந்திட்டன.—(எ-று.)

'காத்தலை' என்றும் பாடம்.

இவையிரண்டிற்கும் மெய்ப்பாடும், பயனும்—முன்னையவே.

## குறிஞ்சி.

[இது, வரைவு நீட்டித்தவழி ஆற்றாளாகிய தலைமகளை ஆற்றுவிக்க வேண்டித் தலைமகனை இயற்பழித்த தோழிக்குத் தலைமகள் இயற்பட மொழிந்தது.]

[கபிலர் பாடியது.]

கஎ௭. செவ்வரைச் செச்சை வருடை மான்மறி
சுரைபொழி தீம்பா லார மாந்திப்
பெருவரை நீழ லுகளு நாடன்
கல்லினும் வலியன் றோழி
வலிய னென்னாது மெலியுமென் னெஞ்சே.

(இ-ள்.):—வெட்சியிடத்து வருடைமான்கன்று (தாயின்) மடியி லிருந்து பொழியும் பாலை நிரம்பக் குடித்து மலைநீழலில் துள்ளும் நாடன், மலையைக்காட்டிலும் வலியன்; தோழி! வலியன் என்று கரு தாது மெலிவடையும் (அவன்காதன்மிகுதியை உணர்ந்த) என்னெஞ் சம்.—(எ-று.)

"வருடை......உகளு" மாறுபோல, அவன்மனையிடத்துத் தங் கிய யான்பெற்ற மகவும் மிக்குச் சுரக்கும் என்பாலை ஆரவுண்டு இனிய அம்மனையயலிடங்களில் விளையாடுமாறு இல்லறத்தை மேற்கோள்வ னென உள்ளுறைமுகத்தால் இயற்படமொழிந்தாளாம்.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—இயற்படமொழிதல்.

## முல்லை.

[இது, பருவங்கண்டு அழிந்த கிழத்தி தோழிக்கு உரைத்தது.]

[மதுரை அளக்கர்ஞாழார்மகனார் மள்ளனார் பாடியது.]

கஎ௮. முகைமுற் றினவே முல்லை முல்லையொடு
தகைமுற் றினவே தண்கார் வியன்புனம்

வாலிழை நெகிழ்த்தோர் வாரார்
மாலைவந் தன்றென் மாணலங் குறித்தே.

(இ-ள்.):—அரும்புகள் முதிர்ந்தன, முல்லைக்கொடியிடத்து; முல்லைக்கொடியோடு கூடி அழகு மிகுந்தன, கார்காலத்தில் புனத்திடம் சிறந்த நகைகளை (த்தந்நிலையினின்றும்) நெகிழச்செய்தார், வாரார் மாலை வந்தது எனது சிறந்த நலத்தைக்குறித்து.—(எ-று.)

மெய்ப்பாடு—அழுகை. பயன்—ஆற்றாமையறிவித்தல்.

## பாலை.

[இது, வினைதலை வைக்கப்பட்டிடத்துத் தலைமகன் பாங்கற்கு உரைத்தது.]

[மதுரையீழத்துப்பூதன்றேவன் பாடியது.]

கஅசு. இன்றே சென்று வருவது நாளைக்
குன்றிழி யருவியின் வெண்டேர் முடுக
இளம்பிறை யன்ன விளங்குசுடர் நேமி
விசும்புவீசு கொள்ளியிற் பைம்பயிர் துமியக்
காலியற் செலவின் மாலை யெய்திச்
சின்னிரை வால்வளைக் குறுமகள்
பன்மா ணாகம் மணந்துவக் கும்மே.

(இ-ள்.):—இன்றே போய்மீள்வது; நாளை மலையினின்றிழியும் அருவிபோலத் தேர் முடுக, பிறைபோல விளங்கும் ஒளியுள்ள உருளை, விசும்பில் வீசுங் கொள்ளியைப்போல (ஆர்களைப்பிரித்து உணரலாகாதவாறு) பயிர்கள் துணியும்படி காற்றின் இயலைக்கொண்ட செலவினால் மாலைக்காலத்திற் போய்ச்சேர்ந்து சிறுமகளது மாண்புள்ள மார்பிடத்தைக் கூடி மகிழ்வோம்.—(எ-று.)

தேர் வழியை நோக்காது விரையுமென்பான், 'பயிர் துமிய' என்றான். 'அடைந்துவக்கும்' என்றும் பாடம். வைக்கப்பட்டிடத்து-விகாரம். பாகற்கெனப் பாடங்கோடலுமாம்.

மெய்ப்பாடு—உவகை. பயன்—பாங்கன் விரைந்து தேர்விடச் செய்வானாதல்.

## முல்லை.

[இது, பிரிவிடை ஆற்றாளாகிய தலைமகள் தோழிக்குச் சொல்லியது.]

[பூதம்புல்லன் பாடியது.]

கசுo. நெறியிருங் கதுப்பொடு பெருந்தோ ணீவிச்
செறிவளை நெகிழச் செய்பொருட் ககன்றோ
ரறிவர்கொல் வாழி தோழி பொறிவரி
வெஞ்சின வரவின் பைந்தலை துமிய
வரவுரு முரறு மரையிரு ணடுநா
ணல்லே றியங்குதொ றியம்பும்
பல்லான் றொழுவத் தொருமணிக் குரலே.

(இ-ள்.):—கூந்தலோடு தோளைத் தைவந்து; வளையல்கள் நெகிழு மாறு (விருப்பைச்) செய்யும் பொருளைக்கருதிப் பிரிந்தார், (நம்நிலை மையை) அறிவர்கொல்? தோழி! பாம்பின்தலை துணியும்படி இடி இடிக்கும் நடுஇரவில், ஆனேறு செல்லுந்தோறும் பலபசுக்களையுடைய தொழுவத்தில் ஒருமணிக்குரல் ஒலிப்பதாகும்.—(எ-று.)

அன்புடையார்போல் ஒழுகினமைதோன்ற, 'நெறி......நீவி' என்றாள். 'நடுநாள்......குரல்' என்றது, விலங்கிற்கும் வேட்கைமிகுவித் திடும் அந்தக் காலநிலைமையை உணர்த்தியதோடு, உறக்கமின்மையை யும்உணர்த்திற்றும்.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—ஆற்றாமையறிவித்தல்.

## முல்லை.

[இது, பிரிவிடை ஆற்றாளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி கூறியது.]

*கசுக. உதுக்கா ணதுவே யிதுவென மொழிகோ
நோன்சினை யிருந்த விருந்தோட்டுப் புள்ளினந்
தாம்புணர்ந் தமையிற் பிரிந்தோ ருள்ளா
தீங்குர லகவக் கேட்டு நீங்கிய
வேதி லாள ரிவண்வரிற் போதிற்
பொம்ம லோதியும் புனைய
லெம்முந் தொடாஅ லென்குவ மன்னே.

* இதனாசிரியர்பெயர் காணப்படவில்லை. மேலும் ஆசிரியர்பெயர் குறியாத இடங்களிலெல்லாம் ஆசிரியர்பெயர் பிரதிகளில் இல்லை யென்று கொள்க.

(இ-ள்.):—இதுகாண், (யாம் கூறக்கருதும்) அது; (அதனை) இஃதென்று சொல்லுகோ? பறவைத்திரள், (துணையுடன்) கூடினமையால், பிரிந்தார் (வருந்துவரென்று) கருதாமல் ஒலிக்கக்கேட்டும் பிரிந்த தொடர்பற்றார் இவ்விடத்து வரின், கூந்தலையும் புனையாதி; எம்மையும் தொடாதி' என்போம், தோழி!—(எ-று.)

எனவே, வருந்துணையும் ஆற்றிப் பின்னும் இடித்துரைத்து நிறுத்துவல் என்றாளாம். 'உதுக்காண்.........மொழிகோ' என்றது, கேட்பார்ப்பிணிக்கும் ஆற்றலுடையதோருலகவழக்கு. செற்றத்தால், 'ஏதிலாளர்,' 'புனையல்,' 'தொடால்' என்று பன்மையொருமைமயங்கக் கூறினாள்.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—ஆற்றுமாறறிவித்தல்.

## பாலை.

[இது, பிரிவிடை வற்புறுத்த வன்புறையெதிரழிந்து கிழத்தி உரைத்தது.]

[கச்சிப்பேட்டுநன்னாகையார் பாடியது.]

௧௯௨. ஈங்கே வருவ ரினைய லவரென
வழாஅற்கோ வினிய நோய்நொந் துறைவி
மின்னின் றூவி யிருங்குயில் பொன்னி
னுரைதிகழ் கட்டளை கடுப்ப மாச்சினை
நறுந்தாது கொழுதும் பொழுதும்
வறுங்குரற் கூந்த றைவரு வேனே.

(இ-ள்.):—'அழுது இனிய நோவால் நொந்து தங்குவோய்! இவ்விடத்து வருவர் அவர் வருந்தாதி' என்று நீ கூற, (யான்தான்,) குயில், பொன்னுரையால் விளங்கும் உரைகல்லைப்போல மாவின் தாதைக் கோதும் பொழுதும் [வேனிலிலும்], (மணம்) வரும் பூங்கொத்தை யணிந்த கூந்தலைத் தைவருவேன்.—(எ-று.)

* அழாற்கு—அழுதென்னும் உடன்பாட்டில் வந்தது. இனிய நோய்—கூட்டத்தினிமையை மிகுவிப்பதாதலால், இனியதானநோய். கூந்தல்தைவரல் துயர்மிக்கார்செய்கை.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—ஆற்றாமையறிவித்தல்.

---

* தொல் - சொல் - வினை - ௯ - நச். உரை பார்க்க.

## முல்லை.

[இது, தோழி கடிநகர்ப்புக்கு நலந்தொலையாமை நன்காற்றினாய் என்றாட்குக் கிழத்தி உரைத்தது.]

[அரிசில்கிழார் பாடியது.]

க௯௩. மட்டம் பெய்த மணிக்கலத் தன்ன
விட்டுவாய்ச் சுனைய பகுவாய்த் ~~தட்டைப்~~ தேரை
தட்டைப் பறையிற் கறங்கு நாடன்
றொல்லைத் திங்க ணெடுவெண் ணிலவின்
மணந்தனன் மன்னெ னெந்தோளே
யின்று முல்லை முகைநா றும்மே.

(இ-ள்.):—கள்ளைப் பெய்த கலத்தைப்போன்ற, [வெளிறிய] உவரினையுடைய சுனையிடத்தவான பிளவினையுடைய மூங்கிற்பிளவுகளால், பறைகள் இல்லத்திடத்து ஒலிக்கும் நாடனாகிய மன்னன், முன்னர், திங்களின் நிலவில் எம்தோளை மணந்தனன்; இன்று முல்லை முகைகள் (அவன் சூட்ட மெய்யிடத்துக்) கமழ்வனவாகும்.—(எ-று.)

நீ களவை நீளவிடாது வரைவுகடாவினமையின் வந்தபேறு என்றவாம்.

மெய்ப்பாடு—உவகை. பயன்—மகிழ்வித்தல்.

## முல்லை.

[இது, பருவவரவின்கண் ஆற்றாளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.]

[கோவதத்தன் பாடியது.]

க௯௪. என்னெனப் படுங்கொ றோழி மின்னுவர
வலனேர் பிரங்கு மென்றே றதனொடு,
கான மஞ்ஞை கடிய வேங்கு
மேதில கலந்த விரண்டற்கென்
பேதை நெஞ்சம் பெருமலக் குறுமே.

(இ-ள்.):—என்னவென்று கருதப்படும்?, தோழி! மின்னல் வருதலால், வெற்றியைநேர்ந்து ஒலிப்பதாகும் தாழையின் மலர்;

அம்மின்னலின்எதிரே காட்டிடத்து மயில்கள் மிகவும் ஆரவாரிக்கும்; அயன்மையதாய்க் கூடிய இவ்விரண்டுநிகழ்ச்சிகளுக்கு என்நெஞ்சம் பெருங்கலக்கமடையும்.—(எ-று.)

மின்னத் தாழை மலர்தலும், மயில்கள் ஆரவாரித்தலும் இயற்கை. பேதை - காதலர்சொல்லில் நம்பிக்கையற்றமையிற் பேதையான; குறித்த கார்காலத்திலும் வாராதாரிடத்துக் காதலுறுமையின் பேதையான என்றுமாம்.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—ஆற்றாமையறிவித்தல்.

## நெய்தல்.

[இது, பிரிவிடைப் பருவவரவின்கண் கிழத்தி மெலிந்து கூறியது.]

[தோதான் பாடியது.]

கசுரு. சுடர்சினந் தணிந்து குன்றஞ் சேரப்
படர்சுமந் தெழுதரு பையுண் மாலை
யாண்டுளர் கொல்லோ வேண்டுவினை முடிந
ரின்னா திரங்கு மென்னா ரன்னோ
தைஇ யசைவளி மெய்பாய்ந் தூர்தரச்
செய்வுறு பாவை யன்னவென்
மெய்பிறி தாகுத லறியா தோரே.

(இ-ள்.):—கதிரவன் கடுமைகுறைந்து ('அத்தம்' என்னும்) மலையை அடையப் படர்தலைத் தாங்கி எழும் துயர்தரும் மாலையில், எவ்விடத்துள்ளார்கொல், விரும்பும் வினையை முடிப்பார்? (பிரிவு) துயர்தருவது, (ஆதலின்) வருந்துவாளென்று கருதார்; அந்தோ! காற்று மெய்யிற்பாய்ந்து ஊர்தலால் (வருந்திச்) செய்தலுற்ற பாவை போன்ற என்மெய் வேறுபட்டிடலை அறியாராவர்.—(எ-று.)

அன்னோ - இரக்கக் குறிப்பு. தைஇ - தங்கி. 'தைவரல்' எனவும் பாடம்.

மெய்ப்பாடும், பயனும்—முன்னையவே.

## மருதம்.

[இது, வாயில்வேண்டிப் புக்க தலைவற்குத் தோழி உரைத்தது.]

[மீனைக்கந்தன் பாடியது.]

கசுசு. வேம்பின் பைங்காயென் றோழி தரினே
தேம்பூங் கட்டி யென்றனி ரினியே
பாரி பறம்பிற் பனிச்சுனைத் தெண்ணீர்
தைஇத் திங்கட் டண்ணிய தரினும்
வெய்ய வுவர்க்கு மென்றனி
ரைய வற்றா லன்பின் பாலே.

(இ-ள்.):—'வேம்பின் பசிய காயை என்தோழி தரின், கருப்பங் கட்டியாகும்' என்றீர் (களவுக்காலத்து;) இப்பொழுது, 'பாரி'என் பான்றன் பறம்பிலுள்ள சுனையின் நீரைத் தைத்திங்களில் குளிர்ந்த தென்று (தோழி) தரினும் வெப்பமுடையதாய் உவர்க்குமென்றீர்; ஐய! அத்தகையதாயிற்று, (நம்) அன்பின் பகுதி.—(எ-று.)

பைங்காய் - இளந்தன்மைமாறிப் பழத்தன்மைபற்றாத கடுங்காய்.

மெய்ப்பாடு—வெகுளி. பயன்—வாயின்மறுத்தல்.

## நெய்தல்.

[இது, பருவவரவின்கண் வற்புறுத்துந் தோழிக்கு கிழத்தி உரைத்தது.]

[கச்சிப்பேட்டுநன்னாகையார் பாடியது.]

கசுஎ. யாதுசெய் வாங்கொ றோழி நோதக
நீரெதிர் கருவிய காரெதிர் கிளைமழை
யூதையங் குளிரொடு பேதுற்று மயங்கிய
கூதிர் உருவிற் கூற்றங்
காதலர்ப் பிரிந்தவெற் குறித்து வருமே.

(இ-ள்.):—யாது செய்வோம்? தோழி! வருத்தம் மிகும்படி நீரோடு விளங்கும் கருவிகளையுடைய கார்காலத்துப் பகைத்த மிக்க மழையினாலாகிய ஊதைக்காற்றின் குளிரோடு அறிவு தடுமாறி மயங்கிய, காதலரைப் பிரிந்த என்னைக்குறித்து கூதிர்ப்பருவத்தின் வடிவத்தினைக் கொண்ட கூற்றம் வருவதாகும்.—(எ-று.)

சென்ற கார் அறிவைத் தடுமாறச்செய்தது; வருங் கூதிர் அடியோடு அழித்திடும் எவ்வாறுய்குவோம்? என்றாளாம். மயங்கிய எற் குறித்து என்றுதொடரும்.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—ஆற்றாமையுணர்த்தல்.

## குறிஞ்சி.

[இது, தோழி குறியிடம் பெயர்த்துக் கூறியது.]

[கபிலர் பாடியது.]

ககூஅ. மாஅங் கொன்ற மரஞ்சுட் டியவிற்
கரும்புமருண் முதல பைந்தாட் செந்தினை
மடப்பிடித் தடக்கை யன்ன பால்வார்பு
கரிக்குறட் டிறைஞ்சிய செறிகோட் டைங்குரற்
படுகிளி கடிகஞ் சேறு மடுபோ
ரெஃகுவிளங்கு தடக்கை மலையன் கானத்
தாரா நாறு மார்பினை
வாரற்க தில்ல வருகுவள் யாயே.

(இ-ள்.):—வழியில் தினையின் கதிரிடத்து வீழுங் கிளியைவிலக்குவோயாய்ச் செல்வோம், 'மலையன்' என்பானது 'முள்ளூர்'க்கானத்துச் சந்தம் கமழ்வதுபோற் கமழும் மார்பினையாய் வாராதி; யாய் வருகுவள்.—(எ-று.)

'யாஅங்கொன்ற,' 'வாரன்மற்றைய' என்பனவும் பாடபேதங்கள். சுட்டியவின் - விகாரம். தடக்கையன்ன குரல் என இயையும். தினைக் கொல்லையிடத்து வருக என்றானாம்.

மெய்ப்பாடு—அச்சத்தைச் சார்ந்த பெருமிதம். பயன்—குறியிடம் உணர்த்தல்.

## குறிஞ்சி.

[இது, தோழி செறிப்பறிவுறுப்ப நெஞ்சிற்குக் கிழவன் உரைத்தது.]

[பரணர் பாடியது.]

ககூகூ. பெறுவ தியைவ தாயினு முறுவதொன்
றுண்டுமன் வாழிய நெஞ்சே திண்டேர்க்

கைவளை ரோரி கானந் தீண்டி
யெறிவளி கமழு நெறிபடு கூந்தன் |
மையீ ரோதி மாஅ யோள்வயி
னின்றை யன்ன நட்பி னிந்நோ
யிறுமுறை யெனவொன் றின்றி
மறுமை யுலகத்து மன்னுதல் பெறினே.

(இ-ள்.):—(இம்மையுலகத்துப்) பெறுதல் இயையாதாயினும் வரக்கடவதான ஒருநன்மையும் உண்டுமன்; வாழ்க. நெஞ்சே! 'ஓரி' என்பான் கானத்துக்காற்றுக் கமழ்வதுபோற் கமழும்ஒதியினையுடைய மாமைநிறத்தினள்பால், இன்றைக்குக் கொண்ட நட்பினைப்போன்ற நட்போடு, இந்நினைவாலாகிய நோய் கெடும்முறையின்றி (யான் செல்லும்) மறுமையுலகின்கண்ணும் பொருந்துதலைப்பெறின்.—(எ-று.)

'திண்டோட், கைவள்ளோரி,' 'மைஇ யீரோதி' என்பனவும் பாடபேதங்கள். என்றும் ஒன்றையே உள்ளுவார் அதனைப் பெறுவாராதலின், 'மாஅ யோள்வயின்......மன்னுதல் பெறின், உறுவதொன்றுண்டுமன்' என்றான்; இதனானே இம்மைவாழ்வு இனி நீளாததாகு மென்பதூஉம் புலப்படுத்தினானும். மன்—துணிவு.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—அயர்வுயிர்த்தல்.

## முல்லை.

[இது, பருவவரவின்கண் ஆற்றாளாகிய தலைமகட்குத் தோழி பருவமன்று என்றவழித் தலைமகள் சொல்லியது.]

[ஔவையார் பாடியது.]

உ00. பெய்த குன்றத்துப் பூநாறு தண்கலுழ்
*மீமிசை[ச் சினைமி]சைத் தாஅய் வீசுமந்
திழிதரும் புனலும் வாரார் தோழி
மறந்தோர் மன்ற மறவா நாமே
கால மாரி மாலை மாமழை

* இருதலைப்பகரத்துள்ளவை சேர்க்கப்பட்டவை; பிரதிகளில் இடமே விடப்பட்டிருந்தது.

யின்னிசை யுருமின் குரலு
முன்வர லேமஞ் செய்தகன் றோரே.

(இ-ள்.):—தோழி! மலையின் மிக்க மேலிடத்துள்ள கிளைகளில் தாவி, மலர்களைச் சுமந்து இழிவதாகும் (மழை) நீரும்; இடிக்குரல் நம்முன் வருதலை நமக்குக் காப்பாகச்செய்து பிரிந்தோர், காலத்து மாரியின் மாலையில் [கார்காலத்து முதன்மாலையில்,] சிறந்த (வருவதாய்க் குறித்த) மறையை மறந்தோராவர் துணிவாக; (ஆதலின்,) வாராராயினர்; நாமே மறவோமாயினேம்.—(எ-று.)

பருவத்தையே பார்த்திருந்ததனாலும் ஆற்றுவித்தலையே கருதியதனாலும் இருவேமும் மறவோம் என்றாள். இன் இசை - காதலர் வருவாரென்ற களிப்பைத்தரலால் இனிதான ஒலி. குரலும் - உம்மை இசைநிறை.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—ஆற்றாமையறிவித்தல்.

## குறிஞ்சி.

[இது, கடிநகர்வேறுபடாது நன்காற்றினையென்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.]

௨0௧. அமிழ்த முண்கநம் மயலி லாட்டி
பால்கலப் பன்ன தேக்கொக் கருந்துப்
நீல மென்சிறை வள்ளுகிர்ப் பறவை
நெல்லி யம்புளி மாந்தி யயலது
முள்ளி லம்பணை மூங்கிலிற் றூங்குங்
கழைநிவந் தோங்கிய சோலை
மலைகெழு நாடனை வருமென் றோளே.

(இ-ள்.):—நம்அயன்மனையினள், குயில் மாம்பழத்தை உண்டு நெல்லியின் புளிப்புள்ள பழச்சாற்றைக் குடித்து, அயலிடத்ததான மூங்கிலிடத்துத் தங்கும் மலைமிக்க நாடன் வருவானென்றாள்; (ஆதலின்,) அமிழ்தத்தை உணவாகப்பெற்று உண்பாளாக.—(எ-று.)

முள்ளில்—முள்ளுக்கிருப்பிடமான. நாடனை—ஐ சாரியை.

மெய்ப்பாடு—உவகை. பயன்—மகிழ்வித்தல்.

## மருதம்.

[இது, வாயிலாகப்புக்க தோழிக்குத் தலைமகள் வாயின் மறுத்தது.]

[அள்ளூர்நன்முல்லையார் பாடியது.]

உ0உ. நோமென் னெஞ்சே நோமென் னெஞ்சே
புன்புலத் தமன்ற சிறியிலை நெருஞ்சிக்
கட்கின் புதுமலர் முட்பயந் தாஅங்
கினிய செய்தநங் காதல
ரின்னா செய்த னோமென் னெஞ்சே.

(இ-ள்.):—வருந்தும் என்னெஞ்சம், வருந்தும் என்னெஞ்சம்; புன்செய்யில் நெருங்கிய நெருஞ்சியின் கண்ணுக்கினிய புதுமலர் முள்ளைத் தந்தாற்போல, இனியவற்றைச் செய்த நம்காதலர் இன்னாதவற்றைச் செய்தலைக்குறித்து வருந்தும் என்னெஞ்சம்.—(எ-று.)

புன்புலம் - புன்செய். சிறியிலை - விகாரம். இன்னாசெய்தல் - ஓதல் முதலியவற்றிற்கன்றிப் பரத்தையரிற் பிரிதல்.

மெய்ப்பாடு—இளிவரலைச் சார்ந்த வெகுளி. பயன்—வாயின்மறுத்தல்.

## மருதம்.

[இது, வாயிலாகப்புக்க தோழிக்குத் தலைமகள் சொல்லியது.]

[நெடும்பல்லியத்தை பாடியது.]

உ0௩. மலையிடை யிட்ட நாட்டரு மல்லர்
மரந்தலை தோன்றா வூரரு மல்லர்
கண்ணிற் காண நண்ணுவழி யிருந்து
கடவு ளண்ணிய பாலோர் போல
வொரீஇ யொழுகு மென்னைக்குப்
பரியலென் மன்யான் பண்டொரு காலே.

(இ-ள்.):—மலைகுறுக்கிட்ட நாட்டினருமல்லர்; மரங்களால் தோன்றுதலில்லாத ஊரினருமல்லர்; கண்ணாற் காணுமாறு அணித்தாகிய இடத்திலிருந்தும், கடவுளால் கிட்டிய (தீய) ஊழையுடையார் போல அஞ்சி ஒழுகும் என்றலைவன்திறத்துப் பரிந்தேனல்லேன்மன், யான் பண்டொருகாலத்து.—(எ-று.)

'இரீஇ,' 'எரீஇயி னொழுகும்' என்பனவும் பாடங்கள்.

மெய்ப்பாடும், பயனும்—முன்னையவே.

## குறிஞ்சி.

[இது, தலைமகற்குப் பாங்கன் உரைத்தது.]

[மிளைப்பெருங்கந்தன் பாடியது.]

உ0௪. காமங் காம மென்பர் காம
மணங்கும் பிணியு மன்றே நினைப்பின்
முதைச்சுவற் கலித்த முற்றா விளம்புன
மூதா தைவந் தாங்கு
விருந்தே காமம் பெருந்தோ ளோயே.

(இ-ள்.):—பெரிய தோளினையுடையாய்! 'காமம் காமம்' என்று உயர்த்திக் கூறுவர்; (அக்) காமம், வருத்தும் நோயுமன்று; நினைப்பின், இளைய பயிரையுடைய புனத்தை முதிய ஆ தேடியடைந்தாற் போலப் புதுவரவினதே காமம்.—(எ-று.)

பெற்றோர்க்குரியராகிய பொற்றொடிமகளிர்பால் அறநோக்கிச் சேறுங் குற்றமுடைமையை, 'முதைச்சுவல்...........ஆங்கு' என்ற உவமைபுலப்படுத்திற்று. சுவல்கலித்த - குதிரைப்பிடரிமயிர்போற் றழைத்த.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—கழறுதல்.

## நெய்தல்.

[இது, வரைவிடை ஆற்றாளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.]

[உலோச்சனர் பாடியது.]

உ0௫. மின்னுச்செய் கருவிய பெயன்மழை தூங்க
விசும்பா டன்னம் பறைநிவந் தாங்குப்
பொலம்படைப் பொலிந்த வெண்டே ரேறிக்
கலங்குகடற் றிவலை யாழி நனைப்ப
வினிச்சென் றனனே யிடுமணற் சேர்ப்பன்
யாங்கறிந் தன்றுகொ றோழியென்
றேங்கமழ் திருநுத லூர்தரும் பசப்பே.

(இ-ள்.):—மழை நிலைத்தலால் விசும்பிற் பறக்கும் அன்னம் பறத்தலால் மேலெழுந்தாற்போல, தேரில் ஏறிக், கடலின் இவலை உருளையை நினைக்க இப்பொழுது சென்றான் சேர்ப்பன்; எங்ஙனம் அறிந்ததோ? தோழி! பசலை என்னுதலிடத்துப் பாவுவதாகும்.—(எ-று.)

‘புலம்பிடை’ என்றும் பாடம்.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—ஆற்றாமையறிவித்தல்.

## குறிஞ்சி.

[இது, கழறிய பாங்கற்குக் கிழவன் உரைத்தது.]

[ஐயூர்முடவனார் பாடியது.]

௨௦௬. அமிழ்தத் தன்ன வந்தீங் கிளவி
யன்ன வினியோள் குன்று மின்ன
வின்னா வரும்படர் செய்யு மாயி
னுடனுறை வரிதே காமங்
குறுக லோம்புமி னறிவுடை யோரே.

(இ-ள்.):—அமிழ்தத்தைப்போன்றன கிளவிகள், அக்கிளவிகளைப்போல இனியளாயினாள்மலையும் இத்தகைய இன்னாத அரிய துயரைச் செய்யுமானால், உடனுறைதற்கு அரியதே காமம்; ஆதலின், அறிவுடையீர்! (அக்) குன்றைக் குறுகுதலைப் பாதுகாமின்.—(எ-று.)

பரியாதார்முன்னர்த் தானுற்றகூற ஒருப்படுத்தலின், ‘இன்னா.... படர்’ என்றான். நீயுங் நிலைகலங்குவை என்பான், ‘குறுகலோம்புமின்’ என்றான்.

மெய்ப்பாடு—இளிவரல். பயன்—பாங்கனை ஒருப்படுத்தல்.

## பாலை.

[இது, செலவுக்குறிப்பறிந்து அவர் செல்லாரென்று தோழி சொல்லக் கிழத்தி உரைத்தது.]

[உறையன் பாடியது.]

௨௦௭. செப்பினஞ் செலினே செலவரி தாகுமென்
றத்த வோமை யங்கவட் டிருந்த

வினந்தீர் பருந்தின் புலம்புகொ டௌ்விளி
சுரஞ்செல் மாக்கட் குயவுத்துணை யாகுங்
கல்வரை யல்லது தோல்வழங்கு சிறுநெறி
நல்லடி பொறிப்பத் தாஅய்ச்
சென்றெனக் கேட்டநம் பார்வலர் பலரே.

(இ-ள்.):—சொன்னேமாய்ச் செல்வதாயின் செல்லுதல் அரிய தாகும் என்று, (சொல்லாது,) துணையைத் தீர்ந்த பருந்தின் அழைப்பு, சுரத்துச் செல்வார்க்கு உசாத்துணையாகின்ற கல்வரையிலும், அன்றி, யானைத்திரள் வழங்கும் சிறுநெறியிலும் (கிழவன்) சென்றதாகக் கேட்ட நம்அன்பர் பலராவர்.—(எ-று.)

கல்வரை, சிறுநெறி - இவற்றேழனுருபும் உம்மையும் தொக்கன. 'தொல்வழங்கு' என்றும் பாடம்.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—ஆற்றாமை நீங்கல்.

## குறிஞ்சி.

[இது, வரைவிடை ஆற்றல்வேண்டுமென்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.]

[கபிலர் பாடியது.]

உ௰அ. ஒன்றே னல்லே னொன்றுவென் குன்றத்துப்
பொருகளிறு மிதித்த நெரிதாள் வேங்கை
குறவர் மகளிர் கூந்தற் பெய்ம்மார்
நின்றுகொய மலரு நாடனொ
டொன்றேன் றோழி யொன்றி னானே.

(இ-ள்.):—பொருந்தாதேனல்லேன் பொருந்துவேன்; குன்றத்திடத்துப் பொருத யானை மிதித்த நெரிந்த தாளையுடைய வேங்கை, குறமகளிர் கூந்தலிற் சூட நின்றுகொய்யும்படி மலரும் நாடனோடு, தோழி! (யானே) பொருந்தேனென்கின்றனை (நீ.)—(எ-று.)

'ஒன்றேன் றோழி யொன்றே னானே' என்றும் பாடம்.

உள்ளுறை:—'பொருகளிறு......மலரு' மாறுபோல, கூடுங் கருத்தின்றிக் கூடிய தலைமகனால் இளைக்கப்பட்ட யான், எளிதில் எல்லாரும் ஆற்றுமாறு உள்ளேனாயினேன் என்பதாம்.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—ஆற்றாமையறிவித்தல்.

## பாலை.

[இது, பொருண்முற்றி மறுத்தருந் தலைமகன் தோழிக்கு உரைப்பானாய்க் கிழத்தியைத் தெருட்டியது.]

[பாலைபாடிய பெருங்கடுங்கோ பாடியது.]

உ0௯. சுரந்தலைப் பட்ட நெல்லியம் பசுங்காய்
மறப்புலிக் குருளை கோளிடங் கறங்கு
மிறப்பருங் குன்ற மிறந்த யாமே
குறுநடைப் பல்லுள் ளலமே நெறிமுதற்
களரிற் கவித்த முட்சினை வெட்சித்
தளையவிழ் பல்போது கமழு
மையிருங் கூந்தன் மடந்தை நண்பே.

(இ-ள்.):—சுரத்து முளைத்த நெல்லியின் பசுங்காய், புலிக்குருளை (உறைதலைக்) கொள்ளுமிடத்து விழுந்தொலிக்கும் குன்றத்தைக் கடந்த யாம், குறுநடையினையும் (சிறிது தோன்றும்) பல்லினையும் வெட்சியின் பலமலர்கள் கமழுங் கூந்தலையுமுடையாளது நட்பைக் கருதிலமோ?—(எ-று.)

சுரந்தலை - விகாரம். 'களரில்,' 'பலபோது' - பாடபேதங்கள்.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—தெளிவித்தல்.

## முல்லை.

[இது, பிரிந்துவந்த தலைமகன் நன்காற்றியிருந்தாயென்றாற்குத் தோழி உரைத்தது.]

[காக்கைப்பாடினியார் நச்செள்ளையார் பாடியது.]

உக0. திண்டேர் நள்ளி கானத் தண்டர்
பல்லா பயந்த நெய்யிற் றொண்டி
முழுதுடன் விளைந்த வெண்ணெல் வெஞ்சோ
றெழுகலத் தேந்தினுஞ் சிறிதென் றோழி
பெருந்தோ ணெகிழ்த்த செல்லற்கு
விருந்துவரக் கரைந்த காக்கை யது பலியே.

(இ-ள்.):—'நன்னி' என்பான்கானத்து ஆயர்களின் பலபசுக்களும் எருமைகளும் தந்த நெய்யோடு 'தொண்டி' என்னும் ஊர்முழுவதும் விளைந்த வெள்ளிய நெல்லின் விருப்பந்தரும் சோற்றை, தோழியின் தோளை மெலிவித்த செல்வனை விருந்தாகவருமாறு கரைந்த காக்கை யின் பலியாக ஒருகலத்தெடுப்பினும் சிறியதாகும்.—(எ-று.)

'செல்லற்கு,' 'விரைந்து'—பாடபேதங்கள். காக்கை கரைதலைப் பாராட்டிப் பாடினமைபற்றிப்போலும் இதனாசிரியர் 'காக்கைப் பாடினியார் நச்செள்ளையார்' எனப் பெயர்பெறுவாராயினர்.

மெய்ப்பாடு—உவகை. பயன்—மகிழ்வித்தல்.

## பாலை.

[இது, இடைச்சுரத்துக் கவலுவனகண்டு நம்மை ஆற்றாரென நினைந்து மீள்வர்கொல்? எனக்கவன்ற கிழத்திக்குத் தோழி சொல்லி யது.]

[காவன்முல்லைப்பூதனார் பாடியது.]

௨௧௧. அஞ்சி லோதி யாய்வளை நெகிழ
நொந்து மருளார் நீத்தோர்க் கஞ்ச
லெஞ்சினம் வாழி தோழி யெஞ்சா
தீய்ந்த மராஅத் தோங்கல் வெஞ்சினை
வேனி லோரிணர் தேனோ டூதி
யாரா தொழியருந் தும்பி
நீரில் வைப்பிற் சுரனிறந் தோரே.

(இ-ள்.):—அழகிய சிலவாய கூந்தலையுடையாய்! வளையல்கள் நெகிழும்படி வருந்தியும் இரங்காராய்ப் பிரிந்தார்திறத்து அஞ்சுதல் குறைந்தோம்; தோழி! முழுதுங்கரிந்த மராத்தினது உயர்ந்த கிளை யிடத்து வேனிலில் மலரும் ஒருபூங்கொத்தைத் தேனோடு ஊதி அமை யாது மீளும் தும்பியையுடைய நீரற்ற நிலத்தையுடைய சுரத்தைக் கடந்திட்டார்; (ஆதலின்.)—(எ-று.)

'நேர்ந்தும்' என்றும் பாடம். 'எஞ்சா............சுரன்' என்றது, கிழத்தி கூறியதைக் கொண்டுமொழிந்தது.

மெய்ப்பாடு—இளிவரலைச் சார்ந்த பெருமிதம். பயன்—ஆற்று வித்தல்.

## நெய்தல்.

[இது, குறைநேர்ந்த தோழி குறைநயப்பக் கூறியது.]

[நெய்தற்கார்க்கியன் பாடியது.]

௨௧௨. கொண்க னூர்ந்த கொடிஞ்சி நெடுந்தேர்
தெண்கட லடைகரை தெளிமணி யொலிப்பக்
காணவந்து நாணப் பெயரு
மளிதோ தானே காமம்
விளிவது மன்ற நோகோ யானே.

(இ-ள்.):—கொண்கன் செலுத்திய நெடுந்தேர், கடற்கரையிடத்து மணியொலிப்ப வந்து (நான் மறுத்தலின்,) நாணும்படி பெயர்வதாகும்; அளிக்கத்தக்கதுதான் (அவனுற்ற) காமம்; துணிவாக அழியத்தக்கது; யான் வருந்துகோ?—(எ-று.)

எனவே, அவனோ மறுப்ப மறுப்ப வருவான்; நீயோ கூறக் கூறக் கொள்ளாய் என்செய்வேன்? என்றாளாம்.

மெய்ப்பாடு—முன்னையது. பயன்—குறைநயப்பித்தல்.

## பாலை.

[இது, நம்பெருமான் நம்பொருட்டு இடைநின்று மீள்வரெனக் கவன்ற தலைமகட்குத் தோழி உரைத்தது.]

[கச்சிப்பேட்டுக் காஞ்சிக்கொற்றன் பாடியது.]

௨௧௩. நசைநன் குடையர் தோழிஞெரேரெனக்
கவைத்தலை முதுகலை காலி னொற்றிப்
பசிப்பிணிக் கிறைஞ்சிய பரூஉப்பெருந் தாதா
லொழியி னுண்டு வழிய னெஞ்சிற்
றெறித்துநடை மரபிற்றன் மறிக்கு நிழலாகி
நின்றுவெயிற் கழிக்கு மென்பந
மின்றுயின் முனிநர் சென்ற வாறே.

(இ-ள்.):—விருப்பம் மிகவும் உடையார், தோழீ! (பிரியாதிருத்தலை) ஒருப்படாதோர்; ஆண்மான், (செலவினால்) காற்றினியலைப்

பொருந்திப் பசிநோய்க்குத் தாதினால் (வலி) யொழிந்திடின் உண்டு, வருத்தமுள்ள நெஞ்சினையும் துள்ளிநடக்கும் நடையின் முறைமையினையுமுடைய பெண்மானுக்கு நிழலுண்டாகும்படி நின்று வெயிலைக் கழிக்கும், நம்மோடு இனிய துயிலை வெறுத்தார் சென்ற வழியிடம்.—(எ-று.)

நசை நன்குடையர் - குறிப்புமொழி. தாது - ஒருவகைமரம் போலும்; தாதுமாதுளையுமாம். ஆகி - ஆகவெனத் திரிக்க. 'கவைத்தலை......ஆறு' என்றது, தலைவிகூற்றைத் தோழிகொண்டு மொழிந்தது. என, என்ப - அசைநிலைகள்.

மெய்ப்பாடு—முன்னையது. பயன்—ஆற்றுவித்தல்.

## குறிஞ்சி.

[இது, தோழி வெறியாட்டெடுத்துக் கொண்டவிடத்து அறத்தொடு நின்றது.]

[கூடலூர்கிழார் பாடியது.]

உகச. மரங்கொல் கானவன் புனந்துளர்ந்து வித்திய
பிறங்குகுர லிறடி காக்கும் புறந்தா
ழஞ்சி லோதி யசையியற் கொடிச்சி
திருந்திழை யுடைக்குப் பெருந்தழை யுதவிச்
செயலை முழுமுத லொழிய வயல
தாலை மாலை சூட்டி
யேமுற் றன்றிவ் வழுங்க லூரே.

(இ-ள்.):—குறவன் புனத்தைக் கொத்தி விதைத்த தினையைக் காக்கும், கூந்தலையும் இயலினையுமுடைய குறமகளின் உடையினுக்குத் தழையைத்தந்து அசோகு அடியுடன் கெடக், கரும்பின் மாலையையும் சூடச்செய்து இன்பமுற்றது, இவ்வருத்தும் ஊர் தான்.—(எ-று.)

எனவே, கையுறைதந்து கலந்தானொருவன் உளனென்பதுணர்த்தி அறத்தொடுநின்றாளாம். மடலேறுவார் கரும்பின்மாலையையுஞ் சூடுதல் மரபுபோலும்.

மெய்ப்பாடு—முன்னையது. பயன்—அறத்தொடுநிற்றல்.

## பாலை.

[இது, பிரிவிடைத் தோழி வற்புறுத்தியது.]

[மதுரை அளக்கர்ஞாழார்மகனார் மள்ளனார் பாடியது.]

௨௧௫. படரும் பைபயப் பெயருஞ் சுடரு
மென்றாழ் மாமலை மறையு மின்றவர்
வருவர்கொல் வாழி தோழி நீரில்
வறுங்கயந் துழைஇய விலங்குமருப் பியானை
குறும்பொறை மருங்கி னமர்துணை தழீஇக்
கொடுவரை யிரும்புலி காக்கு
நெடுவரை மருங்கிற் சுரனிறந் தோரே.

(இ-ள்.):—நினைவாலாய நோவும் மெல்ல மீள்வதாகும்; விளங்கும் பகலவனும் மலையில் மறைவான்; தோழி! நீரற்ற குளத்தைத் துழாவிய யானை, முலலைநிலத்திற் பிடியைத் தழுவிப் புலியினின்றும் பாதுகாக்கும் மலையைச் சார்ந்த சுரத்தைக் கடந்தாராகிய அவர் இன்று வருவர் கொல்?—(எ-று.)

'பயப்பய,' 'கொடுவரி' - என்பன பாடபேதங்கள்.

மெய்ப்பாடு—முன்னையது. பயன்—ஆற்றுவித்தல்.

## பாலை.

[இது, பருவவரவின்கண் ஆற்றாளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.]

[கச்சிப்பேட்டுக்காஞ்சிக்கொற்றன் பாடியது]

௨௧௬. அவரே, கேடில் விழுப்பொருடருமார் பாசிலை
வாடா வள்ளியங் காடிறந் தோரே
யானே, தோடா ரெல்வளை ஞெகிழ வேங்கிப்
பாடமை சேக்கையிற் படர்கூர்ந் திசினே
யன்ன ளளிய ளென்னாது மாமழை
யின்னும் பெய்ய முழங்கு
மின்னுந் தோழியென் னின்னுயிர் குறித்தே.

(இ-ள்.):—அவர்தாம், பொருளைத் தருதற்கு வள்ளிக்கூத்தினையுடைய காட்டைக் கடந்தனர்; யான்தான், வளைகள் நெகிழும்படி

வருந்திப் படுக்கையிடத்தில் துயரிருந்தவளானேன் ; அத்தகையள் (ஆதலின்,) அளிக்கத்தக்காளென்று கருதாது, முகில் மேலும் பெய்யும் ; இடிக்கும் ; மின்னும் ; தோழி ! என்இன்னுயிரை (க்கொள்ளல்) கருதி.—(எ-று.)

பாசு இலை வாடா வள்ளி - ஆவது, வள்ளிக்கூத்து ; இஃதிழிந்தார்காணுங்கூத்து ; இதனை * "வாடா வள்ளி வயவர்" என்புழியுங் காண்க.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—ஆற்றாமையறிவித்தல்.

## பாலை.

[இது, உடன்போக்குநயப்பத் தோழி தலைமகட்குக் கூறியது.]

[தங்கான்முடக்கோவலனார்பாடியது.]

உசுஎ. தினைகிளி கடிதெனிற் பகலு மொல்லு
மிரவுநீ வருதலி னூறு மஞ்சுவல்
யாங்குச் செய்வாமெம் மிடும்பை நோய்க்கென
வாங்கியான் கூறிய வினைத்திற்குப் பிறிதுசெத்
தோங்குமலை நாட னுயிர்த்தோன் மன்ற
வைதேய் கம்ம யானே
கழிமுதுக் குறைமையும் பழியுமென் றிசினே.

(இ-ள்.):—'தினையிடத்துக் கிளியைக் கடிவேனெனில் பகலும் கூடும் ; இரவில் நீ வருதலால் (வரும்) ஊற்றையும் அஞ்சுவேன் ;(ஆதலால்,) எவ்வகைசெய்வோம் எம்துயர்தரும் நோய்க்கு ?' என்று யான் கூறிய அத்தினைக்கே வேறுகருதி மலைநாடன் பெருமூச்செறிந்தனன் ; துணிவாக அழகு கெடுவேன் யான்தான் ; (என்கருத்தின்படி உடன்போதல்) மிக்கஅறிவுடைமையாகும் ; (உங்கள்கருத்தின்படி) பழி தருவதாகும்என்றேன்.—(எ-று.)

எனவே, உடன்போக்கை யன்றி வேறு கூடுமாறு இன்றென்றுளாம்.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—உடன்போக்குநேர்வித்தல்.

## பாலை.

[இது, பிரிவிடை ஆற்றாளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.]

* தொல் - பொருள் - புறத்—கூ.

[கோற்றன் பாடியது.]

உசஅ. விடர்முகை யடுக்கத்து விறல்கெழு சூலிக்குக்
கடனும் பூணாது கைந்நூல் யாவாம்
புள்ளு மோராம் விரிச்சியு நில்லா
முள்ளலு முள்ளா மன்றே தோழி
யுயிர்க்குயி ரன்ன ராகலிற் றம்மின்
றிமைப்புவரை யமையா நம்வயின்
மறந்தாண் டமைதல் வலியோர் மாட்டே.

(இ-ள்.):—காடுகாளுக்குப் பரவுக்கடனை ஏற்காமல், கையிடத்துக் (காப்பு) நாணைக் கட்டோம்; புட்குறிகளையும் ஆராயோம்; நற்சொற்களைக்கேட்டும்நின்றிலோம்; (மற்றும்ஆயவேண்டிய பிறவற்றைக்) கருதவுங்கருதோம் அன்றே? தோழி! உயிர்க்கும்உயிரன்னர் ஆதலின், அவர்தம்மையின்றி இமைக்குமளவும் உயிர்வாழாத நந்திறத்து மறத்தலைக்கொண்டு (பிரிந்த) அவ்விடத்தில் விரும்பியுறைதல் வல்லோரானார்திறத்து.—(எ-று.)

விரிச்சி - பெருமுது பெண்டிர் நற்சொற்கேட்டு நிற்றலாய நிமித்தங்காணல்; * "பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்ப" என்றார் முல்லைப் பாட்டினும்.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—ஆற்றுமாறறிவித்தல்.

## நெய்தல்.

[இது, சிறைப்புறம்,]

[வெண்பூதியார் பாடியது.]

உககூ. பசப்பென் மேனி யதுவே நயப்பவர்
நாரி னெஞ்சத் தாரிடை யதுவே
செறிவுஞ் சேணிகந் தன்றே யறிவே
யாங்கட் செல்க மெழுகென வீங்கே
வல்லா கூறி யிருக்கு முள்ளிலைத்
தடவுநிலைத் தாழைச் சேர்ப்பற்
கிடமற் றோழியென் னீரோ வெனினே.

* முல்லைப்பாட்டு - கக.

(இ-ள்.):—பசலை என்மேனியிடத்தது ; விருப்பம் அவரன்பற்ற நெஞ்சமாகிற அரிய வழியிற்பட்டது ; அடக்கமும் சேய்மைக்கண் அகன்றிட்டது ; அறிவுதான் (அவர் உறையும்) அவ்விடத்துச் செல்வோம் எழுகவென்று இங்குக் கூறி யிருக்கும் ; கடற்றுறைவனுக்கு இடமாகும் என்பண்போவென்றால்.—(எ-று.)

எனவே, வரைந்து கொள்ளுமாறு செய்வாய், இவ்வொழுகலாறு ஆற்றாமையை நீக்கிலது ஆதலின் என்றாளாம்.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—ஆற்றாமையறிவித்தல்.

## முல்லை.

[இது, பருவவரவின்கண் கிழத்தி தோழிக்கு உரைத்தது.]

[ஒக்கூர்மாசாத்தி பாடியது.]

௨௨௦. பழமழைக் கலித்த புதுப்புன வரகி
னிரலை மேய்ந்த குறைத்தலைப் பரவை
யருவிசேர் மருங்கிற் பூத்த முல்லை
வெருகுசிரித் தன்ன பசுவீ மென்பிணிக்
குறுமுகை யவிழ்ந்த நறுமலர்ப் புறவின்
வண்டுசூழ் மாலையும் வாரார்
கண்டிசிற் றோழி பொருட்பிரிந் தோரே.

(இ-ள்.):—புதுப்புனத்து வரகின் ஆண்மான் மேய்ந்ததனால் குறையுள்ள தலையையுடைய பரப்பில், அருவி சேர்ந்தவிடத்துப் பூத்த முல்லையின் சிறுமுகை மலர்ந்த நறுமலரையுடைய முல்லைநிலத்தில், (தாதையூத) வண்டுகள்சூழும் மாலைக்காலத்தும் வாராராயினார், காண்பாய், தோழி ! பொருளைக்கருதிப் பிரிந்தார்.—(எ-று.)

எனவே, குறித்த காலம் வந்தும் வந்திலர் என்செய்வல் ? என்றாளாம்.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—ஆற்றாமையறிவித்தல்.

## முல்லை.

[இது, பிரிவிடைப் பருவவரவின்கண் வற்புறுத்துந் தோழிக்குக் கிழத்தி உரைத்தது.]

[உறையூர் முதுகோற்றன் பாடியது.]

உஉக. அவரோ வாரார் முல்லையும் பூத்தன
பறியுடைக் கையர் மறியினத் தொழியப்
பாலொடு வந்து கூழொடு பெயரும்
யாடுடை யிடைமகன் சென்னிச்
சூடிய வெல்லாஞ் சிறுபசு முகையே.

(இ-ள்.):—அவரோ வாராராயினர்; முல்லையும் பூத்திட்டன; பறியினைக்கொண்ட கையினராய ஆயர் மறியினத்தோடு செல்லப், பாலோடு (மனையிடம்) வந்து கூழோடு மீண்டு செல்லும் ஆயர்மகன் சென்னியிற் சூடியவைமுற்றும் சிறிய பசியமுல்லை முகைகளே.-(எ-று.)

பறி - மீன்பிடிக்குங் கருவி. மறி - யாட்டின் ஒருவகை. கூழ் - உணவு; இழிந்தாருண்ணுங் கூழுமாம்.

மெய்ப்பாடும், பயனும்—முன்னையவே.

## குறிஞ்சி.

[இது, பெட்ட வாயில்பெற்று இரவுவலியுறுத்தது.]

[சிறைக்குடியாந்தையார் பாடியது.]

உஉஉ. தலைப்புணைக் கொளினே தலைப்புணைக் கொள்ளுங்
கடைப்புணைக் கொளினே கடைப்புணைக் கொள் [ளும்
புணைகை விட்டுப் புனலோ டொழுகி
னாண்டும் வருகுவள் போலு மாண்ட
மாரிப் பித்திகத்து நீர்வார் கொழுமுகைச்
செவ்வெரி நுறழுங் கொழுங்கடை மழைக்கட்
டுளிதலைத் தலைஇய தளிரன் னோளே.

(இ-ள்.):—(இவள்) முதற்படவிடத்தைக் கொள்ளின், (தானும்) முதற்படவிடத்தைக் கொள்வாள்; (இவள்) கடைப்படவிடத்தைக் கொள்ளின், (தானும்) கடைப்படவிடத்தைக் கொள்வாள்; (இவள்) புணையைக் கைவிட்டு நீரில் இழியின் அங்கும் (அங்ஙனமே தானும்

இழிந்து) வருவாள்போலும்; மழைத்துளி தலையிடத்துப் பெய்துவிட்ட தளிரினையன்னாள்.—(எ-று.)

தலைமகள் இவள்குறிப்பின் வழியினள் என்பான், 'தலைப்புணை... போலும்' என்றான். பித்திகம் - சிறுசண்பகம். பெட்ட வாயில் - தான் விழைந்த பாங்கியாகிய வாயில். இரவு - குறைகூறி இரத்தல்.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—ஆற்றாமை நீங்கல்.

## குறிஞ்சி.

[இது, வரைவிடை வேறுபட்ட கிழத்தியது வேறுபாடுகண்டு வற்புறுத்துந் தோழிக்குக் கிழத்தி கூறியது.]

[மதுரைக் கடையத்தார்மகன் வெண்ணாகன் பாடியது.]

௨௨௫. பேரூர் கொண்ட வார்கலி விழவிற்
செல்வாஞ் செல்வா மென்றிவ ணல்லோர்
நல்ல பலவாற் றில்லே
தழலுந் தட்டையு முறியுந் தந்திவை
யொத்தன நினக்கெனப் பொய்த்தன கூறி
யன்னை யோம்பிய வாய்நல
மென்னைக் கொண்டான் *யாமின்ன பாவினியே.

(இ-ள்.):—இவ்வூர் எடுத்துக்கொண்ட மணவிழவோடு செல்வோம் செல்வோம் என்று இவ்விடத்து நல்லோராகிய அவர், சிறந்த பலவாய தழலும் தட்டையுமாகிய கிளிகடிகருவிகளையும், தழையையுந் தந்து, இவை ஒத்தவை உனக்கு எனப் பொய்யானவற்றைக்கூறி, அன்னை பாதுகாத்த நலத்தை என்னிடங்கொண்டான்; (ஆதலின், வருந்துகின்றேம்.)—(எ-று.)

ஆல், தில், ஏ - அசைநிலைகள். † "தழலுந் தட்டையுங் குளிரும்" என்பதனுரைகொண்டு, தழல், தட்டை இவற்றின் வேறுபாட்டை யுணர்க. 'நல்லோர்' 'கொண்டான்' என மயங்கக்கூறியது செற்றத்தால்.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—ஆற்றாமையறிவித்தல்.

---

* 'யாமின்னபா வினியே' இதன் பொருள் புலப்பட்டிலது.

† குறிஞ்சிப்பாட்டு—௪௩.

## பாலை.

[இது, பிரிவிடை இறந்துபடுமெனக் கவன்ற தோழி கேட்பக் கிழத்தி உரைத்தது.]

[கூவன்மைந்தன் பாடியது.]

உஉச. கவலை யாத்த வவல நீளிடைச்
சென்றோர் கொடுமை யேற்றித் துஞ்சா
நோயினு நோயா கின்றே கூவற்
குராலான் படுதுய ரிரவிற் கண்ட
வுயர்திணை யூமன் போலத்
துயர்பொறுக் கல்லேன் றோழி நோய்க்கே.

(இ-ள்.):—துயர்தரும் வழியிடைச் சென்றோர்கொடுமையை உயர்வாகக் கருதித் துயிலாது வருந்துவதன்மேலும் வருத்தம் உண்டாகின்றது; தோழி! கிணற்றகத்து ஆன் (விழுந்து) இறக்குந் துயரத்தை இரவிற் பார்த்த உயர்குலத்துப் பிறந்த ஊமனைப்போல (க்கூறலாகாத) துயரத்தைப் பொறுக்கமாட்டாதவளானேன்; (பிரிவாலும் அவர் சென்ற ஆற்றின்கொடுமையாலும் உண்டான) நோயைக்கருதி.— (எ-று.)

குரால் - ஈண்டு விலங்கின் பெண்ணிடத்து வந்தது; * "குராலொடு முரல" என்புழிப் பறவைப்பெடையிடத்து வந்தமை காண்க.

மெய்ப்பாடும், பயனும்—முன்னையவே.

## குறிஞ்சி.

[இது, வரைவிடைவைத்துப் பிரிவாற்குத் தோழி சொல்லியது.]

[கபிலர் பாடியது.]

உஉரு. கன்றுதன் பயமுலை மாந்த முன்றிற்
றினைபிடி யுண்ணும் பெருங்கன் னாட
கெட்டிடத் துவந்த வுதவி கட்டில்
வீறுபெற்று மறந்த மன்னன் போல
நன்றி மறந்தனை யாயின் மென்சீர்க்
கலிமயிற் கலாவத் தன்னவிவ
ளொலிமென் கூந்த லுரியவா நினக்கே.

---

* மதுரைக்காஞ்சி—கஎ0.

(இ-ள்.):—கன்று தன்முலையை உண்ண முன்றிலிடத்துத் தினையைப் பிடி உண்ணுகின்ற மலைநாட! கெட்டவிடத்து மகிழ்ந்து செய்த உதவியை சிங்காதனச்சிறப்பை [அரசவுரிமையை] எய்தி மறந்திட்ட மன்னவனைப்போல, (யான் சேர்த்திட்ட) செய்ந்நன்றியை மறந்திட்டாயானால் இவள்கூந்தல் உரியவாகும் உனக்கு.—(எ-று.)

கெட்டிடத்து - விகாரம். 'கேட்டிடத்து' என்றும் பாடம். கூந்தல் உரியவாம் - நயப்பறிவித்தற்குக் கூந்தலைக்கோதலாகிய செய்கை உரியவாம்; ஈண்டுப் பிறகுறிப்பு; 'மறந்தனையாயின்' என்றதனால்.

இறைச்சி:—'கன்று......நாடன்' என்றதனானே, நின்னூழில் சிதையாமற் பார்த்து எங்களுக்கு உயிரன்ன இவளை வருத்தி எங்களுக்குக் கேடுண்டாக்காது வரைந்துகொள் என்பதாம்.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—செலவழுங்குவித்தல்.

## நெய்தல்.

[இது, வரைவிடை ஆற்றாளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.]

[மதுரை எழுத்தாளன் சேந்தன்பூதன் பாடியது.]

உஉசு. பூவொடு புரையுங் கண்ணும் வேயென
விறல்வனப் பெய்திய தோளும் பிறையென
மதிமயக் குறூஉ நுதலு நன்று
நல்லமன் வாழி தோழி யல்கலுங்
தயங்குதிரை பொருத தாழை வெண்பூக்
குருகென மலரும் பெருந்துறை
விரிநீர்ச் சேர்ப்பனொடு நகாஅ வூங்கே.

(இ-ள்.):—கண்ணும், தோளும், நுதலும் பெரிதும் நல்லவாயின தோழி! தாழையின் மலர் குருகைப்போல மலரும் துறையையுடைய கடற்றுறைவனோடு நகுதற்குமுன்.—(எ-று.)

சேர்ப்பனொடு நகாஅவூங்கு கண்ணும் தோளும் நுதலும் நல்ல, மன் என்றுமுடிவுகொள்க. மன் - கழிவு.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—ஆற்றாமையறிவித்தல்.

## நெய்தல்.

[இது, சிறைப்புறம்.]

[ஓதஞானி பாடியது.]

உ௨௭. பூவளைந் தன்ன பொலஞ்சூட்டு நேமி
வாண்முகந் துமிப்ப வள்ளிதழ் குறைந்த
கூழை நெய்தலு முடைத்திவட்
டேரோன் போகிய கான லானே.

(இ-ள்.):—பூவளைந்தாற்போன்ற உச்சிக்கொண்டையையுடைய நேமிப்புள்ளின் முகம் துணித்தலால், இதழ் குறைந்த கூழையான நெய்தலை உடையது இங்குத் தேரினன் [தலைமகன்] சென்றிட்ட கானலிடம்.—(எ-று.)

நேமி - சக்கரவாகம். முகம் - ஆகுபெயர். 'நேமி......கானலான்' என்றது, மணந்து உடனுறைந்து மகிழவேண்டிய தலைமகன் களவிற் கலந்து வருத்திட அழகழிந்த தோழியையும் உடையது கானலிடம் என்று தலைமகள்வாட்டத்தைக் குறப்பான் உணர்த்தியது.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—வரைவுகடாதல்.

## நெய்தல்.

[இது, கடிநகர்வேறுபடாது நன்காற்றினையென்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.]

[செய்திவள்ளுவன் பெருஞ்சாத்தன் பாடியது.]

உ௨௮. வீழ்தாழ் தாழை யூழ்உறு கொழுமுகை
குருகுள ரிடத்தின் விரிபுதோ டவிழுங்
கான னண்ணிய சிறுகுடி முன்றிற்
றிரைவந்து பெயரு மென்பதந் துறந்து
நெடுஞ்சே ணாட்டா ராயினு
நெஞ்சிற் கணியரோ தண்கட னாட்டே.

(இ-ள்.):—விழுதுகள் தாழ்ந்த தாழையின் முதிர்தலுற்ற முகை, குருகு (இறகை) வகிருமிடத்து விரிந்து இதழ்கள் அலரும் கான லிடத்துப் பொருந்திய குடியிருப்பின் வாயிலில், அலைகள் வந்து மீளும் மாலைக்காலத்துப் பிரிந்து மிகவும் சேய்மைக்கண்ணுள்ள நாட்டிடத் தாராயினும் நெஞ்சிற்கு அண்மையினரோ குளிர்ந்த கடனாட்டில்?—(எ-று.)

எனவே, உள்ளி ஆற்றி உள்ளேனாயினேன் என்றாளாம். 'என்ப கத்துறந்து' என்றும் பாடம்.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—மகிழ்வித்தல்.

## பாலை.

[இது, இடைச்சுரத்துக் கண்டார் தம்முள்ளே சொல்லியது.]

[மோதாசனுர் பாடியது.]

௨௨௯. இவனிவ ளைம்பால் பற்றவு மிவளிவன்
புன்றலை யோரி வாங்குநள் பரியவுங்
காதற் செவிலியர் தவிர்ப்பவுந் தவிரா
தேதில் சிறுசெரு வுறுப மன்னோ
நல்லைமன் றம்ம பாலே மெல்லியற்
றுணைமலர்ப் பிணைய லன்னவிவர்
மணமகி ழியற்கை காட்டி யோயே.

(இ-ள்.):—இவன் இவள்கூந்தலைப் பற்றவும், இவள் இவன்மயிரைப் பற்றியவளாய் விழையவும் காதலையுடைய செவிலித்தாயர் விலக்கவும் தவிராமல், தொடர்பற்ற சிறுபூசலைக் கைக்கொள்வர்; இணையான மலர்மாலையைப்போன்ற இவர்கள் மணத்தைக் கண்டு மகிழும் இயல்பைக்காட்டினாய் (ஆதலால்,) ஊழே! துணிவாக மிகவும் நல்லையானாய்.—(எ-று.)

இஃதிடைச்சுரத்து வரைந்துகொண்டதைக் கண்டார் கூறியது. மன்றம்ம - விகாரம். 'மணமகிழ்' என்றும் பாடம்.

மெய்ப்பாடு—உவகை. பயன்—மகிழ்தல்.

## நெய்தல்.

[இது, வலிதாகக் கூறிக் குறைநயப்பித்தது.]

[அறிவுடைநம்பி பாடியது.]

௨௩0. அம்ம வாழி தோழி கொண்கன்
றானது துணிகுவ னல்லன் யானென்
பேதை மையாற் பெருந்தகை கெழுமி
நோதகச் செய்ததொன் றுடையேன்கொல்லோ
வயச்சுறா வழங்கு நீர்த்தவச்
சின்னா ளின்ன வரவறி யானே.

(இ-ள்.):—கேட்பாயாக, தோழி! கொண்கன்றான் அவ்வரவொழி தலைத்துணிபவனல்லன்; யான் என்னறியாமையால் பெறத்தக்க தகுதியைப் பொருந்தி நோ மிகும்படி செய்ததொன்றை [குறைமறுத்திட்டமையை] உடையேன்; (ஆதலால்,) வலிய சுறா வழங்கும் நீரிடை மிகச்சிலநாள் இத்தகைய வரவை அறியாளாயினான்.—(எ-று.)

'பெறுதகை......உடையேன்' என்றது, வரைவுகடாவினமையை.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—குறைநயப்பித்தல்.

## மருதம்.

[இது, வாயிலாகப் புக்க தோழிக்குத் தலைமகள் சொல்லியது.]

[பாலைபாடிய பெருங்கடுங்கோ பாடியது.]

உ௩௧. ஓரூர் வாழினுஞ் சேரி வாரார்
சேரி வரினு மார முயங்கா
ரேதி லாளர் சுடலை போலக்
காணாக் கழிப மன்னே நாணட
நல்லறி விழந்த காமம்
வில்லுமிழ் கணையிற் சென்றுசேட் படவே.

(இ-ள்.):—ஒரூரிடத்தில் வாழ்ந்தாலும் (நம்) சேரிக்கண் வாரார்; (நம்) சேரிக்கண் வந்தாலும் மனமார முயங்கார்; (அவர்தாம்,) தொடர்பற்றார்தம் சுடலையைப்போல நம்மைக் காணாமற் செல்வர்; (ஆதலால்) நல்ல அறிவை இழந்த காமம் வில்லுந்திய கணையினைப்போலச் சென்று சேட்படுவதாக.—(எ-று.)

'ஒரூஉ வாழினும்,' 'நாணிட' என்பன பாடபேதங்கள். அன்பற்றவரைப் பற்றி நிற்றலான், 'நல்லறிவிழந்த காமம்' என்றாள்.

மெய்ப்பாடு—வெகுளி. பயன்—வாயினேர்தல்.

## பாலை.

[இது, பிரிவிடைத் தோழி வற்புறுத்தியது.]

[ஊண்பித்தை பாடியது.]

உஙஉ. உள்ளார் கொல்லோ தோழி யுள்ளியும்
வாய்ப்புணர் வின்மையின் வாரார் கொல்லோ
மரற்புகா வருந்திய மாவெருத் திரலை
யுரற்கால் யானை யொடித்துண் டெஞ்சிய
யாஅ வரிநிழற் றுஞ்சு
மாயிருஞ் சோலை மலையிறந் தோரே.

(இ-ள்.):—கருதார்கொல்? தோழி! கருதியும், (மீளற்காம்)வழி கூடாமையின் வாரார்கொல்? மணல்வழியிற் புகுந்து வருந்திய ஆண்மான், யானை ஒடித்துண்டு குறைந்த யாமரத்தின் செறியாத நிழலிற் றுயிலும் சோலையையுடைய மலையிடைச் சென்றோர்.—(எ-று.)

'அருநிழல்' என்றும் பாடம். மா இரு - கரிய பெரிய; அன்றி, மீமிசையெனலுமாம்.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—ஆற்றுவித்தல்.

## முல்லை.

[இது, பட்டபின்றை வரையாது சென்று வினைமுற்றி மீளுந் தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது.]

[பேயன் பாடியது.]

உஙங. கவலை கெண்டிய கல்வாய்ச் சிறுகுழி
கொன்றை யொள்வீ தாஅய்ச் செல்வர்
பொன்பெய் பேழை மூய்திறந் தன்ன
காரெதிர் புறவி னதுவே யுயர்ந்தோர்க்கு
நீரொடு சொரிந்த மிச்சில் யாவர்க்கும்
வரைகோள வறியாச் சொன்றி
நிரைகோற் குறுந்தொடி தந்தை யூரே.

(இ-ள்.):—கல்விடத்துச் சிறுகுழியில் கொன்றையின் மலர்கள் பரந்து செல்வர்தம் பொன்பெய்த பெட்டியின் வாய்திறந்தாற்போன்ற, கார்ப்பருவத்தை எற்றுக்கொண்ட முல்லைநிலத்திடத்தது; உயர்ந்தவர்க்கு நீரோடு கொடுத்தவற்றின் குறை, எவர்க்கும் அளவிடலாகா உணவாகும் நிரைத்த அழகிய குறியவளையினளின் தந்தையூர்.-(எ-று.)

'பொன்வீ,' 'வரைகோள்,' 'தொடித்தடக்கை' - பாடபேதங்கள். 'கவலை......புறவினது' என்றது, உற்ற குறையை எவரும் உணரலாகா வாறு நிறைக்கும் புதுவருவாயையுடையதென ஊரின் தகுதியை உணர்த்தியவாறும்.

மெய்ப்பாடு—உவகை. பயன்—பாகன் விரைந்து தேர்விடுவானுதல்.

## முல்லை.

[இது, பருவவரவின்கண் தோழிக்குக் கிழத்தி உரைத்தது.]

[மிளைப்பெருங்கந்தன் பாடியது.]

௨௩௪. சுடர்செல் வானஞ் சேப்பப் படர்கூர்ந்
தெல்லுறு பொழுதின் முல்லை மலரு
மாலை யென்மனார் மயங்கி யோரே
குடுமிக் கோழி நெடுநக ரியம்பும்
பெரும்புலர் விடியலு மாலை
பகலு மாலை துணையி லோர்க்கே.

(இ-ள்.):—வானம் செந்நிறத்தையடைய விளக்கமுறும் பொழுதில் முல்லை மலர்ந்திடும் (காலந்தான்) மாலைக்காலம் என்பர், மயக்கமடைந்தோர்; கோழிச்சேவல் நகரிடத்தே கூவும் விடியற்காலமும் மாலையாகும், நடுப்பகலும் மாலையாகும் துணையற்றூர்க்கு.—(எ-று.)

தனித்தார்க்கு எல்லாப்பொழுதும் இன்னல்விளைவிப்பதாம் என்பதை உணராமையின், 'மயங்கியோர்' என்றாள்.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—ஆற்றுமையுணர்த்தல்.

## பாலை.

[இது, வரையாது பிரிந்து வருவான் வாடைக்குரைப்பானைப் பாங்கற்கு உரைத்தது.]

[மாயேண்டன் பாடியது.]

உருரு. ஓம்புமதி வாழியோ வாடை பாம்பின்
றாங்குதோல் கடுக்குந் தூவெள் ளருவிக்
கல்லுயர் நண்ணி யதுவே நெல்லி
மரையின மாரு முன்றிற்
புல்வேய் குரம்பை நல்லோ ளூரே.

(இ-ள்.):—நெல்லித்தழையை மரைமானினம் உண்ணும் முன்றிலையுடைய நல்லாளூர்தான், பாம்பின் உரித்தோலைப்போன்ற அருவியையுடைய உயர்ந்த மலையிற் பொருந்தியது ; வாடையே! ஆண்டுச் சேறலைப் பாதுகாத்திடுதி.—(எ-று.)

அருவியே, குளிர்ந்து தனித்த அவளை வருத்திடும் ; நீயுங் கூடின், பொருளாதலின், வாடை ! ஓம்புமதி என்றாளும்.

மெய்ப்பாடு—இளிவரல். பயன்—ஆற்றாமை நீங்கல்.

## நெய்தல்.

[இது, வரைவிடைவைத்துப் பிரிவான் இவள் வேறுபடாமை ஆற்றுவி என்றாற்குத் தோழி நகையாடி உரைத்தது.]

[நரிவெரூஉத்தலையார் பாடியது.]

உருசா. விட்டென விடுக்குநாள் வருக வதுநீ
நேர்ந்தனை யாயிற் றந்தனை சென்மோ
குன்றத் தன்ன குவவுமண லடைகரை
நின்ற புன்னை நிலந்தோய் படுசினை
வம்ப நாரை சேக்குந்
தண்கடற் சேர்ப்பநீ யுண்டவென் னலக்கே.

(இ-ள்.):—(கருதியவை முடிந்து) விட்டதனால், (நின்னுள்ளம் மீள) விடுக்கும் நாளில் (எம்மிடம்) வருவாயாக ; (பிரியும்) அதனை நீ உடன்பட்டாயானால், கரையிடத்துப் புன்னைக்கிளையிற் புதுநாரைகள் தங்குங்கடற்சேர்ப்ப ! நீ இளைத்த என்னலத்தைத் தந்தனையாய்ச் செல்லுதி.—(எ-று.)

'நொந்தனை' என்றும் பாடம். 'என்னலன்' என்றது, ஒற்றுமையால்.

உள்ளுறை:— 'புன்னை......சேக்கு' மாறுபோல, கருத்தின்படி தாழ்ந்த தோழியின் நெஞ்சத்திற்பிரிந்து துயர்தரும் புதிய நீ தங்கினை என்பதாம்.

மெய்ப்பாடு—நகையைச் சார்ந்த பெருமிதம். பயன்—செலவழுங் குவித்தல்.

## பாலை.

[இது, பொருண்முற்றி மீள்வான் தேர்ப்பாகனுக்கு உரைப்பானாய்த் தன்னெஞ்சிற்கு உரைத்தது.]

[அள்ளூர்நன்முல்லை பாடியது.]

உ௯எ. அஞ்சுவ தறியா தமர்துணை தழீஇ
நெஞ்சுநணைப் பிரிந்தன் றாயினு மெஞ்சிய
கைபிணி நெகிழினஃ தெவனோ நன்றுஞ்
சேய வம்ம விருவா மிடையே
மாக்கடற் றிரையின் முழங்கி வலனேர்பு
கோட்புலி வழங்குஞ் சோலை [வே.
யெனைத்தென் றெண்ணுகோ முயக்கிடை மலை

(இ-ள்.):—(நெஞ்சே!) அஞ்சுதலை அறியாமல் விரும்புந் துணையைத் தழுவிக்கொண்டு நெஞ்சு (நோ) உண்ணும்படி பிரிந்திலேனாயினும், (வலி) குறைந்த கையின் பிணிப்புத் தளரின், அத்தளர்ச்சி என்னை பெரிதும் (எங்களுக்குத் துயர்தருவதாயிற்று?) சேய்மையையுடையன எங்களிருவருக்கும் இடையிலுள்ள வழிகள்; புலி வழங்கும் (இச்) சோலையில், எத்தகையது என்றுகருதுவேன் கூட்டக்காலத்து உண்டான (அம்) மலைவை?—(எ-று.)

மெய்ப்பாடு—இளிவரல். பயன்—ஆற்றாமை நீங்கல்.

## மருதம்.

[இது, தலைமகன் பரத்தையின் மறுத்தந்து வாயில்வேண்டித் தோழியிடைச்சென்றுதெளிப்பான்புக்காற்குத் தோழி சொல்லியது.]

[துன்றியன் பாடியது.]

உ௯அ. பாசவ லிடித்த கருங்கா ழுலக்கை
யாயகதிர் நெல்லின் வரம்பணைத் துயிற்றி
யொண்டொடி மகளிர் வண்ட லயருந்
தொண்டியன்ன வென்னலந் தந்து
கொண்டனை சென்மோ மகிழ்நநின் சூளே.

(இ-ள்.):—அவலையிடித்த உலக்கையை நெல்லின் அணையிற் கிடத்தி மகளிர் வண்டலாட்டை அயரும் 'தொண்டி' என்னும் ஊரைப் போன்ற எனது நலத்தைத் தந்து கொண்டுசெல், மகிழ்ந! நினது சூளுறவை.—(எ-று.)

நெல்லின் வரம்பு - நெல்லால் வரம்புபோல நீளமாகக் குவிக்கப் பட்ட குவியல். நலத்தைத் தந்து சூளைக் கொண்டுசெல் என்றது, பண்டமாற்றைப்போன்ற நயம்கொடுத்தல்காண்க. 'பாசவல்.....நலம்' என்றது, எங்களை வேறுபடச்செய்யும் நின்னை ஏற்றுக்கொள்ளும் பேதைமையை உடையோமென்று கருதினை என்பதாம். 'எந்நலம்' என்றது, ஒற்றுமைகருதி.

மெய்ப்பாடு—நகை. பயன்—வாயின் மறுத்தல்.

## குறிஞ்சி.

[இது, சிறைப்புறம்.]
[ஆசிரியன் பெருங்கண்ணன் பாடியது.]

உ௩௯. தொடிநெகிழ்ந் தனவே தோள்சா யினவே
விடுநா ணுண்டோ தோழி விடர்முகைச்
சிலம்புடன் கமழு மலங்குலைக் காந்த
ணறுந்தா தூதுங் குறுஞ்சிறைத் தும்பி
பாம்புமிழ் மணியிற் றோன்று
முந்தூழ் வேலிய மலைகிழ வோற்கே.

(இ-ள்.):—வளையல்கள் நெகிழ்ந்திட்டன; தோள்கள் வாட்ட மடைந்தன; ஒழியும் நாணம் நம்மிடம் உள்ளதோ?; தோழி! தாதை ஊதும் தும்பி பாம்பு உமிழும் மணியைப்போலத் தோன்றும் முந்தும் முறைமையாகிய காவலையுடைய மலைக்குரியான்றிறத்து.—(எ-று.)

உடன்கொண்டு செல்க என்றேனும், வரைந்துகொள்க என்றேனும் சொல்ல நாணம் ஒருப்படுத்தாமையின், 'விடுநாணுண்டோ' என்றாள்.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—ஆற்றாமையறிவித்தல்.

## முல்லை.

[இது, வரைவிடை ஆற்றாளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.]

[கொல்லனழிசி பாடியது.]

உசு0. பனிப்புத லிவர்ந்த பைங்கொடி யவரைக்
கிளிவா யொப்பி னொளிவிடு பன்மலர்
வெருக்குப்பல் லுருவின் முல்லையொடு கஞலி
வாடை வந்ததன் றலையு நோய்பொரக்
கண்டிசின் வாழி தோழி தெண்டிரைக்
கடலாழ் கலத்திற் றோன்றி
மாலை மறையுமவர் மணிநெடுங் குன்றே.

(இ-ள்.):—அவரைமலர் முல்லைமலரோடு செழிக்குமாறு வாடைக் காற்று வந்ததன்மேலும் துயர்மிகும்படி, கடலில் ஆழுங் கலத்தினைப் போல மாலையில் மறைந்திடும் அவர்குன்றும்; தோழி! காணுதி.-(எ-று.)

முல்லை சிறந்தமையின் ஒடுவுருபேற்றது. துயர்மிகும் மாலையில் பகலில் ஆற்றுவிக்கும் குன்றும் மறைந்திடும் எவ்வாறாற்றுவது ? என்றாளாம்.
மெய்ப்பாடு—இளிவரல். பயன்—ஆற்றாமையறிவித்தல்.

## குறிஞ்சி.

[இது, பிரிவிடை ஆற்றாளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.]

[கபிலர் பாடியது.]

உசக. யாமெங் காமந் தாங்கவுந் தாந்தங்
கெழுதகை மையி னழுதன தோழி
கன்றாற்றுப் படுத்த புன்றலைச் சிறாஅர்
மன்ற வேங்கை மலர்பத நோக்கி
யேறா திட்ட வேமப் பூசல்
விண்டோய் விடரகத் தியம்புங்
குன்ற நாடற் கண்டவெங் கண்ணே.

(இ-ள்.):—யாம் எமது காமத்தைத் தாங்கவும் தாம் தமது உரிமையினால் அழுதிட்டன ; தோழி ! சிறுவர் வேங்கை மலரும் செவ்வியைப் பார்த்துச் செய்த ஆரவாரம் மலைமுழஞ்சிற் சென்று ஒலிக்கும் குன்றநாடனைக் கண்ட எம்கண்கள்.—(எ-று.)

'கெழுதகை மையினன்,' 'மலர்ப்பதம்'—பாடபேதங்கள். 'கன்று ......நாடன்' என்றது, பிரிவிடை என்வேறுபாடுகண்டு ஊரார்தம்முளெடுக்கும் அலர் ஊர்முற்றும்பரவுமாறு செய்திட்டான் என்பதாம்.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—ஆற்றாமையறிவித்தல்.

## முல்லை.

[இது, கற்புக்காலத்துக் கடிநகர்ச்சென்றசெவிலித்தாய் நற்றாய்க்குச் சொல்லியது.]

[குழற்றத்தன் பாடியது.]

௨௪௨. கானங் கோழி கவர்குரற் சேவ
லொண்பொறி யெருத்திற் றண்சித ருறைப்பப்
புதனீர் வாரும் பூநாறு புறவிற்
சீறூ ரோளே மடந்தை வேறூர்
வேந்துவிடு தொழிலொடு செல்லினுஞ்
சேர்ந்துவர லறியாது செம்மற் றேரே.

(இ-ள்.):—கானங்கோழிச்சேவலின் கழுத்திற்றிவலைகள் உறைக்கும்படி புதலிடத்துத் தேனீர் ஒழுகும் பூக்கள் தோன்றும் முல்லைநிலத்திற் சிற்றூரினள் (நம்) மகள்; வேற்றுரைக்குறித்து வேந்தன் ஏவிவிட்ட வினையோடு சென்றாலும் (இரவில்) தங்கிவருதலை அறியாததாகும் (அச்) செம்மலின் தேர்தான்.—(எ-று.)

எனவே, அவள்கற்பு சென்ற வினையை அன்றே மீளுமாறு முற்றுவித்திடும் என்றாளாம். 'நுண்பொறி', 'அரியது', 'செம்மறேர்'—பாடபேதங்கள். * "சிற்பந்திகழ்......பொன்னின், கற்பந்தி வாய்வடமீனுங் கடக்கும் படிகடந்து, மிற்பந்தி வாயன்றி வைகல்செல் லாதவனீர்ங்களிறே" என்ற திருக்கோவையார்க்கருத்துஇதனோடொருபுடையொப்புமையுடைமை காண்க.

மெய்ப்பாடு—உவகை. பயன்—மகிழ்வித்தல்.

## நெய்தல்.

[இது, வன்புறையெதிரழிந்து சொல்லியது.]

* திருக்கோவையார்...௩௦௫.

[நம்பிகுட்டுவன் பாடியது.]

உசங. மானடி யன்ன கவட்டிலை யடம்பின்
றார்மணி யன்ன வொண்பூக் கொழுதி
யொண்டொடி மகளிர் வண்ட லயரும்
புள்ளிமிழ் பெருங்கடற் சேர்ப்பனை
யுள்ளேன் றோழி படீஇயரென் கண்ணே.

(இ-ள்.):—அடம்பின் மலரைப் பறித்து மகளிர் வண்டலாட்டை யாடும் பறவைகள் ஒலிக்கும் கடற்சேர்ப்பனைக் கருதேன்; (ஆதலின்,) என்கண்கள் இனி உறங்குவனவாக.—(எ-று.)

தார்மணி - கிண்கிணிமாலைச்சதங்கைமணி. அவன் அன்பின்மை யாற் கருதேனாதலின், 'கண்படீஇயர்' என்றாள். 'மானடி......சேர்ப்பன்' என்றது, காட்சிக்கினிய வன்னலத்தை அழித்துக் கவலையின்றி மகிழ்கின்றான் என்பதாம்.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—ஆற்றாமையறிவித்தல்.

## குறிஞ்சி.

[இது, இரவுக்குறிவந்து ஒழுகாநின்ற தலைமகற்குத் தங்காவன் மிகுதியாற் புறப்பட்டு எதிர்கொள்ளப் பெறாதவழிப் பிற்றைஞான்று தோழி வரைந்துகொள்ளினல்லது இவ்வொழுகலாற்றின் இனிக்கூட லரிதெனவரைவுகடாயது.]

[கண்ணன் பாடியது.]

உசச. பல்லோர் துஞ்சு நள்ளென் யாமத்
துரவுக் களிறு போல்வந்
திரவுக் கதவு முயறல்
கேளே மல்லேங் கேட்டனெம் பெரும
வோரி முருங்கப் பீலி சாய
நன்மயில் வலைப்பட் டாங்கியா
முயங்குதொறு முயங்கு மறனில் யாயே.

---

* 'உருவுக் களிறு போல்வந் திரவுக் கதவு முயறல்' என அறுசீரடியாகப் பிரதிகளில் எழுதப்பட்டு இப்பாட்டு ஆறடிப்பாட்டாகக் காணப்படுகின்றது.

(இ-ள்.):—பலரும் துயிலும் நள்ளிரவில் யானைபோல வந்து கத விடுத்து (வந்தமையுணர) முயலுதலைக் கேளாதேமல்லோம் கேட் டோம்; பெரும! மயில் வலையில் அகப்பட்டாற்போல (எதிர்ப்படக் கூடாமைமையைக் குறித்து) யாம் வருந்துந்தோறும் முயங்குவாள் அறனற்ற அன்னை.—(எ-று.)

இனிய கூட்டத்தைக் கெடுத்தலின், 'அறனில்யாய்' என்றாள். ஓரி - அரிவையர் மயிரொழித்து எல்லாமயிர்க்கண்ணும் வருவது.

மெய்ப்பாடு—அச்சத்தைச் சார்ந்த பெருமிதம். பயன்—வரைவு கடாதல்.

## நெய்தல்.

[இது, வரைவிடை ஆற்றுளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.]

[மாலைமாறன் பாடியது.]

உசரு. கடலங் கான லாய மாய்ந்தவென்
னலமிழந் ததனினு நனியின் னாதே
வாள்போல் வாய கொழுமடற் றாழை
மானில வென்னூட்டு வேலி யாகு
மெல்லம் புலம்பன் கொடுமை
பல்லோ ரறியப் பரந்துவெளிப் படினே.

(இ-ள்.):—கானலிடத்து மகளிர்திரள் காத்திட்ட என்னலத்தை இழந்ததைக்காட்டிலும் மிகவும் துன்பந்தருவதாகும்; தாழை என் னூட்டிற்கு வேலியாக இருக்கும்; (இவ்விடத்தில்) மெல்லம்புலம்பன் கொடுமை பலரும் அறியும்படி பரவி வெளிப்பட்டுவிடின்.—(எ-று.)

எனவே, அலரை அஞ்சி ஆற்றுவல் என்றாளாம். 'தாழை...... வேலியாகும்' என்றது, சூழ்ந்தார் வருத்துமியல்பினர் என்பதாம்.

மெய்ப்பாடு—இளிவரலைச் சார்ந்த பெருமிதம். பயன்—ஆற்றுமா றறிவித்தல்.

## நெய்தல்.

[இது, சிறைப்புறம்.]

[கபிலர் பாடியது.]

உ௪௬. பெருங்கடற் றிரையது சிறுவெண் காக்கை
களிற்றுச் செவியன்ன பாசடை மயக்கிப்
பனிக்கழி துழவும் பானாட் டனித்தோர்
தேர்வந்து பெயர்ந்த தென்பதற்கொண்
டோரு மலைக்கு மன்னை பிறரும்
பின்னுவிடு கதுப்பின் மின்னிழை மகளி
ரிளையரு மடவரு முளரே
யலையாத் தாயரொடு நற்பா லோரே.

(இ-ள்.):—சிறுவெண்காக்கை களிற்றுக்காதைப்போன்ற (தாமரை) இலையைக் கெடுத்துக் கழியிடத்து இரையைத்தேடும் நடுப்பகலில் தனித்து ஓர்தேர் வந்து மீண்டது என்பர்; அதனைக்கொண்டு ஆராய்ந்து வருத்துவள் (என்னை) அன்னை; கூந்தலையும் அணிகலனையுமுடையாருள், [மகளிருள்,] இளையராய் மடைமையையுடையார்; (என்போல்)உள்ளார்கொல்?; வருத்தாத தாயரோடு நல்லவூழினரே யாவரர் பிறமகளிர்.—(எ-று.)

வெண்காக்கை - கழுத்திற் சிறிது வெண்மையையுடைய காக்கை; கருங்காக்கையும், வெண்குருகுமாகலாம்; கருமைவெண்மைகுறித்தலை, காராட்டை 'வெள்ளாடு' என்னும் வழக்கிடத்துங்காண்க.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—வரைவுகடாதல்.

## குறிஞ்சி.

[இது, கடிநகர்த்தெளிவுவிலங்கினமையறியத் தோழிகூறியது.]
[சேந்தம்பூதனார் பாடியது.]

உ௪௭. எழினி மிகவுடைய தீங்கனிப் படூஉந்
திறவோர் செய்வினை யறவ தாகுங்
கிளையுடை மாந்தர்க்குப் புனையுமா றில்லென
வாங்கறிந் திசினே தோழி வேங்கை
வீயா மென்சினை வீயுக யானை
யார்துயி லியம்பு நாடன்
மார்புரித் தாகிய மறுவி னட்பே.

(இ-ள்.):—'எழினி' என்பான் மிகவுடைய கனியின் தன்மையை உண்டாகச்செய்யும் [இனிய செய்கைகளை ஏற்றுக்கொள்ளும்] வல்லமையுடையோர் செய்யுந் தொழில்கள் அறத்தின் வழியிற் பட்டதாகும் ; சுற்றத்தினையுடைய மாந்தர்க்கு உதவியாகும் இல்லறம் ; என்று அவ்விடத்து அறிந்தேன் ; தோழி ! வேங்கைமலர் (மேல்) உதிரவும் யானை உறக்கத்தை உணர்த்தும் நாடன்மார்பு உரிமையானதால் குற்றமற்ற நட்பே (உளதாயிற்றோ ? இன்றே).—(எ-று.)

தலைமகன் அறத்தின் வழியினனாய் மகப்பயந்து சுற்றஞ் சுற்ற இனிது தங்குவான் எனக் களவிடை நம்மனையிற் கருதினேன் என்பாள், 'எழினி......புணையுமாரில்' என்றாள். கனி, இல் —ஆகுபெயர்கள். 'வேங்கை......நாடன்' என்றது, இனிய சொற்களாலுணர்த்தவும் உணராது ஒழுகுகின்றான் என்பதாம். இனி, இச்செய்யுள், வரைவுடன்பட்ட தோழி தலைமகட்குக் கூறியதற்கும் ஏற்குமாற்றை உய்த்துணர்க.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—ஆற்றுவித்தல்.

## நெய்தல்.

[இது, வரைவு நீட்டித்தவழி ஆற்றாளாகிய கிழத்தியைத் தோழி ஆற்றுவித்தது.]

[உலோச்சனார் பாடியது.]

உசஅ. அதுவர லன்மையோ வரிதே யவன்மார்
பிறுக வென்ற நாளே குறுகி
யீங்கா கின்றே தோழி கான
லாடரை புதையக் கோடை யிட்ட
வடம்பவிர் மணற்கோ டேர நெடும்பனை
'ய வாகுந் துறைவனைப
பெரிய கூறி யாயறிந் தனளே.

(இ-ள்.):—அவ்வரைவு வருதலில்லாமையோ உளதாவதில்லை ; அவன்மார்பை இறுகக்கூடலாம் என்ற நாள் குறுகவும் இவ்வகைத் துயர் உண்டாகின்றது ; தோழி ! கானலில் வலிய அரை புதையும்படி கோடையில் (கடல் கொணர்ந்து) குவித்திட்ட அடம்பு விளங்கும் மணலாலாகிய மலைபோன்ற திட்டு மேலேறுவதால், நெடிய பனை குறியனவாகும் துறைவன்திறத்துப் பெரியவற்றைக் கூறி நம் யாயும் அறிந்திட்டாள் ; (ஆதலின்.)—(எ-று.)

அரிது - இன்று என்று பொருள்தந்தது ; * "மனக்கவலை மாற்ற லரிது" என்புழிப்போல. குறுகி - குறுகவெனத்திரிக்க. களவிற் கலத்தலாகாவாறுஇற்செறித்து விரைவில்வரைவைக்கூடச்செய்வாள் அன்னை என்பாள், 'துறைவனே......அறிந்தனள்' என்றாள். 'கானல் .........துறைவன்' என்றது, இடையூற்றின் மிகுதியால் தானே நம் மனத்தின்படி தாழ்வான் என்பதாம்.

மெய்ப்பாடும், பயனும்—முன்னையவே.

## குறிஞ்சி.

[இது, வரைவிடைவைப்ப ஆற்றகிற்றியோவென்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.]

[கபிலர் பாடியது.]

உசகூ. இனமயி லகவு மரம்பயில் கானத்து
நரைமுக வூகம் பார்ப்பொடு பனிப்பப்
படுமழை பொழிந்த சார லவர்நாட்டுக்
குன்ற நோக்கினென் றோழி
பண்டை யற்றோ கண்டிசி னுதலே.

(இ-ள்.):—மயில்கள் அகவுங் கானத்தில், குரங்குகள் குட்டிக ளோடு நடுங்கும்படி பயன்படும் மழை பொழிந்த சாரலையுடைய அவர் நாட்டுக்குன்றத்தை நோக்கினேன் ; தோழி ! பண்டைநிலைமையதோ பாராய் என்னுதலை ?—(எ-று.)

எனவே, அவர்குன்றைக் கண்டு ஆற்றுவல் என்றாளாம். ஊகம் - குரங்கினுள் ஒருவகை. 'இனமயில்......குன்றம்' என்றது, சுற்றத்தா ரோடு மகிழும்படி மனையறத்தைக் கைக்கொள்வன் என்பதாம்.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—ஆற்றுமாறுணர்த்தல்.

## பாலை.

[இது, தலைமகன் பாகற்கு உரைத்தது.]

---

* திருக்குறள் - கடவுள்வாழ்த்து—எ.

[நாமலார்மகன் இளங்கண்ணன் பாடியது.]

உருo. பரலவற் படுநீர் மாந்தித் துணையோ
டிரலை நன்மா னெறிதலு முகளு
மாலை வாரா வளவைக் காலியற்
கடுமா கடவுமதி பாக நெடுநீர்ப்
பொருகயன் முரணிய வுண்கட்
டெரிதீங் கிளவி தெருமர லுயவே.

(இ-ள்.):—துணையோடு கூடிய ஆண்மான் பரற்கள் செறிந்த பள்ளத்துநீரைக் குடித்து (அலை) எறிதலும் துள்ளாநிற்கும் மாலைக் காலம் வருமுன்னர், காற்றினியலைப்போன்ற விரைவுடைய குதிரையைச்செலுத்துவாய், பாக ! உண்கண்களையும் சிறந்த இனிய சொற்களையுமுடையாளது துயர்கெடும்படி.—(எ-று.)

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—பாகன் விரைந்து தேர்விடல்.

## முல்லை.

[இது, பிரிவிடைத் தோழி பருவமன்று பட்டது வம்பென்று வற்புறுத்தது.]

[இடைக்காடர் பாடியது.]

உருக. மடவ வாழி மஞ்ஞை மாயினங்
கால மாரி பெய்தென வதனெதி
ராலலு மாலின பிடவும் பூத்தன
காரன் றிகுளை தீர்கநின் படரே
கழிந்த மாரிக் கொழிந்த பழநீர்
புதுநீர் கொளீஇய வுகுத்தரு
நொதுமலர் வானத்து முழங்குகுரல் கேட்டே.

(இ-ள்.):—(முன்வந்து) சென்ற மாரிக்காலத்து (நிரப்பிப் பயன்படுத்தி) மிகுந்த நீரை, புதுநீரை நிரப்பிக்கொள்ளுதற்கு (நீர்நிலைகளினின்று) வடியவிடும் நொதுமலர்தம் இடிபோன்ற முழக்கத்தைக் கேட்டு, காலமழை பெய்ததாகக் கருதி, மயிலினம் ஆலவும் ஆலின ; பிடவங்களும் பூத்திட்டன ; (ஆதலின்,) (அவை) அறியாமையையுடையன ; கார்ப்பருவமன்று தோழி ! நின்துயர் ஒழிக.—(எ-று.)

வாழி - குறிப்பாற் கெடுக எனப் பொருள்பயந்தது.

மெய்ப்பாடு - பெருமிதம். பயன்—ஆற்றுவித்தல்.

## குறிஞ்சி.

[இது, தலைமகன்வரவறிந்த தோழி, அவர் நம்மை வலிந்து போயினார்க்கு எம்பெருமாட்டி தீயன கடிந்து நின்காற்றினென்றுட்குக் கிழத்தி உரைத்தது.]

[கிடங்கிற்குலபதிளைக்கண்ணனன் பாடியது.]

உ௫உ. நெடிய திரண்ட தோள்வளை நெகிழக்
கொடிய னாகிய குன்றுகெழு நாடன்
வருவதோர் காலையின் முகந்திரி யாது
கடவுட் கற்பி னவனேர் பேணி
மடவை மன்ற நீயெனக் கடவுபு
துனியல் வாழி தோழி சான்றோர்
புகழு முன்னர் நாணுப்
பழியாங் கொல்பவோ காணுங் காலே.

(இ-ள்.):—'நெடிய திரண்ட தோள்வளை நெகிழும்படி கொடியனை நாடன், வருங்காலத்து முகம் மாறுபட்டிடாது கடவுட்டன்மையை உடைய கற்பினால், அவனையே விழைந்து (அதனால்,) அறியாயாகுவை துணிவாக நீ;' என்று மாறுபடுமாறு செலுத்தி, (மாறுபடாமையின்,) சீற்றங்கொள்ளாதி; தோழீ! அறிவுள்ளார் (பிறர்) புகழு முன் வெட்கிப் (பிறரைப்) பழித்தலை ஒருப்படுவரோ? ஆராயுமிடத்து.—(எ-று.)

அவன் புணர்ந்து உரைத்தலையும் பொறேன், குற்றங்களையும் குறிக்கொள்ளேன் என்பாள், 'சான்றோர்......காணுங்காலே' என்றாள்.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—மகிழ்வித்தல்.

## பாலை.

[இது, பிரிவிடைத் தோழி வற்புறுத்தது.]

[பூங்கண்ணன் பாடியது.]

உருரு. கேளா ராகுவர் தோழி கேட்பின்
விழுமிது கழிவ தாயினு நெகிழ்நாற்
பூச்சே ரணையிற் பெருங்கவின் றொலைந்தநின்
னாட்டுயர் கேட்பி னீடலர் மாதோ
வொலிகழை நிவந்த வோங்குமலைச் சாரற்
புலிபுகா வுறுத்த புலவுநாறு கல்லளை
யாறுசென் மாக்கள் சேக்குங்
கோடுயர் பிறங்கன் மலையிறந் தோரே.

(இ-ள்.):—(நின் துயரைக்) கேட்டிலராகுவர்; தோழி! கேள்; மேல், சிறந்ததொருதொழில் கேடடைவதாயினும், படுக்கையிடத்துத் தனித்துறைதலின், அழகு அழிந்த நின் புதுத்துயரத்தைக் கேட்பின் நீட்டியார்; மலைச்சாரலில் புலி உணவின்பொருட்டுச் சினந்து கொன்றதனால், புலால் நாறும் மலைமுழஞ்சிடத்து வழிச்செல்வார்தங்கும் மலையைக் கடந்தார்.—(எ-று.)

நாள்துயர் - புதுத்துயர்; ஆவது - இதுகாறும் எவரும் துய்த்திராத துயர். வழிக்கொடுமை புலியிடத்தும் அச்சத்தை அகற்றியமை தோன்ற, 'புலிபுகா.........மலை' எனப்பட்டது.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—ஆற்றுவித்தல்.

பாலை.

[இது, பருவங்கண்டு வற்புறுத்துந் தோழிக்குக் கிழத்தி உரைத்தது.]

[பாரகாபன் பாடியது.]

உருச. இலையி லஞ்சினை யினவண் டார்ப்ப
முலையேர் மென்முகை யவிழ்ந்த கோங்கின்
றலையலர் வந்தன வாரா தோழி
x பயிலிருங் கதுப்பிற் பாயலு முள்ளார்
செய்பொரு டானசைஇச் சென்றோ
ரெய்தின ராலென வரூஉந் தூதே.

x துயிலின்கங் இற்றுயிலவர் மறந்தோர்

(இ-ள்.):—கிளையிடத்து வண்டு ஒலிக்க, முலையின் அழகையுடைய முகைகள் மலர்ந்தன கோங்கினிடத்து ; இரவில் துயில் வரமறந்திட்டன ; படுக்கையையுங் கருதாராய், முயன்று செய்யும் பொருளைத் தரப் போனார் மீண்டனர் என்னும் தூதுதான்வாராததாகும்.-(எ-று.)

வாரா தூது என இயையும். 'துயிலவரா' என்றும் பாடம்.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—ஆற்றாமையறிவித்தல்.

## பாலை.

[இது, இடைநின்று மீள்வரெனக் கவன்ற கிழத்தியைத் தோழி வற்புறுத்தியது.]

[கடுகுபெருந்தேவன் பாடியது.]

௨௫௫. பொத்தில் காழ வத்த யாஅத்துப்
பொரியரை முழுமுத லுருவக் குத்தி
மறங்கெழு தடக்கையின் வாங்கி யுயங்குநடைச்
சிறுகட் பெருநிரை யுறுபசி தீர்க்குந்
தடமருப் பியானை கண்டனர் தோழி
கடன்கட னிறீஇய ரெண்ணி யிடந்தொறுங்
காமர் பொருட்பிணிப் போகிய
நாம்வெங் காதலர் சென்ற வாறே

(இ-ள்.):—சுரத்தில் யாமரத்தின் அடி ஊடுருவக் குத்திக் கையால் எடுத்து (யானைத்) திரளின் பசியை நீக்கும் யானையைக் கண்டனராவர் ; தோழி! கடமைமுற்றும் செலுத்தற்கு (ஏற்பன) எண்ணி இடந்தொறும் பொருட்பிணியாற் சென்ற காதலர், (தாம்) சென்ற வழியில்.—(எ-று.)

பொத்து - விகாரம். காமர் - விருப்பம். 'பொத்தில்......கண்டனர்' என்றது, ஊக்கம் மிகுமாறு அவ்வாறும் ஊக்குவதாகும் என்பதாம்.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—ஆற்றுவித்தல்.

## பாலை.

[இது, பொருள் விலக்கப்பட்ட கிழவன் செலவழுங்கியது.]

உருசு. மணிவார்ந் தன்ன மாக்கொடி யறுகைப்
பிணிகறன் மென்கொம்பு பிணையொடு மமர்ந்த
மானே றுகளுங் கானம் பின்பட
வினலம் படீஇ வருவது மவரைத்
தாங்க லொல்லுமோ பூங்குழை யோயெனச்
சொல்லா முன்னர் நில்லா வாகி
நீர்விலங் கழித லானுத்
தேர்விலங் கினவாற் றெரி கண்ணே.

(இ-ள்.):—'அறுகம்புல்லினைப் பின்தங்கி, அறுத்துச் செப்பனிட்டாற் போன்ற கொம்பினையுடைய, துணையோடும் விரும்பிய ஆண்மான், துள்ளாநிற்கும் கானம் பின்னாகச் சென்று, இத்துணைப்பொருள் கூடியதும் மீண்டிடுவதும், அத்துணைக்காலம் தாங்கல் கூடுமோ? அழகிய குழையோய்!' என்று சொல்லுமுன் (காப்பில்) நில்லாதனவாகி என்னீர்மை விலகினமையின், வருந்தலைப் பொருதனவாய் தெளிவினின்றும் விலகின, [அழுதிட்டன,] (முன்னர்நம்மைத்) தெளிந்தாளது கண்கள்தாம்.—(எ-று.)

பிணகறன் - அ, கு - சாரியைகள். சிறந்த அறுகினைப் பிணை உண்டல்கருதி ஏறு பின்னிடத்திருந்தது. கொம்பு மானேறு என இயையும். 'மணி......கானம்' என்றது, செல்லும் ஆறும் விரைவில் மீளச்செய்திடும் என்பதாம். இ நலம், அ வரை, விலங்கழிதல்—விகாரங்கள்; சுட்டுக்கள் சிறுமையை உணர்த்தின. சொல்லாமுன்னர் விலங்கின - விரைவுபற்றிய காலவழுவமைதி. தேர் - முதனிலைத்தொழிற்பெயர்.

மெய்ப்பாடு—இளிவரல். பயன்—செலவழுங்குவித்தல்.

## குறிஞ்சி.

[இது, வரைவுணர்த்திய தோழிக்குக் கிழத்தி உரைத்தது.]
[உறையூர்ச் சிறுகந்தன் பாடியது.]

உருஎ. வேரு முதலுங் கோடு மோராங்குத்
தொடுத்த போலத் தூங்குபு தொடரிக்
கீழ்தாழ் வன்ன வீழ்கோட் பலவின்
ஞர்கலி வெற்பன் வருதொறும் வரூஉ
மகலினு மகலா தாகி
யிகலுந் தோழிநங் காமத்துப் பகையே.

(இ-ள்.):—வேர், அடி, கிளை இவற்றை ஒன்றாய்த் தொடுத்தாற் போலத் தொங்கித் தொடர்ந்து கீழிடத்துத் தாழ்ந்தாற்போன்று வீழ்தல்கொண்ட [விளைந்த] பலாவிளையுடைய வெற்பன், வருந்தொறும் வருவதாகும்; (அவன் நம்மை) அகன்றாலும் அகலாமல் மாறுபடும் நம் காமப்பகைதான்.—(எ-று.)

எனவே, வரவை உணர்ந்து வரைவைக் கூறுகின்றாய் என்றாளாம். பகை - பகையாகிய வரைவை உணர்த்தல். வரும் - நின்வாயினின்று வந்திடும். 'வேரும்......வெற்பன்' என்றது, எளிதில் இனிய மணத்தைத் தரான் என்பதாம்.

மெய்ப்பாடு—இளிவரல். பயன்—ஆற்றாமையறிவித்தல்.

## மருதம்.

[இது, தோழி தலைமகற்கு வாயின் மறுத்தது.]

[பாணர் பாடியது.]

உடுஅ. வாரலெஞ் சேரி தாரனின் றாரே
யலரா கின்றாற் பெரும காவிரிப்
பலராடு பெருந்துறை மருதொடு பிணித்த
வேந்துகோட் டியானைச் சேந்த னுறந்தை
யரியரி லம்புக விளங்கோட்டு வேட்டை
நிரைய வொள்வா ளிளையர் பெருமக
னழிசி யார்க்கா டன்னவிவள்
பழிதீர் மாணலந் தொழுதன கண்டே.

(இ-ள்.):—வாராதி எம்சேரியிடத்து; தாராதி நின்மாலையை; அலர் உண்டாகின்றது, ஆதலின்; பெருமானே! காவிரியினையும், (வையைப்) பெருந்துறைக்கண் மருதத்தோடு கட்டிய யானையினையுடைய 'சேந்தன்' என்பானது உறையூரையும், யானையை வேட்டமாடும் (வருத்துவதில்) நிரயம்போன்ற வாளையுடைய காளையர்தலைவனான 'அழிசி' என்பானது ஆர்க்காட்டையும் போன்ற இவள்நலம் (எம்மை நீ சிதையாதி என நின்னை) வணங்கின.—(எ-று.)

வையையாற்றில் 'மருதப்பெருந்துறை' என்பதொன்றுண்டு; இதனை, * "வருபுனல் வையை மருதோங்கு முன்றுறை" என்புழியுங் காண்க. 'சேந்தன்' என்பான் பாண்டியன்மேற் படையெடுத்து அவன் வையைப்பெருந்துறைமருதில் தந்திபிணித்திட்ட வரலாறொன்று உண்டுபோலும். உறந்தை, ஆர்க்காடு - இவற்றுருபும் உம்மையுந் தொக்கன.

மெய்ப்பாடு—வெகுளி. பயன்—வாயின்மறுத்தல்.

## குறிஞ்சி.

[இது, காப்புமிகுதிக்கண் ஆற்றாளாகிய தோழி அறத்தொடு நின்று ¶ [அவனே] பரிகசிப்பல் என்று கருதியதனைத் தலைமகளும் நயப்பாளாகக் கூறியது.]

[கபிலர் பாடியது.]

உருக. மழைசேர்ந் தெழுதரு மாரிக் குன்றத்
தருவி யார்ந்த தண்ணறுங் காந்தண்
முகையவிழ்ந் தானா நாறு நறுநுதற்
பல்லிதழ் மழைக்கண் மாஅ யோயே
யொல்லை யாயினுங் கொல்லை யாயினு
நீயளந் தறிவைநின் புரைமை வாய்போலப்
பொய்ம்மொழி கூறலஃ தெவனோ
நெஞ்ச நன்றே நின்வயி னானே.

(இ-ள்.):—மாரிக்காலத்துக் குன்றில் காந்தள் கமழ்வதுபோற் கமழும் நறுநுதலையும் கண்ணையுமுடைய மாமைநிறத்தோய்! வாழச் செய்வை எனினும் அழியச்செய்வை எனினும் (உனக்காவனவாம்;) உயர்வைத்தருதலை நீ அளந்தறிவாய்; உண்மைபோலப் பொய்புகலல் என்னை? (பொய்க்கப் பொருந்தாமையின்) நெஞ்சம் நல்லதாயிற்று நின்னிடத்து.—(எ-று.)

எனவே, அறத்தொடு நிற்பின் பிழைப்பல்; நில்லாயேல் அழிவல்; உண்மை உயர்வைத் தந்திடும்; அறத்தொடு நிற்க நினைத்தமை

* சிலப்பதிகாரம் - ஊர்காண்காதை—எஉ.

¶ இருதலைப்பகரத்துள்ளவை மிகைபோலும்; 'யானே' என் றிருத்தல் நேர்.

யின் நன்னெஞ்சினை என்றிவைகளை உணர்த்தினாளாம். 'மழை...... மாயோய்' என உவப்பறிய உயர்த்தி விளித்தாள்.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—ஆற்றாமையறிவித்தல்.

## பாலை.

[இது, அவர்வரவிற்கு நிமித்தமாயினகண்டு ஆற்றாளாகிய தலைமகட்குத் தோழி சொல்லியது.]

[கல்லாடனார் பாடியது.]

உ௬0. குருகு மிருவிசும் பிவரும் புதலும்
வரிவண் டூத வாய்நெகிழ்ந் தனவே
சுரிவளைப் பொலிந்த தோளுஞ் செற்றும்
வருவர்கொல் வாழி தோழி பொருவார்
மண்ணெடுத் துண்ணு மண்ணல் யானை
வண்டேர்த் தொண்டையர் வழையமல ரடுக்கத்
கன்றி லோரா விலங்கிய [துக்
புன்றோளமைய சுரனிறந் தோரே.

(இ-ள்.):—பறவைகளும் விசும்பிற் பறப்பனவாகும்; புதன்மலர்களும் வண்டுகள் ஊத வாய்திறந்திட்டன; தோளை முனிந்தும் [பிரிந்தும்] வருவாரோ இன்று? தோழி! இல்லிலிருந்து ஆராயாமல் தொண்டையர்தம் மலையைப்போன்ற செல்லலாகாவாறு தடுத்திட்ட சுரத்தைக் கடந்தார்.—(எ-று.)

அடுக்கத்துச் சுரன் என இயையும். தொண்டையர் - தொண்டைக்கொடியைச் சூடினோர். வழை - சுரபுன்னை.
மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—ஆற்றுவித்தல்.

## குறிஞ்சி.

[இது, இரவுக்குறிக்கண் தலைமகன் சிறைப்புறமாகத் தோழிக்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது.]

[கழார்க்கீரனெயிற்றி பாடியது.]

உசுக. பழமழை பொழிந்தெனப் பதனழிந் துருகிய
சிதட்டுக்கா யெண்ணின் விற்பெயற் கடைநாட்
சேற்றுநிலை முனைஇய செங்கட் காரா
னள்ளென் யாமத் தையெனக் கரையு
மஞ்சுவரு பொழுதி னானு மென்கண்
டுஞ்சா வாழி தோழி காவலர்
கணக்காய் வகையின் வருந்தியென்
னெஞ்சுபுண் ணுற்ற விழுமத் தானே.

(இ-ள்.):—மாரிக்காலத்துக் கடைநாளில் எருமை, நள்ளிரவில் (இதன்வேட்கை) வியப்புடையதென்னும்படி கரைந்திடும் காலத்து, என்கண்கள் துயிலாதனவாகும்; தோழி! அரசர்கள்கணக்கை ஆயும் வகையைப்போல வருந்தி என்னெஞ்சம் புண்ணுகும்படி பொருந்திய துயரத்தால்.—(எ-று.)

சிதடு காய் - உள்ளீடில்லாத காய். எண் - எள். வில் - வானவில். சிறுபிழைகாணினும் பெருந்தண்டம்பெறல்வேண்டுதலான், காவலர் கணக்காய்பவர் மிகவும் அஞ்சி வருந்துவர்.

மெய்ப்பாடு—இளிவரல். பயன்—ஆற்றுமையறிவித்தல்.

## பாலை.

[இது, உடன்போக்குநேர்ந்த தோழி கிழத்திக்கு உடன்போக்குணர்த்தியது.]

[பாலைபாடிய பெருங்கடுங்கோ பாடியது.]

உசுஉ. ஊஉ ரலரெழச் சேரி கல்லென
வானு தலைக்கு மறனி லன்னை
தானே யிருக்க தன்மகன் யானே
நெல்லி தின்ற முள்ளெயிறு தயங்க
வுணலாய்ந் திசினு லவரொடு சேய்நாட்டு
விண்டொட நிவந்த விலங்குமலைக் கவாஅற்
கரும்புநடு பாத்தி யன்ன
பெருங்களிற் றடிவழி நிலைஇய நீரே.

(இ-ள்.):—ஊரில் அலரெழவும், சேரியில் கல்லென்னும் ஒலி உண்டாகவும், அமையாது வருத்துவாள் அன்னை; அவள் தன் மகளாகிய யான்தான், நெல்லிநின்ற பற்கள் தோன்ற மலைத்தாழ்வாரத்துக் களிற்றடிகள் பதிந்த வழியில் நின்ற நீரை (நீ) உண்ணலை அவரோடு சூழ்ந்திட்டேன்.—(எ-று.)

'இருக்கத் தன்மனை,' 'இருக்க தன்மனை'—என்பன பாடபேதங்கள். தன்மகன் - மகடூஉ மருங்கிற் பாறிரிகிளவி.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—உடன்போக்குநேர்வித்தல்.

## குறிஞ்சி.

[இப்பாட்டு, அன்னை வெறியெடுக்கக் கருதாநின்றாள்; யாம் இனி இதற்கு என்கொலோ செயற்பாலது? எனத் தோழி தலைமகட்குத் தலைமகன் சிறைப்புறமாகக் கூறியது.]

[பெருஞ்சாத்தன் பாடியது.]

உசாந. மறிக்குர லறுத்துத் தினைப்பிரப் பிரீஇச்
செல்லாற்றுக் கவலைப் பல்லியங் கறங்கத்
தோற்ற மல்லது நோய்க்குமருந் தாகா
வேற்றுப் பெருந்தெய்வம் பலவுடன் வாழ்த்திப்
பேய்க்கொ ளீஇய ளிவளெனப் படுத
னோதக் கன்றே தோழி மால்வரை
மழைவிளை யாடு நாடனைப்
பிழையே மாகிய நாமிதற் படவே.

(இ-ள்.):—மறிக்கழுத்தை அறுத்துத், தினைப்பிரப்பை வைத்துக் கவர்த்த வழியில் பலவாச்சியங்களும் ஒலிப்பத், தோற்றத்தாலன்றி உற்ற நோய்க்கு மருந்தாகாத அயலான தெய்வம் பலவற்றோடும் வாழ்த்திப், பேயாற் கொள்ளப்பட்டாள் இவள் என்று கூறப்படுதல் நோவத்தக்கதன்றே! நாடனைப் பிழையாத நாம் இத்துயரிற் படுவதோ?—(எ-று.)

'பொய்க்கொ ளீஇயள்' என்றும் பாடம்.

மெய்ப்பாடு—இளிவரலைச் சார்ந்த பெருமிதம். பயன்—வரைவு கடாவுதல்.

## குறிஞ்சி.

[இது, ஆற்றாளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி ஆற்றுவல் என்றது.]

[கபிலர் பாடியது.]

உ௬௪. கலிமழை கெழீஇய கான்யாற் றிகுகரை
யொலிநெடும் பீலி துயல்வர வியலி
யாடுமயி லகவு நாட னம்மொடு
நயந்தனன் கொண்ட கேண்மை
பசந்தக் காலும் பசப்பொல் லாதே.

(இ-ள்.):—மழை கூடியதனால் கான்யாற்றின் அலைமோதுங் கரையில் தழைத்த தோகை அசையும்படி சென்று ஆடுகின்ற மயில் (துணையை) அழைக்கும் நாடன், நம்மோடு விரும்பிக் கொண்ட நட்பு, (மேனி) பசந்தவிடத்தும் (தான்) வேறுபாடடையாததாகும்.-(எ-று.)

'கலிமழை......நாடன்' என்றது, வேண்டியதைப் பெற்றுவந்து மனைக்கண் என்னோடு இருத்தற்கு மகிழ்ந்து என்னை அழைக்கும்படி இல்லறத்தை மேற்கொள்வனென்று ஆற்றுவேன் என்பதாம்.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—ஆற்றாமைநீக்கல்.

## குறிஞ்சி.

[இது, வரையாது பிரிந்தவிடத்து அவர் பிரிந்த காரணம் நின்னை வரைந்துகோடல்காரணமாகத் தானெனத் தோழி தலைமகட்குக் கூறியது.]

[கருவூர்க்கதப்பிள்ளை பாடியது.]

உ௬௫. காந்தளங் கொழுமுகை காவல் செல்லாஃது
வண்டுவாய் திறக்கும் பொழுதிற் பண்டுந்
தாமறி செம்மைச சான்றோர் கண்ட
கடனறி மாக்கள் போல விடன்விட்
டிதழ்தளை யவிழ்ந்த வேகல் வெற்ப
னன்னர் நெஞ்சத்தன் றோழி நின்னிலை
யான்றனக் குரைத்தனெ னாகத்
தானா ணினனிஃ தாகா வாறே.

(இ-ள்.):—காந்தளின் முகைகளில் வண்டுகள் வாயைத் திறக்கும் பொழுதில் கடமைகளை உணர்ந்த மாக்களைப்போல இடம்விட்டு மலரும் காந்தளையுடைய வெற்பன் நல்ல நெஞ்சினன்; தோழி! நின்னிலைமையை யான் அவனுக்கு இத்துயர் உண்டாகாவாறு கூறினேனாக, (உடன்கொண்டு செல்ல) அவன்றான் நாணினன். —(எ-று.)

எனவே, உடன்கொண்டு செல்க வென்றதும் வரைபொருட்குப் பிரிந்திட்டான் என்றாளாம்.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—ஆற்றுவித்தல்.

## பாலை.

[இது, வரையாது பிரிந்தவிடத்துத் தோழிக்குக் கிழத்தி உரைத்தது.]

[நக்கீரர் பாடியது.]

உ௩௩. *நமக்கொன் றுரையா ராயினுந் தமக்கொன்
றின்னா விரவி னின்றுணை யாகிய
படப்பை வேங்கைக்கு மறந்தனர் கொல்லோ
துறத்தல் வல்லியோர் புள்வாய்த் தூதே.

(இ-ள்.):—நமக்கு ஒன்றையும் உரையாராயினும் பொருந்திய துயரையுடைய இரவில் துணையாகிய [குறியிடமான] மனைப்பக்கத்து வேங்கைக்கும், துறத்தல்வல்லோர் புள்வாயிலாக விடும்தூதை விடுதற்கு மறந்தாரோ?—(எ-று.)

இன்னா ஒன்று இரவு என மாற்றி உரைத்தலும் ஒன்று.

மெய்ப்பாடு—இளிவரல். பயன்—ஆற்றாமையறிவித்தல்.

## பாலை.

[இது, மேனின்றும் ஆடவர் பொருட்குப் பிரிந்தாராகலின், நாமும் பொருட்குப் பிரிதுமென்னும் நெஞ்சிற்கு நாளது சின்மையும் இளமையதருமையுங் கூறிச் செலவழுங்கியது.]

---

* இப்பாட்டு ஆறடியினதாதல் உணர ஒருபிரதியில், ௪, ரு அடிகளுக்கு இடம் விடப்பட்டிருக்கி

[காலறிகடிகையார் பாடியது.]

உகூஎ இருங்கண் ஞாலத் தீண்டுபயப் பெருவள
மொருங்குட னியைவ தாயினுங் கரும்பின்
காலறி கடிகைக் கண்ணயின் றன்ன
வாலெயி றூறிய வசையி றீநீர்
கோலமை குறுந்தொடிக் குறுமக ளொழிய
வாள்வினை மருங்கிற் பிரியார் நாளு
முறன்முறை மரபிற் கூற்றத்
தறனில் கோணற் கறிந்திசி னோரே.

(இ-ள்.):—உலகத்துப் பெரும்பொருள் ஒருங்கே கூடுவதாயினும் சிறுமகளைவிட்டு ஆளுதற்குரிய பொருளை ஆக்கும் தொழிலில், அறிவுடையோர் கூற்றத்தின் மாறுபாட்டிற்கு அஞ்சிப் பிரிந்திடார்; (ஆதலின், யாம் பிரிவை உடன்படோம்.)—(எ-று.)

கரும்பின், அயின்றன்ன, ஊறிய, வசையில் இவை, தீநீர் என்பதனோடு தழுவும். எயிறு ஊறிய - இடத்துநிகழ்பொருளின் தொழில் இடத்தின்மேலேறியது. உறல் முறை - பொருந்திய முறைமை. எயிற்றூற்றிற்குக் காலறிகடிகையின் நீர்க்கசிவை உவமையாக்கிய சிறப்பானே, இதனாசிரியர் "காலறிகடிகையார்" எனப்பாராட்டப்பட்டனர் போலும்.

மெய்ப்பாடு—அச்சம். பயன்—செலவழுங்குவித்தல்.

## குறிஞ்சி.

[இது, தலைமகன் சிறைப்புறத்தானாகத் தலைமகட்குத் தோழி சொல்லியது.]

[கருவூர்ச் சேரமான் சாத்தன் பாடியது.]

உகூஅ. சேறி ரோவெனச் செப்பலு மாற்றா
மருவி ரோவென வினவலும் வினவாம்
யாங்குச் செய்வாங்கொ றோழி பாம்பின்
பையுடை யிருந்தலை துமிக்கு மேற்றொடு
நடுநா ளென்னார் வந்து
நெடுமென் பணைத்தோ ளடைந்திசி னோரே.

(இ-ள்.):—செல்வீரோ என்று சொல்லவும் பொறேம் ; வருவீரோ என வினவவும் வினவோம் ; எவ்வகை செய்வோம் ? தோழி ! இடியோடு நள்ளிரவென்றும் கருதாராய் வந்து தோளை அடைந்தார், அவர்.—(எ-று.)

பிரிவுத்துயரை நோக்கினமையின், 'சேறிரோ......ஆற்றேம்' என்றும், ஆற்றிடையூற்றைக் கருதினமையின், 'மருவிரோ......வினவாம்' என்றுங் கூறினாள். 'எண்ணார்' என்றும் பாடம்.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—ஆற்றாமையறிவித்தல்.

## நெய்தல்.

[இது, தலைமகன் சிறைப்புறத்தானாகத் தலைமகள் தோழிக்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது.]

[கல்லாடனார் பாடியது.]

உசா௬. சேயாறு சென்று துணையரி யசாவா
துசாவுநர்ப் பெறினே நன்றுமற் றில்ல
வயச்சுறு வெறிந்த புண்டணிந் தெந்தையு
நீனிறப் பெருங்கடல் புக்கன னியாயு
முப்பை மாறி வெண்ணெற் றரீஇய
வுப்புவிளை கழனி சென்றன ளதனாற்
பனியிரும் பரப்பிற் சேர்ப்பற்
கினிவரி னெளிய ளென்னுந் தூதே.

(இ-ள்.):—சுறாமீன் பாய்ந்த புண் ஆறித் தந்தையும்கடலில் (மீன் வேட்டைக்குச்) சென்றனன் ; அன்னையும் உப்பைக் கொடுத்து நெல்லைப் பெறக்கருதி உப்புவிளைகழனியிடம் சென்றனள் ;ஆதலின், சேர்ப்பற்கு இப்போழ்து வரின் எளியளாவாள் என்றுகூறும் தூதாகச், சேய்மையுள்ள ஆற்றைக் கடந்து, உதவிகள் அரியவாதலைக்குறித்து வருந்தாது, (உடன்பட்டுக்)கேட்பாரைப்பெறின் நல்லதாகும். (எ-று.)

எனவே, அற்றநோக்கும் குற்றமுடைய களவின்தன்மையை உணர்த்தினாளாம்.

மெய்ப்பாடு—இளிவரல். பயன்—வரைவுகடாதல்.

## முல்லை.

[இது, வினைமுற்றிப் புகுந்த தலைமகன் கிழத்தியோடு உடனிருந்து கூறியது.]

[பாண்டியன் பன்னாடுதந்தான் பாடியது.]

உஎo. தாழிரு டேமிய மின்னிநீ தண்ணென
வீழுறை யினிய சிதறி யூழியிற்
கடிப்பிகு முரசின் முழங்கி யிடித்திடித்துப்
பெய்தினி வாழியோ பெருவான் யாமே
செய்வினை முடித்த செம்ம லுள்ளமோ
டிவளின் மேவல மாகிக் குவளைக்
குறுந்தா ணறுண்மலர் நாறு
நறுமென் கூந்தன் மெல்லணை யேமே.

(இ-ள்.):—மின்னி, நீரை இனியவாகச் சிதறி, முரசினைப்போல முழங்கி, மேலும்மேலும் இடித்துப் பெய்து இப்பொழுது வாழ்வாயாக ; வானமே ! யாம்தாம், செய்யக் கருதிய வினையை முடித்திட்ட பெருமையுள்ள மனத்தோடு இவளோடு பொருந்தினேமாய்க் கூந்தலையுடையாளின் மெல்லணையிடத்தேம் ; (ஆதலால்.)—(எ-று.)

கலவுக்கை நெகிழ்க்கலாகாவாறு இன்பஞ்சிறக்கச் செய்தலின், 'வாழி......வான்' என்றான். கடிப்பு - குறுந்தடி. வான் - அண்மைவிளி.

## மருதம்.

[இது, தலைமகற்கு வாயினேர்ந்து புக்க தோழிக்குத் தலைமகள் சொல்லியது.]

[அழிசிநச்சாத்தனார் பாடியது.]

உஎக. அருவி யன்ன பருவுறை சிதறி
யாறுநிறை பகரு நாடனைத் தெரியுற்
றஃது மன்னு மொருநாண் மற்றது
தவப்பன் னாடோண் மயக்கி
வௌவும் பண்பி னோயா கின்றே.

(இ-ள்.):—அருவிபோன்ற நீரைச் சிதறி ஆற்றிடத்துத் தன்னிறையை விலைப்படுத்தும் நாடனை உணர்ந்து அக்கூட்டம் பொருந்திடும் ஒருநாள்; அக்கூட்டந்தான், மிகப்பலநாள் தோளை மயங்கச் செய்து (உயிரைக்) கவரும் தகுதியுள்ள துயர்தருவதாகின்றது.-(எ-று.)

'அருவி......நாடன்' என்றது, பரத்தையரோடு புனலாடித் தகுதி கெட ஒழுகுகின்றான் என்பதாம். அஃது மன்னும் - விகாரம்.

மெய்ப்பாடு—வெகுளி. பயன்—வாயின்மறுத்தல்.

## குறிஞ்சி.

[இது, கழறிய பாங்கற்குக் கிழவன் உரைத்தது.]

[ஒருசிறைப்பெரியன் பாடியது.]

உஎஉ. தீண்டலு மியைவது கொல்லோ மாண்ட
வில்லுடை யிளையர் கல்லிடு பெடுத்த
நனந்தலைக் கானத் தினந்தலைப் பிரிந்த
புன்கண் மடமா னேர்படத் தன்னையர்
சிலைமாண் கடுவிசை கலைநிறத் தழுத்திக்
குருதியொடு பறித்த செங்கோல் வாளி
மாறுகண் டன்ன வுண்க
ணாறிருங் கூந்தற் கொடிச்சி தோளே.

(இ-ள்.):—இளைஞர் கல்லோச்சிக் கலைத்ததனால் கானத்தில், இனத்திற் பிரிந்த துயருள்ளமான்கண்ணை (மருட்சியால்) நிகர்த்து, அவள்தந்தையர் கலைமானின் மார்பிடத்து அழுத்திக் குருதியோடு பறித்திட்ட அம்பினை மாறுபட்டாற்போன்றமையுண்ட கண்களையும் கூந்தலையுமுடைய கொடிச்சிதோளைத் தீண்டுதலும் பொருந்துங் கொல்?—(எ-று.)

முன்னைக் கூடியாங்கு இடந்தலைப்பாட்டிற் கூடலாங்கொல் என்பான், 'தீண்டலு மியைவதுகொல்' என்றான். தனது வருகையைக் குறித்து நாற்புறமும் மருண்டு நோக்குதலான் மானையும், வருத்தலான் வாளியையும் உவமை கூறினான்.

மெய்ப்பாடு—இளிவரல். பயன்—ஆற்றாமையறிவித்தல்.

## பாலை.

[இது, பிரிவரெனக் கவன்ற தலைமகளைத் தோழி வற்புறுத்தியது.]

[சிறைக்குடியாந்தையார் பாடியது.]

உ௭௩. அல்குறு பொழுதிற் புருது முகைதயங்கப்
பெருங்கா டுள்ளு மசைவளி போலத்
தண்ணிய கமழு மொண்ணுத லோயே
நொந்தனை யாயிற் கண்டது மொழிவல்
பெருந்தேன் கண்படு வரையின் முதுமால்
பறியா தேறிய மடவோன் போல
வேமாந் தன்றிவ் வுலக
நாமுளே மாகப் பிரியலந் தெளிமே.

(இ-ள்.):—சுருங்குதலுற்ற பொழுதில் [மாலையில்] இன்பமுருது காட்டைக் கருதும் காற்றைப்போலக் கமழும் நுதலோய்! வருந்தினையானால் (உண்மையென்று யான்) கண்டதைக் கூறுவேன்; தேனிறால் தூங்கும் மலையில் (பொறுத்தலாற்றாத) முதிய ஏணியை அறியாமல் ஏறிய அறிவிலானைப்போல ஏமாப்புடையதாகும் என்கின்றனை இவ்வுலகத்தை; நாம் உயிருடன் இருப்போமாகப் பிரியோம் தெளிவாய்.—(எ-று.)

இற்புருது, விகாரம். மால்பு - ஏணி; * "ஈவிளையாட நறவிளை வோர்ந்தெமர் மால்பியற்றும்" என்றார் திருக்கோவையாரிலும்.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—ஆற்றுவித்தல்.

## பாலை.

[இது, பொருள்வலித்த நெஞ்சிற்குக் கிழவன் உரைத்தது.]

---

* திருக்கோவையார்—௧௫௪.

[உருத்திரன் பாடியது.]

உ௭௪. புறவுப் புறத்தன்ன புன்கா லுகாஅத்
துச்சினை யன்ன நளிகனி யுதிர
விடுகணை வில்லொடு பற்றிக் கொடியவர்
வருநர்ப் பார்க்கும் வன்க ணாடவர்
நீர்நசை வேட்கையி னார்மென்ப தணியு
மின்னாக் கானமு மினிய பொன்னொடு
மணிமிடை மருங்குன் மடந்தை
யணிமுலை யாக முழக்கினஞ் செலினே.

(இ-ள்.):—உகாமரத்தில் கனிகள் உதிர (அவற்றை) வில்லோடு கைப்பற்றிக் கொடியரும் வழிவருவாரை(அலைத்தற்குப்)பார்ப்பவரும் இரக்கமில்லாருமாகிய ஆடவர் நீரை விரும்பிய வேட்கையினால் உண்கின்ற துயர்தரும் கானமும், மடந்தையின் மார்பிடத்தை மருவிச்செல்லின் இனியவாகும்.—(எ-று.)

அன்ன - நீர்நசையை நீக்கும் அத்தகைய.. ஆர்ம் - † "அவற்றுள், செய்யுமென்னும்......உகரம்" என்றதனான் முடிந்தது. பொருள்வயிற் பிரிவில்உடன்கொண்டுசேறல் உலகவழக்கன்மையின்,அழுங்குவித்தல் தோன்ற, 'மடந்தை......செலின்' என்றான். 'மூழ்கினம்' என்றும் பாடம்.

மெய்ப்பாடு—இளிவரல். பயன்—செலவழுங்குவித்தல்.

## முல்லை.

[இது, பருவவரவின்கண் வரவுநிமித்தந் தோன்றத் தோழி தலைமகட்கு உரைத்தது.]

[ஒக்கூர் மாசாத்தி பாடியது.]

உ௭௫. முல்லை யூர்ந்த கல்லுயர் பேறிக்
கண்டனம் வருகஞ் சென்மோ தோழி
யெல்லூர்ச் சேர்தரு மேறுடை யினத்துப்
புல்லார் நல்லான் பூமணி கொல்லோ
செய்வினை முடித்த செம்ம லுள்ளமொடு
வல்வி லிளையர் பக்கம் போற்ற
வீர்மணற் காட்டாறு வரூஉந்
தேர்மணி கொல்லாண் டியம்பிய வுளவே.

† தொல் - சொல் - வினை—௪௪.

(இ-ள்.):—ஊரைச் சேரும் ஆனின் மணிகொல்? செய்தொழில் முற்றிய உள்ளத்தோடு காளையர் காக்கக் காட்டாற்றில் வரும் தலைமகன்தேர்மணிகொல்? ஆங்கு ஒலித்தவை உள்ளன; (ஆதலின்,) தோழி! கல்லின் உயர்ந்தவிடத்தில் ஏறிக் கண்டுவரச் செல்வமோ?-(எ-று.)

உணவிற்காகப் பிறவுயிர்கட்குக் கேடுசெய்யாது புல்லை ஆர்ந்து இனிய பாலைத் தரும் ஆனின் நல்லியல்பு, 'புல்லூர் நல்லான்' என்றதனாற் புலனாயிற்று. 'புல்லார்' என்றும் பாடம்.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—ஆற்றுவித்தல்.

## குறிஞ்சி.

[இது, தோழிக்குக் குறைமறுமாற் றலைமகன் கூறியது.]

[கூழிக்கொற்றன் பாடியது.]

உ௭௬. பனைத்தோட் குறுமகள் பாவை தைஇயும்
பஞ்சாய்ப் பள்ளஞ் சூழ்ந்து மற்றிவ
ளுருத்தெழு வன்முலை யொளிபெற வெழுதிய
தொய்யில் காப்போ ரறிதலு மறியார்
முறையுடை யரசன் செங்கோல் வையத்
தியான்றற் கடவின் யாங்கா வதுகொல்
பெரிதும் பேதை மன்ற
வளிதோ தானேயிவ் வழுங்க லூரே.

(இ-ள்.):—சிறுமகளுக்குப் பாவையைச் செய்தும், பஞ்சாய்க் கோரை நிறைந்த பள்ளத்தைச் சூழ்ந்தும் இவள்முலையிடத்து யான் எழுதின தொய்யிலைக், காப்பவர் [ஓரைமகளிர்] அறியவும் அறியார்; முறைமையையுடைய அரசன்செங்கோல் செல்லும் உலகத்தில், யான் அவளைக் கேட்பின் என்னவாகும்? மிகவும் அறியாமையுடையது, துணிவாக; (ஆதலின்,) அளியதோ இவ்வூர்தான்?—(எ-று.)

'முறையுடை......யாங்காவது' என்றது, மடலேறுமாறு மறுத்தல் பழிதருவதாகும் என்றதாம். கொல் - அசைநிலை.

மெய்ப்பாடு—இளிவரல். பயன்—ஆற்றாமையுணர்த்தல்.

பாலை.

[இது, தலைமகன் பிரிந்தவழி அவன் குறித்த பருவவரவு தோழி அறிவாரைக் கண்டு வினாவியது.]

[ஓரிற்பிச்சையார் பாடியது.]

* உஎஎ. ஆசி றெருவி னாயில் வியன்கடைச்
செந்நெ லமலை வெண்மை வெள்ளிழு
தோரிற் பிச்சை யார மாந்தி
யற்சிரை வெய்ய வெப்பத் தண்ணீர்ச்
சேமச் செப்பிற் பெறீஇயரோ நீயே
மின்னிடை நடுங்குங் கடைப்பெயல் வாடை
யெக்கால் வருவ ரென்றி
யக்கால் வருவரெங் காத லோரே.

(இ-ள்.):—மனையை அடுத்த கடையில் வாங்கிய செந்நெல்லின் சோற்றுத்திரளையும் வெண்ணெய்யையும் ஓரில்லில் பிச்சையாகப் பெற்று முன்பனிக்காலத்துச் சூடுள்ள நீரையும் காப்பிற்கொண்ட செப்பிடத்துப் பெறுவாயாக நீதான்; மின்னல்போன்ற இடையினள் அஞ்சுகின்ற கடைப்பெயலையுடைய வாடையில் வருவர் என்கின்றனை; அக்காலத்துக் காதலர் வருவர்; (ஆதலின், அவ்) வாடை எப்பொழுது வந்திடும்? உணர்த்துவாய்.—(எ-று.)

எனவே, நீ உணர்த்தின் சோறு, வெண்ணெய், வெந்நீர்இவற்றைத் தருவல் என்றாளாம். தண்ணீர் - நீர் என்னுந் துணையாய் நின்றது. 'ஓரிற்பிச்சை' யென எடுத்தாண்ட சிறப்பானே, 'ஓரிற்பிச்சையார்' என ஆசிரியர் வழங்கப்பட்டார்போலும்.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—ஆற்றாமை நீங்கல்.

பாலை.

[இது, பிரிவிடை வற்புறுத்துந் தோழிக்குத் தலைமகள் உரைத்தது.]

* இப்பாட்டு, "ஆசி றெருவி னாயில வியன்கடை, செந்நெல் வியன்கடைச்செந்நெல்மலை (வெண்மை,) வெள்ளிழு............காத லோரே" என்று பிரதிகளில் காணப்பட்டமையின், ஒருவாறு அநுமானித்துக் குறிக்கப்பட்டது.

[வேரிசாத்தன் பாடியது.]

உஎஅ. உறுவளி யுளரிய வந்தளிர் மாஅத்து
முறிகண் டன்ன மெல்லென் சீறடிச்
சிறுபசும் பாவையு மெம்மு முள்ளார்
கொடியர் வாழி தோழி கடுவ
னூழுறு தீங்கனி யுதிர்ப்பக் கீழிருந்
தேற்பன வேற்பன வுண்ணும்
பார்ப்புடை மந்திய மலையிறந் தோரே.

(இ-ள்.):—தோழி! ஆண்குரங்கு முதிர்ந்த கனியை உதிர்த்திடக் கீழிடத்திருந்து ஏற்பவற்றை ஆராய்ந்து உண்ணும் குட்டிகளையுடைய பெண்குரங்குகள் மிக்க மலையைக் கடந்தார், தென்றல் அசைத்திட்ட மாவின் முறிபோன்ற சிறுஅடியையுடைய குராப்பாவையையும் எம்மையும் கருதார்; (ஆதலின்,) கொடியராவர்.—(எ-று.)

'கடுவன்......மலை' என்றது, விலங்கிடத்து ஒழுக்கமும் நம்பால் இன்றே என்று வெட்கிலர்; அவர்தகுதி என்னே? என்பதாம்.

மெய்ப்பாடு—இளிவரல். பயன்—ஆற்றுமையுணர்த்தல்.

## முல்லை.

[இது, வற்புறுத்துந் தோழிக்குக் கிழத்தி உரைத்தது.]
[மதுரை மருதனிளநாகனுர் பாடியது.]

உஎகூ. திரிமருப் பெருமை யிருணிற மையான்
வருமிட றியாத்த பகுவாய்த் தெண்மணி
புலம்புகொள் யாமத் தியம்புதொ றிசைக்கு
மிதுபொழு தாகவும் வாரார்கொல்லோ
மழைகெழு மறைந்த மாயிருந் துறுகற்
றுகள்சூழ் யானையிற் பொலியத் தோன்று
மிரும்பல் குன்றம் போக்கித்
திருந்திறைப் பணைத்தோ ளுள்ளா தோரே.

(இ-ள்.):—காரானின் கழுத்திற்கட்டிய மணி ஒலித்திடும் பொழுது இஃதாகவும் [மாலைவந்தும்] மழை பொருந்தியதால் மறைந்த சிறுமலை புழுதி சுற்றிய யானைபோலத் தோன்றும் குன்றங்களைப் (பின்னகப்) போக்கித் தோளைக் கருதாதோர் வாராராயினர்.—(எ-று.)

எருமை மையான் - இருபெயரொட்டு. வருமிடறு - ஒலிவரும் கழுத்து. கொல் - அசை. 'மழை......குன்றம்' என்றது, காலம் வந்தமையுணர்ந்தும் மீண்டிலர் என்ற கருத்தால்.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—ஆற்றாமை நீங்கல்.

## குறிஞ்சி.

[இது, கழற்றெதிர்மறை.]

[நக்கீரர் பாடியது.]

உஅ0. கேளிர் வாழியோ கேளிர் நாளுமென்
னெஞ்சுபிணிக் கொண்ட வஞ்சி லோதிப்
பெருந்தோட் குறுமகள் சிறுமெல் லாக
மொருநாள் புணரப் புணரி
னரைநாள் வாழ்க்கையும் வேண்டலன் யானே.

(இ-ள்.):—அன்பீர் வாழ்வீராக; அன்பீர்! என்றும் என்னெஞ்சைப் பிணித்தலைக் கொண்ட கூந்தலையும், தோளையுமுடைய சிறுமகளின் மார்பை ஒருநாள் கூடக் கூடின் பின்னர் அரைநாள்வாழ்வையும் வேண்டேன் யான்தான்.—(எ-று.)

எனவே, உயிரையும் அவள்பொருட்டு விடுவேன் என்றானும்.

மெய்ப்பாடு—இளிவரல். பயன்—ஆற்றாமையறிவித்தல்.

## பாலை.

[இது, பிரிவிடை வேறுபட்டாளைக் கண்டு தோழி வற்புறுப் பாட்டுக் கிழத்தி உரைத்தது.]

[குடவாயிற்கீரத்தன் பாடியது.]

உஅக. வெண்மணற் பொதுளிய பைங்காற் கருக்கின்
கொம்மைப் போந்தைக் குடுமி வெண்டோ
டந்த வேம்பி னமலை வான்பூச்
சுரியா ருளைத்தலை பொலியச் சூடிக்
குன்றுதலை மணந்த கானஞ்
சென்றனர் கொல்லோ சேயிழை நமரே.

(இ-ள்.):—பனையின் வெண்தோட்டையும் அத்தத்து வேம்பின் மலரையும் சூடிக் குன்றுகள் கலந்திட்ட கானத்தைச் சென்றார் கொல்? சேயிழாய்! நமர்தாம்.—(எ-று.)

பொதுளிய - நிறைந்த. கருக்கு - கருக்குமட்டை. கொல் - அசைநிலை. 'வெண்மணல்......கானம்' என்றது, அச்செவ்வியை நோக்குவார் என்செவ்வியழிவை நோக்கிலரே என்செய்வது? என்பதாம்.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—ஆற்றாமையறிவித்தல்.

## பாலை.

[இது, வினைவயிற் பிரிந்தவிடத்துத் தோழிகிழத்திக்கு உரைத்தது.]
[நாகம்போத்தன் பாடியது.]

உ௲உ. செவ்விகொள் வரகின் செஞ்சுவற் கலித்த
கௌவை நாற்றின் காரிரு ளோரிலை
நௌவி நாண்மறி கௌவிக் கடன்கழிக்குங்
காரெதிர் தண்புனங் காணிற் கைவளை
நீர்திகழ் சிலம்பி ஞோராங் கவிந்த
வெண்கூ தாளத் தந்தூம்பு புதுமல
ரார்கழல் புகுவீ போலச்
சோர்குவ வல்ல வென்பர்கொ லவரே.

(இ-ள்.):—வரகின் கவைத்த காரிருள்போன்ற ஒருஇலையை மானின் இளங்கன்று கடித்து (உணவுக்) கடனைக் கழிக்கும் கார்ப் பருவத்தை ஏற்ற புனத்தைக் காணின், (நம்) கைவளைகள், மலையிடத்து ஒருபடியாய் அழிந்த கூதாளத்தின் புதுமலர்களில் இதழ்களின் பொருத்துவாய் கழன்று உதிரும் மலரைப்போலக் கழல்வனவல்ல என்று கருதுவரோ அவர்தாம்?—(எ-று.)

எனவே, கார் வரக் காதலர் வருவர்; அதுகாறும் ஆற்றல் அறிவுடைமை என்றாளாம். காரிருளோரிலை - குருத்திலை.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—ஆற்றுவித்தல்.

## பாலை.

[இது, தலைமகன் பொருள்வயிற் பிரிந்தவழி ஆற்றாளெனக் கவன்ற தோழிக்கு அவர் பிரிய ஆற்றேனாயினேனல்லேன், அவர்

போயின கானத்துத்தன்மைகினைந்து வேறுபட்டேனென்று கிழத்தி சொல்லியது.]

[பாலைபாடிய பெருங்கடுங்கோ பாடியது.]

உ அ ௩. உள்ளது சிதைப்போ ருளரெனப் படாஅ
திலோர் வாழ்க்கை யிரவினு மிளிவெனச்
சொல்லிய வன்மை தெளியக் காட்டிச்
சென்றனர் வாழி தோழி யென்றுங்
கூற்றத் தன்ன கொலைவேன் மறவ
ராற்றிருந் தல்கி வழங்குநர்ச் செகுத்த
படுமுடைப் பருந்துபார்த் திருக்கு
நெடுமூ திடைய நீரி லாறே.

(இ-ள்.):—'உள்ளதை அழிப்பார் உள்ளவராகக் கருதப்படார்; வறியார்வாழ்க்கை இரத்தலினும் இழிந்தது' என்று சொல்லியதைத் (நாம்) தெளியும்படி காட்டி, தோழி! வேலையுடைய மறவர் வழியில் தங்கி அருகி வழங்குவாரைக் கொன்றதனாலான முடைநாற்றத்தைப் பருந்து பார்த்து இருக்கும் நீண்ட பழைய துன்பத்தையுடைய ஆற்றிற் சென்றிட்டார்.—(எ-று.)

இரத்தலின் இன்னாததில்லை யாதலால், 'இரவினும் இளிவு' என்றான். கொலைவேல் - உடையான்றொழில் உடைமைமேனின்றது.

மெய்ப்பாடு—அச்சத்தைச் சார்ந்த பெருமிதம். பயன்—ஆற்றாமை நீங்கல்.

## குறிஞ்சி.

[இது, வரைவிடைத் தோழி கிழத்திக்குரைப்பாளாய் உரைத்தது.]

[மீளிவேடித்தன் பாடியது.]

உ அ ச. பொருத யானைப் புகர்முகங் கடுப்ப
மன்றத் தாறுகன் மீமிசைப் பலவுட
னொண்செங் காந்த ளவிழு நாட
னறவ னாயினு மல்ல னாயினு
நம்மே சுவரோ தம்மிலர் கொல்லோ
வரையிற் றாழ்ந்த வால்வெள் ளருவி
கொன்னிலைக் குரம்பையி னிழிதரு
மின்னா திருந்தவிச் சிறுகுடி யோரே.

(இ-ள்.):—பொருத யானையின் முகம்போல, மன்றத்து நெருங்கிய கற்களின்மேல் பலமலர்களோடு செங்காந்தளும் மலரும் நாடன், அறத்தினனாயினும் அல்லனாயினும் நம்மைப் பழிப்பாரோ? (பழித்தற்கு) அவர்தம்மையும் உடன்பெற்றிலரோ? அருவி குடிசையிடத்து இழியும் இச்சிறுகுடியிருப்பினர்.—(எ-று.)

புகர் – புள்ளி. தாழ்ந்த - தங்கிய. கொன் - அச்சம்.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—ஆற்றுவித்தல்.

## பாலை.

[இது, பருவங்கண்டு வேறுபட்டவிடத்து வற்புறுத்துந் தோழிக்கு வன்புறையெதிர் அழிந்து தலைமகள் சொல்லியது.]

[பூதத்தேவன் பாடியது.]

உ௮௫. வைகா வைகல் வைகவும் வாரா
ரெல்லா வெல்லை யெல்லவுந் தோன்றார்
யாண்டுளர் கொல்லோ தோழி யீண்டிவர்
சொல்லிய பருவமோ விதுவே பல்லூழ்
புன்புறப் பேடையொடு பயிரி யின்புற
விமைக்கண் ணேதா கின்றோ வமைத்தலை
யூனசைஇ யொருபருந் திருந்துவக்கும்
வானுயர் பிறங்கன் மலையிறந் தோரே.

(இ-ள்.):—தோழி! மூங்கிலின்மேல் ஊனை விரும்பித் தனித்த பருந்து தங்கும் மலையைக் கடந்தார், [பிரிந்த தலைவர்,] (கூடிய காலத்து) நிற்றலில்லாத நாட்கள் நீண்டுநிற்கவும் வந்திலர்; தோழி! இரவின் எல்லைமுழுதும் காணப்பட்டிலர்; பேடையோடு பழகிப் புறா இமைத்தற்கண் (காண்டலொழிதலின்,) எவ்வகைத்துயரை எய்துகின்றது? அவர் வருவதாய்ச் சொல்லிய பருவம் இதுதான்.—(எ-று.)

பருவத்தியல்பு வேட்கைவிஞ்சச்செய்தல் தோன்ற, 'பேடையொடு......ஏதாகின்று' என்றாள்.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—ஆற்றாமையறிவித்தல்.

## குறிஞ்சி.

[இது, இரந்து பின்னின்ற கிழவன் குறைமறுமாற் கூறியது.]

[எயிற்றியனார் பாடியது.]

உ௮௬. உள்ளிக் காண்பென் போல்வன் முள்ளெயிற்
றமிழ்த மூறுஞ் செவ்வாய்க் கமழகி
லார நாறு மறல்போற் கூந்தற்
பேரமர் மழைக்கண் மடந்தை
மூரன் முறுவலொடு மதைஇய நோக்கே.

(இ-ள்.):—வாயையும், கூந்தலையும், கண்ணையுமுடைய மடந்தையின் புன்சிரிப்பையும், மதர்த்த நோக்கத்தினையும் (இடையீடின்றி) உள்ளிக்காண்பேன் போல்வேன்.—(எ-று.)

எனவே, மடலேறுங் குறிப்புத் தோன்ற மறுதவாறு கூறினானும். எழுதல் அரிதெனமுறுவல், நோக்குஇவற்றை 'உள்ளிக் காண்பேன் போல்வன்' என்றான். இனி, இச்செய்யுள், பாங்கற்குச் சொல்லியதற்கும் ஏற்குமாற்றை உய்த்துணர்க.

மெய்ப்பாடு—இளிவரல். பயன்—ஆற்றாமையறிவித்தல்.

## முல்லை.

[இது, பிரிவிடை வேறுபட்ட கிழத்தி நம்மைத் துறந்து வாராரென்று கவன்றாட்குப் பருவங்காட்டித் தோழி வருவரெனச் சொல்லியது.]

[கச்சிப்பேட்டு நன்னாகையார் பாடியது.]

உ௮௭. அம்ம வாழி தோழி காதல
ரின்னே கண்டுந் துறக்குவர் கொல்லோ
முந்நாட் டிங்க ணிறைபொறுத் தசைஇ
யொதுங்கல் செல்லாப் பசுப்புளி வேட்கைக்
கடுஞ்சூன் மகளிர் போல நீர்கொண்டு
விசும்பிவர் கல்லாது தாங்குபு புணரிச்
செழும்பல் குன்ற நோக்கிப்
பெருங்கலி வான மேர்தரும் பொழுதே.

(இ-ள்.):—கேட்பாயாக, தோழி! பிறைபோல, [வெண்மை நிற முடையவாய்ச்] சென்று, சூன்மகளிரைப்போல, நீரைக் கொண்டு விண்ணில் எறமாட்டாது, குன்றத்தைக் குறித்து மேகம் அழகுதங் திடும் பொழுதில், காதலர், இந்நிகழ்ச்சிகளைக் கண்டும் துறப்பரோ? (துறவார்.)—(எ-று.)

முழுத்திங்களில் மறு உண்மையின் தூவெண்மையையுணர்த்தப் பிறை கூறப்பட்டது. சூன்மகளிர் புளிப்பை விழையும் இயல்பினர்.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—ஆற்றுவித்தல்.

## குறிஞ்சி.

[இது, தலைமகனது வரவுணர்ந்து நம்பெருமான் நமக்கு அன்பில னென்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.]

[கபிலர் பாடியது.]

உ௮௮. கறிவள ரடுக்கத் தாங்கண் முறியருந்து
குரங்கொருங் கிருக்கும் பெருங்கன் னாட
னினிய னாகலி னினைத் தியன்ற
வின்னா மையினு மினிதோ
வினிதெனப் படூஉம் புத்தே ணாடே.

(இ-ள்.):—மிளகுகொடிகள் வளர்ந்த மலையில் மிளகின் தழையை உண்ணும் குரங்குகள் கூடியிருக்கும் பெருமலைநாடன், (நமக்கு) இனியனாவன்; ஆதலின், அவன்இனமாயினமையின் உண்டாய நம் துன்பத்தினும் இனியதோ? இனிதென மதிக்கப்படும் தேவருலகத் தின்பம்.—(எ-று.)

'கறிவளர்......நாடன்' என்றது, குண நோக்காது அடுத்த நம்மை விழையும் தகுதியினன் என்பதாம். பிரிவு, கூட்டத்தில் இன்பத்தை மிகுவித்தலின், 'இன்னாமையினும்......நாடே' என்றாள். நாடு - ஆகு பெயர்.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—இயற்படமொழிதல்.

## முல்லை.

[இது, காலங்கண்டு வேறுபட்டாளெனக் கவன்ற தோழிக்குக் காலத்து வந்திலரென்று வேறுபட்டேனல்லேன், அலரைப்புறத்தார்

கொடியரென்று கூறக்கேட்டு வேறுபட்டேனென்று தலைமகள் சொல்லியது.]

[பெருங்கண்ணன் பாடியது.]

௨௮௯. வளர்பிறை போல வழிவழி பெருகி
இறைவளை நெகிழ்த்த வெவ்வ நோயொடு
குழைபிசைந் தனையே மாகிச் சாஅ
யுழையா னமைமி னுழப்ப தன்றியு
மழையுந் தோழி மான்றுபட் டன்றே
பட்ட மாரி படாஅக் கண்ண
மவர்திறத் திரங்கு நம்மினு
நந்திறத் திரங்குமிவ் வழுங்க லூரே.

(இ-ள்.):—பிறைபோல முறைமுறையே பெருகி, வளையல்களை நெகிழ்த்த (பிரிவு) நோயோடு குழைதலைப் பொருந்திய அத்தகையே மாகி வருந்தி (அவரை) அடுத்தமையின், (நாமே) வருந்துவதன்றியும் மழையும், தோழி! மயக்கங்கொண்டது; மாரியில் துயிலாத கண்ணேமாய் அவர்திறத்து இரங்கும் நம்மைக்காட்டிலும் நந்திறத்து இரங்கிடும் இத்துயர்தரும் ஊர்தான்.—(எ-று.)

இறை-முன்கை. மழையும்-எச்சவும்மை. கண்ணம்-முற்றெச்சம். மெய்ப்பாடு—அழுகை. பயன்—ஆற்றாமை நீங்கல்.

## நெய்தல்.

[இது, வற்புறுத்துந் தோழிக்குத் தலைமகள் அழிவுற்றுச் சொல்லியது.]

[கல்பொருசிறுநுரையார் பாடியது.]

௨௯0. காமந் தாங்குமதி யென்போர் தாமஃ
தறியலர் கொல்லோ வனைமது கையர்கொல்
யாமெங் காதலர்க் காணே மாயிற்
செறிதுனி பெருகிய நெஞ்சமொடு பெருநீர்க்
கல்பொரு சிறுநுரை போல
மெல்ல மெல்ல வில்லா குதுமே.

(இ-ள்.):—காமத்தைப் பொறுத்துக்கொள் என்று கூறுவோர், அப்பொறுக்கலாகாமையை அறிந்திலரோ? பொறுத்திடும் அத்தகைய வல்லமையினரோ? யாம் எம்காதலரைக் காணேமானால் துயர் மிக்க நெஞ்சத்தோடு பெரிய நீரிடத்துண்டான கல்லில் மோதும் சிறுநுரையைப்போல மெல்ல மெல்ல இல்லையாய் விடுவோம்.—(எ-று.)

'கல்பொரு சிறுநுரை' என எடுத்தாண்ட நயம்பற்றிப்போலும் இதனாசிரியர் 'கல்பொருசிறுநுரையார்' எனப்பாராட்டப்பெற்றனர்.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—ஆற்றாமையுணர்த்தல்.

## குறிஞ்சி.

[இது, பாங்கற்கு உரைத்தது.]

[கபிலர்பாடியது.]

உ௯௧. சுடுபுன மருங்கிற் கலித்த வேனற்
படுகிளி கடியுங் கொடிச்சி கைக் குளிரே
யிசையி னிசையா யின்பா ணித்தே
கிளியவள் விளியென விழலொல் லாவே
யதுபுலந் தழுத கண்ணே சாரற்
குண்டுநீர்ப் பைஞ்சுனைப் பூத்த குவளை
வண்டுபயில் பல்லிதழ் கலைஇத்
தண்டுளிக் கேற்ற மலர்போன் றனவே.

(இ-ள்.):—புனத்தில்தினையில் விழுங்கிளியை ஓட்டும் கொடிச்சியின் கைக்குளிர்தான் இனிய இசையையுடையது; (அதனைத் தம்மை வென்ற) அவள் மொழியென்று கிளிகள் வீழாதனவாகும்; அக்கிளிவீழாமையைக் குறித்து அழுத கண்கள் குவளையின் மழைக்கு எதிர்ந்த மலரைப்போன்றன.—(எ-று.)

எவ்விடம்? எவ்வியல்? என்ற பாங்கற்குக் கூறியது. 'அது...... கண்' என்றது, மகளிர்குணத்தில் ஒன்றாய மடத்தை விளக்கியது.

மெய்ப்பாடு—உவகை. பயன்—பாங்கற்கு உணர்த்தல்.

## குறிஞ்சி.

[இது, தோழி இரவுக்குறிக்கண் சிறைப்புறமாகக் காப்புமிகுதி சொல்லியது.]

[பரணர் பாடியது.]

உ௯௨. மண்ணிய சென்ற வொண்ணுத லரிவை
புனறரு பசுங்காய் தின்றதன் றப்பற்
கொன்பதிற் றொன்பது களிற்றொ டவணிறை
பொன்செய் பாவை கொடுப்பவுங் கொள்ளான்
பெண்கொலை புரிந்த நன்னன் போல
வரையா நிரையத்துச் செலீஇயரோ வன்னை
யொருநாள், நகைமுக விருந்தினன் வந்தெனப்
பகைமுக வூரிற் றுஞ்சலோ விலளே.

(இ-ள்.):—குளித்தற்குச் சென்ற அரிவை, புனல் கொணர்ந்த பசுங்காயைத் தின்ற பிழைக்காக (அவள்தமர்) எண்பத்தொருகளிற்றோடு அவள்நிறையுள்ள பொற்பாவையைக் கொடுப்பவும் கொள்ளானாய் அப்பெண்ணைக் கொலைபுரிந்திட்ட நன்னனைப்போல நீக்காத நிரயத்துப் போவாளாக அன்னை; ஒருநாள் விருந்தினளாக வந்ததனால் பகையை முகத்திற் காட்டும் ஊரில் துயிலுதல் இலளாயினள்; (ஆதலால்.)—(எ-று.)

பறித்திலள்; பழமுமன்று; அவனதே யென்னும் துணிவும் இல்லை; இவள் எடாதொழியின் அவற்கே கிடைத்தலும் ஐயமுடையது எனுமிவை புலப்பட, 'புனறரு பசுங்காய்' எனப்பட்டது.

மெய்ப்பாடு—அச்சத்தைச் சார்ந்த பெருமிதம். பயன்—இடையூறுணர்த்தல்.

## மருதம்.

[இது, பரத்தையிற் பிரிந்து வந்த கிழவற்கு வாயிலாகப் புக்க தோழிக்குக் கிழத்தி உரைத்தது.]

[கள்ளிலாத்திரையன் பாடியது.]

உ௬௫. கள்ளிற் கேளி ரார்த்திய வுள்ளூர்ப்
பாளை தந்த பஞ்சியங் குறுங்கா
யோங்கிரும் பெண்ணை நுங்கொடு பெயரு
மாதி யருமன் மூதூ ரன்ன
வயல்வெள் ளாம்பல் பகைநெ றித்தழை
தித்திக் குறங்கி னாழ்மா றலைப்ப
வருமோ சேயிழை யந்திற்
கொழுநர்க் காணிய வளியேன் யானே.

(இ-ள்.):—கள்ளினாலே கேளிரை நுகர்வித்த பாளைதந்த பனை நுங்கோடு மீளும் 'ஆதியருமன்' என்பானது மூதூரைப்போன்ற சேயிழையாள், [பரத்தை,] ஆம்பற்றழை குறங்கை வருத்த அப்பழனப் பொய்கைக்கண் கொழுநரைக் காணுதற்கு வருவாள்; அளிக்கத்தக்கேன் யான்தான்.—(எ-று.)

கேளிர் - ஈண்டுச்சான்றோர். மூதூர் - ஓர்ஊர்போலும். 'கள்ளின் ......மூதூரன்ன, சேயிழை' என்றது, ஒழுக்கமில்லாரால் துய்க்கப் படும் பரத்தையின் இழிவைப் புலப்படுத்திற்று. 'கொழூஉர்' என்றதும் இதனை வலியுறுத்தும்.

மெய்ப்பாடு—இளிவரல். பயன்—வாயினேர்தல்.

## நெய்தல்.

[இது, பகற்குறிக்கண் தலைமகன் வந்தவிடத்துத் தோழி செறிப் பறிவுறீஇயது.]

[அஞ்சியாந்தை பாடியது.]

உகூச. கடலுட னாடியுங் கான லல்கியுந்
தொடலை யாயமொடு தழூஉவணி யயர்ந்து
நொதுமலர் போலக் கதுமென வந்து
முயங்கினன் செலினே யலர்ந்தன்று மன்னே
தித்தி பரந்த பணையெழின் மென்றோ
டிருந்திழை துயல்வுக்கோட் டசைத்த பசுங்கழை
தழையினு முழையிற் போகான் [த்
றுன்றந் தனன்யாய் காத்தோம் பல்லே.

(இ-ள்.):—கடலில் உடனாடியும், கானலில் தங்கியும், ஆயத்தாரோடு குரவைக்கூத்தாடியும் ஏதிலரைப்போல வந்து கூடிப்போவானால், அலர்வதாயிற்று; தழையிடத்தும் செல்லான்; தாய் காத்தோம்பலைத் தந்தனன்.—(எ-று.)

தழூஉவணி - குரவை. தித்தி - தேமல். துயல்வு - அசைவு. உழை - மான்.

மெய்ப்பாடு—இளிவரல். பயன்—செறிப்பறிவுறுத்தல்.

## மருதம்.

[இது, வாயில்வேண்டிச் சென்ற கிழவற்குத் தோழி உரைத்தது.]

[தூங்கலோரி பாடியது.]

௨௯௫. உடுத்துந் தொடுத்தும் பூண்டுஞ் செரீஇயுந்
தழையணிப் பொலிந்த வாயமொடு துவன்றி
விழவொடு வின்றாய் நீயே யஃதே
யோரா வல்சிச் சீரில் வாழ்க்கைப்
பெருநலக் குறுமகன் வந்தென
வினிவிழ வாயிற் றென்னுமிவ் வூரே.

(இ-ள்.):—(பரத்தைமகளிர்) திரளோடு (புனலாட்டு) விழவைக் கொண்டு நின்றாய் நீதான்; இப்பொழுது, ஆயலாகாத உணவின் சீரையுடைய இல்வாழ்க்கையைக் கொண்ட சிறுமகன் வந்ததால் மேல் விழவுண்டாயிற்று என்னும் இவ்வூர்தான்.—(எ-று.)

பரத்தையரை விட்டு மீண்டமையைப் பாராட்டும் ஊர் என்பாள், 'ஓரா.........இவ்வூர்' என்றாள்.

மெய்ப்பாடு—இளிவரல். பயன்—வாயினேர்தல்.

## நெய்தல்.

[இது, காணும் பொழுதிற் காணப்பொழுது பெரிதாகலான் ஆற்றாளாய தலைமகள் தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழிக்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது.]

[பெரும்பாக்கன் பாடியது.]

௨௯௬. அம்ம வாழி தோழி புன்னை
யலங்குசினை யிருந்த வஞ்சிறை நாரை
யறுகழிச் சிறுமீன் முனையிற் செறுவிற்
கண்ணாறு நெய்தல் கதிரொடு நயக்குந்
தண்ணந் துறைவற் காணின் முன்னின்று
கடிய கழற லோம்புமதி தொடியோ
ளின்ன ளாகத் துறத்த
லும்மிற் றகுமோ வென்றனை துணிந்தே.

(இ-ள்.):—கேட்பாயாக, தோழி! நாரை சிறுமீனை வெறுப்பின் நெய்தன்மலரைக் கதிரோடு விழையும் துறைவனைக் காணின், கழ

ரூதி ; வளையினள் இத்தன்மையளாக விடுதல் உம்மிடம் உண்டாவது தகுமா ? என்பாய் துணிந்து.—(எ-று.)

அறு கழி - நீரற்ற கழி. கண் நாறும் – கண்போலத் தோன்றும். 'நாரை.........துறைவன்' என்றது, பகற்குறி வாய்த்தல் அரிதாயின், இரவுக்குறியை விழைந்துகளவைக்கைவிடாதுவருந்துவன்என்பதாம்.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—வரைவுகடாதல்.

## குறிஞ்சி.

[இது, தோழி வரைவுமலிந்தது.]

[காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணன் பாடியது.]

உகூஎ. அவ்விளிம் புரீஇய கொடுஞ்சிலை மறவர்
வைவார் வாளி விறற்பகை பேணார்
மாறுநின் றெதிர்ந்த வாறுசெல் வம்பல
ருவலிடு பதுக்கை யூரிற் றோன்றுங்
கல்லுயர் நனந்தலை நல்ல கூறிப்
புணர்ந்துடன் போதல் பொருளென
வுணர்ந்தேன் மன்றவவ ருணரா வூங்கே.

(இ-ள்.):—மறவர் அம்பின் பகையைப் பொருள்செய்யாராய் எதிர்த்து இறந்திட்ட புதியார்மேல் இட்டுவைத்த இலைக்குவை ஊர் போலத் தோன்றும் பரந்த இடத்தில், நல்லவற்றைக் கூறிக்கொண்டு (நீ அவருடன்) கூடிப்போதல் பொருளாகுமென உணர்ந்திட்டேன், துணிவாக, (வரையும்) அவரும் உணராத முன்னர்.—(எ-று.)

எனவே, தமர் வரைவுநேர்ந்தமையின் அச்சமின்றி உடன்போதலாம் என்றாளாம். அ விளிம்பு உரீஇய - அழகிய விளிம்பு தேய்ந்த.

மெய்ப்பாடு—உவகை. பயன்—மகிழ்வித்தல்.

## குறிஞ்சி.

[இது, கிழத்திக்குத் தோழி குறைமறுமற் கூறியது.]

[பரணர் பாடியது.]

உ௯௮. சேரி சேர மெல்ல வந்துவந்
தரிது வாய்விட் டினிய கூறி
வைகறோறு நிறம்பெயர்ந் துறையும்
வன்மைத னேக்க நினையாய் தோழி
யின்கடுங் களிற்றி னகுதை தந்தை
வெண்கடைச் சிறுகோ லகவன் மகளிர்
மடப்பிடிப் பரிசின் மானப்
பிறிதொன் றுகுறித்தவ னெடும்புற நிலையே.

(இ-ள்.):—சேரியைப் பொருந்தவந்து, அரிதாக வாய்திறந்து இனியவற்றைக் கூறி நாடோறும் நிறம்மாறி உறையும் (அவன் உள்ளத்து) வன்மைக்குறிப்பை நினைத்திலை; தோழி! அவனது (நமது) புறக்கடையிருப்பு,'அகுதை' என்னுந் தந்தையன்னனது ஆடும் மகளிர் பிடிப்பரிசிலைப்போல, மற்றொன்றையும் குறித்து (இருப்பதாகின்றது.)—(எ-று.)

வெண்கடை சிறுகோல் - வெள்ளிப்பூணிட்ட கடையையுடைய தலைக்கோல். பிறிதொன்று - மடலேறுதல்.

மெய்ப்பாடு—பெருமிதம்- பயன்—குறையேற்பித்தல்.

## நெய்தல்.

[இது, சிறைப்புறமாகத் தோழிக்குக் கிழத்தி உரைத்தது.]

[வெண்மணிப்பூதியார் பாடியது.]

உ௯௯. இதுமற் றெவனோ தோழி முதுநீர்ப்
புணரி திளைக்கும் புள்ளிமிழ் கான
லிணர்வீழ் புன்னை யெக்கர் நீழற்
புணர்குறி வாய்த்த ஞான்றைக் கொண்கற்
கண்டன மன்னெங் கண்ணே யவன்சொற்
கேட்டன மன்னெஞ் செவியே மற்றவன்
மணப்பின் மாணல மெய்தித்
தணப்பி னெகிழ்ப தடமென் றோளே.

(இ-ள்.):—கானலிற் புன்னைநீழலிற் குறிவாய்த்தவன்று கொண் கனைக் கண்டன கண்கள்; அவன்சொற்களைக் கேட்டன செவி கள்; தோள்கள்தாம், கூடின் அழகைப்பெற்றுப் பிரியின் நெகிழ்வன வாயின; இஃதென்னை? தோழி!—(எ-று.)

மெய்ப்பாடு—அழுகை. பயன்—ஆற்றாமையறிவித்தல்.

## குறிஞ்சி.

[இது, இயற்கைப்புணர்ச்சிபுணர்ந்த தலைமகன் பிரிவச்சமும் வன் புறையுங் கூறியது.]

[சிறைக்குடியாந்தையார் பாடியது.]

கூ00. குவளை நாறுங் குவையிருங் கூந்த
லாம்ப னாறுந் தேம்பொதி துவர்வாய்க்
குண்டுநீர்த் தாமரைக் கொங்கி னன்ன
நுண்பஃ றித்தி மாஅ யோயே
நீயே, அஞ்ச லென்றவென் சொல்லஞ் சலையே
யானே, குறுங்கா லன்னங் குவவுமணற் சேக்குங்
கடல்சூழ் மண்டிலம் பெறினும்
விடல்சூ ழிலன்யா னின்னுடை நட்பே.

(இ-ள்.):—கூந்தலையும், வாயையும், தேமலையுமுடைய மாமை நிறத்தோய்! நீதான், அஞ்சாதி என்ற என்சொல்லைக்கொண்டு அஞ் சலை; யான்தான், நிலவுலகத்தைப் பெறுவதாயினும் நின்னட்பை விடு தலைச் சூழ்வேனல்லேன்.—(எ-று.)

'விடல்சூழிலன்' என்றது, பிரிவச்சமும் வன்புறையுமாயிற்று.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—பிரிவச்சமுணர்த்தல்.

## குறிஞ்சி.

[இது, வரைவிடைவைப்ப ஆற்றகிற்றியோவென்ற தோழிக்குக் கிழத்தி சொல்லியது.]

[குன்றியன் பாடியது.]

நடுoசு. முழவுத் தலைய தடவுநிலைப் பெண்ணைக்
கொழுமட லிழைத்த சிறுபொற் குடம்பைக்
கருங்கா லன்றிற் காமர் கடுஞ்சூல்
வயவுப்பெடை யகவும் பானாட் கங்குன்
மன்றம் போழு மினமணி நெடுந்தேர்
வாரா தாயினும் வருவது போலச்
செவிமுத லிசைக்கு மரவமொடு
துயின்மறந் தனவாற் றோழியென் கண்ணே.

(இ-ள்.):—பனையின் மடன்மேலுள்ள கூட்டில், அன்றிற்பெடை அகவும் நள்ளிரவில் தேர்வாராதாயினும், செவியடியில் ஒலிக்கும் தேர் மணிஒலியோடு என்கண்கள் துயின்றில.—(எ-று.)

மெய்ப்பாடு—அழுகை. பயன்—ஆற்றுமையுணர்த்தல்.

## குறிஞ்சி.

[இது, வரைவிடைக் கவன்ற தோழிக்குக் கிழத்தி சொல்லியது.]

[மாங்குடிகிழார் பாடியது.]

நடுoஉ. உரைத்திசிற் றோழியது புரைத்தோ வன்றே
யருந்துய ருழத்தலு மாற்று மதன்றலைப்
பெரும்பிறி தாக லதனினு மஞ்சுது
மன்றோ வின்னு நன்மலை நாடன்
பிரியா நண்பின ரிருவரு மென்னு
மலரதற் கஞ்சினன் கொல்லோ
துஞ்சூர் யாமத் தானுமென்
னெஞ்சத் தல்லது வரவறி யானே.

(இ-ள்.):—உரைப்பாய், தோழி! அது குற்றமுடையதன்று; அருந்துயரால் வருந்தலையும் பொறோம்; இறந்துபாட்டை அத்துய ருழத்தலினும் அஞ்சுவோம்; அந்தோ! மலைநாடன் பிரியாத நண்பினர் இருவரும் என்பான்; அலரை அஞ்சினனோ? ஊர்துஞ்சும் யாமத்திலும் நெஞ்சத்திடத்தன்றி நேர்வந்திலன் (ஆதலால்.)—(எ-று.)

[அம்மூவனார் பாடியது.]

௩0௬. மெல்லிய வினிய மேவரு தகுந
விவைமொழி யாமெனச் சொல்லினு மவைநீ
மறத்தியோ வாழியென் னெஞ்சே பலவுடன்
காமர் மாஅத் தாதமர் பூவின்
வண்டுவீழ் பயிருங் கானற்
றண்கடற் சேர்ப்பனைக் கண்ட பின்னே.

(இ-ள்.):—(அவன்சொற்கள்,) மெல்லியன; இனியன; விரும்புந்தகுதியன; என்று கூறினும், நெஞ்சே! பலவற்றொடு, மாவின் பூவில் வண்டு வீழ்ந்திடும் சேர்ப்பனைக் கண்டபின் (அவற்றை நீ) மறத்தியோ.—(எ-று.)

வாய் சோர்ந்து - வாய் தவறி.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—அயர்வுயிர்த்தல்.

## பாலை.

[இது, பிரிவிடைக் கடுஞ்சொற்சொல்லிய தோழிக்குக் கிழத்தி உரைத்தது.]

[கடம்பனூர்ச் சாண்டிலியன் பாடியது.]

௩0௭. வளையுடைத் தனைய தாகிப் பலர்தொழச்
செவ்வாய் வானத் தையெனத் தோன்றி
யின்னம் பிறந்தன்று பிறையே யன்றோ
மறந்தனர் கொல்லோ தாமே களிறுதன்
னுயங்குநடை மடப்பிடி வருந்த நோனாது
நிலையுயர் யாஅத் துலையக் குத்தி
வெண்ணார் கொண்டு கைசுவைத் தண்ணாந்
தழுங்க னெஞ்சமொடு முழங்கு
மத்த நீளிடை யழப்பிரிந் தோரே.

(இ-ள்.):—களிறு பிடியின் துயரைப் பொறாது யாமரத்தைக் குத்தி ஆத்தியைக் கைக்கொண்டு முழங்கும் அத்தத்து வழியில் பிரிந்தார், மறந்தாரோ? செம்மைவாய்ந்த வானத்து வளையை உடைத்தாற்போன்றதாய்ப் பிறை தோன்றியது.—(எ-று.)

எனவே, மாலையில் எவ்வாறு ஆற்றுவேன்? என்றாளாம்.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—ஆற்றாமையறிவித்தல்.

## குறிஞ்சி.

[இது, வரைவிடைக் கிழத்தியை வன்சொற்சொல்லி வற்புறுத்தியது.]

[பெருந்தோட்குறுஞ்சாத்தன் பாடியது.]

௩௦௮. சோலை வாழை சுரித்துகும் பிணிய
வணங்குடை யிருந்தலை நீவலின் மதனழிந்து
மயங்குதுய ருற்ற மையல் வேழ
முயங்குயிர் மடப்பிடி யுலைபுறந் தைவர
வாமிழி சிலம்பி னரிதுகண் படுக்கு
மாமலை நாடன் கேண்மை
காமந் தருவதோர் கைதாழ்ந் தன்றே.

(இ-ள்.):—சோலையில் வாழையின் தலையை நீவுதலான் மதமழிந்து துயருற்ற களிறு, பிடி புறத்தைத் தடவ உறங்கும் மலைநாடனது கேண்மை, காமத்தைத் தருவதான ஓர்முறைமையற்றதன்று.-(எ-று.)

உகும்பிணிய - விரியும் பிணிப்புள்ள. உயிர்-உயிர்ப்பு. ஆம் - நீர்.

உள்ளுறை:—'சோலை......மலைநாடன்' என்றது, இளைப்பையறிந்து நீ களையுமாறு இல்லிடத்து மகிழ்ந்திருப்பான் என்பதாம்.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—ஆற்றுவித்தல்.

## மருதம்.

[இது, பரத்தையிற் பிரிந்துவந்த கிழவற்குத் தோழி வாயினேர்ந்தது.]

[உறையூர்ச்சல்லியன்குமாரன் பாடியது.]

௩௦௯. கைவினை மாக்கடஞ் செய்வினை முடிமார்
சுரும்புண மலர்ந்த வாசங் கீழ்ப்ப
நடன வரம்பின் வாடிய விடினுங்
கொடியரோ நிலம்பெயர்ந் துறைவே மென்னாது
பெயர்த்துங் கடிந்த செறுவிற் பூக்கு
நின்னூர், நெய்த லனையே மெம்பெரும நீயெமக்
கின்னா இயபல செய்யினு
நின்னின் றமைதல் வல்லா மாறே.

(இ-ள்.):—உழவர் களைபறித்திடுவாராய் வரப்பிடத்து வாடும் படி (பறித்துஎறிந்து) விடினும் உழவர் எருழும் நிலத்தை விடாது மீண்டும் அவ்வயலில் மலரும் நின்னூர்நெய்தலை நிகர்ப்பாய்; எம் பெரும! நீ எமக்குத் துயர்தரும் பலவற்றைச் செய்யினும், நின்னை யின்றி அமைந்திருக்கும்ஆற்றலற்றேமாதலால், (நேர்வோம்.)-(எ-று.)

செய் வினை - வயலில் செய்யும் தொழில். இன்னாங்கிய - விகாரம்.

மெய்ப்பாடு—இளிவரல். பயன்—வாயினேர்தல்.

## நெய்தல்.

[இது, வரைவிடை முனிந்து கிழத்தி தோழிக்கு உரைத்தது.]

[பெருங்கண்ணன் பாடியது.]

௩௧0. புள்ளும் புலம்பின பூவுங் கூம்பின
கானலும் புலம்புபெரி துடைத்தே வானமு
நம்மே போலு மம்மர்த் தாகி
யெல்லை கழியப் புல்லென் றன்றே
யின்னு முளனே தோழி யிந்நிலை
தண்ணிய கமழு ஞாழற்
றண்ணந் துறைவர்க் குரைக்குநர் பெறினே.

(இ-ள்.):—புட்களும் ஒலித்தன; தாமரையும் குவிந்திட்டன; கானலும் தனிமையை உடையதாயிற்று; வானமும் நம்போல் மயக் கத்தை அடைந்து பகல் நீங்கப் புற்கென்றது; இன்னும் உளனாகின் றேனே? தோழி! எனது இந்நிலைமையைத் துறைவர்க்கு உரைப்பா ரைப் பெறின், (உய்வேன்.)—(எ-று.)

மெய்ப்பாடு—அழுகை. பயன்—ஆற்றாமையுணர்த்தல்.

## நெய்தல்.

[இது, அலரஞ்சிய தலைமகள் தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழிக்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது.]

[சேந்தன்கீரன் பாடியது.]

௩௧௧. அலர்யாங் கொழிவ தோழி பெருங்கடற்
புலவுநா றகன்றுறை வலவன் றாங்கவு
நில்லாது கழிந்த கல்லென் கடுந்தேர்
யான்கண் டனனோ விலனே பானா
ளோங்கல் வெண்மணற் றாழ்ந்த புன்னைத்
தாதுசேர் நிகர்மலர் கொய்யு
மாய மெல்லா முடன்கண் டன்றே.

(இ-ள்.):—தோழி ! கடற்றுறையிற் பாகன் நிறுத்தவும் நில்லாது சென்ற தேரை யான் கண்டிலேன் ; நடுப்பகலில் புன்னைமலரைக் கொய்யும் ஆயமெல்லாம் ஒருங்கே கண்டது; (ஆதலின்,) அலர் யாங்ஙனம் ஒழிவனவாம்.—(எ-று.)

கல் - ஒலிக்குறிப்பு. பானாள் - முன்பின்னாகத் தொக்க ஆறன்றொகை.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—வரைவுகடாதல்.

## குறிஞ்சி.

[இது, இரவுக்குறிவந்து நீங்குகின்ற தலைமகன் தன்னெஞ்சிற்கு வரைவுடைமைவேட்பக் கூறியது.]

[கபிலர் பாடியது.]

௩௧௨. இரண்டறி களவினங் காத லோளே
முரண்கொ டுப்பிற் செவ்வேன் மலையன்
முள்ளூர்க் கான நாற வந்து
நள்ளென் கங்கு னம்மோ ரன்னள்
கூந்தல் வேய்ந்த விரவுமல ருதிர்த்துச்
சாந்துளர் நறுங்கதுப் பெண்ணெய் நீவி
யமரா முகத்த ளாகித்
தமரோ ரன்னள் வைகறை யானே.

(இ-ள்.):—(நெஞ்சே !) நம்காதலள், மலையன்முள்ளூர்க்கானத்தைப்போற் கமழவந்து இரவில் நம்மிடம் ஒருபடியினள் ; கூந்தன் மலரை உதிர்த்து, கதுப்பெண்ணையை நீத்து, விருப்பில்லா முகத்தளாய்த் தமரிடம் வைகறையில் ஒருபடியினள்; இவ்விரண்டையும் அறிந்துகொள்; களவிடத்து.—(எ-று )

துப்பு - வலி. விரவு மலர் - பலமலர். கதுப்பு - கூந்தல்.
மெய்ப்பாடு—இளிவரல். பயன்—வரைவுடன்படுத்தல்.

## நெய்தல்.

[இது, இரவுக்குறிவந்து ஒழுகுங்காலத்துத் தலைமகனது வரவுணர்ந்து பண்பிலரென்று இயற்பழித்த தோழிக்குஅவரொடு பிறந்த நட்பு அழியாத நட்பன்றோ? என்று சிறைப்புறமாகத் தலைமகள் இயற்படமொழிந்தது.]

௩௧௩. பெருங்கடற் றிரையது சிறுவெண் காக்கை
நீத்துநீ ரிருங்கழி யிரைதேர்ந் துண்டு
பூக்கமழ் பொதும்பிற் சேக்குந் துறைவனொ
டியாத்தேம் யாத்தன்று நட்பே
யவிழ்த்தற் கரிதது முடிந்தமைந் தன்றே.

(இ-ள்.):—சிறுவெண்காக்கை கழியில் இரையை அருந்தி மலர்ச் சோலையில் தங்கும் துறைவனோடு தொடர்புபட்டோம்; நட்பும் கட்டுற்றது; அது, முடிந்து அமைந்தது; (ஆதலின்;) அவிழ்த்தற்கு அரியது.—(எ-று.)

உள்ளுறை:—'சிறுவெண்காக்கை......துறைவன்' என்றது, நலங்கெடக் களவில் திளைத்து இனிய தன்மனையில் தங்குகின்றான் என்பதாம்; இஃது இயற்பழித்தற்குத் தோழி கூறியதைத் தலைமகள் கொண்டு கூறியது.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—இயற்படமொழிதல்.

## முல்லை.

[இது, பிரிவிடை வேறுபட்ட கிழத்தி வற்புறுத்துந் தோழிக்குப் பருவங்காட்டி அழிந்து கூறியது.]

[பெருஞ்சாத்தன் பாடியது.]

௩௧௪. சேயுயர் விசும்பி னீருறு கமஞ்சூற்
றண்குர லெழிலி யொண்சுட ரிமைப்பப்
பெயரும் மிருளிய புலம்புகொண் மாலையும்
வாரார் வாழி தோழி வருஉ
மின்னுற ழிளமுலை ஞெமுங்க
வின்னு வைப்பிற் சுரனிறந் தோரே.

(இ-ள்.):—தோழி ! மேகம் கதிரவனால் ஒளிவிட மேன்மேலும் இருண்ட மாலையும் வந்திடும்; முல்லையைக் கூடச் சுரணிறந்தார் வாரார்.—(எ-று.)

மெய்ப்பாடு—அழுகை. பயன்—ஆற்றாமையறிவித்தல்.

## குறிஞ்சி.

[இது, வரைவிடை ஆற்றகிற்றியோ? வேறுபடுகின்றாயென்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.]

[தும்பிசேர்கீரன் பாடியது.]

நகரு. எழுதரு மதியங் கடற்கண் டாஅங்
கொழுகுவெள் ளருவி யோங்குமலை நாடன்
ஞாயிற் றனையனென் றோழி
நெருஞ்சி யனையவென் பெரும்பணைத் தோளே.

(இ-ள்.):—உதிக்கும் மதியத்தைக் கடலிற் கண்டாற்போல ஒழுகும் அருவியையுடைய மலைநாடன் ஞாயிற்றை நிகர்ப்பான்; எனது தோள்கள் நெருஞ்சிமலரை நிகர்ப்பனவாகும்.—(எ-று.)

எனவே, அவன்முகம் மாறாவாறு ஒழுகுவல் என்றாளாம்.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—ஆற்றுமாறறிவித்தல்.

## நெய்தல்.

[இது, வரைவிடை வேறுபடுகின்றாயென்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.]

[தும்பிசேர்கீரன் பாடியது.]

நகச. ஆய்வளை நெகிழவு மயர்வுமெய் நிற்பவு
நோய்மலி வருத்த மன்னை யறியி
னுளனே வாழி தோழி விளியா
தரவுக் கடல்பொரு விரவுமண லடைகரை
யோரை மகளி ரோராங்குக் காட்ட
வாய்ந்த வலவன் றன்புறு துனைப்பரி
யோங்குவா லருவி விரிதிரை களையுந்
துறைவன் சொல்லோ பிறவா யினவே.

(இ-ள்.):—வளை நெகிழவும், அயர்ச்சி மெய்யில் நிலைக்கவும்நோய் மிகும் வருத்தத்தைத் தாய் அறியின், தோழி! இறவாமல் உள்ளேனாவேனோ? கடற்கரையில் ஓரைமகளிர் ஒருங்கே காட்ட விரைந்த குதிரையின்செலவை அலைகள் அகற்றும் துறைவன் சொற்களோ வேறாயின.—(எ-று.)

அருவி விரி திரை - அருவிபோல விரிந்த அலை.

மெய்ப்பாடு—அச்சத்தைச் சார்ந்த பெருமிதம். பயன்—ஆற்றாமை நீக்கல்.

## குறிஞ்சி.

[இது, பிரிவிடைக் கிழத்தியைத் தோழி வற்புறுத்தியது.]

[மதுரைக்கண்டராதத்தன் பாடியது.]

௩௧௭. புரிமட மரையான் கருநரை நல்லேறு
தீம்புளி நெல்லி மாந்தி யயலது
தேம்பாய் மாமலர் நடுங்க வெய்துயிர்த்
தோங்குமலைப் பைஞ்சுனை பருகு நாட
னம்மைவிட் டமையுமோ மற்றே கைம்மிக
வடபுல வாடைக் கழிமழை
தென்புலம் படருந் தண்பனி நாளே.

(இ-ள்.):—மரையாவின் ஏறு, நெல்லியைத் தின்று சுனைநீரைப் பருகும் நாடன், மிகுந்தமழை தென்றிசையிற் படருங் குளிர்ந்த பனி நாளில் நம்மைவிட்டு அமைவானோ?—(எ-று.)

புரி மடம் - விரும்பும் இளமை. கரு நரை - பெரிய வெள்ளிய.

உள்ளுறை:—'புரிமடமரையான்......நாடன்' என்றது, நின்னை விட்டுப் பிரியாது விரும்பியவற்றை நுகருமாறு வரைந்து கொள்வான் என்பதாம்.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—ஆற்றுவித்தல்.

## நெய்தல்.

[இது, கிழவன் கேட்கும் அண்மையனாகத் தோழிக்குக் கிழத்தி உரைத்தது.]

[அம்மூவனார் பாடியது.]

௩௪அ. எறிதருக் கலித்த விலங்குநீர்ப் பரப்பி
னறுவீ ஞாழலொடு புன்னை தாஅய்
வெறியயர் களத்தினிற் றோன்றுந் துறைவன்
குறியா னாயினுங் குறிப்பினும் பிறிதொன்
றறியார்க் குரைப்பலோ யானே வேய்கவிப்
பணையெழின் மென்றோ ளணைஇய வந்நாட்
பிழையா வஞ்சின ஞ் செய்த
கள்வனுங் கடவனும் புணைவனுந் தானே.

(இ-ள்.):—வெட்டிய மரங்கள் தழைத்த நீர்த்துறையில், ஞாழல் புன்னை இவற்றின் மலர்கள் பரந்து வெறியாடுங் களத்தைப்போலத் தோன்றுந் துறைவன், (நம்துயரைக்) குறியாவிடினும் குறித்திடினும் ஒன்றையும் அறியார்க்குச் சொல்லுவேனோ யான்தான்? தோளை அணைந்தவன்று சூளைச்செய்த கள்வனும் (காக்கும்) கடமையனும் உதவுபவனும் அவனே.—(எ-று.)

வேய் கவிப்பு அணை - மூங்கிலன்ன வளைவு அமைந்த. 'எறிதரு... ...துறைவன்' என்றது, தன்மையுணரலாகாவாறு ஒழுகுகின்றான் என்பதாம்.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—வரைவுகடாதல்.

## முல்லை.

[இது, * பருவவரவின்கண் வேறுபட்ட கிழத்திக்கு வன்புறை யெதிர் அழிந்து சொற்றது.]

[தாயங்கண்ணன் பாடியது.]

௩௪௯. மானேறு மடப்பிணை தழீஇ மருள்கூர்ந்து
கான நண்ணிய புதன்மறைந் தொடுங்கவுங்
கையுடை நன்மாப் பிடியொடு பொருந்தி
யமையணி மருங்கின் மலையகஞ் சேரவு
மாலை வந்தன்று மாரி மாமழை
பொன்னேர் மேனி நன்னலஞ் சிதைத்தோ
ரின்னும் வாரா ராயி
னென்னாந் தோழிநம் மின்னுயிர் நிலையே.

* கிழத்தி தோழிக்குச் சொல்லியதெனின் பொருந்துவதாகும்.

(இ-ள்.):—மானேறு பிணையைத் தழுவிப் புதலில் மறைந்தொடுங்கவும், களிறு பிடியோடு கூடி மலையகத்தை அடையவும் மாரிக்காலத்துப் பெருமழையுடைய மாலை வந்திட்டது; மேனிநலத்தைக் கெடுத்தோர் வாராராயின், நம் இனிய உயிரிருப்பு என்னும்? (எ-று.)

மெய்ப்பாடு—அழுகை. பயன்—ஆற்றாமையுணர்த்தல்.

## நெய்தல்.

[இது, அலரஞ்சி ஆற்றாளாகிய தலைமகள் தலைவன் கேட்பாளாகத் தோழிக்குக் கூறியது.]

[தும்பிசேர்கீரன் பாடியது.]

கூ௨0. பெருங்கடற் பரதவர் கொண்மீ னுணங்கலி
னிருங்கழி கொண்ட விறவின் வாடலொடு
நிலவுநிற வெண்மணல் புல்லப் பலவுட
னெக்கர்தொறும் பரிக்குந் துறைவனொ டொரு
ணக்கதோர் பழியு மிலமே போதவிழ்
பொன்னிணர் மரீஇய புள்ளிமிழ் பொங்கர்ப் [நா
புன்னையஞ் சேரி யிவ்வூர்
கொன்னலர் தூற்றுங் கொடுமை யானே.

(இ-ள்.):—பரதவர் கடலிற் கொண்ட மீன்வற்றலும், கழியிற் கொண்ட இறாமீன் வாடலும், மற்றும் பலவகை மீன்வற்றல்களும் வெண்மணலிடத்துப் பொருந்த எக்கர்கள்தோறும் (அவற்றைத்) தாங்கிக்கொண்டிருக்கும் துறைவனோடு ஒருநாள் நகைத்து விளையாடிய பழியும் இல்லோம்; இவ்வூர் அச்சந்தரும் அலரைத் தூற்றுவதாகும் கொடுமையால்.—(எ-று.)

'பெருங்கடல்......துறைவன்' என்றது, தன்தீயவொழுக்கம் நாற்றிசையும் பரவவும் பொருள்செய்திலன் என்பதாம். 'புன்னையஞ் சேரி யிவ்வூர்' என்றது, அலர் தூற்றும் ஒற்றுமையால்.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—வரைவுகடாதல்.

## குறிஞ்சி.

[இது, தோழி கிழத்திக்கு நொதுமலர் வரையுமிடத்து அறத்தொடு நிற்பனென்றது.]

௩௨௧. மலைச்சேர், அஞ்செஞ் சாந்தி ஞர மார்பினன்
சுனைப்பூங் குவளைச் சுரும்பார் கண்ணிய
னடுநாள் வந்து நம்மனைப் பெயரு
மடவர லரிவைநின் மார்பம ரின்றுணை
மன்ற மரையா விரிய வேறட்டுச்
செங்க ணிரும்புலி குழுமு மதனான்
மறைத்தற் காலையோ வன்றே
திறப்பல் வாழிவேண் டன்னைநங் கதவே.

(இ-ள்.):—சாந்தத்தையும் மாலையையுமுடைய மார்பினனும் குவளைக்கண்ணியனுமாஞன், நள்ளிரவில் வந்து நம்மனையினின்றும்மீளும் நின்மார்பை விழையுந் துணையாவான்; அரிவையே! மரையா அஞ்சும்படி ஏறட்டுக்கொண்டு புலி சுற்றுவதாகும்; அதனால், மறைக்கும் காலமோ அன்று; ஆதலின், விரும்பும் தோழி! நம் (மறைக்) கதவைத்திறப்பல். [களவை வெளிப்படுத்தி அறத்தொடு நிற்பல்.]—(எ-று.)

'மன்ற......குழுமும்' என்றது, நொதுமலர் வரைவைக் கருதிச் சூழ்கின்றனர் என்பதாம்; இது பிறிது மொழிதல். 'மலைச்சே ரஞ்சாந்தி ஞர மார்பினன்' என்றும் பாடம்.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—ஆற்றுவித்தல்.

## குறிஞ்சி.

[இது, தலைமகன் வரைவுணர்ந்து தோழிக்குத் தலைமகள் இயற்பட மொழிந்தது.]

[ஐயூர் முடவன் பாடியது.]

௩௨௨. அமர்க்க ணமா னஞ்செவிக் குழவி
கானவ ரெடுப்ப வெரீஇ யினந்தீர்ந்து
கான நண்ணிய சிறுகுடிப் பட்டென
வினைய ரோம்ப மரீஇயவ ணயர்ந்து
மனையுறை வாழ்க்கை வல்சி யாங்கு
மருவி னினியவு முளவோ
செல்வாந் தோழி யொல்வாங்கு நடந்தே.

(இ-ள்.):—ஆமான்கன்று குறவர் கலைத்தலால் அஞ்சி இனத்திற் பிரிந்து குறிச்சியிடத்து அகப்பட்டுக்கொண்டாற்போல, மகளிர் காக்க அவருடன்கூடி அவ்விடத்தை விழைந்து இம்மனையில் தங்கும் என்வாழ்க்கை (இருக்கும் ;) இல்லறத்து வல்லவாறு கூடுதலினும் இனியனவும் உள்ளனவோ ? (ஆதலின்,) இயன்றவாறு நடந்து செல் வோம் ; தோழி !—(எ-று.)

அவண் - குறியான அவ்விடம். வல்லியாங்குமருவின் - மணந்து மனம்போற்கூடுதலினும் என்க.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—இயற்படமொழிதல்.

## முல்லை.

[இது, வினைமுற்றினன் பாகற்கு உரைத்தது ]

[பதடிவைகலார் பாடியது.]

௩௨௩. எல்லா மெவனே பதடி வைகல்
பாணர் படுமலை பண்ணிய வெழாலின்
வானத் தெடுஞ்சுவர் நல்லிசை வீழப்
பெய்த புலத்துப் பூத்த முல்லைப்
பசுமுகைத் தாது நாறு நறுநுத
லரிவை தோளிணைத் துஞ்சிக்
கழிந்த நாளிவண் வாழு நாளே.

(இ-ள்.):—பாணர் படுமலைப்பண்ணை அமைத்த வீணையினால், வானத்தளவாக எடுத்த சுவரின்புகழ்கெட [சுவர் இடியுமாறு] மழை பெய்த புலத்திற் பூத்த முல்லையின் தாதைப்போலக் கமழும் நுதலை யுடைய அரிவையினது தோளிணையில் உறங்கிச் சென்ற நாட்களோ இங்கு வாழும் நாட்கள் ? (அல்லாமையின், இந்) நாட்கள் முற்றும் என்னையோ பயனற்ற நாட்களாய்விட்டன ?—(எ-று.)

பதடி - பதர். படுமலை - ஓர்பண். வாழுநாளே என்றதன் ஏகா ரம் 'கழிந்த நாள்'என்பதனோடு கூட்டப்பட்டது. 'பதடிவைகல்' என்ற சிறப்பாற்போலும் இதஞ்சிரியர், 'பதடிவைகலார்' எனப் பெயர் பெற்றனர்.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—பாகன் விரைந்து தேர்விடல்.

## நெய்தல்.

[இது, செறிப்பறிவுறுக்கப்பட்டு இராவாரா வரைவலென்றாற்குத் தோழி அதுமறுத்து வரைவு கடாயது.]

[கவைமகன் பாடியது.]

௩௨௪. கொடுங்கான் முதலைக் கோள்வ லேற்றை
வழிவழக் கறுக்குங் கானலம் பெருந்துறை
யினமீ னிருங்கழி நீந்தி நீநின்
னயனுடை மையின் வருதி யிவடன்
மடனுடை மையி னுயக்கும் யானது
கவைமக நஞ்சுண் டாஅங்
கஞ்சுவல் பெருமவென் னெஞ்சத் தானே.

(இ-ள்.):—முதலையேறு வழிவருதலைத் தடுக்கும் கானற்றுறையில், கழியை நீந்தி அன்புடைமையின் நீ வருகின்றாய்; இவள் அறியாமையால் வருந்துவள்; யான் கவர்த்த அறிவையுடைய மகவு நஞ்சினை உண்டாற்போல, பெரும! என்னெஞ்சத்தால் அஞ்சுவேன்.—(எ-று.)

கவைமக - எவற்றைக் கேட்பினும் ஆமென்னும் அறிவையுடைய மகவு. 'கவைமக' என்ற சிறப்பாற்போலும், இதனாசிரியர் 'கவைமகன்' எனப்பாராட்டப்பெற்றனர். இரா வாரா - இரவில் வந்து.
மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—வரைவுகடாதல்.

## நெய்தல்.

[இது, பிரிவிடை ஆற்றாளெனக் கவன்ற தோழிக்கு கிழத்தி மெலிந்து உரைத்தது.]

[நன்னாகையார் பாடியது.]

௩௨௫. சேறுஞ் சேறு மென்றலிற் பண்டைத்தம்
மாயச் செலவாச் செத்து மருங்கற்று
மன்னிக் கழிகென் றேனே யன்னோ
வாசா கெந்தை யாண்டுளன் கொல்லோ
கருங்கால் வெண்குருகு மேயும்
பெருங்குள மாயிற்றென் னிடைமுலை நிறைந்தே.

(இ-ள்.):—செல்வோம் செல்வோம் என்றதனால், (இப்பொழுது) மாயச்செலவினரானார் ; எண்ணிப் பக்கத்தில் இல்லாமற் பொருந்திப் பிரிக என்றேனோ ? பற்றுக்கோடான தலைவன் எவ்விடத்தினனோ ? குருகுமேயும் குளமாயிற்று முலையிடையிடம் (கண்ணீரால்) நிறைந்து.—(எ-று.)

கழிகென்றேனோ - விகாரம். 'நனைந்தே' என்றும் பாடம்.
மெய்ப்பாடு—அழுகை. பயன்—ஆற்றாமையறிவித்தல்.

## நெய்தல்.

[இது, சிறைப்புறம்.]

௩௨௬. துணைத்த தோகைப் பணைப்பெருந் தோளினர்
கடலாடு மகளிர் கான லிழைத்த
சிறுமனைப் புணர்ந்த நட்பே தோழி
யொருநாட் டுறைவன் றுறப்பிற்
பன்னாள் வருஉ மின்னா மைத்தே.

(இ-ள்.):—(நம்நட்பு), மகளிர் கானலிற் கட்டிய சிறுமனையிற் கூடிய நட்பே ; துறைவன் ஒருநாள் வாராதொழியின், (இன்றும் வாராதொழிவனோ என்ற கவற்சியால்) பலநாளும் வந்திடும் துன்ப முள்ளதாகும்.—(எ-று.)

துணைத்த - இரட்டையான. பணை-மூங்கில். மனை - மணன்மனை.
மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—ஆற்றாமையுணர்த்தல்.

## குறிஞ்சி.

[இது, கிழவன் கேட்கும் அண்மையனாக அவன் மலையினின்று வரும் யாற்றொடு உரைப்பாளாய் உரைத்தது.]

[அம்மூவனார் பாடியது.]

௩௨௭. நல்கின் வாழு நல்கூர்ந் தோர்வயி
னயனில ராகுத னன்றென வுணர்ந்த
குன்ற நாடன் றன்னினு நன்று
நின்னிலை கொடிதாற் றீங்க லுழுத
நம்மனை மடமக ளின்ன மென்மைச்
சாய லளிய ளென்னாய்
வாழை தந்தனையாற் சிலம்புபுல் லெனவே.

(இ-ள்.):—இரங்கின் உயிர்வாழும் இல்லார்திறத்து இரக்கமில்லா ராதல் நன்றென்று உணர்ந்த நாடனிடத்துக்காட்டிலும் (யாறே !) நின்னிலைமை கொடியதாகும்; மலையில் உழுத மடமகள் இத்தகைய மென்சாயலினள் என்று கருதாயாய், மலை புறக்கென்னும்படிவாழையை (ஈர்த்துக்) கொணர்ந்தனை; (ஆதலின்.)—(எ-று.)

'மகள்உழுத' என்றது தமரோடு அவட்குள்ள ஒற்றுமையால்.

மெய்ப்பாடும், பயனும்—முன்னையவே.

## நெய்தல்.

[இது, வரைவிடை வேறுபடுங் கிழத்தியை அவர் வரையுநாள் அணித்தெனவும் அலரஞ்சலெனவுங் கூறியது.]

[பரணர் பாடியது.]

௯௨அ. * சிறுவீ ஞாழல் வேரளைப் பள்ளி
யலவன் சிறுமனை சிதையப் புணரி
குணில்வாய் முரசி னிரங்குந் துறைவ
னல்கிய நாடவச் சிலவே யலரே
வில்கெழு தானை விச்சியர் பெருமகன்
வேந்தரொடு பொருத ஞான்றைப் பாணர்
புலிநோ் குறழுனிலை கண்ட
கலிகெழு குறும்பூ ரார்ப்பினும் பெரிதே.

(இ-ள்.):—கடல் முரசினைப்போல முழங்கும் துறைவன் கூடிய நாளில் உண்டான அலர் மிகவும் சிலவாயிருந்தனவோ? விச்சியர் கோன் வேந்தரொடு பொருதவன்று பாணர் (பாராட்டும்) 'குறழுன்' என்பானது வலிநிலையைக் கண்டஅரணுள்ள ஊரிலுள்ளாரார்ப்பினும் பெரியதே.—(எ-று.)

அளை - வளை. அலவன் - நண்டு. குணில் - குறுந்தடி. தானை - படை.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—ஆற்றுவித்தல்.

* இச்செய்யுளிற் கண்ட வரலாறு புலப்படவில்லை.

## பாலை.

[இது, பிரிவிடை மெலிந்த கிழத்தி வற்புறுத்துந் தோழிக்கு யான் ஆற்றுவலென்பதுபடச் சொல்லியது.]

[ஓதலாந்தையார் பாடியது.]

௩௨௯, கான விருப்பை வேனில் வெண்பூ
வளிபொரு நெடுஞ்சினை யுஞற்றலி னூர்கழல்பு
களிறு வழங்கு சிறுநெறி புதையத் தாஅம்
பிறங்குமலை யருஞ்சுர மிறந்தவர்ப் படர்ந்து
பயிலிரு ணடுநாட் டுயிலரி தாகித்
தெண்ணீர் நிகர்மலர் புரையு
நன்மலர் மழைக்கணிற் கெளியவாற் பனியே.

(இ-ள்.):—இருப்பைமலர் காற்றுமோதுங் கிளையினின்று விழுந்து களிறு நடந்த வழிமறையப்பரவும் சுரத்தைக் கடந்தவரை நினைத்துத் துயிலுதல் அரிதாகி மலரைப்போல நன்குமலர்ந்த, [மூடாத] கண்ணிற்குப் பனிப்பருவம் எளிதாகும்.—(எ-று.)

எனவே, அவரையே உள்ளி ஆற்றுவல் என்றாளாம்.

மெய்ப்பாடும், பயனும்—முன்னையவே.

## மருதம்.

[இது, பிரிவிடை வேறுபட்ட கிழத்தி தோழிக்குச் சொல்லியது]

[கழார்க்கீரனெயிற்றியன் பாடியது.]

௩௩0. *நலத்தகைப் புலத்தி பசைதோய்த் தெடுத்துத்
தலைப்புடை போக்கித் தண்கயத் திட்ட
நீரிற் பிரியாப் பரூஉத்திரி கடுக்கும்
பேரிலைப் பகன்றைப் பொதியவிழ் வான்பூ
வின்கடுங் கள்ளின் மணமில கமழும்
புன்கண் மாலையும் புலம்பு
மின்றுகொ றோழியவர் சென்ற நாட்டே.

---

* இச்செய்யுளில், ௨, ௩ அடிகளின் பொருள் விளங்கவில்லை.

(இ-ள்.):—பகன்றைமலர் கள்ளைப்போலக் கமழும் மாலையும் (அக் காலத்து உளதாம்) துயரும் அவர் பிரிந்துசென்ற நாட்டில் இன்றோ? (எ-று.)

புலைத்தி - வண்ணாத்தி. இன்றென்பது, மாலை, புலம்பு இவற்றோடு தனித்தனி இயையும்.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—ஆற்றாமையறிவித்தல்.

## பாலை.

[இது, செலவுக்குறிப்பறிந்து வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது.]

[வாடாப்பிரமந்தன் பாடியது.]

நகக. நெடுங்கழை திரங்கிய நீரி லாரிடை
யாறுசெல் வம்பலர் தொலைய மாறுநின்று
கொடுஞ்சிலை மறவர் கடறுகூட் டுண்ணுங்
கடுங்கண் யானைக் கான நீந்தி
யிறப்பர்கொல் வாழி தோழி நறுவடிப்
பைங்கண் மாஅத் தந்தளி ரன்ன
நன்மா மேனி பசப்ப
நம்மினுஞ் சிறந்த வரும்பொரு டரற்கே.

(இ-ள்.):-வழிச்செல்வார்அழியும்படி எதிர்த்துக் கொள்ளைகொண் டுண்ணும் யானைகள்மிக்க கானத்தைக் கடப்பர்கொல்? தோழி! மேனி பசக்க நம்மினும் உயர்ந்த பொருளைத் தருதற்கு.—(எ-று.)

எனவே, பொருளை நம்மினும் இறப்ப இழிந்ததாய்க் கருதிப் பிரியார் என்று ஆற்றுவித்தாளாம்.

திரங்கிய - உலர்ந்த. கடறு - காடு. கடுங்கண் - அஞ்சாமை. வடி- வடு

மெய்ப்பாடு—அழுகையைச் சார்ந்த பெருமிதம். பயன்—ஆற்று வித்தல்.

## குறிஞ்சி.

[இது, வரையாது வந்தொழுகாநின்ற காலத்துக் கிழவன் கேட் பக் கிழத்திக்குத் தோழி கூறியது.]

[மதுரை மருதங்கிழார்மகன் இளம்போத்தன் பாடியது.]

௩௩௨. வந்த வாடைச் சில்பெயற் கடைநா
ளேய்நீர் தரும்படர் தீரநீ நயந்து
கூறி னெவனோ தோழி நாறுயிர்
மடப்பிடி தழீஇத் தடக்கை யானை
குன்றச் சிறுகுடி யிழிதரு
மன்ற நண்ணிய மலைகிழ வோற்கே.

(இ-ள்.):—மேல்வந்த வாடையையுடைய கூதிர்ப்பருவத்திறுதியில் துயர் தீரும்படிநீ விரும்பி உடன்கொண்டுசெல் என்றாயினும் வரைந்து கொள் என்றாயினும் சொன்னால் என்னை? தோழி! பிடியைத் தழுவிக் களிறு சிறுகுடியில் இறங்கும் மலையையுடையானுக்கு.—(எ-று.)

'மடப்பிடி......கிழவோன்' என்றது, நின்னைத்தழுவிக்கொண்டு தன் மனைவயிற் செல்லும்நல்லியல்பினன் என்பதாம்; ஆற்றுவித்தற் கருத்தாற் றோழி கூறியதைக் கொண்டுமொழிந்தது.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—ஆற்றாமையறிவித்தல்.

## குறிஞ்சி.

[இது, அறத்தொடுநிற்பலெனக் கிழத்திக்குத் தோழி உரைத்தது.]

[உழுந்தினைம்புல்லன் பாடியது.]

௩௩௩. குறும்படைப் பகழிக் கொடுவிற் கானவன்
புனமுண்டு கடிந்த பைங்கண் யானை
நறுந்தழை மகளி ரோப்புங் கிளியொடு
குறம்பொறைக் கணவுங் குன்ற நாடன்
பணிக்குறை வருத்தம் வீடத்
துணியி லெவனோ தோழிநம் மறையே.

(இ-ள்.):—கானவனது புனத்தை அழித்த யானை மகளிர் வெருட்டும் கிளியோடு குறிஞ்சிநிலத்தைச் சேரும் குன்ற நாடனது தொழிலின் குறையாலான துயரம் [தமரை வரைவுகேட்க விடாத துயரம்] கெடும்படி நம்மறையை வெளிப்படுத்தலில் [அறத்தொடுநிற்றலில்] துணிந்தாலென்னை?—(எ-று.)

'கானவன்......நாடன்' என்றது, நலத்தை அழித்து அலரை அஞ்சி தனக்கினியாரோடு செல்கின்றான் என்று, தலைமகள் வருத்த மிகுதியாற் கூறியதைக் கொண்டுமொழிந்தது.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—ஆற்றுவித்தல்.

## நெய்தல்.

[இது, வரைவிடை ஆற்றுகிற்றியோவென்ற தோழிக்குக் கிழத்தி சொல்லியது.]

[இளம்பூதனார் பாடியது.]

௩௩௪. சிறுவெண் காக்கைச் செவ்வாய்ப் பைந்தோ
டெறிதிரைத் திவலை யீர்ம்புற நனைப்பப்
பனிபுலந் துறையும் பல்பூங் கானற்
பெருநீர்ச் சேர்ப்ப னீப்பி னொருநம்
மின்னுயி ரல்லது பிறிதொன்
றெவனோ தோழி நாமிழப் பதுவே.

(இ-ள்.):—சிறுவெண்காக்கையின் தொகுதி, அலையின் திவலைகள் புறத்தை நனைத்தலால் குளிரால் வருந்தித் தங்கும் கானலையுடைய கடற்றுறைவன் கைவிடின், சிறந்த நமது உயிரையன்றி வேறொன்று எதனையோ தோழி! நாம் இழந்திடுவது?—(எ-று.)

'சிறுவெண்காக்கை......சேர்ப்பன்' என்றது, அடுத்தாரைப் படுத்தும் இயல்பினன் என்பதாம். 'அவிரும் பெருநீர்ச் சேர்ப்ப னொடுநம்' என்றும் பாடம்.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—ஆற்றாமையுணர்த்தல்.

## குறிஞ்சி.

[இது, இரவுக்குறிநயவாமைத் தோழி செறிப்பறிவுறீஇயது.]

[இருந்தையூர்க் கொற்றன் புலவன் பாடியது.]

௩௩௫. நிரைவளை முன்கை நேரிழை மகளி
ரிருங்கல் வியலறைச் செந்தினை பரப்பிச்
சுனைபாய் சோர்விடை நோக்கிச் சினையிழிந்து
பைங்கண் மந்தி பார்ப்பொடு கவரும்
வெற்ப னண்ணி யதுவே வார்கோல்
வல்விற் கானவர் தங்கைப்
பெருந்தோட் கொடிச்சி யிருந்த வூரே.

(இ-ள்.):—மகளிர் கற்பாறையில், தினையைப் பரப்பிவிட்டுச் சுனையிற்பாயும் சோர்வைப் பார்த்துப் பெண்குரங்கு, குட்டிகளோடு கவர்ந்திடும் வெற்பனே! வில்லையுடைய குறவர்களின் தங்கையாகிய கொடிச்சி இருந்த ஊர்தான், (களவிற்குப்) பொருந்தியதோ ?-(எ-று.)

வெற்பன் - அண்மைவிளி. 'நிரைவளை......வெற்பன்' என்றது, அற்றநோக்கிப் பெற்றிடற்கு அவாவுகின்றாய் என்பதாம்.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—வரைவுகடாதல்.

## நெய்தல்.

[இது, தலைமகன் இரவுக்குறிநயந்தானைத் தோழி சொல்லி மறுத்தது.]

[குன்றியன் பாடியது.]

ஙஙசு. செறுவர்க் குவகை யாகத் தெறுவர
வீங்கினம் வருபவோ தேம்பாய் துறைவ
சிறுநா வொண்மணி விளரி யார்ப்பக்
கடுமா நெடுந்தேர் நேமி போகிய
விருங்கழி நெய்தல் போல
வருந்தின ளளியணீ பிரிந்திசி னோளே.

(இ-ள்.):—பகைவர்க்கு [அற்றுவார்க்கு] மகிழ்வுண்டாகவும், யாங்கள் வருந்தவும் இவ்விடத்து மேலும் வருவாரோ? இனிமை பரவிய துறைவ! சிறுநாவையுடைய மணி விளரிப்பண்ணை ஒலிப்ப விரைந்த குதிரைபூட்டிய தேர் (மேற்) சென்ற கழிநெய்தலைப்போல வருந்தினள், நீ பிரிந்தாள்; (ஆதலின்,) அளிக்கத்தக்காள்.—(எ-று.)

எனவே, அலரையஞ்சி ஆற்றாளாவள் என்றாளாம்.

மெய்ப்பாடு—இளிவரலைச் சார்ந்த பெருமிதம். பயன்—வரைவுகடாதல்.

## குறிஞ்சி.

[இது, தோழியை இரந்து பின்னின்ற கிழவன் தனது குறையறியக் கூறியது.]

[பொதுக்கயத்துக்கீரந்தை பாடியது.]

ஙஙஎ. முலையே முகிழ்முகிழ்த் தனவே தலையே
கிளைஇய குரலே கிழக்கு வீழ்ந் தனவே
செறிநிரை வெண்பலும் பறிமுறை நிரம்பின
சுணங்குஞ் சிலதோன் றினவே யணங்குதற்
கியான்றன் னறிவலே தானறி யலளே
யாங்கா குவள்கொ றானே
பெருமுது செல்வ ரொருமட மகளே.

(இ-ள்.):—முலைகள்தாம் அரும்பைப்போற் குவிந்திட்டன; தலையிடத்தவான கூட்டமான கூந்தல்தான் (புறத்துத் தாழ்ந்து) கீழ் வீழ்ந்திட்டன; செறிந்த நிரைத்த வெண்பற்களும் விழுந்து முளைத் தன்முறைமையை முற்றின; தேமலும் சிலவாய்த் தோன்றின; வருத்தற்குத் (தக்க பதத்தளென) யான் அவளை அறிவேன்; அவள்தன்னை அத்தகையளென அறிந்திலள்; (தமர் வரைந்து கொடுக்க) எவ்விடத்தினளோ பெரிய பழைய செல்வர்தம் சிறந்த மகள்தான்?—(எ-று.)

எனவே, கூடிய தன்பால் இளையள் விளைவிலள் என்றாதி என்றாறும்.

மெய்ப்பாடு—இளிவரல். பயன்—குறையறிவித்தல்.

## பாலை.

[இது, பிரிவிடைத் தோழி வற்புறுத்தது.]

[பெருங்குன்றூர்கிழார் பாடியது.]

ஙஙஅ. திரிமருப் பிரலை யண்ண னல்லே
றரிமடப் பிணையோ டல்குநிழ லசைஇ
வீததை வியலிற் றுஞ்சிப் பொழுதுசெலச்
செழும்பயறு கறிக்கும் புன்கண் மாலைப்
பின்பனிக் கடைநாட் டண்பனி யச்சிரம்
வந்தன்று பெருவிற றேரே பணைத்தோள்
விளங்குநக ரடங்கிய கற்பி
னலங்கே ழரிவை புலம்பசா விடவே.

(இ-ள்.):—ஆண்மான் பிணையோடு, பொருந்திய நிழலில் தங்கி, மலர்கள் செறிந்த பரந்த பிணக்கமுள்ளவிடத்துத் துயின்று, பொழுது பட்டதாகப் பயற்றைக் கடித்திடும், குளிர்ந்த பனிபொருந்திய முன் பனிக்கடையான பின்பனிப்பருவத்து மாலையில், பெரிய விறலினன் தேர் வந்திட்டது ; தோளையும், நகரத்தார் (உணரலாகாவாறு) அடங்கிய கற்பினையும், சிறந்த ஒளியையுமுடைய அரிவையின் தனிமைத் துயர் துயருறும்படி.—(எ-று.)

தண்பனிஅச்சிரக்கடைநாள்பின்பனிமாலை எனக் கொண்டுகூட்டப்பட்டது. 'தேர்வந்தன்று' என்றது, தெளிவுபற்றிய காலமயக்கம்.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—ஆற்றுவித்தல்.

## குறிஞ்சி.

[இது, வரைவிடை வேறுபட்ட கிழத்தியைத் தோழி கடுஞ்சொற் சொல்லி வற்புறீஇயது.]

[பேயார் பாடியது.]

௩௩௯. நறையகில் வயங்கிய நளிபுன நறும்புகை
யுறையுறு மகளிர்மையிற் போகிச் சாரற்
குறவர் பாக்கத் திழிதரு நாடன்
மயங்குமலர்க் கோதைநன் மார்பு முயங்க
லினிதுமன் வாழி தோழி நறுவிதழ்க்
குவளை யுண்கண் கலுழப்
பசலை யாகா வூங்கலங் கடையே.

(இ-ள்.):—நறிய அகிலால் விளங்கிய செறிந்த புனத்திடத்து நறும்புகை,(மனையில்)தங்கும் மகளிரது கண்மைபோற்சென்று சாரலிலுள்ள குறவர்கள்பாக்கத்தில் இறங்கும் நாடன், பலமலர்மாலையணிந்த நின்மார்பை மருவுதல் இனியதாயிற்றுமன்; தோழி! கண்கள் வருந்தப் பசலை பரவாக்காலத்து.—(எ-று.)

எனவே, வேறுபட்டிடர்து வரைவுவரை ஆற்றுதி என்றனளாம்.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—ஆற்றுவித்தல்.

## நெய்தல்.

[இது, இரவுக்குறியுணர்த்திய தோழிக்குக் கிழத்தி மறுத்தது.]

[அம்மூவனூர் பாடியது.]

கூசய0. காமங் கடையிற் காதலர்ப் படர்ந்து
நாமவர்ப் புலம்பி னம்மோ டாகி
யொருபாற் படுதல் செல்லா தாயிடை
யழிவி நின்ற வலர்வேர்க் கண்டல்
கழிபெயர் மருங்கி னொல்கி யோதம்
பெயர்தரப் பெயர்தந் தாங்கு
வருந்துந் தோழியவ ரருந்தவென் னெஞ்சே.

(இ-ள்.):—காமம் முடிவிற் காதலரைப் பற்றி, நாம் அவருக்காக வருந்தின், நம்மோடு தொடர்ந்து, ஒருவழிப்படுதல் இலதாயிற்று; அங்குக் கழிமுகத்தில் நிலைத்த பரவிய வேரையுடைய கண்டல்மரம் கழி நீர் பெயர வளைந்து வெள்ளம் மீள மீண்டாற்போல, வருந்தும் தோழி! அவர் நினைக்க எனது நெஞ்சம்.—(எ-று.)

எனவே, குறியிடைக் கூட நேர்ந்து வருந்த உடன்படேன் என்றாளாம்.

மெய்ப்பாடு—இளிவரல். பயன்—இரவுக்குறி மறுத்தல்.

## முல்லை.

[இது, பருவவரவின்கண் வேறுபடுமெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.]

[மீனெறிதூண்டிலல்வேட்டன் பாடியது.]

கூசக. பல்லி படீஇய பசுநனைக் குரவம்
பொரிப்பூம் புன்கொடு பொழிலணிக் கொளா
சினையினி தாகிய காலையுங் காதலர் [அச்
பேணா ராயினும் பெரியோர் நெஞ்சத்துக்
கண்ணிய வாண்மை கடவ தன்றென
வலிய நெஞ்சம் வலிப்ப
வாழ்வேன் றோழியென் வன்க ணானே.

(இ-ள்.):—பல்லிகள் அடிக்கும் குராமரம் புன்கமரத்தோடு (பொருந்தச்) சோலை, அழகைக்கொண்டு கிளைகளால் இனியதான மாரியிலும் காதலர் சொல்லைக் காவாராலும், [மீளாராலும்,] பெரியோர்நெஞ்சத்துக் கருதிய வல்லமை (பிழையுறக்) கடவதன்று என்று வலிய நெஞ்சம் வலித்தலால், வாழ்வேனாவேன்; தோழி! எனது அஞ்சாமையால்.—(எ-று.)

பல்லிபடுதல் - பல்லியடித்தல், *"பருவர றீரப், படுங்கொல் வாழி நெடுஞ்சுவர்ப் பல்லி" என்றார் நற்றிணையிலும்.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—ஆற்றாமையகற்றல்.

## குறிஞ்சி.

[இது, செறிப்பறிவுறுக்கப்பட்டான் வரைவின்கட் செல்லாது பின்னும் வரவுவேண்டின தலைமகனைத் தோழி நெருங்கிச் சொல்லி வரைவுகடாயது.]

[காவிரிப்பூம்பட்டினத்துக் கந்தரத்தனார் பாடியது.]

௩௪௨. கலைகை தொட்ட கமழ்சுளைப் பெரும்பழங்
காவன் மறந்த கானவன் ஞாங்கர்க்
கடியுடை மரந்தொறும் படுவலை மாட்டுங்
குன்ற நாட தகுமோ பைஞ்சுனைக்
குவளைத் தண்டழை யிவளீண்டு வருந்த
நயந்தோர் புன்கண் டீர்க்கும்
பயந்தலைப் படாஅப் பண்பினை யெனினே.

(இ-ள்.):—முசுக்கலை தொட்டதனால் கமழும் சுளைகளையுடைய (பலாப்) பழம், காவலை மறந்த குறவன் தான்காக்கும் மரங்கடோறும் மேலே கட்டிய வலையிற் சிக்கிக்கொள்ளும் குன்றநாட! குவளையின் தழையையணிந்த இவள், இங்கு வருந்த விரும்பியார்துயரைத் தீர்க்கும் பயனுள்ள செய்கையில் [வரைந்துகொள்ளுதலில்] முற்படாத குணத்தினையென்றால், (நின்தகுதிக்குத்) தக்கதோ?—(எ-று.)

'கலை......குன்றநாட' என்றது, தமர் உணராவாறு தோழியை நிலைகலங்கச்செய்து, செறிப்பால் நினக்கும் கிட்டாவாறு செய்துகொள்கின்றனை என்பதாம்.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—வரைவுகடாதல்.

## பாலை.

[இது, தோழி கிழத்தியை உடன்போக்குநயப்பக் கூறியது.]

* நற்றிணை—௩௩௩.

[ஈழத்துப்பூதன்றேவன் பாடியது.]

௩௪௩. நினையாய் வாழி தோழி நனைகவு
ளண்ணல் யானை யணிமுகம் பாய்ந்தென
மிகுவ லிரும்புலிப் பகுவா யேற்றை
வெண்கோடு செம்மறுக் கொளீஇயவிடர்முகைக்
கோடை யொற்றிய கருங்கால் வேங்கை
வாடுபூஞ் சினையிற் கிடக்கு
முயர்வரை நாடனொடு பெயரு மாறே.

(இ-ள்.):—தோழி! மதநீரால் நனைந்த கன்னத்தையுடைய யானையின் முகத்திடத்துக் கோடு செம்மறுக்கொள்ளுமாறு பாய்ந்ததனால், புலியேறு, கோடையில் சாய்த்த வேங்கையின் வாடும் பூக்களையுடைய கிளைபோலக் கிடக்கும் வரைநாடனோடு, இங்குநின்றும் பெயர்ந்திடும் வழியை எண்ணாய்.—(எ-று.)

'நனைகவுள்......வரைநாடன்' என்றது, ஆற்றிடையூறுகளை அஞ்சாவாறு அழைத்துச்செல்லும் ஆற்றலுடையான் என்பதாம்.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—உடன்போக்குநயப்பித்தல்.

## முல்லை.

[இது, பிரிவிடை வற்புறுத்துந் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.]

[குறுங்குடிமருதன் பாடியது.]

௩௪௪. நோற்றோர் மன்ற தோழி தண்ணெனத்
தூற்றுந் திவலைப் பனிக்கடுந் திங்கட்
புலம்பயி ரருந்த வண்ண லேற்றொடு
நிலந்தூங் கணல வீங்குமுலைச் செருத்தல்
பால்வார் குழவி யுள்ளி நிரையிறந்
தூர்வயிற் பெயரும் புன்கண் மாலை
யரும்பெறற் பொருட்பிணிப் போகிப்
பிரிந்துறை காதலர் வரக்காண் போரே.

(இ-ள்.):—தோழி! தண்ணென்று ஆற்றும் இவலைகளைக்கொண்ட பனியின் கடுமையையுடைய திங்களில், புலத்துப் பயிரை உண்ண, ஏற்றோடு சென்ற, நிலத்துத் தங்கிய முலைக்காம்புள்ள மடியையுடைய ஆண்பாலை விரும்புங் கன்றுள்ள ஊரிடத்து மேய்ப்பாரின் கூட்டத்தைத் தப்பி மீளும் மாலையில், பெறலரும் பொருட்பிணியாற் சென்றுபிரிந்து தங்கும் காதலர் மீளக் காண்போர், துணிவாக நோற்றோராவர்.—(எ-று.)

பனிக்கடுந்திங்கள்- மார்கழித்திங்கள்போலும். அணல - பொருந்தலையுடைய. வீங்குமுலைச்செருத்தல் - அன்மொழித்தொகை.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—ஆற்றாமையறிவித்தல்.

## நெய்தல்.

[இது, பகல்வந்தொழுகுவானைத் தோழி இராவரவென்றது.]

[அண்டர்மகன் குறுவழுதி பாடியது.]

கூசரு. இழையணிந் தியல்வருங் கொடிஞ்சி நெடுந்தேர்
வரைமரு ணெடுமணற் றவிர்த்த நிரையசைஇத்
தங்கினி ராயிற் றவறோ தகைய
தழைதாழ் மருங்கு லிவள்புலம் பகலத்
தாழை தைஇய தயங்குதிரைக் கொடுங்கழி
யிழுமென வொலிக்கு மாங்கட்
பெருநீர் வேலியெஞ் சிறுநல் லூரே.

(இ-ள்.):—இவள் துயரம் கெடும்படி கடல் வேலியாகும் எம்சிற்றூரில், நெடிய தேரை மலைபோன்ற மணலானுன (பார்வையைத்) தடுத்திட்ட மேடுகளிடைத் தங்கவைத்து, தாழைநிலைத்த அலைகளையுடைய கழி இழுமென்று ஒலிக்கும் அவ்விடத்தில் தங்கினீராயின் தவறாகுமோ?—(எ-று.)

எனவே, கழியிடத்து இரவில் வருக என்றாளாம். இயல்வரும் அசையும். தகைய-சிறந்த. தாழ்-கீழிடத்திற்றாழ்ந்த. வர-வியங்கோள்

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—குறியிடமுணர்த்தல்.

## குறிஞ்சி.

[இது, தோழி கிழத்தியை இரவுக்குறிநயப்பக் கூறியது.]

[வாயிலிளங்கண்ணன் பாடியது.]

௩௪௬. நாகுபிடி நயந்த முளைக்கோட் டிளங்களிறு
குன்ற நண்ணிக் குறவ ரார்ப்ப
மன்றம் போழு நாடன் றோழி
சுனைப்பூங் குவளைத் தொடலை தந்துந்
தினைப்புன மருங்கிற் படுகிளி யோப்பியுங்
காலை வந்து மாலைப் பொழுதி
னல்லக நயந்துதா னுயங்கிச்
சொல்லவு மாகா தஃகி யோனே.

(இ-ள்.):—பிடியை விழைந்த களிறு, மலையைப் பொருந்திக் குறவர் ஒலிக்க (எதிரொலித்து) மன்றத்தைப் பிளந்திடும் நாடன், சுனைக் குவளைமாலையைக் (கட்டித்) தந்தும் தினைப்புனத்தில் கிளிவெருட்டியும் காலையில்வந்து மாலையில் (நின்)மார்பை விழைந்து வருந்திச் சொல்லவுமாகாதவாறு மெலிந்திட்டான்.—(எ-று.)

'நாகுபிடி......நாடன்' என்றது, இடையூற்றை அஞ்சாது இரவுக் குறிக்கண் நின்னலத்தை விரும்பிவரும் ஆற்றலினன் என்பதாம்.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—இரவுக்குறிநயப்பித்தல்.

## பாலை.

[இது, பொருள்வலிக்கும் நெஞ்சிற்குத் தலைமகன் சொல்லிச் செலவழுங்கியது.]

[காவிரிப்பூம்பட்டினத்துச் சேந்தன்கண்ணன் பாடியது.]

௩௪௭. மல்குசுனைப் புலர்ந்த நல்கூர் சுரமுதற்
குமரி வாகைக் கோலுடை நறுவீ
மடமாத் தோகைக் குடுமியிற் றோன்றுங்
கான நீளிடைத் தானு நம்மோ
டொன்றுமணஞ் செய்தன ளிவளெனி
னன்றே நெஞ்ச நயந்தநின் றுணிவே.

(இ-ள்.):—சுனைகளில் நீரற்றமையான் வறிய சுரத்தில் வாகையின் நிறைந்த நறுமலர் மயிலின் குட்டினைப்போலத் தோன்றும் கானவழியில், நம்மோடு பொருந்தும் மணத்தை இவள் செய்தனளாயின், நெஞ்சே! விழைந்தனது துணிவு [பொருளிடைச்செலவு] நல்லதாகும்.—(எ-று.)

எனவே, நெஞ்சினை வேறுபடுத்தி நான் உடன்படேனென்றானும்.

மெய்ப்பாடு—இளிவரல். பயன்—செலவழுங்குவித்தல்.

## பாலை.

[இது, செலவுக்குறிப்பறிந்து வேறுபட்ட கிழத்தியைத் தோழி வற்புறுத்தியது.]

[மாவளத்தன் பாடியது.]

௩௱௪௮. தாமே செல்ப வாயிற் கானத்துப்
புலந்தேர் யானைக் கோட்டிடை யொழிந்த
சிறுவீ முல்லை கொம்பிற் றாஅ
யிதழழிந் தூறுங் கண்பனி மதரெழிற்
பூணக வன்முலை நனைத்தலுங்
காணார் கொல்லோ மாணிழை நமரே.

(இ-ள்.):—அவர் தாமாகவே செல்வாராயின் கானத்தில் நிலத்தை ஆராயும் யானைக்கோட்டால் அழிந்த முல்லைக்கொடி (அவ்யானைக்) கோட்டில் தாவிப் பூவிதழ் கெட்டுத் (தேனீர்) ஊற்றுவிடும்; (அதனைக் கண்ணிற்கண்டும்) கண்ணீர் முலையை நனைத்தலை, மாணிழாய்! நமர் தாம் (கருதிக்) காணார்கொல்?—(எ-று.)

'செல்பவாயின்' என்றது, செல்லுதலருமையைக் குறித்தது.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—ஆற்றுவித்தல்.

## நெய்தல்.

[இது, பரத்தைமாட்டுப் பிரிந்துவந்த தலைமகன் கேட்குமண்மையனாகத் தோழிக்குக் கிழத்தி கூறியது.]

[சாத்தன் பாடியது.]

௩௱௪௯. அடும்பவி ழணிமலர் சிதைய மீனருந்துந்
தடந்தா ளன்ன மிருக்கு மெக்கர்த்
தண்ணந் துறைவற் றொடுத்து நந்நலங்
கொள்வா மென்றி தோழி கொள்வா
மிடுக்க ணஞ்சி யிரந்தோர் வேண்டிய
கொடுத்தவை தாவெனச் சொல்லினு
மின்னா தோநம் மின்னுயி ரிழந்தே.

(இ-ள்.):—மலர்கள் சிதைய மீனை உண்ணும் நாரை தங்கும் மண் மேட்டையுடைய கடற்றுறைவனைப் பற்றிக்கொண்டு நமது நலத்தை (மீளக்) கொள்வோம் என்கின்றனை; தோழி! துயரை அஞ்சி இரந்தார் விரும்பியவற்றைக் கொடுத்து அவற்றை (மீளத்) தந்திடென்று சொன்னாலும் இன்னாதது; (ஆதலின்,) நமது இன்னுயிரை இழந்து (மறுபிறப்பில் நம்நலத்தைக்) கொள்வோம்.—(எ-று.)

இரப்பார்க்குக் கொடுத்தவற்றை மீளக்கேட்டுப்பெறுதலை, 'தத்தாபகாரம்' என்னும் கொடுங்குற்றமென்பர் வடநூலாரும். இம்மைச் செய்தது மறுமைக்காமாதல் நூற்றுணிபாகலின், உயிரிழந்து கொள்வாம் என்றாள். 'சொல்லினும்' என்றும் பாடம்.

மெய்ப்பாடு—இளிவரல். பயன்—ஊடலுணர்த்தல்.

## பாலை.

[இது, பிரிவுநேர்ந்த தலைமகள் அவனது நீக்கத்துக்கண் வேறுபட்டாளைத் தோழி வற்புறீஇயது.]

[ஆலத்தூர்கிழார் பாடியது.]

௩௫௦. அம்ம வாழி தோழி முன்னின்று
பனிக்கடுங் குன்றஞ் செல்லா தீமெனச்
சொல்லின மாயிற் செல்லார் கொல்லோ
வாற்றய விருந்த விருந்தோட் டஞ்சிறை
நெடுங்காற் கணந்து ளாளறி வுறீஇ ஆறு
யாறுசெல் வம்பலர் படைதலை பெயர்க்கு
மலையுடைக் கான நீந்தி
நிலையாப் பொருட்பிணிப் பிரிந்திசி னோரே.

(இ-ள்.):—கேட்பாயாக, தோழி! எதிர்நின்று நடுக்கந்தரும் கடுங் குன்றத்தில் செல்லாதருளுமென்று சொன்னோமாயின், நிலைக்காத பொருட்பிணியாற் பிரிந்தார், வழியயன்மரக்கிளையில் உறையும், சிறையினையும் தாளையுமுடைய (பறவைத்திரளால்) ஆள் (வருகையை) அறிந்துகொண்டு புதியார் படையைமுதலிற்செலுத்தும் கானத்தைக் கடந்து செல்லார்கொல்?—(எ-று.)

நெடுங்காற்கணம்- ஆளைக்காணின் ஒலிக்கும் இயல்புள்ள 'ஆட்காட்டி' என்னும் பறவைக்கணம்போலும்.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—ஆற்றுவித்தல்.

## நெய்தல்.

[இது, தலைமகன்தமர் வரைவொடு வந்தவழி நமர் அவர்க்கு வரைவுநேரார்கொல்லோ? என்றஞ்சிய தலைமகட்குத் தோழி வரைவு மலிந்தது.]

[அம்மூவனார் பாடியது.]

கூ௫௧. வளையோய் வந்திசின் விரவுங் கொடுந்தா
ளளைவாழலவன் கூருகிர் வரித்த
வீர்மணலீர்நெறி சிதைய வீழுமென
வுருமிசைப் புணரி யுடைதருந் துறைவற்
குரிமை செப்பினர் நமரே விரியலர்ப்
புன்னை யோங்கிய புலாலஞ் சேரி
யின்னகை யாயத் தாரோ
டின்னு மற்றோவிவ் வழுங்க லூரே.

(இ-ள்.):—வளையினையணிந்தோய் ! வருவாய் ; அலவன் உகிராற் கீறிய வழிகெடக் கடல் அலையாலுடைத்திடும் துறைவனுக்கு நின்னை உரிமைகூறினர் நமர்தாம் ; (ஆதலால்,) புன்னைகள் உயர்ந்த புலால் நாறும் சேரியில்ஆயத்தாரோடு மேலும் (அற்றிவருத்தும்) அத்தகைய தோ இவ்வூர் ?—(எ-று.)

'விரவும்......துறைவன்' என்றது, ஊரார் அற்றத்தொடங்கவே பொருது தக்காராய தமரை ஏவி வரைவு மாட்சிப்படச் செய்திட்டான் என்பதாம்.

மெய்ப்பாடு - பெருமிதம். பயன்—மகிழ்வித்தல்.

## பாலை.

[இது, பிரிவிடைத் தோழிக்குக் கிழத்தி மெலிந்து கூறியது.]

[கடியலூர் உருத்திரங்கண்ணன் பாடியது.]

கூ௫௨. நெடுநீ ராம்ப லடைப்புறத் தன்ன
கொடுமென் சிறைய கூருகிர்ப் பறவை
யகலிலைப் பலவின் சாரன் முன்னிப்
பகலுறை முதுமரம் புலம்பப் போகுஞ்
சிறுபுன் மாலை யுண்மை
யறிவேன் றோழியவர்க் காணு லூங்கே.

(இ-ள்.):—தோழி! அல்லியிலைப்புறத்தைப்போன்ற சிறைகளையும் கூரிய உகிரினையுமுடைய பறவை, [வௌவால்,] பலாவினையுடைய சாரலைக்கருதிப் பகலிற்றங்கிய முதிய மரம் வருந்தச் செல்லும் மாலை உளதாதலை அவனைக் காணாதகாலத்து அறிவேன்.-(எ-று.)

மெய்ப்பாடு—அழுகை. பயன்—ஆற்றாமையறிவித்தல்.

பகற்குறிவந்தொழுகுந் தலைமகன் சிறைப்புறத்தானாக வரைவுகடாயது

பாலை.

[இது, * ~~[illegible]~~.]

உறையூர் முதுகூத்தன்

[~~[illegible] பாடியது~~]

௫௫௫. ஆர்கலி வெற்பன் மார்புபுணை யாகக்
கோடுயர் நெடுவரைக் கவாஅற் பகலே
பாடின் னருவி யாடுத லினிதே
நிரையிதழ் பொருந்தாக் கண்ணோ டிரவிற்
பஞ்சி வெண்டிரிச் செஞ்சுடர் நல்லிற்
பின்னுவீழ் சிறுபுறந் தழீஇ
யன்னை முயங்கத் துயிலின் னாதே.

(இ-ள்.):—வெற்பன்மார்பு துணையாக மலைத்தாழ்வாரத்துப் பகலில் அருவியாடுதல் இனிதாகும்; இதழ்கள் மூடாத கண்களோடு இரவில், பஞ்சுத்திரியின் சுடரை [விளக்கை] யுடைய இல்லில் பின்னல் வீழ்ந்த புறத்தைத் தழுவி அன்னை அணைக்கத் துயிலுதல் இன்னாததாகும்.—(எ-று.)

கோடு - கொடுமுடி. இதழ் - ஈண்டு இமை.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—வரைவுகடாதல்.

## மருதம்.

[இது, பரத்தையிற் பிரிந்து வாயில்வேண்டிச் சென்ற தலைமகற்குத் தோழி வாயின்மறுத்தது.]

---

'பகற்குறிவந்து ஒழுகுந் தலைமகன் வெளிப்பாடஞ்சி இரவுக்குறியயர்தானது குறிப்பறிந்த தோழி, இரவின்கண் அன்னையிது காவலறிந்து பின்னும் பகற்குறியே நன்று அவ்விரவுக்குறியின் என்று பகற்குறியும் இரவுக்குறியும் மறுத்துத், தலைமகன் சிறைப்புறத்தானாக வரைவுகடாயது' என்று ஒருபிரதியில் உள்ளது.

[கயத்தூர்கிழான் பாடியது.]

௩௫௪. நீர்நீ டாடிற் கண்ணுஞ் சிவக்கு
மார்ந்தோர் வாயிற் றேனும் புளிக்குந்
தணந்தனை யாயினெம் மில்லுய்த்துக் கொடுமோ
வந்தண் பொய்கை யெந்தை யெம்மூர்க்
கடும்பாம்பு வழங்குந் தெருவி
னடுங்கஞ ரெவ்வங் களைந்த வெம்மே.

(இ-ள்.):—நீரிடத்து நீண்டு ஆடின் கண்களும் சிவந்திடும்; உண்டோர்வாயிடத்துத் தேனும் புளித்திடும்; (எம்மைப்) பிரிந்தாயானால், எந்தைக்குரிய எம்மூரில் தெருவிடத்து நடுங்கும் துயர்தரும் இன்னலைப் போக்கிய எங்களை எம்மில்லில் கொண்டுபோய்விடுவாய்.—(எ-று.)

கடும்பாம்பு - நஞ்சின் கடுமையையுடைய பாம்பு.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—வாயின்மறுத்தல்.

[இது, இரவுக்குறிநேர்ந்த தலைமகற்குத் தோழி நொந்து கூறியது.]
[கபிலர் பாடியது.]

௩௫௫. பெயல்கான் மறைத்தலின் விசும்புகா ணலரே
நீர்பரந் தொழுகலி னிலங்கா ணலரே
யெல்லை சேறலி னிருள்பெரிது பட்டன்று
பல்லோர் துஞ்சும் பானாட் கங்குல்
யாங்குவந் தனையோ வோங்கல் வெற்ப
வேங்கை கமழுஞ் சிறுகுடி
யாங்கறிந் தனையோ நோகோ யானே.

(இ-ள்.):—பெயலின்கால்கள் மறைத்தலான் விசும்பைக் காணாராவர்; நீர் பரவி ஒழுகுதலான் நிலத்தைக் காணாராவர்; பகல் கழிந்தமையான் இருள் பெரிதாயிற்று; பலரும் துயிலும் நள்ளிரவில் எங்ஙனம் வந்தனையோ? உயர்ந்த வெற்பனே! வேங்கைமணக்கும் சிறுகுடியை எங்ஙனம் அறிந்தனையோ? (நோவித்த) நான் வருந்துவேனே.—(எ-று.)

பெயல்கான்—விகாரம். பல்லோரும்—உம்மைதொக்கது.

மெய்ப்பாடு—இளிவரல். பயன்—ஆற்றாமையறிவித்தல்.

## பாலை.

[இது, மகட்போக்கிய செவிலித்தாய் உரைத்தது.]
[கயமனார் பாடியது.]

௩௫௬. நிழலான் றவிந்த நீரி லாரிடைக்
கழலோன் காப்பக் கடுகுபு போகி
யறுசுனை மருங்கின் மறுகுபு வெந்த
வெவ்வங் காலுழித் தவ்வெனக் குடித்தி
யாங்குவல் லுநள்கொ றானே யேந்திய
செம்பொற் புனைகலத் தம்பொரிக் கலந்த
பாலும் பலவென வுண்ணாள்
கோலமை குறுந்தொடித் தளிரன் னோளே.

(இ-ள்.):—தளிரன்னாள், எடுத்த பொற்கலத்திற் பொரிக்கலந் தாற்போன்ற பரல்களும் பலவென்று கருதாளாய், நிழல் மிகவும் ஒழிந் திட்ட நீரற்ற அருவழியில், கழலினன் காத்திடக் கடுகிச்சென்று நீரற்ற சுனையிடத்து வருந்தி, (மெய்) வெந்திட்ட துயரம் வெளிப்பட்ட விடத்துத் 'தவ்'என்று (உதட்டிடத்துவரும் நீரைக்) குடித்து(நடக்க) எங்ஙனம் வல்லாள் ?—(எ-று.)

ஆன் றவிந்த, கோலமை - விகாரங்கள்.
மெய்ப்பாடு—அழுகை. பயன்—அயர்வுயிர்த்தல்.

## குறிஞ்சி.

[இது, தோழி கிழவன் கேட்கும் அண்மையனாகக் கிழத்திக்குச் சொல்லியது.]

[கபிலர் பாடியது.]

௩௫௭. முனிபட ருழந்த பாடி லுண்கட்
பனிகால் போழ்ந்து பணையெழின் ஞெகிழ்தோ
மெல்லிய வாகலின் மேவரத் திரண்டு [ண்
நல்ல வென்னுஞ் சொல்லை மன்னிய
வேனலஞ் சிறுதினை காக்குஞ் சேஎணோன்
ஞெகிழியிற் பெயர்ந்த நெடுநல் யானை
மீன்படு சுடரொளி வெரூஉம்
வான்றோய் வெற்பன் மணவா வூங்கே.

(இ-ள்.):—வெறுக்கும் நினைவால் வருந்தியதாற் பெருமையற்ற கண்கள் நீர்க்கால்களால் (நிலத்தைப்) போழ, தினையைக்காக்கும் குறவன்கொள்ளியால் மீண்ட யானை, மீன்களோடு தோன்றும் திங்களின் ஒளியையும் (கொள்ளியென்று) அஞ்சும் வெற்பன் மணக்குமுன், மூங்கிலழகை நெகிழ்த்த தோள்கள், சிறந்தன வென்னும் சொல்லைப் பொருந்தின.—(எ-று.)

போழ்ந்து-போழவெனத்திரிக்க. ஏனல்தினை-இருபெயரொட்டு.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—வரைவுகடாதல்.

## முல்லை.

[இது, தலைமகன் பிரிவிடைக் கிழத்தியைத் தோழி வற்புறுத்தியது.]

[கோற்றன் பாடியது.]

௩௫௮. வீங்கிழை நெகிழ விம்ம வீங்கே
யெறிகட் பேதுற லாய்கோ டிட்டு
வாய பற்றுநின் படரதெ ணீங்க
வருவே மென்ற பருவ முதுக்காண்
டனியோ ரிரங்கும் பனிகூர் மாலைப்
பல்லான் கோவலர்க் கண்ணி
சொல்லு வன்ன முல்லைமென் மூக்கையே.

(இ-ள்.):—இறுகிய இழைகள் நெகிழவும் (மூச்சால் மெய்) விம்மவும் (நீரை) எறியும் கண்ணோடு வருந்தாதி; (நாட்கணக்கையறியக்) கோடிட்டு (அவ்) வழியாகப் பற்றும் நினது விரிந்த எண்ணங்கள் நீங்கக் (காதலர்) வருவோமென்ற பருவம் இதுவே; தனித்தார் இரங்கும் பனிமிக்க மாலையில், பலஆன்களையுமுடைய கோவலர்மாலைகள் உயர்வாய்ச் சொல்லும் அத்தகைய முல்லையின் மென்முகைகளாயின; (ஆதலான், வந்திடுவர்.)—(எ-று.)

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—ஆற்றுவித்தல்.

## மருதம்.

[இது, பரத்தையிற் பிரிந்துவந்த தலைமகன் வாயில்வேண்டிப்பெறாது தானே புக்குக் கூடியதுகண்டு தோழி பாணற்குச் சொல்லியது.]

[பேயனார் பாடியது.]

௩௫௯. கண்டிசிற் பாண பண்புடைத் தம்ம
மாலை விரிந்த பசுவெண் ணிலவிற்
குறுங்காற் கட்டி னறும்பூஞ் சேக்கைப்
பள்ளி யானையி னுயிரா வசைஇப்
புதல்வற் றழீஇயினன் விறலவன்
புதல்வன் றாயவன் புறங்கவைஇ யினளே.

(இ-ள்.):—காண்பாய், பாண! தகுதியையுடையது, மாலையிற் பரந்த நிலவில், குறுங்கால்களையுடைய கட்டிலிலுள்ள நறிய பூஞ்சேக்கையில், பள்ளியிடத்து யானையினைப்போல உயிர்த்துத் தங்கிப் புதல்வனைத் தழுவினன் வல்லமையுள்ளான்; (அப்) புதல்வன்தாய் அவனது புறத்தைத் தழுவிக்கொண்டனள்.—(எ-று.)

மெய்ப்பாடு—நகை. பயன்—பழித்தல்.

குறிஞ்சி.

[இது, தலைமகன் சிறைப்புறத்தானாக வெறியஞ்சிய தோழிக்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது.]

[மதுரை யீழத்துப்பூதன்றேவன் பாடியது.]

௩௬௦. வெறியென வுணர்ந்த வேல னோய்மருந்
தறியா னாகுத லன்னை காணிய
வரும்பட ரெவ்வ மின்றுநா முழப்பினும்
வாரற்க தில்ல தோழி சாரற்
பிடிக்கை யன்ன பெருங்குர லேனை
யுண்கிளி கடியுங் கொடிச்சிகைக் குளிரே
சிலம்பிற் சிலம்புஞ் சோலை
யிலங்குமலை நாட னிரவி னானே.

(இ-ள்.):—தோழி! வெறியென்று அறிந்திட்ட வேலன் நோய்க்கேற்ற மருந்தை அறியானாதலை அன்னை காணுமாறு, அரிய நினைவாலாய துயரத்தால் இன்றுநாம் வருந்தினும், சாரலில் பிடிக்கைபோன்ற தாளையுடைய தினையை உண்ணும் கிளியைக் கடியும் கொடிச்சியின் கைக்கவண் மலையிலொலிக்கும் சோலையால் விளங்கும் மலைநாடன் இரவில் வாராதொழிக.—(எ-று.)

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—வரைவுகடாதல்.

## குறிஞ்சி.

[இது, வரைவுமலிந்தவழித் தோழி நன்காற்றினையென்றாட்குக் கிழத்தி சொல்லியது.]

[கபிலர் பாடியது.]

ந௬௧. அம்ம வாழி தோழி யன்னைக்
குயர்நிலை யுலகமுஞ் சிறிதா லவர்மலை
மாலைப் பெய்த மணங்கம ழுந்தி
யேர்குலை நிவந்த முழுமுதற் காந்தண்
மெல்லிலை குழைய முயங்கலு
மில்லுய்த்து நடுதலுங் கடியா தோட்கே.

(இ-ள்.):—கேட்பாயாக, தோழி! அவர்மலையில் மாலையிற் பெய்த தனுல், கமழும் மணத்தை வெளிக்கொணர்ந்து அழகிய குலையிடத்து மேலோங்கிய காந்தளின் மெல்லிலை [அவர்தந்த உடையிலை] குழையும்படி முயங்கலையும், (பின்) மனையிடை (மீளச்) செல்லவிடலையும் விலக்காத அன்னைக்குத் தேவருலகமும் (கைம்மாருக்கச்) சிறிய தாகும்.—(எ-று.)

எனவே, அன்னை செறித்திடாமையின் ஆற்றினேனென்றாளாம்.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—மகிழ்வித்தல்.

## குறிஞ்சி.

[இது, வெறிவிலக்கித் தோழி அறத்தொடுநின்றது.]

[வேப்பற்றூர்க் கண்ணனன்கூத்தன் பாடியது.]

ந௬௨. முருகயர்ந்து வந்த முதுவாய் வேலன்
சினவ லோம்புமதி வினவுத லுடையேன்
பல்வே றுருவிற் சில்லவிழ் மடையொடு
சிறுமறி கொன்றிவ ணறுநுத னீவி
வணங்கினை கொடுத்தி யாயி னணங்கிய
விண்டோய் மாமலைச் சிலம்ப
னொண்டா ரகலமு முண்ணுமோ பலியே.

(இ-ள்.):—முருகு (மெய்ந்நின்றமையான்) மயங்கி வந்த முதுமை வாய்ந்த வேலனே! சினங்கொள்ளுதலைக் காப்பாய்; (நின்பால்) ஒன்றைக் கேட்டலுடையேன்; பல்வேறுநிறத்தினைக்கொண்ட சிலவாய அவிழ்களையுடைய சோற்றோடு செம்மறியைக்கொன்று இவள் நுதலிற் றடவி வணங்கிக் கொடுத்தாயாயின், வருத்திய சிலம்பன்மார்பும் பலியை உண்ணுமோ?—(எ-று.)

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—அறத்தொடுநிற்றல்.

## பாலை.

[இது, பிரிவுணர்த்தப்பட்ட தோழி கிழவற்குச் சொல்லியது.]

[சொல்லூர்க்கோற்றன் பாடியது.]

௩௬௩. கண்ணி மருப்பி னண்ண னல்லேறு
செங்கோற் புதவின் வார்குரல் கறிக்கு
மடக்கண் வரையா நோக்கி வெய்துற்றுப்
புல்லரை யுகாஅய் வருநிழல் வதியு
மின்னா வருஞ்சுர மிறத்த
லினிதோ பெரும வின்றுணைப் பிரிந்தே.

(இ-ள்.):—ஏறு, அறுகின்றாளைக் கடிக்கும் ஆவைப் பார்த்து வெப்பமுற்று உகாமரத்தின் நிழலில்வதியும் சுரத்தைக்கடத்தல் இனியதோ? பெரும! இனிய துணையைப்பிரிந்து.—(எ-று.)

கண்ணி - மாலையணிந்த. இன்னா - விகாரம்.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—செலவழுங்குவித்தல்.

௩௬௪.* அரிற்பவர்ப் பிரம்பின் வரிப்புற நீர்நாய்
வாளை நாளிரை பெறூஉ மூரன்
பொற்கோ லவிர்தொடித் தற்கெழு தகுவி
யெற்புறங் கூறு மென்ப தெற்றென
வணங்கிறைப் பணைத்தோ ளெல்வளை மகளிர்
துணங்கை நாளும் வந்தன வவ்வரைக்
கண்போன் மற்றதன் கள்வர்
மண்கொளற் கிவரு மன்னர் போரே.

---

* இச்செய்யுளின் பொருள் நன்குவிளங்கவில்லை: மேலும் உரையில்லாப்பாடல்களைப் பொருள் நன்குவிளங்காதனவென்று கொள்க.

எ-து. வேறோர்பரத்தை தன்னைப் புறங்கூறினாளெனக் கேட்ட இற்பரத்தைஅவட்குப் பாங்காயினார்கேட்பக் கூறியது. [ஔவையார்.]

'அரிற்பவர்,' 'பொற்கோல் விற்கொடி தற்கெழு தகுவி,' 'மண் கொணற்கு' என்பன பாடபேதங்கள்.

## குறிஞ்சி.

[இது, யான் வரையுந்துணையும் ஆற்றவல்லளோவென வினைய கிழவற்குத் தோழி சொல்லியது.]

[மதுரைநல்வெள்ளி பாடியது.]

௩௱௬௫. கோடீ ரிலங்கு வளைநெகிழ நாளும்
பாடில கழிந்துகண் பனியா னாவே
துன்னரு நெடுவரைத் ததும்பிய வருவி
தண்ணென் முரசி னிமிழிசை காட்டு
மருங்கிற் கொண்ட பலவிற்
பெருங்க னாடநின் னயந்தோள் கண்ணே.

(இ-ள்.):—வளையல்கள் நெகிழ நாளும் பெருமையில்லனவாய் அழகுகெட்டுக் கண்ணீரைக்கொண்டு விருப்பம்அமையாதனவாகும்; மலைநாட! நின்னை விழைந்தாளது கண்கள்தாம்.—(எ-று.)

இமிழ்—ஒலிக்குறிப்பு. 'நீ நயந்தோள்' என்றும்பாடம்.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—ஆற்றாமையறிவித்தல்.

௩௱௬௬. பால்வரைத் தமைத்த லல்ல தவர்வயிற்
சால்பளந் தறிதற் கியாஅம் யாரோ
வெறியாள் கூறவு மமையா ளதன்றலைப்
பைங்கண் மாச்சுனைப் பல்பிணி யவிழ்ந்த
வள்ளிதழ் நீல நோக்கியுள்ளகைப்
பொழுத கண்ண ளாகிப்
பழூதன் றம்மவிவ் வாயிழை துணிவே.

* எ-து.. காவன்மிகுதிக்கண் வேறுபட்ட தலைமகளது வேறுபாடுகண்டு இவ்வேறுபாடு எற்றினாயது.........

'கண்ணளாகி' என்றும்பாடம். [பேரிசாத்தன்.]

---

* இக்குறித்துரை குறைவாகவே பிரதிகளிற் காணப்படுகின்றது.

௩௱௬௭. கொடியோர் நல்கா ராயினும் யாழநின்
றொடிவிளங் கிறைய தோள்கவின் பெறீஇ
யுவக்காண் டோழி யவ்வந் திசினே
தொய்யன் மாமழை தொடங்கலி னவர்நாட்டுப்
பூச லாய புகன்றிழி ய
மண்ணுறு மணியிற் றோன்றுந்
தண்ணறுந் துறுக லோங்கிய மலையே.

எ-து. வரைவுணர்த்திய தோழி தலைமகட்குக் கழியுவகை மீதூராமையுணர்த்தியது. வரைவு நீட்டித்தவிடத்து ஆற்றாளாகிய தலைமகளைத் தோழி ஆற்றும்வகையால் ஆற்றுவித்ததூஉமாம்.
'உருவக்கொண்டொழி,' 'துணங்கலின்' என்பன பாடபேதங்கள்.

[மதுரை மருதனிளநாகன்.]

## மருதம்.

[இது, வரைவுமலிந்த தோழிக்குக் கிழத்தி கூறியது.]

[நக்கீரர் பாடியது.]

௩௱௬௮. மெல்லிய லோயே மெல்லிய லோயே
நன்னா ணீத்த பழிதீர் மாமை
வனப்பி னாற்றுத லல்லது செப்பிற்
சொல்ல கிற்றா மெல்லிய லோயே
சிறியரும் பெரியரும் வாழு மூர்க்கே
நாளிடைப் படாஅ நளிநீர் நீத்தத்
திண்கரைப் பெருமரம் போலத்
தீதி னிலைமை முயங்குகம் பலவே.

(இ-ள்.):—மெல்லியல்புள்ளாய்! நல்ல நாளில் இழந்த (நம்) மாமைநிறத்தை வனப்பினால் (உணரச்) செய்தலன்றி சொல்லாற் சொல்லாம்; சிறியாரும் பெரியாரும் வாழும் ஊரில், என்றும் இடையறாத குளிர்ந்த நீரின் வெள்ளத்தையுடைய (குளத்தின்) வலிய கரையிடத்துப் பெருமரத்தைப்போல் தீதற்ற நிலைமை பலவற்றையும் கூடுவோம்; (இப்பொழுது.)—(எ-று.)

நல் நாள் - களவிற் கலந்த நல்ல நாள். ஊர்க்கு - உருபுமயக்கம். மெய்ப்பாடு—உவகை. பயன்—மகிழ்தல்.

## பாலை.

[இது, தோழி கிழத்திக்கு உடன்போக்குணர்த்தியது.]

[குடவாயிற்கீரத்தனார் பாடியது.]

௩௬௯. * அத்த வரைகை யமலைவா னெற்றி
யரியார் சிலம்பி னரிசி யார்ப்பக்
கோடை தூங்குங் கானஞ்
செல்வாந் தோழி நல்கினர் நமரே.

(இ-ள்.):—கீற்றுக்கள் பொருந்திய சிலம்பின் பரல்கள் ஒலிப்பக் கோடை நிலைத்த கானத்திற் செல்வோம்; தோழி! நமர் (உடன் கொண்டுபோக) இரங்கினர்; (ஆதலால்.)—(எ-று.)

சிலம்பு - ஓர் காலணி. 'வராகை', 'எற்றி' 'தூக்கும்' —பாடபேதங்கள்.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—உடன்போக்குணர்த்தல்.

## மருதம்.

[இது, கிழத்தி தன்னைப் புறனுரைத்தாள் என்பது கேட்ட பரத்தை அவட்குப் பாங்காயினார் கேட்பச் சொல்லியது.]

[வில்லகவிரலினார் பாடியது.]

௩௭௦. பொய்கை யாம்ப லணிநிறக் கொழுமுகை
வண்டுவாய் திறக்குந் தண்டுறை யூரனொ
டிருப்பி னிருமருங் கினமே கிடப்பின்
வில்லக விரலிற் பொருந்தியவர்
நல்ல கஞ்சே ரொருமருங் கினமே.

(இ-ள்.):—ஆம்பன்முகைகளில் வண்டுகள் (ஊதி) வாயைத் திறக்கும் நீர்த்துறையையுடைய ஊரனோடு இருந்தால், ஈரிடையையுடையோமாவோம்; (தழுவி அணையிற்) கிடந்தால், வில்லை உள்ளடக்கிய விரலைப்போலப் பொருந்தி அவர்நெஞ்சம்போல நெடுங்காலம் (வேறுபடாமல்) ஓரிடையையுடையோமாவோம்.—(எ-று.)

'பொய்கை......ஊரன்' என்றது, செல்வியுள்ள மகளிரைத் தேடிப் போகும் இயல்பினனெனத் தலைமகள் பழித்தற்குக் கூறியதைப் பரத்தை கொண்டுமொழிந்தது. 'வில்லகவிரலின்' என்றசிறப்பாற் போலும் இதனாசிரியர் 'வில்லகவிரலினார்' எனப்பெயர்பெற்றனர்.

மெய்ப்பாடு—நகை. பயன்—தலைவியைப் பழித்தல்.

---

* இச்செய்யுளில், முதலடி விளங்கவில்லை.

## குறிஞ்சி.

[இது, வரைவிடை வற்புறத்துந் தோழிக்குத் தலைமகள் சொல்லி யது.]

[உறையூர்முதுகூற்றன் பாடியது.]

௩௭௧. கைவளை நெகிழ்தலு மெய்பசப் பூர்தலு
மைபடு சிலம்பிற் கறியொடு வித்தி
யருவியின் விளைக்கு நாடனொடு
மருவேன் றோழியது காமமோ பெரிதே.

(இ-ள்):—கைவளைகள் நெகிழ்தலையும், மெய்யிற் பசலை பரத்தலையும் மேகம் தங்கும் மலையில் மலைநெல்லை விதைத்து அருவியால் விளைவித்துக்கொள்ளும் நாடனால் பொருந்தேன்; தோழி! அக்காமமோ (அங்ஙனமெல்லாம்அடையுமாறு) பெரிதாயிருந்தது.—(எ-று.)

'மைபடு......நாடன்' என்றது, சிறுமுயற்சியாற் கருதியதைப் பெறுந்தன்மையன்என்பதாம்; தோழிகூற்றைக்கொண்டுமொழிந்தது.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—ஆற்றுமையறிவித்தல்.

௩௭௨. பனைத்தலைக், கருக்குடை நெடுமடல் குருந்தொடு
கடுவளி தொகுத்த நெடுவெண் குப்பைக்[டுமாயக்
கணங்கொள் சிமைய வணங்குங் கானல்
லாழிதலை வீசிய வயிர்ச்சேற் றருவிக்
கூழை பெயக்காக் குழீஇய பூதுக்கை
புலர்பதங் கொள்ளா விரவை
யலரெழுந் தன்றிவ் வழுங்க லூரே.

எ-து. இரவுக்குறிவந்து ஒழுகாநின்ற தலைமகன் கேட்பத் தோழி தலைமகட்குச்சொல்லுவாளாய்ச்சொல்லியது. [விற்றூற்றுமூதெயினன்.]

'மாயநெடுவேணி,' 'சிமையவுணங்கும்,' 'உலர்பதம்,' 'கொள்ளா யிரவை' என்பன பாடபேதங்கள்.

## குறிஞ்சி.

[இது, அவர்மிக்கவழி ஆற்றுளாகிய தலைமகட்குத் தோழி சொல்லி யது.]

[மதுரைக் கோலம்புல்லன் பாடியது.]

௩எ௩. நிலம்புடை பெயரினு நீர்திரிந்து பிறழினு
மிலங்குதிரைப் பெருங்கடற் கெல்லை தோன்றி
வெவ்வாய்ப் பெண்டிர் கௌவை யஞ்சிக்
கேடெவ னுடைத்தோ தோழி நீடுமயிர்க்
கடும்ப லூகக் கறைவிர லேற்றை
புடைத்தோடு புடையூ நாறு பலவுக்கனி
காந்தளஞ் சிறுகுடிக் கமழு
மோங்குமலை நாடனொ டமைந்தநந் தொடர்பே

(இ-ள்.):—ஆண்குரங்கு புடைக்கப் புடையுண்டு ஓடும் பலா பழம் சிறுகுடியிற் கமழும் மலைநாடனோடு உண்டான தொடர்பு, நில புடைபெயர்வதாயினும், நீர் தன்மைமாறிப் பிறழ்வதாயினும், கடலின் கரை தோன்றுவதாயினும், கொடிய வாயையுடைய பெண்டிர்களது அலரை அஞ்சி என்ன கேட்டை எய்துவதாகும்?—(எ-று.)

எனவே, அவனது தொடர்பு என்றும் ஒருபடித்தாகவே நிற் தாகும் என்றாளாம். புடைத்து: புடைக்கவெனத்திரிக்க. புடையூ ஓடு எனமாறுக. 'நீடுமயிர்......மலைநாடன்' என்றது, என்னலத்தை கெடுத்து ஊரிடமெல்லாம் அலர் பரவுமாறு செய்திட்டான் என் குறிப்புப் புலப்படத் தலைவி கூறியதைத் தோழி கொண்டு கூறியது 'அமைந்த தோடேயே' என்றும்பாடம்.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—ஆற்றுவித்தல்.

## குறிஞ்சி.

[இது, அறத்தொடு நின்றமை தோழி கிழத்திக்கு உரைத்தது.]

[உறையூர்ப் பலாகாயனார் பாடியது.]

௩எ௪. எந்தையும் யாயு முணரக் காட்டி
யொளித்த செய்தி வெளிப்படக் கிளந்தபின்
மலைகெழு வெற்பன் றலைவந் திரப்ப
நன்றுபுரி கொள்கையி னொன்றா யின்றே
முடங்க லிறைய தூக்கணங் குரீஇ
நீடிரும் பெண்ணைத் தொடுத்த
கூடினு மயங்கிய மைய லூரே.

(இ-ள்.):—எந்தையும் யாயும் உணரத் தெரிவித்து மறைத்திட்ட செய்தியை [களவை] வெளிப்படக் கூறியபிறகு வெற்பன், (தமரான் மகட்கொடையை) இரப்ப, தாக்கணங்குருவி பனையிற் கட்டிய கூட்டைக்காட்டிலும் மயங்கிய மயக்கத்தையுடைய ஊரில், நன்மையைப் புரியும் கோட்பாட்டோடு கூடிய ஒன்று [வரைவுடன்படுதல்] உளதாகின்றது.—(எ-று.)

'தளர்ந்தபின்,' 'கரைந்தபின்,' ஒன்றேவின்றே,' 'கூட்டினும்'—பாடபேதங்கள்.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—அறத்தொடு நின்றமையுணர்த்தல்.

## குறிஞ்சி.

[இது, இரவுக்குறிக்கண் சிறைப்புறமாகத் தோழி தலைமகட்குச் சொல்லுவாளாய் இருபொழுதும் மறுத்து வரைவுகடாயது.]

நூஎரு. அம்ம வாழி தோழி யின்றவர்
வாரா ராயினோ நன்றே சாரற்
சிறுதினை விளைந்த வியன்க ணிரும்புனத்
திரவரி வாரிற் றொண்டகச் சிறுபறை
பானாள் யாமத்துங் கறங்கும்
யாமங் காவல ரவியன் மான்றே.

(இ-ள்):—கேட்பாயாக, தோழி! சாரலிடத்துத் தினையின் விளைந்த புனத்தின்கண் இரவில் (கதிரை) அறுப்பவர்களது தொண்டகப்பறை நள்ளிரவிலும் ஒலித்திடும்; மேலும் இரவில் ஊர்காப்பவர் உறங்கலில் மயங்கிக் (காப்பார்;) ஆதலின், இன்று அவர் வாராராயின் நன்று.—(எ-று.)

எனவே, தினைகொய்தலாற் பகலும், காவலர்கடுமையால் இரவும் மறுத்திட்டனளாம்.

மெய்ப்பாடு—அச்சத்தைச் சார்ந்த பெருமிதம். பயன்—வரைவு கடாதல்.

நூஎசு. மன்னுயி ரறியாத் துன்னரும் பொதியிற்
சூருடை யடுக்கத் தாஅங் கடுப்ப
வேனி லானே தண்ணியள் பனியே
வாங்குகதிர் தொகுப்பக் கூம்பி யையென
வலங்குவெயிற் பொலிந்த தாமரை
யுள்ளகத் தன்ன சிறுவெம் மையளே.

எ-து. பொருள்வலிக்கும் நெஞ்சிற்குத் தலைமகன் சொல்லிச் செலவழுங்கியது. [படுமாத்துமோசிகீரன்கொற்றன்.]

'தொடிப்ப,' 'பொதிர்ந்ததாமரை' என்பன பாடபேதங்கள்.

[இது, வரைவிடை ஆற்றுளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி அழிந்து கூறியது.]

[மோசிகொற்றன் பாடியது.]

௩௭௭. மலரேருண்கண் மாணலந் தொலைய
வளையேர் மென்றோ ணெகிழ்ந்ததன் றலையு
மாற்று கின்றோ தோழியாற் றலையே
யறிதற் கமையா நாடனொடு
செய்து கொண்டதோர் சிறுநன் னடையே.

(இ-ள்.):—கண் அழகுகெடத் தோள் நெகிழ்ந்ததன்மேலும் மாற்று [வரைவு] உண்டாகின்றதோ? தோழி! (என்னாற்றாமையைக் கருதி) ஆற்றுகின்றிலை; உண்மையை உணரலமையாத நாடனொடு செய்துகொண்டது ஒருசிறிய நல்லொழுக்கந்தான்.—(எ-று.)

'சிறுநன்னட்பே' என்றும் பாடபேதம்.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—ஆற்றாமையுணர்த்தல்.

## பாலை.

[இது, மகட்போக்கிய செவிலி தெய்வத்திற்குப் பராயது.]

[கயமனார் பாடியது.]

௩௭௮. ஞாயிறு காயாது மரநிழற் பட்டு
மலைமுதற் சிறுநெறி மணன்மிகத் தாஅய்த்
தண்மழை தலையல ரரைக்குகந்த தீத்துச்
சுடர்வாய் நெடுவேற் காளையொடு
மடமா வரிவை போகிய சுரனே

(இ-ள்.):—காளையோடு அரிவை சென்ற சுரத்தில், கதிரவன் காயாமல், மரத்தின் நிழல் உண்டாகி, மலைவழியிற் (கால் நோகாவாறு) மணல் மிகப்பரந்து, குளிர்ந்த மழை, தலைக்கு மலரையும் இடைக்கு விரும்பிய தழையையும் தந்து, (உதவுவனவாம்படி தெய்வம் அருளுக.)—(எ-று.)

கருத்துரைக்கருத்தை நோக்கி முடிவு வருவிக்கப்பட்டது.

மெய்ப்பாடு—அழுகையைச் சார்ந்த பெருமிதம். பயன்—ஆற்றாமை நீங்கல்.

[இது, நொதுமலர்வரைவுழித் தோழி அறத்தொடு நின்றது.]

௩௭௬. * இன்றியாண் டையனோ தோழி குன்றத்துப்
பழங்குழி யகழ்ந்த கானவன் கிழங்கி
னேர்கண் ணகன்மத் துணிபெறாஉ நாட
னறிவுகாழ்க் கொள்ளு மளவைச் சிறுதொடி
யெம்மின் வருகுவை நீயெனப்
பொம்மலோதி நீவி யோனே.

(இ-ள்.):—தோழி! நாடன் (தமர்) அறிவு காழ்த்திடும் பொழுதில் சிறுதொடியோய்! நீ என்பின் வருவாயென்று [உடன்கொண்டு செல்வேனென்று] கூந்தலைக் கோதினன்; (அத்தகையான், நொதுமலர்வரையும்) இன்று எவ்விடத்தினனோ?—(எ-று.)

நொதுமலர் வரைதல் - (தமர்) நொதுமலரை மணமகனாகக் கொள்ளல்.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—அறத்தொடு நிற்றல்.

## பாலை.

[இது, பனிப்பருவங்குறித்துப் பிரிந்தான் தலைமகன் பிரியப் பருவவரவின்கண் வேறுபடுவாளாயினுங் கதுமென ஆற்றுவிப்பது அரிதென்னுங் கருத்தினளாய்க் கூதிர்ப்பருவத்துத் தலைமகன் கேட்பத் தனது ஆற்றாமை விளங்கத் தோழி சொல்லியது.]

---

* இச்செய்யுளில், மூன்றாவதடியின் பொருள் விளங்கவில்லை.

[கருவூர்க்கதப்பிள்ளை பாடியது.]

௩௫௦. விசும்புகண் புதையப் பாஅய் வேந்தர்
வென்றெறி முரசி னன்பல முழங்கிப்
பெயலா னாதே வானங் காதலர்
நனிசேய் நாட்டர் நம்முன் னலரே
யாங்குச்செய் வாங்கொ றோழி யீர்ங்
கயத்துத் துய்ம்மல ருதிர
முன்னா தென்ப பனிக்கடு நாளே.

(இ-ள்.):—விசும்பினிடம் மறையப் பரந்து, அரசர் வெற்றி கொண்டு முழக்கும் முரசினைப்போல நன்றாகப் பலபட இடித்துப் பொழிதலால் அமையாததாகும் முகில்; காதலர் நெடுஞ்சேண் நாட்டினர்; (அன்றியும்) நம்மை நினையாதவராவர்; (துயர்தீர) எவ்வகை செய்வோம்? தோழி! குளிர்ந்த குளத்திடத்துப் பிணிப்புள்ள மலர்கள் உதிர எதிர்வந்திடும் பனியின் கடுமையுடைய (முன்பனிப்பருவ) நாட்கள்.—(எ-று.)

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—ஆற்றுவித்தல்.

## நெய்தல்.

[இது, வரைவிடை ஆற்றாளாய தலைமகளை ஆற்றுவிக்கலுறுந் தோழி தலைமகனை இயற்பழித்தது.]

௩௫௧. தொல்கவின் றொலைந்து தோணலஞ் சாஅ
யல்ல னெஞ்சமோ டல்கலுந் துஞ்சாது
பசலை யாகி விளிவது கொல்லோ
வெண்குருகு நரலுந் தண்கமழ் கானற்
பூமலி பொதும்பர் நன்மலர் மயக்கி
விலங்குதிரை யுடைதருந் துறைவனொ
டிலங்கெயிறு தோன்ற நக்கதன் பயனே.

(இ-ள்.):—குருகுகள் ஒலிக்கும் கானற்சோலையின் மலரை அலை உடைத்திடுங் கடற்றுறைவனோடு நகைத்து விளையாடியதன்பயன், இயற்கைநலம் அழிந்து, தோளழகு கெட்டு, வருத்தமுள்ள நெஞ்சோடு இரவிலும் துயிலாது, பசலை (மெய்யிற்பரவுதல்) ஆகிக் கெடுவதோ?—(எ-று.)

'கானல்......துறைவன்' என்றது, மெலியாரை வலியார் வாட்டல் தக்கதன்றென்று உணராது நின்னை வருத்தி மனம்போல் செல்கின்றான் என்பதாம்.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—ஆற்றுவித்தல்.

## முல்லை.

[இது, பருவவரவின்கண் வேறுபட்ட தலைமகளைத் தோழி பருவமன்று வம்பென்று வற்புறீஇயது.]

[குறுங்கீரன் பாடியது.]

௩௮௨. கண்டுழிக் கொற்றம் பைங்கொடி முல்லை
முகைத்தலை திறந்த நாற்றம் புதன்மிசைப்
பூமலர் தளவமொடு தேங்கமழ் பூக்கால்
வம்பும் பெய்யுமார் மழையே வம்பழன்று
காரிது பருவ மாயின்
வாரா ரோநங் காத லோரே.

(இ-ள்.):—பசிய முல்லைக்கொடி (நின்பால்) வெற்றியை நோக்கியவழி அது, தன் பூக்கள் வெளிவிடும் தேன்மழையை வம்பாகச் சினந்து பெய்யும்; இது கார்ப்பருவமாயின், நமது காதலர் வந்திடாரோ?—(எ-று.)

தளவு—சுட்டளவாய்நின்றது. ஒடு—இசைநிறை.

மெய்ப்பாடும், பயனும்—முன்னையவே.

[இது, உடன்போக்கு * [நேர்வித்து வந்த தோழிக்கு நாணுவல்] வருந்திர் தலைமகள் நாணுடைமைக் கேட்பச் சொல்லியது.]

[படுமாத்துமோசிகீரன் பாடியது.]

௩௮௩. நீயுடம் படுதலின் யான்றர வந்து
குறிநின் றனனே குன்ற நாட
னின்றை யளவை சென்றைக் கென்றி
கையுங் காலு மோய்வன வொடுங்கித்
தீயுறு தளிரி னடுங்கி
யாவது மிலையான் செயற்குரி யதுவே.

---

* இக்கருத்துரை முற்றுத்தாய்ப் பிரதிகளிற் காணப்பட்டது; ஆதலின், இருதலைப்பகரத்துள் உள்ளவை இடம்விடப்பட்ட ஆங்கிருத்தலாமென அநுமானித்துக் குறிக்கப்பட்டன.

(இ-ள்.):—'நீ (உடன்போக) உடன்படுதலால், யான் அழைக்க வந்து குறியிடத்தில் நின்றனன் குன்றநாடன்; (ஆதலின்,) இன்றை யளவு செல்லுதி' என்கின்றனை; (தோழி!) கையுங்காலும் சோர்வன வாக (நாணால்) ஒடுங்கி நெருப்பிற் பொருந்திய தளிர்போல, நடுக்கங் கொண்டு யான் செய்யத்தகுந்தது எதுவுமில்லை.—(எ-று.)

உடன்போயினபின் குறியிடைக் கூட்டம் இன்மையின், 'இன்றை யளவை சென்றைக்க' என்று, தோழி கூறினள்.

மெய்ப்பாடு—இளிவரல். பயன்—நேர்ந்தமையுணர்த்தல்.

## மருதம்.

[இது, நின்பரத்தையர்க்கு நீ உற்ற சூளுறவு நன்றாயிருந்ததென்று நகையாடித் தோழி வாயின்மறுத்தது.]

[காம்போதியார் பாடியது.]

௩௮௪.¶ உழுந்துடைக் கழுதிற் கரும்புடைப் பணைத்தோ
ணெடும்பல் கூந்தற் குறுந்தொடி மகளிர்
நலனுண்டு துறத்தி யாயின்
மிகநன் றம்ம மகிழ்ந சூளே.

(இ-ள்.):—கரும்பின் செவ்வியை அழித்த தோளையும், நீண்ட பல வாய கூந்தலையும், சிறுவளையல்களையுமுடைய மகளிர்களது நலத் தைத் துய்த்துக் கைவிடுவாயாயின், மிகவும் நல்லனவாகும் நீ (அவர்க ளிடம்) விழைந்துசெய்த சூளுறவுகள்.—(எ-று.)

மெய்ப்பாடு—நகை. பயன்—வாயின்மறுத்தல்.

## குறிஞ்சி.

[இது, வேற்றுவரைவு மாற்றியது]

[கபிலர் பாடியது.]

௩௮௫. பல்விற் சேர்ந்த பழமா ரினக்கலை
சிலைவிற் கானவன் செந்தொடை வெரீஇச்
செருவுறு குதிரையிற் பொங்கிச் சார
லிருவெதிர் நீட்மை தயங்கப் பாயும்
பெருவரை யடுக்கத்துக் கிழவ னென்று
மன்றை யன்ன நட்பினன்
புதுவோர்த் தம்மவில் வழுங்க லூரே.

¶ இச்செய்யுளில், 'உழுந்துடைக் கழுதின்' என்பதன் பொருள் விளங்கிலது.

(இ-ள்.):— பலாமரத்திற் பழத்தை உண்ணும் கூட்டமான முசுக்கலைகள், (நாணால்) ஒலிக்கும் வில்லையுடைய குறவனது அம்பை அஞ்சிப் போர்க்களத்துற்ற குதிரைபோல மேலெழும்பிச் சாரலின் மூங்கிலின்மேற் பாயும் மலைக்குரியான்; என்றும் தலைநாளிற்கொண்ட நட்பினைப்போன்ற நட்பினனுவான்; இவ்வூர் (வரைவினைக் கருதி வரும்) புதியாரையுடையது.—(எ-று.)

'பலவில்......கிழவன்' என்றது, தோழியின் நலத்தைத் துய்த்துப் பிறர் வரையவரும்பொழுது அஞ்சி அகன்றிட்டான் என்பதாம்.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—வேற்றுவரைவுமாற்றல்.

## நெய்தல்.

[இது, பிரிவிடை வற்புறுத்துந் தோழிக்குக் கிழத்தி வன்புறையெதிர் அழிந்து கூறியது.]

[வெள்ளிவீதியார் பாடியது.]

நூஅ௬. வெண்மணல் விரிந்த வீததை கானற்
றண்ணந் துறைவன் றணவா வூங்கே
வாலிழை மகளிர் விழவணிக் கூட்டு
மாலையோ வறிவேன் மன்னே மாலை
நிலம்பரந் தன்ன புன்க ணோடும்
புலம்புடைத் தாகுத லறியேன் யானே.

(இ-ள்.):—கானலையுடைய கடற்றுறைவன் பிரியாமுன், மகளிர் (கணவரோடு கலந்து) விழாக்கொண்டாட அணிகளை எடுத்துச் சேர்க்கின்ற மாலையின் இயல்பை அறிவேன்; அம்மாலை துன்பத்தோடு கூடிய தனிமையையுடையதாதலை அறியேன் யான்தான்.—(எ-று.)

மெய்ப்பாடு—அழுகை. பயன்—ஆற்றாமையறிவித்தல்.

## முல்லை.

[இதுவுமது.]

[கங்குல்வெள்ளத்தார் பாடியது.]

௩௱௮௭ எல்லை கழிய முல்லை மலராக்
கதிர்சினந் தணிந்த கையறு மாலை
யுயிரை வரம்பாக நீந்தின மாயி
னெவன்கொல் வாழி தோழி
கங்குல் வெள்ளங் கடலினும் பெரிதே.

(இ-ள்.):—பகற்பொழுது நீங்க, முல்லைகள் மலர, கதிரவன் கடுமை குறைந்த மாலையில், உயிரை முடிவாகக்கொண்டு கடந்தால், என்னை ? தோழி ! கங்குலாகிய வெள்ளம் கடலைக்காட்டிலும் (கடக்கலாகாவாறு) பெரியதோ ?—(எ-று.)

'கங்நல்வெள்ளம்' என்ற சிறப்பால், இதனாசிரியர் 'கங்குல்வெள்ளத்தார்' எனப் பெயர்பெற்றனர்போலும்.

மெய்ப்பாடும், பயனும்—முன்னையவே.

பாலை.

[இது, தலைமகள் உடன்போக்குநேர்ந்தமையுணர்ந்த தலைமகன், சுரத்து வெம்மையுந் தலைமகண்மென்மையுங்குறித்துச் செலவழுங்கலுறுவானைத் தோழி அழுங்காமற் கூறியது.]

[ஔவையார் பாடியது.]

௩௱௮௮.* நீர்கால் யாத்த நிரையிதழ்க் குவளை
கோடை யேற்றினும் வாடா தாகுங்
கவணை யன்ன பூட்டுப் பொருசா
வுமண ரொழுகைத் தோடு நிரைத்த
முளிசினை பிளக்கு முன்பின் மையின்
யானை கைம்மடித் துயவுங்
கானமு மினியவா நும்மொடு வரினே.

(இ-ள்.):—நீரை வாய்க்காலாற் (பாய்ச்சிக்) கட்டினமையின், (குளத்திற்) குவளைமலர், கோடை (வெம்மையைச்) செலுத்தினும் வாடாததாகும் ; (அதுபோல,) உப்புவிற்பார் வண்டித்தொகுதியாற் (றொணர்ந்து) வரிசையாகநட்ட உலர்ந்த கிளையைப் பிளக்கும் வலியில்லாமையால், யானை கையை மடித்துவருந்தும் கானவழியும் இனியவாகும் உம்மொடு வரின்.—(எ-று.)

* இச்செய்யுளின் மூன்றாமடியின் பொருள் விளங்கவில்லை.

'நீர்க்கால்,' 'கவணை,' 'முழுசினை' என்பனவும் பாடபேதங்கள்.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—உடன்போக்குவற்புறுத்தல்.

[இது, தலைமகன்குற்றேவன்மகனான் வரைவுமலிந்த தோழி தலைமகட்குச் சொல்லியது.]

[வேட்டகண்ணனார் பாடியது.]

௩௮௯ நெய்கனி குறும்பூழ் காய மாக
வார்பதம் பெறுக தோழி யத்தை
பெருங்கன் னாடன் வரைந்தென வவனெதிர்
நன்றோ மகனே யென்றனெ
னன்றே போலு மென்றுரைத் தோனே.

(இ-ள்.):—செய்யில் முற்றிய காடை குழம்பாக அரிய உணவைப் பெறுவானாக (அக்குற்றேவன்மகன்;) தோழி! மலைநாடன் (மணமகனாக நம்தமரால்) கொள்ளப்பட்டானென்று (கருதி அதனை உணரக் குறிப்பாக) அவன்எதிரே மகனே! நன்றோ? என்றனன்; (அவன்) நன்றேபோலும் என்று கூறினான்; (ஆதலின்)—(எ-று.)

மெய்ப்பாடு—உவகை. பயன்—மகிழ்வித்தல்.

## பாலை.

[இது, புணர்ந்துடன்போயினாரை இடைச்சுரத்துக் கண்டார் பொழுதுசெலவும்பகையுங் காட்டிச் செலவுவிலக்கியது.]

[உறையூர்முதுகோற்றன் பாடியது.]

௩௯0. எல்லு மெல்லின்று பாடுங் கேளாய்
செல்லா திமோ சிறுபிடி துணையே
வேற்றுமுனை வெம்மையிற் சாத்தவ ரிறுத்தென
வளையணி நெடுவே லேந்தி
மிளைவந்து பெயருந் தண்ணுமைக் குரலே.

(இ-ள்.):—சிறுபிடியன்னாய்! (அவன்) துணையாவானே! பகலும் விளக்கமற்றது; மேல்விளைவையுங் கேட்பாய்; பகைவரின் போர் முனை, கொடுமையோடு கூடிவந்து தங்கியதனால், காவற்காட்டில் வந்துமீளும் தண்ணுமையின் குரல்; (ஆதலால்,) வளையையணிந்தாய்! நெடுவேலை ஏந்தினாய்! செல்லாதொழிக.—(எ-று.)

எனவே, இரவில் இங்குத் தங்குவீர் என்றாராம். பிடி, துணை - என இருவரையும் விளித்து, 'கேளாய்' என்று, தலைமைபற்றித் தலைவனை நோக்கிக் கூறினார்; பிடியன்னாளின் துணைவனே! 'கேளாய்' என்று, பின், இருவரையும் செல்லாதொழிக என்றாரெனலுமாம்.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—செலவுவிலக்கல்.

## முல்லை.

[இது, பிரிவிடைப் பருவவரவின்கண் ஆற்றாளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி அழிந்து சொல்லியது.]

[பொன்மணியார் பாடியது.]

௩௯௧.* உவரி யொருத்த வுழாஅது மடியப்
புகரி புழுங்கிய புயனீங்கு புறவிற்
கடிதிடி யுருமிற் பாம்பு பையவிந்
திடியொடு மயங்கி யினிதுவீழ்ந் தன்றே
வீழ்ந்தமா மழைதழீஇப் பிரிந்தோர் கையறப்
பையுண் மாலைப் பூஞ்சினை யிருந்த
போழ்கண் மஞ்ஞை தாநீர் நனந்தலை
புலம்பக்கூஉந் தோழி பெரும்பே தையவே.

(இ-ள்.):—உவர்நிலத்தில் எருது உழாது தாழ்க்க, யானை (வெயிலால்) வெந்திட்ட, மழையற்ற முல்லைநிலத்தில், இடியாற் பாம்பு பையொடுங்கி வீழ்ந்திட்டது; பெய்த மழையைப் பெற்று, தனித்தார் செயலறும்படி மாலையில் மயில்கள் கூவும்; தோழி! (அவை) மிகவும் அறியாதன.—(எ-று.)

---

* இச்செய்யுளின் ஆறவதுஅடி, 'பையுண் மாலை' என்றிருசீராகவும், ௭ - 'பூஞ்சினை ... மஞ்ஞை,' ௮ - 'தாநீர் ..... புலம்பக்,' ௯ - 'கூஉக் ..... பேதையவே' என, ஒன்பதடிப்பாட்டாக ஒருபிரதியிற் காணப்படுகின்றது.

போழ்கண் - விரிந்த தோகைக்கண். தா நீர் - தாவுகின்ற நீர்.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—ஆற்றாமையறிவித்தல்.

## குறிஞ்சி.

[இது, வரைவிடைக் கிழத்தியது நிலைமை தும்பிக்குச் சொல்லுவாளாய்ச் சிறைப்புறமாகத் தோழி [க்குச்] § சொல்லியது.]

[தும்பிசேர்கீரனார் பாடியது.]

௩௯௨. அம்ம வாழியோ மணிச்சிறைத் தும்பி
நன்மொழிக் கச்ச மில்லை யவர்நாட்
டண்ணெ னெடுவரைச் சேறி யாயிற்
கடவை மிடைந்த துடவையஞ் சிறுதினைத்
துளரெறி நுண்டுகட் களைஞர் தங்கை
தமராற் றீரா ளென்மோ வரசர்
நிரைசேர் நுண்டேர் போலப்
பிரசந் தூங்கு மலைகிழ வோற்கே.

(இ-ள்.):—கேட்பாயாக, அழகிய சிறையினையுடைய தும்பீ! நல்லசொல்லைக் கூறுதற்கு என்றும் அஞ்சவேண்டுவதில்லை; (ஆதலால்,) அவர்நாட்டின் மலையை நோக்கிச் செல்வாயாயின், அரசர்தம் தேரைப்போலத் தேனிறால் தொங்கும் மலைக்குரியோனுக்கு, கடக்கும் வழிபொருந்திய தோட்டத்துத் தினையின் துளிரைக் கெடுக்கும் குற்றத்தை [புழுமுதலியவற்றை] ஒழிப்பார்களது [குறவர்களது] தங்கை, தமர் தீர்த்தலால் உற்ற நோய் நீங்காதவளாவாள் என்று கூறுவாய்.—(எ-று.)

தும்பியை விளித்து அழகுததும்பப் பாடிய சிறப்புப்பற்றிப் போலும் இதனாசிரியர் 'தும்பிசேர்கீரனார்' எனப்பெயர்பெற்றனர்.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—ஆற்றாமையறிவித்தல்.

## மருதம்.

[இது, தலைமகன் சிறைப்புறமாகத் தோழி அலர்மலிவுரைத்து வரைவுகடாயது.]

§ இவ்விருதலைப்பகரத்துள்ளவை மிகைபோலும்.

[பரணர் பாடியது.]

௩௯௩. * மயங்குமலர்க் கோதை குழைய மகிழ்நன்
முயங்கிய நாடவச் சிலவே யலரே
கூகைக் கோழி வாகைப் பறந்தலைப்
பசும்பூட் பாண்டியன் வினைவ லதிகன்
களிறொடு பட்ட ஞான்றை
யொளிறுவாட் கொங்க ரார்ப்பினும் பெரிதே.

(இ-ள்.):—பலமலர்களாலான மாலை குழையும்படி மகிழ்நன் மருவியநாளில், அலர் சிலவாயிருந்தனவோ? கூகைகளையுடைய, சோழன் வெற்றிகொண்ட போர்க்களத்து, கருதிய வினையை முடித்தல்வல்ல 'அதிகன்' என்னும் பாண்டியன் பட்டத்துக்களிறோடு பட்டவன்று கொங்கர்கள்கொண்ட ஆர்ப்பினும் பெரியதாயிருந்தது; (அவ்வலர்.)-(எ-று.)

கூகைப்பறந்தலை என இயையும்.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—வரைவுகடாதல்.

## குறிஞ்சி.

[இது, வரைவிடை ஆற்றாளாகிய கிழத்தியை ஆற்றுவிக்குந் தோழி தலைமகனை இயற்பழித்துக் கூறியது.]

[குறியிறையார் பாடியது.]

௩௯௪. முழந்தா ளிரும்பிடிக் கயந்தலைக் குழவி
நறவுமலி பாக்கத்துக் குறமக ளீன்ற
குறியிறைப் புதல்வரொடு மறுவந் தோடிக்
கூரை முற்றுஞ் சார னாடன்
முன்னா ளினிய தாகிப் பின்னாள்
வார்தினை * மேய்[த]ந்தாங்குப்
பகையா கின்றவர் நகைவிளை யாட்டே.

* இச்செய்யுளிற்கண்ட வரலாறு புலப்படவில்லை: பாண்டியனது வினையில் வல்லவனான அதிகன்எனற்கும் பொருந்தும்; பாண்டியனும், அதிகனும்என்னலுமாம்; உண்மைவரலாறு உணரலாகாமையான், துணிவுரைகூறவியன்றிலது.

* இருதலைப்பகரத்துள்ளது சேர்க்கப்பட்டது. 'வார்தினை....... மேய்ந்தாங்கு' இவ்வாறு ஒருபிரதியில் இடம்விடப்பட்டிருக்கிறது.

(இ-ள்.):—நறவுக்கொடி மிக்க பாக்கத்திடத்துக் குறத்தி பெற்ற குறியை இறுக்கவல்ல சிறுவர்களோடு வருந்தி ஓடிக் கூரையைச் சுற்றும், முழந்தாளளவுவளர்ந்த பிடியின் பருத்த தலையையுடைய கன்று, முன்னாளில் [இளமையில்] இனியதாயிருந்து, பின்னாளில் [பெரிதான பொழுது] (அக்குறவர்) தினையை மேய்ந்தாற்போல, நாடன் நகைத்து விளையாடிய விளையாட்டுப் பகையாக ஆகின்றது.—(எ-று.)

'நாடன் அவர் என்றது, செற்றத்தால். 'துறியிறை' என்றுண்ட சிறப்பால் 'துறியிறையார்' என, இதனாசிரியர்பெயர்பெற்றார்போலும்.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—ஆற்றுவித்தல்.

## பாலை.

[இது, வரைவிடை வைத்துப் பிரிய ஆற்றாளாகிய கிழத்தி நாம் ஆண்டுச் சேறுமெனத் தோழிக்கு உரைத்தது.]

௩௬௫. நெஞ்சே நிறையொல் லாதே யவரே
யன்பின் மையி னருள்பொரு ளன்றார்
வன்கண் கொண்டு வலித்துவல் லுநரே
யாவது மதியிற் கிவரோர் போலக்
கனைய ராயினுங் கண்ணினிது படீஇய
ரஞ்சே லென்மரு மில்லை யந்தி
லனிதோ தானே நாணே
யாங்கா வாவது நீங்கப் படினே.

(இ-ள்.):—நெஞ்சந்தான், (யான்) நிறுத்தலைப் பொருந்தாததாகும்; அவர்தாம், அன்பில்லாமையால் அருளைப் பொருளென்று கருதாராய்க் கொடுமையைக் கொண்டு (நெஞ்சை) வலித்துப் (பிரிதலில்) வல்லாராயினர், அறிவில்லாத பற்றுள்ளத்தார்போல; (அவர்) அத்தகையராயினும் '(நின்) கண்கள் இனிது உறங்குவனவாக; அஞ்சாதி' என்பாரும் இலர்; நாணந்தான் இரங்கத்தக்கதோ? யாம் பாதுகாக்காதஅந்நாணம் நீங்கப்பட்டால் [அவருறையுமிடம்செல்லலைத் தடுக்காதாயின்] (நல்லதாகும்.)—(எ-று.)

மெய்ப்பாடு—அழுகை. பயன்—ஆற்றாமை நீங்கல்.

## பாலை.

[இது, மகட்போக்கிய தாய்உரைத்தது.]

[கயமனார் பாடியது.]

௩௯௬. பாலு முண்ணாள் பந்துடன் மேவாள்
விளையா டாயமோ டயர்வோ ளினியே
யெளிதென வுணர்ந்தனள் கொல்லோ முளிசினை
யோமைக் குத்திய வுயர்கோட் டொருத்தல்
வேனிற் குன்றத்து வெவ்வறைக் கிரவாஅன்
மழைமுழங்கு கடுங்குர லோர்க்குங்
கழைதிரங் காரிடை யவனொடு செலவே.

(இ-ள்.):—பாலையும்உண்ணாள்; பந்துடனும் விருப்பங்கொள்ளாள் விளையாடும் ஆயமகளிரோடும் விளையாட வருந்துவள்; ஓமையைக் குத்திய களிறு குன்றின் தாழ்வாரத்து இடிபோலப் பிளிறும் அரிய வழியில் அவனோடு செல்லுதலை எளிதென்று கருதினளோ ?-(எ-று.)

மெய்ப்பாடு—அழுகை. பயன்—அயர்வுயிர்த்தல்.

## நெய்தல்.

[இது, வரைவிடைவைத்து நீங்குந் தலைமகற்குத் தோழி உரைத்தது.]

[அம்மூவனார் பாடியது.]

௩௯௭. நனைமுதிர் ஞாழற் சினைமரு டிரள்வீ
நெய்தன் மாமலர்ப் பெய்த போல
வூதை தூற்று முரவுநீர்ச் சேர்ப்ப
தாயுடன் றலைக்குங் காலையும் வாய்விட்
டன்னா யென்னுங் குழவி போல
வின்னா செயினு மினிது தலை யளிப்பினு
நின்வரைப் பினளென் றோழி
ம
தன்னுறு விழுங் களைஞரோ விலளே.

(இ-ள்.):—ஞாழன்மலரை நெய்தன்மலரிற் பெய்துவைத்தாற் போல், ஊதை உதிரச்செய்யும் சேர்ப்பனே! தாய்சினந்து வருத்துங் காலத்தும்வாயைத் திறந்து 'அன்னாய்' என்றழைக்கும் குழவிபோல, இன்னாதவற்றைச் செய்யினும், (அன்றி) இனிதாகக் காப்பாற்றினும் நின்வரைக்கு உட்பட்டவள் என்தோழி; (நின்னையின்றி) உற்ற துயரத்தை ஒழிப்பாரை உடையவளல்லள்.—(எ-று.)

'தாயுடன்று......குழவி' என்ற கருத்து, *"அரிசினத்தா லீன்றதா யகற்றிடினு மற்றவட, னருணினைந்தே யழுங்குழவி" என்னும் பெரியார்பாசுரத்திலும்பயிலுதல்காண்க.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—ஆற்றுமையறிவித்தல்.

## பாலை.

[இது, பிரிவுணர்த்திய தோழி, தலைமகன் பிரிந்து வினைமுற்றி வருந்துணையும் ஆற்றியுளராவரென்று உலகியன்மேல்வைத்து உரைத்தாட்குத் தலைமகள் ஆற்றுமை மீதூரச் சொல்லியது.]

[பாலைபாடிய பெருங்கடுங்கோ பாடியது.]

௩௮௰அ. செற்று மன்றே தோழி தண்ணெனத்
தூற்றுந் திவலைத் துயர்கூர் காலைக்
கயலே ருண்கண் கனங்குழை மகளிர்
கையுறை யாக நெய்பெய்து மாட்டிய
சுடர்துயி லெடுப்பும் புன்கண் மாலை
யரும்பெறற் காதலர் வந்தென விருந்தயர்பு
மெய்வலி யுவகைமீ னெழுதரு
கண்கவி முழங்குபணி யாக்கு வோரே.

(இ-ள்.):—கண்ணையும் குழையையுமுடைய மகளிர் தூற்றும் திவலைகளையுடைய துயர்மிகும் காலத்து, கையுறையாக நெய்யை வார்த்து ஏற்றிய விளக்கின் உறக்கத்தை எழுப்பும் மாலையில், பெறலருங்காதலர் வந்ததனுல், விருந்திட்டு உடம்பு வலிபெறும் உவகையால், விளக்கம் மிகும் கண்களாற் செய்யும் கொடுமையோடு (அமையாது) ஒலிக்கும் நகைகளையும் திருந்தச் செய்துகொள்வாராவர்; (இக்காலத்து, நாமே தலைமகன் பிரிவால் அவற்றை) வெறுத்தோமாவோம்.—(எ-று.)

விளக்கின் உறக்கத்தை எழுப்பல் - ஆவது, விளக்கு மங்கும்பொழுது தூண்டுதல். கண்களாற் செய்யும் கொடுமை - ஆவது, காதல் மிகுமாறு காதலரை நோக்குதல். முழங்கு பணி - ஒலிக்கும் சிலம்பு வளையல்முதலியகலன்கள்.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—ஆற்றுமை நீங்கல்.

---

* பெருமாள்திருமொழி—ரு-வது, பத்து-க.

## மருதம்.

*[இது, வரைவு நீட்டித்தவிடத்துத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.]

[பரணர் பாடியது.]

௩௯௯. ஊருண் கேணி யுண்டுறைத் தொக்க
பாசி யற்றே பசலை காதலர்
தொடுவுழித் தொடுவுழி நீங்கி
விடுவுழி விடுவுழிப் பரத்த லானே.

(இ-ள்.):—ஊரார் நீருண்ணுங் கேணியினது நீரை உண்ணும் துறையிற் கூடிய பாசியைப்போன்றது பசலை; காதலர் தொடுந்தொறுந் தொடுந்தொறும் நீங்கி, விடுந்தொறும் விடுந்தொறும் பரவுதலால்.—(எ-று.)

மெய்ப்பாடு—அழுகை. பயன்—ஆற்றாமை நீங்கல்.

## முல்லை.

[இது, வினைமுற்றிவந்த தலைமகன் தேர்ப்பாகனைத் தலையளித்தது.]

[பேயனார் பாடியது.]

௪௦௦. சேயாறு செல்லா மாயி னிடரின்று
கனைஇக் காமம் பெருந்தோட் கென்று
நன்றுபுரிந் தெண்ணிய மனத்தை யாகி
முரம்புகண் ணுடைய வேகிக் களரிக்
கரம்பைப் புதுவழிப் படுத்த மதியுடை
வலவோ, யின்று தந்தனை தேரோர்
நோயுழந் துறைவியை நல்க லானே.

(இ-ள்.):—செம்மையுள்ள வழியைக் கடந்து செல்லோமானால், பெரிய தோள்களையுடையாளுக்குக் காமம் மிகுந்து (அதனால்,) துன்பம் (உண்டாகும்) என்று, பெரிதும் விரும்பி நினைத்த மனத்தினையாய், முரம்பிடம் உடையும்படி சென்று களரையுடைய பாழ்நிலங்களிற் புதுவழியை உண்டாக்கிய அறிவுள்ள பாக! இன்று தேரைக் கொணர்ந்தனை; (அதனால்,) அழகிய நோவால் வருந்தித்தங்குமவளை யான் தலையளித்தலான், (அவட்கு இடர்) இலதாயிற்று.—(எ-று.)

மூரம்பு - கல்விரவி உயர்ந்திருக்கும் நிலம். கரம்பை — பாழ் நிலம். வினையாளனை வேலையிறுதியிற் புகழ்தன் மரபாதலின், 'மதியுடை......தேர்' என்றான். இடர் - மீண்டுங்கொள்ளப்பட்டது.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—பாகனைத் தலையளித்தல்.

## நெய்தல்.

[இது, வேறுபாடுகண்டு இற்செறிக்கப்பட்ட தலைமகள் தன்னுள்ளே சொல்லியது.]

[அம்மூவனார் பாடியது.]

௩௦௧. அடம்பி னய்மலர் விரைஇ நெய்த
னெடுந்தொடை வேய்ந்த நீர்வார் கூந்த
லோரை மகளி ரஞ்சி யீர்ஞெண்டு
கடலிற் பரிக்குந் துறைவனொ டொருநா
ணக்குவிளை யாடலுங் கடிதன்
றைதெமக் கம்ம மெய்தோய் நட்பே.

(இ-ள்.):—அடம்பின் சிறந்த மலரைக்கலந்து நெய்தன்மலராற் செய்யப்பட்ட நெடிய மாலையைச் சூடிய நீர்மைமிக்க கூந்தலையுடைய விளையாட்டுமகளிரை அஞ்சி ஈரிய நண்டு, கடலிற் செல்லும் துறைவனோடு ஒருநாளில் நகைத்து விளையாடுதலும் விரைவிற்கிடைப்பதன்று, (துறைவன்) மெய்யைத் தோய்ந்ததனாலான நட்பு எமக்கு வியப்பை விளைவிப்பதாயிற்று.—(எ-று.)

நீர் வார் - மகளிர்என்பதனோடியையும்; தேனீர் மிக்க என்று கூறி, கூந்தல்என்பதனோடியைத்தலுமாம். 'அடம்பின்......துறைவன்' என்றது, தமர்பால் அச்சங்கொண்டு வரைவுடன்படாரென்று கருதி வறிதே நீங்கினன் என்பதாம். 'கடிந்தன்று' என்றும் பாடம்.

மெய்ப்பாடு—அழுகை. பயன்—அயர்வுயிர்த்தல்.

---

இத்தொகைமுடித்தான் பூரிக்கோ; இத்தொகைபாடிய கவிகள் இருநூற்றைவர்; இத்தொகை நாலடி சிற்றெல்லையாகவும், எட்டடி பேரெல்லையாகவும் தொகுக்கப்பட்டது.

## குறுந்தொகை மூலமும் உரையும் முற்றுப்பெற்றன.

---

அச்சிரம்—முன்பனிப்பருவம்.
அசைதல்—தங்குதல்.
அத்தம்—அருஞ்சுரம்.
அமலை—சோறு.
அல்கல்—இரவு; நாள்.
அலர்—பரந்த களவு.
அவ்வரி—அழகியதேமல்.
அவல்—பள்ளம்.
அழிவி—கழிமுகம். ௩௪௦.
ஆகாவூங்கலங்கடை—ஆகாதபொழுது.
ஆசு—பற்றுக்கோடு.
ஆம்—நீர்.
ஆரியர்—தாய்தந்தையர்.
இகுளை—தோழி.
இருவி—கதிர்கொய்த தட்டை.
இலஞ்சி—மடு.
இவர்தல்—படர்தல்.
இவறூர்—கொடாதவர்.
இறடி—தினை.
இறை—வீட்டுக்கூரை ௪௯; முன்கை; ௨௮௯; தங்கல் ௩௭௪; இறுத்தல் ௩௯௪.
இனி—இப்பொழுது.
ஈண்டுதல்—திரளுதல்.
உகளல்—துள்ளல்.
உகிர்நுதி—விரல்.
உண்டல்—துய்த்தல்.
உரம்—வலி; அறிவு ௨௦.
உருப்பு—வெப்பம்.
உவல்—மேலிடம்.
உவலை—தழை.
உறை—மழைத்துளி.
ஊழ்—முறைமை; முற்றல்.
எருவை—பஞ்சாய்க்கோரை.
எவ்வம்—துன்பம்.
எழால்—புல்லூறென்னும்பறவை.
எறிதல்—பாய்தல்; வெட்டல்; முழக்கல்.
எறும்பி—எறும்பு.
ஏகல்—காந்தள்.
ஏற்றை—விலங்கினாண்.
ஐம்பால்—மகளிர்கூந்தல்.
ஐயவி—வெண்சிறுகடுகு.
ஐவனம்—மலைநெல்.
ஒடுங்குதல்—தாழ்தல்.
ஒருத்தல்—களிறு. ௩௬௯.
ஒலித்தல்—தழைத்தல்.
ஒழுகை—வண்டி.
ஒற்றுதல்—சாய்த்தல். ௩௪௩.
ஓமை—வாகை.
கட்சி—காடு; பறவைக்கூடு.
கட்டில்—சிங்காதனம்.
கடவை—கடக்கும்வழி.
கடறு—காடு.
கண்ணுதல்—கருதல்.
கலித்தல்—தழைத்தல்.
கவலை—கவர்த்தநெறி.
கவான்—(மலைத்) தாழ்வாரம்.
காமர்—விருப்பம்.
காயம்—குழம்பு. ௩௮௯.
கிழக்குவீழ்தல்—கீழ்வீழ்தல்.
குடுமி—உச்சிக்கொண்டை. ௨௩௪.
குளகு—தழை.
குளவி—காட்டுமல்லிகை.
குளிர்—ஒருகிளிகடிகருவி; கவண்.
கை—செயல்; முறைமை; சிறுமை.
கோடி—நீட்சி.
கொடிஞ்சி—தேர்மொட்டு.
கோடல்—காந்தள்
கோடியர்—கூத்தர். ௭௮.
கோழி—சோழன்.
கௌவை—அலர்; முதிராமை.
ஞாங்கர்—மேலிடம்.
சாம்பல்—பழம்பூ.
சிதட்டுக்காய்—உள்ளீடில்லாக்காய்.
சிதவலர்—நடுக்கமுடையார். ௧௪௬.
சேத்தல்—கருதல்.
செம்மல்—பழம்பூ.
சேண்—நெடுங்காலம்.
சேணோன்—குறவன்.
சேயர்—செப்பமுடையவர்.
தட்டை—ஒருகிளிகடிகருவி.
தடை—தங்கல்.
தவ்—குறிப்புமொழி.
தழல்—ஒருகிளிகடிகருவி.

தழுவணி—குரவை. ௨௯௪.
தளி—மழைத்துளி.
தா—வலி; வருத்தம்.
தாழ்தல்—தங்கல்.
திணை—உயர்குடி.
திமில்—கட்டுமரம்.
திரங்கல்—சுருங்கல்.
துடவை—தோட்டம்.
துறுகல்—நெருங்கினமலை.
தூம்பு—உட்டுளை.
தொடலை—மாலை.
தொடுதல்—தோண்டுதல்.
தொடை—அம்பு.
தொல்கவின்—இயற்கையழகு.
தோடு—தொகுதி.
தோல்—யானைத்திரள்.
தோன்றி—காந்தள்.
நள்—ஒலிக்குறிப்பு.
நறை—நறைக்கொடி; மணம்.
நார்—அன்பு.
நாறுதல்—மிகுந்துதோன்றல்.
நிகர்—ஒளி.
நிவத்தல்—மேலோங்கல்.
நுகம்—தூசிப்படை.
நெறி—சுருள்.
நொடுத்தல்—விற்றல். ௧௦௦.
நோன்றல்—பொறுத்தல்.
பகடு—பெருமை.
பகன்றை—கிலுகிலுப்பை.
படப்பை—மனைப்பக்கத்தோட்டம்.
படிவம்—நோன்பு.
பதம்—உணவு.
பதுக்கை—இலைக்குவை.
பயிர்தல்—அழைத்தல்.
பறிமுறை—விழுந்துமுளைத்தன்முறைமை.
பாடு—ஒலி.
பாறுதல்—சிதறல்.
பிணையல்—மாலை.
பின்னு—பின்னல்.
புகா—உணவு.
புதவு—அறுகு.
புணரி—அலை.
புரிதல்—விரும்பல்.
புரைமை—உயர்வாந்தன்மை.
புல்லெனல்—அழகுகெடல்.
புலைத்தி—வண்ணாத்தி. ௩௩௦.
புறவு—முல்லைநிலம்.
பெய்யாமை—சூடாமை.
பெரும்பிறிது—இறந்துபாடு.
பைதல்—துன்பம்.
பொங்கர்—சோலை.
பொதும்பு—சோலை.
பொதுளுதல்—நிறைதல்.
பொறையன்—சேரன்.
மகிழ்தல்—உணர்வழிந்த மயக்கம்.
மதர்—செருக்கு.
மதுகை—வலி.
மால்பு—ஏணி.
மிளை—காவற்காடு.
முனைதல்—வெறுத்தல். ௨௯௬.
முரம்பு—கல்விரவியுயர்ந்திருக்கும் நிலம்.
முளிதயிர்—கட்டித்தயிர்.
மூய்—பெட்டிவாய்.
மென்பதம்—மாலை.
மேக்கு—மேலிடம்.
யாவதும்—சிறிதும்.
வம்பலர்—புதுமையுடையார்.
வயா—கருவுற்றகாலத்துவருத்தம்.
வல்சி—உணவு.
வலவன்—தேர்ப்பாகன்.
வாடாவள்ளி—வள்ளிக்கூத்து.
வாய்—வழி; உண்மை.
வார்தல்—ஒழுகல்; விழைதல்.
விதுப்பு—நடுக்கம்.
விலங்கல்—தடுத்தல்.
வெருகு—ஆண்பூனை.
வையம்—சிறாரிழுக்குந் தேர்.

—:0:—

| செய்யுண்முதற்குறிப்பு. | பக்கம். | செய்யுண்முதற்குறிப்பு. | பக்கம். |
|---|---|---|---|
| அகவன்மகளே | ௩௨ | அறிகரிபொய்த்த | ௧௬௯ |
| அஞ்சிலோதி | ௧௮௬ | அன்னையிவனோ | ௪௬ |
| அஞ்சுவதறியா | ௨௦௩ | ஆசிறெருவி | ௨௩௧ |
| அடம்பினும்மலர் | ௩௦௭ | ஆடமைபுரையு | ௧௩௩ |
| அணிற்பல்லன்ன | ௬௩ | ஆம்பற்பூவின் | ௬௦ |
| அத்தவரைகை | ௨௮௮ | ஆய்வளைஞெகிழ | ௨௫௫ |
| அதுகொறோழி | ௧௧ | ஆர்கலிமிதி | ௬௭ |
| அதுவரலன்மை | ௨௧௦ | ஆர்கலிவெற் | ௨௭௯ |
| அம்ம... ...நூலறு | ௧௧௨ | ஆர்கலியேற் | ௧௭௦ |
| அம்ம... ...ரின்னே | ௨௩௭ | இடிக்குங்கேளிர் | ௭௩ |
| அம்ம... ...கொண்கன் | ௧௯௮ | இதுமற்... ...றனி | ௧௬௭ |
| அம்ம... ...நம்மூர் | ௧௪௪ | இதுமற்... ...ழுதுமீர் | ௨௪௫ |
| அம்ம... ...நம்மொடு | ௧௩௫ | இரண்டறிகள | ௨௫௩ |
| அம்ம... ...புன்னை | ௨௪௩ | இருங்கண்ஞா | ௨௨௪ |
| அம்ம... ...முன்னி | ௨௭௭ | இருடிணிந்தன் | ௧௨௭ |
| அம்ம... ...யன்னை | ௨௮௪ | இல்லோனின் | ௧௨௫ |
| அம்ம... ...யாவதும் | ௯௦ | இலங்குவளை | ௧௨௯ |
| அம்ம... ...யின்றவர் | ௨௯௧ | இலையிலஞ்சினை | ௨௧௪ |
| அம்மவாழியோ | ௩௦௧ | இவளிவளம்பால் | ௧௯௮ |
| அமர்க்கணமான் | ௨௫௯ | இவளே, நின்சொல் | ௯௪ |
| அமிழ்தமுண்க | ௧௮௦ | இழையணிந் | ௨௭௪ |
| அமிழ்தத்தன்ன | ௧௮௩ | இளமைபாரார் | ௧௨௯ |
| அமிழ்துபொதி | ௨௩ | இன்னளாயின | ௧௦௮ |
| அயிரைபரந்த | ௧௬௫ | இன்றியாண்டை | ௨௯௩ |
| அரிப்பவர்பாம் | ௧௦௩ | இன்றேசென்று | ௧௭௨ |
| அரிற்பவர்பிரம் | ௨௮௫ | இனமயிலக | ௨௧௧ |
| அரும்பறமலர்ந்த | ௩௬ | ஈங்கேவருவர் | ௧௭௪ |
| அரும்பவிழணி | ௨௭௬ | ஈதலுந்துய்த்த | ௭௭ |
| அரும்பெறலமிழ் | ௯௫ | உடுத்துந்தொடுத்தும் | ௨௪௩ |
| அருவிப்பரப்பி | ௧௦௯ | உதுக்காணதுவே | ௧௭௩ |
| அருவிவேங்கை | ௧௦௬ | உமணர்சேர்ந்து | ௧௨௮ |
| அருவியன்ன | ௨௨௬ | உரைத்திசிறோழி | ௨௪௭ |
| அருளுமன்பு | ௨௯ | உவரியொருத் | ௩௦௦ |
| அல்குறுபொழு | ௨௨௮ | உழுந்துடைக் | ௨௯௬ |
| அலர்யாங் | ௨௫௩ | உள்ளதுசிதைப் | ௨௩௫ |
| அவ்விளிம்பு | ௨௪௪ | உள்ளார்... ...கணை | ௨௫ |
| அவரே, கேடில் | ௧௮௯ | உள்ளார்... ...கிள்ளை | ௮௧ |
| அவரோவாரார் | ௧௯௩ | உள்ளார்... ...புள்ளி | ௨௦௦ |
| அழியலாயினழ | ௧௪௨ | உள்ளிக்காண்பென் | ௨௩௭ |
| அளிதோதானே | ௧௪௧ | உள்ளினுள்ளம் | ௧௧௧ |

| செய்யுண்முதற்குறிப்பு. | பக்கம். |
|---|---|
| உள்ளினெனல் | ௧௦௯ |
| உறுவளியுளரிய | ௨௩௨ |
| உறைபதியன்றி | ௧௪௩ |
| ஊஉரலரெழ | ௨௨௦ |
| ஊர்க்குமணித்தே | ௧௨௦ |
| ஊருண்கேணி | ௩௦௬ |
| எந்தையும்யாயும் | ௨௯௦ |
| எம்மணங்கினவே | ௬௮ |
| எல்லாமெவனே | ௨௬௦ |
| எல்லுமெல்லின்று | ௨௯௯ |
| எல்லைகழிய | ௨௯௮ |
| எலுவசிறாஅ | ௧௩௨ |
| எவ்வியிழந்த | ௨௮ |
| எழிளிமிகவுடைய | ௨௦௯ |
| எழுதருமதிய | ௨௫௫ |
| எற்றோவாழி | ௧௦௨ |
| எறிதருக்கலித்த | ௨௫௭ |
| எறும்பியளை | ௨௦ |
| என்னெனப்படுங் | ௧௭௫ |
| ஐயவியன்ன | ௬௪ |
| ஒடுங்கீரோதி | ௮௪ |
| ஒருநாள்வாரலன் | ௧௬௩ |
| ஒலிவெள்ளருவி | ௧௦௦ |
| ஒறுப்பவோ | ௪௭ |
| ஒன்றேனல்லேன் | ௧௮௪ |
| ஓம்புமதிவாழி | ௨௦௨ |
| ஓரூர்வாழினுஞ் | ௧௯௯ |
| கடல்பாடவிந்து | ௧௬௪ |
| கடலங்கான | ௨௦௮ |
| கடலுடனாடியுங் | ௨௪௨ |
| கடும்புனறொடுத்த | ௧௧௨ |
| கண்டரவந்த | ௨௪௯ |
| கண்டிசிற்பாண | ௨௮௩ |
| கண்டிழிக்கொற்றம் | ௨௯௫ |
| கண்ணிமருப்பின் | ௨௮௫ |
| கணைக்கோட்டு | ௧௫௫ |
| கருங்கட்டாக்கலை | ௮௩ |
| கருங்கால்வேங்கை | ௬௧ |
| கருங்கால்வேம்பின் | ௩௪ |
| கல்லென்கானத்து | ௧௬௫ |

| செய்யுண்முதற்குறிப்பு. | பக்கம். |
|---|---|
| கலிமழைகெழீஇய | ௨௨௨ |
| கலைகைதொட்ட | ௨௭௨ |
| கவவுக்கடுங்குரையள் | ௧௩௪ |
| கவலைகெண்டிய | ௨௦௦ |
| கவலையாத்த | ௧௯௫ |
| கழனிமாத்து | ௧௫ |
| கழிதேர்ந்தசைஇய | ௨௪௮ |
| கழியகாவி | ௧௪௨ |
| கள்ளிற்கேளி | ௨௪௧ |
| கறிவளரடுக்கத் | ௨௩௮ |
| கன்றுதன்பயமுலை | ௧௯௫ |
| கன்றுமுண்ணாது | ௩௭ |
| காணினிவாழி | ௧௬௦ |
| காதலருழைய | ௫௫ |
| காந்தள்வேலி | ௮௯ |
| காநதளங்கொழுமுகை | ௨௨௨ |
| காமங்கடையி | ௨௭௧ |
| காமங்காமமென்பர் | ௧௮௨ |
| காமங் .. .. மென்ப | ௧௩௭ |
| காமந்தாங்கு | ௨௩௯ |
| காமமொழிவ | ௫௬ |
| கார்புனந்தந்த | ௧௫௪ |
| காலையும்பகலு | ௪௪ |
| காலையெழுந்து | ௫௯ |
| காலேபரிதப் | ௫௮ |
| கானங்கோழி | ௨௦௬ |
| கானமஞ்ஞை | ௫௨ |
| கானயானை | ௯௨ |
| கானவிருப்பை | ௨௯௪ |
| குக்கூவென்றது | ௧௫௧ |
| குணகடற்றிரை | ௧௩௧ |
| குருகுகொள | ௧௩௦ |
| குருகுமிருவிசும் | ௨௧௯ |
| குவளைநாறு | ௨௪௬ |
| குவியிணர்த் | ௧௧௫ |
| குறுந்தாட்கூதளி | ௭௫ |
| குறும்படைப்பகழி | ௨௯௬ |
| குன்றக்கூகை | ௧௪௧ |
| கூந்தலாம்பல் | ௯௩ |
| கூன்முண்முண்டக | ௬௫ |

| செய்யுண்முதற்குறிப்பு. | பக்கம். | செய்யுண்முதற்குறிப்பு. | பக்கம். |
|---|---|---|---|
| கேட்டிசின்வாழி | ௪௧ | சேறுஞ்சேறு | ௨௬௧ |
| கேளாராகுவர் | ௨௧௪ | சோலைவாழை | ௨௫௧ |
| கேளிர்வாழியோ | ௨௩௩ | ஞாயிறுகாயாது | ௨௯௨ |
| கைவளைநெகிழ்தலு | ௨௮௯ | ஞாயிறுபட்ட | ௧௦௪ |
| கைவினைமாக்கள் | ௨௫௧ | தச்சன்செய்த | ௭௬ |
| கோங்குதேர் | ௭ | தண்கடற்படு | ௧௫௭ |
| கொடியோர்நல்கா | ௨௮௭ | தலைப்புணைக்கொ | ௧௯௩ |
| கொடுங்கான்முதலை | ௨௬௧ | தழையணியாடை | ௧௫௨ |
| கொண்கனூர்ந்த | ௧௮௭ | தாஅவஞ்சிறை | ௧௬௦ |
| கொல்வினைப்பொ | ௨௪௮ | தாதிற்செய்த | ௬௨ |
| கொனனூர்துஞ்சி | ௧௩௮ | தாமரைபுரையு | ௧ |
| கோடலெதிர்முகை | ௭௭ | தாமேசெல்ப | ௨௭௬ |
| கோடீரி... ...நாடோ | ௧௯ | தாழிருடுமிய | ௨௨௬ |
| கோடீரி... ...நாளும் | ௨௮௬ | திண்டேர்நள்ளி | ௧௮௫ |
| கௌவையஞ்சி | ௧௧௯ | திரிமருப்பிரலை | ௨௬௯ |
| சிறுவீஞாழல் | ௨௬௩ | திரிமருப்பெருமை | ௨௩௨ |
| சிறுவெண்காக்கை | ௨௬௭ | தினைகிளிகடிதெ | ௧௯௦ |
| சிறுவெள்ளரவி | ௧௨௫ | தீண்டலுயியையவது | ௨௨௭ |
| சிறைபனியுடைந்த | ௯௮ | துணைத்ததோகை | ௨௬௨ |
| சுடர்சினந்தணி | ௧௭௬ | துறுகலயலது | ௪௯ |
| சுடர்செல்வானம் | ௨௦௧ | தொடிநெகிழ்ந்தன | ௨௦௪ |
| சுடுபுனமருங்கிற் | ௨௪௦ | தொல்கவின் | ௨௯௪ |
| சுரஞ்செல்யானை | ௧௫௮ | நகைநன்கு | ௧௮௭ |
| சுரந்தலைப்பட்ட | ௧௮௫ | நகைபெரிது | ௫௦ |
| சுனைப்பூக்குற்று | ௧௪௧ | நமக்கொன்று | ௨௨௩ |
| செங்களம்பட | ௪ | நல்கில்வாழூ | ௨௬௨ |
| செப்பினஞ்செலின் | ௧௮௩ | நல்லுரையிகந்து | ௪௦ |
| செல்வச்சிறூஅர் | ௧௪௫ | நலத்தகைப்புலத்தி | ௨௬௪ |
| செல்வாரல்லர் | ௫௭ | நள்ளென்றன்றே | ௧௨ |
| செவ்வரைச்செச்சை | ௧௭௧ | நறையகில் | ௨௭௦ |
| செவ்விகொள்வரகின் | ௨௩௪ | நன்னலந்தொலைய | ௧௦௪ |
| செற்றுமன்றே | ௩௦௫ | நனைமுதிர்ஞாழ | ௩௦௪ |
| செறுவார்க்குவகை | ௨௬௮ | நாகுபிடிநயந்த | ௨௭௫ |
| சென்றநாட்ட | ௧௬௮ | நாணிலமன்ற | ௪௮ |
| சேணோன்மாட்டிய | ௧௪௩ | நிரைவளைமுன்கை | ௨௬௭ |
| சேயாறுசெல்லா | ௩௦௬ | நிலத்தினும்பெரிதே | ௯ |
| சேயாறுசென்று | ௨௨௫ | நிலந்தொட்டு | ௧௩௨ |
| சேயுயர்விசும் | ௨௫௪ | நிலம்புடைபெயரினும் | ௨௯௦ |
| சேரிசேர | ௨௪௫ | நிழலான்றவிந்த | ௨௮௧ |
| சேறிரோவெலா | ௨௨௪ | நினையாய்வாழி | ௨௭௩ |

| செய்யுண்முதற்குறிப்பு. | பக்கம். | செய்யுண்முதற்குறிப்பு. | பக்கம். |
|---|---|---|---|
| நீகண்டனையோ | ௮௮ | புரிமடமரையான் | உ௫௬ |
| நீயுடம்படுதலின் | உ௯௫ | புல்வீழிற்றி | கக௪ |
| நீர்கால்யாத்த | உ௯௮ | புள்ளும்புலம்பின | உ௫உ |
| நீர்நீடாடிற் | உ௮௦ | புள்ளுமாவும் | கஉ௪ |
| நீர்வார்கண்ணை | ௩க | புறவுப்புறத்தன்ன | உஉ௯ |
| நுதல்பசப்பிவர்ந்து | க௭௦ | புனவன்... ...கடி | கக௩ |
| நெஞ்சேநிறை | ௩௦௩ | புனவன்... ...கிளி | க௩௫ |
| நெடியதிரண்ட | உக௩ | பூவனைந்தன்ன | க௯௭ |
| நெடுங்கழை | உ௬௫ | பூவொடுபுரையு | க௯௬ |
| நெடுநீராம்ப | உ௭௮ | பூவிடைப்படினு | ௭உ |
| நெடுவரைமருங்கி | க௫உ | பூவொத்தலமரு | ௮௬ |
| நெய்கனிகுறும்பூழ் | உ௯௯ | பூழ்க்காலன்ன | ௮உ |
| நெய்தற்பரப்பி | கஉக | பெய்தகுன்றத்து | க௭௯ |
| நெருப்பினன்ன | க௫௩ | பெயர்த்தனென் | ௯௬ |
| நெறியிருங்கதுப் | க௭௩ | பெயல்கான்மறை | உ௮௦ |
| நோமென்... ...யிமை | ௪௦ | பெயன்மழை | க௬உ |
| நோமென்... ...புன் | க௮க | பெருங்கடற்பர | உ௫௮ |
| நோற்றோர்மன்ற | உ௭௩ | பெருங்கடற்... ...களிற் | உ௦௯ |
| பசப்பென்மேனி | க௯க | பெருங்கடற்... ...நீத்து | உ௫௪ |
| படரும்பைய | க௮௯ | பெருந்தண்மாரி | க௦௫ |
| பனைத்தோட்குறு | உ௩௦ | பெருநன்றாற்றி | கஉஉ |
| பதலைப்பாணி | ௭௪ | பெருவரைமிசை | ௯க |
| பரலவற்படு | உகஉ | பெறுவதியையா | க௭௮ |
| பருவத்தேன | க௬உ | பேரூர்கொண்ட | க௯௪ |
| பல்லாநெடுநெறி | ௭௮ | பைங்காற்கொக்கின் | கஉ௭ |
| பல்லிபடீஇய | உ௭௪ | போத்தில்காழ | உக௫ |
| பல்லோர்துஞ்சு | உ௦௭ | பொருதயானை | உ௩௫ |
| பலருங்கூறுக | க௫௯ | பொய்கையாம்ப | உ௮௮ |
| புலவிற்சேர்ந்த | உ௯௬ | பொழுதுமெல்லின்று | க௫௪ |
| பழமழைகலித்த | க௯உ | பொன்னேராவிரை | க௬க |
| பழமழைபொழி | உஉ௦ | மகிழ்ந்ததன்றலை | க௫௬ |
| பழூஉப்பல்லன்ன | க௬௬ | மகிழ்நன்மார்பே | ௮௬ |
| பறைபடப்பணில | உ௪ | மட்டம்பெய்த | க௭௫ |
| பனிப்புதலிவர்ந்த | உ௦௫ | மடவமன்ற | ௮௦ |
| பனைத்தலைக்கருக் | உ௮௯ | மடவவாழி | உகஉ |
| பாசவலிடித்த | உ௦௩ | மண்ணியசென்ற | உ௪௦ |
| பார்ப்பனமகனே | க௫௦ | மணிவார்ந்தன்ன | உக௬ |
| பால்வரைத்தமைத்த | உ௮௬ | மயங்குமலர் | ௩௦உ |
| பாலும்முண்ணாள் | ௩௦௪ | மரங்கொல்கானவன் | க௮௮ |
| பாவடியுரல | க௦க | மருந்தெனின்மருந்தே | ௮௫ |

| செய்யுண்முதற்குறிப்பு. | பக்கம். | செய்யுண்முதற்குறிப்பு. | பக்கம். |
|---|---|---|---|
| மல்குசுனைப்பு | உஎரு | யாயாகியளேவி | கஅ |
| மலரேருண்கண் | உகூஉ | யாயும்யாயும் | ருச |
| மலைச்சேர், அஞ்செஞ் | உருகூ | யாரணங்குற்றனை | கருரு |
| மலையிடையிட்ட | கஅக | யாரினுமினியன் | கூஎ |
| மழைசேர்ந்து | உகஅ | யாருமில்லை | ஙரு |
| மழைவிளையாடு | ககசு | யாவதுமறிகிலர் | கசஅ |
| மள்ளர்குழீஇய | சங | யானயந்துறைவோள் | கஉங |
| மறிக்குரலறுத்து | உஉக | யானே... ...னேனல் | சுகூ |
| மன்றமராஅத்த | கூகூ | யானே... ...யென்னலனே | க0எ |
| மன்னுயிரறியா | உகூக | வங்கர்கடந்த | கசஎ |
| மனையுறைகோழி | கஙகூ | வண்டுபடைத்ததைந்த | ங0 |
| மாஅல்கொன்ற | கஎஅ | வந்தவாடை | உசுசு |
| மாக்கழிமணிப்பூ | எ0 | வளர்பிறைபோல | உஙகூ |
| மாசறக்கழீஇய | உக | வளையுடைத்தனைய | உரு0 |
| மாரிப்பித்திகத்து | கருஅ | வளையோய் | உஎஅ |
| மாரியாம்பலன்ன | கஉங | வளைவாய்ச்சிறு | கச0 |
| மால்வரையிழிதரு | க0சு | வன்பாற்றெள்ளறல் | எகூ |
| மாவெனமடலு | உசு | வாரலெஞ்சேரி | உகஎ |
| மானடியன்ன | உ0எ | வாராராயினும் | ககஎ |
| மானேறுமடப்பிணை | உருஎ | வாருறுவணர் | கூரு |
| மீனுச்செய் | கஅஉ | விசும்புகண்புதைய | உகூச |
| மூகைமுற்றினவே | கஎக | விட்டகுதிரை | அஎ |
| முட்காலிறவின் | ககசு | விட்டெனவிடுக் | உ0உ |
| முட்டுவேன்கொ | ஙகூ | விடர்முகையடுக் | ககூக |
| முதைப்புன | கரு0 | விரிதிரைப்பெருங் | கக0 |
| முருகயர்ந்து | உஅச | வில்லோன்காலன | கச |
| முல்லையூர்ந்த | உஉகூ | விழுத்தலைப்பெண்ணை | கசுஅ |
| முலையேமுகிழ் | உசுகூ | வினையேயாடவர் | கஙசு |
| முழந்தாளிரும்பிடி | ங0உ | வீங்கிழைநெகிழ | உஅஉ |
| முழவுமுதலரைய | உசஎ | வீழ்தாழ்தாழை | ககூஎ |
| முளிதயிர்பிசைந்த | கருஎ | வெண்மணல்விரிந்த | உகூஎ |
| முனிபடருழந்த | உஅக | வேண்மணற்பொதுளிய | உஙங |
| மெய்யோவாழி | கஉசு | வெந்திறற்கடுவெளி | ருங |
| மெல்லியலரிவை | கஙஎ | வெறியெனவுணர்ந்த | உஅங |
| மெல்லியலோயே | உஅஎ | வேட்டைச்சென்நாய் | எக |
| மெல்லியவினிய | உரு0 | வேதினவெரிந் | கஙகூ |
| மென்றோணெகிழ்த்த | ககஅ | வேம்பின்பைங்காய் | கஎஎ |
| யாங்குகறிந்தனர் | கசக | வேரல்வேலி | உஎ |
| யாதுசெய்வா | கஎஎ | வேருமுதலுங் | உகசு |
| யாமெங்காம | உ0ரு | வேனிற்பாதிரி | கசச |
| யாயாகியளேமாஅ | கசு | வைகாவைகல் | உஙசு. |

# பிழையும் திருத்தமும்

| பிழை. | திருத்தம். | பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். | பக்கம். | வரி. |
|---|---|---|---|---|---|---|---|
| நீரைய | நீரையு | கக | உஉ. | ஞதல் | ஞதலுமாம் | க௩ச | ௩. |
| அழகு | அழுகு | உ௫ | உ0. | குரிய | கரிய | கசஉ | க0. |
| பாலை | முல்லை | ௩0 | ௯. | பிரிர் | பிரிந் | கசச | எ. |
| மூட்டு | முட்டு | ௩௬ | ௩. | யிருந்து | யிருந்தது | க௫எ | கக. |
| பாடு | பாட்டு | ச௩ | ௩௩. | வெள்வீளி | வெள்ளி வீ | க௫அ | உஅ. |
| வழக்குப் | வழக்கிற் | ச௬ | உ0 | வித்தை | விடத்தை | க௬௩ | உ௬. |
| கிழார் | உழார் | சஅ | கஎ. | நிழலுற் | நிழலிற் | உ00 | கஉ. |
| குறிடத் | குறியிடத் | ௬0 | ௩0. | யிடத்தி | யிடித்த | உ0ச | உ. |
| பார்ந்து | பார்ந்தி | ௬ச | உஅ. | ஆற்மை | ஆற்றுமை | உக௫ | எ. |
| ஒன்றுக் | ஒறுக் | ௬௬ | க0. | பினகற | பினகற | உக௬ | ௩. |
| அரிந்து | அறிந்து | எஉ | க௩. | முனை | முனை | உச௩ | உ௩. |
| படர்த | படர்ந்த | அஅ | க. | முழவுத | முழவுமுத | உசஎ | ௩. |
| வரவை | வரைவை | க0௯ | ௩0. | அவர் | அலர் | உ௫௩ | கஉ. |
| வீழ்த்தி | வீழ்தி | ககச | உஉ. | பட்டது | பட்டன | உ௬௫ | ௩௩. |
| அவர் | அது | ககஅ | க௫. | யிடனது | யினது | ௩0௬ | க0. |
| கண்ணில் | கண்ணின் | கஉ௬ | உச. | | | | |

உச-வது பக் - கக.வரியில், பாலைபாடிய பெருங்கடுங்கோ என்பதை ஔவையார் என்றும், உஎ௬-வது பக் - அ, ௬-வரிகளில் பிரிவிடைத் தோழிக்குக் கிழத்தி மெலிந்து கூறியதுஎன்பதை பகற்குறிவந்து ஒழுகுந் தலைமகன் சிறைப்புறத்தானாக வரைவுகடாயதுஎன்றும், கடியலூருருத்திரன்கண்ணனென்பதை உறையூர்முதுகூத்தனென்றும் திருத்திக்கொள்க. குறியாதன பிறவுள்ளனவேனும் திருத்திக்கொள்க. படிக்குமுன்னரே பிழைகளைத் திருத்திக்கோடல்வேண்டும்.

# விளம்பரம்.

எட்டுத்தொகையில் இரண்டாவதாகிய
## குறுந்தொகைமூலமும் உரையும்.

விலை ரூ. 2—0—0. தபாற்கூலிவேறு.

வேண்டுவோர் அடியிற் கையொப்பமிட்ட என்னிடத்திலும்,

1. ஸ்ரீமான்:— பு. க. ஸ்ரீநிவாஸாசாரியர்ஸ்வாமி,
தலைமைத்தமிழ்ப்பண்டிதர், ஊர்ஹீஸ்காலெஜ்,
வேலூர்.
2. ,, ரிப்பன்புத்தகசாலைச் சொந்தக்காரர்,
87, தம்புசெட்டிவீதி, சென்னை.
3. ,, D. K. சுப்பைய்யாநாயடுகாரு & ஸன்ஸ்,
புத்தகவியாபாரிகள், தஞ்சாவூர்.
4. ,, இ. மா. கோபாலகிருஷ்ணக்கோன்,
புத்தகவியாபாரம், புதுமண்டபம், மதுரை.
5. ,, மானேஜர், நவீனகதாபுத்தகசாலை,
ரங்கூன்.

இக்காட்டியவிலாஸங்களிலும் மேற்குறித்த விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

பண்டிதர் தி. சௌ. அரங்கசாமிஐயங்கார்,
மதரஸே இஸ்லாமியா, வாணியம்பாடி.

---

பதினெண்கீழ்க்கணக்கின் முதலதாகிய
## நாலடி நானூறுமூலமும் அரும்பதவுரைக்குறிப்பும்

இந்நூல், வேலூர் ஊர்ஹீஸ்காலெஜ்தலைமைத்தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீ பு.க. ஸ்ரீநிவாஸாசாரியர்ஸ்வாமியால் வெளியிடப்பட்டது.

மாணவர்பதிப்பும், மற்றையோர்பதிப்பும் தனித்தனி
விலை 0—8—0 [தபாற்கூலிவேறு.]
வேண்டுவோர் இந்நூற்பதிப்பாசிரியருக்கு எழுதிக்கொள்ளலாம்.